# யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி

# நூற்றாண்டு விழா மலர்

## 1911 - 2011




## J / Urumpirai Hindu College

## Centenary Souvenir

நூற்றாண்டு விழா

நூற்றாண்டு விழா

நூற்றாண்டு விழா

# யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி

# நூற்றாண்டு விழா மலர்

## 1911 - 2011

வெளியீடு :

**நூற்றாண்டு மலர்க் குழு,**

யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி.

***03.04.2011***

உ
சிவமயம்







# கடவுள் வாழ்த்து

ஓடையம் பதியின் உற்பவமே உரும்பிராயின்
ஓங்காரப் பிரணவக் கற்பகமே
தடைகள் பல நீக்கும் தற்பரனே
தஞ்சமென வடைந்தோம் நின்பதமே.
படை பஞ்ச பாணம் உடையவனே
பாரினைக் காத்திடும் முதற்பொருளே
மடை திறந்த வெள்ளமென அருளிடுவாய்
மகா கணபதி கற்பக விநாயகனே !

அருளுருவான ஐங்கர ஆனைமுகா!
ஆதிசக்தியாய் அகமெலாம் நிறைந்தாய்
குருவே சிவன் உமை குவலயம் போற்ற
கோவென எழுந்தாய் கோடிப்பிரகாசமாய்
வருபொருளின்ப வளங்களை வாரிதியாய்
வாழ்வெல்லாம் தந்த கருணாகரா ! வளம்மிகு
உரும்பிராய்ப்பதி உவந்த கருணாகரப்பிள்ளையாரே
உமைப்பணிந்து போற்றினோம் ஞானம் நல்கிடு !

# கல்லூரித்தாய் வாழ்த்து

வளமாம் நிலத்தின் வளம் பெருகும்
வனப்பை ஊட்டிய வாண்மையிதே
தளமாய் அமைந்து சாற்றுகின்ற
தனமாய் வளர்ந்ததெம் உரும்பிராய்
பழமை நெறியிற் பல்லாண்டு பாரில் ஓங்கி
பானு நாவலர் பனுவலில் பதித்திருந்தாய்
உளமார் கொடையாய் உவந்தளித்த
உத்தமர் வல்லிபுரப் பெரியார் உளம் வாழி !
போற்றும் புலமைப் புதுநெறியின்
பொக்கிசமான புதுப்பொலிவு
ஊற்றாய் விளங்கி உரும்பிராயின்
உணர்வாய் விரித்த உளப்பொலிவே
சாற்றுகின்ற சாதனைகள் தந்தாய்
சார்ந்த நிலைப் பொதுவுடைமையானாய்
நூற்றாண்டு நிலையாக நின்றருள்
பேற்றின் பெருவடிவே வாழி ! வாழி !

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின்
பற்று நிறை பாசப் பாசறையே
கூடமதின் பழைய மாணவர் மனம்நிறை
கோபுரம் எனவெழும் கோமகளே
மாடமதமைத்து மனம் மகிழ்ந்தார்
மாண்புறும் உழைப்பினை உனக்களித்தார்
தேடவரிய சிந்தை நிறை தருமத்தின்
தேனார்ந்த தருமகுலசிங்க வள்ளல் வாழி !

*கலை விளக்கே கவின் கலையின் ஒளியே !*
*கால வெள்ளம் அணைக்காத கரும்பே*
*மலை மகள் அலைமகள் கலைமகளருள்*
*ஆசான்களாக்கிய அற்புதமே*
*நிலையாய் நின்று நிமிர்ந்து வளர்ந்து*
*நிலமெலாம் பரந்த புகழருவித்*
*தலையாய் விளங்கும் யாழ்ப்பாணத் தமிழர்*
*தனமாய் வளர்ந்தாய் வாழி ! வாழி !*

*ஆங்கிலக் கல்வியின் அச்சாணியாய் நின்று*
*ஆன்று வளர்ந்தததிசயமே*
*ஓங்கு புகழ் உதைபந்தாட்ட வீரர்*
*ஓசையின் உயிர்பாய் வாழ்பவளே*
*தாங்கிய முதல்வர்கள் தனை உவந்து*
*தண்ணளி வழங்கிய தயை நிதியே*
*ஈங்கிணை ஏதும் இல்லை இனியென*
*ஈஸ்வரன் இணை எழில் இந்துவே வாழி ! வாழி !*

*எண்ணோடு எழுத்தளித்தார் இன்ப எண்மை*
*ஈடேறக் கருணை தந்த இறைவன் வாழி !*
*கண்ணான வடிவெடுத்த எம் இந்துக்கல்லூரி*
*காலமெல்லாம் கனிந்து நிதம் வாழி ! வாழி !*
*விண்பரவு புகழ் சேர்ந்து சேர்த்து என்றும்*
*விழிபரவும் ஒளியெனவே வாழி ! வாழி !*
*பண்ணமைத்து படைப்பிலுயர்ந்து பார் போற்றும்*
*பண்பாளர் பக்குவம் போல் பாரில் வாழி ! வாழி !*

ஆக்கம்:-

**நயினை கனகசபை உருத்திரகுமாரன் (M.A)**
அகில இலங்கைச் சமாதான நீதிவான்

# தாபகர் வாழ்த்துப்பா

### எண்சீர்விருத்தம்

*கனக மணிப் பூம் பொழிலாய் இங்கு கல்விக்*
*கலைக் கோயி லொன்றினிதே தோற்றவேண்டும்*
*தினமுமதிற் சிறார்கல்வி பயில வேண்டும்*
*திக்கெல்லாம் இதன்புகழே பரவவேண்டும்*
*என எண்ணிக் கலைக்கூட மொன்றமைத்தான்*
*எழிலாரும் உரும்பை வாழ் வல்லிபுரமாமண்ணல்*
*மனதார விவ்வூரார் போற்றி ஏத்த*
*மாபெரியன் திருநாமம் நீடு வாழ்க!*

### கீர்த்தனை

### பல்லவி

*வல்லிபுர மென்நாம மென்னாளும் வாழ்கவே*
*வைத்திய கலாநிதியாய் வையம்புக ழவரும்*


### அனுபல்லவி

*கல்வியொளி பரப்பும் கல்லூரி இந்துவினை*
*கருணையுட னமைத்த காருண்ய வள்ளல்திரு - வல்லி*

### சரணம்

*உரும்பையம்பதி தனக்கு ஒல்காப் புகழளிக்கும்*
*கரும்பின் இனிய இக் கல்லூரி தோன்றுதற்கு*
*கருவாயிருந்த துமோர்கால் காப்பாளனாயிருந்தே*
*திருவாஞ் சேவை செய்த செம்மல் எனத் திகழும் - வல்லி*

## Our Founder



கலாநிதி.வைரவநாதர் வல்லிபுரம்

**Doctor. Vairavanathar Vallipuram**

## Great Person who had Donated Land to Establish the College



திரு.சின்னத்தம்பர் வேலுப்பிள்ளை

**Mr.Sinnathambar Veluppillai**

# நிலம் வழங்கியவருக்கான வாழ்த்துப்பா

### எண்சீர்விருத்தம்

*கலைமகளும் அலைமகளும் நாட்டம் செய்ய*
*களிப்பினொடு சிறார்கல்விக் களியே உண்க*
*கலைக்கோயில் ஒன்றிங்கு அமைப்பதற்கு*
*காணிநிலம் இல்லையெனக் கவின்று நோக்க*
*மலையின்றித் தன்காணி மகிழ்வோடீந்தான்*
*மன்னுரும்மை வாழ்பெரியோன் வேலுப்பிள்ளை*
*நிலையாக உரும்பை இந்து நிலைத்ததிங்கே*
*நிமலனருளா லீது நீடு வாழ்க!*

### கீர்த்தனை

#### பல்லவி

*வேலுப்பிள்ளையின் பெயர் வாழ்க எந்நாளுமே*
*வேட்கை யுடனே தர்மம் வேண்டியளவுஞ் செய்த வேலு*

#### அநுபல்லவி

*கல்விப்பயிர் வளர்க்க கல்லூரி வேண்டுமென்ற*
*கருத்தோடு காணிநிலம் களிப்போ டுபகரித்த வேலு*

#### சரணம்

*தனத்தா லுயர்ந்தவராய்த் தவத்தாலுயர்ந்தவராய்த்*
*தனவா னெனப் பகரும் கணிப்பாற் சிறந்தவராய்*
*எனைத்தாலும் குறைவின்றி ஏற்றமுடைத்தன் வாழ்வில்*
*தினைப்போதும் சிவனை மறவாச் சிந்தையராய் மிளிர்ந்த வேலு*


# கல்லூரிக் கீதம்

மலர்கலை உரும்பிராய் இந்துக் கல்லூரி
வான் புகழ் ஓங்கியே வாழ்க!
மெய்ஞ்ஞான மன்றில் விளைஞானத் திருவை
விஞ்ஞானம் நல்கிட வாழ்க!
ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
உண்மையை மாணவர்க் குணர்த்து
மெய் மகா வாக்கியமாக
மெய்ப் பொருள் காணுவதறிவு
விளங்க நிரந்தரம் வாழ்க!
மணிக்கொடி உரும்பிராய் மாநகர் எடுத்தே
வான் புகழ் ஓங்கியே வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க!
இந்துக் கல்லூரி வாழ்க!
எங்கள் கல்லூரி வாழ்க!!

# கல்லூரி இலச்சினை (சின்னம்)

யா/உரும்பிராய் இந்துக்கல்லூரியின் இலச்சினை கல்லூரியின் வனப்பைக் கம்பீரமாக எடுத்துக்காட்டுகிறது. உலகெலாம் நிறைந்த "ஓம்" என்னும் பிரணவ ஒலியின் உணர்வையும் இந்துதமிழ்ப் பண்பாட்டின் ஒன்றிணைப்பையும் குறித்து நிற்கிறது. "Urumpirai Hindu College" என ஆங்கிலத்தில் பொறிக்கப் பட்ட பொறிப்பானது கல்லூரி ஆங்கிலக் கல்வியை உறுதிப்பாட்டோடு வழங்கி நிற்கின்றது என்பதைக் காட்டுகின்றது. "ஆங்கிலப் பாடசாலை" எனப்பெயர் பெற்றிருந்ததை உணர்த்துகிறது. இலட்சுமீகரமும் சகல செல்வங்களும் வழங்கும் தீபம் கம்பீரகரமாகக் காட்சி கொடுக்கிறது. அறிவுச் சுடர் ஒன்றில் இருந்து ஆயிரமாய் பல்லாயிரமாய் ஒளி பரவும் என்பதனை உணர்த்துகின் றது. காற்றில் நிறைந்த கான ஒலியை தந்திகளில் மீட்டும் போது தோன்றுகின்ற நாதம் போல் மாணவர்கள் துலக்குவர் என்பதையும், கல்வித்தெய்வம் கலைமகளின் கையை அலங்கரிப்பதும், வீணை கலைமகள் அருளே கல்விக்கு துணை என்பதையும் காட்டுகின்றது. ஒளி நிறைந்த உலகின் தன்மையை உணர்த்த தாமரைப் பொய்கையையும், பொய்கையின் பொலிவில் மலர்ந்த தாமரை மலரும் மனக்களிப்பை காட்டி நிற்கின்றன. கலைக் கோவிலாக விளங்கும் எங்கள் கல்லூரியின் கற்றலின் சிறப்பை "நூல் ஏடு" காட்டுகின்றது. ஆங்கிலத்தில் காணப்படும் பொறிப்பானது மனநிறைவான வாழ்வில் "உனக்கு உண்மையுள்ளவனாய் இரு" (To thine ownself be true) என எடுத்து இயம்புகின்றது.

# கல்லூரிக் கொடி




பட்டொளி வீசிப் பல்திசை நோக்கி பறக்கும் எமது கல்லூரிக் கொடி இந்துப் பண்பாட்டின் எழிலினைத் தாங்கி நிற்கின்றது. நாவலர் பெருமானின் சிந்தையில் உதயமான எங்கள் கல்லூரியின் கொடியில் "ஓம்" என்னும் பிரணவத்தின் உட்பொருளையும் கற்பக விநாயகரின் கருணைப் பிரவாகத் தையும் தாங்கியதாக "ஓம்" என்ற எழுத்து அமைந்து காணப்படுகின்றது. தீபச் சுடர் ஞான ஒளியையும் நாத வடிவின் எழிலை வீணையின் அமைப்பும், ஒளிப் பிரவாகம் பல ஒளிகளைத் தோற்றுவிக்கும் என்ற எண்ண அலைகளும் தாங்கியதாக உள்ளது. ஞானம் உறைந்து நிற்கும் புத்தக வடிவம் உலகிற்கு ஞான ஒளியூட்டும் கற்றல் தாமரை மலரென தண்மையோடு காட்சி தருகிறது. எமது கல்லூரிக் கொடியின் வர்ணங்களான வெள்ளை, ஒரேஞ் என்பன தூய் மையையும், வெற்றியையும், அமைதியையும் சுட்டுவதாக அமைந்து காணப் படுகின்றன. "உனக்கு உண்மையுள்ளவனாய் இரு" என்ற மகுட வாசகம் கம்பீரமாகப் பறக்கும் கொடியின் கவினழகாகும்.

# கொடி வாழ்த்துப் பா

## பல்லவி

உரும்பிராய் இந்துக் கல்லூரி கொடியிது பாரீர்
உளம்பணிந்து வணங்கி ஏற்றுவோம் வாரீர்!
(உரும்பிராய் இந்து..)

## சரணங்கள்

கலையழகுடனது ஓங்கி கம்பத்தின் உச்சியில்
கவினொழுகு அழகென நின்று
மலைகலை மகிழ் சிவப்பு வெள்ளை
கலந்த தெமது தூய்மைக் கொடியிது காணீர்!
(உரும்பிராய் இந்து..)

ஓங்கார வடிவொடு கானம் உவந்திடும்
ருத்திர வீணை யெழினினைப் பாரீர்
தாங்கிய வனப்பின் தாமரை பாரீர்
சூரிய னொளியில் தூய்மை யொளியினைப் பாரீர்!
(உரும்பிராய் இந்து..)

ஏட்டினில் பதித்திடும் ஞானம் என்றும்
எங்கள் கலைக் கொடிக் கருளும் வேதம்
காட்டிய கற்பக் கோலம் என்றும்
கருணைக் கற்பக விநாயகன் பாதம்
(உரும்பிராய் இந்து..)

செம்மொழி எம் மொழித் தமிழும் கவின்கலை
ஆங்கிலம் விஞ்ஞானம் காட்டும் கோலக் கொடியிது
எம் மனம் நிறை இந்துப்பண்பாட்டின் எழிலை
ஏறுபோல் காட்டிடும் கொடியே பாரீர்!
(உரும்பிராய் இந்து..)

உரும்பிராய் இந்துவின் உயர் கொடி வாழி !
எங்கள் உள்ளம் நிறை கலைக்கோவில் வாழி !
அருளுருவான அன்னையே வாழி நம்
ஆன்ற தாயகம் வாழி! வாழி! வாழியவே!
(உரும்பிராய் இந்து..)

ஆக்கம்:-
நயினை கனகசபை உருத்திரகுமாரன் (M.A)
அகில இலங்கைச் சமாதான நீதிவான்

# யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி

## கல்லூரியின் மகுட வாசகம்

"உனக்கு உண்மையுள்ளவானாக இரு"

"To thine ownself be true"

## தூர நோக்கு

"மாணவர்களைச் சமூகப் பொருத்தப்பாடுடைய
நற்பிரஜைகளாக உருவாக்குதல்"

## Vision

"The creation of socially vibrant scholars"

## பணிக்கூற்று

"எண்ணுடன் மொழிகளும் ஒழுங்குடன் ஒழுக்கமும்
கவினுறு கலைகளும் பல்தொழில் நுட்பமும்
கணினியும் கற்று வாழ்வில் உயர்வோம்."

## Mission

"Let the be-all and end-all of our pursuit in education be to seek, adore and perfect the transmission of our rich cultural and spiritual heritage leading to the blossoming of robust character and conduct, mastery of arts and sciences, technical skills and computer literacy."

# Our Principal




**திரு.அப்பாத்துரை ஈஸ்வரநாதன்**


**வணிகமாணி (சிறப்புச்சித்தி), பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா, இலங்கை அதிபர் சேவை தரம் - 1**

**MR.APPATHURAI ESWARANATHAN** B.Com(Hons), PGDE, S.L.P.S – 1


# Former Principals




Mr.Y. Sinnaiah
1911-1912



Mr.T.Viyakesar (B.A)
1912-1918



Mr.S.Kumaraswami (Eng.Trd)
1918-1924



Mr.B.Thambu (Eng.Trd)
1924-1927



Mr.A.Seetharaman (B.A)
1927-1930



Mr.B.Rasaratnam (Eng.Trd)
1930-1932



Mr.T.Kanagasabai (B.A)
1932-1934




Mr.A.Seetharaman (B.A)
1934-1944




Mr.S.Srinivasan (M.A)
1944-1956



Mr.M.Ilayathambi
(B.A,Eng.Trd) 1957-1958




Mr.A.Vaithilingam (B.A,B.Sc)
1958-1970




Mr.P.Swaminathasharma
(B.A,PGDE) (Performing Principal)
1970-1971


# Former Principals



Mr.aR.Sachithananantham (B.A,PGDE)
1971-1973



Mr.P.Swaminathasharma (B.A,PGDE)
1973-1974



Mr.S.Thiyagarasa (B.Sc,PGDE)
1974-1975



Mr.C.Kanagalingam (B.Sc,PGDE)
1975-1976




Mr.S.Sivanbalan (B.Sc,PGDE)
(Performing Principal)
1976-1978



Mr.R.Sivananthan
(B.A, PGDE,SLEAS)
1978-1985



Mr.S.Sivanbalan (B.Sc,PGDE)
1985-1990



Mr.S.Balasubramaniyam (B.Ed)
1991-1995




Mr.M.Shanmugaratnam (B.Com,PGDE)
(Performing Principal)
1996-1999



Mr.A.Eswaranathan
[B.Com (Hons) ,PGDE]
1999.....

# நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



அன்புசார் பெருந்தகையோருக்கு,

யாழ்ப்பாணம் உரும்பிராய் இந்துக்கல்லூரி இன்று தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சி யடைகின்றோம். யாழ்ப்பாணப் பாரம்பரியத்தை வளர்த் தெடுப்பதில் உரும்பிராய் இந்துக்கல்லூரியும் தனக்கென இடத்தை வகித்துக் கொண்டுள்ளது. மனித வாழ்க்கையை உயர்நிலை அடையச் செய்வது கல்வி. இக் கல்வியை ஒவ்வொரு மனிதனும் கற்றுக்கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகும். இதனையே வள்ளுவரும்.


"தாம்இன் புறுவது உலகு இன்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்."

அன்று தொடக்கம் இன்றுவரை சமய, சமுதாய கல்வியை மேம்படுத்தும் வகையில் அதிபர், ஆசிரியர், அனைவரும் இப்பணியில் அயராது பங்கெடுத்துக்கொள்வது அனைவரையும் மகிழ்விக்கின்றது. நூற்றாண்டு கண்டுள்ள இக்கல்லூரி மேலும் பல்லாண்டு காலம் கல்விக்கும், மொழிக்கும், சமயப் பண்பாட்டிற்கும் அரும்பணியாற்ற ஆசீர்வதிக்கின்றோம். இப்பணியை நிறைவாகச் செய்த அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் வாழ்த்திப் பாராட்டி, கல்விப்பணி தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**இரண்டாவது குருமஹாசந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாசாரிய சுவாமிகள்**

# யாழ். ஆயரின் அருளாசிச் செய்தி




கல்விச் செல்வத்தையும் அதனுடன் கூடிய ஒழுக்க வாழ்வையும் மாணவச் செல்வங்களுக்கு வழங்கி அவர்களை உயர்வடையச் செய்யும் நற்செயற்பாட்டில் அயராது உழைத்து, இன்று நூறு ஆண்டுகளைக் கடந்து தன்சேவையில் அகமகிழும் யா/உரும்பிராய் இந்துக் கல்லூரிச் சமூகத்தை நானும் பாராட்டி உங்கள் மகிழ்வில் இணைவதையிட்டுப் பூரிப்படைகின்றேன்.

நூறு ஆண்டுகள் எம் சமூகத்தை கல்வியிலும், விளையாட்டு துறைகளிலும், நற்பண்புகளிலும் வளர்த்தெடுத்து பணியை ஆற்றிய இக்கல்லூரியைச் சேர்ந்த உள்ளங்களையும் நான் பாராட்டி, தொடர்ந்தும் இக்கல்லூரியின் சேவை உயர்வடைய, வளர்ச்சியுற என் வாழ்த்துக்களும் ஆசீரும் உரித்தாகுக.

"நன்றி"

**மேதகு.இ.தோமஸ் சவுந்தரநாயகம்**
**யாழ் ஆயர், ஆயர் இல்லம்,**
**யாழ்ப்பாணம்.**

# செஞ்சொற் செல்வரின் ஆசிச் செய்தி




கல்விப்பணி கடவுட்பணி. காலமெல்லாம் மனிதர்களை புனிதப்படுத்த எழுந்தவை கல்விச்சாலைகள். எம்மண்ணில் ஒப்பற்ற உயர் ஒப்புரவாளர்களை உருவாக்கிய உன்னத பாடசாலை உரும்பிராய் இந்துக்கல்லூரி. இக் கல்லூரியின் நூற்றாண்டு விழாக்குறித்து வாழ்த்துவதில் ஆனந்த மடைகின்றேன். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஆங்கிலக் கல்விக்காகப் பிறமதம் மாறுகின்ற சைவமக்களைக் காப்பதற்காகச் சைவக்கல்லூரிகள் ஊர்தோறும் தோற்றம் பெற்றன. நாவலர் பெருமானின் வழியில் உரும்பிராய்க்கிராமத்தில் வாழ்ந்த உத்தமர்களின் முயற்சியால் தோற்றம் பெற்ற உரும்பிராய் இந்துக்கல்லூரியின் அரவணைப்பில் பல ஆயிரம் சிறார்கள் உயர்வு பெற்றனர். பல நூறு ஏழைமாணவர்கள் ஆங்கிலக் கல்வியும் ஆளுமையும் பெற்றனர். சிறந்த விளையாட்டுத்துறைசார் விற்பன்னர்களை இக்கல்லூரி உருவாக்கிய பெருமை இன்றும் பேசப்படுகின்றது. நாடறிந்த பேச்சாளர்களை, நாடக விற்பன்னர்களை இக்கல்லூரி உருவாக்கியமை மறக்கமுடியாது. பேராசிரியர்.ஏ.ரி.கணேசலிங்கம் முதல் கலாநிதி துரை.மனோகரன் வரை இக்கல்லூரி பெற்ற பெருமைமிகு பேராசிரியப் பாரம்பரியம் தொடர்கின்றது. இன்றைய புகழ்பூத்த வைத்தியநிபுணர்கள் பலர் இக்கல்லூரிபெற்ற செல்வங்கள்.

இக்கல்லூரி நூற்றாண்டு விழாக்குறித்து, கல்லூரி மைந்தன் உயர்திரு.க. தர்மகுலசிங்கம் அவர்கள் பலகோடி ரூபா செலவில் பிரமாண்டமான மண்டபம் அமைத்து விழாவை மேன்மைப்படுத்துவது பெருமைக்குரிய விடயமாகும். கல்லூரி அதிபர் மதிப்புக்குரிய திரு.அ.ஈஸ்வர நாதன் அவர்கட்கும், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்விச்சமூகத்திற்கும் எனது இனிய வாழ்த்துக்களும் நல்லாசிகளும் உரித்தாகுக. நூற்றாண்டு விழாக் காணும் இக்கல்லூரி சூரியன் சந்திரன் நிலைபெற்றுள்ளது போல் என்றும் நிலை பெறப்பிரார்த்தித்து அமைகின்றேன்.

"யாவர்க்கும் இன்னுரைதானே"

**திரு.ஆறு.திருமுருகன்**
**தலைவர்**
**ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்**

# கல்லூரி முதல்வரின் வாழ்த்துச் செய்தி



நூற்றாண்டுகாலக் கல்விப்பணியை நிறைவு செய்து கால்பதிக்கும் எமது கல்லூரியின் நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துச் சொல்ல வாய்ப்புத்தந்த கருணாகரப்பெருமானின் பாதங்களை வணங்கி, என்னை இந்தநிலையில் அமரவைத்த எனது கல்லூரித்தாயை வணங்கி எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்வடை கின்றேன். இது அவனது அருளாகவே எண்ணுகின்றேன்.

சைவமும், தமிழும் நலிவுற்று, புறச்சமயங்களும் ஆங்கிலமொழியும் புகழோங்கியிருந்த காலத்தில் தமிழர் பண்பாடு, மரபு, சைவநெறி, தமிழ்மொழி ஆகியவற்றின் மறுமலர்ச்சிக்குச் சைவப்பெருமக்கள் வித்திட்டனர். கல்வி மூலமே எமது பண்பாட்டையும், சமயஒழுக்கத்தையும் வளர்க்க முடியும் என்பதை உணர்ந்த நாவலர் பெருமானின் சிந்தனைக்கு அமைய 03.04.1911ல் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி நூறு ஆண்டுகள் கல்விப்பணியைச் சிறப்பாகச் செய்து இன்று நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்றது என்னும் போது கல்லூரி ஆற்றிய பணி காலத்தால் அழியாதது இதற்கு இக்கல்லூரி உருவாக்கிய கல்விமான்களே சான்றாவர்.

பல புகழ்பூத்த அதிபர்கள், ஆசிரியர்கள், இக்கல்லூரியின் வளர்ச்சிக்குத் தம்மை அர்ப்பணித்துக் கல்விப்பணியைச் சிறப்பாகச் செய்துள்ளனர். அவர்கள் யாவரும் இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூரவேண்டியவர்கள். கற்றலில் சூழல் செல்வாக்குச் செலுத்துகின்றது. இன்று ஆரம்பப்பாடசாலைகள் தோறும் விளையாட்டு முற்றங்கள் உருவாக்கப்படுகின்றன. நவீன கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளை வளப்படுத்துவதில் பாடசாலைச்சூழல் செல்வாக்குச் செலுத்துகின்றது. மாணவர்கள் ஆசிரியர்களை விரும்பி வரவழைக்கும் விதத்தில் மகிழ்ச்சியானதும், ரம்மியமானதுமான கற்றல் சூழல் அமைவது


பொருத்தமானதாகும். இதற்கமைய கல்லூரியில் பழையமாணவர் சங்கம் உரும்பிராய் இந்துக்கல்லூரி கனடாக்கிளை, இலண்டன்கிளை, S.D.C, S.D.S. பழையமாணவர்கள் இந்த ரம்மியமான சூழலை ஏற்படுத்தித் தந்து கொண்டிருப்பது பாராட்டப்பட வேண்டியதொன்றே. இக்கல்லூரி தனது வாழ்நாளில் கடந்துவந்த பாதைகள் இன்பமும், துன்பமும், தளர்வும், அழகும், வனப்பும் நிறைந்தவையாகும்.

இத்தனை காலமும் எத்தனை கற்றோங்கிய அதிபர், ஆசிரியர்களைப் பணி செய்ய வைத்து மகிழ்ந்திருப்பாய், எத்தனை எத்தனை வீர,வீராங்கனைகளை உனது விளையாட்டு மைதானத்தில் தடம் பதிக்க வைத்திருப்பாய், இத்தனை நினைவுகளையும் இந்தநாளிலே நினைத்துப் பார்க்கையில் உள்ளம் புழகாங்கிதம் அடையுதம்மா! நீ வளர்த்த உத்தமர்கள் உலகில் எத்திசை சென்றாலும் "உரும்பிராய் இந்துக்கல்லூரி" என்ற சொல் கேட்டவுடன் மனம் மிக மகிழ்ந்தே உன்னை ஒருகணம் நினைக்கத் தவறியதில்லை. தமிழராகப் பிறந்து நாம் காலத்தின் கோலத்தால் பல்வேறுபட்ட நாடுகளிலும் வாழும் உனது செல்வங்கள் உனைநினைத்தே எடுக்கும் விழாக்களும், நிகழ்வுகளும் இவற்றுக்குச் சான்றாகும்.

மேலும் கல்விப்பெறுபேறுகள் உயர்வடையவும், விளையாட்டுத்துறை மிளிரவும், மைதானம், விடுதி, பார்வையாளர்அரங்கு, என்பன சகல வசதி களுடன் அமைக்கப்பட்டு வனப்புடன் மிளிர அனைவரும் ஒன்றாகக் கரங் கோர்த்துச் செயற்படுவோம் எனக்கூறி, இறையருளை வேண்டி நூற்றாண்டு விழாவும், நூற்றாண்டுமலரும் சிறப்புற என் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

**திரு.அ.ஈஸ்வரநாதன்**
**அதிபர்**
**யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி**

# நூற்றாண்டு விழாக் கட்டட ஸ்தாபகரின் வாழ்த்துச் செய்தி



**எல்லோருக்கும் வணக்கம்!**

எமக்குக் கல்வி தந்த தாயின் நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துச்செய்தி எழுதுவதை நான் பெருமையாகவே எண்ணுகிறேன். இப்படியான சந்தர்ப்பம் அங்கு கல்வி கற்ற எல்லோருக்கும் கிட்டுவதுமில்லை. அதனையிட்டும் நான் பெரிதும் மகிழ்கிறேன்.

இந்த நூறாண்டுகளில் பலர் எமது பாடசாலையில் பலனடைந்திருக்கிறார்கள். பலர் பாடசாலையின் முன்னேற்றத்திற்காக எப்போதும் பாடுபட்டுக்கொண்டே யிருக்கிறார்கள். அந்த வகையில் என்னாலான ஒரு பங்கையும் நான் கல்விகற்ற எனது கல்வித்தாய்க்கு ஆற்றியிருக்கின்றேன் என்பதனை எண்ணும்போது அது எனக்கு ஒரு மனநிறைவையும் தருகின்றது.

நான் இங்கு வந்து பார்த்தபோது மூன்று முக்கிய தேவைகள் எமது கல்லூரிக்கு அவசரமாகத் தேவைப்படுவதை அவதானித்தேன். நான் படித்த பாடசாலையின் நிலையைக் கண்டதும் நான் மிகவும் கவலையுற்றேன். இடிந்து விழும் நிலையிலிருந்த பிரார்த்தனை மண்டபத்தைக் கண்டதும் என் கண்கள் கலங்கின. இந்த மண்டபத்தை புதிதாகக் கட்டித்தரும்படி கடந்த சில வருடங்களாகப் பல சங்கங்களையும், தனிப்பட்டவர்களையும் அணுகியும் யாராலும் அதனைக் கட்டிக்கொடுக்க முடியவில்லையென அறிந்தேன். எனவே தான், நான் எனது சொந்தச் செலவில் அதனை அமைத்துக்கொடுப்பதென முடிவுசெய்து அந்தப் பொறுப்பினை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டேன். நூற்றாண்டு விழாவையொட்டி அவர்கள் கேட்டுக்கொண்டதன்படி பிரார்த்தனை மண்டபம் உட்பட்ட இரண்டு மாடிக்கட்டிடத்தை அமைத்துக்கொடுப்பதென முடிவுசெய்து அதற்கான கட்டட வேலைகளை உடனே ஆரம்பித்தோம். அதனை இன்று பார்க்கும்போதும் என் கண்களில் ஆனந்தக்கண்ணீர் வருகின்றது.

எமது பாடசாலையின் கல்வித் தரத்தை பல மடங்கு உயர்த்துவது மிக முக்கியமானது. எமது வருங்காலச் சந்ததியினருக்குத் தரமான கல்வியை ஊட்டுவது நம் எல்லோர் கைகளிலும்தான் இருக்கிறது. அதற்குப் பாடசாலைச் சமூகமும், அனைத்துப் பழைய மாணவர் சங்கங்களும் ஒத்துழைக்கவேண்டும். விளையாட்டு மைதானமும் புனரமைப்புச் செய்யப்படவேண்டும். அதற்கான ஆயத்தங்களும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. இந்த விளையாட்டு மைதானத்திலே நானும் ஓர் உதைபந்தாட்டக் குழுவிற்குத் தலைமை தாங்கி விளையாடிய இனிய நாட்களும் என் மனதில் வந்துபோகின்றன.

எமக்குக் கல்வி தந்த தாய்க்கு என்னாலான கடமையைச் செய்ததில் நான் பெருமகிழ்வடைகின்றேன். இனிவரும் காலங்களிலும் என்னாலான பணிகளைச் செய்வதற்கும் தயாராகவுள்ளேன். அனைவருமாகச் சேர்ந்து "எமக்குக் கல்வி தந்த தாய்க்குக் கை கொடுக்க வாருங்கள்!" என்று அனைவரையும் அன்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

எமது பாடசாலையின் இந்த நூற்றாண்டு விழா மிகவும் சிறப்பான முறையில் நிகழ எனது வாழ்த்துக்களைக் கூறிக்கொள்ளும் அதேவேளையில், எல்லாம் வல்ல இறைவனையும் அருள் புரிய வேண்டுகிறேன்.

"நன்றி"

திரு.க.தர்மகுலசிங்கம்
தொழிலதிபர்,
இலண்டன்.

# யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி



நூற்றாண்டு விழாக்காணும் உரும்பிராய் இந்துக் கல்லூரியை வாழ்த்தும் இந்தவேளை பெறுமதியானது.

கல்வியே எங்கள் பண்பாட்டின் உயிர்மூச்சு. கல்வியின் வழியாகவே எங்களின் அனைத்து மேன்மைகளும் கைவசமா கின்றன. இந்தவகையில் எங்களின் சமூக அசைவியக்கத்தில் உரும்பிராய் இந்துக்கல்லூரி கொண்ட இடம் குறிப்பிடத்தக்கது.

அந்நாளில் தன் நிலத்தினை நன்கொடையாக கல்லூரியின் ஊற்றுக்கண்ணான திரு.வேலுப்பிள்ளை மற்றும், ஆரம்ப முயற்சிகளை நெறிப்படுத்திய டாக்டர். வல்லிபுரம் ஆகியோரையும், சூழமைவின் இடர்களிடையேயும் கல்லூரியைக் கண்ணெனக் காத்த அதிபர்கள், ஆசிரியர் குழாத்தினரையும் போற்றுதல் நம்கடன்.

புலம்பெயர்வாழ்விலும் கல்லூரித்தாயை மறவாது அதன் வளர்ச்சிக்குத் துணையாகும் பழைய மாணவர்களின் பணி பாராட்டுக்குரியது.

நகர்ப்புறக் கல்லூரிக்கு நிகரான வளங்களுடன் எங்கள் கிராமத்து கல்லூரிகளையும் மேம்படுத்தும் அறிவார்ந்த திட்டங்களை வகுத்து அனைத்து மக்களினதும் அறிவியல் மேன்மையை உறுதிசெய்யும் காலப்பணியில் அனைவரும் ஒன்றிணைந்திடுவோம்.

கல்லூரியின் நூற்றாண்டுவிழா பெருமையைக் காக்கும் அதிபர் திரு.அ.ஈஸ்வரநாதன், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் சமூகத்தினர் அனைவருக்கும் எல்லையில்லா என் அன்பு வாழ்த்துக்கள்.

"கல்வி அழகே அழகு"

**பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கம்**
**துணைவேந்தர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# வட மாகாணக் கல்வி அமைச்சு செயலாளரின் வாழ்த்துச் செய்தி



உரும்பிராய் பதியின் சைவம் கல்வியுடன் தழைத்தோங்குவதற்காக யாழ் நகரில் உருவாக்கப்பட்ட இந்துக் கல்லூரிகளில் உரும்பிராய் இந்துக்கல்லூரியும் ஒன்றாகும். உரும்பிராயைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கல்விப் பணியைச் செய்து நூற்றாண்டைப் பூர்த்தி செய்வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இப் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியில் அச்சாணியாகத் திகழ்ந்த கல்லூரி தொண்ணூறுகளில் இருந்து பல சவால்களை எதிர்நோக்கிக் கொண்டிருந்தும் அத்தடைகளைத் தாண்டி தொடர்ச்சியான கல்விப் பணியை, மாணவர்களின் ஆளுமை விருத்திக்கான செயற்பாடுகளை மேற்கொண்டு வருவது அறியப்படுகின்றது. பாடசாலைகளின் மீள்வியூகம், தரங்களின் ஏற்றங்கள் மையப் பாடசாலைகளைப் பாதிப்பதாய் இருக்கின்றது. எனவே, சமூகத்தினர் நிலையை உணர்ந்து செயற்படுவராயின், புகழ்பூத்த பாடசாலையாக திரும்பவும் பழைய நிலையை எய்தும். நூற்றாண்டை எட்டும் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் உறுதியான நோக்கும், அதிபர், ஆசிரியர் குழாத்தினரின் அர்ப்பணிப்பு நிலையும் இக்கல்லூரியை நிலைநிறுத்தும் என எதிர்பார்க்கின்றேன்.

நூற்றாண்டு விழாவை ஒட்டி வெளிவரும் சஞ்சிகையானது பயனுள்ள ஆக்கங்களைத் தாங்கி கல்லூரியின் வரலாற்றுத் தடங்களையும் அறிக்கையிட வேண்டும் என எதிர்பார்த்து, இக்கல்லூரி மேலும் வினைத்திறனான கல்விப் பணியைச் செய்யவும் இம்மலர் வெளியீடு சிறப்பாக அமையவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.இ.இளங்கோவன்,**
**செயலாளர்,**
**கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு,**
**வடமாகாணம்.**

# வட மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி




நூற்றாண்டு விழாக்காணும் யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு மலருக்கு வாழ்த்துக் கூறுவதில் பேருவகையடைகின்றேன். சைவப்பிள்ளைகள் சைவச் சூழலில் கற்கவேண்டும் என்ற நாவலரின் சிந்தனையின் அடிப்படையில் இக்கல்லூரி 1911ம் ஆண்டு ஆரம்பிக்க ப்பட்டது. கல்விச்செயற்பாடுகளின் ஊடாக தாபகர்களின் கனவை உரும்பிராய்ப் பகுதியில் நிலைநாட்டுவதில் இக்கல்லூரி பெரும்பங்காற்றியுள்ளமை வரவேற்கத்தக்கது.

கடந்த நூறு வருடங்களாக பல்லாயிரக்கணக்கான கல்விசார் புலமையாளர்களை எமது சமூகத்திற்கு வழங்கி வருவதில் உரும்பிராய் இந்துக்கல்லூரியின் கல்விப்பணி மிகவும் காத்திரமானது. இப்பொழுதும் இக்கல்லூரியின் பழையமாணவர்கள் கல்லூரியில் மிகவும் பற்றும் பாசமும் கொண்டவர்களாகவும், கல்லூரியின் எதிர்காலத்தில் நாட்டங்கொண்டவர்களாகவும், தனது செயற்பாடுகளின் ஊடாக அந்த உயர் நிலைமையை எய்த வேண்டுமெனவும் கருதிப் பல சேவைகளைச் செய்து வருகிறார்கள். அந்தவரிசையில் பழைய மாணவனொருவனால் "நூற்றாண்டுவிழா மண்டபம்" அமைக்கப்பட்டுள்ளமை போற்றுதற்குரியதாகும்.

அதேபோல, தற்போது பணியாற்றும் அதிபரும், ஆசிரியர்களும் சமூகத்தின் ஒத்துழைப்போடு பல சிறந்த செயற்றிட்டங்களைப் பாடசாலையின் வளர்ச்சிக்காக நடைமுறைப்படுத்துவது மகிழ்ச்சிக்குரிய செயலாகும். உரும்பிராய் இந்துக்கல்லூரி மேலும் பல நூற்றாண்டுகள் கல்விப்பணியாற்றுவத னூடாகச் சமூகத்தினை நல்வழிப்படுத்தி, சிறந்தோங்க இறைவனின் அருளைப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.ப.விக்னேஸ்வரன்**
**வட மாகாணக்கல்விப் பணிப்பாளர்,**
**வட மாகாணக்கல்விப் பணிமனை,**
**மருதனார்மடம்.**

# மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



**"பல நூற்றாண்டுகள் வாழ்க இக்கலாலயம்"**

யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி சைவமும் தமிழும் வளர்க்கவும், கிராமப்புற மாணவர்களின் உயர்கல்வியை வளர்த்தெடுக்கவும் ஸ்தாபிக்கப்பட்டது. பல சவால்களை எதிர்நோக்கிய காலத்தில் எம்மவர்களால் தாபிக்கப்பட்ட இக்கல்லூரி சவால்களை மீறித் தனது இலக்குகளை உயர் நிலையில் அடைந்துள்ளது. இப்பாடசாலையில் கல்வி கற்றவர்கள் வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, கணக்காளர்களாக இன்றும் எம் மத்தியில் உயர்பதவிகளை வகிப்பதையும் காணக்கூடிதாக உள்ளது. வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து வந்த மாணவர்களையும் தம்மகத்தே உள்வாங்கிக் கல்வித் தொண்டாற்றுகின்றது. ஒரு கல்லூரி தொண்டாற்றியது என்னும் போது அப்பாடசாலையின் முகாமையாளரான அதிபர்களையும் ஆசிரியர்களையும் குறிக்கின்றது. அந்த வகையில் இப்பாடசாலையின் வளர்ச்சியில் இந்த நூற்றாண்டு வரை உழைத்த அதிபர்களையும், ஆசிரியர்களையும் வாழ்த்துவதோடு தற்போது கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவை வகுப்பு I ஐச்சேர்ந்த அதிபர் திரு.அ.ஈஸ்வரநாதன் அவர்களின் அரிய பணியையும், அவரது ஆசிரியர் குழாத்தையும், ஏனைய உத்தியோகத்தர்களையும் வாழ்த்துவதுடன், இக்கல்லூரி மேலும் பல நூற்றாண்டுகள் சகல வளங்களையும் பெற்று எமது சமூகத்திற்குத் தொண்டாற்ற என்து பிரார்த்தனைகள்.

**திரு.வே.தி.செல்வரத்தினம்**
**மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**

# யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி தனது நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடி மகிழும் இவ்வேளையில், வெளியிடப்படும் நூற்றாண்டு மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்ச்சி யடைகின்றேன்.


நீண்ட கால வரலாற்றையும், பெருமைக்குரிய சிறப்புக் களையும் கொண்ட இக்கல்லூரி உரும்பிராய்ப் பிரதேசத்தின் கல்விப் பாரம்பரியத்துக்கு வளமும், வலுவும் சேர்த்து வந்துள்ளது. இக்கல்லூரி தனது பாரம்பரியக் கல்விப்பணியினால் பல்துறைகளிலும் புகழ்பூத்த தகைமைசார் சான்றோர்களைச் சமூகத்துக்கு உவந்தளித்த சாதனைக்குரியது. அந்தவகையில் சமூகத்தில் சமத்துவம், சுயமரியாதை, பகுத்தறிவுடன் கூடிய ஆளுமைமிக்க பழைய மாணவர்களை உருவாக்கிய நற்பெருமையை இக்கல்லூரி பெறுகின்றது.

இன்று "கல்வி" பற்றிய விளக்கமும், விரிவாக்கமும் பன்முகப் பரிமாணங்களைப் பெற்றுள்ளதுடன், பாடசாலைகள் பண்புசார் தரவிருத்தியினை அடைய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கு இங்கு பணியாற்றும் ஆளணியினரிடையே மனிதாபிமான இடைவினைத் தொடர்புகள், கூட்டுணர்வு, குழுவாகப் பங்கேற்கும் மனோநிலை என்பவற்றுடன், கல்லூரியின் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகளின் மேலான ஒத்தழைப்பும், ஊக்குவிப்பும் அவசியமாகின்றது.

இவ்இலக்கினைத் தமது மனதில் நிலைநிறுத்திச் செயற்பட்டுவரும் இக்கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் பாராட்டு வதுடன், நூற்றாண்டு விழாக்காணும் களிப்பில் அகமகிழ்ந்திருக்கும் இக்கல்லூரிச் சமூகத்தினருடன், எனது மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்கின்றேன். விழா இனிது சிறப்புற அமைய எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி.அ.வேதநாயகம்**
**வலயக் கல்விப்பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**

# வலிகாம வலயக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



**உரும்பிராய் இந்துக்கல்லூரியின் கல்வித்தருமம்!**

"இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய தீர்த்தச் சுனைகள் இயற்றல்
அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்."

இவ்வாறான தருமங்களின் வரிசையில் கோடி புண்ணியம் தரவல்ல தருமம் ஒன்றினையும் பாரதி குறிப்பிடுகின்றான். அதுதான் "ஏழைக்கு எழுத்தறிவித்தல்". இத் தருமத்தை ஆற்றிவரும் சில கல்விச்சாலைகளில் குறிப்பிடக் கூடியதுதான் யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.

அதிகாலையில் துயிலெழுந்து தமது கருமம் முடித்து, பாடசாலைச் சீருடைகளுடன் இக்கல்லூரியின் முன்னுள்ள பலாலி வீதி வழியாக மாணவர்கள் யாழ் நகரிலுள்ள பிரபலமான கல்லூரிகளை நாடிச்செல்வது நாம் அன்றாடம் காணும் காட்சி. அதேவேளை வாழ்க்கைக்கென எவ்வித குறிக்கோளுமின்றி, அவ்வத் தரங்களிற்கான உரிய கற்றற் தேர்ச்சிகளுமின்றி, நாமும் பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டும் என்ற நினைவுகளுடன் வாழ்கின்ற மாணவர்களும் உள்ளனர். இம்மாணவர்களும் சம்பிரதாய பூர்வமாகப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். இப்பிள்ளைகளும் உள்நுழைவதற்கு எத்தனை பாடசாலைகள் தமது வாயிலைத் திறந்து விட்டுள்ளன. இப்பிள்ளைகளுக்கென அடைக்கப்படாத வாயிலுடன், நாம் காணும் கல்லூரிதான் உரும்பிராய் இந்துக்கல்லூரி.

சுற்றாடலில் உள்ள பாடசாலைகளிலிருந்து, உரிய கல்வித்தேர்ச்சிகளின்றி, இக்கல்லூரி தமது வாழ்வில் ஒளியேற்றும் எனும் அதீத நம்பிக்கையுடன் இக்கல்லூரி வளவினுள் தரம் ஆறில் காலடி வைக்கும் மாணவர்களுக்குப் பரிகாரச்செயற்பாடுகளிலிருந்து தனது கற்றல்-கற்பித்தல் பணியை முன்னெடுக்கும் இக்கல்லூரியின் பொதுப்பரீட்சை அடைவுகளை அதி உயர்வான நிலையில் எதிர்பார்க்கமுடியுமா? ஆனால், தன்னை நம்பிச் சரணடைந்த மாணவர்களை இக்கல்லூரி கைவிட்டது கிடையாது. "பிரபலமான கல்லூரிகளே! நீங்கள் "மீத்திறன்" மாணவர்களைக் கைகொட்டி அழைத்துக் கொள்கிறீர்கள், ஆனால் நான் பாமரன் இருக்கும் பள்ளத்துக்கே சென்று, அவனுக்குத் தோள் கொடுத்து, அவனை உயர்வுக்குக் கொண்டுவர முடியாது விடினும், சமதரைக்காவது எடுத்து வருகிறேன்" எனப் பெருமை கொள்கிறது.

இக் கல்லூரியின் பால், அதன் சேவை, செயற்பாடுகள் மற்றும் கல்வித்தருமம் என்பவற்றால் ஈர்க்கப்பட்டு, இதன் மீது மட்டற்ற மதிப்பைக் கொண்டுள்ள ஏராளமான பழைய மாணவர்களில், உயர்வான ஸ்தானத்தில் வைத்துப் போற்றுதற்குரிய நல்லிதயம் கொண்ட ஒரு மாணவன் இக்கல்லூரி மீது கொண்ட மதிப்பின் வெளிப்பாடே இந் நூற்றாண்டுவிழா மண்டபம்.

"தருமம்" தலைகாக்கும் என்பர். தருமம் என்ற ஒன்று இருப்பது உண்மையானால் அத்தருமம் இருக்கும் வரை இக்கல்லூரியும் தான் ஆற்றும் கல்வித் தருமத்திற்காக நின்று நிலைத்திருக்கும்.

**திரு.ஆ.ராஜேந்திரன்**
**வலயக் கல்விப்பணிப்பாளர்,**
**வலிகாமம் கல்விவலயம்**

# கோப்பாய்க் கோட்டக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



புகழ் பூத்த கல்லூரி!

"வீடுகள் தோறும் கலைகளின் விளக்கம்
வீதிகள் தோறும் இரண்டொரு பள்ளி"


என்ற பாரதியாரின் பாடலடிகள் சமூகத்தில் பாடசாலைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. ஒரு கிராமத்திற்கு அழகு சேர்க்கும் நிறுவனங்களில் தலையாயது பாடசாலை. பாடசாலைகளாலும் கோயில்களாலும் அழகு பெற்று விளங்கும் பெருமை உரும்பிராய் கிராமத்திற்கு உண்டு. அத்தகைய பாரம்பரிய செழுமைமிக்க ஊரின் நாயகமாக விளங்கும் உரும்பிராய் இந்துக்கல்லூரி தனது நூறாவது ஆண்டைக் கொண்டாடும் இவ்வேளையில் நூற்றாண்டுவிழா மலருக்கு ஒரு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.

இக்கிராமியச் சமூகத்தில் அயராத உழைப்பின் சின்னமாகத் திகழும் உரும்பிராய் இந்துக்கல்லூரி, சமூகத்தின் வளர்ச்சிக்கு ஆற்றிவரும் பங்களிப்பு அளப்பரியது. இக்கல்லூரி பல கல்விமான்களையும் பெரியோர்களையும் உருவாக்கியுள்ளது என்றால் மிகையாகாது. இதன் பெருமையைப் பறைசாற்றவும், அதன் வளர்ச்சிக்குக் கைகொடுக்கவும் உலகெங்குமுள்ள பழையமாணவர்கள் அயராது பாடுபட்டு வருவது பாராட்டுக்குரியது. கல்லூரியின் முதல்வர் திரு.அ.ஈஸ்வரநாதன் அவர்களின் அயராத உழைப்பும், கல்லூரியை உன்னத நிலை நோக்கி இட்டுச் செல்வதற்கு அவர் காட்டும் ஆர்வமும் பாராட்டுக்குரியது. நூற்றாண்டுவிழா கொண்டாடப்படும் இவ்வேளையில் இக்கல்லூரித்தாயின் சிறப்பம்சங்களும், வரலாறும் மீட்கப்படும். இது இக்கல்லூரியின் உரமானதொரு எதிர்காலத்திற்கு அடிப்படையாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

"இக்கல்லூரி பேரோடும் புகழோடும் வாழ்க பல்லாண்டு"

**திரு.வே.பாலசுப்பிரமணியம்**
**கோட்டக் கல்விப்பணிப்பாளர்,**
**கோப்பாய்க் கல்விக்கோட்டம்.**

# யாழ். வலயக் கணக்காளரின் வாழ்த்துச் செய்தி



யா/உரும்பிராய் இந்துக்கல்லூரியின் கல்விச்சமூகம் பயன டையும் வகையில் பல்வேறு தேடல்களையும் ஆக்கங் களையும் நூற்றாண்டு மலரில் உள்ளடக்கி நூற்றாண்டு மலரினை வெளியிட்டு, நூற்றாண்டுவிழா கொண்டாடு வதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

"எழுத்தறிவித்தவன் இறைவன்" என்ற நிலையிலிருந்து யாழ் உரும்பிராய் இந்துக்கல்லூரி நூறு ஆண்டுகளாக உரும்பிராய் மண்ணில் பிறந்த மனிதர்கள் யாவரும் மனிதர்களாக வாழக் கல்வியைப் புகட்டியுள்ளதென்பது யாவருமறிந்த உண்மை. இப்பாடசாலையில் கல்வி கற்றவர்கள் இன்று பல சிறப்புடன் பல்வேறு துறைகளில் முன்னணி வகிக்கின்றமை இப் பாடசாலையின் பெருமையை அணிவகுத்து நிற்கின்றது.

நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி கூறுவதற்கு வாய்ப்பளித்த பாடசாலைச் சமூகத்திற்கு நன்றி கூறுவதோடு இப்பாடசாலை மேலும் பல வசதிகள் பெற்று பல கல்விமான்களை உருவாக்கி யாழ் மாவட்டத்தில் ஒரு முன்னணிப் பாடசாலையாக மலர வேண்டுமென வாழ்த்தி மகிழ்ச்சியடைகிறேன்.

"நன்றி"

**திரு.க.கமலரூபன்**
**கணக்காளர்**
**வலயக் கல்வி அலுவலகம்**
**யாழ்ப்பாணம்.**

# உப அதிபரின் வாழ்த்துச் செய்தி



மாணவச் சமூகத்தின் சிந்தனைத் திறன் விருத்திக்கும், சம காலக் கருத்துக்களின் வெளிப்பாட்டிற்கும், மாணவர்களின் தொழில் வளர்ச்சிக்கும், திறமை, ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியனவற்றை வெளிப்படுத்தவும் களம் அமைத்துக் கொடுத்த பெருமை மிக்கது உரும்பிராய் இந்துக்கல்லூரி எனின் மிகையாகாது. இங்கு கல்வி கற்றவர்களில் பலர் இன்று வெளிநாடுகளிலும், உள்நாடுகளிலும் பொறியியலாளர்களாகவும், வைத்தியர்களாகவும், பட்டயக்கணக்காளர்களாகவும், அதிபர்களாகவும், ஆசிரியர்களாகவும், தொழிலதிபர்களாகவும் இருப்பதை மறுக்க முடியாது. அந்த வகையில் இன்று இக்கல்லூரி நூற்றாண்டு விழாவைக் கொண்டாட இருப்பதை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன்.

நானும் இக்கல்லூரியின் பழைய மாணவி. இக்கல்லூரியில் கல்வி கற்றுத்தான் பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்றேன். இக்கல்லூரி நூற்றாண்டு விழாக்காணும் இவ்வேளையில் கல்லூரிச் சமூகம் நன்றியுடன் நினைவு கூருகின்றது. புதியதோர் சகாப்தத்தில் காலடி எடுத்துவைக்கும் வேளையில் அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சபை (SDC), இலண்டன் பழையமாணவர் சங்கம், கனடா பழைய மாணவர் சங்கம், மாணவர்கள், நலன்விரும்பிகள் யாவரும் உற்சாகத்துடன் ஒன்றிணைந்து செயற்பட்டு வருவது போற்றுதற்குரியதே. மென்மேலும் இக்கல்லூரி பொலிவுடனும், நூற்றாண்டு விழா சிறப்பாக நடந்தேறவும், நூற்றாண்டு விழாவுடன் வெளிவரும் மலரும் நல்ல கனதியுடன் வெளிவர வேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**திருமதி.க.விஜயகுமார்**
**உப அதிபர்**
**யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி**

# யாழ்.கல்வியியற் கல்லூரி பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி



கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக உரும்பிராய் வாழ் மக்களுக்குக் கல்விப்பணியை மேற்கொண்டு வரும் உரும்பிராய் இந்துக்கல்லூரியின் நூற்றாண்டு விழா நிறைவு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

கல்வி என்பது மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தப் பயன்படும் ஒரு கருவியாகும். ஒரு சமூகத்தின் ஒழுக்கம், விழுமியங்கள் பாரம்பரியம், சமயம், மொழி போன்றவற்றைக் கல்வி பேணிப்பாதுகாக்கின்றது. இந்த வகையில் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் உரும்பிராய் வாழ்மக்களின் சைவசமயத்தையும் தமிழ்மொழியையும் பேணிக்காத்த பெருமை இக்கல்லூரியைச் சாரும். இற்றை வரை இக்கல்லூரி அறிவாற்றல் மிகுந்த ஒரு சமுதாயத்தை வளர்த்துவிட்ட பெருமையில் தலைநிமிர்ந்து நிற்கிறது.

இலங்கையில் மட்டுமல்ல உலகில் பல பாகங்களிலும் இங்கு கல்வி கற்ற பல சமூகத்தினர், பல்வேறு தொழில்சார் நிறுவனங்களில் பணிபுரிவதைக் காணக்கூடியதாக உள்ளது. அது மட்டுமல்லாது தாம் உரும்பிராய் இந்துக் கல்லூரிச் சமூகத்தினர் என்று பெருமையுடன் கூறிக்கொள்வதனைக் காணுகின்ற போது மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இக்கல்லூரியை இன்று இந்நிலைக்கு உயர்த்திய பெருமை காலத்துக்குக்காலம் தன்னலமற்ற சேவை செய்த அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களையும் சார்ந்ததாகும். இன்று இக்கல்லூரித்தாயின் நூற்றாண்டு விழாவையும் மலரையும் வெளியிடும் பெருமைக்குரிய பேற்றினை அதிபர், அ.ஈஸ்வரநாதனும், ஆசிரியர் குழாமும் பெற்றுக் கொண்டமை பாராட்டுக்குரியதாகும்.


உரும்பிராய் இந்துக்கல்லூரி கல்வியில் பெருஞ் சாதனைகளைப் பெற்றுக் கொண்டமை மட்டுமல்ல விளையாட்டுத்துறை, இசைத்துறை, நாடகத்துறை, தமிழியல்துறை போன்ற இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளது. இக்கல்லூரியில் கல்வி பயின்றவர்கள் சிறந்த ஆளுமை உடையவர்களாகச் சமூகத்தில் மிளிர்வது கல்லூரிக்குப் பெருமை சேர்க்கிறது. கடந்த ஆசிரியர்களும், ஒரு தசாப்த காலமாக எமது கல்லூரியின் முகிழ்நிலை ஆசிரியர்களும், உள்ளகப்பயிற்சி ஆசிரியர்களும், பயிற்சி முடித்து வெளியேறி நியமனம் பெற்ற ஆசிரியர்களும், ஆசிரிய வாண்மையை விருத்தி செய்ய இக்கல்லூரி களம் அமைத்துக் கொடுத்து வருகின்றமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

நூற்றாண்டு காலமாக உரும்பிராய் மக்களைச் சிறந்த கல்விமான்களாக்கி சமுதாய முன்னேற்றத்திற்காக உழைத்த இக்கல்லூரி தொடர்ந்தும் அப்பணியை செவ்வனே புரிய எனது ஆசிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

"நன்றி"

**திரு.எஸ்.கே.யோகநாதன்**
**பீடாதிபதி**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**கோப்பாய்.**

# அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது வாழ்த்துச் செய்தி



உரும்பிராய் இந்துக்கல்லூரி தனது நூற்றாண்டுப் பூர்த்தியை முன்னிட்டு "நூற்றாண்டு மலர்" ஒன்றினை வெளியிட முன்வந்திருப்பதையிட்டுப் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். வைத்திய கலாநிதி வல்லிபுரம் அவர்களால் பத்து மாணாக்கரைக்கொண்டு 1911ம் வருடம் சித்திரை மாதம் 3ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இக்கல்விக் கூடமானது ஆரம்பத்தில் "உரும்பிராய் இந்து ஆங்கிலப் பாடசாலை" என அழைக்கப்பட்டு, பின்னர் 1932ம் வருடம் முதல் "உரும்பிராய் இந்துக்கல்லூரி" எனப் பெயர்பெற்று இன்று வரை செயற்பட்டு வருகின்றது.

கல்வித்துறையில் மாத்திரமின்றி ஒரு காலத்தில் விளையாட்டுத் துறையிலும் சிறந்தோங்கிய இப்பாடசாலை, கடந்த கால அழிவு, யுத்தம் காரணமாகச் சற்றுப் பின்னடைவைக் கண்டிருந்தாலும் இன்று முன்னேற்றகரமான பாதையில் பயணிக்க ஆரம்பித்திருப்பது நம்பிக்கையைத் தருகின்றது. "சைவமும் தமிழும்" பாரம்பரியத்துக்கு அமைவாக யாழ்ப்பாணத்தில் உருவாக்கம் பெற்றுள்ள பாடசாலைகளில் ஒன்றான உரும்பிராய் இந்துக்கல்லூரி தனது நூற்றாண்டினைக் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் இக்கல்லூரியின் வளர்ச்சி தொடர்பில் பல்வேறு நிலைகளில் இருந்தும் பங்களிப்புக்களை வழங்கியுள்ள அனைவருக்கும் நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வது எனது கடமைப்பாடாகும்.

அதேநேரம், நூற்றாண்டு மலரினை வெளியிடுவதில் உழைத்துள்ள அனைவரையும் பாராட்டி, இக்கல்லூரியின் அனைத்துச் செயற்பாடுகளும் எமது சமுதாயத்தின் விடிவுக்காகத் துணைநிற்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புக்களுடன், யாழ் குடாநாட்டின் கல்விசார் அபிவிருத்திக்கான எனது துரித திட்டங்களுக்கு அமைவாக இக்கல்லூரியின் மேம்பாட்டிற்காகவும் எனது உதவிகள் தொடர்ந்தும் கிடைக்கும் எனத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா (பா.உ)**
**செயலாளர் நாயகம் - ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி,**
**பாரம்பரியக் கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில்**
**முயற்சி அபிவிருத்தி அமைச்சர்,**
**இணைத்தலைவர் - யாழ், கிளிநொச்சி தேர்தல் மாவட்ட இணைப்புக்குழு.**

# யாழ்.அரச அதிபரின் வாழ்த்துச் செய்தி



பாரம்பரியமும், பண்பாட்டுச் சிறப்பும் மிக்க உரும்பிராய் கிராமத்தில் கல்வி ஒளி பரப்பி வரும் யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி தனது வரலாற்றில் பல படிகளைக் கடந்து இன்று நூற்றாண்டுவிழாக் காணுவதையிட்டு மகிழ்ச்சி யடைகின்றேன்.

தான் சார்ந்துநிற்கும் கிராமப்புற மாணவர்களின் கல்வி மேம்பாட்டினை நோக்காகக் கொண்டு திருவாளர் சின்னத்தம்பர் வேலுப்பிள்ளை அவர்களால் மனமுவந்து இலவசமாக வழங்கப்பட்ட காணியில் வைத்திய கலாநிதி வைரவநாதர் வல்லிபுரம் அவர்களால் 1911இல் ஸ்தாபிக்கப்பட்ட இப் பாடசாலை ஆரம்பத்தில் ஓலைக்கொட்டிலில் தரம் - 6 வரையான வகுப்புக்கள், இரு ஆசிரியர்கள், 10 மாணவர்கள் என்ற அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்று உயர்தர வகுப்புகளைக் கொண்ட தரம் மிக்க கல்லூரியாய் விளங்குவதன் காரணம் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அது ஆற்றிய அளப்பரிய சேவைகளே என்றால் அது மிகையன்று. இக் கல்லூரியின் முதலாவது அதிபரான திரு.வை.சின்னையா அவர்களைத் தொடர்ந்து பதவி ஏற்ற அதிபர்கள், மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் தமது தளராத உழைப்பினாலும் அர்ப்பணிப்பான சேவையாலும் காலத்திற்கு காலம் கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் முத்திரை பதித்துச் சென்றுள்ளனர். இவ்வழியில் இன்று நூற்றாண்டு காணும் யா/உரும்பிராய் இந்துக்கல்லூரியின் அனைத்துச் செயற்பாடுகளும் நல்லதொரு நாளைய சந்ததிக்கு வழிகாட்டலாய் அமையவும், இப்பாடசாலை சகல வளங்களையும், நலன்களையும் பெற்று, கல்விச் சேவையில் மென்மேலும் சிறப்புறவும் எனது மனமுவந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி.இமெல்டா சுகுமார்**
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

# யாழ்.மாநகரசபை முதல்வரின் வாழ்த்துச் செய்தி



"கல்விப் பணியே கடவுள் பணி"


ஒரு புகையிலைக் கொட்டிலில் 1911ஆம் ஆண்டு பத்து மாணவர்களுடன் ஆரம்பமான இப்பாடசாலை படிப்படியாக "ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி" இன்று 6ம் தரத்திலிருந்து 13ம் தரம்வரை 500க்கு மேற்பட்ட மாணவர்களுடன் 03.04.2011 ஆம் நாளன்று இக்கல்லூரியின் பழைய மாணவர்களால் கட்டிக் கொடுக்கப்பட்ட 120அடி நீளமும் 47 அடி அகலமும் கொண்ட நூற்றாண்டு விழா மண்டபத்தில் தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடவிருப்பதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியுடன் இவ்வாழ்த்துச் செய்தியை அளிப்பதில் பெருமையடைகின்றேன்.

"அன்ன சத்திரம் ஆயிரம் அமைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல்" போன்ற இன்னோரான்ன அறங்களிலும் பார்க்க ஓர் ஏழைக்கு எழுத்தறிவிப்பது மேலானாது என்ற பாரதி வாக்கை நூறு ஆண்டுகளிற்கு முன்னரே உணர்ந்து அதற்கமைவாக பொந்தர் வேலுப்பிள்ளை என்ற பெரியாரால் உவந்தளிக்கப்பட்ட காணியில் ஆரம்பமான இப்பாடசாலை "இந்து போர்ட்" என அந்தக்காலத்தில் அழைக்கப்பட்ட அறக்கட்டளையின் உதவியுடன் வளர்ந்து இன்று நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் பெரும் பேற்றைப் பெற்றுள்ளது.

இக்கல்லூரி அக்காலம் தொடக்கம் கல்வியில் மாத்திரமல்ல விளையாட்டுத் துறையிலும் பெருமையுடன் மிளிர்ந்ததை நான் அறிவேன். வருடா வருடம் இக்கல்லூரியிலிருந்து ஏராளமான மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்று மருத்துவர்களாகவும், பொறியியலாளர்களாகவும் வெளிவந்ததுடன் இன்று உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இக்கல்லூரிக்குப் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கின்றார்கள். இக்கல்லூரியின் முதலாவது அதிபராக இருந்த திரு.வை.சின்னையா அவர்களைத் தொடர்ந்து இற்றைவரை 20அதிபர்கள் சேவையாற்றி வந்திருக்கின்றார்கள். இக்கல்லூரிக்கான காணியை உவந்தளித்த பொந்தர் வேலுப்பிள்ளை, ஸ்தாபகரான கலாநிதி வல்லிபுரம் கல்லூரியைக் கட்டியெழுப்பிய அதிபர்களாகிய பெரியார்களின் பெயர் காலமெல்லாம் நிலைத்திருக்கும். கல்விப்பணியை கடவுள் பணியாகக் கொண்டு வளர்ந்து வரும் இக்கல்லூரி பல்லாண்டு பல்லாண்டு வாழ்க! என வாழ்த்துகிறேன்.

திருமதி.யோ.பற்குணராசா
மாநகரசபை முதல்வர்,
யாழ்ப்பாணம்.

# வலிகாமம் கிழக்கு பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



"களம் பல அமைத்து,
வளம் பெறும் கல்லூரி வாழ்க!"

யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி நூறாவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் நன்நாளில் இவ்விழாக்குழுவினரால் வெளியிடப்படுகின்ற இந்நூற்றாண்டுமலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இக்கல்லூரியானது ஆரம்பத்தில் "உரும்பிராய் இந்து-ஆங்கிலப்பாடசாலை" என விளங்கி தற்போது "உரும்பிராய் இந்துக்கல்லூரி" எனச் சிறப்புப் பெயர்பெற்று விளங்குகின்றது. பத்து மாணவர்களுடன் ஆரம்பித்த இக்கல்லூரியானது இன்று பெருந்தொகை மாணவர்களுடன் சிறப்பாக இயங்கி வீறுநடைபோடுகின்றது.

மாணவர்களைக் கல்வியில் மட்டுமன்றி, சிறந்த ஆளுமை மிக்க எதிர்காலச் சந்ததியினராக உருவாக்குவதில் திறம்படத் தம் பணிகளைத் தொடர்ந்து வழங்கி வருகின்றது. மாணவர்களது கல்வி, இணைப்பாடவிதான செயற்பாடுகள், சிறந்த ஒழுக்கம், நற்சிந்தனை ஆகிய பண்புகளை வளர்ப்பதிலும் இக்கல்லூரி செல்வாக்குச் செலுத்துகின்றது.

அவ்வகையில் நூற்றாண்டு காணும் இக்கல்லூரி, அதனையொட்டி "நூற்றாண்டுமலர்" ஒன்று வெளியிடும் செய்தி மனதுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. இம்மலர் சிறப்பாக அமையத் தமது ஆக்கங்களை வழங்கிய பெரியோர்களையும், மாணவர்களையும் பாராட்டுவதோடு, இம்மலர் சிறப்புற வெளிவர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், தொடர்ந்தும் இக்கல்லூரி பல்வேறு சிறப்புக்களையும் பெற்று மிளிர எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

திரு.ம.பிரதீபன்
பிரதேச செயலர்,
வலிகாமம் கிழக்கு,
கோப்பாய்.

# வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி



யா/உரும்பிராய் இந்துக்கல்லூரியானது தனது ஜனனத்தினை 1911ம் ஆண்டு சித்திரை மாதம் 3ம் நாள் தனியொரு கொட்டகையில் ஆரம்பித்து, படிப்படியாக வளர்ச்சியடைந்து க.பொ.த. உயர்தரக்கல்வி வரை தரம் உயர்ந்து பல மாடிக்கட்டடங்களில் தற்போது இருபத்தோராவது அதிபரின் வழிநடத்தலின் கீழ் இயங்கி வருகின்றது.

இக்கல்லூரியானது உதைபந்தாட்டப் போட்டியில் சிறந்து விளங்குவதுடன் வருடந்தோறும் பல்கலைக்கழக அனுமதிக்காகப் பல துறைகளில் கணிசமான மாணவர்களை வெளியீடாகக் கொண்டுள்ளது பெருமைக்குரிய விடயமாக அமைந்திருக்கின்றது. மேலும் நவீன கணினிக் கல்வியிலும் சிறப்பானதொரு செயற்பாட்டினை மாணவர்களுக்கு வழங்குகின்றது. அது மட்டுமல்லாது மேற்கத்தேய நாடுகளில் (இலண்டன், கனடா) வசிக்கும் பழைய மாணவர்களின் பங்களிப்பு மிகவும் உன்னதமானதாக விளங்குவதோடு கல்வியிலும் சிறப்பினை வெளிப்படுத்துகின்றது.

குறிப்பாக, உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்ட இலண்டன் தொழிலதிபரான பழையமாணவன் திரு.கந்தசாமி தர்மகுலசிங்கம் 20மில்லியன் ரூபாவினை புதிய கலைக்கட்டடம் நிறுவுவதற்கு அன்பளிப்பாக வழங்கி, தனது கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்குச் செய்யும் பங்களிப்பானது உண்மையிலேயே அவர் கல்விக்கு வழங்கிய முக்கியத்துவத்தினை வெளிக்கொணர்கின்றது. மொத்தத்தில் சிறப்பான அதிபர், ஆசிரியர்களின் வழிகாட்டலின் கீழ் தரமான மாணவர்களை வழங்கும் இக்கல்லூரி, எதிர்வரும் காலங்களில் பல முன்னேற்றங்களைக் கண்டு இக்கிராமத்திற்கு மேலும் பல கல்விமான்களையும், நற்பிரஜைகளையும் உருவாக்க வேண்டுமென இந்நூற்றாண்டு விழாவில் வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றேன்.


திருமதி.ஜெயந்தா சோமராஜ்,<br>
செயலாளர்<br>
வலி.கிழக்குப் பிரதேச சபை,<br>
புத்தூர்.

# முன்னாள் மாகாணக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி கடந்த நூறு ஆண்டுகளாக நிலைத்து நின்று கல்விப்பணி ஆற்றிவருவதைக் குறிக்கும் முகமாக விழா எடுப்பதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பாக 1911ம் ஆண்டு சைவத்தையும், தமிழையும் வளர்க்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை வளர்ச்சி பெற்று இன்று தரம்-I கல்லூரியாக உயர்ந்துள்ளது. இக்காலகட்டத்தில் இப்பிரதேச மக்களுக்கு கல்வி ஒளியூட்டி செயற்றிறன் மிக்க நற்பிரஜைகளை உருவாக்கும் அரும்பணியில் ஈடுபடுகின்றது. அத்துடன் மாணவர்களின் திறன்களை இனங்கண்டு வளர்த்துப் பல சாதனைகளையும் புரிந்துள்ளது.

நூற்றாண்டு விழா எடுக்கும் இக்காலத்தில் இக்கல்லூரியை ஆரம்பித்து வைப்பதில் முன்னின்று உழைத்த பெரியோர்களையும், அதிபர், ஆசிரியர்களையும் நினைவு கூர்ந்து நன்றி நவில்வது இப்பிரதேச மக்கள் அனைவரதும் தலையாய கடமையாகும். போர்க்காலச் சூழ்நிலையால் பெரிதும் பாதிக்கப்பட்ட இக்கல்லூரி எதிர்நீச்சல் போட்டு மீண்டும் எழுச்சி பெற வேண்டிய ஒரு காலகட்டத்தில் உள்ளது. இச்செயற்பாட்டிற்கு ஆதரவாகப் பல பெரியார்களும், புலம்பெயர்ந்த மக்களும், பழைய மாணவர்களும் குரல் கொடுத்துள்ளார்கள். இவற்றை நன்கு பயன்படுத்தி இக்கல்லூரியை மீண்டும் அதன் பழைய நிலைக்குக் கொண்டு வருவது இன்றைய பாடசாலைச் சமூகத்தினரின் பொறுப்பாகும்.

ஒருகாலகட்டத்தில் 2000 க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றுள்ளனர் என்பதையும் இந்தியாவில் இருந்தும் தென்இலங்கையில் இருந்தும் ஆசிரியர்கள் இங்கு வந்து கல்வி போதித்தார்கள் என்பதையும் நினைக்கும் போது இக்கல்லூரியில் மக்கள் வைத்திருந்த நம்பிக்கையையும் விசுவாசத் தையும் உணர முடிகிறது.


பாடசாலைகள் சமூகத்தின் ஒரு முக்கிய அங்கமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. "அனைவரிற்கும் கட்டாய இலவசக்கல்வி" என்ற கோட்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் இக்கருத்து மேலும் வலுப்பெற்றுள்ளது. இதன் பயனாகப் பாடசாலைகளின் வளர்ச்சியில் பெற்றோரின் அக்கறையும் ஈடுபாடும் அதிகரித்துள்ளது. இதனைச் சரியான முறையில் பயன்படுத்திப் பாடசாலைகளை வளர்த்து விருத்தி செய்ய வேண்டிய பொறுப்பு அதிபர்களுக்கும் பாடசாலைச் சமூகத்திற்கும் உண்டு.

எனவே மக்களின் எதிர்பார்ப்புக்களை உள்வாங்கி, இக்கல்லூரியை அதன் முன்னைய நிலைக்கு வளர்த்தெடுத்து அதன் செயற்பாடுகளைப் பயன்மிக்கவையாக்கி கல்வியின் நோக்கங்களையும் வெளிக்கொண்டு வரவேண்டிய பொறுப்பும் கடமையும் இக்கல்லூரிச் சமூகத்திற்கு உண்டு. இதனை நிறைவேற்றுவதே நூற்றாண்டு விழாவின் குறிக்கோள்களாக அமைய வேண்டும்.

நூற்றாண்டுவிழா கொண்டாடப்படும் இக்காலகட்டத்தில் இக்கல்லூரி மேலும் வளர்ச்சி பெற்று, பல சாதனைகள் படைக்க வேண்டுமென மனதார வாழ்த்துகிறேன்.

**திரு.இ.சிவானந்தன்**
**முன்னாள் மாகாணக்கல்விப் பணிப்பாளர்,**
**வடக்கு - கிழக்கு மாகாணம்.**

# முன்னாள் அதிபரின் வாழ்த்துச் செய்தி



கல்விச் சேவையிலே 100 ஆண்டுகளைப் பூர்த்தி செய்யும் எமது உரும்பிராய் இந்துக்கல்லூரி கல்வித்துறையில் இன்னும் பல வளர்ச்சி நிலைகளைக் கண்டு உயர்ச்சி பெறவேண்டுமென மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன்.

உரும்பிராய் இந்துக்கல்லூரி நமது மொழியிலும் இனத்திலும் பற்றுறுதி கொண்ட பல நல்ல மனிதர்களை உருவாக்கியிருக்கிறது. கல்வியிலும், விளையாட்டுத்துறையிலும் பல சாதனைகளை நிகழ்த்தியிருக்கிறது. பல அறிஞர்களை இவ்வுலகிற்கு தந்திருக்கிறது. இனிவரும் காலங்களிலும் இதனது சாதனைகள் தொடரும் என்பது நிச்சயம்.

இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு பலரது அர்ப்பணிப்புடன் கூடிய சேவை பக்கபலமாக இருந்திருக்கிறது. அவர்கள் அனைவருமே போற்றுதற்குரியவர்கள். இக்கல்லூரியின் பெயர் உச்சரிக்கப்படும் பொழுது எமது மனங்களிலே ஏற்படுகின்ற புத்துணர்ச்சி நாம் எவ்வளவு தூரம் இந்துக்கல்லூரியை நேசிக்கின்றோம் என்பதற்குச் சான்றுபகர்கிறது.

இக்கல்லூரியின் மாணவனாகவும் ஆசிரியராகவும், உபஅதிபராகவும் இருந்திருக்கிறேன் என எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். இக் கல்லூரி பவளவிழா கண்ட காலத்திலே இதன் அதிபராக இருந்த பெரும்பாக்கியத்தை பெற்றிருக்கிறேன். இந்த நூற்றாண்டு மலரின் மூலம் நான் உயிரிலும் மேலாக மதிக்கும் இக்கல்லூரியை வாழ்த்துவதில் பெருமிதம் அடைகிறேன்.

**திரு.செ.சிவன்பாலன்**
**முன்னாள் அதிபர் சார்பாக**
**மகன்.Dr.சி.சிவன்சுதன்**

# வாழ்நாள் பேராசிரியரின் வாழ்த்துச் செய்தி




ஒரு நிறுவனம் தனது செயற்பாட்டுக்கால வீச்சில் நூற்றாண்டு நிறைவைக் காண்பது அதன் பணியில் பெறும் அங்கீகாரம் ஆகும். அது தனது சூழலின் அடிப்படையில் கால்கொண்டு செயற்படுவதன் மூலம் அந்தச் சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் போது அதற்குக் கிடைக்கும் வரவேற்பு அங்கீகாரம் அதற்குரிய பிரதிபலிப்பாகும். இன்று நூற்றாண்டை நிறைவு செய்யும் உரும்பிராய் இந்துக்கல்லூரியின் வளர்ச்சி இதனை நிரூபிக்கப் போதிய சான்றாகும். இக்கல்லூரியின் தோற்றம், வளர்ச்சி அன்றைய யாழ்ப்பாணச் சமூகத்தின் தேவையை அடித்தளமாகக் கொண்டதெனக் கூறுவது சாலப் பொருந்துவதாகும். அந்நிய ஆட்சியாளர்களின் பலமான ஆதரவுடன் கல்விச் செயற்பாடுகளில் கிறிஸ்தவ மிஷனரிமார்கள் முதன்மையிடம் பெற்ற காலம் அது. அவர்களின் செல்வாக்கு சுதேசிய கலாசாரத்தைப் பெரிதும் பாதிப்பதாக இருந்தது. அதன் பெறுபேறாகச் சைவம், தமிழ் இரண்டும் வீழ்ச்சி நிலையில் மங்கிக் கிடந்தன. அந்த வீழ்ச்சி நிலையைச் சீரமைக்கும் முயற்சியாக ஆறுமுகநாவலர், பொன்னம்பலம் இராமநாதன் போன்ற பெரியோர்களின் செயற்பாடுகள் வளம் பெற்றன.[1] அத்தகைய பங்களிப்புக்களில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிகள் சபையின் இடம் காத்திரமானது. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் தோற்றத்தை அடுத்து யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஏனைய இடங்களிலும் இந்துக்கல்லூரிகள் தோன்றின. அவற்றுள் ஒன்றாக மிளிர்ந்தது உரும்பிராய் இந்துக்கல்லூரி.

உரும்பிராய் மக்களின் கல்வியின் பாதுகாவலனாகவும், போஷகனாகவும், முதன்மை முகாமையாளனாகவும் இக்கல்லூரி சிறப்பாகச் செயற்பட்டுள்ளது. அச் சிறப்பின் பயனாக நூற்றாண்டுவிழா கொண்டாட்டம் காண்கின்றது. தனியார் முயற்சியாக ஆரம்பித்த நிறுவனம் அரசின் பொறுப்பில் கண்ட வளர்ச்சி உரும்பிராய் மக்களின் தவப்பயன் எனலாம். காலத்துக்கூடாகப் பங்காற்றிய முகாமையாளர்கள், அதிபர்கள் பாராட்டத்தக்கவர்கள். அவர்களுடைய அர்ப்பணிப்பின் பக்கபலமாக உரும்பிராய் மக்களின் ஆதரவும் அனுசரணையும் உந்துசக்தியாக அமைந்துள்ளன. இவை எல்லாவற்றின் பேறாக நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகின்றது.

**பேராசிரியர் வ.ஆறுமுகம்**
**வாழ்நாள்.பேராசிரியர்**
**யாழ் பல்கலைக்கழகம்**

# பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி



ஈழமணித் திருநாட்டின் சிகரமென விளங்குவது யாழ்ப்பாணம். இங்கு சைவமும், தமிழும், கல்வியும் சிறந்து விளங்குவதை நீங்கள் அறிவீர்கள். யாழ்.நகரில் இருந்து 10கிலோ மீற்றர் தூரத்தில் கற்றோரும், விவசாயிகளும், தனவந்தர்களும், வாழும் உரும்பிராய் என்னும் சிவந்த மண்ணிலே பலாலி வீதியில் கம்பீரமாக எழுந்து நிற்கும் கட்டடமே புகழ்பூத்த உரும்பிராய் இந்துக்கல்லூரி. இக்கல்லூரி எத்தனையோ மருத்துவர்களையும், பொறியியலாளர்களையும், கணக்காளர் களையும், விரிவுரையாளர்களையும், சட்டத்தரணிகளையும், அதிபர்களையும், ஆசிரியர்களையும், விளையாட்டு வீரர்களையும், புகழ்பூத்த அரசியல் வாதிகளையும், கல்வியியலாளர்களையும், சிறந்த சமூகசேவகர்களையும், நற்குணம் உடையவர்களையும், உருவாக்கிய பெருமை இவ் அன்னைக்கு உண்டு. இப்படியான பெருமை வாய்ந்த அன்னையின் நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துச்செய்தி எழுதுவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

இக்கல்லூரி நல்லைநகர் தந்த நாவலர் பெருமானின் வேணவாவின் வழித்தோன்றிய இந்துக்கல்லூரி அதிகார சபையினரால் உரும்பிராய் இந்துக்கல்லூரி 03.04.1911இல் தோற்றுவிக்கப்பட்டது. இக்கல்லூரி அன்றைய காலத்தில் ஆங்கிலக் கல்வி போதிக்கும் ஆலயமாக மிளிர்ந்தது. அன்றைய காலத்தில் சைவத்தமிழ் வித்தியாசாலையைத் "தமிழ்ப்பாடசாலை" எனவும் பெயரிட்டு அழைத்து வந்தார்கள்.


இன்று இக்கல்லூரி அதிபர், ஆசிரியர்களின் ஆக்கமும், ஊக்கமும் கல்லூரியின் வளர்ச்சிப்பாதையை விரிவாக்கியவண்ணம் செல்கின்றது. இக்கல்லூரியின் முதல் மாணவனையும், தாபகர்களையும் இனம் கண்டு 29.06.1994இல் முதன்முதல் அமரர். திரு.செ.ஐயாத்துரை ஆசிரியருடன், நானும் இணைந்து மலர் வெளியீட்டுடன் கொண்டாடப்பட்ட தாபகர் தினவிழா இன்றும்

என் மனக்கண் முன் நின்று மெய்சிலிர்க்க வைக்கின்றது. எமது கல்லூரியின் வரலாற்றில் தடம்பதித்த அதிபர் வரிசையில் ஆக்கமும், ஊக்கமும், துடிப்பும் உள்ள திரு.அ.ஈஸ்வரநாதன் அவர்கள் அதிபராகப் பதவி ஏற்றபின் 2000 ஆண்டு முதல் இன்றுவரை எல்லாக் கல்விசார் வைபவங்களையும் வருடம் தோறும் சிறப்பாக நடாத்திவருவது மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

மேலும் எமது பாடசாலை அபிவிருத்திச்சங்கம் பாடசாலை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து செயற்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள். கல்லூரியில் இடம்பெறும் எல்லா வைபவங்களிலும் அதிபருடன் இணைந்து செயற்பட்டு வருகின்றோம். அதேபோல் அதிபர் திரு.அ.ஈஸ்வரநாதன் அவர்களும் எம்முடன் நல்ல உறவைப்பேணி கல்லூரியின் வளர்ச்சிக்குப் பாடுபட்டு வருகின்றார். இவர் நோய், நொடி இல்லாது பலகாலம் எம்முடன் இணைந்து செயற்பட்டு வாழ வேண்டும் என எல்லாம் வல்ல ஓடையம்பதி கற்பக விநாயகரை வேண்டுவதுடன், இந்நூற்றாண்டு விழாவும் சிறப்பாக இடம்பெற மீண்டும் வாழ்த்தி நிறைவு செய்கின்றேன்.

**திரு.ச.ஏகாம்பரநாதன் (J.P)**<br>**செயலாளர்,**<br>**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**<br>**யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.**


# பழைய மாணவர் சங்க உப தலைவரின் வாழ்த்துச் செய்தி



03.04.1911ல் உதித்த எமது யா/உரும்பிராய் இந்துக்கல்லூரித் தாயவள் 03.04.2011ல் இன்று தன் அகவையில் நூற்றாண்டை எட்டிவிட்டாள். என்றும் இளமைகுன்றாது 'மலர்கலை உரும்பிராய் இந்துக்கல்லூரி வான்புகழ் ஓங்கியே வாழ்க", எனத் தொடங்கும் தன் கல்லூரிக்கீதத்தின் தொடக்கவரிகளுக்கேற்ப சீர்பெற்றோங் கவும், கல்லூரித் தாயவளின் நூற்றாண்டு விழாச் சிறப்புமலர் பௌர்ணமி நிலவாகத் திகழவும், விழா நிகழ்வுகள் சிறப்பாக அமையவும் எல்லாம் வல்ல தெய்வங்களின் ஆசிவேண்டி உளமார வாழ்த்துகிறேன்.


திரு.சிவ.கதிரவேலு<br>
ஓய்வு பெற்ற ஆசிரியர்,<br>
பழைய மாணவர் சங்க உபதலைவர்,<br>
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.

# பழைய மாணவர் சங்கச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி



உரும்பிராய் இந்துக்கல்லூரி அதன் மகத்தான நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இவ்வரியவேளையில் "நூற்றாண்டு மலர்" மலரப்போவது குறித்து மகிழ்ச்சியடைவதுடன், இவ்வருமையான சந்தர்ப்பத்தில் கல்லூரியின் ஆரம்பத் தையும் வளர்ச்சியையும் சுருக்கமாக உங்களுடன் பகிர்ந்து கொண்டு, வாழ்த்துக் கூறுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன்பு உரும்பிராய்ச் சந்திக்குச் சமீபமாகவுள்ள கிறிஸ்தவ தேவாலயத்துக்கு அருகாமையில் பாதிரிமாரால் நடாத்தப்பட்ட ஆங்கிலப் பாடசாலை ஒன்று இருந்தது. அந்நாட்களில் சைவப் பிள்ளைகள் சைவசமயச் சூழலில் கல்வி கற்கவேண்டும் எனும் எழுச்சி யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டதன் காரணமாக ஆறுமுகநாவலர் பெருமானை அடியொற்றி கிராமங்கள் தோறும் ஆங்கிலம் கற்கும் சைவப்பிள்ளைகள் சைவசமயச் சூழலில் கல்வி கற்க வேண்டும் எனும் எழுச்சி யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டதன் காரணமாக ஆறுமுகநாவலர் பெருமானை அடியொற்றிக் கிராமங்கள் தோறும் ஆங்கிலம் கற்பிக்கும் சைவப்பாடசாலைகள் நிறுவப்பட்டன. அப்பொழுது வாழ்ந்த உரும்பிராய் சைவப் பெருமக்கள் இந்துக்கல்லூரி நிர்வாக சபையினருடன் இணைந்து இங்கு ஒரு சைவ ஆங்கிலப்பாடசாலையை உருவாக்குவதில் வெற்றி கண்டனர். 03-04-1911ல் இப் பாடசாலை பேராசிரியர் சுந்தரலிங்கத்தின் தந்தையார் திரு.செல்லப்பாவின் வீட்டு விறாந்தையில் ஐந்து மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. இவர்களுள் முதல் மாணவனாக எனது தந்தை சிதம்பரப்பிள்ளை விஸ்வலிங்கம் சேர்த்துக் கொள்ளப்பட்டார். பின்பு உரும்பிராய் வடக்கு திரு.சின்னத்தம்பி (ஐயம்பிள்ளை) வேலுப்பிள்ளை கல்லூரியை நிரந்தரமாக நிறுவ 10 பரப்புக் காணியை இலவசமாகக் கொடுத்தார். இக்காணியில் பாடசாலைக் கொட்டில் அமைக்க

உரும்பிராய் வடக்கு டாக்டர் வ.வல்லிபுரம், உரும்பிராய் கிழக்கு திரு.அமர்தலிங்கம், திரு.வல்லிபுரம், உரும்பிராய் தெற்கு திருவாளர்கள் சக்கராயுதர், சடையர், அம்பலவாணர் முதலிய பல பெரியோர்கள் உதவினர். இதனால் புதிதாக உருவான பாடசாலை எனப் பெயர் பெற்றது. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நிர்வாக சபையினர் இப்பாடசாலைக்குப் பொறுப்பாக இருந்தனர். டாக்டர்.வ.வல்லிபுரம் அவர்களின் சார்பில் பாடசாலையைப் பராமரித்து வந்தார். அதன் பின்பு 1941 ஆம் வருடத்திலிருந்து இது "உரும்பிராய் இந்துக்கல்லூரி" என்னும் பெயருடன் இயங்கி வருகின்றது. அன்று தொட்டு இன்று வரை 03.04.2011ல் 100 ஆண்டுகளைக் கடந்து இலட்சக் கணக்கான மாணவர்களின் கல்விக் கண்ணைத் திறந்து அவர்களை எல்லாம் அவனியில் உயர்ந்த மனிதர்களாகத் திகழச் செய்த பெருமை, எமது கல்லூரித் தாய்க்கு உரித்தாகும். இப்படிப் பெருமை பெற்ற எமது கல்லூரித்தாய் எமது காலத்தில் (1950-1958) கல்வியிலும் விளையாட்டுகளிலும், குறிப்பாக அச்சமயம் அதிபராக 1956 வரை கடமையாற்றிய திரு.சிறிநிவாசனின் தலைமையில் உதைபந்தாட்டத்திலும் சிறந்து விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

காலத்தின் கோலத்தால் கடந்த காலத்தில் பல பின்னடைவுகளைச் சந்தித்தாலும், எமது கல்லூரி அதிபர் திரு.ஆ.ஸ்வரநாதனின் அயராத முயற்சியாலும், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பினாலும் இலண்டன், கனடா பழைய மாணவர் சங்கக் கிளைகளால் வழங்கப்பட்ட அளப்பரிய உதவிகளாலும், பழையமாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் பங்களிப்பாலும் எமது பாடசாலை பழையபடி கல்வி, விளையாட்டு, கலை, கணினித்தொழினுட்பம் ஆகியவற்றில் வானளாவச் சிறந்து விளங்குவது உறுதியாகி விட்டது. இதில் பிரார்த்தனை மண்டபத்தைப் பல இலட்சம் ரூபா செலவில் புதிதாக அமைத்து அதை 03.04.2011 நூற்றாண்டு விழா அன்று திறந்து வைக்க வேண்டும் எனத் தனது சொந்த முயற்சியால் அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கும் திரு.க.தர்மகுலசிங்கத்தை எவ்வளவு பாராட்டினாலும் மிகையாகாது. இப்படியானோரின் தர்ம சிந்தனையால் கல்லூரி புதுப் பொலிவு பெற்று விளங்கப் போவது உறுதி.

மாணவர்களே! உங்களிடம் ஒரு மிகப்பணிவான வேண்டுகோள் யாதெனில் நமது கல்லூரியில் திறமையான ஆசிரியர்கள், கணினி, வானளாவிய கட்டடங்கள் மற்றும் ஆய்வு கூட வசதிகள், விளையாட்டுக்கான வசதிகள் யாவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த வாய்ப்பை நீங்கள் இறுகப் பிடித்து முன்னேறி உங்களுக்கும் கல்லூரிக்கும் பெருமை தேடுங்கள் என்பதே ஆகும்.

இச்சந்தர்ப்பத்தில் கடந்த நூற்றாண்டு காலமாக இங்கு அதிபர்களாகவும், ஆசிரியர்களாகவும் கடமையாற்றியவர்கள் என்றும் போற்றி வாழ்த்தப்பட வேண்டியவர்கள் எனக்கூறி, இந்த நூற்றாண்டுவிழாமலருக்கு அரும்பாடுபட்ட இதழாசிரியர், அதிபர் மலர்க்குழுவினர் ஆகியோரின் சேவையை மனதார வாழ்த்தி, ஆசி கூறி, நூற்றாண்டு விழாக் காணும் கல்லூரித்தாயை வணங்கி, கல்லூரித்தாயின் சேய்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள் அனைவரும் கல்லூரியின் வளர்ச்சியில் பங்கெடுக்க வாரீர்! வாரீர்! என அழைத்து, எமது கல்லூரி பல நூற்றாண்டுகளைக் கடந்து சேவையாற்றி நன் மக்களை உருவாக்க எல்லாம் வல்ல ஓடையம்பதி கற்பக விநாயகரின் தாள் பணிந்து அமைகிறேன்.

"நன்றி"

"வாழ்க! வளர்க! உரும்பிராய் இந்துக்கல்லூரி"

திரு.வி.சோமநாதன்
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.

# கனடா பழைய மாணவர் சங்கத்தின் வாழ்த்துச் செய்தி



100ஆவது அகவையைத் தொடும் எமது தாய்க் கல்விக்கூடமானது புதுப்பொலிவுடன் தோற்றமளிப்பது உலகெங்கிலும் உள்ள இந்தக் கல்வித்தாயின் மாணவர்களுக்குப் பெரும் மகிழ்வைத் தருகின்றது. நமக்கெல்லாம் கல்வியறிவு தந்த கல்லூரித்தாய் 100 ஆவது அகவையை தொடும் நேரத்தில் எடுக்கும் விழா வரலாற்றுச் சிறப்புமிக்கது.

பல அறிஞர்கள், கலைஞர்கள் உருவான - உருவாகிக் கொண்டிருக்கின்ற நமது கல்லூரி அன்னைக்கு 100 ஆவது ஆண்டு விழா எடுக்கும் இவ்வேளையில் தற்போது அங்கு கடமைபுரியும் அதிபர், ஆசிரியர்கள், மற்றும் மாணவர்கள் அதிர்ஷ்டசாலிகளே! கல்லூரியின் பழைய மாணவர்கள் பலபாகங்களிலும் பரந்து வாழ்ந்தாலும் தமது தாய் நாட்டையும், தம்மை ஆளாக்கிய கல்லூரியையும் மறவாது என்றும் நன்றியோடு நினைவு கூறுகின்றனர். இவ்விழாவைக்காண, புலம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் உரும்பிராய் இந்துக்கல்லூரி பழைய மாணவர்கள், நிர்வாகசபை உறுப்பினர்கள் கலந்து சிறப்பித்துக் கொண்டிருப்பது ஆனந்தத்தைத் தருகின்றது. எங்கிருந்தாலும்,, எவ் உயரம் பறந்தாலும் கல்வியறிவு தந்த நம் கல்லூரி அன்னையை மறக்க முடியுமா? கல்லூரி மேலும் வளர்ச்சி பெற பல வகைகளிலும் உதவி புரிகின்றனர். இத்தருணத்தில் இன்று வெளியாகும் இந்த 100 ஆவது ஆண்டு விழா "நூற்றாண்டுமலர்" சிறப்பாக மலர்வதற்கும் இன்றைய விழா சிறப்புற நடைபெறுவதற்கும் கனடா பழைய மாணவர் சங்கம் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

திருமதி.நிறஞ்சனா ஜெயமுகுந்தன்
தலைவர்
உ.இ.க.ப.மா.ச கனடா.

# Message from UHCOSA UK



I am greatly honoured to be asked to write a message for the souvenir publication, 'Nootandu Vizha Malar' to celebrate the centenary year of our great school, Urumpirai Hindu College (UHC).

First of all I like to congratulate the centenary committee for organising this great event that we must be all very proud of. My sincere thanks and congratulation goes to the principal Mr A Easwaranathan. His determination as the principal to conduct this event in the grandest scale possible shows his devotion to his duties to the school and to make a mark so that no one forgets this centenary celebration.

The school has evolved over the years with additions and renovation to the building facilities. In the year of the centenary celebration a great new assembly hall with class rooms and other facilities are to be opened. This was made possible by one man with his shear determination to make it happen. I am proud to have been associated with him for many years, a well known businessman and an enterpruner in UK who is no other than our own Mr K Tharmakulasingam. I am sure the people of Urumpirai will be grateful to him for his personal contribution to the development of the people of Urumpirai.

I personally like to congratulate him on his wonderful achievement and am sure he will be remembered by everyone here and abroad for his generous contribution. As an honorary secretary to the Urumpirai Hindu College Old Student Association UK (UHCOSA UK), I would like to pay a tribute to Mr M T Selvarajah, one of our veteran members, and a very loyal supporter of the development of Urumpirai Hindu College for a number of years. He has currently taken on a key role in developing the sports grounds and its facilities. He has

embarked on fund raising activities in UK for sometime solely for this purpose and I wish him luck and our association's support in his mission to fulfil this goal. I would also like to convey a message to the people of Urumpirai that though our association's title is UHCOSA UK, through this association we consider the needs of all the schools in Urumpirai and provide help whenever it is possible to do so. The schools are being encouraged to let our association know their pressing needs that cannot be met by the Education Authority of Jaffna. This year I am proud to say the UK association has allocated significant sums of money for the development of three schools in Urmpirai.


My thanks also go to members of Urumpirai Hindu College Old Students Association of Srilanka for their commitments to the schools in Urumpirai. A special thanks to Mr Nagaratnam for his efforts and commitment to the schools and to act as a point of contact for our association. We wish him all the best in his endeavour to assist in the development of Urumpirai.

In order to improve the communication with the schools in Urumpirai by people living outside Srilanka, we need a better broadband internet facility. The ambition of our association is to connect Urumpirai with the rest of the world by modern technology. We will work to fulfil this dream. The internet communication is possible in any languages so I hope the schools will take advantage of it when it becomes available to them.

I take this opportunity to thank the members of UHCOSA UK for giving generously to raise funds that we were able to distribute to the schools to fulfil at least some of their aspirations. A big thank you to all our generous donors and supporters of our fund raising events held in UK. I hope all of you will enjoy the week long celebrations planned to commemorate the Centenary year, I would have loved to have joined but am unable to do so. Wish you all a wonderful time.

**Mr.S Sivalingam**
Honorary Secretary
On behalf of the committee of UHCOSA UK

# கல்லூரி முதல்வரின் உள்ளத்தில் இருந்து...



**"என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே**
**இருங்கடல் வையத்து"**

என அப்பர் பாடிய தேவாரத்தை மனதில் நினைக்கின்றேன். ஆதரவற்ற சிறார்களை அரவணைக்கவும், ஆலயப்பணி செய்யவும் எழுத்தறிவையும் எண்ணறிவையும் கற்பிக்க வைக்கவும், என்னை ஆளாக்கிய கல்லூரித்தாயை முதற்கண்சிரந் தாழ்த்தி வணங்குகின்றேன். என்னை வழிப்படுத்திய தாய், தந்தையரை வணங்குகிறேன். அறிவூட்டிய ஆசான்களை வணங்குகின்றேன். அன்புக்குரிய பெற்றோருக்கு, சிறுவயதில் நான் யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையில் ஆரம்பக்கல்வியைக் கற்றபோது பாடசாலை விட்டதும் இலுப்பங்கொட்டை அடித்தல், சோடாமூடி அடித்தல், கிளித்தட்டு ஆகிய விளையாட்டுக்களுக்குச் செல்வேன். இதனால் எனது தந்தையார் தாயாருடன் கோபப்படுவார். அந்தவேளை உரும்பிராய் இந்துக்கல்லூரியில் இருநேரப்பாடசாலை. அங்கு கொண்டுவந்து 6E வகுப்பில் என்னை இணைத்தார். இது இன்று இக்கல்லூரியில் அதிபராகப் பணிசெய்ய வழிவகுத்துள்ளது. ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தை வழிப்படுத்த வேண்டும் என்பது எனது கருத்தாகும். அதற்கூடாகவே இக்கருத்தை முன்வைக்கின்றேன்.

19.02.1999ல் யா/உரும்பிராய் இந்துக்கல்லூரியில் அதிபராகக் கடமையை ஏற்றபோது பல இடர்பாடுகள், துன்பங்கள் ஏற்பட்டன. மன உறுதியுடன் செயற்பட்டேன். S.D.S பொதுக்கூட்டம், O.S.A உருவாக்கம், கனடா, இங்கிலாந்து, பழைய மாணவர்களது ஒத்துழைப்பு இவைகள் எனக்குத் திருப்தியாக இருந்தன. திரு.ச.ஏகாம்பரநாதன் அவர்கள் முன்பிருந்தே பாடசாலை வளர்ச்சியில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். புதிதாக அமைக்கப்பட்ட O.S.A நிர்வாகத்தில் பொருளாளரான திரு.செ.நாகரத்தினம் அவர்களதும், செயலாளரான திரு.வி.சோமநாதன் அவர்களதும் ஒத்துழைப்பும் எனது சேவைக்காலத்தில் நன்றாக இருந்ததால் கல்லூரி வளர்ச்சி கண்டுள்ளது. இங்கு G.T.Z நிறுவனத்தின் பங்கும் குறிப்பிடத்தக்கது.

கல்வி அபிவிருத்தியில் துணிந்து செயற்பட்டதன் விளைவாக ஓரளவு மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்கவும், A/L வகுப்புக்களைச் சிறப்பாக நடாத்தவும் முடிந்தது. இவற்றுக்கெல்லாம் ஒத்துழைத்த உபஅதிபர்கள், பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், யாவரும் பாராட்டப்பட வேண்டியவர்களே. இக்கல்லூரி எதிர்காலத்தில் கல்வியில் மேலும் முன்னேற்றம் காணுமென்பதில் ஐயமில்லை. இன்றைய வளர்ச்சிப் போக்கை மையமாக வைத்தே இக்கருத்து முன்வைக்கப்படுகின்றது. O /L, A/L வகுப்பு கடந்தகால பெறுபேறு சதவீத அடிப்படையில் இம்மலரில் அட்டவணையாக இணைக்கப்பட்டுள்ளது.

### யார் இந்த தர்மர்?

மகாபாரதத்தில் பஞ்சபாண்டவர்களில் மூத்தவர் தர்மர். இவர் தர்மவான். தர்மம் தவறாதவர், அந்தப் பெயருக்கு ஏற்றாற் போலும் எமது கல்லூரிக்குத் திருவாளர் தர்மகுலசிங்கம் கிடைக்கப் பெற்றார். அவரது பணியை எப்படிச் சொல்வேன்? இது நீங்கள் யாவரும் அறிந்ததே. அவரது ஈகையில் இன்று உரும்பிராய் இந்துக்கல்லூரியில் "நூற்றாண்டுவிழா மண்டபம்" இவ்விழாவிற்கு மகுடம் இட்டது போல அமைந்துள்ளது. எதிர்வரும் சந்ததியும் பயன் பெறக்கூடிய வகையில் இவர் செய்த பணியைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. இவரது பாரியார் அவர்களும் அவரது பிள்ளைகளும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

### கட்டடவேலை முடியுமா?

இந்த நிலையில் லயன்.சண்முகநாதன் அவர்களைப்பற்றியும் நினைவிற்கொள்ள வேண்டும். ஆனால் எனக்கு ஒதுக்கப்பட்ட பக்கம் போதாது. எடுத்த காரியத்தை முடித்து வைக்கும் மனத்தைரியம், ஆளுமை கொண்டவர்தான் லயன்.சண்முகநாதன். அவர் வேலையைப் பொறுப்பேற்றுச் செயற்பட்டபோது க.பொ.த சாதாரணதரப் பரீட்சையும், தொடர்மழையும் திட்டமிட்டபடி வேலை செய்யத் தடங்கலாக அமைந்துவிட்டன. இதனால் காண்கின்ற பலர் கட்டட வேலை முடியுமா? நூற்றாண்டு விழாவின்போது திறப்பீர்களா? என வினவுவர். யான் கற்பகவிநாயகரும், லயன்.சண்முக நாதனும்தான் இதற்குப் பதில் சொல்லவேண்டும் எனச் சொல்வேன். கண்துயிலாது பணியைச் சிறப்பாக நிறைவேற்றி, எமது நூற்றாண்டு விழாவைச் சிறப்பாக நடாத்துவதற்கு ஒத்துழைத்த லயன்.சண்முகநாதன் அவர்களும் அவர்களது குழாமைச் சேர்ந்த யாவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

**கட்டடக்குழு**

இக்கட்டடக்குழுவினர் நிர்வாக உறுப்பினர்களை அழைக்கும் போதெல்லாம் வருகை தந்து ஒத்துழைத்தனர். குறிப்பாகக் குழு உறுப்பினரும் கல்லூரியின் பழைய மாணவனுமான பொறியியலாளர் திரு.ச.சசிகுமார் அவர்களது வழிகாட்டல், கட்டடச் செயற்பாடுகளுக்குப் பேருதவியாக அமைந்தது. குழுவின் இணைப்பாளரான திரு.க.தர்மகுலசிங்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி தினமும் வருகை தந்து செயற்பட்டவர் திரு.செ.நாகரத்தினம் அவர்கள், செயலாளராக அறிக்கைகள் தயாரித்து நாள்தோறும் வருகைதந்து ஊக்கப்படுத்தியவர் திரு.ச.ஏகாம்பரநாதன். இவர்கள் யாவரும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

**நூற்றாண்டுமலர்**

'மலரும் மங்கையும் ஒரு ஜாதி" என்பார்கள். மலராசிரியராக செல்வி. இரஞ்சினி சாம்பசிவம் என்பவரை நியமித்திருந்தோம். துணையாக திரு.சிவகுமார் அவர்களும், மற்றும் உறுப்பினர்களும் செயற்பட்டனர். "அன்ரா டிஜிற்றல் இமெச்" நிறுவனத்தைத் தெரிவு செய்தனர். உதவியாக ஏனைய ஆசிரியர்கள், பழையமாணவர்கள் ஒத்துழைப்பு வழங்கினர். கூட்டு முயற்சி வெற்றி பெற்று இன்று நூற்றாண்டு மலர் உங்கள் கரங்களில் மணம் வீசுகின்றது. இப்பணிகளுக்கு ஒத்துழைத்த யாவருக்கும் பாராட்டுக்கள்.

**கல்விப் பெறுபேறு**

கடந்த 22.03.2011 இல் இறுதியாக வெளிவந்த G.C.E (O/L) பெறுபேற்றில் கடந்த காலத்துடன் ஒப்பிடும் போது பல சாதனைகளை உருவாக்கியுள்ளது. சைவசமயம் 100%, றோமன் கத்தோலிக்கம் 100%, தகவல் தொழில்நுட்பம் 100%, சுகாதாரமும் உடற்கல்வியும் 100%, நடனம் 100%, நாடகமும் அரங்கியலும் 100%, விவசாய விஞ்ஞானம் 100%, மனைப்பொருளியல் 100%, சங்கீதம் 75% , புவியியல் 95%, வணிகமும் கணக்கீடும் 88%, தமிழ்மொழியும் இலக்கியமும் 87 %, குடியுரிமைக்கல்வி 83%, கணிதம் 40 %, விஞ்ஞானம் 44%, வரலாறு 53%, சித்திரம் 53%, சித்திபெற்றமை எமது கல்விப்பெறுபேற்றின் அதிகரிப்பை காட்டுகின்றது. இப்பெறுபேறுகளுக்கு மேலாக எமது கல்லூரியில் கல்விகற்று வன்னி மாவட்டப் பாடசாலைகளில்

பரீட்சைக்குத் தோற்றி (5A, 3B, S), (5A, 4C) பெறுபேறுகள் பெற்ற மாணவர்களும் உள்ளனர். இப்பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களையும், இதற்காக உழைத்த ஆசிரியர்களையும் இச்சந்தர்ப்பத்தில் பாராட்டுகின்றேன்.

எந்தவொரு மாணவனும் G.C.E (O/L) பரீட்சையில் சகல பாடங்களும் சித்தியின்மை என்ற நிலையில் இருக்கக் கூடாது என்னும் நோக்குடன் செயற்பட்டு இரண்டு ஆண்டுகளாக இச்சாதனையையும் நிலை நிறுத்தியுள்ளோம் என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மைதானம் நவீன வசதிகளுடன் புனரமைக்கப்பட்டுப் பற்பல வீர, வீராங்கனைகள் உருவாக வேண்டும், கல்விப்பெறுபேறுகள் உயர்வடைய வேண்டும், இணைக்கலைச் செயற்பாடுகள், ஆங்கிலக்கல்வி, கணினிக்கல்வி சிறப்படைய வேண்டும். ஒழுங்குடன் ஒழுக்கம், பண்பாடு, கலாசார விழுமியங்கள் பேணிப்பாதுகாக்கப்பட்டு ஒரு தலைசிறந்த கல்லூரியாகத் திகழக் கற்பகவிநாயகர் திருவருளை வேண்டிநிற்கின்றேன்.

**திரு.அ.ஈஸ்வரநாதன்**
**அதிபர்**
**யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி**

# இதழாசிரியரின் இதயத்தில் இருந்து...



காலநதியின் நீரோட்டத்தில் பல சோதனைகளைச் சாதனைகளாக்கிப் பத்துத் தசாப்தங்களின் நிறைவில் உரும்பிராய் இந்துக்கல்லூரி என்கின்ற அரியாசனத்தில் இந்து அன்னை இனிதே அமர்ந்திருக்கிறாள். அன்னையின் பாதக்கமலங்களைச் சிரந்தாழ்த்தி வணங்கி, எம்மையெல்லாம் தலைநிமிர்ந்து நிற்கும் படியான அறிவினையும், திறனையும் அள்ளி வழங்கிய மேன்மைசால் அதிபர்களையும், ஆசான்களையும் நெஞ்சிலே நிறுத்திப் பணிந்து, கல்லூரியின் பெருமைமிக்க வரலாற்றுத் தகவல்களுடன், நூற்றாண்டுப்பதிவுகள், மாணவர்களின் சாதனைகள், கடந்தகாலப் பதிவுகள், பசுமையான நினைவுகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்விமான்கள், சான்றோர்கள்,. ஆசிரியர்களின் படைப்புக்கள், மாணவர்களின் ஆக்கங்களுடன் நூற்றாண்டு நிறைவுப் பெருமையையும், உரும்பிராய் மண்ணின் சிறப்பையும் உலகிற்கு எடுத்துக்காட்டும் முழுமையான நூற்றாண்டு மலரினை கைகளில் தவழவிட்டு, மனங்களில் மஞ்சம் கொள்ளவைத்த இவ்வேளையில் உங்கள் மகிழ்வோடு இணைந்த நானும் பெருமையடைகின்றேன்.

இந்து அன்னை தனது வளர்ச்சிப் பாதையில் பொன்விழாக் கண்டவேளை, மலாயன் பென்சனியர்களால் உருவாக்கப்பட்ட பொன்விழா மண்டபத்தைக் கம்பீரக் காட்சியாகக் கொண்டு வளர்ந்து, இன்று நூற்றாண்டு தின விழாவில் நூற்றாண்டு நிறைவுக் கலையரங்குடன் கூடிய மண்டபத்தை நினைவுக் கலையழகாகப் போற்றும் வகையில் கல்லூரி மிளிர்கின்றது. உரும்பிராய் இந்துக்கல்லூரியின் தூரநோக்கு அடிப்படையில் மாணவர்களைச் சமூகப் பொருத்தப்பாடுள்ள நற்பிரஜைகளாக்கும் தலையாய கல்விச் சேவையை வாரிவழங்கி, கற்றோரின் கலைக்கோவிலாக நின்று நூற்றாண்டு நிறைவைக் கொண்டாடி மகிழும் இந்நிகழ்வில், தாமும் இணைந்து மகிழும் புலம்பெயர்ந்து வாழும் பழையமாணவர்களின் பேரார்வம் எம்மை உளம்பூரிப்படையச் செய்கின்றது.

இச்சிறப்பான பணியை எனக்கு நல்கிய பெருமதிப்புக்குரிய கல்லூரி முதல்வர் திரு.அ.ஈஸ்வரநாதன் அவர்களுக்கும், கல்லூரிசார் பெரியோர்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்நூற்றாண்டு மலருக்கான ஆசிச்செய்திகள், வாழ்த்துச்செய்திகள் வழங்கி வாழ்த்திய வர்களுக்கும், தரமான ஆக்கங்களை வழங்கிச் சிறப்பித்த கல்வியியலாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் மற்றும் விளம்பரங்களைத் தந்து ஆதரவுக்கரம் நீட்டிய கொடையாளர்களுக்கும், கல்லூரியின் வரலாற்றுத் தகவல்களை வழங்கி வழிகாட்டி ஊக்குவித்த உரும்பிராய் இந்துக்கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளரான திரு.ச.ஏகாம்பரநாதன் அவர்களுக்கும், தேளோடு தோள்நின்று உழைத்த அனைத்து அன்புள்ளங்களுக்கும், மேலும் இந்நூற்றாண்டு மலரை உரிய காலத்தில் வெளிவருவதற்கு அழகுற அச்சிட்டுத்தந்த "அன்ரா டிஜிற்றல் இமேச்" நிறுவனத்திற்கும், நூற்றாண்டு மலர்க்குழு சார்பாகவும், கல்லூரிச் சமூகம் சார்பாகவும் நன்றி கூறிக் கொள்கின்றேன்.

இன்னும் பல்லாயிரம் ஆண்டுகள் கல்லூரி நிலைத்திருந்து கல்விப்பணியாற்றி பெருவிருட்சமாகக் கிளைபரப்பி விழுதுகளின் துணையோடு வீறுநடை போட்டு, சாதனைகள் பல படைத்து, கல்லூரியின் புகழைப் பாரெங்கும் பறைசாற்றி, தன் வளர்ச்சிப் பாதையில் தலைநிமிர்ந்து நின்று, கல்லூரித் தாயின் அரவணைப்பில் கல்வி கற்று முன்னேறும் கற்ற சமூகத்தைக் காலமெல்லாம் உருவாக்கி, எம் அன்னையின் கல்விப் பணி தொடர எல்லாம்வல்ல கற்பகவிநாயகனின் அருள் கிடைக்க உளமாரப் பிரார்த்திக்கின்றேன்.

"நன்றி"

**செல்வி.இரஞ்சினி சாம்பசிவம்**
B.A(Hons),PGDE,SLTS-2.II

# J/Urumpirai Hindu College Centenary Souvenir Committee- 2011

## President

Mr. Appathurai Eswaranathan

(Principal - U.H.C)

## Editor

Miss. Ranjini Sambasivam

## Proof Reading Assistance

Mr.S.Sivakumar

## Centenary Souvenir Committee Members

Mr.K.Uruthrakumaran
Mrs.S.Sritharan
Mrs.V.Shanmugasundaramoorthy
Mrs.M.Sivasithamparalingam
Mr.M.R.Narenthira
Mr.K.Thirumalalakan
Mr.K.Selvachandran
Mr.S.Sivakumar

## Centenary Souvenir Issue

Mrs.K.Vijayakumar
Mrs.B.Thiyagalingam
Mr.N.Kirubananthasivam
Mrs.T.Sukumar
Mrs.S.Mahenthiran
Mrs.T.Vimalanathan
Mrs.M.Mohanarajan
Mr.M.Vinokanthan

# Our College Staff - 2011



**Seated: (L- R)** Mr.S.Senthilnathan, Mr.M.R.Narenthira, Mr.K.Uruthrakumaran, Mr.K.Thillainathan, Mr.A.Eswaranathan (Principal), Mrs.K.Vijayakumar, Mrs.S.Mahenthiran, Mrs.B.Thiyagalingam, Mrs.S.Sritharan

**Standing: 1st row (L- R):** Miss.S.Dayalini, Miss.S.Sangeetha, Miss.K.Suyalini, Mrs.T.Sukumar, Mrs.M.Mahenthirarajah, Miss.M.Vasanthini, Miss.S.Ranjini, Mrs.T.Vimalanathan, Mrs.B.Paulkamalaraj, Mrs.S.Thavanesan, Mrs.J.Murugathas, Mrs.M.Mohanarajan, Mrs.T.Thirukkumaran, Mrs.M.Sivasithamparalingam, Mrs.P.Sritharan, Miss.M.Kunanayaki, Mrs.P.Dikukumar

**Standing :2nd row (L- R):** Mr.S.Kiruba, Mr.S.Sivashangar, Mr.G.Thirumalalakan, Mr.M.Vinokanthan, Mr.M.Kirupasenan, Mr.K.Piragas, Mr.S.Sivakumar, Mr.K.Thavaseelan, Mr.S.Gunaratnam, Mr.R.L.Robinson, Mr.N.Kirubananthasivam, Mr.K.Selvachandran, Mrs.V.Shanmugasundaramoorthy, Mrs.A.J.Aras Danial

# CENTENARY SOUVENIR COMMITTEE - 2011



**Seated (L.R):** Mr.K.Anantharaja, Mr.M.Vamathevan, Mr.C.Nagaratnam(Treasurer), Miss.S.Ranjini(Editor), Mr.A.Eswaranathan(President), Mr.S.Eahamparanathan(Secretary), Mrs.K.Vijayakumar, Mr.K.Uruthirakumaran

**Standing(L.R):** Mr.R.Makesvararaj, Mr.C.G.Thirumalalagan, Mr.V.Balenthra, Mr.K.Thavaseelan, Mr.S.Sivakumar, Mrs.R.Baskaran, Mrs.S.Sritharan, Mrs.M.Sivasithamparalingam

# BOARD OF CENTENARY EDITORIAL COMMITTEE - 2011



**(L.R):** Mrs.K.Vijayakumar, Mr.S.Sivakumar, Mr.C.G.Thirumalalagan, Mr.K.Uruthirakumaran, Mr.C.Nagaratnam, Mr.A.Eswaranathan(President), Mr.S.Eahamparanathan, Miss.S.Ranjini(Editor), Mrs.S.Sritharan, Mrs.T.Sukumar.

# வாழ்த்துப் பாமாலை

## முன்னவன் துதி



ஒற்றை மருப்பனை ஓடையம்பதியனை
வெற்றி யளித்திடும் வேழ முகத்தனை
கற்றைச் சடையுமைக்கு இனிய புதல்வனை
உற்ற துணையென உளத்தில் வைப்போமே.

## வாழ்த்து

### இராகமாளிகை

வேற்றுமையற்ற அன்பு சேவைதான் கடவுளென்று
சாற்றியோர் தம்மதத்தை யூட்டினார் பள்ளி மூலம்
மாற்றிடும் கொடுமைகண்டு அவனியில் சைவங்காக்க
தோற்றிய உரும்பிராயின் இந்துவே நீடு வாழி!

கணினியோ அன்றில்லை கருவிகளும் உனக்கில்லை
பெருமையாய்ப் பேசும் வண்ணம் பெருவளமுந் தந்தாரில்லை
ஆனாலும் உன் உள்ள வலிமைமிகு ஆளணியால்
நூற்றாண்டைத் தொட்டுவிட்டாய் நுடங்காது நீ வாழ்க!

உதைபந்தாட்டமென்ன உடற்பயிற்சி தானென்ன
வதைபட்ட காலத்திலும் நீ வாகை சூடியதைக்கூறும்
வரலாறு படைத்ததுபோல் வருங்காலத்திலும் மீண்டும்
தரவேண்டும் சாதனைகள் தளராது நீ வாழ்க!

### ஆனந்த பைரவி

புகழோங்கு வைத்தியராய் பொறியியலாளர்களாய்
மிக நல்ல தொழிலதிபர் துறை சார்ந்த பெரியோராய்
ஜெகமெங்கு முன்னருமை மாணவர்கள் சூழப்
புகழோடும் பொலிவோடும் வாழி நீ வாழியம்மா!

பேர் பெற்ற பாதையிலே நீயமைந் ததனாலே
போராலே நீ பட்ட வதைதனில் மீண்டு
பார் போற்ற வளர்கின்றாய் "பீனிக்ஸை"ப்போலே
சோர்வேது உனக்கம்மா சோபையுடன் வாழ்க!

## பாகேஸ்வரி

மிஞ்சு புகழ் பட்டினத்தை நாடியவர்கள் போக
பஞ்சம் பசி பட்டினியால் வறுமையுடன் வாழும்
எஞ்சியோரை ஏற்றவரின் கல்விப்பசி போக்கி
விஞ்சும் வண்ணம் வாழுகின்றாய் வீறுடனே வாழ்க!

காலத்திற்கு ஏற்றவண்ணம் கோலமறிந் திங்கு
ஞாலமதில் நல்ல கல்வி மாணவர்க்கு நல்கி
சீலமுறு அதிபராசிரியர்கள் பெற்றோர்
கோலமுடன் சேர்ந்துழைக்க கோடலின்றி வாழ்க!

## நாட்டாரிசை

தேடி உந்தன் மைந்தர் குழாம்
தாயே உன்னிடத்தில் வந்து
மாடி மனை கணினியுடன்
கருவிகளும் தாமேதந்து
நாடி வருஞ் சிறார்களுக்கு
கோடலின்றி கல்வி தர
கூடி நாங்கள் சேர்ந் துழைப்போம்
கோடி யாண்டு வாழ்க! வாழ்க! !

அருமை மிகு அதிபர்களும்
ஆசி ரியர்களு மொன்றாய்
பெருமையுற மாணவர்க்கு
உழைத் ததற்குச் சான்றாக
இரு நூறு லட்சமதில்
எழிலான ஓர் அரங்குதந்து
இதயத்தில் ஏற்று கின்றார்
ஏற்று நீயும் வாழ்க! வாழ்க! !

## கேதாரகௌளை

கற்க வருஞ்சிறார்கள் பொற்புறவே வாழ்க!
வெற்பென உரும்பிராய் இந்துவே நீ வாழ்க!
உற்றவர் மற்றவர் போற்றிடவே வாழ்க!
கற்பகனின் அருளால் காலமெல்லாம் வாழ்க!

கவிமணி க.ஆனந்தராசா(அன்னைதாசன்)
ஓய்வுநிலை அதிபர்
யா/உரும்பிராய் சந்திரோதயா வித்தியாசாலை

# Our College Staff's Details - 2011

## Vice Principal



**Mrs.K.Vijayakumar**
B.Com,PGDE,SLTS-I

## Sectional Head



**Mrs.S.Mahenthiran**
B.Sc,PGDE,SLTS-I

## Sectional Head



**Mrs.P.Thiyagalingam**
B.A,PGDE,SLTS-I

## Subject Coordinator



**Mrs.V.Shanmugasundaramoorthy**
B.A,PGDE,SLTS-I

## Guidance and Counselling



**Mr.M.R.Narenthira**
Sp.Trd(Science),SLTS-I



**Mr.S.Senthilnathan**
B.Sc,PGDE,SLTS-I



**Mrs.S.Sivasithamparalingam**
Sp.Trd(Science),SLTS-I



**Mr.K.Uruthrakumaran**
B.A,M.A,PGDE,SLTS-I



**Mr.K.Thillainathan**
B.Sc,PGDE,SLTS-I



**Mrs.S.Sritharan**
B.A,PGDE,SLTS-I



**Mr.N.Kirubananthasivam**
Sp.Trd(Religion),SLTS-2.I



**Mr.S.Gunaratnam**
B.A,PGDE,Sp.Trd(Science),SLTS-2.I

# Our College Staff's Details - 2011



**Mrs.P.Paulkamalaraj**
Sp.Trd(English),SLTS-2.I



**Mr.G.Thirumalalakan**
B.Com,PGDE,SLTS-2.II



**Mrs.T.Vimalanathan**
B.Com,PGDE,SLTS-2.II



**Miss.M.Kunanayaki**
Dip in Music,SLTS-2.II



**Mr.R.L.Robinson**
B.Sc,Sp.Trd(Maths),SLTS-2.II



**Mrs.G.Mahenthirarajah**
B.FA, PGDE, SLTS-2.II



**Mrs.P.Sritharan**
Sp.Trd(Home Economics),SLTS-2.II



**Mrs.M.Mohanarajan**
B.Sc,PGDE,SLTS-2.II



**Mrs.T.Thirukkumaran**
B.A, PGDE, SLTS-2.II



**Mrs.J.Murugathas**
B.A,SLTS-2.II



**Mr.K.Thavaseelan**
B.Com,PGDE,Sp.Trd(Agri)SLTS-2.II



**Miss.S.Ranjini**
B.A(Hons),PGDE,SLTS-2.II



**Mr.S.Sivakumar**
B.A(Hons),M.A,SLTS-3.I



**Mrs.P.Dikukumar**
B.A(Hons),SLTS-3.I



**Mrs.A.J.Aras Danial**
B.A(Hons),SLTS-3.I



**Mr.K.Selvachandran**
B.A(Hons),SLTS-3.I

# Our College Staff's Details - 2011



**Mrs.T.Sukumar**
Sp.Trd( English),SLTS-3.I



**Mrs.S.Thavanesan**
Dip in Dance,SLTS-3.I



**Mr.M.Vinokanthan**
Adv.Dip.in Physical Edu,SLTS-3.II



**Mr.S.Sivashangar**
Laboratory Assistant (Grade-III)



**Miss.M.Vasanthini**
Library Assistant (Grade-III)



**Mr.S.Kiruba**
Laborer (Grade-I)



**Mr.Y.Jeyaratnam**
Watcher (Grade-I)



**Mr.K.Piragas**
(Internship)



**Mr.M.Kirupasenan**
(Internship)



**Miss.S.Sangeetha**
(Internship)



**Miss.K.Suyalini**
(Internship)



**Mr.K.Murugesu**
(Staff working with the aid of O.S.A)



**Miss.S.Dayalini**
(Staff working with the aid of O.S.A)



**Mrs.D.Garnan**
(Trainee of Computerized Data Entry)



**Miss.S.Vinotha**
(Computer Assistance)



**Miss.S.Piratha**
(Computer Assistance)

# நூற்றாண்டு நிறைவில்
# உரும்பிராய் இந்து அன்னையே வாழ்க!



உரும்பிராய் இந்து அன்னை உதயமான தின முதலாய்
பரம்பரையாய்ப் பலபேரை பல்துறை வித்தகராய்
தரம் உயர்த்தி கரம் தந்த காலமது நூற்றாண்டை
சிரம் கொண்டோம் வாழ்த்துகின்றோம்.வாழி பல் நூறாண்டு.

அன்னையவள் அழகாக அமைந்த இடம் அரிதாகும்
கண்கவர் கோபுரமாய் கலைக்கூடம் வளர்ந்து நிற்க
மின்னொளி போல் மிகு கலைகள் கண்ணெதிரில் தெரியுதம்மா
பண்புடனே உன் பணியை வாழ்த்தி நின்றோம் வாழி! வாழி!!
பணியதனில் பல்முதல்வர் சேவையதில் உயர்ந்த கூடம்
தனியாகத் தனக்கென்ற தனித்துவத்தைப் பெற்ற சாலை
கனி மொழியோன் முதல்வன் ஈஸ்வரனின் காலமதில்
மாண்மிய நிறை நூற்றாண்டின் அன்னையே நீ வாழி! வாழி!!

கலையொடு வர்த்தக கணித விஞ்ஞானத் துறை அனைத்தும்
கச்சிதமாய் வளர்த்த தெங்கள் கலைக் கூடத்தில்
தலைமுறைகள் பலகண்டு கணினியுகம் கை கொடுக்க
நூல் படைக்கும் நூற்றாண்டில் உரு இந்துவே வாழி! வாழி!!

உலகோர் போற்ற உரும்பிராய் இந்துவே வாழி வாழி
உன்புகழ் ஓங்க உயிர் கொடுத்த உத்தமர்கள் வாழி வாழி
உபாத்தியாயர் சேவையதால் மாணவர்கள் உயர்ந்து வாழி
உவப்போடு வாழ்த்துகின்றோம் வாழ்க பல்கோடி ஆண்டு !


திருமதி.வ.சண்முகசுந்தரமூர்த்தி
B.A,PGDE,SLTS-I
ஆசிரியை
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி

# உரும்பிராய் இந்துவே வாழ்க!



அகவை நூறை மகிழ்வுடன் எய்தி
அழகுடன் மிளிரும் உரும்பிராய்
இந்துவை
அக மகிழ்ந்து வாழ்த்துவோம் நிதமே
அன்னையே வாழ்க பல்லாண்டு

கவினுறு இரண்டுமாடிக்
கட்டடங்கள் ஓர்பால்
கலை பயிலும் கல்விக்கூடங்கள்
ஓர்பால்
கணினி பயின்றிடக் கணினிக்கூடம்
ஓர்பால்
கற்று விளையாடி மகிழ்ந்திடப் பெரு
மைதானம் ஓர்பால்
இத்தனையும் பெற்று அழகுறு
உரும்பிராய்ப் பதியின்
இணையில்லா இதயமே வாழிய
வாழியவே
அகரம் முதலாய் அறிவு பல ஈந்தாய்
ஆசாரம் வளர்த்தாய் ஆளுமை
கொடுத்தாய்
சீரியராய் வாழ்ந்திடவே போதனை
செய்தாய்

பூரிப்படைந்தோம் உன் புகழ்
வாழ்கவே
கற்றோரும்
மற்றோரும் மகிழ்ந்து
போற்ற
கரையிலாக்
கல்வியளித்து உத்தமர் பலரை
உருவாக்கி
ஆல்போல் படர்ந்து அரும் நிழல்
பரப்பும்
அன்னையே உன் பாதம் பணிந்து
வாழ்த்துவோம் யாமே

நூறு அகவை எய்தியும் எழிலுடன்
பொலிகிறாய்
ஏற்றமும் புகழும் உன்னை அடைக
வேற்று நாட்டிலும் உன்புகழ் ஓங்குக
நூறாவது ஆண்டில் பார்போற்ற
வாழ்கவே!

செல்வன்.வ.றொபின்சன்
தரம் 13 (2011)
கலைப்பிரிவு

# Founder of New Two Storey Centenary Building






*Mr & Mrs. Kanthasamy Tharmakulasingam*

(Entrepreneur -London)

(Old Student) J/Urumpirai Hindu College

# Mr.K.Tharmakulasingam
# The man of the Centenary Day
# Urumpirai Hindu College 03.04.2011



Oh! my dear friend
Tharma
the man of the
centenary day!
We all admire of your
broad mind.
Though you live in UK Foreign
Languages and Cultures,
have not polluted your Lifestyle.
I realize the gratitude you show on your
Alma-mater.
On this day, I recall the memories of the
past.
My mind telecasts the matches,
You played for our college football
team.

Oh! my active friend Tharma!
on this great day you're seen
with Garlands on your shoulders.
The shoulders that carry the Garlands
today,
were took pains to come up in life
yesterday.
Let them pain for the welfare of the
poor Cancer patients tomorrow.
I too extend my warm wishes to you on
this day
May you add the fame and Glory
to your parents and the soil,
by shining as a great entrepreneur.
Goodwill shower you with success
in all your endeavours!

Carry on Tharma! Carry on...!

**By:Chelliah Nagaratnam**
Loving Friend

# நன்றிப் பாமாலை



ஞாலம்புகழ என்றும்
நலம் பெறுக நல்லவரே
சீலம் தழைத்திடவே,
சிந்தையுள்ள
பெரியவரே !
காலத்தால் அழியாத
கல்வி சுடர்விடவே
கோலமுறப் பெருநிதியை ஈய்ந்திட்ட
உத்தமரே
தர்மத்தின் தலைவனாம் தர்மகுலசிங்கம்
என்றும்
தயவுநிறை சிந்தையுள்ளம்
படைத்தவரே நீடு வாழ்க !
உரும்பிராய் இந்து என்னும்
ஊர்புகழ்ந்த கல்லூரி
ஊரறிய நாளும் உன்னதமாய் தலை
நிமிர
உற்ற துணையாக என்றும்
ஓடையம்பதியானிருக்க
ஓங்கார நாதமுடன் உலகமெல்லாம்
இன்னிசைக்க
நாளையொரு பொற்காலம் நல்லதாய்
அமைந்திடவே
வேளையொன்று வந்ததுவே
விடியலொன்று தோன்றியதே
பசுவுக்காய் மனுநீதிச் சோழன்
தன்மகனைக் கொடுத்தான்
பாசமுடன் பாரிவள்ளல்
முல்லைக்குத் தேர்கொடுத்தான்
கர்ணனோ தன்கவச குண்டலங்களையே
காணிக்கையாக்கினான்
கல்வி தந்த கல்லூரித்தாயின்
பாசத்தினால்
கருணை கொண்டு கடின உழைப்பையே
காணிக்கையாக்கியவர்
கனவுகள் யாவும் நனவாகிட
வேண்டும் !
அழகிழந்து எம் அன்னை வாடி
வதங்கிடாது
ஆருயிராம் பிள்ளைகளின்
அக்கறை தளைத்திட்டால்
பெற்றோர் மாணவர் ஆசிரியர்குழாம்
ஒன்றிணைந்தே
அருமையுடன் பாடுபடும்
அபிவிருத்திச்சங்கமுடன்
ஆற்றலுள்ள பழைய மாணவர் சங்க
அமைப்புகளும்
கூடியொன்றாய் பாடுபட்டால்
குவலயத்தில் ஏது குறை?

திருமதி.ம.சிவசிதம்பரலிங்கம்
Sp.Trd(Science),SLTS-I
ஆசிரியை
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி

# CENTENARY CELEBRATION COMMITTEE- 2011



**Seated (L.R):** Mrs.R.Baskaran, Mr.T.Selvathurai, Mr.S.Kathiravelu, Mr.K.Anantharaja, Mr.V.Somanathan, Mr.A.Eswaranathan(President), Mr.S.Eahamparanathan(Secretary), Mr.C.Nagaratnam(Treasurer), Mr.M.Vamathevan, Mr.N.Kanesalingam,

**Standing 1st row(L.R):** Mrs.M.Sivasithamparalingam, Mrs.T.Sukumar, Mrs.B.Thiyakalinkam, Mr.L.Robinson, Mr.S.Sivakumar, Mr.S.Krisnanthan, Mr.P.Hanskugan, Mr.A.Mathuranayagam, Mr.M.Mahadevan, Miss.S.Ranjini, Mrs.K.Vijayakumar, Mrs.S.Sritharan

**Standing 2nd row(L.R):** Mr.C.G.Thirumalalakan, Mr.S.Senthilnathan, Mr.M.R.Narenthira, Mr.M.Vinokanthan, Mr.K.Murukaiyah, Mr.K.Uruthrakumaran, Mr.K.Thavaseelan, Mr.R.Makesvararaj

# CENTENARY AESTHETIC BUILDING COMMITTEE - 2011



**(L.R):** Mrs.K.Vijayakumar, Mr.C.Nagaratnam(Treasurer), Mr.S.Eahamparanathan(Secretary), Mr.A.Eswaranathan(President), Mr.V.Somanathan, Mr.T.Parameswaran, Mr.V.Balenthra

# கல்லூரித் தாபகர் உயர்திரு.வைத்திய கலாநிதி. வைரவநாதர் வல்லிபுரம்

இவர் கல்வி கற்ற காலத்தில் சைவ ஆங்கிலப் பாடசாலைகள் யாழ்ப்பாணத்தில் தோன்றாத காலம் ஆகையால் அக்கால இளைஞர்கள் மிஷனரிமாரால் நடாத்தப்பட்ட கிறிஸ்தவப்பாடசாலைகளிலேயே கல்விகற்க வேண்டியிருந்தது. இவர்கள் வீட்டிலே விபூதியைப்பூசி பாடசாலைக்குச் செல்லும்போது வீதியிலே அதை அழித்து விட்டுப் போக வேண்டியும், உள்ளத்தில் சைவப்பற்றை வைத்துக்கொண்டு உதட்டிலே விவிலிய வேதநூலில் உள்ள வாக்கியங்களை உச்சரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உடையாராயினர். என்றாலும் ஆங்கிலேய ஆட்சியின் கீழ் உத்தியோக வாய்ப்புப் பெறுவதற்கு ஆங்கிலத்தைப் படிக்க வேண்டி இருந்தது. இந்தச் சூழ்நிலையிலே தான் திரு.வை.வல்லிபுரம் அவர்களின் இளமைப் பருவக்கல்வி நடைபெற்றது. இவரோடு கல்விகற்ற பலர் 6ம், 7ம் வகுப்புச் சித்தியெய்தியவுடன் மலாயா போன்ற நாடுகளுக்குச்சென்று உத்தியோக வாய்ப்புப் பெற்று தமது வாழ்க்கையை நடாத்த திரு.வை.வல்லிபுரம் அவர்களோ தமது கல்வியை மேலும் தொடர்ந்து, பின் வைத்தியத்துறை சார்ந்த கல்வியைக் கற்று ஒரு பதிவு பெற்ற வைத்தியரானார். இவர் வடமாகாணத்தில் பல்வேறு இடங்களிலும் கடமைபார்த்து 1908ம் ஆண்டளவில் ஓய்வு பெற்றார். இவர் இளைப்பாறிய காலம் ஸ்ரீலஸ்ரீ.ஆறுமுகநாவலர் பெருமான் அவர்கள் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்குச் சைவத்தமிழ் வித்தியா சாலைகளின் தோற்றத்திற்கு வித்திட்ட காலம். அதனால் சைவத்தமிழ் வித்தியா சாலைகள் குடாநாட்டின் பல பாகங்களிலும் ஆங்காங்கே தோன்றிக் கொண்டிருந்தன.

அது மட்டுமல்லாமல் நாவலர் பெருமான் ஏற்றி வைத்த சைவத்தீபம் குடா நாடெங்கும் பிரகாசித்துக் கொண்டிருந்த காலமாக இருந்தது. இப்பிரகாசத்தின் பயனாகச் **"சைவபரிபாலன சபை"** தோன்றியது. இச் சபை தூண்டாமணி விளக்காய் நின்ற சுடர். அதன் தூண்டுதலால் அப்புக்காத்து நாகலிங்கம் என்பவர் பசுபதிச் செட்டியாரின் உதவியுடன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை ஸ்தாபித்தார். இதனைத் தொடர்ந்து வட்டுக் கோட்டை, கொக்குவில், சாவகச்சேரி போன்ற ஊர்களில் சைவ ஆங்கிலப் பாடசாலைகள் தோன்றின. திரு.வை.வல்லிபுரம் அவர்கள் இளைஞராய் இருந்தபோது பெற்ற அனுபவத்தைக் கொண்டு சைவ ஆங்கிலப் பாடசாலைகள் தோன்ற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்திருந்தவர். ஆதலால் உரும்பிராயிலும் ஒரு சைவ ஆங்கிலப் பாடசாலையைத் தோற்றுவிக்கவேண்டும் என்று எண்ணியதில் வியப்பேதுமில்லை. அவர் வீடுவீடாகச்

சென்று முதலில் 10 பிள்ளைகளைச் சேர்த்து இப்பாடசாலையை ஆரம்பித்தார் என்ற செய்தி முன்னரே கூறப்பட்டுள்ளது. அவ்வாறு ஸ்தாபித்த இப்பாடசாலையைப் பொறுப்பு வாய்ந்தவர் களிடம் ஒப்படைக்க விரும்பிய அவர் இப்பாடசாலையை இந்துக்கல்லூரி அதிகாரசபையினரிடம் ஒப்புவித்தார். பின்னர் அச்சபையினரின் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்தான முகாமையாளராய்ச் சேவை புரிந்தார்.

இப்பாடசாலையை ஸ்தாபித்ததன் மூலம் இவரும், ஸ்தாபிக்கக் காணி நல்கிய திரு.சின்னத்தம்பர் வேலுப்பிள்ளை அவர்களும் ஒரு மாபெரும் சேவையை, ஒரு மகத்தானதும் போற்றுதற்குரியதுமான சேவையை இவ்வூருக்குப் புரிந்திருக் கிறார்கள். இப் பாடசாலை "நடுவூர்ப் பழுத்த நன்மரம்" போல இவ்வூரிலுள்ள அனைத்துப் பிள்ளைகளுக்கும் பெரும் பயன் அளித்தது மட்டுமல்லாது, சூழவுள்ள சுன்னாகம், இணுவில், கோண்டாவில், கோப்பாய், நீர்வேலி, அச்செழு, ஊரெழு, போயிட்டி, புன்னாலைக்கட்டுவன் ஆகிய ஊர்களிலுள்ள பிள்ளைகள் பலரும் கற்றுக் கடைந்தேற வாய்ப்பளித்திருக்கிறது. இப்பெரியார் கல்விச் சேவையோடு மட்டுமல்லாது ஊரிலுள்ள ஆலயங்களின் வளர்ச்சிக்கும் தன்னாலான பங்களிப்பைச் செய்திருக்கிறார்.

12ம் நூற்றாண்டில் கருணாகரத் தொண்டைமானால் ஸ்தாபிக்கப்பட்ட கருணாகரப் பிள்ளையார் ஆலயம் எழு நூறு ஆண்டுகளாக நித்திய பூசையோடு மாத்திரம் இருப்பது கண்டு அங்கு நைமித்திய பூசைகள் நடைபெற வேண்டும், மகோற்சவங்கள் இடம்பெற வேண்டுமென்று விரும்பி 1918ம் ஆண்டு அவ்வாலயத்தில் ஒரு கொடித்தம்பத்தை நாட்டி விழாக்களை ஆரம்பித்து வைத்தார். கொடியேற்ற விழாவைத்தானே செய்து, பின்னர் தனது தம்பியாரான முதலியார் பொன்னம்பலம் அவர்களுக்கு அப்பொ றுப்பைக் கையளித்தார். அவரின் பின் அவரது மகன் வைரவநாதன் அதைச் செய்து வருகிறார். அதேபோல, 1920இல் கற்பகப்பிள்ளையார் ஆலயத்திலும் ஒரு கொடித்தம்பம் நாட்டி விழா நடைபெற மூலகாரணமாய் இருந்தார். அக்கொடி யேற்ற விழாவைச் சில காலம் தானே செய்து வந்தார். பின்னர் தனது மருமகராகிய உடையார் நல்லைநாத னுக்குக் கையளிக்க, அவரின் பின் வைத்திய கலாநிதியின் பேரப்பிள்ளை களே அதனைச் செய்து வருகின்றனர். வைத்திய கலாநிதி வல்லிபுரம் அவர்க ளைத்தவிர அவரது காலத்திலோ அதற்கு முன்னரோ ஆங்கில வைத்தியர் எவருமே இவ்வூரில் இருந்ததில்லை. அவர் காலத்தில் சின்னத்தம்பி என்னும் பெயரு டைய சுதேச வைத்தியர் ஒருவர் மாத்திரம் இருந்தார். இவர் இவ்வூரில் உள்ள ஏழை மக்களுக்கு இலவச வைத்தியம் செய்த ஒரு புண்ணியவான். இவ்வாறு ஒரு பெரிய புண்ணியவானாகவும், கண்ணிய வானாகவும் திகழ்ந்த இவரது நாமம் இக்கல்லூரி உள்ளவரை, ஊர் மக்கள் உள்ளவரை என்றும் நின்று நிலவுவதாக என நூற்றாண்டு விழாவில் வாழ்த்துவோம்.

# கல்லூரி தாபிப்பதற்கு நிலம் வழங்கிய பெரியார் திரு.சின்னத்தம்பர் வேலுப்பிள்ளை

இவர் ஒரு நிலச்சுவாந்தராகவும், பணக் காரப் பிரபுவாகவும் விளங்கியவர். அதனா லேயே இவர் தன்னிடமுள்ள ஏராளமான நிலத்தில் 10 பரப்பை இக்கல்லூரியைத் தாபிப்பதற்காக வழங்கினார். இவர் பணக்காரர் ஆகையால் வறிய விவசாயிகள் இவரிடம் வட்டிக்குப் பணம் வாங்குவார். அவர்களுக்கு இவர் குறைந்த வட்டியில் பணம் வழங்குவார். பின்னர் அவர்கள் வட்டியையும் முதலையும் திரும்பச் செலுத்தும் போது வட்டியில் ஒரு பகுதியைக் கழித்து விடுவார். அவ்வளவு தாராள சிந்தை உடையவர். இவர் மிக்க கடவுள் பற்று உடையவர். சமய ஆசாரசீலர். நல்லூர்க் கந்த சுவாமி கோயில் உற்சவகாலத்தில் ஆசாரசீ லராய் அனுஷ்டானக் குறிகளோடு திருக்கல் வண்டியிலேறி கோயிலுக்குச் செல்லும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

இவரது வாழ்க்கையில் ஏற்பட்ட சம்பவம் ஒன்றை ஊர்மக்கள் கூறுவார்கள். இவரது வீட்டு முற்றத்தில் குரக்கன்கதிர் வெயிலில் காயப்போடப்பட்டிருந்தது. நண்பகல் இவர் விரதத்திற்கு உணவு உட்கொண்டு இருந்தார். திடீரென ஒரு பெருமழை பொழிந்தது. இவர் முற்றத்தில் காய்ந்து கொண்டிருந்த குரக்கன் கதிரைப்பற்றி எவ்வித அக்கறையும் எடுக்க வில்லை. அதற்கான காரணம் விரத நேரத்தில் உணவை விட்டு எழும்பினால் விரதம் முறிந்து போகும். மீளச்சாப்பிடவும் கூடாது. ஆகையால் விரதமே மேலானது என்ற எண்ணந்தான். குரக்கன் கதிரை வெள்ளம் முற்றாக அள்ளிக்கொண்டு போய் விட்டது.

இவர் பெரிய பருமனும் தோற்றமும் உடையவர். தோட்டங்களில் முன்னைய காலங்களில் துலாவினால் இறைப்பார்கள். துலாமிதிப்பவர் முன்னும் பின்னுமாக ஓடிக்கொண்டிருப்பார். ஆனால் இவர் துலா மிதிக்கும்போது அச்சுலக்கையில் நின்று கொண்டு முன்னொருகால், பின்னொருகால் வைத்தவராக நிற்கும் போது பட்டை பிடிப்பவர் இலேசாக இறைக்க முடியும். இவரது வயிறு பிள்ளையாருடைய பேழை வயிறு போன்றது. மிகப்பெரியது. ஆகையால் இவரைப் 'பொந்தர்" என்றே அழைப்பர். இவரது பிள்ளைகளைக் குறிப் பிடும் போதும் 'பொந்தற்றை தளையசிங்கம்", "பொந்தற்றை பூபாலசிங்கம்" என்றே குறிப்பிடுவர். மங்களகரமான காரியங்களில் இவருக்கு முன்னுரிமை உண்டு. ஜவர்கர்லால் நேரு இலங்கைக்கு வந்த போது யாழ்ப்பா ணத்தையும் தரிசித்தார். உரும்பிராயி னூடாகப் போகும்போது உரும்பிராய்ச் சந்தியில் அவருக்கு மலர்மாலை சூட்டப் பட்டது. அதைச் சூட்டுவதற்கு இப் பெரியா ரையே ஊர்மக்கள் தெரிவுசெய்தனர். இவர் தலையிற்தலைப் பாகையுடன் நேருவுக்கு மலர்மாலை அணிந்தவர் என்பதை நேரில் பார்த்தவர்கள் கூறத்தெரிந்து கொண்டோம். இப்பெரியவரின் பிரதிமைப் படமொன்றும் கிடைக்கவில்லை. ஆயினும் கிட்டத்தட்ட அவரைப் போன்ற ஒரு கற்பனைப் படத்தை வரைந்து, அவரைப் போற்றிச் சிறப்பித் துள்ளோம்.

# நூற்றாண்டு விழாக்குழுச் செயலாளரின் அறிக்கை

உரும்பிராய் இந்துக்கல்லூரியின் நூற்றாண்டு விழாவிற்கான குழுஅமைப் பதற்காக அதிபர் திரு.அ.ஈஸ்வரநாதன் அவர்கள் 13.08.2010 இல் யாழ்நகரில் வெளிவரும் தினசரிப்பத்திரிகையான உதயனில் 15.08.2010 ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு குழு அமைக்க இருக்கும் விபரத்தை விளம்பரப்படுத்தியிருந்தார். இவ் விளம்பரத்திற்கு அமைவாகப் பழையமாணவர்கள், கல்விசார் ஆய்வாளர்கள், நலன்விரும்பிகள், ஆசிரியர்கள் எல்லோரும் கலந்து சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில் நிர்வாகக் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில் 30 பேர் வரை தெரிவு செய்யப்பட்டார்கள். இதன்பின் இக்குழுவினரை நாம் பலமுறை ஒன்று சேர்த்துப் பல குழுக்களை அமைத்துள்ளோம். மலர்க் குழு, நிதிக்குழு, விளையாட்டுக்கான குழு, கல்வி சார்பான போட்டிக்கான குழு, கண்காட்சிக்குழு, முத்திரை வெளியீட்டுக் குழு, கலை நிகழ்வுக்கான குழு, பிரசாரக்குழு, ஒழுங்கமைப்புக்குழு என நியமிக்கப்பட்டது. இக் குழுவிற்கு ஒருவர் பொறுப்பாகவும் 7 உறுப்பினர்களும் உள்ளடக்கப்பட்டனர். இக் குழுக்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாகவும், சில சமயங்கள் இரு குழுக்கள் ஒன்றாகவும் அழைத்து கலந்துரையாடியும் உள்ளோம். இத்துடன் கல்லூரியின் முன்னைநாள் உதைபந்தாட்ட வீரர்களையும் அழைத்து கலந்துரையாடியதுடன் அவர்கள் கௌரவிக்கப்பட உள்ளமையும் ஒரு பெரும் ஊக்குவிப்பாக அமைவதாக எண்ணுகின்றேன்.

இவற்றில் மலர்க்குழுப் பொறுப்பாசிரியராக செல்வி.சா.இரஞ்சினியும், நிதிக்குழுவிற்குப் பொறுப்பாகப் பொருளாளர் திரு.செ.நாகரத்தினமும் விளையாட்டுக் குழுவிற்குப் பொறுப்பாக திரு.ம.விஜோ காந்தன் ஆசிரியரும், கல்விசார்பான போட்டிக்கான குழுவின் பொறுப்பாளராக திருமதி.ப.தியாகலிங்கம் ஆசிரியரும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

மலர்க்குழுப் பொறுப்பாசிரியர் செல்வி. சாம்பசிவம் இரஞ்சினி பழைய தகவல்களைச் சேகரிப்பதிலும், வரலாற்றுப் புகைப் படங்களைச் சேகரிப்பதிலும், ஆசிரியுரை, வாழ்த்துரை, கட்டுரைகள் பெறுவதற்கும் பலருடன், உள்நாட்டிலும்,

வெளிநாட்டிலும் தொடர்பை ஏற்படுத்தித் தனது பணியைச் சிறப்பாக மேற்கொண்டமை பெரு மைக்குரியதே. இப்படியான ஒரு துடிப்பான ஆசிரியரைத் தீர்க்க தரிசனத்துடன் நியமித்த அதிபரும் பாராட்டுக் குரியவரே.

ஒவ்வொரு குழுவினரும் தம்தம் பொறுப்பைச் சரிவரச்செய்து சாதனை படைத்தமை பாராட்டுக்குரியதே. இவ்விழாவிற்குப் பாடசாலை ஆசிரியர் சமூகமும் பெரும்பங்களிப்பை வழங் கியுள்ளது. அதேபோல் இப்பாட சாலையில் பணிபுரியும் ஒவ் வொருவரினதும் பங்களிப்பும் போற்றுதற்குரியதே. எல்லாவற்றிற்கும் மேலாக அதிபர் திரு.அ.ஈஸ்வரநாதன் அவர்களின் துடிப்பும் செயற்பாடும் இவ்விழா சிறப்புற அமைய வழி வகுத்துள்ளது எனக் கூறினால் மிகையாகாது. மேலும் இக்குழுவில் உள்ள அனைவரும் நல்ல ஒத்துழைப்பை நல்கியுள்ளமை பெருமைக்குரிய விடயமாகும். இப் பெருவிழாவிற்கு என்னைச் செயலாளராக நியமித்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

திரு.ச.ஏகாம்பரநாதன்
(சமாதான நீதிவான்) செயலாளர்,
நூற்றாண்டு விழாக்குழு
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி

# பழைய மாணவர் சங்க அறிக்கை

உரும்பிராய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் பல வருடங்களாக இயங்காமலிருந்தது. பின்பு அதிபர் திரு.அ.ஈஸ்வரநாதனின் தலைமையில் 18.07.1999ல் ஸ்தாபிக்கப்பட்ட மேற்படி சங்கம் இன்று வரை கல்லூரியின் வளர்ச்சிக்காக அரிய பங்களிப்பினை வழங்கியுள்ளது. இது எப்படிச் சாத்தியமானது என்றால் நிச்சயமாக கனடா, இலண்டன் பழைய மாணவர் சங்கங்களின் மிகப்பெரிய பங்களிப்பினால் என்றால் மிகையாகாது. முதற்கண் அவர்களுக்கு எனது சார்பாகவும், கல்விச் சமூகத்தின் சார்பாகவும் இதய பூர்வமாக எமது நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

மேலும் எமது சங்கத்தின் அயராத முயற்சியினால் கல்லூரியின் தேவைகளில் அநேகமானவை பழைய மாணவர் சங்கத்தின் பங்களிப்பில் தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவற்றில் சிலவற்றை இங்கு தருகின்றேன். மெய்வல்லுநர்போட்டி, பரிசளிப்பு விழா, கணித ஆங்கில வகுப்பு (Paper class) உதைபந்தாட்டத்துக்கான உபகரணங்கள், வலயமட்ட, கோட்ட மட்டத்துக்கான உபசரணை, மின்சாரப் பட்டியலுக்கான மேலதிகக் கொடுப்பனவு காவலாளி மற்றும் காரியாலய உதவியாளர் ஆகியோரின் சம்பளம், கணினி அறை, அதிபர்அறை, நில வேலை, இணையத்தளம் (Website) ஒழுங்கமைப்பதற்கான உதவி ஆகியவற்றைப் பிரதானமாகக் குறிப்பிடலாம்.

இவற்றையெல்லாம் செய்யக்கூடிய பலம் கனடா, இலண்டன் சங்கங்களின் பேருதவியால் ஆகும். அது என்றும் தொடர வேண்டும். எமது பணி மேலும் விரிவடைய வேண்டும் என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்தி அமைகின்றேன்.

**திரு.வி.சோமநாதன்**
**செயலாளர்**
**பழைய மாணவர் சங்கம்**
**யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி**

# CENTENARY CELEBRATION FINANCE COMMITTEE- 2011



Seated(L.R) : Mrs.S.Mahenthiran, Mr.M.Vamathevan, Mr.V.Somanathan, Mr.C.Nagaratnam(Treasurer), Mr.A.Eswaranathan(President), Mr.S.Kathiravelu, Mr.S.Eahamparanathan(Secretary), Mrs.K.Vijayakumar,

Standing(L.R): Mr.K.Anantharaja, Mr.T.Selvathurai, Mr.V.Balenthra, Mr.S.Senthilnathan, Mr.M.Mahadevan, Mr.S.Gunaratnam, Mr.S.Sivakumar, Mr.P.Hanskugan, Mr.M.Vinokanthan, Mrs.B.Paulkamalaraj, Mrs.T.Vimalanathan, Mrs.B.Thiyakalinkam, Mrs.J.Murugathas

# OLD STUDENT'S ASSOCIATION -2011



Seated (L.R) : Mr.T.Kanaganayagam, Dr.C.Inthirarasa, Mr.C.Nagaratnam(Treasurer), Mr.A.Eswaranathan(President),Mr.V.Somanathan, Mr.S.Kathiravelu, Mr.N.Kanesalingam

Standing (L.R): Mrs.K.Vijayakumar, Mr.T.Selvathurai, Mr.A.Davidrajah, Mr.S.Krishnananthan, Mr.V.Balendra, Mr.T.Nadesan, Miss.S.Sarankapany

# CENTENARY CELEBRATION EDUCATION COMMITTEE- 2011



Seated(L.R) : Mrs.S.Mahenthiran, Mr.K.Anantharaja, Mr.C.Nagaratnam, Mr.A.Eswaranathan(Principal), Mr.S.Eahamparanathan, Mrs.K.Vijayakumar, Mrs.B.Thiyakalinkam

Standing(L.R): Mrs.J.Murugathas, Mr.R.Makesvararaj, Mr.R.L.Robinson, Mr.K.Sabesan, Mrs.M.Sivasithamparalingam

# CENTENARY CELEBRATION SPORTS COMMITTEE- 2011



Seated(L.R) : Mrs.S.Mahenthiran, Mr.M.R.Narenthira, Mr.V.Somanathan, Mr.C.Nagaratnam, Mr.A.Eswaranathan(Principal), Mr.M.Vinokanthan, Mr.S.Eahamparanathan, Mrs.R.Baskaran

Standing(L.R): Mrs.T.Sukumar, Mr.K.Sabesan, Mr.S.Sivakumar, Mr.R.Tharmenthera, Mr.P.Hanskugan, Mr.M.Perinpanathan, Mrs.T.Vimalanathan, Mrs.J.Murugathas, Mrs.K.Vijayakumar

# SCHOOL DEVELOPMENT SOCIETY (SDS) - 2011



**Seated (L.R)** : Mrs.S.Mahenthiran, Mr.T.Selvathurai, Mr.T.Thangarajah, Mr.M.Perinpanathan, Mr.A.Eswaranathan(President), Mr.S.Thevasikamani, Mr.S.Eahamparanathan(Secretary), Mrs.K.Vijayakumar

**Standing(L.R)**: Mrs.S.Rajeswaran, Mr.C.G.Thirumalalakan, Mr.K.Murukaiyah, Mr.S.Sivakumar, Mr.A.Mathuranayagam, Mr.S.Senthilnathan, Mrs.B.Thiyakalinkam, Mrs.S.Sritharan

# SCHOOL DEVELOPMENT COMMITTEE (SDC) - 2011



**Seated (L.R)** : Mrs.S.Mahenthiran, Mr.T.Selvathurai, Mr.T.Thangarajah, Mr.M.Perinpanathan, Mr.A.Eswaranathan(President), Mr.S.Eahamparanathan(Secretary), Mrs.K.Vijayakumar, Mrs.B.Thiyakalinkam

**Standing(L.R)** : Mrs.S.Rajeswaran, Mr.K.Murukaiyah, Mr.S.Sivakumar, Mr.V.Somanathan, Mr.P.Hanskugan

# நூற்றாண்டுக் கவின்கலை மண்டபக் குழுவின் சேவை

எமது கல்லூரியின் பழைய மாணவனும் இலண்டன் மாநகரில் தொழிலதிபராக விளங்கிக் கொண்டிருக்கும் உயர் திரு.கந்தசாமி தர்மகுலசிங்கம் அவர்களின் நற்சிந்தனையில் உருவாகிய கலையரங்கிற்கு அவரது வேண்டுகோளுக்கு அமைய ஒரு கட்டடக் குழுவை 03.04.2010 இல் உருவாக்கினோம். இக்குழு அடிக்கடி கூடி, கட்டடம் சம்பந்தமாக மேற்பார்வையுடன், நிதிக்கொடுப்பனவு, மற்றும் தரம், அளவு முதலியனவற்றைக் கண்காணித்து வந்துள்ளது. பிழைகள் ஏற்படும் போது, அப் பிழையை ஒப்பந்தகாரருக்குச் சுட்டிக்காட்டி, திருத்தங்களைச் செய்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. இக்குழுவில் உள்ள எமது பொறியியலாளர் ஒருவர் அடிக்கடி கல்லூரிக்குச் சமுகம் தந்து பார்வையிடுவதும் குறிப்பிடத்தக்கது. மேலும் எமது கல்விப் பணிப்பாளர், கல்வித்திணைக்களப் பொறியியலாளர் ஆகியோரின் ஒத்துழைப்பை நாம் மறப்பதற்கில்லை. அவர்களுக்கு எமது கல்லூரிச்சமூகம் என்றென்றும் கடமையுடையதாக இருக்கும். இதேபோல் எமது பழைய மாணவப் பொறியியலாளர் திரு.ச.சசிகுமார் அவர்களின் பணியையும் எமது பாடசாலைச்சமூகம் மறக்கமுடியாது.

கட்டடம் சம்பந்தமான விடயங்களைக் கலந்துரையாட நாம் தொலைபேசி ஊடாக அழைக்கும் போது எந்த வித மறுப்புக்களும், தயக்கங்களும் இன்றிச் சமுகந்தந்து தங்கள் அனுபவமான கருத்துக்களை எமக்கு வழங்கிய கட்டடக்குழுவினருக்குச் செயலாளர் என்ற வகையில் எனது பெரு நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். மேலும் இக்கட்டடத்தை உரிய காலத்தில் கட்டி முடித்துத்தந்த கட்டட ஒப்பந்தக்காரரும் எமது கல்லூரிப் பழைய மாணவருமாகிய திரு.மு.சண்முகநாதன் அவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.


**திரு.ச.ஏகாம்பரநாதன் (J.P)**
செயலாளர், கட்டடக்குழு
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி

# J/URUMPIRAI HINDU COLLEGE

# G.C.E(O/L) RESULTS (PERCENTAGE) 2001-2010

| SUBJECT | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| HINDUISM | 72 | 62 | 63 | 64 | 63 | 73 | 86 | 83 | 100 | 100 |
| CHRISTIANITY | 50 | 55 | 100 | 80 | 76 | 100 | 94 | 100 | 100 | 100 |
| TAMIL LANGUAGE | 39 | 39 | 51 | 53 | 52 | 1 | 54 | 33 | 63 | 87 |
| ENGLISH | 5 | 1 | 4 | 13 | 5 | 63 | 3 | 1 | 5 | 4 |
| SCIENCE AND TECHNOLOGY | 27 | 17 | 20 | 28 | 25 | 15 | 13 | 9 | 12 | 44 |
| MATHS | 18 | 15 | 15 | 14 | 12 | 13 | 10 | 12 | 2 | 40 |
| SOCIAL STUDIES | 28 | 21 | 33 | 28 | 36 | 40 | 29 | 22 | 19 | 53 |
| DANCE | 44 | 17 | 36 | 25 | 30 | 100 | 67 | 75 | 53 | 100 |
| MUSIC | 28 | 20 | 24 | 29 | 26 | 29 | 71 | 58 | 70 | 75 |
| ART | 20 | 5 | 40 | 57 | 6 | 1 | 16 | 71 | 1 | 53 |
| GEOGRAPHY | 23 | 17 | 35 | 10 | 19 | 17 | 17 | - | - | 95 |
| HEALTH SCIENCE | 59 | 44 | 62 | 90 | 77 | 83 | 78 | 85 | 100 | 100 |
| AGRICULTURE | 27 | 19 | 31 | 75 | 35 | 59 | 43 | 39 | 50 | 100 |
| COMMERCE | 100 | 72 | 36 | 40 | 23 | 55 | 85 | 100 | 100 | 88 |
| HOME ECONOMICS | 31 | 14 | 56 | 58 | 29 | 25 | 52 | 33 | 35 | 100 |
| DEVELOPMENT STUDIES | - | - | - | - | - | 46 | 25 | - | - | 83 |
| INFORMATION TECHNOLOGY | - | - | - | - | - | - | 50 | 100 | 100 | 100 |
| DRAMA AND THEATRE | - | - | - | - | - | - | 100 | 85 | 65 | 65 |
| CITIZENSHIP EDUCATION | - | - | - | - | - | - | - | 42 | 56 | 56 |

# G.C.E (O/L) Best Results - 2010

| | | |
|---|---|---|
| 01. | N.Vathana | 3A, 3B, 2C |
| 02. | S.Kopina | 3A, C, 3S |
| 03. | P.Nirupan | A, 4B, 3C |
| 04. | T.Balatheepan | A, 3B, 4C |
| 05. | T.Vinoja | A, 3B, C, 2S |
| 06. | T.Kandeepan | A, 2B, 5C |
| 07. | T.Alexan | A, 2B, 3C, 2S |
| 08. | J.Ronishiya | A, 2B, 2C, 4S |
| 09. | J.Pathmaseelan | A, 2B, C, 3S |
| 10. | R. Mathunika | A, 3C, 4S |
| 11. | S.Vithursan | A, 4C, 3S |
| 12. | M.Niyootan | 2B, 5C, S |
| 13. | S.Dilaxan | 2B, 4C, 2S |
| 14. | C.Jogeswaran | B, 6C, S |
| 15. | S.Thusanthini | B, 4C, 3S |
| 16. | U.Thowmiga | B, 2C, 5S |
| 17. | N.Nirogini | 4C, 4S |
| 18. | T.Anistan | B, 2C, 3S |

# J/URUMPIRAI HINDU COLLEGE

# G.C.E (A/L) RESULTS (PERCENTAGE) 2001-2010

| SUBJECT | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ACCOUNTS | 60 | 67 | - | 100 | 67 | 100 | 50 | 33 | 50 | 50 |
| COMMERCE | 60 | 67 | 50 | 100 | - | 75 | 50 | 33 | 50 | 50 |
| ECONOMICS | - | - | - | 100 | - | 100 | 50 | 33 | 80 | 50 |
| LOGIC | 91 | 47 | 55 | 70 | 50 | 57 | 90 | 67 | 79 | - |
| HINDU CULTURE | 93 | 63 | 81 | 54 | 88 | 88 | 88 | 69 | 71 | 71 |
| CHRISTIANITY | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| DRAMA AND THEATRE | 100 | 80 | 88 | 80 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| TAMIL | 91 | 64 | 88 | 75 | 25 | 70 | 39 | 50 | 50 | 79 |
| MUSIC | - | - | - | 100 | - | 100 | - | 100 | 80 | 80 |
| ART | - | - | - | 100 | - | 75 | 100 | 100 | 100 | 100 |
| AGRICULTURE SCIENCE | - | - | - | - | - | - | - | 15 | - | - |
| HOME ECONOMICS | - | - | - | - | - | - | 60 | - | 100 | 100 |
| DANCE | 100 | - | - | - | - | - | - | - |  | - |
| GEOGRAPHY | - | - | - | - | - | - | - | - | 84 | 85 |
| PHYSICS | 50 | - | - | 50 | - | - | 50 | - | - | - |
| CHEMISTRY | 50 | - | - | - | - | - | 50 | - | - | - |
| COMBINED MATHS | - | - | - | - | - | - | - | - | - | - |
| BIO SCIENCE | 50 | 33 | 50 | - | 100 | - | 50 | - | - | - |

# J/URUMPIRAI HINDU COLLEGE

# UNIVERSITY ENTRANCE (1992-2009)

**1992**

| | |
|---|---|
| R. Jeyagowry | Faculty of Science |
| M. Ahila | Faculty of Commerce |
| K. Pathmasri | Faculty of Fine Arts |

**1993**

| | |
|---|---|
| K. Kalaichselvi | Faculty of Fine Arts |
| R. Subajini | Faculty of Fine Arts |

**1994**

| | |
|---|---|
| B. Shirojitha | Faculty of Science |
| M. Kavitha | Faculty of Commerce |
| S. Arunthathi | Faculty of Fine Arts |

**1995**

| | |
|---|---|
| S. Sasikumar | Faculty of Engineering |
| A. Arulmozhi | Faculty of Siddha Medicine |
| S. Kalyani | Faculty of Arts |

**1996**

| | |
|---|---|
| M. Thurjana | Faculty of Commerce |
| T. Vijayakala | Faculty of Arts |
| S. Jamunamalar | Faculty of Arts |

**1997**

| | |
|---|---|
| J. Rejitharan | Faculty of Commerce |

**1998**

| | |
|---|---|
| S. Ariharan | Faculty of Science |

**1999**

| | |
|---|---|
| K. Sukirtha | Faculty of Arts |
| S. Shamini | Faculty of Arts |
| M. Vinokanthan | Faculty of Physical Education |
| S. Patheshraja | Faculty of Fine Arts |

**2000**

| | |
|---|---|
| R. Dineshan | Faculty of Arts |

**2001**

| | |
|---|---|
| K. Kalaivani | Faculty of Science |
| S. Laksuja | Faculty of Arts |
| S. Krishnaverni | Faculty of Fine Arts |
| T. Navenan | Faculty of Fine Arts |
| D. Patreshiya | Faculty of Arts |
| M. Pratheepa | Faculty of Arts |
| P. Tharmendra | Faculty of Commerce |
| P. Surendran | Faculty of Arts |

**2002**

| | |
|---|---|
| N. Thayaparan | Faculty of Fine Arts |
| S. Suventhini | Faculty of Arts |

**2003**

| | |
|---|---|
| S. Luxman | Faculty of Commerce |

**2004**

| | |
|---|---|
| L. Usha | Faculty of Arts |

| 2005 | |
|---|---|
| K. Sabeshan | Faculty of Arts |
| N. Pulenthrakumar | Faculty of Fine Arts |
| R. Rajkumar | Faculty of Fine Arts |

| 2006 | |
|---|---|
| B. Reha | Faculty of Arts |
| T. Thavarubi | Faculty of Fine Arts |
| K. Thushanthini | Faculty of Arts |
| K. Suvarnapiratha | Faculty of Fine Arts |
| N. Rajaji | Faculty of Arts |

| 2007 | |
|---|---|
| Y. Kubeshan | Faculty of Physical Education |

| 2009 | |
|---|---|
| D. Parida | Faculty of Physical Education |

## London Old Student Association- 2011

| | | | |
|---|---|---|---|
| **President** | Mr.S.Sathiananthan | **Vice President** | Mr.V.Periathamby |
| **Secretary** | Mr.S.Sivalingam | **Asst.Secretary** | Mr.R.Sivakumar |
| **Treasurer** | Mr.V.Mayooran | **Asst.Treasurer** | Mr.M.Nadesan |

**Committee Members**

| | | |
|---|---|---|
| Mr.C.Jayanathan | Mr.K.T.Nathan | Mr.A.Pathmanathan |
| Mr.N.Ruthiran | Mr.M.T.Selvarajah | Mr.T.Thavatheva |
| Mrs.Vanathy Suriyakumar | Mr N Gowreesan | Mr S Thavendran |
| Mr K Jeyaveerasingam | Mrs S Sivalingam | |

**Web site Address - www.urumpirai.com**
**E- Mail Address - msssivalingam@gmail.com**

# Canada Old Student Association - 2011



**Seated:** (L. to R.) Mr.T. Varatharajan(Vice President), Mr.K.Kannathasan(Asst. Treasurer), Mrs.K.Chandraleela(Secretary), Mrs.J.Niranjana(President), Mr.T.Selvan(Treasurer), Mr.T.Sivaloganathan(Asst. Secretary)

**Standing:** (L. to R.) Mr.T.Vigneswararajah, Mr.P.Lathakumar, Mr.T.Jeyanthirajah, Mr.S.Selvarajah, Mrs.S.Gnanasakthy, Mr.K.Varathanathan, Mr.J.Jeyamuhunthan(Sports Secretary), Mr.R.Sothilingam

**Web site Address: www.urumpiraihinducollege.com**
**E- Mail Address : urumpiraihinducollege@gmail.com**

# கல்லூரியின் விபரம்

1. பாடசாலையின் பெயர் - யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி
2. பாடசாலைக் குறியீட்டு இலக்கம் - 1009007
3. பாடசாலை இலக்கம் - 11437
4. பாடசாலை தொகை மதிப்பீட்டு இலக்கம் - 09224
5. மாகாணம் - வடக்கு
6. மாவட்டம் - யாழ்ப்பாணம்
7. கோட்டம் - கோப்பாய்
8. வலயம் - யாழ் கல்வி வலயம்
9. பிரதேச செயலகம் - கோப்பாய்
10. முகவரி - பலாலி வீதி, உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.
11. தொலைபேசி இலக்கம் - 021 222 3829
12. மின்னஞ்சல் முகவரி - uhcuhc1911@yahoo.com
13. இணையத்தள முகவரி - www.urumpiraihindu.com
14. பாடசாலை தரம் - 1AB
15. பாடசாலை வகை - கலவன்
16. வகுப்புக்கள் - தரம் 6 - தரம் 13 வரை
17. ஆசிரியர் தொகை - 31

## மாணவர் விபரம் - 2011

| வகுப்பு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 6 | 28 | 25 | 53 |
| 7 | 31 | 30 | 61 |
| 8 | 24 | 21 | 45 |
| 9 | 10 | 22 | 32 |
| 10 | 35 | 20 | 55 |
| 11 | 42 | 50 | 92 |
| 11R | 48 | 42 | 90 |
| 12 | 08 | 20 | 28 |
| 13 | 26 | 53 | 79 |
| மொத்தம் | 252 | 283 | 535 |

# யா/உரும்பிராய் இந்துக்கல்லூரியின் வரலாறு

எமது பகுதி மாணவர்கள் மிஷனரிமாரால் நடத்தப்பட்ட கிறிஸ்தவப் பாடசாலைகளிலேயே கல்வி கற்றார்கள். இவர்கள் வீட்டிலே வீபூதியைப் பூசி பாடசாலைக்குச் செல்லும் போது வீதியிலே அதை அழித்துவிட்டு உதட்டிலே விவிலிய வேதநூலில் உள்ள வாக்கியங்களை உச்சரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உடையவராயினர். ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் உத்தியோக வாய்ப்புப் பெறுவதற்கு ஆங்கிலத்தைப் படிக்க வேண்டியிருந்தது. 1908ம் ஆண்டளவில் ஸ்ரீலஸ்ரீ.ஆறுமுக நாவலர்பெருமான் அவர்கள் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்கு சைவத்தமிழ் வித்தியா சாலைகளின் தோற்றத்திற்கு வித்திட்ட காலம். அதனால் சைவத்தமிழ் வித்தியாசாலைகள் குடாநாட்டின் பல பாகங்களிலும் ஆங்காங்கே தோன்றிக் கொண்டிருந்தன. அது மட்டு மல்லாமல் நாவலர் பெருமான் ஏற்றிவைத்த "சைவத் தீபம்" குடாநாடெங்கும் பிரகாசித்துக் கொண்டிருந்த காலமாக இருந்தது. இப்பிரகாசத்தின் பயனாகச் "சைவபரி பாலனசபை" 1988ம் ஆண்டு தோன்றியது. இச்சபை தூண்டாமணி விளக்காய் நின்ற சுடர், அதன் தூண்டுதலால் உரும்பிராயைச் சேர்ந்த அப்புக்காத்து நாகலிங்கம் என்பவர் பசுபதிச் செட்டியாரின் உதவியுடன் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியை ஸ்தாபித்தார். இதனைத் தொடர்ந்து வட்டுக்கோட்டை, கொக்குவில், சாவகச்சேரி போன்ற இடங்களில் சைவ, ஆங்கிலப் பாடசாலைகள் தோன்றின. வைத்திய கலாநிதி வல்லிபுரம், திரு.சுவாமிநாதன், திரு.நாகலிங்கம் அவர்கள் சைவ ஆங்கிலப் பாடசாலையை எமது ஊரிலும் ஸ்தாபிக்க வேண்டும் என்ற அவசியத்தை உணர்ந்திருந்தார்கள். இதனால் அவர்கள் வீடு, வீடாகச் சென்று முதலில் பத்துப் பிள்ளைகளைச் சேர்த்து இப்பாடசாலையை ஆரம்பித்தார்கள். 1911ம் ஆண்டு சித்திரைத் திங்கள் மூன்றாம் நாள் இப்பாடசாலை மேற்குப் பக்கத்திலுள்ள கிணற்றின் அயலிலே அமைந்திருந்த "பொடியார்" என்பவரின் புகையிலைக் கொட்டிலில் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. திருவாளர் சின்னையா என்பவர் ஆசிரியராக இருந்தார். வகுப்பு ஆரம்பிக்கப்பட்ட போது முதல் மாணவனாக வைத்திய கலாநிதி வல்லிபுரம் அவர்களின் தம்பியான சிதம்பரப்பிள்ளையின் மகன் விசுவலிங்கமே சேர்த்துக் கொள்ளப்

பட்டார். (விசுவலிங்கம் என்பவர் எமது கல்லூரியின் இன்றைய பழையமாணவர் சங்கச் செயலாளர் திரு.சோமநாதன் அவர்களின் தந்தை என்பது குறிப்பிடத் தக்கது.) இவ்வகுப்புக்களின் பின் உரும்பிராய் அன்னை பெற்றெடுத்த ஐந்து லிங்கங்கள் பிறந்த வீடான பஞ்ச லிங்கம் மனையாகிய செல்லப்பா மீனாட்சிப்பிள்ளை ஆகியோரின் வீட்டு விறாந்தைக்கு இடமாற்றம் செய்யப் பட்டது. இங்கும் சிலகாலமே வகுப்புக்கள் நடைபெற்றன. பின்னர் திரு. சின்னத் தம்பர் வேலுப்பிள்ளை அல்லது திரு.ஐயம்பிள்ளை என்பவரிடம் 10 பரப்பு நிலம் இலவசமாகப் பெறப்பட்டு அங்கு கொட்டில் அமைத்து ஸ்தாபிக்கப் பட்டது. அதன் பின் இப்பாடசாலை இந்துக்கல்லூரி அதிகார சபையினரின் பரிபாலனத்திற்குக் கையளிக்கப்பட்டது. அவர்கள் கிடுகினால் வேயப்பட்ட ஒரு மண்டபத்தை அமைத்துக் கொண்டனர். அதனால் கூடுதலான பிள்ளைகள் படிக்க வசதி ஏற்பட்டது. திரு.சின்னையா உபாத்தியாயர் விலக அவரது இடத்திற்கு திரு.வியாகேசர் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டார் என்பதை அறிந்தோம்.

இப்பாடசாலை ஸ்தாபித்ததன் மூலம் திருவாளர்கள் வைத்திய கலாநிதி வைரவநாதன் வல்லிபுரம், திரு. சுவாமிநாதன், எம்.நாகலிங்கம், ஆகியோருடன் திரு.சின்னத்தம்பர் வேலுப்பிள்ளை ஆகியோர் ஒரு மாபெரும் சேவையை, ஒரு மகத்தான தும் போற்றதற்குரியதுமான சேவையை இவ்வூருக்குப் புரிந்திருக்கிறார்கள். இப்பாடசாலை "நடுவூர்ப் பகுதியில் பழுத்த நன்மரம்" போல் இவ்வூரிலுள்ள அனைத்துப்பிள்ளைகட்கும் பெரும் பயன் அளித்தது. அதுமட்டுமல்லாது சூழவுள்ள சுன்னாகம், இணுவில், கோண்டாவில், கோப்பாய், நீர்வேலி, அச்செழு, ஊரெழு, போயிட்டி, புன்னாலைக்கட்டுவன் ஆகிய ஊரிலுள்ள பிள்ளைகள் பலரும் கற்றுக் கடைந்தேற வாய்ப்பளித்திருந்தது.

அதிகார சபையினரின் பரிபால னத்தின் கீழ் பாடசாலை வந்ததும் தலைமையாசிரியராக திரு.வியாகேசர் என்பவர் நியமனம் பெற்றார். இவருக்கு ஆரம்ப காலத்தில் உதவி ஆசிரியர் களாக இருந்தவர்கள் உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த திரு.சரவணமுத்து தம்பிப்பிள்ளை, கோப்பாயைச் சேர்ந்த திரு.சுவாமிநாதன், உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த திருவாளர் அம்பலவாணர், திரு. வைரமுத்தர் ஆகியோர்கள் ஆவர். 1915ல் இங்கு ஒரு தமிழ்ப்பிரிவை ஆரம்பித்தனர். அதற்குத் தலைமை யாசிரியராக இருந்தவர் நீர்வேலியைச் சேர்ந்த பண்டிதர் வேலுப்பிள்ளை. இத்தமிழ்ப்பிரிவில் அரிவரி தொடக்கம் மூன்றாம் வகுப்பு வரை வகுப்புக்கள் இருந்தன. மாணவர்கள் தமிழ் மூன்றாம் வகுப்பு சித்தியெய்திய பின்னரே

ஆங்கிலப் பாடசாலைக்குச் சேர்க்கும் திட்டம் நடைமுறைக்கு வந்தது. அவ்வாறு சேரும் பிள்ளைகள் ஆங்கிலம் முதலாம் ஆண்டில் சேர்க்கப் பட்டனர். ஆங்கிலம் இரண்டாம் ஆண்டில் சித்தியடைந்த பின்னர் ஐந்தாம் தரத்தில் சேர்க்கப்படுவார்கள்.

அக்காலத்தில் இங்கு ஆறாம் வகுப்பு வரையிலேயே வகுப்புக்கள் இருந்தன. பிள்ளைகள் தொகை அதிகரிக்க மேலதிக ஆசிரியர்களாக கோப்பாயைச் சேர்ந்த திரு.எம்.நாகலிங்கம், திரு.இராமலிங்கம், திரு.கதிரவேலு, சரசாலையைச் சேர்ந்த வரும் ஸ்தாபகரின் மருமகனுமாகிய திரு.இளையதம்பி ஆகியோர் நியமனம் பெற்றனர். 1920ல் திரு.வியாகேசர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். அவரது இடத்திற்குச் சாவகச்சேரியைச் சேர்ந்த வரும் பயிற்றப்பட்ட ஆங்கிலத் தராதரம் பெற்றவருமான திரு.குமாரசுவாமி அவர்கள் தலைமையாசிரியரானார். இவரது காலத்தில் இங்கு ஏழாம், எட்டாம் வகுப்புக்கள் ஆரம்பிக்க ஆயத்தம் செய்யப்பட்டன. ஆனால் கட்டட வசதி போதாமல் இருந்தது. இதனால் வைத்தியகலாநிதி அவர்கள் மலாயன் உரும்பிராய் சங்கத்துடன் தொடர்பு கொண்டு 130அடி நீளம், 20அடி அகலம் கொண்ட ஓர் ஓடிட்ட கட்டடத்தை அமைத்துத் தரும்படி கோரிக்கை விட்டார். அதன் பயனாக கட்டடம் அமைக்கப்பட்டது. வகுப்புக்களும் தொடங்கப்பட்டன. 1923ம் ஆண்டள வில் திரு.குமாரசுவாமி அவர்கள் சாவ கச்சேரி இந்துக்கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் செல்ல, ஆங்கிலத்தராதரம் பெற்ற திரு.பி.தம்பு அவர்கள் தலைமை ஆசிரியராக நியமனம் பெற்றார். இவரது காலத்தில் 1926ம் ஆண்டு திரு.சீதா ராமன் அவர்கள் இவருக்கு சிரேஷ்ட உதவி ஆசிரியரானார். திரு.தம்பு அவர்கள் 1927ம் ஆண்டு இடமாற்றம் செய்யப்பட்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்குச் செல்ல, இவரது இடத்திற்கு திரு.சீதாராமன் தலைமையாசிரியராக நியமனம் பெற்றார். இவர் இந்தியாவின் பாண்டிக் கொடுமுடியைப் பிறப்பிட மாகக் கொண்ட பிராமண குலத்தவர். யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் ஆசிரியராகக் கடமை புரிந்தவர். இவரது காலத்தில் எட்டாம் வகுப்பு "E.S.L.C" என அழைக்கப்பட்டது. இவரின் திறமையான நிர்வாகத்தாலும், ஆங்கில அறிவினாலும் மாணவர்களை சனி, ஞாயிறு தினங்களிலும் அழைத்து ஆங்கிலக் கல்வியைப் போதித்த மையால் மாணவர் பலர் இங்கு வந்து சேர்ந்து, அரசாங்க உத்தியோகத்தில் சேரக் கூடியதாக இருந்தது. 1931ல் மாணவர்களின் வரவு கூடியதால் பாடசாலையின் வடக்கு கரையோரமாகக் கிடுகினாலே வேயப்பட்ட நீண்ட கட்டடமொன்று அதிகார சபையினாலே அமைக்கப்பட்டது. அதன் கிழக்குப் பகுதியில் ஆரம்ப விஞ்ஞானம் கற்பிக்கும் ஆய்வுகூட அறையொன்றும்

அமைக்கப்பட்டது. 1932ம் ஆண்டில் "J.S.C" வகுப்பு கனிஷ்ட தராதரப்பத்திர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து "உரும்பிராய் இந்து ஆங்கிலப் பாடசாலை" என்ற பெயருடன் இருந்த இந்த வித்தியாசாலை "உரும்பி ராய் இந்துக்கல்லூரி" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. J.S.C வகுப்பில் சித்தி யெய்திய மாணவர்கள் அரசாங்கத்திலும் வேறு துறைகளிலும் வேலைவாய்ப்பைப் பெறும் தகுதியுடையவர்களாயினர். 1935ம் ஆண்டு திரு.சீதாராமன் அவர்கள் காரைநகர் இந்துக்கல்லூரிக்கு மாற்றலானார். அவரது இடத்திற்கு திரு. இராசரத்தினம் தலைமை ஆசிரியராக இரண்டு ஆண்டுகள் சேவை செய்தார். பின் திரு.கனகசபை B.A பட்டதாரி தலைமை ஆசிரியராக ஒரு வருடம் கடமையாற்றிய பின் திரு.சீதாராமன் 1940ல் மீண்டும் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டார். பின் 1941ல் 'S.S.C" சிரேஷ்ட தராதரப்பத்திர வகுப்பு இங்கு ஆரம்பிக்கப்பட்டது. இதேசமயம் இக்கல்லூரி மூன்றாம் தரத்திற்கு உயர்த்தப்பட்டது. பல பட்டதாரி ஆசிரி யர்களும் இங்கு நியமிக்கப்பட்டனர். ஆங்கிலம் கற்பிப்பதில் விற்பன்னரான தனது மகன் ஸ்ரீநிவாசன் M.A பட்டதாரியை திரு.சீதாராமன் ஆங்கிலம் கற்பிப்பதற்காகவே ஆசிரியராக அமர்த்திக் கொண்டார். ஸ்ரீநிவாசன் இங்கு வரமுன் சுன்னாகம் ஸ்கந்தவரோத யாக் கல்லூரியில் அதிபராக இருந்தார். இவர் வந்தபின் கல்வியிலும் விளையாட்டிலும் நல்ல பெறுபேறுகளை அடையக்கூடியதாக இருந்தது. 1941ல் உதைபந்தாட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மெய்வல்லுநர் போட்டிகளும் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டன. விளை யாட்டு மைதானம் அமைப்பதற்கான மூன்று ஏக்கர் நிலம் இந்துக்கல்லூரி அதிகாரசபையினால் கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால் அது ஒரு தோட்ட நிலமாக இருந்தமையால் உடன் அதனை உபயோகத்திற்குக் கொண்டுவர முடியவில்லை. அந்நிலத்திற்கு தெற்கே இருந்த திறந்த வெளியே விளையாட்டு நிலமாகப் பாவிக்கப்பட்டது. 1945ல் "இலவசக் கல்வித் திட்டம்" அமுலுக்கு வந்தது. அத்தோடு தமிழே போதனா மொழியாயிற்று. இதனால் மாணவர் தொகை அதிகரித்ததால் கல்லூரி வளவின் வடக்கே இரண்டு பரப்பு நிலம் விலைக்கு வாங்கப்பட்டு, ஒரு நீண்ட கிடுகுக் கொட்டில் அமைக்கப்பட்டு அங்கு வகுப்புக்கள் நடைபெறலாயின. 1947ல் திரு.சீதாராமன் ஓய்வு பெற அவரது மகன் திரு.ஸ்ரீநிவாசன் அவர்கள் அதிபரானார். இக்காலத்தில் விளையாட்டுத்துறை மேலோங்கியது. விளையாட்டிற்கு இவரே பொறுப்பாகக் கடமை புரிந்தமையும் குறிப்பிடத்தக்கது. 1915ம் ஆண்டிலிருந்து இங்கு இயங்கி வந்த தமிழ்ப் பிரிவு 1949ல் கற்பகப் பிள்ளையார் ஆலயத்திற்கு மேற்கே அக்கோயிலுக்குச் சொந்தமான காணியில்

கட்டடம் அமைக்கப்பட்டு அங்கு இடமாற்றம் பெற்றது. இதனால் இக்கல்லூரிக்கு இடவசதியும் கூடியது. 1957ல் திரு.ஸ்ரீநிவாசன் சிலரது சூழ்ச்சியினால் இங்கிருந்து இடமாற்றம் பெற்று சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு மாற்றலானார். பின்னர் இக்கல்லூரியில் உபஅதிபராக இருந்த திரு.எம். இளையதம்பி அவர்கள் அதிபராக ஒரு வருடம் மட்டும் கடமையாற்றினார். இக்கா லாத்தில் "ஆசிரியர்சங்கம்" என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இதன் செயலாளராக எமது ஊரைச் சேர்ந்த வனும், இக்கல்லூரியின் உதவி ஆசிரியருமான திரு.செ.ஐயாத்துரை அவர்கள் நியமிக்கப்பட்டு செயற் பட்டார். திரு.எம்.இளையதம்பி அவர்கள் 1957ன் இறுதியில் காரைநகர் இந்துக்கல்லூரிக்கு மாற்றப்பட்டு இவரது இடத்திற்கு திரு.அ.வைத்திலிங்கம்-(B.A,B.Sc) அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். இவர் ஒரு கணித மேதை, சிறந்த கல்விமான், உயர்ந்த பண்பாளன். இவர் இக்கல்லூரியில் 12 வருடங்கள் அதிபராகப் பணிபுரிந்தார். இக்காலம் ஒரு பொற்காலம் எனலாம். 1958ல் "B" தரத்தில் இருந்த கல்லூரி "A" தரத்திற்கு உயர்வு பெற்றது. அப்பொ ழுது அரசாங்கம் இப்பாடசாலையில் ஒரு தொழிற்பாடம் கற்பிக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் முன்வைத்தது. அதனால் பயிர்ச்செய்கைக்காக நான்கு பரப்புக்காணி பெறப்பட்டு "விவசாயம்" என்ற ஒரு தொழிற்பாடத்தை ஆரம்பிக்கத் தொடங்கினர். இவற்றைத் தொடர்ந்து மாணவர் தொகை அதிகரித்த தால் கட்டடம் கட்ட வேண்டிய தேவை ஏற்பட்டது. அப்போது பெற்றோர், ஆசிரியர் சங்கம் ஒன்று கூடி, மலாயன் உரும்பிராய் சங்கத்துடன் தொடர்பு கொண்ட சமயம், மலேசியாவில் இருந்த ஸ்தாபகரின் மகன் திரு.செல்வநாயகமும், திரு.கந்தையா அவர்களின் மகனான திரு.சிவப்பிரகாசமும், திரு.தம்பிஐயா அவர்களும் எம்மோடு தொடர்பு கொண்டு, பாடசாலை விடுமுறை நாட்களில் பாடசாலையில் இருந்து இருவர் வந்தால் இங்கு பணம் வசூலிக்க அனுகூலமாக இருக்கும் எனக் கடிதம் எழுதினார். அதனைத் தொடர்ந்து அதிபர் திரு.அ.வைத்திலிங்கம் அவர்களுடன் திரு.இலகுப்பிள்ளை கந்தையா அவர்களும் மலேசியா சென்றார். அதே நேரம் உள்ளூரில் பணம் சேகரிப்பதற்காக உபஅதிபராக இருந்த திரு.வைத்தியநாதன், ஆசிரியர்களான திருவாளர்கள் ஐயாத்துரை, கனகலிங்கம், சபாநாயகம் ஆகிய நால்வரும் சுற்றுப்பயணம் சென்றனர். மலேசியா சென்றவர்களும் ஒரு தொகைப் பணத்துடன் வர. இவர்களும் ஒரு தொகைப்பணத்தோடு மீண்டனர். இத்துடன் அப்போது இப்பாடசாலையில் கல்வி கற்பித்துக் கொண்டிருந்த ஆசிரியர்களின் அரைமாதச் சம்பளத் தையும் ஒன்று சேர்த்து இப்போது

வடக்குப்பக்கம் இருக்கும் மேல்மாடிக் கட்டடம் உருவாக்கப்பட்டது.

இக்கட்டடம் கட்டிப் பூர்த்தியாகிய பின் 1961ம் ஆண்டு இக்கல்லூரி பொன்விழாவைக் கொண்டாடும் காலம். ஆனால் 1960இல் அரசாங்கம் பாடசாலைகளைத் தம்வசம் ஆக்கிக் கொண்டதால் ஊர்மக்களிடையே ஒரு மனமாற்றம் ஏற்பட்டது. இதனால் அவர்களே எல்லாம் கொண்டாட வேண்டும், தாம் ஒரு உதவியும் செய்ய வேண்டிய தேவையில்லை என்பதே அம்மாற்றமாகும். இதனால் பொன் விழாவை பொன்மயமான விழாவாகக் கொண்டாட முடியாமற் போனது. எனவே நிறுவிய மண்டபத்திற்குப் "பொன் விழா மண்டபம்" எனப் பெயர் சூட்டப்பட்டது. இதன் பின்னர் கட்டட வேலைகளுக்கும் அப்பாற்பட்ட வேலைகள் பல அவசியம் செய்ய வேண்டியிருந்ததால் முன் சேகரித்த நிதியில் மீதியிருந்த பணத்தோடு, ஆசிரியர் திரு.சோதி லிங்கம் அவர்களால் நெறிப்படுத் தப்பட்ட நாடகத்தின் மூலமும் ஒரு கதம்ப விழாவில் வசூலான பணத்தின் மூலமாகவும் ஆராதனை மண்டபம் விஸ்தரிக்கப்பட்டது. அங்கு ஒரு கலையரங்கும் அமைக்கப்பட்டது. மாணவர்களின் துவிச்சக்கரவண்டித் தரிப்பிடக் கொட்டகை ஒன்றும் அமைக்கப்பட்டது. இத்துடன் ஆண், பெண் இருபாலாருக்குமான மலசல கூடம் புனரமைக்கப்பட்டது. புதிய தளபா டங்கள், விளையாட்டு மைதானத்தின் தெற்குப்புற மதில்கள் கட்டப்பட்டன. இதே நேரம் மலாயன் உரும்பிராய் அங்கத்தவர்களின் சங்கமும் கலைக்கப் பட்டதால் அவர்களிடமிருந்த பணம் 7000 டொலரை 1960ல் எமது கல்லூரிக்கு அனுப்பி வைத்தனர். அப்பணத்தின் மூலம் நிர்வாக மண்டபம் அமைக் கப்பட்டதுடன் அக்கட்டடத்துக்கு "மலாயன் உரும்பிராய் சங்க மண்டபம்" எனப் பெயர் சூட்டப்பட்டு 1965ம் ஆண்டில் வல்லிபுரம் அவர்களின் மகன் செல்வநாயகம் மூலம் திறந்து வைக்கப் பட்டது. விளையாட்டு மைதானத்திற்கு முன்பு வாங்கிய 3ஏக்கர் காணியுடன், ஊரெழுவைச் சேர்ந்த பாடசாலைப் பரிசோதகர் திரு.குணரத்தினம் அவர்களுக்குச் சொந்தமாக இருந்த எட்டுப்பரப்பு காணி கொள்வனவு செய்யப்பட்டு, மைதானத்தின் மத்தியில் அமைந்திருந்த கிணறு மூடப்பட்டு உதைபந்தாட்டத்திற்கு ஏற்ற நிலம் சீரமைக்கப்பட்டது. இத்துடன் பெண் பிள்ளைகளின் விளையாட்டுத் தேவைக்காகக் கல்லூரி வளவின் அயலில் ஏழு பரப்புக் காணி குத்த கைக்கு எடுக்கப்பட்டுச் செயற்பாடுகள் தொடங்கின. இவரது காலத்தில் பாடசாலை உதைபந்தாட்டம், கல்வி ஆகியவற்றில் சிறந்து விளங்கியதுடன் பலர் மேற்படிப்புக்காகப் பல்கலைக்கழகம் சென்றதை அவதானிக்க முடிகிறது. திரு.அ.வைத்திலிங்கம் அதிபர் அவர்கள் ஓய்வுபெற்ற பின் திரு.சச்சி

தானந்தன் அவர்கள் 1971ம் ஆண்டு அதிபராக நியமிக்கப்பட்டார். இவரது காலத்தில் G.C.E A/L வகுப்பு தக்க முறையில் இயங்க பெருமுயற்சி எடுத்து வெற்றியும் கண்டார். இத்துடன் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலையை பெண்கள் கல்லூரியாக மாற்ற முயற்சித்த போதும் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் விஞ்ஞான ஆய்வுகூடம், விளையாட்டு மைதானம் இல்லாமையால் இக்கோரிக்கை கைகூடவில்லை. பிள்ளைகள் தொகை அதிகரித்ததால் கட்டட வசதியும் தேவையாயிற்று. இதனால் வித்தியாப் பகுதியினரின் உதவியுடன் 15000/=ரூபா நிதிபெற்று விவசாயத்திற்காக வாங்கிய நிலத்தில் ஐந்து வகுப்புக்கள் வைக்கக்கூடிய ஓர் ஓட்டுக் கட்டடத்தை அமைத்தனர். அதிபர் சச்சிதானந்தன் 1974ல் ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரிக்கு அதிபராக இடமாற்றம் செய்யப்பட, உப அதிபராக இருந்த திரு.சுவாமி நாதசர்மா அதிபரானார். இவர் குறுகிய காலப்பகுதியில் மாத்திரமே அதிபராக இருந்தார். பின் இவர் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு அதிபரானார். இவர் இட மாற்றம் பெற்றுச் சென்ற பின் கொக்குவில் இந்துக்கல் லூரியில் உபஅதிபராக இருந்த திரு.தியாகராசா (B.Sc,PGDE) அதிபரானார். இவர் சிறந்த ஒரு விஞ்ஞான ஆசிரியர். இவரும் ஓர் ஆண்டு அதிபராக இருந்த பின்னர் திரு.சி.கனகலிங்கம் அதிபராக உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு நியமிக்கப்பட்டார். இவரும் ஒரு விஞ்ஞானப்பட்டதாரி. இவரது காலத்தில் பாராளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து மேற்கு மேல்மாடிக் கட்டடத்தின் 80அடி நீளக்கட்டடத்தின் கீழ்ப்பகுதி செய்து முடிக்கப்பட்டது. 1978ல் கல்லூரியை விட்டு விலகி, பலாலி ஆங்கிலப் பயிற்சிக் கலாசாலையில் உபஅதிபரானார். திரு.இ.சிவானந்தன் உப அதிபரானார். இதன் பின்னர் திரு.ச. சிவன்பாலன் மீண்டும் இக்கல்லூரிக்கு அதிபரானார். இவரது காலப்பகுதியில் முன்னர் தொடக்கப்பட்ட மேல் மாடிக்கட்டடத்தின் மேற்குப்பகுதி செய்து முடிக்கப்பட்டது. பின் 1978ல் திரு.E.சிவானந்தன் (B.A,Dip in Ed,SLAS) அதிபரானார். இவர் ஒரு சிறந்த நிர்வாகி. கல்லூரியின் கல்வி வளர்ச்சியில் மிக அக்கறையுடன் செயற்பட்டார். இவரது காலத்தில் 1982ல் கட்டட அபிவிருத்திக்காக ஓர் இசைவிழா வைக்கப்பட்டது. இவ் விழாவில் கிடைத்த பணத்துடன், கோப்பாய்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஆலாலசுந்தரம் அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவில் கிடைத்த ரூ.150,000/= ஆயிரத்துடன் மேற்குமாடி "40' X '20" நீளப்பகுதியும் கட்டிமுடித்ததுடன் ஒரு சங்கீத அறையும் அமைக்கப்பட்டது. மேற்குமாடிக்கட்டடம் நிறைவேறியதும் ஆராதனை மண்டபத்தை இடித்து ஒரு திறந்தவெளி அரங்கு ஒன்றை அமைக்கவும், குழாய் நீர் விநியோகம்,

விளையாட்டு மைதானத்தில் கிணறு அமைத்தல், வடக்கு, கிழக்குப் பகுதிக்கு மதில் அமைத்தல் போன்ற விடயங் களுடன், காவலாளிக்கான வீடு ஒன்றை அமைத்தல் போன்ற வேலைகளை இங்கிலாந்தில் இயங்கி வந்த உரும் பிராய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் மேற்படி வேலைகளுக்குத் தேவையான பணத்தை மதிப்பீடு செய்து அனுப்பும் படி கேட்ட சமயம் அப்போது பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலா ளராக இருந்த திரு.செ.ஐயாத்துரை அவர்களால் இலண்டன் பழைய மாணவர்களுக்கு அனுப்பப்பட்டது. இவரின் கோரிக்கையை ஏற்ற இலண்டன் பழைய மாணவர் சங்கம் முதலில் விளையாட்டு மைதானமதில்களைக் கட்டப் பணம் அனுப்பி வைக்கச் சம்மதம் தெரிவித்துக் கடிதத் தொடர்புகள் ஏற்பட்ட சமயம் திரு.E.சிவானந்தன் அவர்கள் பதவி உயர்வு பெற்றுச் (வித்தியாசிரியராக) சென்றுவிட்டார். இவரது காலத்தில் கல்வியிலும், விளையாட்டிலும் எமது கல்லூரி மிகவும் பிரசித்தி பெற்று விளங்கியதை நீங்கள் அறிவீர்கள்.

பின்னர் திரு.செ.சிவன்பாலன் அதிபரானார். இவரது காலத்தில் விளை யாட்டு மைதான மதில் வேலைகள் நிறைவு பெற்றது. சில மாதங்களின் பின் இலண்டனில் இருந்து பழைய மாணவர் ஒருவர் கல்லூரிக்கு வருகை தந்து விளையாட்டு மைதானத்தைப் பார்வை யிட்ட சமயம், மைதானம் பற்றைக்காடாக இருந்ததைக் கண்ணுற்று பழைய மாணவன் இலண்டன் சென்று, அங்குள்ளவர்களுக்கு விபரங்களைக் கூறியபின் பணம் அனுப்புவதை அவர்கள் நிறுத்தி விட்டார்கள். இவரது காலத்தில் 1986ல் இக்கல்லூரியின் "பவளவிழா" மிகவும் சிறப்பாக "வித்தியா மலர்" வெளியீட்டுடன் கொண்டாடப் பட்டது. இவரது காலத்தில் இயங் காமலிருந்த பழைய மாணவர் சங்கம் இயங்கியதுடன், பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்துடன் இணைத்து இவ்விழா மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டமை மேலும் ஒரு சிறப்பம்சமாகும். இவரது காலத்தில் 1987ல் இந்திய அமைதிப்படை விளை வித்த அனர்த்தத்தினால் கல்லூரி அதிபர் அலுவலகம், இரசாயன ஆய்வு கூடம், ஏனைய கட்டடங்களும் குறிப்பிடத்தக்க வகையில் மோசமாகப் பாதிக்கப்பட்டன. இக்கால நேரத்தில் கனடாவில் உள்ளவர்கள் எமது ஊர் மக்கள்படும் இன்னல்களை அறிந்து அவர்களுக்கு உதவப்பணம் அனுப்பியிருந்தார்கள். இப்பணத்தில் ரூ.35,000 மிகுதியாக இருப்பதை அறிந்த திரு.வை.இந்திரதாஸ் (இப்பகுதி கிராமசேவையாளரும், பழைய மாணவனும்) மூலம் பெறப்பட்டு எரிந்து போயிருந்த அதிபரின் காரியால யத்தையும், வடக்கு மேல் மாடியை இணைக்கும் கட்டடத்தையும் சீர் செய்து

முடித்தனர். இதேபோல் தளபாடப் பற்றாக்குறையை அகதிகள் புனர் வாழ்வுக் கழகத்தில் உபதலைவராக இருந்த திரு.அ.நல்லதம்பி அவர்கள் (எமது பழைய மாணவன், பாடசாலை அபிவிருத்திச் சங்க உப தலைவர்) ஒரு தொகை தளபாடங்களை அந்நிறுவ னத்தின் மூலம் அன்பளிப்பு செய்து வைத்ததுடன் ஓர் ஆங்கிலத் தட்டச்சுப் பொறிக் கருவியையும் பெற்றுத்தந்தார். மேலும் உரும்பிராய் கிழக்கில் வசித்த திரு.சி.சிவப்பிரகாசம் என்ற பழைய மாணவன் ஓர் அலுமாரியை அன்ப ளிப்புச் செய்தார். இதேநேரம் உரும்பிராய் கிழக்கை சேர்ந்த வன்னிய சிங்கத்தின் மருமகன் தர்மசீலன், கனடாவிலுள்ள திரு.செல்வலிங்கம் தம்பதிகளுக்கு பாடசாலையில் ஏற்பட்ட சேதங்களைச் சுட்டிக் காட்டி எழுதியதற் கமைவாக அங்கு பணம் சேகரித்து ரூ.70,000 அனுப்பி வைத்தார்கள். அப்பணத்தின் மூலம் ஒரு நவீன மயமான இரசாயன கூடம் அமைக்கப் பட்டது. இவையாவும் திரு.செ.சிவன் பாலன் அதிபராக இருந்த காலப் பகுதியிலேயே நிகழ்ந்த நினைவுகள் ஆகும். இவரது காலத்தில் பல்கலைக் கழகத்திற்குப் பல மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன், உதைபந்தாட்டத் திலும் கல்லூரி சிறந்து விளங்கியது முக்கிய அம்சமாகும். இவரது காலத்தில் கொத்தணி முறை நடைமுறைக்கு வந்தது. இவரே கொத்தணி அதிபராகவுமிருந்து செயற்பட்டார்.

திரு.செ.சிவன்பாலன் அவர்கள் இளைப்பாறிய பின், இக்கல்லூரியின் பழைய மாணவனும், அச்செழுவைப் பிறப்பிடமாகவும் கொண்ட திரு.சி.பால சுப்பிரமணியம் அவர்கள் அதிபரானார். இவரது காலம் போர்ச் சூழலில் அகப்பட்டகாலம். அப்படியிருந்தும் கல்லூரியில் பெரிய அளவில் ஒரு கலை விழாவும், புத்தகக் கண்காட்சியும் நடாத்தப்பட்டு ஒரு இலட்சம் ரூபா வரை பணம் வசூலிக்கப்பட்டது. இவரது காலத்தில் உதை பந்தாட்டம் 3 பிரிவும் J.S.S.A சென்று சம்பியன் பெற்றது. திரு.ச.சசிகுமார் அவர்களும் பொறியியல் பீடம் சென்றமையும் குறிப்பிடத்தக்கது. இவருக்கு உதவியாக இவருடன் கல்விபயின்ற திரு.சண்முகம் ஏகாம்பரநாதன் பழைய மாணவர் சங்கச் செயலாளராகவும், பாடசாலை அபிவி ருத்திச் சங்கத்தின் உபசெயலாளராகவும் இருந்து நல்ல ஒத்துழைப்பை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. 1995ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26ம் திகதி வலிகாமத்தை விட்டு இடம்பெயர்ந்து தென்மராட்சியில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியிலும், மீசாலை விக்கினேஸ் வராக் கல்லூரியிலும் எமது பாடசாலை இயங்கி வந்தமை குறிப்பிடத் தக்கது. பின் 1996.04.20ம் திகதிக்குப் பின்

மீண்டும் நாம் வலிகாமம் வந்தோம். இந் நேரத்தில் அதிபராக இருந்த திரு.சி.பால சுப்பிரமணியம் அவர்கள் வன்னிப் பெருநிலப்பரப்பிற்குச் சென்றமையால் உப அதிபராக இருந்த திரு.மா.சண் முகரத்தினம் அவர்கள் பதிலதிபரானார். இவர் பொறுப்பேற்கும் போது போர்ச் சூழலால் கல்விக் கூடக் கட்டடம் சரிந்த நிலையிலும், தள பாடங்கள் வீசப்பட்டும், உடைக்கப்பட்டும், காரியாலயப் பொருட்கள் சேதமாகியும், தொலைந்து மிருந்தது. இவர் மிகவும் சிரமப்பட்டு 3 ஆண்டுகள் இக் கல்லூரியை நடாத்தி வந்தார். இடப்பெயர்வால் மாணவர்கள் தொகையும் குறைந்தது. பலர் புலம் பெயர்ந்தும், வன்னிப் பெரு நிலப்பரப் பிற்குச் சென்றமையாலும் ஊரே வெறிச்சோடி இருந்தது. அப்படியிருந்தும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியை நாடி சங்கீதம், நடனம் ஆகிய பகுதிக்குத் தேவையான பொருட் களுடன், ஆங்கிலத்தட்டச்சு இயந்திரம் முதலியவற்றை சிறுவர் பராமரிப்பு அமைப்பு மூலம் பெற்றுக்கொண்டோம். இவரது காலத்தில் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளராக முன்னின்றுழைத்த செ.ஐயாத்துரை நோய் வாய்ப்பட்டுக் காலமானார். இவரது இடத்திற்கு உபசெயலாளராக இருந்த திரு.ச. ஏகாம்பரநாதன் செயலாளராக நிய மிக்கப்பட்டு, அதிபருடன் உற்சாகத் துடன் செயற்பட்டு, G.T.Z நிறுவனத்தி னுதவியை நாடி, அவர்களைப் பல முறை சந்தித்தும், கலந்துரையாடியும், சரிந்த கட்டடத்தை நிமிர்த்தப்பாடுபட்டார். இவரது இறுக்கமான செயற்பாட்டால் கல்வியிலும், விளையாட்டிலும் முன்னேற்றம் காணப்பட்டது. ஆனால் இவர் பல வருடம் பதிலதிபராகக் கடமையாற்ற முடியவில்லை. புதிய அதிபராக உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் அதிபராக இருந்த வரும், கல்லூரியின் பழைய மாணவரும், உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், துடிப்பான இளைஞ னுமாக இருந்த திரு.அப்பாத்துரை ஈஸ்வரநாதன் அவர்களை 1999ல் அதிபராக நியமித்தனர். அந்த நேரம் பதில் அதிபராக இருந்த திரு.ம.சண்மு கரத்தினம் அவர்களையும் இங்கேயே உபஅதிபராக இருக்கும்படி நியமித் தனர். இதை விரும்பாத பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு.ச.ஏகாம்பரநாதன் அவர்களும், உபதலைவர் திரு.அ.நல்லதம்பி அவர்களும், கல்விப்பணிப்பாளரை அவரது காரியாலயத்தில் சந்தித்து இரு வரையும் ஒரே பாடசாலையில் நீங்கள் இருக்க வைத்தால், அதனால் விபரீதங்கள் ஏற்படும் என்பதை எடுத்துக்கூறிய சமயம், திரு.ம.சண் முகரத்தினம் அவர்களை உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலைக்கு அதிபர் நியமனம் கொடுத்து இருந்த போதும் அவர் அப்பாடசாலைக்கு செல்லாமை யால், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியா

சாலைக்கு வேறு அதிபரை நியமித்தனர். திரு.ம.சண்முகரத்தினம் அவர்கள் வேறு பாடசாலைக்கு ஆசிரியராக இடமாற்றம் செய்யப்பட்டார்.

திரு.அ.ஈஸ்வரநாதன் அதிபர் பதவியைப் பொறுப்பெடுத்ததும் எல்லா அமைப்புக்களையும் புனரமைக்கும் பணியில் முதலில் தன் கவனத்தைச் செலுத்தினார். அதன் முதற்படியாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டத்தை 16.05.1999 இல் நடாத்தி புதிய நிர்வாகத்தை தெரிவு செய்தார். அதில் மீண்டும் திரு.ச.ஏகாம்பரநாதன் அவர்களே செயலாளராக நியமிக்கப்பட்டார். பொருளாளராக திரு.எஸ்.இராசேந்திரம் ஆசிரி யரும் தெரிவு செய்யப்பட்டார். இதே நேரம் இயங்காமல் இருந்த பழைய மாணவர் சங்கத்தையும் புதுப்பொலி வுடன் அமைப்பதற்காக 18.07.1999 இல் பொதுக்கூட்டம் ஒன்றைக்கூட்டி நிர்வாகத்தைத் தெரிவுசெய்திருந்தார். அதன் தலைவராக பழைய மாணவனான அதிபரே தலைவராகவும், திரு.வி. சோமநாதன் செயலாளராகவும், திரு.செ. நாகரத்தினம் அவர்கள் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டு திறம்பட செயற்பட்டு வந்துள்ளார்கள். இவர்களது பழைய மாணவர் சங்கம் இலண்டன், கனடா, பழையமாணவர்களுடன் தொடர்பு வைத்து நல்ல உதவியைப் பேணி வருவது குறிப்பிடத்தக்கது. இத்துடன் அதிபரின் முயற்சியாலும், அபிவிருத்திச்சங்க செயலாளரின் ஒன்றிணைந்த முயற்சியாலும் G.T.Z உடன் பல முறை தொடர்புகொண்டு சரிந்த பொன்விழா மண்டபத்தை நிமிர்த்தியதுடன், ஆண், பெண் மலசலகூடம் அமைப்பதற்கான கலந்துரையாடல் யாழ்ப்பாணக்கல்வி வலயத்தில் G.T.Z அனுசரணையுடன் 22.05.1999இல் இடம்பெற்றது. இத்துடன் கல்லூரி மைதானத்தில் அமைக்கப்பட்ட கிணற்று வேலை அரைகுறையாக இருந்தது. இவ் வேலைகளையும் எமது கல்லூரி பழையமாணவனும், பழைய மாணவர் சங்க உபதலை வருமான வைத்திய கலாநிதி செ.இந்திரராஜா அவர்களின் 10,000ரூபா பணஉதவியுடன் நிறைவு செய்யப்பட்டு அவராலே இக்கிணறும் திறந்து வைக்கப்பட்டது. அதேபோல் மைதானத்தில் உடைந்தமதில்களையும், முன் கேற்றையும் உரும்பிராய் அரிமாக்கழகத்தின் உதவியுடன் நிறைவு செய்யப்பட்டது. இதே போல் இப்போதைய அதிபர் பழைய மாணவர்களின் உதவி மூலம் புலமைப் பரிசில் ஒன்றையும் இப் பாடசாலையில் அறிமுகம் செய்து வைத்தார். அமரர். திரு.க.பொன்னம்பலம் ஆசிரியரின் பெயரில், இக் கல்லூரியில் கல்விபயின்ற மாணவன் திரு.க.சின்னராசா மூலம் அரங்கேற்றப்பட்டது. இவ் அதிபரின்

காலத்தில் 2000ம் ஆண்டளவில் பல மாணவர்கள் கலை, வர்த்தகப் பாடங்களில் பல்கலைக்கழகம் செல்லக் கூடிய தகுதிகளைப் பெற்றுச் சென்றார்கள். இத்துடன் G.C.E. A/L பரீட்சை எழுதுவதற்கு வேறு பாடசா லைக்கு செல்ல வேண்டி இருந்த எமது மாணவர்களை, இக்கல்லூரியிலே பரீட்சை எழுத வழிசெய்து கொடுத்தார். G.T.Z தந்த பொருள்களின் மிகுதிகளையும் அமைச்சர் K.N. டக்ளஸ் தேவானந் தாவின் அன்பளிப்பால் கிடைத்த ஒரு இலட்சம் பணத்தையும் கொண்டு கல்லூரியின் வடக்குப் பகுதியில் உள்ள 80'x20' நீளமான கவின் கலைக் கட்டடங் களைக் கட்டியதுடன், அமைச்சர் அவர்கள் மூலம் மூன்று கணினிகளும், ஓர் ஒலி பெருக்கிச் சாதனத்தையும் பெற்றுக் கொள்ள அயராது உழைத்தார். அதே போல் கல்வித்திணைக் களத்தின் உதவியுடன் AUDIO, VIDEO க்கான கட்டடம் அமைத்ததுடன் T.V ஒன்றும் கனடா பழையமாணவன் மூலம் பெறப்பட்டது. இவ் அதிபர் ஒரு வல்லவனாகச் செயற்பட்டு பல வேலைத்திட்டங்களை நிறைவேற்று வதை அறிந்த பழைய மாணவர்கள் பலர் பணத்தைப் நிரந்தர வைப்பில் வைத்து பரிசு நாளில் வட்டியை எடுத்துக் கொடுக்கும்படி பல ரூபா பணத்தினை அன்பளிப்புச் செய்தார்கள். அத்துடன் திரு.அ. நல்லதம்பி அவர்கள் மேல்நாட்டு இசைக் கருவிகளையும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் மூலம் பெற்றுக் கொடுத்தார். பல வருடங்களாக வெளிவராது இருந்த **"வித்தியா"** சஞ்சிகை 1999முதல் இன்றுவரை ஒழுங்காக வெளி வருவதும் முக்கிய அம்சமாகும். இத்துடன் கல்லூரியின் வடக்குப் பகுதியில் 80'x20' கட்ட டத்திற்கு அருகில் விவசாய ஆய்வு கூடமும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. அதே போல் ஸ்தாப கர்தினம், பரிசளிப்புவிழா ஆகியன ஒழுங்காக இடம்பெற்று வருகின்றன. பொன்விழா மண்டப மேல்மாடியில் நவீனவசதிகளுடன் நூல்நிலையம் ஒன்றும் அமைக்க முயற்சிகள் மேற் கொண்டு இப்பாடசாலையில் ஊழியராகக் கடமையாற்றிய திரு.இரத்தினம் அவர்களின் குடும்பம் மூலம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இத்துடன் இப்போது இவ் அதிபரின் முயற்சியால் மாணவர் தொகை அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. இவர் ஒரு வல்லவர் எனக் குறிப்பிட்டமைக்கு காரணம் G.C.E. A/L பரீட்சையில் கணிதபாடம் இல்லாமல் வீதியில் நின்ற மாணவர்களை அரவணைத்து அவர்களிற்கு G.C.E.A/L வகுப்பில் அனுமதி கொடுத்து, அவர்களுக்குக் கணித பாடத்தைப் பிரத்தியேகமாக ஊட்டு வித்து அதில் வெற்றியும் கண்டவரே இவ் அதிபர். அத்துடன் தேவையான நேரங்களில் தேவைக்கேற்ப ஆசிரியர்களைத் திணைக்களம் மூலம் பெற்று மாண

வர்களின் கல்விவளர்ச்சிக்குப் பாடுபட்டு வருகிறார். கடந்த வருடம் அதிபர் காரியாலயத்தைத் திணைக்களத்தின் நிதியுதவியுடனும் பழைய மாணவர் சங்க நிதியையும் ஒன்றிணைத்து நல்ல விஸ்தீரணமான முறையில் புனரமைக் கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. 6ம் ஆண்டிலிருந்தே கணினி அறிவு மாணவர்களுக்குப் புகட்டப்படுவது ஒரு சிறப்பம்சம் ஆகும். குளிரூட்டி வசதிகளுடன் கணினி அலகு ஒன்றும் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. அத்துடன் உடைந்து விழும் நிலையில் இருந்த பழமை வாய்ந்த ஆராதனை மண்டபத்தை அமைத்துப் புதுப்பொலிவுடன் இரண்டு கோடி ரூபா செலவில் அமைக்க அரும் பாடுபட்டுப் பலருடன் பலமுறை முயற்சிகள் மேற்கொண்டும் கைகூடாத போதும், எமது பாடசாலையின் பழைய மாணவனும் இவ்வூரைச் சேர்ந்தவரும் இலண்டனில் தொழிலதிபராக இருப்பவ ருமான திரு.கந்தசாமி தர்மகுலசிங்கம் அவர்கள் மூலம் இக்கல்லூரி நூற்றாண்டு விழா அண்மித்த நேரத்தில் தொடர்பு கொண்டு அவரது சொந்தப்பணத்தில் செய்து தர உடன்படவைத்தும், இவ்விழா இடம்பெறும் மண்டபம் அது வாக அமைவது, அதிபர் திரு.அ.ஈஸ்வர நாதன் அவர்களின் புகழை மேலோங்கச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

"வாழ்க! உரும்பிராய் இந்துக்கல்லூரி வளர்க ! மாணவர் கல்விவளம்!!"

**வரலாற்றுத் தொகுப்பு:**
**திரு.ச.ஏகாம்பரநாதன்(JP)**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்**
**யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி**

# கல்லூரிக் கட்டடங்கள்

முன் முகப்பு





முன் முகப்பு



மலாயா உரும்பிராயார் சங்க மண்டபம்




பொன்விழா மண்டபம்



மலாயா உரும்பிராயார் சங்க மண்டபத்தின் பின்பக்கம்



ஸ்ரீநிவாசன் திறந்த வெளி அரங்கு



அலுவலகக் கட்டடம்



விவசாய விஞ்ஞான ஆய்வுகூடம்



# அதிபர்களின் வரலாறு

## திரு.வை.சின்னையா (1911-1912)

முதன்முதலில் 1911ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 3ம் திகதி இக்கல்லூரி அமைந்துள்ள மேற்பக்கத்திலுள்ள கிணற்றின் அயலிலே அமைந்திருந்த "பொடியன்" என்பவரின் புகையிலைக் கொட்டிலில் முதன்முதல் சின்னையா ஆசிரியர் என்பவர் நியமிக்கப்பட்டு, இவரது வகுப்பிலே 10 மாணவர்கள் கல்வி பயில ஆரம்பித்தார்கள். இப்புகையிலைக் கொட்டிலில் சிறிது காலம் மாத்திரமே வகுப்புகள் இடம்பெற்றன. பின் பஞ்சலிங்கங்கள் பிறந்த மனையாகிய செல்லப்பா மீனாட்சிப்பிள்ளை ஆகியோரின் வீட்டு விறாந்தையில் வகுப்புகள் ஆரம்பமாகியது. இந்த நேரத்தில் திரு.சின்னத்தம்பர் வேலுப்பிள்ளை என்பவரிடம் 10 பரப்பு நிலம் இலவசமாகப் பெறப்பட்டு, அந்நிலத்தில் கொட்டில்கள் அமைத்து கிடுகுகளால் வேயப்பட்ட ஒரு பெரிய மண்டபத்தை அமைத்துக் கொண்டதினால் கூடுதலாக பிள்ளைகள் சேர்ந்து படிக்க வசதிஏற்பட்டது. திரு.சின்னையா உபாத்தியார் விலக அவ்விடத்திற்கு வியாகேசர் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

## திரு.தி.வியாகேசர் (1912-1918 )

அதிகாரசபையின் பரிபாலனத்தின் கீழ் பாடசாலை வந்ததும் தலைமை ஆசிரியராக திரு.வியாகேசர் என்பவரை நியமித்தனர். இந்தியாவில் F.A பரீட்சையில் சித்தியடைந்தவர். இந்தியப் பாணியில் ஆடை அணிபவர். கொடுக்கு கட்டி, மூடு மேலங்கி (Close Coat) அணிபவர். தலைப்பாகை வைத்துக் கொள்பவர். இவரது பிறந்த இடம் நல்லூர். அங்கிருந்து குதிரை வண்டிலில் வருவார். இவரது காலத்திலே இப்பாடசாலையில் 1915ம் ஆண்டு ஒரு தமிழ்ப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. இவர் 1920ம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றார்.

## திரு.ச.குமாரசுவாமி (1918-1924)

திரு.ச.குமாரசுவாமி அவர்கள் சாவகச்சேரியைச் சேர்ந்தவர். இவர் ஒரு பயிற்றப்பட்ட ஆங்கிலத்தராதரம் பெற்றவர். தலைமை ஆசிரியராக இக்கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். இவர் "CADET" போர்ப் பயிற்சி பெற்றவர். மிகவும் சுறுசுறுப்பானவர். உரும்பிராயிலே வீடு ஒன்றை வாடகைக்குப் பெற்று குடும்பத்துடன் வாழ்ந்தார். இவர் குதிரையிலேயே பாடசாலைக்கு வருவார். இவரது காலத்தில் இப்பாடசாலையில் ஏழாம், எட்டாம் வகுப்புக்கள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டன. பின்னர் இவர் 1923ம் ஆண்டு சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டார்.

## திரு.தம்பு (1924-1927)

திரு.பி.தம்பு அவர்கள் இக்கல்லூரிக்கு 1924 இல் அதிபரானார். இவர் போயிட்டியை சேர்ந்தவர். திருமணம் நீராவியடியில் செய்தமையால் அங்கு வசிப்பிடமாகக் கொண்டார். ஆரம் பத்தில் மாட்டுவண்டியில் பாடசாலைக்குவரும் வழக்கம் உடையவராக இருந்தார். பின் துவிச்சக்கரவண்டியில் வரும் வழக்க முடையவரானார். இவர் மிகவும் கண்டிப் பானவர். 1927 இல் இவர் இடமாற்றம் பெற்று யாழ். இந்துக்கல்லூரிக்குச் சென்றார்.

## திரு.A.சீதாராமன் (1927-1930) (1934-1944)

திரு.ஏ.சீதாராமன் 1927 ஆம் ஆண்டு உரும்பிராய் இந்து ஆங்கிலப் பாடசாலையின் அதிபரானார். இவருக்கு முதல் அதிபராக இருந்த திரு.பி.தம்பு யாழ்.இந்துக்கல்லூரிக்கு மாற்றலாகியபின் திரு.ஏ.சீதாராமன் 1926ம் ஆண்டிலேயே இப்பாடசாலையில் சிரேஷ்ட உதவி ஆசிரியராகப் பணிபுரிந்தார். இவர் பிராமண குலத்தைந் சேரந்தவர் இந்தியா வில் பாண்டிக்கொடு முடியைப் பிறப்பிட மாகக் கொண்டவர். இவர் ஒரு சிறந்த நிர்வாகி. உரும்பிராயிலே கிழக்குப் பகுதியில் வசிக்கும் திரு.செல்லப்பா வின் வீட்டில் வாடகைக்கு குடியிருந்தே தனது தொழிலை மேற்கொண்டார். இவரது காலத்தில் பாடசாலை 'ESLC" எனக் குறிப்பிடும் எட்டாம் வகுப்பு வரை கல்வி பயின்று சித்தியடைந்ததும், புகையிரத இலாகா, தபால் இலாகா, அரச லிகிதர் வேலைக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்பட்டதால், மாணவர்கள் உற்சாகமாகக் கல்விபயில ஆரம்பித்தனர். இவர் 8ம் வகுப்பிற்கு ஆங்கிலம் கற்பித்தமையும் குறிப்பிடத்தக்கது. மாணவர்களை சனி, ஞாயிறு ஆகிய தினங்களிலும் தனது வீட்டிற்கு அழைத்து ஆங்கிலத்தைக் கற்பித்தமையும் குறிப்பிடத்தக்கது. இவருக்கு இரண்டு ஆண்பிள்ளைகள் இவருடன் இருந்தனர். ஒருவர் திரு.ஸ்ரீநிவாசன், மற்றவர் திரு.கந்தசாமி. இவர் பரமேஸ்வராக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமை யாற்றியமை குறிப்பிடத்தக்கது. சீதாராமன் காலத்தில் J.S.C கனிஷ்ட தராதரப்பத்திர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. 1932 இல் இந்து ஆங்கிலப்பாடசாலை "உரும்பிராய் இந்துக்கல்லூரி" எனவும் பெயர் மாற்றப்ப ட்டமை குறிப்பிடத்தக்கது.

## திரு.ஏ.இராசரத்தினம் (1930-1932)

திரு.ஏ.சீதாராமன் காரைநகர் இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் செல்ல அவரது இடத்திற்குக் கந்தர்மடத்தைச் சேர்ந்த ஆங்கிலப் பயிற்சித்தரா தரப்பத்திரம் பெற்ற திரு.இராசரத்தினம் தலைமை ஆசிரியரானார். இரண்டு ஆண்டுகளே இப்பாடசாலையில் கடமை யாற்ற இவருக்கு வாய்ப்புக் கிடைத்தது.

## திரு.த.கனகசபை (1932-1934)

தெல்லிப்பழையைச் சேர்ந்தவரும் முன்னாள் யாழ்.இந்துக்கல்லூரி ஆசிரிய ருமான திரு.கனகசபை அவர்கள் இங்கு தலைமை ஆசிரியராக நியமனம் பெற்றார். இவர் மிகவும் சுறுசுறுப்பானவர். நல்ல நிர்வாகி. இவர் ஒரு வருடமே தலைமை ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றார்.

## திரு.S.ஸ்ரீநிவாசன் (1944-1956)

திரு.ஏ.சீதாராமன் தனது மூத்த மகனான ஸ்ரீநிவாசன் M.A. பட்டதாரியைத் தனது காலத்தில் ஆங்கில ஆசிரியராக இணைத்துக் கொண்டார். இதற்கு முன் திரு.எஸ்.ஸ்ரீநிவாசன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியில் அதிபராக இருந்தார். இவரும் தனது தந்தையுடனே உரும்பிராய் கிழக்கில் வசித்துவந்தார். இவரது காலத்தில் ஆங்கிலம், விளையாட்டு ஆகியன மேலோங்கியது. இவர் திருமணமானவர். இவரது பிள்ளைகளான ராதா, கோபால், றுக்கு, அகில் ஆகியோர் எமது பாடசாலையில் கல்வி கற்றதுடன், கோபால் உதைபந்தாட்டத்தில் தலைவராகவும், கிரிக்கெட் விளையாட்டில் வீரனாகவும் விளங்கினார். ஸ்ரீநிவாசன் அவர்களின் காலத்தில் உதைபந்தாட்டம், கிரிக்கெட், மெய்வல்லுநர் போட்டிகள் மிகவும் சிறப்பாக இடம் பெற்றதுடன் யாழ் மாவட்டத்திலேயே புகழ்பெற்று விளங்கியது. இவர் J.S.S.A உதை பந்தாட்டத்தின் போது மத்தியஸ்தம் வகிப்பதில் புகழ்பெற்றவர். இவரும் சிறந்த விளையாட்டு வீரர். மாணவர்களுடன் அன்புடன் பழகுவதுடன், ஏழைகளுக்கு இரக்கம் காட்டி, தவணைப் பணத்தைக் கூட வாங்குவதில்லை. இவரது இரக்கமான சிந்தனையால், பலர் இவரது பணத்தில் படித்து நல்ல நிலையில் இருப்பது கண்கூடு. இவரது காலத்தில் மாணவர்களின் தொகை 1500 இற்கு மேல் சென்றமை குறிப்பிடத்தக்கது. ஊரெழு, அச்செழு, நீர்வேலி, கோப்பாய், புன்னாலைக்கட்டுவன், இணுவில், அன்னங்கை ஆகிய ஊர்களில் இருந்தும் பலர் உரும்பிராய் இந்து கல்லூரியில்பயில வந்தமை குறிப்பிடத் தக்கது. இவரது காலம் ஒரு பொற்காலம் ஆகும்.

## திரு.ஆ.இளையதம்பி (1957-1957)

திரு.எஸ்.ஸ்ரீநிவாசன் மாற்றலாகிச் சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றபின் பல பிரச்சினைகளுக்கு மத்தியில் சிறிது காலம் இப்பாடசாலையின் அதிபராக இருக்க வாய்ப்புக் கிட்டியது. இவர் இப் பாடசாலையில் உபஅதிபராக இருந்தமையால் இவரை அந்தக் காலத்தில் "M.E" என அழைப்போம். இவர் ஓர் இறுக்கமான மனப்பான்மையைக் கொண்டவர். நல்ல வெண்ணிறவேட்டி, நல்ல நசனல் சால்வை அணிந்து நீராவியடி யாழ்ப்பாணத்தில் இருந்து துவிச்சக்கர வண்டியில் உரும்பிராய் வருவார். நல்ல அழகான தோற்றம் உடையவர். இவரது காலத்தில் ஸ்ரீநிவாசன் சாவகச்சேரி செல்ல,திரு.செல்லையா என்பவரையே சாவகச்சேரியில் இருந்து இந்து போட் அனுப்பியது. இவர் ஒரு B.A. பட்டதாரி ஆவார்.

## திரு.A.வைத்திலிங்கம் (1958-1970)

திரு.ஆ.இளையதம்பி அவர்கள் காரைநகர் இந்துக்கல்லூரிக்கு இடமாற்றமாகிச் சென்ற பின் 1958ம் ஆண்டு தைமாத்தில் அதிபரானார். இவர் B.A, B.Sc பட்டதாரி. இவர் எளிமையான ஓர் அதிபர், அத்துடன் இடதுசாரிக் கொள்கை உடையவர். ஏழைகளின் தோழன், நல்ல நிர்வாகி. இவர் Fort Freft என்னும் EL1203 காரிலேயே வருவார். யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் இருந்து தனது கடமையில்

கண்ணும் கருத்துமாக இருப்பவர். இவர் யாருக்கும் அடிக்க மாட்டார். இவரது காலமும் எமது ஊருக்கு ஒரு பொற்காலம் ஆகும். இவரது காலத்தில் "B" தரத்தில் இருந்து "A" தரத்திற்கு எமது கல்லூரி உயர்வடைந்தது. அத்துடன் ஓலைக் கொட்டில்கள் மாடிக்கட்டடங்களாகின. விளையாட்டு மைதானமும் சீர் செய்யப்பட்டது. பாடசாலை வளவிலே பெண்களுக்கான விளையாட்டு மைதான மும் உருவாகியது. இவர் ஒரு சிறந்த கணித ஆசான். இவரது காலத்தில் நல்ல திறமையான ஆசிரியர்கள் இக்கல்லூரியில் ஆசான்களாக இருந்தனர். விளையாட்டு ஆசிரியர்களாக திரு.இரத்தினம், திருபாலசிங்கம் ஆகியவர்களை யாழ் இந்து விலிருந்து இங்கு கொண்டு வந்த பெருமை இவரையே சாரும்.

## திரு.ப.சுவாமிநாதசர்மா (1970-1971)

1974 இல் திரு.சு.சச்சிதானந்தம் அவர்கள் இடமாற்றம் பெற்ற பின் இக்கல்லூரியில் உபஅதிபராக இருந்த திரு.ப.சுவாமி நாதசர்மா அதிபராக நியமனம் பெற்றார். இவர் முன்பே இங்கு கடமை யாற்றியமையால் எல்லோருடனும் மிக இதமாகப் பேசி பாடசாலை வேலைகளை இலகுவில் செய்து முடிக்கக் கூடிய வல்லமை உடையவராக இருந்தார். இவர் சிறிது காலம் கடமையாற்றிய பின்னர் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார்.

## திரு.சு.சச்சிதானந்தம் (1971-1973)

1972ம் ஆண்டில் இக்கல்லூரிக்கு திரு.அ.வைத்திலிங்கம் அவர்கள் ஓய்வு பெற, திரு.சச்சிதானந்தம் அவர்கள் அதிபரானார். இவரும் ஒரு துடிப்பான செயற்பாடுகளைக் கொண்ட ஒருவராக விளங்கினார். இவரது காலத்தில் 8ம் வகுப்பிற்கு மேல்தான் இயங்க வேண்டுமென திணைக்களம் சட்டம் இயற்றிய சமயம், இவர் அதை எதிர்த்து 6ம் ஆண்டிலிருந்து இயங்க வழி செய்தார். அத்துடன் பெண்களுக்கு உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலையும், ஆண்களுக்குத் தனியான உரும்பிராய் இந்துக்கல்லூரியும் இருக்க வேண்டு மெனச் சிபார்சு செய்து அப்போதைய பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கல்வி அமைச்சருக்கு வேண்டுகோள் செய்த போதிலும், சைவத்தமிழ்ப் பாடசாலையில் விஞ்ஞான ஆய்வு கூடமோ, விளையாட்டு மைதான மோ இல்லாமையால் இவர்களது கோரிக்கை நிறைவுபெறவில்லை. இருந்தும் உரும்பிராய் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் 10ம் ஆண்டு வரை இயங்கி வந்த பாடசாலையை 5ம்ஆண்டு வரை நடாத்த அனுமதித்ததால் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் மாணவர் தொகை அதிகரிக்க ஒரு காரணியாக அமைந்தது எனலாம். திரு.சச்சிதானந்தம் அவர்களின் காலத்தில் 1974ம் ஆண்டு இவர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி க்கு அதிபராக நியமனம் பெற்றுச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

## திரு.S.தியாகராசா (1974-1975)

திரு.ப.சுவாமிநாதசர்மா மாற்றலாகிச் சென்றபின் கொக்குவில் இந்துக் கல்லூரியில் உபஅதிபராகக் கடமை யாற்றிய திரு.S. தியாகராசா அவர்கள் இக்கல்லூரிக்கு அதிபராக நியமனம் பெற்றார். இவர் உரும்பிராயில் திருமணம் செய்தவர். இவரது மனைவி ஞானம்பாள் என்பவரும் எமது

கல்லூரியில் ஆசிரியராகக் கடமை யாற்றியவர். திரு.S.தியாகராசா அவர்கள் ஒரு விஞ்ஞானப்பட்டதாரியும், மிகவும் சிறப்பாக விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியரும் ஆவார். ஒரு வருடமே இங்கு அதிபராகக் கடமையாற்றியமை குறிப்பிடத் தக்கது.

## திரு.C.கனகலிங்கம் (1975-1976)

இவர் ஒரு சிறந்த விஞ்ஞான ஆசிரியர், துடிப்பானவர், விளை யாட்டுக்களிலும் ஆர்வம் கொண்டவர். நிர்வாகத்திறனும் உடையவர். இவரது காலத்தில் எமது பாடசாலையில் G.C.E A/L வகுப்பை நல்ல நிலைக்குக் கொண்டு வர முயற்சிகளை மேற்கொண்டார். இவர் பாராளுமன்ற உறுப்பினர்களின் உதவியை நாடிப்பெற்று, மேற்கு மேல்மாடிக் கட்டடத்தில் 80 அடி நீளக்கட்டடத்தின் கீழ்ப்பகுதியைச் செய்து முடித்தார். இவர் 1976 இல் மனவிரக் தியால் பாடசாலையை விட்டுச் சென்று பலாலி ஆங்கிலப் பயிற்சிக் கலாசாலையில் உபஅதிபரானார்.

## திரு.செ.சிவன்பாலன் (1976-1978) (1985-1990)

முதலில் 1976இல் அதிபராக இருந்து பின் 1985ல் திரு.சிவானந்தன் அவர்கள் இக்கல்லூரிக்கு அதிபர் நியமனம் பெற்று வந்தபின் திரு.சிவன் பாலன் மீண்டும் உபஅதிபராக இருந்தார். அதன்பின் திரு.சிவானந்தன் பதவியுயர்வு பெற்றுச் சென்ற பின் மீண்டும் எமது ஊரவரும், துடிப்பு மிக்கவரும், சிறந்த இரசாயன ஆசிரியருமான திரு.எஸ்.சிவன்பாலன் அவர்கள் அதிபரானார். இவரது காலத்தில் மிகவும் விமரிசையாகப் பவளவிழா இக்கல்லூரியில் கொண்டாடப்பட்டது. அத்துடன் கொத்தணி அதிபராகவும் செயற்பட்ட பெருமை இவரைச்சாரும். இவரது காலத்தில் யாழ்.மாவட்டத்திலே சிறந்த இரசாயனக் கூடம் எமது கல்லூரியில் திணைக்களம் மூலம் நிர்மாணிக்கப்பட்டது. அத்துடன் இவர் பல ஊரிலுள்ள தனவந்தர்களை அணுகி, பாடசாலைக்கு மேசை, கதிரை, அலுமாரி, ஆங்கில தட்டச்சுப் பொறி என்பவற்றைப் பெற்றுச் சிறந்த முறையில் கல்லூரியை நிர்வகித்து வந்தமை போற்றுதற்குரியது. இவரது மகன், மகள் ஆகியோரை எமது கல்லூரியிலே கல்வி பயிலவைத்து மருத்துவர்களாக்கிய பெருமையும் இவருக்குண்டு. இன்று யாழ் மாவட்டத்தில் புகழ்பூத்த மருத்துவராக விளங்கும் வைத்திய நிபுணர் சிவன் சுதன் இவரது புத்திரனே ஆவார்.

## திரு.இ.சிவானந்தன் (1978-1985)

திரு.இ.சிவானந்தன் அவர்கள் 1978 இல் அதிபரானார். இவர் B.A, Dip in Ed, SLEAS இவரும் ஒரு சிறந்த நிர்வாகி. கல்வி வளர்ச்சியில் மிக்க அக்கறை உடையவர். இவரது காலத்தில் கலை விழாக்கள் மூலமும், பாராளுமன்ற உறுப்பினர்களின் பன் முகப்பட்ட வரவு செலவுப் பணத்தின் மூலமும் மேற்குப் பக்க மாடிக்கட்டடம் அமைந்ததென்றால் மிகையாகாது. இவரது காலத்தில் மென்மேலும் பல அபி விருத்திகளைச் செய்ய இலண்டன் பழைய மாணவர் சங்கத்துடன் தொடர்பு கொண்டு திட்டங்களை வகுத்துக் கொண்டிருந்த

காலப்பகுதியில் திடீரென பதவி உயர்வு பெற்று கோட்டக்கல்வி அதிகாரியாகச் சென்றமை எமக்குப் பெரும் இழப்பாக நேர்ந்தது. இவர் கோப்பாய்ப் பிரதேசத்தைச் சேர்ந்தவர். ஸ்கூட்டரிலேயே பாடசாலைக்கு நேரம் காலம் தவறாது வருவார். ஒரு கண்டிப்பான அதிபர் எனக் கூறினால் மிகையாகாது.

## திரு.சி.பாலசுப்பிரமணியம் (1991-1995)

திரு.செ.சிவன்பாலன் அவர்கள் இளைப்பாறிய பின் 1991இல் இக் கல்லூரியின் பழைய மாணவனும், இக்கல்லூரியில் இருந்து கண்டிப் பல்கலைக்கழகம் சென்று, ஒரு சிறந்த B.A பட்டதாரியாகப் பட்டம் பெற்ற திருபால சுப்பிரமணியம் அவர்கள், இக் கல்லூரியின் அதிபராகக் கடமையை ஏற்றுக்கொண்டார். இவர் எமது அயல் ஊரான அச்செழுவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது காலத்தில் பல கலை நிகழ்வுகளை நடாத்தி, பணம் சேகரித்ததுடன் பெரிய அளவில் புத்தகக் கண்காட்சியையும் இங்கு நடாத்தியமை குறிப்பிடத்தக்கது. இது மாத்திரமல்ல இவரது காலத்திலேயே முதன் முதல் தாபகர் தினவிழா 29.06.1994ம் ஆண்டு கொண்டப்பட்டது. இவ்விழாவும் பெரும் விமரிசையாகத் திறந்த அரங்கில் இரவு இடம் பெற்றது. அத்துடன் எமது கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் கிணறு நீர் வரக்கூடிய அளவிற்கு வெட்டப் பட்ட சமயம் நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழலால் இடம் பெயர்வு ஏற்பட்டது. இவரும் ஒரு கொத்தணி அதிபராக இருந்ததுடன், இவரது காலத்திலேயே முதன்முதல் "ஆசிரியர் தினமும்" கொண்டாடப்பட்டது சிறப்பம் சமாகும். 1995ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இடப்பெயர்வின் பின் இக்கல்லூரி சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியிலும், மீசாலை திருநாவுக்கரசு மகாவித்தியா லயத்திலும் இயங்கும் போது அதிபராக இருந்தார். பின் தென்மராட்சியில் ஏற்பட்ட போர்ச் சூழலால் இடப்பெயர்வு ஏற்பட்டதால் 1996 சித்திரையில் வன்னிப் பிரதேசம் சென்றுவிட்டார்.

## திரு.மா.சண்முகரட்ணம் (1996-1999)

1996ம் ஆண்டு வைகாசி மாதம் இடப்பெயர்வின் பின் மீண்டும் எமது பாடசாலைக்கு வரக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. அப்போது அதிபர் திருபாலசுப்பிரமணியம் அவர்கள் வன்னிப் பெருநிலம் சென்றமையால் உபஅதிபராக இருந்த திருமாரிமுத்து சண்முகரத்தினம் அவர்களை பதில் அதிபராகத் திணைக்களம் நியமித்தது. இவர் இங்கு வரும்போது பாடசாலை போர்ச்சூழலில் அகப்பட்டு பொன்விழா மண்டபம் சாய்ந்த நிலையிலும் அலுவலகத்தில் உள்ள பொருட்கள் சூறையாடப்பட்டு, எரிந்த நிலையிலும், கதிரை மேசைகள் இல்லாத நிலையிலும் மிகவும் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் பதவியைப் பொறுப்பேற்றார். இவருக்குத் துணையாக அப்போது திரு.இ.சிவானந்தன் கல்விப்பணிப்பாளராகவும், திரு.இரா சேந்திரம் அவர்கள் கோட்டக் கல்வி அதிகாரியாகவும் இருந்து உதவிகளைச் செய்தார்கள். அத்துடன் பல பொது அமைப்புக்களையும் அணுகி உதவிகளைக்

கேட்ட வண்ணம் இருந்தார். இவரது முயற்சிகள் பயன் அளிக்க முன் திரு.அ.ஈஸ்வரநாதன் அவர்கள் கல்லூரிக்கு அதிபராக நியமனம் பெற்றார். சண்முகரட்ணம் அதிபரை உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலைக்கு அதிபராக நியமிக்கப் பட்டும் அவர் அங்கு செல்ல விரும் பாமையால் வேறு பாடசாலைக்கு மாற்றப்பட்டார்.

## திரு.அ.ஈஸ்வரநாதன் (1999)

திரு.அப்பாத்துரை ஈஸ்வரநாதன் அவர்கள் 1999 இல் ஊர் மக்கள் பலரது வேண்டுகோளுக்கமைய, அப்போது கடமையில் இருந்த கல்விப் பணிப்பாளர் திரு.தணி காசலம்பிள்ளை அவர்களால் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியா சாலையில் இருந்து இங்கு அதிபராக நியமனம் பெற்றார். இவர் கல்லூரிக்கு வந்ததும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தைப் புனரமைத்ததுடன், அற்றுப் போயி ருந்த பழைய மாணவர் சங்கத்தை உருவாக்க பெருமுயற்சி எடுத்தார். அதில் வெற்றியும் கண்டார். இப்பழைய மாணவர் சங்கம் மூலம் கனடா, இலண்டன், பழையமாணவர் சங்கமும் எழுச்சி பெற்றது, பெற்றுக் கொண்டிருக்கிறது. இவர் பதவியேற்ற காலத்தில் இருந்து இன்றுவரை வருடா வருடம், காலம் தப்பாது ஸ்தாபகர் தினம், பரிசளிப்பு விழாக்களுடன், மறைந்து போயிருந்த கல்லூரியின் சஞ்சிகையான "வித்தியா" விற்கும் விழிப்புணர்வை ஏற்படுத்து வதில் உன்னிப்பாகச் செயற்பட்டார். இச் சஞ்சிகை இன்று காலம் தவறாது வெளிவருகின்றது. அது மாத்திர மல்ல, விளையாட்டு மைதா னத்தில் அரைகுறையாக இருந்த கிணற்றைப் பூரணமாக்கி, ஒரு விளையாட்டுப் போட்டியில் வைத்திய கலாநிதி திரு.சி.இந்திரராசா மூலம் நீரை மாண வர்களுக்கு வழங்கவும் செய்தார்.

திரு.அ.ஈஸ்வரநாதன் அவர்களும் உரும்பிராயைச் சேர்ந்தவர். இப் பாடசாலையின் பழையமாணவன், ஒரு வணிகமாணி (சிறப்புச் சித்தி) பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா, இலங்கை அதிபர் சேவை தரம் I இல் இருக்கும் உயர்ந்த அதிபர். அத்துடன் துடிப்பானவர், நினைத்த காரியத்தைச் செய்து முடிக்கும் மனஉறுதி உடையவர். நல்ல நிர்வாகி, முகாமைத்துவத் திறன் கொண்டவர். சகல ஆசிரியர்க ளுடனும் பண்பாகப் பழகும் சுபாவம் கொண்டவர்.

இவர் இக்கல்லூரிக்கு அதிபராக வந்ததும் மலாயன் பென்சனியர் மேல்மாடிக் கட்டிடத்தை G.T.Z அமைப்பின் உதவியுடன் நிமிர வைத்ததுடன், மலசலகூடங்களையும் ஆண், பெண் தனித்தனி இடங்களில் அமைக்க ஆவன செய்தார். அதே போல் பாடசாலைக்கு ஓர் ஒலி பெருக்கி, கல்லூரியின் வடக்குப் பகுதியில் உள்ள கட்டடம் அமைக்கவும், அமைச்சரை நாடிப் பெற்றுக் கொண்டார். இத்துடன் கணினிகளையும் அவர்கள் மூலம் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. இதை விட எமது பழையமாணவர் சங்கம், கனடா பழையமாணவர் சங்கம் மூலம் ஒரு தொகை கணினிகளைப் பெற்று எமது கல்லூரியில் கணினிச் செயற்பாடுகளை மேற் கொள்ளவும் வழி செய்தார். இத்துடன் Audio Video

கட்டடமும் அமைக்க முயற்சித்து வெற்றியும் பெற்றார். அதேபோல் நவீன வசதியுடன் கணினி அறை இன்று காட்சியளிக்கிறது. இவரது முயற்சியால் சிறு அறையாக இருந்த அதிபர் காரியாலயத்தை புனரமைத்து பெரிய ஒரு விஸ்தீரணமான காரியாலயமாக மாற்றி உள்ளார். விவசாய, விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்றை கல்வி அமைச்சு மூலம் பெற முயன்று வெற்றிகண்டார். அது இன்று கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. அத்துடன் மேல் மாடியில் நூல்நிலைய அறையை நல்ல கவர்ச்சியான முறையில் அமைத்து, சிறப்பாக நூல் நிலையம் இயங்க வழிவகுத்துள்ளார். இதற்கான செலவுப் பொறுப்புக்களை முன்னை நாள் பாடசாலை ஊழியர் திரு.இரத்தினம் அவர்களின் குடும்பம் பராமரித்து வருகின்றது.

மேலும் இன்று இடம்பெறும் நூற்றாண்டு விழாவைக் கொண்டா டுவதும் இவரது காலத்திலேயே ஆகும். இதற்கான எல்லா முயற்சிகளையும் இவர் கவனிப்பதுடன் பழைமைவாய்ந்த கல்லூரியின் ஆராதனை மண்டபத்தை அழித்து புதுப்பொலிவுடன் கவின்கலைக் அரங்காக மாடிக்கட்டடம் அமைக்கவும் பலமுறை அரும்பாடுபட்டும் அப்பணி இன்று ஈடேறி இருப்பதும் அவரது முயற்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

மேலும் A/L மாணவர்கள் முன்பு தமது பரீட்சையின் போது வேறு பாடசாலைக்குச் சென்று அங்கு தான் பரீட்சை எழுத வேண்டிய நிலையில் இருந்தார்கள். எமது பாடசாலை A/L பரீட்சை நிலையமாக இருக்கவில்லை. பின் இவரது முயற்சியால் இன்று எமது பாடசாலை A/L பரீட்சை நிலையமாக மாறியுள்ளது. இதன் பெருமையும் இவரையே சாரும். அத்துடன் G.C.E O/L பரீட்சையில் கணிதபாடம் இல்லாமல், வீதியில் நின்ற மாணவர்களை A/L வகுப்பில் சேர்த்து, அவர்கள் அனை வரும் A/L பரீட்சைக்குத் தோற்றும் வகையில் வழி வகுத்துக் கொடுத்த பெருமையும் இவரையே சாரும். மேலும் மாணவர் தொகை வீழ்ச்சியடைந்த நேரத்தில், தனது முயற்சியால் பல பாடசாலைகளுடனும், பெற்றோருடனும் தொடர்பு கொண்டு மாணவர்களின் எண்ணிக்கையை இன்று உயர்த்தியுள்ளார். இப்படியான அதிபரின் சேவை எமக்குத் தேவை. இவர் நோய் நொடி இன்றி வாழ கற்பகவிநாயகனைப் பிரார்த்திப்போமாக!

**வரலாற்றுத் தொகுப்பு:**
**திரு.ச.ஏகாம்பரநாதன்(JP)**

# Our College Students with Principal



# Our College Students with Principal



# Our College Students with Principal




# Our College Students with Principal




# என்னை வளர்த்த இனிய கல்லூரி பற்றிய நினைவலைகள்

கலாநிதி துரை.மனோகரன்
தமிழ்த்துறைத் தலைவர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்
பழையமாணவன்
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி



உரும்பிராய் இந்துக்கல்லூரி தனது நூற்றாண்டு விழாவினைக்கொண்டாடும் இவ்வேளையில், எனது மனமும் அக்கல்லூரியுடனான பழைய ஞாபகங்களில் ஊறித்திளைக்கிறது. அக்கல்லூரி எனது கல்வியில், எனது ஆளுமையில், எனது வாழ்க்கையில் முக்கிய பக்கங்களைத் தன்னோடு இணைத்துக்கொண்டுள்ளது. உரும்பிராய் இந்துக்கல்லூரியின் ஒரு கால கட்டமும், எனது வாழ்க்கையின் ஒரு கால கட்டமும் ஒன்றினின்றும் ஒன்று பிரிக்க முடியாத படி பின்னிப் பிணைந்துள்ளன.

உரும்பிராய் எனது சொந்த ஊராக இருந்தபோதிலும், சிறு வயதில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் படித்த பின்பு, வேறு சில பாடசாலைகளில் படித்து, 1961ஆம் ஆண்டு எனது ஒன்பதாம் வகுப்பில் உரும்பிராய் இந்துக்கல்லூரிக்கு வந்து சேர்ந்தேன். அப்போது முதல் 1969இல் பேராதனைப் பல்கலைக்கழகம் புகும் வரையும் இக்கல்லூரியிலேயே நான் படித்தேன். எனது காலத்தில் திரு.அ. வைத்திலிங்கம் உரும்பிராய் இந்துக்கல்லூரி அதிபராக இருந்தார்.

எனது இன்றைய வளர்ச்சி நிலைக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரியேகளமாக அமைந்தது என்பேன். அந்தக் காலத்தில் ஒன்பதாம் வகுப்பிலேயே கலைப்பிரிவு, விஞ்ஞானப் பிரிவு எனப்பிரித்து விடுவார்கள். எனக்குக் கலைப்பிரிவில் படிப்பதற்கே ஆசை. ஆனால், எங்களது விஞ்ஞானப்பாட ஆசிரியரே வகுப்பாசிரியராகவும் இருந்தமையால், நான் விஞ்ஞானப்பிரிவில் கற்பது நல்லது என்று கருதி, என்னை விஞ்ஞானப் பிரிவுக்கே அனுப்பிவிட்டார். சில ஆண்டுகள் விஞ்ஞானப் பிரிவில் கற்றேன். விஞ்ஞான பாடங்களில் உயிரியல் பாடம் எனக்கு மிகவும் விருப்பமான தாகவே இருந்தது. அப்போது விஞ்ஞானப்பாடங்கள் ஆங்கிலமொழி மூலமே கற்பிக்கப்பட்டன.

எங்களது விஞ்ஞானப்பிரிவை அடுத்துக் கலைப் பிரிவு வகுப்பு இருந்தது. எங்களது விஞ்ஞானப் பிரிவில் விஞ்ஞான பாடங்கள் நடந்து கொண்டிருக்கும் போது, சில வேளைகளில் கலைப்பிரிவில் நடந்து கொண்டிருக்கும். கம்பராமாயணம் கும்பகர்ணன் வதைப்படலம் சுவாரசியமாய் தமிழ் ஆசிரியரினால் கற்பிக்கப் படும். அவ் வேளைகளில் எங்களுக்கு ஏதாவது விஞ்ஞானப் பாடம் நடந்து கொண்டி

ருந்தாலும், என் செவிகள் பக்கத்து வகுப்பில் நடந்து கொண்டிருக்கும் தமிழ்ப் பாடத்திலேயே இலயித்துக் கொண்டிருக்கும். அநேகமான நாட்கள் இப்படியே கழிந்தன. கலைப்பிரிவில் கற்றிருந்தால் நேரடியாகவே தமிழ் இலக்கியங்களைச் சுவைக்க முடியுமே என்ற அங்கலாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. இனிப் பொறுப்பதில்லை என்று எனக்குள் தீர்மானம் எடுத்துக்கொண்டேன். தீர்மானம் எடுத்ததும் அதிபரிடம் சென்று, கலைப்பிரிவில் படிக்க விரும்பும் எனது விருப்பத்தைத் தெரிவித்தேன். அவர் ஆச்சரியப்பட்டார். யாராவது விஞ்ஞானப் பிரிவை விட்டுக் கலைப் பிரிவுக்குப் போவார்களா? என்ற ஆச்சரியம். ஆனாலும், "அது உம்மைப் பொறுத்தது" என்று அனுமதி தந்தார். அவரது அனுமதிக் காகக்காத்திருந்த எனது உள்ளம் மகிழ்ச்சி யில் துள்ளியது. உலகத்தையே வென்று விட்டது போன்ற ஒரு பேரானந்தம்! க.பொ.த (சாதாரண தரம்) கலைப்பிரிவு பரீட்சை எடுப்பதற்குச் சில மாதங்களே இருந்த போதிலும், நான் ஆசையோடும் வெறியோடும் படித்தேன். தமிழ் எனது முதலாவது விருப்பத்துக்குரிய பாடமாகவும், வரலாறு இரண்டாவது விருப்பத்துக்குரிய பாட மாகவும் விளங்கின.

க.பொ.த (சாதாரண தரம்) விஞ்ஞானப் பிரிவில் படித்துக் கொண்டிருந்தபோது, இருவர் எமது தமிழ் ஆசிரியர்களாக விளங்கினர். ஒருவர் "தங்கம் ரீச்சர்" என்று நாம் அன்போடு அழைக்கும் தங்கலட்சுமி ரீச்சர். இன்னொருவர் பண்டிதர் நவரத்தினம். இருவரும் கற்பிப்பதில் ஒவ்வொரு வகையில் சிறந்தவர்கள். தங்கம் ரீச்சர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற ஒரு பட்டதாரி ஆசிரியை. இப்போது கொழும்பில் வசிக்கிறார். நவரத்தினம் மாஸ்டர் ஒரு பண்டிதர். சில ஆண்டு களுக்கு முன் காலமாகிவிட்டார். இருவரும் என் மீது மிகுந்த அன்பு கொண்டவர்கள். தங்கம் ரீச்சர் ஒருமுறை "நீங்கள் பார்த்த திரைப் படம்" பற்றி ஒரு கட்டுரை எழுது மாறு எங்கள் வகுப்பில் சொன்னார். நான் அப்போது வெளிவந்திருந்த 'பாசமலர்' என்ற திரைப்படம் பற்றி விமர்சனபூர்வமான ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். அந்தக் கட்டுரையைத் தங்கம் ரீச்சர் வகுப்பில் வாசித்துக் காட்டினார். அப்போது அவர் குறிப்பிட்ட வார்த்தைகள் இப்போதும் எனது ஞாபகத்தில் உள்ளன. 'படம் பார்த்தால் மனோ கரனைப் போலப் பார்க்க வேண்டும்" என்று அவர் அப்போது குறிப்பிட்டார். அந்தக் கட்டுரையை எழுதி முடித்தபோது எனக்கு ஒரு திருப்தி ஏற்பட்டது. நான் எழுதிய முதலாவது விமர்சனக் கட்டுரை அதுவே ஆகும். அதற்கு எனது ஆசிரியை யின் பாராட்டும் கிடைத்தமை பெரு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

பண்டிதர் நவரத்தினம் மாஸ்டர் தமது தமிழ் வகுப்பில் தந்த கட்டுரையொன்றில் நான் எனது கவிதையொன்றையும் சேர்த்திருந்தேன். அவர் எனது கட்டுரையைச் சிறந்ததாகத் தெரிவுசெய்து வகுப்பில் வாசித்துக் காட்டிவிட்டு, "இந்தக் கட்டுரை சிறப்பாக எழுதப்பட்டுள்ளது. ஆனால், அவர் சேர்த்திருந்த அவரது கவிதையில் சில குறைகள் உள்ளன. அந்தக் குறைகளை நீக்கினால் எதிர்காலத்தில் நல்ல கவிஞராக வரமுடியும்" என்று குறிப்பிட்டார். பின்னர் இன்னொரு வகுப்பில் முழு நேரமும் கவிதை எழுதுவது எப்படி என்பதை விளக்கிக் கூறினார். அவர் அவ்வாறு அந்த முழு வகுப்பையும் கவிதை

வகுப்பாக மாற்றியமைத்தமை எனக்காகவே என்பது, மாணவர்களில் எனக்கு மட்டுமே தெரிந்த இரகசியம். நவரத்தினம் மாஸ்டர் எனக்காகவே வழமைக்கு மாறாகக் கவிதை வகுப்பை நடத்தினார் என்பதை நான் உணர்ந்த போது, மிகுந்த மகிழ்ச்சியும், நன்றி யுணர்வும் எனக்குள் ஏற்பட்டன. அவரால் நான் பெற்ற நன்மையை அவருக்கு உணர்த்துமுகமாகவும், எனது திறமையை எடுத்துக்காட்டுமுகமாகவும் அடுத்த கட்டுரை தரப்பட்டபோதும், அத்துடன் பொருத்தமான இடத்தில் எனது கவிதையொன்றையும் சேர்த்திருந்தேன். அப்போதும் எனது கட்டுரை பற்றிச் சிலாகித்துக் கூறினார். அதில் இடம்பெற்ற எனது கவிதை பற்றிக் குறை எதுவும் கூறவில்லை. அவர் மறை முகமாக அப்போது எனக்காகக் கவிதை வகுப்பு நடத்தி, கவிதை எழுதுவது பற்றிய தெளி வினை ஏற்படுத்தியதன் பயனை, 1973இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ச் சங்கம் நடத்திய கவிதைப் போட்டியில் முதலாம் பரிசினை வென்றபோது உணர்ந்தேன். அத்தகைய சந்தர்ப்பத்தில் பண்டிதர் நவரத்தினம் மாஸ்டரை மானசீக மாக மனத்துக்குள் நினைத்துக்கொண்டேன்.

கவிதை மாத்திரமன்றி, தமிழ் தொடர்பான பல்வேறு விடயங்களையும் அவர் மூலமாகக் கேட்டுத் தெரிந்து கொண்டேன். அவை இப்போதும் எனது பல்கலைக்கழகக் கற்பித்தலுக்கு உதவியாக இருந்து வருகின்றன. நான் பல்கலைக்கழக அனுமதி கிடைத்து, அவரிடம் விடை பெறச் சென்றபோது எனது கைகளைப் பற்றி, "சகல சிறப்புகளோடும் ஆரோக்கியத்தோடும் எதிர்காலத்தில் உயர்ந்து விளங்க வேண்டும்" என்று மனமாரவாழ்த்தினார். அந்த வாழ்த்துப் பலித்தது.

எமக்குச் சமயபாடம் கற்பித்த ஆசிரியர்களில் ஒருவரான இளையதம்பி மாஸ்டர், அப்பாடத்தைக் கற்பிக்கும் முறையே வித்தியாசமானது. அவர் அப்பாடத்தில் ஒவ்வொரு விடயத்தையோ, பாடலையோ கற்பிக்கும் முன்னர், அது பற்றிய சிறந்த விளக்கத்தை அளிப்பார். அவர் அப்படி விளக்கம் அளிக்கும்போது, உலகத்தையே கண்முன் கொண்டு வருவார். பாடல்களை அற்புதமாக விளக்குவார். ஆங்கிலத்தையும் அவ்வப்போது பயன் படுத்துவார். இவ்வாறு சமய பாடத்தை வித்தியாசமாகவும், சுவையாகவும் கற்பித்த ஆசிரியரை நான் கண்டதில்லை.

இன்னொரு சமயபாட ஆசிரியரின் வகுப்பில் ஒருநாள் சுவாரசியமான சம்பவம் ஒன்று நடைபெற்றது. சிறு குடுமி ஒன்றை வைத்திருந்தார். நெற்றியில் விபூதி, சந்தனம் துலங்கும். எப்போதும் சிரித்த மகிழ்ச்சியான முகம். அவருடைய பெயரை மறந்து விட்டேன். அவர் ஒருநாள் சாதாரண தர வகுப்பில் சமயபாடம் எடுக்கும் போது, மாணிக்கவாசகரின் போற்றித்திருவ கவலைக் கற்பித்துக் கொண்டிருந்தார். போற்றித் திருவகவலில் மனிதனின் கரு உருவாவது தொடக்கம் அவனது வளர்ச்சி முதலியவை பற்றி மாணிக்கவாசகர் அழகாகக் கூறிக் கொண்டு செல்கிறார். எமது ஆசிரியர் மனமொன்றி அழகாகக் கற்பித்துக் கொண்டிருந்தார். அவர் போற்றித் திருவகவலைக் கற்பித்துக்கொண்டிருந்த போது, அதில் இடம்பெறும் "ஈர்க்கும் இடைபோகா இளமுலை மாதர்தம் கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்" என்ற வரிகள் வந்தன. ஆசிரியர் அந்த வரிகளுக்கும் பொருள் சொல்லிப் படிப்பித்துக் கொண்டிருந்தார். உடனே

எங்கள் வகுப்பு மாணவி ஒருவர் எழுந்து, "சேர் மாணிக்க வாசகர் துறவி. அவருக்கு எப்படி இதெல்லாம் தெரியும்?" என்று கேட்டார். ஆசிரியர் இப்படியொரு கேள்வியை அதுவும் ஒரு மாணவியிடம் இருந்து எதிர்பார்க்கவில்லை. அவர் திகைத்துவிட்டார். பின்னர் சமாளித்துக் கொண்டு சிரித்தபடி, "எப்பிடியோ தெரிஞ்சு போச்சு" என்றார். வகுப்பில் பலத்த சிரிப்பொலி, இந்தக் கேள்வியைக் கேட்ட மாணவி இப்போது கொழும்பில் வசிக்கிறார்.

சுவாரசியமாகக் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்களுள் இன்னொருவர் ஐயாத்துரை மாஸ்டர். எண்கணித பாடமாகட்டும், தமிழ் ஆகட்டும், பிறபாடங்கள் ஆகட்டும், சுவையாகக் கற்பிப்பார். அவரது மேடைப் பேச்சும் அழகு தமிழில் அமைந்திருக்கும். வகுப்பில் யாரையாவது கேள்வி கேட்கத் தொடங்கும்போது, "எழுவாய்" என்பார். மாணவரோ, மாணவியோ எழுந்து நிற்பர். அவர் கேள்வியைக் கேட்பார். மாணவர் பதில் சொல்லாமல் விட்டால், "நீர் படிப்பதில் பயனில்லை. இருப்பதே செயப்படுபொருள்" என்பார்.

நான் உயர்தர வகுப்பில் படிக்கும் போது, கட்டுரைப் போட்டிகளில் பங்குபற்றுவது என்றால், அப்படியொரு மகிழ்ச்சி, சகல கட்டுரைப் போட்டிகளிலும் எனக்கு முதற்பரிசு கிடைத்தது. எனது எழுத்துத் திறனை வளர்த்துக் கொள்வதற்கு இத்தகைய போட்டிகளும் உதவியாக இருந்தன.

நான் க.பொ.த சாதாரணதரம் படித்துக் கொண்டிருந்தபோது, எதிர் காலத்தில் ஓர் ஆசிரியராக வரவேண்டும் என்ற விருப்பம்தான் இருந்தது. அப்போது எமது வரலாற்று ஆசிரியராக இருந்தவர், ஆறுமுகம் மாஸ்டர் என்பவர். ஒருநாள் வகுப்பில் கற்பித்துக் கொண்டிருந்த போது, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பற்றிய பேச்சு வந்தது. அவர் தமது வழக்கமான பாணியில் பல்கலைக்கழகம் பற்றியும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களைப் பற்றியும் குறிப்பிட்டார். "யூனிவர் சிற்றி யிலயடா பெரிய பெரிய படிப்பாளிகள் இருக்கிறாங்கள்." டாக்டர், எம்.ஏ. எண்டெல்லாம் பெரிய பெரிய பட்டங்கள் பெற்றிருப் பாங்கள். பெரிய படிப்பாளியள்" என்றெல்லாம் சொன்னார். அவர் சொன்ன விடயங்கள் சுவாரசியமாக இருந்தன. இப்படியொரு புதுஉலகம் இருப்பதை அப்போதுதான் தெளிவாக அறிந்து கொண்டேன். எனது சிறிய தந்தையார் ஒரு பட்டதாரி. அவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தபோது, அப்பல்கலைக்கழகத்துக்கு ஒருமுறை சென்றிருக்கிறேன். அப்போது எனக்குப் பத்து வயது. ஐந்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது பல்கலைக் கழகம் பற்றி அறிந்திருக்கிறேனே தவிர, அது பற்றிய விபரங்கள் தெரிந்திருக்க வில்லை. ஆனால், சாதாரணதர வகுப்பில் ஆறுமுகம் மாஸ்டர் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பற்றிக் குறிப்பிட்ட போது, அது என்னை மிகவும் கவர்ந்தது. இரகசியமாக ஓர் ஆசை இலேசாக என்னுள் துளிர்விடத் தொடங்கியது. எதிர்காலத்தில் ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளராக வர வேண்டும் என்ற ஆசை மெதுவாக என்னைப் பற்றிக் கொள்ள தொடங்கியது. அன்று மாலை ஒரு கொப்பி எடுத்து,

என்னுடைய பெயருக்கு முன்னால் Dr. என்றும், பின்னால் G.C.E (O/L), G.C.E (A/L), B.A, M.A என்றெல்லாம் எழுதத் தொடங்கினேன். இப்போது அதை நினைத்தால் சிரிப்பு வருகிறது.

க.பொ.த. உயர்தரத்தில் படித்துக் கொண்டிருந்தபோது தமிழக எழுத்தாளர் நா.பார்த்த சாரதியின் "பொன் விலங்கு" என்ற நாவலைப் படித்தேன். அந்த நாவலில் மல்லிகைப் பந்தல் என்ற கலாசாலையில் தமிழ் விரிவுரையாளராகப் பணிபுரியும் சுந்தரம் என்ற பாத்திரமே கதாநாயகன். மாண வரைக் கவரும் முறையில் விரிவுரை யாற்றும் சிறந்த தமிழ் விரிவுரையாளராக அப்பாத்திரம் படைக்கப்பட்டிருந்தது. அந்தச் சுந்தரம் என்ற பாத்திரம் என்னை மிகவும் கவர்ந்து விட்டது. நாவலைப் படித்துக் கொண்டிருந்தபோதே, எதிர்காலத்தில் நானும் சுந்தரத்தைப் போலப் பல்கலைக்கழகத்தில் ஒரு தமிழ் விரிவுரையாளராக வரவேண்டும் என உறுதியாக நினைத்துக்கொண்டேன்.

இப்படி ஓர் ஆசை என் மனத்தில் இருப்பதை அறியாமலே எனது ஆசிரியர்களும் எதிர்காலத்தில் நான் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரை யாளராக வரவேண்டும் என்ற தங்களது விருப்பத்தை என்னிடம் தெரிவித்தார்கள். அவர்களில் முக்கியமானவர் "தங்கம் ரீச்சர்" (இவர் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டி ருக்கிறேன். நான் எதிர்காலத்தில் எப்படி யாக வரவேண்டும் என்று என்னைப்பற்றி நினைத்தேனோ, அதே போலவே எனது ஆசிரியர்களும் என்னைப் பற்றி நினைக்கின்றனர் என்று அறிந்தபோது எனக்கு மிகவும் மகிழ்ச்சி யாக இருந்தது.

சிறுவயதில் இருந்தே எனக்கு எழுத்து முயற்சிகளில் ஈடுபட ஆர்வம் இருந்தது. அந்த ஆர்வம் க.பொ.த. உயர்தரம் படிக்கும்போது மேலும் அதிகரித்தது. அப்போது "பாலையின் பரிசு" என்ற நாவலை எழுதினேன். அது நூல் வடிவில் பிரசுரமான போது, அதன் வெளியீட்டு விழா உரும்பிராய் இந்துக்கல்லூரியிலேயே நடைபெற்றது. எழுத்தாளர்கள் சொக்கன், செம்பியன் செல்வன், நாவேந்தன் ஆகியோரும், அப்போதைய உரும்பிராய் இந்துக்கல்லூரி ஆசிரியர் ஐயாத்துரை மாஸ்டர், அப்போதைய கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் கதிரவேற்பிள்ளை ஆகியோரும் பேச்சாளர்களாகக் கலந்து சிறப்பித்தனர். கலையரசு சொர்ணலிங்கம் தலைமை வகித்தார். இந்த நூல் வெளியீட்டு விழாவினை அதிபரின் அனுமதியுடன் சிறப்பாகச் செய்வதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தவர், உரும்பிராய் இந்துக்கல்லூரியில் அப்போது கடமை யாற்றியவரும், எனது தமிழ் ஆசிரியருமான காலம் சென்ற பொன்னம்பலம் மாஸ்டர் என்மீது தனிப்பிரியம் கொண்டவராக அவர் விளங்கினார்.

நாவலைத் தொடர்ந்து, நான் உரும்பி ராய் இந்துக்கல்லூரியில் படித்துக் கொண்டி ருக்கும் போதே, எனது முதலாவது சிறுகதையை "மல்லிகை" என்ற சஞ்சிகையில் எழுதினேன். கவிதைகள் சிலவற்றை "விவேகி" என்ற சஞ்சிகையில் எழுதினேன். "வரலாற்றின் முக்கியத்துவம்" என்ற தலைப்பில் உரும்பிராய் இந்துக்கல்லூரிச் சஞ்சிகை யொன்றில் கட்டுரை எழுதினேன். வீரகேசரிப் பத்திரிகையில் நாடக விமர்சனம் எழுதினேன்.

நான் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஒன்பதாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த போது, எனக்கு மூத்த மாணவராகத் தினகரன் படித்துக் கொண்டிருந்தார். அப்போது அவர்தான் எழுத்து, பேச்சு ஆகிய துறைகளில் பெயர் பெற்ற மாணவராக விளங்கினார். அவர் நிகழ்ச்சிகள் செய்யும் போது, நானும் அவர் போலப் பேச்சாற்றல், எழுத்தாற்றல் கொண்ட மாணவராகக் கல்லூரியில் பெயர்பெற்று விளங்க வேண்டும் என்று ஆவல் கொண்டேன். எனது அத்தகைய ஆர்வம் காலப்போக்கில் நிறைவேறத் தொடங்கியது. நான் எனக்கு முன்மாதிரியாகக் கொண்ட அந்த மாணவர் பின்னர் ஏனோ பிரகாசிக்கவில்லை.

உரும்பிராய் இந்துக்கல்லூரியில் எனக்கு மூத்த மாணவராகத் திகழ்ந்த இன்னொருவர் எழுத்தாளர் டாக்டர் தி.ஞானசேகரன். இப்போது "ஞானம்" சஞ்சிகையின் ஆசிரியராக விளங்குகின்றார். அவர் உயர் வகுப்பு விஞ்ஞான மாணவராகப் படித்துக் கொண்டி ருந்தபோது, அவர் எழுதி மேடையேற்றி நடித்த "பொலிடோல் பொன்னர்" என்ற நகைச்சுவை நாடகம் இப்போதும் என் நினைவில் உள்ளது. இப்போது நான் அவரது "ஞானம்" சஞ்சிகையில் அடிக்கடி எழுதிக்கொண்டிருக்கிறேன்.

எனது பேச்சாற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இயல்பாகவே என்னிடம் இருந்தது. ஆனால், முதன்முதலில் உரும்பிராய் இந்துக்கல்லூரியில் க.பொ.த சாதாரணதரம் படிக்கும்போது பங்குபற்றிய மாணவர் சங்கக் கூட்டத்தில் பேசுவதற்கு முனைந்தபோது, எனக்கு வியர்க்கத் தொடங்கிவிட்டது. ஐயாத்துரை மாஸ்டர் (மாணவர் சங்கத்துக்குப் பொறுப்பான ஆசிரியர்) அப்போது 'பிளேன் ரீ" வரவழைத்துக் கொடுத்ததும் எனக்கு ஞாபகமாக இருக்கிறது. ஆனால், காலப் போக்கில் அதே கல்லூரியில் உயர்தர வகுப்பில் படிக்கும் போது பல நிகழ்ச்சிகளில் பங்குபற்றி எனது பேச்சாற்றலை வளர்த்துப் பாராட்டும் பெறமுடிந்தது. கல்லூரியின் கலை விழா நிகழ்ச்சியொன்றில் நான் பேசிய பின்னர், தலைமை வகித்த கல்லூரி அதிபர் வைத்தியலிங்கம், "துரை.மனோகரன் எமது கல்லூரியில் மாணவப் பருவத்திலேயே சிறந்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் விளங்குகின்றார்" என்று சபையினருக்குத் தெரிவித்த போது, நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன்.

நாடகத்துறையில் பெருமளவுக்கு என்னை ஈடுபடுத்திக்கொள்ளத் தொடங்கியதும், இக்கல்லூரியில் படித்தபோது தான். எனது **"பாவையின் பரிசு"** என்ற நாவல் வெளியீட்டின்பின் ஆசிரியர்கள் மத்தியிலும், மாணவர் மத்தியிலும் பெரும் வரவேற்புக் கிடைத்தது. நாவலை வாசித்த ஆசிரியர்களுள் ஒருவராகிய யோகேஸ்வரன் மாஸ்டர் (விஞ்ஞான வகுப்பில் படிக்கும்போது பௌதிக வியல் கற்பித்தவர்), "துரை மனோகரன் நாடகம் ஒண்டு எழுதும். நாங்கள் மேடையேற்றுவோம்" என்று உற்சாகம் தந்தார். "அன்பின் பேரால்" என்ற நாடகத்தை எழுதினேன். அதில் ஆச்சரியமான விடயம் என்ன வென்றால், அந்நாடகத்தில் யோகேஸ்வரன் மாஸ்டரும் நடிக்க விரும்பியமை தான். மாணவன்

எழுதிய நாடகத்தில் ஆசிரியர் நடிக்க முன்வந்தமை எனக்கு ஆச்சரியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது. ஆசிரியர், எங்களோடு ஒத்திகைகளில் கலந்து கொள்வார். அந்நாடகத்தில் தந்தை பாத்திரம் ஏற்ற அவர், எமது ஆசிரியராக இருந்தபோதிலும், நடிப்பில் திருத்தங்களைத் தயக்கத்துடன் நான் சொல்லும்போது ஏற்றுக் கொள்வார். நான் அந்தநாடகத்தில் கதாநாயகி பாத்திரத்தில் நடித்தேன். லோகநாதன் என்ற மாணவர் (இப்போது கொழும்பு இலங்கை வங்கியில் கடமையாற்றுகிறார்) கதாநாயகனாக நடித்தார். நாங்கள் இருவரும் பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்த வேளையிலும், நான் எழுதிய "சமுதாய விலங்கு" என்ற நாடகத்தில் லோகநாதன் கதாநாயகனாக நடித்தார். "அன்பின் பேரால்" உரும்பிராய் இந்துக்கல்லூரி உட்பட வெளியிடங்களிலும் பலமுறை மேடை யேற்றப்பட்டது.

அதனையடுத்து, கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கும் காலத்திலேயே "ஒரே இரத்தம்", "நெஞ்சைக் கேள்", "நால்வரில் ஒருவர்" போன்ற நாடகங்களையும் எழுதினேன். இவற்றுள் "ஒரே இரத்தம்" என்ற நாடகத்தின் மூலக்கதை, எமது அப்போதைய அரசறிவியல் ஆசிரியரான வ.மகாலிங்கம் மாஸ்டரினது. "அன்பின் பேரால்" மேடை யேற்றப்பட்டதன் பின், தம்முடைய கதையையும் நான் நாடக மாக்க வேண்டும் என அவர் விரும்பினார். அவரது விருப்பத்தை நிறைவேற்று முகமாக நான் "ஒரே இரத்தம்" நாடகத்தை எழுதி மேடையேற்றினேன். அதில் சட்டத்தரணியாக நான் நடித்தேன். வ.மகாலிங்கம் அவர்களும் நான் மதித்த சிறந்த ஆசிரியர்களுள் ஒருவர். அவர் அகால மரணம் அடைந்து விட்டார். எனது சில நாடகங்களில் எனது கல்லூரி நண்பரான குமரேஸ்வரராஜா என்பவரும் நடித்தார். அவருக்குச் சிவாஜிகணேசனைப் போல் நடிக்க வேண்டும் என்பதே பெருவிருப்பமாக இருந்தது. அவர் இளம் வயதிலேயே காலமாகி விட்டார். எனது "நெஞ்சைக்கேள்" என்ற நாடகத்தில் இடம் பெற்ற எனது பாடல்களுக்கு எமது ஆசிரியையான தங்கம் ரீச்சர் இசையமைத்தார். இந்த நாடகத்திலும் நான் நடித்தேன். இங்கு படித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் வெளியார் சிலரின் நாடகங்களுக்கும் பாடல்கள் எழுதியிருக்கிறேன். எமது கல்லூரியில் ஐயாத்துரை மாஸ்டர் இயக்கிய "தென்னவன் பிரமராயன்" (சொக்கன் எழுதியது) நாடகத்திலும் நடித்துள்ளேன்.

உயர்தர வகுப்பில் கற்கும்போது, கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் தூக்க முடியாத அளவுக்குப் பரிசுகள் கிடைத்தன. பரிசளிப்பு விழாவுக்குச் சில நாட்களுக்கு முன்னர், கல்லூரியின் மூத்த ஆசிரியர்களில் ஒருவரான வ.இளையதம்பி மாஸ்டர் என்னை அழைத்தார். "நீர் எதிர்காலத்தில் நல்லாய் வருவீர். ஆனபடியால், உமக்காக நல்ல நல்ல புத்தகங்களாக நான் தெரிவு செய்திருக்கிறன். நீர் வளர வேண்டிய மாணவன்" என்று அன்போடும், மகிழ்ச்சியோடும் சொன்னார். அவருடைய வார்த்தைகள் வீண்போகவில்லை. நல்ல மனத்தோடு அவர் வாழ்த்திய வாழ்த்தும், எனக்கேற்ற முறையில் பரிசு நூல்களைத் தேர்ந்தெடுத்தமையும் இன்றும் எனக்குப் பயன்படுகின்றன. அந்த ஆண்டில் (1968 ஆக இருக்கலாம் என்று நினைக்கிறேன்) உரும்பிராய் இந்துக்கல்லூரியின் "All Rounder" என்ற பரிசும் எனக்குக் கிடைத்தது.

இக்கல்லூரியில் சிரேஷ்ட மாணவர் தலைவராகவும் (Senior Prefect) இருந்திருக்கிறேன். அதே வேளை, உயர்தர மாணவர்மன்றத்தின் தலைவராகவும் இருந்திருக்கிறேன். அப்போது வெளியில் இருந்து சில எழுத்தாளர்களையும் எமது மாணவர் மன்றத்தில் பேசுவதற்காக அழைத்திருக்கிறேன். இரசிகமணி கனக. செந்திநாதன், டொமினிக் ஜீவா, செங்கை ஆழியான், செம்பியன் செல்வன் போன்றோர் இவ்வாறு அழைக்கப் பட்டவர்கள்.

இவ்வாறு, எனது இளமைக்கால வளர்ச்சியோடு ஒன்றிணைந்ததாக உரும்பிராய் இந்துக்கல்லூரி விளங்கு கின்றது. இக்கல்லூரியில் நான் கற்ற காலம் தொடர்பாக எனது மனத்திரையில் உள்ள பல விடயங்களை இங்கு குறிப்பிட்டிருக் கின்றேன். இத்தகைய சந்தர்ப்பத்தில், எனக்குக் கல்வி கற்பித்து, அறிவூட்டி, ஊக்கம் அளித்து, பாராட்டுக்கள் வழங்கி என்னை உயரச் செய்த உரும்பிராய் இந்துக்கல்லூரியின் அத்தனை ஆசிரியர் களையும் நான் மனத்தால் போற்றுகின்றேன். நான் கல்வித்துறையில் உயர்வதற்கும், கலை இலக்கிய விடயங்களில் ஈடுபாட்டுடன் உழைப்பதற்கும், பெயர், புகழ் பெறு வதற்கும் சிறந்த அடித்தளமாக அமைந்தது உரும்பிராய் இந்துக்கல்லூரியே என்று கூறுவதில் நான் மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகின்றேன். எனது முதல் நூலை (பாவையின் பரிசு) உரும்பிராய் இந்துக் கல்லூரியில் படிக்கும்போது எழுதி வெளியிட்ட எனக்கு, இப்போது பல நூல்களின் ஆசிரியராக விளங்கும் பாக்கியம் கிடைத்திருக்கிறது. ஆக்க இலக்கியத் துறையிலும், கலைத் துறையிலும், விமர்சனத்துறையிலும் எனது ஆரம்ப முயற்சிகள், நான் இக்கல்லூரியில் படிக்கும்போதே இடம்பெற்றன என்பதை இப்போது நினைத்துப் பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. என் காலத்தில் படித்தவர்களும், என்னோடு படித்தவர் களுமான மாணவ, மாணவிகளையும் இப்போது மகிழ்ச்சியோடு நினைத்துப் பார்க்கிறேன்.

என்னை வளர்த்து ஆளாக்கிய உரும்பிராய் இந்துக்கல்லூரி தனது நூற்றாண்டுவிழாவினைக் கொண்டாடும் இவ்வேளையில், அதன் தற்போதைய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், அபிமானிகள் அத்தனை பேருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உரும்பிராய் இந்துக்கல்லூரி என்றென்றும் புகழோடும், பெருமையோடும் உயர்ந்து ஓங்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

# நான் இக்கல்லூரியில் கல்வி கற்ற காலம்

பேராசிரியர் V.K.கணேசலிங்கம், J.P
B.Sc. (Hons cey), M.Sc. (Hawall)
Ph.D. (Lond), Hon.D.Sc. (SL)
பழைய மாணவன்
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி



உரும்பிராய் இந்துக்கல்லூரியில் கல்வி கற்ற காலம் எனது பொன்னான காலமாகும். எனது வாழ்க்கையில் எனது மகிழ்ச்சிகரமான நாட்கள் அங்கே கல்வி கற்ற நாட்கள் தான். கல்வியிற் சிறந்த ஆங்கில ஆசிரியர் அதிபராகவும், கல்வி கற்பிப்பதே தங்கள் கடமையெனக் கருதிய ஆசிரியர்கள், கடமை தவறாத சிற்றூழியர், எனது மனதைவிட்டகலாத மாணவர்கள் மாணவிகள் ஆகியோருடன் சென்று கல்வி பயின்ற நாட்களை நான் நினைவு கூருகின்றேன். எல்லோரும் என்னுடன் அன்புடனும் ஆதரவுடனும் பழகினர். அவர்கள் பண்பும் சிநேகிதத் தன்மையையும் அன்றும் இன்றும் மனதாரப் பாராட்டுகின்றேன். என்னை மேற்படிப்புப் படிப்பதற்கும், உத்தியோக தோரணையில் சிறப்படைவதற்கும் எனது உரும்பிராய் இந்துக்கல்லூரி ஒருமுக்கியபங்கை அளித்தது என்பதில் நான் பெருமை யடைகின்றேன்.

தந்தையாரின் உத்தியோக இடமாற்றம் காரணமாக வேறு கல்லூரியிலிருந்து உரும்பிராய் இந்துக்கல்லூரிக்கு 1949ம் ஆண்டளவில் வந்து சேர்ந்தேன். எனது தமையனாரும் என்னுடன் சேர்ந்து வந்து, இருவருமாக அவர் ஒன்பதாம் வகுப்பிலும் நான் எட்டாம் வகுப்பிலும் கல்வி கற்று வந்தோம். இக்கல்லூரியில் சேருவது சிரமமான காரியமாக இருக்கவில்லை. எனினும் எனது தந்தையாருக்குத் தெரிந்த அங்கு கல்வி கற்றுக்கொண்டிருந்த உடுவில் திரு.C.சுப்பிரமணியம் மூலமாக நாம் இருவரும் இக்கல்லூரியில் சேர்ந்தோம். அப்போது ஆசிரியர் வேலுப்பிள்ளை அவர்கள் அங்கு மாணவர் அனுமதி, மாணவர் சேர்க்கை போன்ற சேவைகளைச் செய்து வந்தார். மாணவர் வருகைக்காக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகுப்பறை களுக்கும் வருகைதந்து, வருகைதராத மாணவர்கள் பெயர்களையும் திகதிகளையும் எழுதிக்கொண்டு போய் வரவு பதிவு செய்யும் "இடாப்புகளில்" வரவு செய்து கணக்கிடுவார். இதனால் அவ்வகுப்பு ஆசிரியர் தமது பாட்டில் கல்வியை புகட்டுவது இலகுவாக இருக்கும். இந்தப் பாங்கு பல்கலைக்கழக மட்டத்திலே கண்டுள்ளோம். விரிவுரையாளர் கவனத்தை வேறுதிசையில் திருப்பாது, கல்வி புகட்டும் கடமையினைச் செய்யும் முறை மகத்தானது. இம்முறையினை இக்கல்லூரியில் கண்டேன்.

மாணவர்கள் பெரும்பாலும் அதே இடத்தை அல்லது அண்டிய இடத்தில் இருந்து வந்து கல்வி கற்றவர்களாகவே இருந்தனர். இதனால் நாமோ வேறு இடத்திலிருந்து வந்தவர்களாதலால் எம்மில் மிக அன்பும் அக்கறையும் காட்டி எமக்கு தேவையானவற்றைச் செய்து வந்தனர்.

பணம் படைத்தவர்கள், யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள பெரிய பிரசித்தியான கல்லூரிகளில் காரிலோ அல்லது பேரூந்துகளிலோ போய்ப்படிப்பார்கள். அவர்களும் இக்கல்லூரியிலேயே சேர்ந்து கல்வி கற்கும் நிலை ஏற்பட்டால் இக்கல்லூரியும் பிரசித்தமாகும் வாய்ப்பிருந்தது. மேலும் யாழ்ப்பாணம் போய் வரும் கஷ்டங்கள் கரைச்சல்கள் குறைந்திருக்கும்.

அங்கு படித்த மாணவர்கள் சிறந்த திடகாத்திரம் கொண்டவர்களாகவும், புத்திசாலிகளாகவும், எதற்கும் முகம் தரக்கூடியவர்களாகவும் இருந்தார்கள். அதன் காரணமாக அங்கு அன்று கல்வி கற்றவர்கள் பிற்காலத்தில் சிறந்த பதவிகளில் இருந்தார்கள்.

## வகுப்பறைகள்:-

அன்றிருந்த வகுப்பறைகள் முக்கியமாக இன்று பழமையாகவுள்ள பெரிய கட்டடத்திலேயே இருந்தன. அக் கட்டடத்தில் குறைந்தது ஆறு வகுப்புக் களுக்கு மேல் இருந்தன. வகுப்பறை களைப் பிரிப்பதற்கு பலகையாலான தடுப்புக்கள் இருந்தன. ஒரு வகுப்பறையில் கல்வி கற்பிக்கும் போது மறுவகுப்புக்களில் அச்சத்தம் கேட்கக் கூடியதாக இருந்தது. அக்காலத்தில் இது ஒரு பிரச்சினையாகவே இருந்தது. ஏனைய வகுப்பறைகள் மேற்குப் பக்கக் கட்டடங்களிலும், தெற்குப்பக்கக் கட்டடங்களிலும் இருந்து வந்தன. இக் கட்டடடங்களுக்கு நடுவில் பெரிய வெற்றிடம் இருந்தது. அங்குதான் மணி கட்டியுள்ளார்கள். வகுப்பு முடிய முடிய மணி அடிப்பார்கள். இதற்காகப் பெரிய வகுப்புக்களில் ஒரு மாணவன் இருப்பான். வகுப்புக்கள் தொடங்கும் போதும், முடியும் போதும் கடவுள் வணக்கம் செய்யப்படும். மாணவர்கள் அமைதியாக இருக்கும்படி ஒவ்வொரு கட்டடத்திலும் 2-3 மாணவர் தலைவர்கள் இருப்பார்கள். இவர்களை ஆசிரியர்களே தேர்ந்தெடுப்பார்கள். வகுப்பறையினைச் சரியாக வைத்திருப் பதற்கு வகுப்பு மாணவமுதல்வன் (Monitor) இருப்பான். அவர்களை மாணவர்களே தேர்ந்தெடுப்பார்கள். இம்மாணவத் தலை வர்கள், வகுப்பு முதல்வர்கள்" மாணவர்கள் மிகக்கண்டிப்பானவர்கள். இவர்களை ஆசிரியர்கள் நன்கு ஆதரிப்பார்கள். பிரச்சினை ஏற்படுத்தும் மாணவர்களை இவர்கள் பிடித்து வகுப்பாசிரியர்களுக்கோ அல்லது அதிபர், உபஅதிபர் ஆகியோ ருக்கோ முறைப்பாடு செய்து தண்டனை வாங்கித் தருவார்கள். கூட்டம் நடைபெறும் இடத்துக்கோ அல்லது விளையாட்டு இடத்துக்கோ மாணவர்கள் செல்லும்போது அம்மாணவர்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு போவதும் இம்மாணவர்த் தலைவர்களாவர். இப்படியான மாணவத் தலைவர்கள் காலகதியில், கல்வியிலும் நிர்வாகத்திலும் சிறந்து விளங்கி, பாரிய பொறுப்புள்ள நிலையில் வளர்ந்து விடுவார்கள். பௌதீகக் (Physics) பாடங்கள் நடைபெறும் பௌதீக வகுப்பறை/ஆய்வு கூடத்தில் பாடங்கள், செய்கைமுறை

நடாத்தப்பட்டு வந்தது. அக்கட்டடம் உடைக்கப்பட்டு விட்டது. அதனைப் பார்த்துக் கண்களில் கண்ணீர் சுரக்கிறது. இதேபோல் பௌதீக வகுப்பறைக்குப் பின்னால் இரசாயன ஆய்வுக்கட்டடம் இருந்தது. அதுவும் உடைக்கப்பட்டுள்ளது. அதற்குப் பக்கத்தில், கிணற்றுக்கு போகும் வழியில் இரண்டு வகுப்பறை இருந்தன. அவையும் அரைகுறையாக அழிந்து போயின. மாற்றங்கள் வருவது சிறந்தது. ஆனால் அதேயிடத்தில் வேறொரு கட்டடம் அமைவது சாலச்சிறந்தது.

## ஆசிரியர்கள்:-

இக்கல்லூரிக்கு ஆசிரியர்கள்தான் முதுகெலும்புகள், முக்கியமானவர்கள். இது அன்று அதிமுக்கியமாகவிருந்தது. அரசாங்கக் கல்லூரிகள் அல்லாத காரணத்தால் அதிபர்களே தமக்குத் தகுதியான ஆசிரியர்களைத் தமது கல்லூரிகளில் அமர்த்துவர். கல்லூரிக்குக் கல்லூரி போட்டியிருந்த அதிபர்களே வேண்டிய தகுதிவாய்ந்த ஆசிரியர்களைத் தேர்ந் தெடுப்பர்.

இக்கல்லூரியில் அன்று மிக அக்கறை காட்டப்படுவது ஆங்கிலம். பெரிய வகுப்புக்களுக்கு அதிபர் திரு.ஸ்ரீநிவாசனே ஆங்கிலபாடம் எடுப்பார். ஆங்கிலம் படிப்பிப்பதற்கு அவருக்கு நிகர் இல்லை. ஆணித்தரமாக, பசுமரத்தில் ஆணி ஏற்றுவது போல மாணவர் மூளையில் பதியும் வண்ணம் ஆங்கிலக்கல்வி புகட்டுவார். சோதனைக்காலம் அண்மிக்கும் போது அவர்தானாகவே இரவுநேர வகுப்புக்களும் வைப்பார். கிட்ட இருப்பவர்கள் யாவரும் இரவு 8-9 மணிவரையும் அதில் பங்குபற்றி சிறப்பாகச் சித்தியடைவர். ஆங்கிலம் SSC க்கு முக்கியபாடமாதலால் ஆங்கிலத்தில் விசேட சித்தியடைந்தால் நல்ல உத்தியோகம் எடுக்கலாம் என்ற நிலை அன்று இருந்தது. அப்படிப்பட்டவர்கள் பெரிய உத்தியோ கத்தில் அன்று சேர்ந்துள்ளார்கள். அதனால் அவர்கள் வாழ்க்கை சிறந்து விளங்கியது. இவ் அதிபர் மாற்றம் பெற்று இந்தியா பயணமானார். அடுத்ததாக எமக்கு ஆங்கிலத்தைப் படிப்பித்தவர் திரு.M. இளையதம்பி என்று ஒரு சிறந்த ஆங்கில ஆசிரியர். அவர் English Language & English literature ஆகியவற்றை படிப்பித்தார். அவர் கண்டிப்பானவர். வசன நடை ஆங்கிலம் ஆகியவற்றை படிப்பிப்பதில் சிறந்து விளங்கினார். அவர் ஏச்சுக்கும் பேச்சுக்கும் பயந்து மாணவர்கள் அவருடைய பாடங்களைக் கவனமாகப் படித்து மனனம் செய்வர். தூய வெள்ளை உடையணிந்து பிரகாசமாகக்காட்சி தருவார். இத்துடன் சைவசமயத்திலும் தமிழிலும் மிக ஈடுபாடு கொண்டவர். கடுமையானவர் என்றாலும் மாணவர்களுக்கு ஆங்கில அறிவைப் புகட்டி அவர்களை முன்னேற்று வதில் மிக்க அக்கறை கொண்டவர். இவர் கடைசிக் காலத்தில் அவுஸ்ரேலியா சென்று அங்கு அமரரானார் என்று தெரியவருகிறது.

எமக்கு கணக்குக் கற்றுக் கொடுத்தவர் V.இளையதம்பி என்பவர். இவர் ஓர் அன்பான ஆசிரியர். மாணவர்களுடன் சிறப்பாகப் பழகுவார். கோபமோ ஒரு போதும் வராது. மிகப் பண்பான ஓர் ஆசிரியர். தானும் தன் பாடும். ஆசிரியத் தொழிலும்தான் அவர் வாழ்வும், வாழ்க்கையும். மாணவர்கள் யாவரும்

அவரைப் புகழ்ந்து பேசுவார்கள். அவரது பிற்கால வாழ்க்கை எமக்குத் தெரியவரி வில்லை.

எமக்கு இரசாயனம் கற்றுக்கொடுத்த திரு.கிருஷ்ணமூர்த்தி என்னும் ஓர் இளைய ஆசிரியரை, அவர் கற்றுக் கொடுத்த முறையினை இதுவரைக்கும் எங்குமே நான் கண்டதில்லை. பல்கலைக்கழகத்திலும் இப்படியான ஒருவரைக் கண்டதில்லை.

பௌதீகம் கற்றுக்கொடுத்தவர் திரு. சக்கரையா என்னும் ஆசிரியர். இவர் மலையாளத்தைச் சேர்ந்தவர். "Refraction" என்பதை Glass ற்குள் உள்ள நீருள் ஒரு பென்சிலை நிற்பாட்டினால் தண்ணீரில் உள்ளது தண்ணீர் இல்லாதிருக்கும் பென்சில் பகுதி எந்தளவு எமது கண்ணில் காணப்படுகின்றதென்பதைக் காட்டி "Refraction" ஐ விளங்கப்படுத்தியது இன்று எமது கண்முன் நிற்கின்றது.

எனவேதான் அன்றிருந்த ஆசிரியர்கள் மனமார்ந்த பொறுப்புடன் கல்வி கற்பித்து வந்த படியால்தான் நாம் கற்று முன்னேற ஏதுவாக இருந்தது.

## விளையாட்டுப் போட்டிகள்:-


மாணவர்கள் விளையாட்டில் பங்குபற்ற வேண்டிய சூழ்நிலை இக்கல்லூரியில் அதிக அளவில் இருந்தது. விளையாட்டின் முக்கியத்தைக் கருதி அதிபர் ஸ்ரீநிவாசன் விளையாட்டுக்களத்தில் விளையாட்டு நேரத்தில் நின்று கொண்டிருப்பார். இதனால் மாணவர்களுக்கு விளையாட்டில் மிக உற்சாகமாகவிருந்தது. எல்லா விளையாட்டுக்களிலும் அதிகமான மாணவர்கள் ஆர்வம் காட்டினார்கள். கால்பந்து மிகச் சிறந்த இடத்தில் இருந்து வருவதைக் குறிப்பிடல் வேண்டும். யாழ்ப்பாணப் பாடசாலைகள் யாவும் ஒன்று சேர்ந்து All Island Football லும் பங்கு பற்றி மிக அற்புதமாக விளையாடிப் பெரிய பெயர் பெற்றிருந்தார்கள்.

## பழையமாணவர்கள்

இன்று பழைய மாணவர்களைக் காணும் போது பெருமிதம் அடைவதுண்டு. என்னைப் போல் உள்ளவர்கள் பலர் இறந்துவிட்டார்கள் அல்லது வயதுவந்தவர்களாக உடல்நலக்குறைவாகக் காணுகிறார்கள். எம்முடன் படித்த பலர் எங்கு இருக்கிறார்கள் எப்படி இருக்கிறார்கள் என்பது பற்றித் தெரிய விரும்பியும் தெரிய முடியாதுள்ளது. இப்பொழுதுள்ள பழைய மாணவர்களுக்கு எம்மைப் பற்றித் தெரியாததாக இருக்கலாம். காரணம் அவர்கள் இப்போதையவர்கள். நாமோ அப்போதையவர்கள். நாம் பழையவற்றை பற்றி கூறுகின்றோம். அவை மாற்றமில்லை. நின்று நிலைக்கும். என்றும் வாழும்.

நலமே வாழ்க!உலகம் வாழ்க!

# திருக்கேதீஸ்வர ஆலயமும் நாமும்



இலங்கையில் திருஞானசம்பந்தரினால் தேவாரப்பதிகம் பாடப்பெற்று, ஆராதனை செய்யப்பட்ட திருத்தலங்களில் ஒன்றான திருக்கேதீஸ்வரத்தில் பாலாவியின் கரைமேல் எழுந்தருளியிருக்கும் திருக்கேதீஸ்வரப் பெருமானுக்கு கடந்த 50 வருடங்களுக்கு மேலாக மகோற்சவம் நடந்து வருகின்றது. யாழ்குடாநாட்டில் பாடசாலைகளுக்குத் திருவிழாக்கள் ஒதுக்கப்பட்டு எமக்குப் "பூங்காவனத்திருவிழா" உபயம் தரப்பட்டது. இத்திருவிழாவை கல்லூரியின் சைவ-மாணவர் மன்றம் சகலரினதும் ஒத்துழைப்புடன் செய்துவருவது வழக்கம். 1966ம் ஆண்டிலிருந்து 1969ம் ஆண்டுவரை தொடர்ச்சியாக இத்திருவிழாவை, சகலரதும் ஒத்துழைப்புடன் நடத்திய இனிமையான இனிய அனுபவம் மறத்தற்கரியது. 1965ம் ஆண்டு மன்னாரில் "கொலரா நோய்" பரவியதையடுத்து மன்னார் மாவட்டத்திற்கான தொடர்பு, ஏனைய மாவட்டங்களில் இருந்து துண்டிக்கப்பட்டது. குடாநாட்டிலிருந்து எந்த ஒரு பள்ளிக்கூடமும் மகோற்சவத்தில் கலந்து கொள்ள முடியாத போது அமரர்.கு.சிவமைந்தன் மற்றும் சில மாணவர்களுடன் துவிச்சக்கரவண்டியில் (மன்னார் பஸ் ஓடாத காரணத்தால்) சென்று, கோயில் நிர்வாகத்தினர் மெச்சும் வகையில் திருவிழாவைச் செய்து, அமரர் பஞ்சலிங்கம் தனக்கே உரித்தான பாணியில் கலை நிகழ்ச்சியும் செய்து பலரது பாராட்டுக்களையும் பெற்று யா/உரும்பிராய் இந்துவின் கொடியை உயரப் பறக்க விட்டனர். திருக்கேதீஸ்வரத்தில் பூங்காவனத்திருவிழா செய்வது ஆத்மீகப் பெறுபேறுகளுக்கும் மேலாக வாழ்க்கையில் மறக்க முடியாத இனிமையான பொழுதுபோக்குகள். அவை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவை.

விளையாட்டுத்துறை ஆசிரியர் திரு.இரட்ணம் மாஸ்ரர் தலைமையில் சைவமாணவர் மன்றத்தினர், ஏனைய மாணவர்கள், மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர், ஊர்ப்பொதுமக்கள் எல்லோருமாகக் குறைந்தது 100 பேர், திருவிழாவிற்கான பொருட்களுடன் வாடகைக்கு அமர்த்தப்பட்ட இலங்கைப் போக்குவரத்து சபை பஸ்களில் செல்வோம். திருவாசகமடத்தைக் கேட்டுப் பெறுவோம். எமது திருவிழா பூங்காவனமாகையால் எட்டிய காட்டுப்பகுதியில் இருந்து இலை, குழை, பூக்கள் முதலியவற்றைக் கொண்டுவந்து அலங்காரம் செய்வோம். சில நிகழ்ச்சிகளுக்கான ஒழுங்குகளும் இருக்கும். திருவிழா முடிவடைய இரவு ஒரு மணிசெல்லும். 1967ம் ஆண்டு அந்நாள் அதிபர் அமரர்.திரு.அ.வைத்தியலிங்கம் அவர்கள் தம் மனைவி பிள்ளைகளுடன் கலந்து கொண்டு சிறப்பித்தார். அவ்வருடம் திரு. சோதிலிங்கம் ஆசிரியரின் "சங்கீத கதா கலாட்சேபம்" அணி செய்தது. திருக்கேதீஸ்வரத்தில் அந்தநாட்களில் தலைவராய் இருந்தவர் அமரர் சேர்.கந்தையா வைத்தியநாதன் அவர்கள். இவர் மிகுந்த சைவத்தமிழ்ப்பற்றாளர். அவரது வீட்டின் பெயர் "குடில்" திருவிழாக் காலங்களில் அன்னாரோடு பேசிப்பழகி, அறிவுரைகளைச் செவிமடுப்பது எமது முற்பிறவிப்பயன் வழியே.

1971ம் ஆண்டு சித்திரை 5ம் திகதி சிங்கள இளைஞர்களின் கிளர்ச்சி தொடங்கியது. அதிலிருந்து நாட்டு நிலைமை சிறிதுசிறிதாகச் சீரற்றதாகியது. தொடர்ந்து போர்க்காலச் சூழ் நிலையில் சிக்கியது. இக்காலங்களில் திருவிழா நடைபெறவில்லை. சமாதான காலத்தை அடுத்து பெருமானுக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெற்று மகோற்சவம் நடைபெற்று வருகிறது. ஆனால் எமது திருவிழாவில் சிறுமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. எமது பூங்காவனத்திருவிழா நிறுத்தப்பட்டு "கொடியிறக்கத் திருவிழா" உபயம் தரப்பட்டிருக்கிறது.

எமது திருவிழா உபயச் செலவை தட்சணை உட்பட ரூ.27,000/= வை வருடம் தோறும் தவறாது உதவி வருகிறார்கள். அந்த நாட்களில் இத்திருவிழாவை முன்னின்று நடத்தியவர்களான திரு. M.T.செல்வராசாவும், சுப்பிரமணியமும் இத்திருவிழாவை என்றைக்கும் தொய்வின்றி செய்ய வேண்டுமென்பது அவர்களது ஆவல்.

2010ம் ஆண்டு திருவிழாவிற்கு எமது கல்லூரியில் இருந்து பல மாணவர்கள் மிகுந்த கரிசனையோடு சென்று இத்திருவிழாவைச் சிறப்பாகச் செய்தார்கள். இதில் எமது கல்லூரி அதிபர் திரு.அ.ஈஸ்வரநாதன் அவர்களும் குடும்பத்தினரும் பங்குபற்றினார்கள்.

தொகுப்பு :
**செல்லையா நாகரட்ணம்**

# உரும்பிராய் இந்துக் கல்லூரியின் இனிய நினைவுகள்

திரு.எம்.ரி.செல்வராஜா
இலண்டன்
பழையமாணவன்
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி



நாம் எங்கெல்லாமோ சென்று எப்படித்தான் வாழ்ந்தபோதிலும் இனிமையான பாடசாலை நினைவுகள் இதயத்தை விட்டு அகலவதேயில்லை. பழைய நண்பர்களைச் சந்திக்கும்போது கடந்தகால வாழ்வில் நிகழ்ந்தவற்றைப் பகிர்ந்து கொண்டு மகிழ்வதில் ஓர் ஆனந்தம் இருக்கிறதே! அதற்கு விலையே கிடையாது. எனக்குத் தமிழ்மேலும், தமிழ்மண்ணின் மேலும் அளவுகடந்த பற்றுண்டு. உரும்பிராய் மக்களைக் கண்டால் ஒருவித காந்தசக்தி என்னுள் உருவெடுக்க ஆரம்பிக்கும். நாம் கல்வி கற்ற பாடசாலை கட்கும், நான் பிறந்த மண்ணிற்கும், எம் அருமை மக்களுக்கும் ஏதாவது நல்லது செய்யவேண்டும் என்று எப்போதும் என்னுள்ளே உணர்வலைகள் ஓடிக் கொண்டே இருக்கின்றன. ஏனென்றால் நானும் ஓர் உரும்பிராய் இந்துக்கல்லூரியின் மைந்தன்.

## முதல் நாள்

அது ஆண்டு 1960. அந்த நாள் எனக்கு நன்றாகவே நினைவிருக்கின்றது. எமது வீட்டிலுள்ள அனைவரது விருப்பப்படி என்னை உரும்பிராய் "இங்கிலீஸ்" பள்ளிக்கூடத்தில் சேர்க்க வேண்டும் என்பதற்காக எனது பேரனார் திரு.கா. செல்லப்பா தனது "சைக்கிளில்" முன்னாலிருத்தி அழைத்துக்கொண்டு வந்தார். வழியெல்லாம் அவரது அனுபவத்திலிருந்து வந்த ஆயிரம் புத்திமதிகளையும் கூறிக்கொண்டே வந்தார். ஆனால் எனக்கோ எதுவும் முழுமையாக மனதில் பதியவில்லை. புதிய பாடசாலைக்குப் போகிறேன், புதிய ஆசிரியர்களிடம் கல்வி கற்கப்போகிறேன், புதிய நண்பர்களைச் சந்திக்கப் போகிறேன் என்ற ஏக்கம் நிறைந்த இன்பத்தால் இதயம் படபடத்துக் கொண்டேயிருந்தது. புதிய பாடசாலையில் சேர்வதற்கான எல்லா வற்றையும் பேரனாரே செய்தார். நான் புதிதாக வாங்கி அணிந்த அரைக்காற் சட்டை, சேட்டுடன், பேனா, பென்சில், கொப்பிகளை இறுகப்பிடித்தவண்ணம் நின்றிருந்தேன். ஒருவாறு என்னை வகுப்பில் கொண்டுபோய் விட்டார்கள். நான் மற்றையவர்களைவிட சற்று உயரமாக இருந்ததினால் கடைசி வாங்கில் அமரும்படி கூறினார்கள். ஆனால் அதனை அவ்வகுப்பிலுள்ள பெரிய, அனுபவமுள்ள மாணவர்கள் ஏற்கெனவே தமதாக்கிக் கொண்டதனால் கடைசிக்கு முதல் வாங்கில் அமரும்படி பணித்தார்கள்.

முதல் வகுப்பே தமிழ்வகுப்பு. திரு.க.பொன்னம்பலம் ஆசிரியர் அவர்கள் வந்து தமிழ்ப்பாடம் கற்பிக்கும்போது என்னை ஏதோ ஒரு கேள்வி கேட்டார். ஆனால் நான் அந்தக் கேள்விக்கு பதில் தெரியாது விழித்தேன். திடீரென என் முதுகில் 'பளார்" என்று ஓர் அடி விழுந்தது. எனது கண்கள் இரண்டும் உடனே குளமாகின. ஒரு மாணவன் "இவர் இன்றுதான் பாடசாலையில் முதன்முதலாக வந்து சேர்ந்தார்" என்று அவரிடம் மெதுவாகக் கூறினான். ஆசிரியருக்கு ஒரு மாதிரியாகப் போய்விட்டது. ஆனால் தன்னைச் சமாளித்துக்கொண்டு "இன்றைக்கு முதன்முதலில் நீ என்னிடம் அடி வாங்கினாய், ஆனால் இனிமேல் ஒருநாளும் என்னிடம் அடி வாங்கமாட்டாய்" என்றார். அவர் வாக்கு பொன்வாக்காகவே இருந்தது. அந்தத் தவணை எமது வகுப்பில் தமிழ்ப் பாடத்தில் கூடிய புள்ளிகள் பெற்று அவரிடம் பாராட்டுப்பெற்றதும் என் நினைவில் இன்றும் அழியாது இருக்கின்றது.

## பிரம்படி

எமது வகுப்பில் கடைசி வாங்கில் இருந்த மாணவர்கள் எம்மைவிட வயதில் மூத்தவர்கள். அவர்கள் அங்கே படிப்பதற்காக வரவில்லை கதைப்பதற் காகவே வந்தார்கள் என்பதைப் பின்னர் தான் அறிந்துகொண்டேன். புதிதாக வெளிவந்த சினிமாப் படங்களை முதல்நாளே சென்று பார்த்துவிட்டு மறுநாள் வந்து ஒருவரிகூட விடாமல் கதைகள் கூறுவதும், நடித்துக்காட்டுவதும், பாடல்களைப் பாடுவதும், சினிமா நடிகர்கள், நடிகைகள் பற்றிய கதைகள் கூறுவதும், படமாளிகை பற்றி வர்ணனை செய்வதும், வகுப்பு மாணவிகளையும், மற்றைய மாணவிகளையும் பார்த்துக் கிண்டல் கதைகள் சொல்வதும், ஏச்சுக்கள் வாங்குவதும், ஊரில் நடக்கும் பலவகையான சுவாரசியமான கதை களைக் கூறுவதிலுமே அவர்கள் பொழு தைப்போக்கினார்கள். அவர்களிடமிருந்து நான் கற்றுக்கொண்ட அனுபவமே தனியானவை.

வகுப்பு நடக்கும்போதுதான் இவை யெல்லாம் கடைசி வாங்கில் நடைபெறும். ஆசிரியர் பார்க்காதபோது அடிக்கடி அவர்களைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கதைகேட்பதும் வழக்கமாகி விட்டது. ஆசிரியர் பாடம் நடாத்தும் போதே இப்படியென்றால் வரவில்லையென்றால் கேட்கவா வேண்டும்? ஒருநாள் ஆசிரியர் வராதபோது எமது வகுப்பு முழுவதும் போட்ட கும்மாளத்தைக்கண்ட பக்கத்து வகுப்பு ஆசிரியர் திரு.மகாலிங்கம் அவர்கள் பிரம்புடன் வந்தார். "செந்தமிழ்த்தேன்" என்ற புத்தகம் கொண்டு வராதவர்களை எழும்பும்படி கூறினார். எல்லோரும் எழுந்தோம். ஏனென்றால் அன்று அது தேவையில்லை. ஆனால் அதனை ஆசிரியருக்குக் கூற எவருக்கும் தைரியம் வரவில்லை. கையை நீட்டச் சொல்லி ஒவ்வொருவருக்கும் ஓங்கி ஒவ்வொரு அடிபோட்டார். எனக்கு விழுந்த அடி தவறி தோல்பகுதியில் வீழ்ந்தது. அதனால் ஏற்பட்ட காயம் ஆறப் பல நாட்களும் ஆனது.

## விளையாட்டு

அந்த வயதில் உதைபந்தாட்டத்தில் என்னை வெல்ல உறவினர், சுற்றத்த

வர்களில் ஒருவருமில்லை. ஆனால் இந்துக்கல்லூரியில் வந்து சேர்ந்தபோது இருந்த உற்சாகம் சில வருடங்களில் அற்றுப்போனது. வேட்டியும் உடுத்துக் கொண்டு சந்தனப்பொட்டும் போட்டுக் கொண்டு பாடசாலைக்கு வருவேன். பாடசாலை முடிந்ததும் விளையாட்டு வீரர்கள் பயிற்சி செய்வதைப் பார்த்துக் கொண்டு நிற்பேன். ஒருநாள் இரத்தினம் ஆசிரியர் என்னைப் பார்த்து "சந்தனப்பொட்டு, உனக்குப் பந்தடிக்க விருப்பமா?" என்று கேட்டார். நான் தலையைப் பலமாக ஆம்" என்று ஆட்டி னேன். "சரி, நாளையிலிருந்து வா, ஆனால் இனிமேல் வேட்டி உடுத்துக்கொண்டு வராதே" என்றும் கட்டளையிட்டார். அதன்பிறகு மீண்டும் விளையாட்டுக்களில் உற்சாகம் பிறந்தது. திரு.தர்மகுலசிங்கம் தலைமையில் இருந்த உதைபந்தாட்டக் குழுவில் நானும் ஒருவனாக விளை யாடினேன் என்பதும் மறக்கமுடியாத தொன்று. யாழ்ப்பாண முற்றவெளியில் நடக்கும் உதைபந்தாட்டக் காலங்களில் இப்படித்தான் இருக்கும்.


"ஊரே திரண்டுவரும் உணர்ச்சிகளும் கூடவரும்
வீராவேசம்கொண்டு வாய்ப்பேச்சுக்கள் எழும் - வீரமுடன்
வென்றால் சினிமாவும் வீடுதிரும்பும் வேளைகளில்
நன்றாய் உதையும் விழும்."

"Table Tennis" பாடசாலையில் ஆரம்பித்த போது அதிலே எனக்கு மிகவும் ஆர்வம் பிறந்தது. பலர் வார இறுதி நாட்களில் வந்து பாடசாலையில் விளையாடுவோம். நண்பர் திரு.நாகரத்தினம் அவர்களும் வருவார். இருவருமாக பலமணி நேரம் விளையாடுவோம். அந்த வருடம் மாணவர் களிடையே Table Tennis போட்டி நடாத்தப்போவதாகவும் அறிவித்தார்கள். பல நாட்களாகச் செய்த பயிற்சி எனக்குக் கைகொடுத்தது. அந்த வருடமும் அதற்கடுத்த வருடமும் வெற்றிக் கிண்ணம் எனக்கே கிடைத்தது. வருடாந்த விளையாட்டுப் போட்டிகளில் வெள்ளிக் கிண்ணம் பெறவேண்டும் என்ற எனது ஆசை நிறைவேறாதபோது இந்தப் போட்டியில் எனக்கு இரண்டு தடவைகள் கிடைத்தமை அளவில்லாத மகிழ்வையும் தந்தது.

எனது மனைவியும் அப்போது கல்லூரி வலைப்பந்தாட்டக்குழுவில் ஒரு வீராங் கனையாக விளங்கினார். அவரும் எல்லோரையும் விட உயரமானவர் என்பதனால் வரிசையாகச் செல்லும் போது கடைசியாகத்தான் செல்வார். போட்டி நாட்களில் எமது வகுப்பிற்கு அருகா மையால் நடந்து செல்லும்போது பலமுறை கண்டிருக்கிறேன். ஆனால் அவர் நான் பார்க்கும்போது கண்டாரா? என்று இதுவரையில் கேட்கவில்லை.

## நாடகம்

எனக்கு சிறுவயதிலிருந்தே ஒரு டாக்டராக வரவேண்டும் என்கிற ஆவல் தலைதூக்கி நின்றது. ஆனால் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் பெற்ற பெறு பேறுகள் போதாமையால் அதன்பிறகு படிப்பில் ஆர்வம் குறைந்தது. க.பொ.த உயர்தர வகுப்புப் படித்துக் கொண்டிருந்த



19 வயதில் நான் சிவனாகப் பாத்திரம் ஏற்ற போது...

போது விளையாட்டிலும், நாடகங்கள் நடிப்பதிலும் ஆர்வம் அதிகமாக இருந்தது. பாலா அண்ணரும் அழகாக "மேக்கப்" செய்வார். மாணவ எழுத்தாளன் துரை.மனோகரனின் பல நாடகங்களை எமது பாடசாலையிலும், "உரும்பிராய் கலை வளர்ச்சிக் கழகம்" என்ற ஒரு கழகத்தை ஆரம்பித்து பல நாடகங்களை சைவத்தமிழ் வித்தியாசாலைத் திறந்தவெளியரங்கிலும் அரங்கேற்றினோம். அவற்றில் ஒன்றைப் பார்த்த ஈழத்து நாடகத் தந்தை கலையரசு சொர்ணலிங்கம் ஐயா அவர்கள் எம்மைத் தனது வீட்டிற்கு அழைத்து தனது படங்களையெல்லாம் எமக்குக் காட்டிய தோடு என்னையும் பாராட்டினார். எனது வாழ்வில் மறக்க முடியாத நாளாகவும் அது



நான் எஸ்.குமாரேஸ்வரராஜா, ரி.சிவலோகநாதனுடன் பங்கேற்ற நாடகம்

அமைந்தது. நானும் சில நாடகங்களை எழுதிப் பாடசாலையில் காட்டினேன். அதனைப் பார்த்த சிலருக்கு ஆச்சரியமும், சிறிது பொறாமையும் ஏற்பட்டிருக்க வேண்டும். "நாடகம் நல்லது ஆனால் எழுத்தாளன் சரியில்லை" (பிரபல்யமில்லை) என்று அவர்கள் கூறியதாக நண்பர் நாகரத்தினம் வந்து என்னிடம் கூறியதும் இன்றும் நன்றாக நினைவிலுள்ளது.

எனக்கு நாடகம் சொல்லித்தந்த ஆசிரியர் திரு.செ.ஐயாத்துரை அவர்களை மறக்கவே முடியாது. இலண்டன் பழைய மாணவர் சங்கம் ஆரம்பித்ததும் அவருக்குக் கடிதங்கள் எழுதினேன். அவர் மிகவும் ஆனந்தத்துடன் பதில் கடிதங்கள் எழுதினார். ஆனால் நாட்டில் நடந்த இடப்பெயர்வு காலத்தில் அவர் காலமாகி விட்டார். நான் எழுதிய முதலாவது நூலான "இலண்டனில் நாரதர்" என்ற நாடகத் தொகுதியை ஆசிரியர் அவர்களுக்கே சமர்ப்பணமும் செய்தேன்.

## மாணவ முதல்வர் :-

க.பொ.த சாதாரண வகுப்புப் படித்துக் கொண்டிருந்தபோது நானும் மாணவ முதல்வராகத் தெரிவுசெய்யப்பட்டேன். சில வருடங்களின் பின்னர் மாணவ முதல்வர் தலைவராகவும் (Senior Prefect) தெரிவு செய்யப்பட்டேன். அந்தவருடம் நடந்த பரிசளிப்புவிழாவில் முதன் முறையாக மாணவர் சார்பில் மாணவ முதல்வர் தலைவர் வரவேற்புரை வழங்கவேண்டும் என்ற முறையையும் ஆரம்பித்து வைத்தனர். அதுவும் மறக்க முடியாத ஒன்று. மதிப்புக்குரிய ஆசிரியர் திருமதி.

மீனாம்பிகை தவரட்ணம் அவர்கள் வரவேற்புரையை எழுதித்தந்து, விழா ஆரம்பிக்க முன்னரும் என்னை ஒரு தடவை பார்க்கவேண்டும் என்று வரச்செல்லி அழைத்தார். பலர் முன்னிலையில் பேச முன்னர் நான் எப்படியாக உடைகள் அணிந்திருக்கிறேன் என்று பார்ப்பதற் காகத்தான் என்னை அழைத்திருந்தார் என்பது பின்னர்தான் தெரிந்தது. நல்ல வேளை நான் அன்று மிகவும் அழகாகத் தான் ஆடைகள் அணிந்திருந்தேன். இன்னொருமுறை பரிசளிப்பு விழா நாடகமொன்றில் நான் பேசிய வசனத்தைக் கேட்டுவிட்டு முதன்முதலில் கைதட்டி எல்லோரையும் கைதட்ட வைத்தவரும் அவரே. அப்போதுதான் எமது அதிபர் திரு.அ.வைத்திலிங்கம் அவர்கள் பல வருடகால ஆசிரியர் சேவையிலிருந்து இளைப்பாறினார். அவருக்கு மாணவர் சார்பிலும், பாடசாலையின் சார்பிலும், உரும்பிராய் மக்கள் சார்பிலுமாக மூன்று பிரியாவிடை விழாக்கள் நடாத்தப்பட்டன. மாணவர்கள் சார்பில் நடந்த விழாவிற்குத் தலைமை தாங்கும் பாக்கியமும் அவ்வருடம் எனக்குக் கிடைத்தது.

## ஆசிரியர்களும் நண்பர்களும்

நான் கல்வி கற்றபோது பாடசாலையில் பணியாற்றிய எல்லா ஆசிரியர்களுமே மறக்கமுடியாதவர்கள். ஆனால் திரு.க. பொன்னம்பலம், திரு.வி.மகாலிங்கம் - தமிழ், திரு.செ.ஐயாத்துரை - நாடகம், திரு. இரத்தினம் - விளையாட்டு, திரு.வி. சுந்தரலிங்கம் - தாவரவியல், விலங்கியல், திருமதி.மீனாம்பிகை தவரட்ணம் - விஞ்ஞானம், உயிரியல், திருமதி. இரத்தினசபாபதி - தாவரவியல், திருமதி. அப்பாத்துரை - விலங்கியல், திருமதி.த. இராசானந்தன், மற்றும் திருமதி.தவமணி இரத்தினசிங்கம் -ஆங்கிலம், அதிபர்.திரு. அ.வைத்திலிங்கம், திரு.வைத்தியநாதன், திரு.சிவன்பாலன் - இரசாயனம், திருமதி. பராசக்தி நவரத்தினசிங்கம், திரு. செல்லத்துரை - சங்கீதம் இவர்கள் தினமும் என் மனதிலே உலாவிக்கொண்டே இருக்கின்றார்கள்.

மாணவர்களில் முதலில் நண்பர் தர்ம குலசிங்கம், நாகரத்தினம், லோகநாதன், பஞ்சலிங்கம், குமரேஸ்வரராஜா, இந்திர ராஜா, இந்திரதாஸ், சிந்தனைப்பூக்கள் பத்மநாதன், சிவலோகநாதன், தில்லை நடேசன், சிவநாதன், காசிநாதன், துரை.மனோகரன், சிவமைந்தன், ரெஜினா, சிவசோதிமலர், தனலக்ஷ்மி போன்ற வர்களும் எப்போதும் மனதிலே இருக்கின்றனர்.

நான் படிப்பில் கவனமெடுக்காது நாடகங்கள் என்றும், கழகங்கள் என்றும் திரிந்தபோது திரு.சிவபாலன் ஆசிரியர் அவர்கள் "நீங்கள் என்ன செய்தாலும் நன்றாகப் படிக்காவிட்டால் பயனில்லை" என்றார். அதேபோல் திருமதி. மீனாம் பிகை தவரட்ணம் அவர்கள் 1973 இல் நான் படிப்பதற்காக இலண்டனுக்குப் புறப்பட்ட போது எனது Autograph இல் 'செய்வன திருந்தச்செய்" என்ற வாசகத்தை எழுதித்தந்தார். இங்கு நான் என்ன செய்ய ஆரம்பித்தாலும் அந்த வாசகம் என் மனதிலே ஓடிவந்து புகுந்துவிடும். இதனை நான் அவரை கனடா மண்ணில் கண்டபோது கூறினேன். "இப்படியான வர்களில் ஒரு சிலரைத்தான் தான் கண்டிருக்கிறேன்" என்று சொல்லி மகிழ்ந்தார்.

அதுமட்டுமல்லாமல் எனது எழுத்துக்களை எப்போதும் பாராட்டுபவர்.

## இலண்டன் பழைய மாணவர் சங்கம்

இலண்டனில் 1994 ஆம் ஆண்டு அப்போதிருந்த JSSA UK ஐ ஆரம்பித்து வைத்தவர்களில் ஒருவர் எனது நண்பர். அவர் என்னைக் கண்டபோது 'நீங்களும் உரும்பிராய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஒன்றை இலண்டனில் ஆரம்பிக்கலாமே" என்று கூறினார். அதனைக் கேட்டதும் எனக்கும் பழைய மாணவர் சங்கம் அமைப்பதற்கு ஓர் உந்துதல் ஏற்பட்டது. சிலவாரங்களுக் குள்ளேயே எனக்குத் தெரிந்த 13 உரும் பிராய் நண்பர்கள், பெரியவர்களை அழைத்து எனது வீட்டில் வைத்து இலண்டன் உ.இ.க.ப.மா.சங்கத்தை ஆரம்பித் தோம். அந்த வருடமே JSSA UK யினரால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டம், வலைப் பந்தாட்டம் என்பனவற்றிலும் பங்கு கொண்டோம். அன்று நடந்த உ.இ.க.ப. மா.சங்க முதலாவது உதைபந்தாட்டப்பாட்டி யில் முதலாவது "கோல்" அடித்தவர் எமது மகன் செந்தீஸ். எமது வலைப்பந்தாட்டக் குழு 2000 ஆம் ஆண்டு முதன்முறையாக "சாம்பியனாக" வெற்றிவாகை சூடியபோது அக்குழுவில் எமது மகளும் ஒரு முக்கிய வீராங்கனையாக விளையாடினார் என்று எண்ணும்போதெல்லாம் பெருமையாகவே யுள்ளது. பழைய மாணவர் சங்கத்தின் பெயரால் பல ஒன்று கூடல்களை நடாத்தி உரும்பிராய்ப் பாடசாலைகளுக்கு வேண்டிய உதவிகளையும் அவ்வப்போது செய்தும் வருகின்றோம்.

## பிரதம விருந்தினர் கௌரவம்.

2003 ஆம் ஆண்டு எனது வாழ்வில் ஒரு பொன்னான வருடம். நாம் கல்விகற்ற உரும்பிராய் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவிற்கு நானும், எனது மனைவியும் பிரதம விருந்தினர்களாக அழைக்கப் பட்டிருந்தோம். எமது மகள் செந்திலாவும் அந்த விழாவில் வீணை வாசித்தார். அந்த விழா முடிவில் நண்பர் திரு.நாகரத்தினமும் நானும் அலங்கரிக்கப்பட்டிருந்த கொட்ட கையின் கீழிருந்து மனம் விட்டுப்பேசி மகிழ்ந்தோம். "இதேபோல் எமது பாடசாலையின் நூற்றாண்டு விழாவிற்கு நீங்கள் எல்லோரும் இங்கே வரவேண்டும், நாம் எல்லோரும் ஒன்றாக இருந்து பேசி மகிழவேண்டும்" என்று அன்றே ஓர் அன்புக்கட்டளை இட்டு வைத்தார். அடுத்தநாள் நாங்கள் இருவருமாகச் சேர்ந்து புதிய பிரார்த்தனை மண்டபம் அமைப் பதற்கான அளவீடுகளை எடுத்தோம். அதனை இலண்டன் வந்து ஒரு வரைபடமாக்கி அனுப்பி அனுமதியையும் பெற்றோம். ஆனால் நாம் திட்டமிட்டபடி கட்டுவதற்கு எம்மால் இயலாதபோது திரு.க.தர்மகுலசிங்கம் அதன் முழுப் பொறுப்புக்களையும் ஏற்றார். அன்று ஆரம்பித்த எமது செயல் இன்று முழுவடிவம் பெற்று அழகாகக் காட்சி தருவதைப் பார்க்கும்போது தேகம் சிலிர்க்கின்றது.

திரு.க.தர்மகுலசிங்கமும் நானும் க.பொ.த சாதாரண வகுப்பில் ஒரே வாங்கில் இருந்து கல்வி கற்றோம். திரு நாகரத்தினம் அவர்கள் பக்கத்து வகுப்பு. எங்களுக்கென் றொரு வாழ்க்கையை அமைத்து எங்கெல்லா

மோ வாழ்ந்திருந்த போதிலும் எமக்குக் கல்வியை ஊட்டி வளர்த்த தாயின் நூற்றாண்டு விழாவில் மீண்டும் ஒன்று சேர்ந்துள்ளோம். இப்போதும் அருகருகே தான் இருக்கின்றோம். இது இன்னொரு துளிர்ப்புக்கான ஆரம்பமேதான். எம்மாலான வற்றை சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் எமது கல்வித்தாய்க்கு செய்துகொண்டே இருப்போம். இது உறுதி.

## திருக்கேதீஸ்வரர் ஆலயம்

வருடாந்த திருக்கேதீஸ்வரர் ஆலய பூங்காவனத் திருவிழா உரும்பிராய் இந்துக்கல்லூரிக்குரிய பூசை. உரும்பிராய் இந்துக்கல்லூரி பூங்காவனத் திரு விழாவிற்கென நாம் ஒன்றாகப் பலமுறை பயணித்ததும், சுற்றுலாக்கள் செய்ததும், பல குறும்புகள் செய்து மகிழ்ந்திருந்ததும் மறக்க முடியாதவை. எமக்கு எத்தனை வயதாகினாலும் கல்வி கற்ற பாடசாலை களை, இளமைக்காலங்களை எண்ணும் போது நாம் இப்போதும் சிறுவர்களாக இருப்பது போலவே உணர்கிறேன். கற்ற பாடசாலைகளையும், கற்பித்த ஆசிரியர் களையும், உடன் கல்விகற்ற மாணவர் களையும் என்றுமே மறக்க முடியாது. அந்த நினைவுகள் சிலவேளைகளில் கசந்தாலும் பல வேளைகளில் இனிக்கவே செய்கின்றன.

அன்று ஒரு சாதாரண மாணவனாக உரும்பிராய் இந்துக் கல்லூரியில் சேர்ந்தவன், இன்று இலண்டனில் படித்து ஒரு நல்ல நிலையில் இருப்பதற்கும், படித்த பாடசாலைக்கு உதவுவதற்கும், 2003 ஆம் ஆண்டு சித்திரை மாதம் மனைவியுடனும் மகளுடனும் பரிசளிப்பு விழாவிற்குப் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்ளக் கிடைத்த பாக்கியமும் ஆண்டவன் அருளே. 33 வருடங்களாக இலண்டனில் இயங்கும் மேற்கு இலண்டன் தமிழ்ப்பா டசாலைக்குக் கடந்த 15 வருடங்களுக்கு மேல் தலைமை ஆசிரியராக வார இறுதி நாட்களில் பணியாற்றுவதற்கும், தமிழிலே ஆர்வம் அதிகரித்ததற்கும், முன்னர் நான் பாடசாலையிலே மாணவ முதல்வர் தலைவராக, சைவமாணவர் மன்றத் தலைவராக, க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர் சங்கத் தலைவராக, "தர்மா" இல்லத் தலைவராக இருந்து பெற்ற அனுபவங்களே துணையாக இருக்கின்றன என்பதனைச் சொல்லாமலும் இருக்க முடியவில்லை. நாம் எதுவித பலன்களையும் எதிர்பாராது செயற்பட வேண்டும். நாம் செய்கின்ற ஒவ்வொரு நல்ல காரியமும் ஏதோ ஒரு வழியில் நன்மை பயக்கும் என்பது எனது அசையாத நம்பிக்கை.

## நண்பர் நாகரத்தினம்

நாம் எமது பாடசாலை வாழ்வில் பல மாணவர்களைச் சந்திக்கிறோம். ஆனால் சிலருடன்தான் கல்வி கற்கிறோம். சாதி, மதம், இனம் என்ற வேறுபாடின்றிப் பழகுகிறோம். பாடசாலை வாழ்வும், பாடசாலை நினைவுகளும் பலரின் மனதைவிட்டு ஒருபோதும் அகலாது. பாடசாலை வாழ்வின் பின்னர் பலரை நினைவிருந்தாலும் அவர்களை ஒரு போதும் சந்திக்கவே மாட்டோம். அவரவர்க்கென்று ஒவ்வொரு வாழ்வை அமைத்துக்கொண்டு எங்கெல்லா மோ வாழ்கிறார்கள். பலரின் முகங்களே நினைவிற்கு வரா. ஆனால் ஒரு சிலர் மட்டும்தான் எப்போதும் உறவாக

இருப்பார்கள், உள்ளத்தால் அன்பாக இருப்பார்கள், எப்போதும் ஒன்றாகவே இருப்பார்கள். அப்படிப்பட்ட ஒரு நல்ல நண்பர்தான் திரு.செ.நாகரத்தினம்.

எம்மில் பலர் ஏதேதோ காரணங்களுக்காக நாட்டைவிட்டு வெளியேறினார்கள். தமது பிள்ளைகள், பெற்றோர், குடும்பத்தவர் எல்லோரையுமே நாட்டை விட்டுப் புலம்பெயரவும் வழிசெய்தார்கள். எங்கெல்லாமோ சென்று எப்படியெல்லாமோ வாழ்கிறார்கள். பலர் தான் பிறந்த நாட்டையோ, கல்வி கற்ற பாடசாலையையோ, ஒன்றாகக் கல்வி கற்றவர்களையோ எண்ணிக்கூடப் பார்ப்பதில்லை. ஆனால் நண்பர் திரு.நாகரத்தினம் அவர்கள் இவற்றிற்கெல்லாம் விதிவிலக்கானவர்.

நாமும் இங்கு சர்வகலாசாலைக்குப் புகமுடியாதபோது மேற்படிப்புப் படிப்பதற்கென்று இலண்டன் புறப்பட்டோம். புதிய இடம், படிப்பு, வேலை, திருமணம், குடும்பம், நாட்டு நிலைமை என்றெல்லாம் தலையில் சுமைகள் ஏற, ஏறதொடர்புகளும் அரிதாகவே அமைந்தன. ஆனால் இலண்டன் பழைய மாணவர் சங்கம் அமைத்த பின்னர் நான் அவருக்கு ஒரு மடல் எழுதினேன். ஆனால் அதற்கு அவர் சிறந்த ஆங்கிலத்தில் பதில் எழுதியிருந்தார். திரும்பவும் நான் அழகு தமிழில் பதில் எழுதினேன். "இலண்டனில் இருந்து தமிழில் எழுத, நான் யாழ்ப்பாணத்தில் இருந்து ஆங்கிலத்தில் எழுதி விட்டேனே" என்று சிறிது ஆதங்கப்பட்டு தமிழில் பதில் எழுதியிருந்தார். அன்றிலிருந்து மீண்டும் ஆரம்பித்த எமது பழைய உறவு இன்றுவரை மிகவும் உளச்சுத்தியோடு உறுதியாகவே தொடர்கிறது.

"நாட்டு நிலைமையால் எமது பாடசாலையில் நாம் கூடிய முதல் கூட்டத்தில் எழுதுவதற்குக் காகிதம்கூட அப்போது இருக்கவில்லை" என்றும், "தான் இலண்டனில் என்னுடனும், கனடாவில் சிவலோகநாதன், திருமதி.மீனாம்பிகை தவரட்ணம் ஆகியோருடன் தொடர்புகொண்டு வேண்டிய பணத்தைப் பெறுவேன்." என்று அன்று கூறியதாகவும் என்னிடம் கூறினார். அவரும் அவருடன் ஒன்றாக இணைந்து பாடுபட்ட அத்தனைபேரும் பாராட்டுதற்குரியவர்களே. அன்றிலிருந்து சிறிது சிறிதாகச் சேர்த்த பணம் இன்று கோடிக்கணக்கில் குவிகின்றது என்றும் குறிப்பிட்டார்.

நான் எமது இந்துக்கல்லூரியில் இணைந்த சில தினங்களில் "கிளித்தட்டு" விளையாடச் சென்றேன். நானும் நண்பரும் எதிரணியில் விளையாடினோம். இவர் "பூர்" என்று சொல்லிக் கொண்டு ஓடி வரும்போது நான் எனது நீண்ட கையால் எட்டி ஓர் அடி போட்டேன். அது அவரது வலது பக்க தலையில் பட்டு, காதில் பட்டு, கையிலும் பட்டுவிட்டது. சிறிது நேரத்தின் பின்னர் அவர் என்னிடம் வந்து "உமது அடி பட்டு எனது தலை, காது, கை எல்லாம் சிவந்து விட்டன" என்று அவற்றை எனக்குக் காட்டினார். உண்மையாகவே அவையெல்லாம் சிவந்துவிட்டன. அவர் நல்ல வெள்ளை நிறமானவர். அதனால் அடிபட்ட இடமெல்லாம் சிவப்பாகவே தெரிந்தன. எனக்குச் சிறிது பயமும் வந்துவிட்டது. இவருடைய உடல் வெள்ளை. அதே போல்

தான் இவருடைய உள்ளமும் வெள்ளை. இவரை எண்ணும்போதெல்லாம் முதலில் அந்தக்காட்சி தான் என் கண்முன்னே வந்து நிற்கும்.

நண்பருக்கு எந்நேரமும் பாடசாலை பற்றிய எண்ணம்தான். எமது காலத்தில் இலண்டன் பழைய மாணவர் சங்கத்தின் பெயரால் பாடசாலையில் ஏதாவது இருக்க வேண்டும் என்ற அவர இவருக்கு அதிக மாகவே இருந்தது. அடிக்கடி அதனைப் பற்றிக் கூறுவார். அந்த வேளையில்தான் இந்தப் பிரார்த்தனை மண்டபம் அமைத்துக் கொடுக்கலாம் என்ற எண்ணமும் தோன்றியது. அதன்படி பல முயற்சிகள் செய்தும், பலருடன் பேசியும் எதுவித பலனும் கிட்டவில்லை. நாட்டு நிலைமையும் சீராக இருக்கவில்லை. பேசிப்பேசியே பல வருடங்கள் கழிந்தன. கல்லூரித்தாயின் நூற்றாண்டு விழா வருவதற்கு முன்னர் எப்படி அமைக்கப் போகிறோமோ என்று ஆதங்கப்பட்டுக்கொண்டிருந்த அந்த வேளையில்தான் எமது நண்பர் திரு.கந்தசாமி தர்மகுலசிங்கம் அதனைப் பொறுப்பேற்றுக் கட்டித்தர முன்வந்தார். நானும் நண்பர் நாகரத்தினமும் ஆரம்பித்து வைத்த ஒரு பெரிய முயற்சி எமது நெருங்கிய நண்பரால் முழு உருப்பெறப் போகின்றது என்பதைக் கேட்டவுடன் ஒரு புதுவித மகிழ்ச்சி மனதினிலே தோன்ற ஆரம்பித்தது. புதியதொரு கட்டடக்குழுவை அமைத்து வேலைகளை ஆரம்பித்த போதிலும் திரு. நாகரத்தினம் அவர்கள் ஒரு முக்கிய உறுப்பினராக விளங்கினார்.

அதிபர் திரு.அ.ஈஸ்வரநாதன், திரு.செ. நாகரத்தினம், திரு.ச.ஏகாம்பரநாதன் அவர்களும் தான் எம்முடன் அடிக்கடி தொடர்புகளை வைத்திருக்கிறார்கள். இந்துவின் மக்கள் இலண்டனிலும், கனடாவிலும் மற்றும் பல நாடுகளிலும் வாழ்ந்த போதிலும் அவர்களுக்கெல்லாம் ஒரு பாலமாக அமைந்திருப்பவர் நண்பர் நாகரத்தினம் தான். அதிபர் பாடசாலை நிர்வாகத்தோடு அதிக நேரம் செலவி டுகிறார். திரு.ஏகாம்பரநாதன் அவர்கள் எமக்கு அண்ணர் போன்றவர். அவரிடம் ஒரு மதிப்பும் மரியாதையும், ஒருவித பயமும் இருக்கின்றது. ஆனால் நண்பர் நாகரத்தினம் அவர்களோடு நெருங்கிப் பழகிய காரணத்தாலோ என்னவோ அவரிடம் தொடர்பு வைத்திருப்பது இலகு வாகவுள்ளது. அவரும் தனது வேலை யிலிருந்து இளைப்பாறி இருப்பதாலும் அவருக்கு போதியளவு நேரமும் இருக்கின்றது அனுபவமும் இருக்கின்றது ஆற்றலும் இருக்கின்றது.

நண்பர் திரு.செ.நாகரத்தினம் அவர்கள் எமது பாடசாலைப் பணிகளோடு, ஆலயப் பணிகள், சமூகப்பணி கள் என்று வேறு பல பணிகளையும் உரும்பிராயிலும் அயற் கிராமங்களிலும் ஆற்றுவதை அறிவோம். எமது பாடசாலையின் இந்தப் பிரார்த்தனை மண்டபம் உருவாவதற்கு முக்கியமாக இருந்தவர்களில் நண்பர் நாகரத்தினம் முன்னணியில் நிற்கின்றார். அமைதியாக இருந்து அரும்பணிகளை ஆற்றுகின்ற அருமை நண்பரைப்பற்றிச் சில வார்த்தைகள் எழுதவேண்டும், அவரின் பெருமைகளை யாவரும் அறியச்செய்ய வேண்டும், ஒருவர் செய்கின்ற சேவை களுக்காக அவரை வாழும்போதே வாழ்த்தவும் வேண்டும் என்பதற்காகவே இவற்றை எழுதி, அவர் நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, வாழ்த்தி அமைகிறேன்.

# எனது ஆளுமையை வளர்த்தெடுத்த அந்த இனிய கல்லூரி நாட்கள்

**திரு.தி.ஞானசேகரன்**
**பிரதம ஆசிரியர்**
**ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகை, கொழும்பு**
**பழைய மாணவன்**
**யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி**



எனது மாணவப் பருவத்தின் இனிய நினைவுகள் மடை திறந்த வெள்ளம்போல் என்னை முட்டி மோதின. எதை எழுதுவது? எதை எழுதாமல் விடுவது? எத்தனை எத்தனை முக்கிய நிகழ்வுகள்! என்னை ஆட்கொண்ட மலரும் நினைவுகள்!

ஈழத்து இலக்கிய வரலாறு எழுதுபவர்கள் எனது பெயரை நீக்கி விட்டு அந்த வரலாற்றை எழுதிவிட முடியாது எனத்தக்க வகையில் நான் ஒரு எழுத்தாளனாக வளர்ச்சியடைந்திருக்கிறேன் என்றால், அதற்கான அத்திபாரம் உரும்பிராய் இந்துக்கல்லூரியிலே தான் இடப்பட்டது.

நான் நாற்பத்தேழு வருடங்களுக்கு மேலாக எழுத்துத் துறையில் ஈடுபட்டு வருகிறேன். எனது **“குருதிமலை”** என்ற நாவல் தமிழகத்து அமெரிக்கன் கல்லூரியில் M.A வகுப்புக்குப் பாடநூலாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. தற்போது சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் எனது **“அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும்”** என்ற சிறுகதைத் தொகுதி B.A வகுப்புக்குப் பாடநூலாக வைக்கப்பட்டுள்ளது. “ஞானம்” என்ற கலை இலக்கிய சஞ்சிகையை நான் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக நடாத்தி வருகிறேன். உரும்பிராய் இந்துக்கல்லூரியில் 1953 முதல் 1962 வரை கல்வி கற்றேன். அந்தக் காலகட்டத்திலே வெளிவந்த கல்லூரிமலர் ஒன்றிலே தான் எனது முதலாவது எழுத்தாக்கம் “ஒரு யானையின் சுயசரிதை' வெளிவந்தது. அதனை வாசித்த ஆசிரியர்களும் மாணவர்களும் என்னைப் பாராட்டி உற்சாகமளித்தனர். அவர்கள் தந்த உற்சாகம் “என்னால் எழுதமுடியும்” என்ற எண்ணத்தை என்னுள் ஏற்படுத்தியது.

நான் ஏழாம் வகுப்பிலே தான் இக் கல்லூரியில் சேர்ந்தேன். அப்போது இலக்கிய இரசனை உள்ள நண்பர்கள் பலர் எமக்குக் கிடைத்தார்கள். இவர்களில் ஏகாம்பரநாதன், சின்னராசா, திருநாவுக்கரசு, கனகாம்பிகை ஆகியோர் உடனடியாகவே நினைவில் வருகிறார்கள். முதன் முதலில் மாயாவி எழுதிய 'மர்மம் நிறைந்த மாயவில்லா” என்ற மர்மநாவலை எனக்கு

வாசிக்கத் தந்தவர் சின்னராசா. கல்கி எழுதிய "சிவகாமியின் சபதம்" சரித்திர நாவலை வாசிக்கத் தந்தவர் திருநாவுக்கரசு. மு.வரதராசனாரின் "கரித்துண்டு" நாவலை வாசிக்கத் தந்தவர் கனகாம்பிகை. இவர்களை விட பாலரட்ணம், சோமநாதன், தியாகராசா, பொன்னம்பலம், நமசிவாயம், சோமகாந்தன், தேவராணி, இணுவில் சச்சிதானந்தன் என எங்கள் வாசிப்பு வட்டத்தில் மேலும் சிலர் இருந்தனர். பலதரப்பட்ட இரசனை மிகுந்த நாவல்களை நாங்கள் எங்களுக்குள் பரிமாறிக்கொண்டு நிறையவே வாசித்தி ருக்கிறோம். பிற்காலத்தில் நான் ஓர் எழுத்தாளனாக வளர்ச்சியடைவதற்கு இந்த வாசிப்பு இரசனையும் பெரிதும் உதவியிருக்கிறது.

இந்தக் கால கட்டத்தில் நான் எனது பேச்சுக் கலையையும் வளர்த்தெடுத்தி ருக்கிறேன்.ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் எங்களது கல்லூரியில் மாணவர் தேர்ச்சிச்சங்கக் கூட்டங்கள் இடம்பெறும். ஒரு வெள்ளிக்கிழமையன்று "திருவள்ளுவர் விழா" நடைபெறுவதற்கு ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண் டிருந்தன. நானும் அதிலே கலந்து கொண்டு பேசப்போகிறேன் என நானாகவே முன் வந்து எனது பெயரைக் கொடுத்தேன். "வள்ளுவரும் வாழ்க்கையும்" என்ற தலைப்பில் நான் பேசிய கன்னிப்பேச்சு மாணவர்களிடையே பெரும் பாராட்டைப் பெற்றது. மாணவர் தேர்ச்சிச் சங்கத்திற்குப் பொறுப்பாயிருந்த ஆசிரியர் சபாநாயகம் பெரிதும் என்னைப் பாராட்டினார்.

நான் உரும்பிராய் இந்துக்கல்லூரியில் கல்வி பயின்ற காலப்பகுதியில் முதலில் ஸ்ரீநிவாசன் என்பவரும் பின்னர் எம்.இளையதம்பியும் அதன்பின் கம்யூ னிஸ்ட் ஏ.வைத்திலிங்கமும் அதிபர்களாக இருந்தார்கள். இவர்கள் எல்லோரது அன்புக்கும் கணிப்புக்கும் உரிய மாணவனாக நான் என்னை வளர்த்துக் கொண்டேன்.

கல்லூரியில் எந்த முக்கிய விழாக்களோ நிகழ்வுகளோ இடம் பெறும் போதும் நிச்சயம் அதிலே எனது பங்களிப்பும் இருக்கும். ஒவ்வொரு வகுப்பாக நான் ஏற்றம் பெற்ற போதும் எனது செயற்பாடுகளும் ஏற்றம் பெற்றுக் கொண்டே இருந்தன. பாடசாலையின் மாணவர் தேர்ச்சிச்சங்கம், ஆங்கில மன்றம், எச்.எஸ்.சி.யூனியன் ஆகிய வற்றின் தலைமைப்பதவிகள் என்னைத் தேடிவந்தன. விவாத அரங்குகள் பேச்சுப்போட்டிகளில் எனக்குப் பல்வேறு பரிசில்கள் கிடைத்தன. நான் 1958ல் இக்கல்லூரியின்மாணவர் தலைவனா னேன். 1960ல் பாடசாலையின் சகல துறைச் சிறப்பு மாணவனாகத் தேர்ந் தெடுக்கப்பட்டு வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் கௌரவிக்கப்பட்டேன்.

பல சந்தர்ப்பங்களில் கல்லூரியின் முக்கிய நிகழ்வுகளின் போது ஆசிரி யர்கள் என்னுடன் கலந்தாலோசிப்பார்கள். அல்லது சில பொறுப்புக்களை என்னிடம் தருவார்கள். இவ்வாறெல்லாம் எனது ஆளுமையை ஆசிரியர்கள் வளர்த் தெடுத்திருக்கிறார்கள்.

நான் உரும்பிராய் இந்துக்கல்லூரியில் உயர்வகுப்பு மாணவனாக இருந்த வேளை தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராக விளங்கும் கலாநிதி துரை.மனோகரன் கீழ் வகுப்பில் கல்வி பயின்று கொண்டிருந்தார். அவர் தனது மாணவப் பருவத்திலேயே "பாவை யின் பரிசு" என்ற நாவலை எழுதி வெளி யிட்டார். அந்த நாவலின் வெளியீடு இக்கல்லூரியிலேயே இடம்பெற்றது. அப்போது நான் பாடசாலையை விட்டு விலகியிருந்தேன். எனினும் இத்தகைய ஓர் இலக்கிய ஊக்குவிப்புச் சூழல் அக் காலத்தில் கல்லூரியில் நிலவியது என்பதனை எடுத்துக்காட்டவே இதனை இங்கு குறிப்பிடுகின்றேன்.

கலாநிதி துரை.மனோகரன் எனது கல்லூரி வாழ்க்கையை நேரில் கண்டவர். எனது "புதிய சுவடுகள்" என்ற "தேசிய சாகித்திய விருது" பெற்ற நாவலின் இரண்டாம் பதிப்புக்கு அவர் எழுதிய முன்னுரையில், எனது செயற்பாடுகளில் சிலவற்றைச் சிலாகித்துக் குறிப்பிட்டிருக்கிறார். அதனை இங்கு தருவது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

"எழுத்தாளர் தி.ஞானசேகரன் அவர்களும் நானும் ஒரே கல்லூரியில் படித்தவர்கள். யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியில் உயர்வகுப்பிற் பயின்று கொண்டிருந்த போது நான் இடைநிலைக் கல்விபயிலும் மாணவனாக இருந்தேன். அவர் மாணவராக இருந்தபோது, மாணவர் தலைவராகவும், எழுத்து ஈடுபாடு கொண்டவராகவும் விளங்கினார். கல்லூரி மாணவராக அவர் இருந்த காலத்திலேயே நாடகங்கள் எழுதி, தாமும் பாத்திரமேற்று நெறிப்படுத்தி மேடையேற்றியுள்ளார். எழுத்தாற்றலோடு நடிப்பாற்றலையும் அவர் கொண்டிருந்தார். அவர் எழுதி நடித்த "பொலிடோல் பொன்னர்" என்ற நகைச்சுவை நாடகம் இப்போதும் என் ஞாபகத்தில் உள்ளது. அதில் பொன்னர் என்ற பாத்திரமேற்று நடித்து தமது நகைச்சுவை உரையாடல்களாலும் நடிப்பாற்றலாலும் சபையோர் அனை வரையும் ஞானசேகரன் கவர்ந்தார். "ஓசி யெண்டால் பொன்னன் பொலிடோலும் குடிப்பான்" என்று அந்த நாடகத்தில் இடம்பெறும் ஒரு வசனம் இன்னும் என் நினைவில் உள்ளது. இயல்பாகவே எழுத்து ஈடுபாடு கொண்டிருந்த மாணவனான எனக்கு அவரது முயற்சி களில் பெரிதும் ஆர்வத்தை ஏற்படுத்தின. சிலர் மாணவப்பருவத்தில் எழுத்து முயற்சிகளில் ஈடுபட்டு விட்டு தொழில் கிடைத்ததும் எழுத்துத் துறையிலிருந்து அஞ்ஞாதவாசம் செய்வதுண்டு. ஆனால் ஞானசேகரன் அவர்கள் தமது எழுத்து முயற்சிகளைக் கைவிட்டுவிடவில்லை. அதனால் இன்று இலங்கையின் குறிப்பிடத்தக்க சிறுகதை நாவல் எழுத்தா ளராகவும் "ஞானம்" சஞ்சிகையின் ஆசிரிய ராகவும் விளங்குகிறார்.

யாழ்ப்பாணத்தில் புன்னாலைக் கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்ட ஞானசேகரன் அவர்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரியில் கற்றபின் இலங்கை

மருத்துவக் கல்லூரியில் பயின்று மருத்துவ அதிகாரியாக தொழில் பார்த்தவர். ஓய்வு பெற்ற பின்னரும் வைத்தியசேவை மூலம் மக்கள் தொடர்பைப் பேணிவருகிறார்". என எழுதிச் செல்கிறார்.

எனது கல்லூரி வாழ்க்கையில் மறக்கமுடியாத ஆசிரியர்கள் சிலரை இங்கு குறிப்பிட வேண்டும். ஆசிரியர் சபாநாயகம் உயர்வகுப்பில் எமது ஆங்கில ஆசிரியராக விளங்கியவர். ஆங்கிலப்பாடத்தில் நான் சிறப்புத் தேர்ச்சி பெறுவதற்கு இவரே காரணமாய் இருந்தவர். ஆங்கில நாவலாசிரியர்களை அவர்களது படைப்புக்களை அறிமுகம் செய்தவர். மாணவர் தேர்ச்சிச்சங்கத்தின் பொறுப்பாசிரியராக இருந்து எனது பேச்சுக்கலையை, விவாதத்திறனை வளர்த்தெடுக்க ஊக்கம் தந்தவர். தமிழாசிரியர் த.வடிவேலன் எனக்கு தமிழ் மொழியை சிறப்பாகக் கையாளும் கலையைக் கற்றுத் தந்தவர். ஆசிரியர் ஆறுமுகம் கல்லூரியின் 'டிசிப்பிளின் மாஸ்ரர்" உலக சரித்திரம் கற்பித்தவரும் அவரே. பிரான்சிய அரசியற்புரட்சி பற்றிச் சுவைபட அவர் கற்பித்த முறையை இன்றும் என்னால் மறக்கமுடியாது. திரு.புவனசுந்தரம் பௌதிகவியலையும், திரு.சிவபாலன் இரசாயனவியலையும் கற்பித்து என்னையும் ஆர்வமுடன் கற்கும்படி செய்தவர்கள். ஆசிரியர்களான பொன்னம்பலம், ஞானசுந்தரம், வி.இளை யதம்பி, ஐயாத்துரை, தவமணிரீச்சர், ஞானாம்பாள் ரீச்சர் இவர்கள் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் எனது ஆளு மையை வளர்த்தெடுப்பதில் அக்கறை யுடன் செயற்பட்டவர்கள்.

ஈழத்தின் பிரபல எழுத்தாளர்களில் ஒருவரான "தேவன்-யாழ்ப்பாணம்" அவர்கள் சிலகாலம் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமை யாற்றியவர். அவரிடமும் நான் கல்வி கற்றிருக்கிறேன். பிரபல நாடகக் கலைஞர் கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னத்துரை அவர்கள். எங்கள் கல்லூரிக்கு மாற்றலாகி வந்த புதிதில் நான் மாணவர் தேர்ச்சிச் சங்கத்தின் தலைவராக இருந்தேன். அவரை எங்களது சங்கத்தில் உரை யாற்றும்படி வேண்டியபோது, "கவிதைக் கடலில் சில அமுதத்தின் வலைகள்" என்ற தலைப்பில் அருமையானதொரு உரை யாற்றி மாணவர்களை இலக்கியச் சுவையை மாற்றும்படி செய்தார்.

நான் கல்லூரியில் சேர்ந்த புதிதில் அதிபராக இருந்தவர் திரு.ஸ்ரீநிவாசன் அவர்கள் அவரும் ஓர் எழுத்தாளர். அந்தக்காலத்தில் பத்திரிகைகளில் கதைகள், கட்டுரைகள் எழுதியவர். ஆங்கில இலக்கண நூல் ஒன்றையும் எழுதியிருந்தார். அவர் ஓர் உதை பந்தாட்டப்பிரியர். அரைக் காற்சட்டை யுடன் விளையாட்டு மைதானத்தில் இறங்கி எங்கள் கல்லூரி உதைபந்தாட்ட வீரர் களுக்குப் பயிற்சியளிப்பார். அவருடைய காலத்தில் யாழ்மாவட்டக் கல்லூரிகளுக் கிடையே உரும்பிராய் இந்துக்கல்லூரி அணி பிரபல்யம் வாய்ந்ததாகத் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. நான்

உயர்வகுப்பிற் கல்விகற்றபோது எனக்கு உயர்கணிதம், பிரயோக கணிதம் ஆகியவற்றைக் கற்பித்தவர் எங்கள் அதிபர் திரு.ஏ.வைத்திலிங்கம் அவர்கள். அவரை அந்தக் காலத்தில் அறியாத வர்கள் எவரும் இருக்க முடியாது. அவர் கம்யூனிஸ்ட் கட்சியில் வட்டுக்கோட்டைப் பாராளுமன்றத் தொகுதி அபேட்சகராகப் போட்டியிட்டவர். அவர் தனது உயர் கல்வியை இங்கிலாந்தில் பெற்றவர். அவ் வேளையில் அங்குள்ள இடதுசாரிகளின் தொடர்பால் ஐரோப்பாவிலேயே கம்யூனிஸ்ட் கட்சியில் தன்னைப் பிணைத்துக் கொண்டவர். அங்கு இந்திராகாந்தியுடன் அரசியல் உறவு கொண்டு இயங்கியவர். பெரும் சிந்தனை யாளர்.

வகுப்பிலே சில நாட்கள் கணிதம் படிப்பிப்பதை விடுத்து, சோவியத் நாட்டைப் பற்றியும் அதன் செயற்பாடுகள் பற்றியும் அவர் எடுத்துக் கூறுவார். அமெரிக்காவும் சோவியத் யூனியனும் போட்டிபோட்டுக் கொண்டு விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த காலம் அது. அவைபற்றியெல்லாம் மாணவர்க்கு விளக்கம் தருவார். எவ்வாறு விண்வெளி "றொக்கட்டு"கள் புவியீர்ப்பிலிருந்து விடுபட்டு அண்டவெளிக்குச் செல்கின்றன, விண்வெளிக் கோளங்கள் எவ்வாறு பூமியை வலம் வருகின்றன. இந்த ஆராய்ச்சிகளால் கிடைத்த உப பயன்கள் யாவை என்பவற்றிற்கான விளக்கங்களையெல்லாம் கரும்பலகையில் படங்கள் வரைந்து விளக்குவார். மிகச் சுவாரஸ்யமாக மாணவர்களாகிய நாங்கள் அவற்றைச் செவிமடுப்போம். அன்று அவர் விண்வெளி ஆராய்ச்சி பற்றித் தந்த விளக்கங்கள் தான் இன்று வரை பசுமரத்தாணியாக எனது விஞ்ஞான அறிவில் தொக்கி நிற்கின்றன. அவர் ஒரு தீவிர கம்யூனிஸ்டாக இருந்தபோதும் என்றைக்குமே கம்யூனிஸ் தத்துவத்தைத் தனது வகுப்பு மாணவருக்குத் திணிக்க முயன்றவரல்லர்.

ஆசிரியர் திரு.வி.இளையதம்பி தீவிர அரசியல் ஈடுபாடு உடையவராக இருந்தார். அந்தக் காலகட்டத்தில் தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரக நடவடிக்கைகள் யாழ்ப்பாணத்திலும் இடம்பெற்றன. அதிலே உயர்வகுப்பு மாணவர்களாகிய எங்களையும் அவர் ஈடுபடவைத்தார். இப்படியாக அரசியல் ஈடுபாட்டினையும் நாங்கள் கல்லூரி நாட்களிலே பெற்றிருக்கிறோம்.


உரும்பிராய் இந்துக்கல்லூரியில் நான் பயின்ற காலம் எனது வாழ்க்கையில் என்றுமே மறக்கமுடியாத காலம். எனது ஆளுமையை வளர்த்தெடுத்த காலம். எனது வாழ்வின் உயர்ச்சிக்கு வித்திட்ட காலம். அது ஒரு பொற்காலம்!

எங்கள் கல்லூரி நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடும் இவ்வேளையில், எதிர்காலத்திலும் இக்கல்லூரி சிறந்தோங்க வேண்டும், சமுதாயத்திற்குப் பயன்மிக்க அறி வாளிகளை உருவாக்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

# இந்துமா மன்றம்



1978




1986

# திருக்கேதீஸ்வர ஆலயத் தரிசனம் - 2010









# சென்ற காலத்தின் பழுதிலாத் திறம்

புவனேஸ்வரி கனகரத்தினம்
மிகப்பழைய மாணவி
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி



உரும்பிராய் இந்து அன்னையின் மிகப் பழைய மாணவி என்ற பெருமையுடன் காலப் பயணம் செய்யும் வாக னத்துள் இருந்தவாறு பேசுகின்றேன். எனது பாடசாலைக் கால நினைவுகள் என்னுள் எழுகின்றன. எனது தந்தையார் ச.இளையதம்பி உரும்பிராய் இந்து அன்னையின் ஆரம்பகால ஆசிரியர்களுள் ஒருவர். எனது சகோதரர் அறுவர் இந்து அன்னையின் பழைய மாணவர்கள். அவர்களுள்ளும் இருவர் முன்னாள் ஆசிரியர்கள். இதைவிட எனது பாட்டனார் டாக்டர் வை.வல்லிபுரம் இக் கல்லூரியின் நிறுவுநர். இத்தகைய பின்புலங்கள் என்னைக் கல்லூரி மேல் காதல் கொள்ளச் செய்தன. இவ் வாஞ்சையுடன் 1930 ஆம் ஆண்டினுள் நுழைகின்றேன்.

பாடசாலைக்கு அருகில் எங்கள் வீடு இருந்தாலும் உத்தியோக பூர்வமாக ஒரு மாணவி என்ற தகைமையுடன் நான் பாடசாலையுள் நுழைந்த ஆண்டு 1930. பெண் கல்வி பற்றிய பிரக்ஞை அப்போதுதான் எங்கள் சமூகத்தாரிடம் முளைவிட்டிருந்தது. ஆயினும் பெண்கள் பூப்படைந்ததோடு படிப்பை நிறுத்திவிடும் பெற்றோர் பலர் என் காலத்தில் இருந்தனர். ஆசிரியராய் இருந்த எனது தந்தையாரும் அதற்கு விதிவிலக்கல்லர். இச்சூழமை வுகளுக்கு ஏற்ப Junior Secondary Certificate (J.S.C) வகுப்பு வரையுமே என்னைப் படிப்பதற்கு அனுமதித்தனர்.

மிஷனரிமாரின் கல்வி நட வடிக்கைகள் மதமாற்றத்தை அடிப் படையாகக் கொண்டுள்ளன என்பதை உணர்ந்த எம்மவர்கள் கிராமங்கள் தோறும் சைவச்சூழமைவில் அமைந்த பாடசாலை களைத் தோற்றுவித்தனர். "சைவ வித்தியா விருத்திச் சங்கம்", "இந்துக்கல்லூரிச் சபை" முதலிய நிறுவன மயப்பட்ட அமைப்புக்களோடு புத்தூரில் மழவராயர் கந்தையர், தெல்லிப்பளையில் பாவலர் துரையப்பாபிள்ளை, கந்தரோடையில் கந்தையா உபாத்தியாயர் எனப் புகழ்பெற்ற ஊர்ப் பெரியவர்களும் பாடசாலைகளை நிறுவினர். இந்தப்பின்னணியிலேயே 1911 இல் எங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி அன்னையும் தோற்றம் பெற்றாள்.

20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் எமது பிரதேசங்களில் ஏற்பட்ட கல்வி

எழுச்சிகளுக்குத் தென்னிந்தியாவில் இருந்தும் கேரளாவில் இருந்தும் வந்து பணியாற்றிய ஆசிரியர்களின் பங்கு முக்கியமாக நோக்கப்பட வேண்டியது. சைவப்பாடசாலை முகாமையாளர்கள் பெரும்பாலும் இந்திய அறிஞர்களை ஆசிரியர்களாக நியமித்ததன் மூலம் தமது தனித்துவங்களை நிலைநாட்டத் தலைப் பட்டனர். நாங்கள் படித்த காலத்தில் தென்பாண்டிக் கொடுமுடியில் இருந்து இங்கு வந்து குடும்பத்தாருடன் எமது ஊரில் தங்கியிருந்து பணியாற்றிய ஒரு பெரியார் அதிபராக இருந்தார்.

திரு.ஏ.சீதாராமன் - நீண்ட நெடிய உடல் பருத்த சிவப்பு நிறமனிதர். இந்தியப் பாணியில் கோட் (Close coat) அணிந்து கால்நிறையப் பஞ்ச கச்சுகமாக மடிப்புக் குலையாத வேட்டிகட்டித் தலையில் தலைப்பாகையுடன் கையில் பிரம்புடனும் உலாவரும் புனிதர். இவரே எங்கள் அதிபர். நாம் எவ்வளவு வேளைக்குப் பாடசாலைக்குப் போனாலும் இவரைத் தரிசித்துக் கொண்டுதான் பாடசாலைக்குள் செல்வோம். காலை 9 மணிக்குப் பாடசாலை ஆரம்பமாகும். எல்லோரும் பிரார்த்தனைக்காக ஒன்று கூடும்போது காணாதவர்களைக் கண்டதுபோன்ற பரபரப்புடன் ஒருவரோடு ஒருவர் அளவளாவத் தொடங்கிவிடுவோம். அந்த நேரம் பார்த்து அதிபர் அவ்விடம் வந்து எம்மை ஒரு 'பார்வை" பார்ப்பார். ஊசி விழுந்தாலும் கேட்கக்கூடிய நிசப்தம் அங்கு உடன் அமுலுக்கு வரும். தேவார பாராயணம், நற்சிந்தனை முதலிய நிகழ்வுகளுக்குப் பின் நாம் அவரவர் வகுப்பிற்குச் செல்வோம். நான் படித்த காலத்தில் யோகர்சுவாமிகள் வந்து நற்சிந்தனைகள் வழங்கியிருக்கிறார்.

காலை 11 மணிக்கு இடை வேளைக்காக மணி அடிக்கும். தண்ணீர் அருந்துவதற்காக எல்லோரும் கிணற்ற டியை நோக்கிப் போட்டிபோட்டு ஓடு வோம். எம் எல்லோரது தாகத்தையும் ஒரு நேரத்தில் தீர்ப்பதற்கு அந்தக் கிணற்றால் தான் முடியுமா? தண்ணீர் குடிப்பதை விடுத்துக் குடிக்கும் ஒழுங்குக்காகப் போட்டியிடுவதில் சச்சரவுகள் ஏற்பட்டு விடும். இந்தச் சச்சரவுகளில் சிக்க விரும்பாதவர்கள் அயலில் உள்ள வீடுகளில் போய்த் தமது தாகத்தை தீர்த்துக் கொள்வர். இடைவேளைக் களேபரங்களை முடிவுக்குக் கொண்டுவர அதிபர் ஓர் உத்தியைக் கையாள்வார். "அமைதிமணி" (Silence Bell) என்ற ஒரு மணி கலகலக்கும். அதன்போது ஆசிரியர் சரி, மாணவர் சரி எந்த இடத்தில் நிற்கின்றாரோ அங்கு ஆடாமல் அசையாமல் ஐந்து நிமிடங் களுக்கு அமைதியைக் கடைப்பிடித்துச் சிலை போல நிற்க வேண்டும். இது நல்ல பலனையும் கொடுத்தது. சச்சரவுகளில் ஈடுபட்டவர்கள் ஐந்து நிமிடங்களுள் மனமாற்றத்திற்குட்பட்டுவிடுவர். அவர்கள் ஒருவரோடொருவர் தோள்களில் கை சேர்த்துச் செல்லும் காட்சியை இன்றைக்கும் நினைக்கச் சிரிப்பு வருகின்றது.

என் அன்னையின் கல்வி நட வடிக்கைகள் பற்றியும் குறிப்பிட வேண்டும். சைவச் சூழலில் அமைந்த ஆங்கிலப் பாடசாலை என்ற நிலையில்

சமயம், தமிழ், ஆகிய பாடங்களைத்தவிர ஏனையவை யாவும் ஆங்கிலத்திலேயே கற்பிக்கப்பட்டன. ஆனால் பாடம் தொடர்பான மேலதிக விளக்கங்கள் தமிழிலும் வழங்கப்பட்டன. யாரேனும் வகுப்பில் தமிழில் கதைத்தால் பத்துச்சதம் குற்றப் பணமாகச் செலுத்த வேண்டும். குற்றப்பணம் செலுத்துதல் அடிப்படை உரிமை மீறல் எனத் தற்காலத்தில் வாதிக்கப்பட்டாலும் எம்முள் பலர் ஆங்கிலத்தில் வல்லவராவதற்கு இதுவே அடிப்படைக்காரணமுமாயிற்று.

அதிபர் சீதாராமன், மேல் வகுப்பு களுக்கு ஆங்கிலம் கற்பித்தார். அவர் மகன் ஸ்ரீநிவாசன் அவர்களும் ஆங்கிலம் கற்பித்தார். அவர் சுவையாகச் கற்றுக் கொடுப்பதில் வல்லவர். தமிழ் கற்பித்த காரைநகர் வேலுப்பிள்ளை உபாத்தியாயர், விஞ்ஞானம் கற்பித்த அளவெட்டி ஆறுமுகம் ஆசிரியர், சங்கீதம் போதித்த ஆறுமுகதாஸ் ஆசிரியர் போன்றவர்கள் எமக்குக் கற்பித்தவர்களுள் முக்கிய மானவர்கள்.

எமது பாடசாலைக்கு அண்மையில் அதாவது உரும்பிராய்ச் சந்திக்கு அருகில் C.M.S மிஷனரிப் பாடசாலை ஒன்றும் இயங்கியது. அப்பாடசாலைகளுக்கான சகலவித ஆதரவுகளையும் மிசனரிமார் வழங்கினர். எங்கள் பாடசாலைக்கு எமது ஊர்ப்பெரியவர்கள் பல்வேறு உத்தி களைக் கையாண்டனர். பாடசாலை மாணவர்களை வைத்து நாடகங்களை அரங்கேற்றினர். "திருநீலகண்டர்", "சுந்தரமூர்த்தி நாயனார்", "சக்குபாய்" முதலிய நாடகங்கள் மூலம் அதிக வருவாய் ஈட்டப்பட்டது. இவ்வாறாகத் திரட்டப்பட்ட நிதியின் மூலம் பரிசளிப்பு விழாக்களைச் சிறப்பாக நடத்தினோம். சேர்.பொன்.இராமநாதன், சேர். வைத்தி லிங்கம் துரைசாமி போன்றோரே அன்றைய பரிசளிப்பு விழாக்களில் பிரதம விருந்தி னராகக் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வுகள் யாவும் ஆங்கிலத்தில் நடைபெற்றன. இவர்கள் ஆங்கிலம் பேசுவதையும் இவர்களது நடையுடை பாவனைகளையும் பார்க்கும் போது நாங்களும் இவர்களைப் போல் ஆகிவிடமாட்டோமா என்ற ஆவல் எம்முள் ஏற்பட்டது.

பாடசாலை அமைப்பதற்கு எனது பாட்டனார் டாக்டர் வல்லிபுரம் எடுத்த முயற்சிகளுக்குப் பலர் பக்கபலமாகச் செயற்பட்டனர். பத்துப் பரப்புக் காணியை இலவசமாக வழங்கிய சி.ஐயம்பிள்ளை யின்(வேலுப்பிள்ளை) பூதானம் தனித்து வமானது. அவர் வழங்கிய காணியில் கிடுகுக் கொட்டிலை அமைத்துப் பாடசாலையை ஆரம்பித்தனர். அம்பல வாணர், சக்கடத்தார், சடையர், சைவமுத்தர் உபாத்தியாயர், சுருட்டுத் தொழிலதிபர் காசிப்பிள்ளை, அமிர்தலிங்கம் உபாத்தி யாயர், கார்த்திகேசு, தம்பர் போன்றோர் பாடசாலையின் எழுச்சிக்காக அரும்பாடு பட்டோருள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவ்வாறு தற்போதுள்ள இடத்தில் பாடசாலை ஆரம்பமாவதற்கு முன்னர்

இலங்கையில் புகழ் பெற்ற இலிங்கம் சகோதரர்களின் தந்தையார் திரு. செல்லப்பா வீட்டில் ஐந்துபிள்ளை களுடன் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதாக ஊரவர்கள் கூறக் கேட்டிருக்கின்றேன். இந்துப் பாடசாலை என்ற உணர்வுடன் நாளடைவில் பல மாணவர்கள் அனுமதி பெற்றனர். ஐயம்பிள்ளை அவர்கள் வழங்கிய காணியில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்ட காலத்தில் முறையான கலைத்திட்டத்திற்கமைவான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை நாடி பாடசாலை நிர்வாகத்தை இந்துக்கல்லூரிச் சங்கத்தாரிடம் ஒப்படைத்தனர். இக் காலத்தில் பாடசாலைக்கெனத் தம்மை அர்ப்பணித்துச் செயலாற்றும் அதிபர் களும் வந்து வாய்த்தனர்.

என்னுடைய மாணவப் பருவத்திற்குப் பின்வந்த அதிபர் (கம்யூனிஸ்ட்) ஏ.வைத்திலிங்கம் டாக்டர் வ.வல்லி புரத்து டன் மலாயாவிற்குச் சென்று பணம் சேகரித்து வந்தார். அதன் பின் வந்த அதிபர்களும் மலாயா நாட்டிலுள்ள உரும்பிராய் வாசிகளின் உதவிகளைப் பெற்றுப் பாடசாலையின் பௌதீக வளங்களைப் பெருக்கினர்.

திரு.கந்தையா சிவப்பிரகாசம், டாக்டர் வல்லிபுரம் மகன் செல்வநாயகம் இங்கேயுள்ள உரும்பிராய் கிழக்கு, தெற்கு வாழ் பெரியோர்கள் யாவரும் ஊக்கமாகப் பணம் சேகரித்துப் பாடசாலை வளவில் வடக்கு, மேற்கு, தெற்கு எனத் தேவையான இடங்களில் கட்டடங்களை அமைத்தனர். இது தவிர கற்பகப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் தமிழ்ப் பாடசாலை ஒன்றையும் நிறுவினர்.

நான் படித்த காலத்தில் எங்கள் பாடசாலை நூலகத்தில் பல சஞ்சிகைகள் எமது அறிவுப் பசியைத் தீர்த்தன. கல்கி, கலைமகள், Modern Riview, Indian Riview மகாத்மா காந்தியின் மாதப் பத்திரிகைகள் (அவற்றுள் ஒன்று பெண்களை மையப் படுத்தி வெளிவந்தது) இவற்றையெல்லாம் போட்டி போட்டு வாசிப்போம். கல்கி கிருஷ்ணமூர்த்தி, கலைமகள் கி.வா. ஜகந்நாதன், ராஜாஜி போன்ற எழுத்தா ளர்களின் படைப்புக்களை வரிதவறாமல் படித்தோம்.

எங்கள் பாடசாலையில் பெண் கல்விக்கு அதிக விழிப்புணர்வை வழங்கி வந்தனர். சமூகச் சூழமைவின் பின் புலத்தில் குடும்ப வாழ்வு அடிப்படையில் என்னால் சமூக முதன்மை பெறமுடியாது போனமை நான் செய்த துரதிஷ்டமே. ஆயினும் ஆங்கில மொழியில் உரையாற்றக் கூடிய வல்லமையை, கல்வி அறிவை கல்லூரி எனக்கு வழங்கி யிருந்தது.

1946ம் ஆண்டு என நினைக் கின்றேன் நான் குருநாகலில் வசித்தபோது ஏற்பட்ட ஒரு சம்பவம் என்னால் மறக்கமுடியாதது. எமது வதிவிடத்தைச் சுற்றிச் சிங்கள வீடுகள் அமைந்திருந்தன. அங்குள்ள பெண்கள் சாதாரணமாக எல்லோருடனும் பழகுவர். எங்கள் வாழ்வியல் அவ்வாறானதல்ல. எங்கள் வீட்டுக்கு வந்த ஒரு பெண் என்னுடன்


அழகாக ஆங்கிலத்தில் பேசினார், பெண் விடுதலை பற்றியெல்லாம் எடுத்துரைத்தார். நானும் அவருக்கு ஈடாகக் கருத்து ரைத்தேன். ஈற்றில் தன்னைத் திருமதி. விவியன் குணவர்த்தனா என அறிமுகம் செய்த அவர் "நீங்கள் யாழ்ப்பாணத்தில் இராமநாதன் கல்லூரியிலா கல்வி கற்றீர்கள்? எனக் கேட்டார். நான் "உரும்பிராய் இந்துவில்" எனப் பெருமையாகக் கூறினேன். அன்று நான் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே கிடையாது. ஏனெனில் யாழ்ப்பாணச் சைவப்புலப் பெண் கல்வியில் லேடி இராமநாதன் தனது பாடசாலையில் சிறப்பான ஆங்கில வளம் மிக்க மாணவி களை உருவாக்கிக் கொண்டிருந்தார்.

எங்கள் அதிபர் கம்யூனிஸ்ட் வைத்திலிங்கத்தின் கொள்கைகளால் ஊரவர்கள் பலர் ஈர்க்கப்பட்டனர். சமதர்மவாதிகளான வைத்திலிங்கம், என்.எம். பெரேரா, லெஸ்லி குணவர்த்தன, போன்ற அறிஞர்களைத் தமிழ் மக்கள் தேர்தல்களில் நிராகரித்தமை நாம் செய்த தவக் குறைவென்றே நினைக்கின்றேன்.

எனது 91 வயதில் படுக்கையில் இருந்தபடி இவ்வாக்கத்தை வரைந்துள் ளேன். நிறைவாக ஒன்றைச் சொல்ல முடியும். "தண்ணீர் விட்டோ வளர்த்தோம் இப்பயிரை கண்ணீராலே காத்தோம்." எனக் கூறுமளவிற்கு எம்மூரவர்கள் இக்கல்லூரியைக் காத்துள்ளனர். இந் நிலையில் எனது காலப்பயணம் நிறைவடைகின்றது. என் உயிர் மூச்சாக விளங்கும் கல்லூரி அன்னை Alma mater இன்றைய அதிபர் திரு.அ.ஈஸ்வர நாதனின் தலைமையில் மேலும் பொலிவடைய எனது நல்வாழ்த்துக்கள்.

# மனதில் பதிந்த பசுமையான நினைவுகள்

திரு.சண்முகம் ஏகாம்பரநாதன் (J.P)
பழைய மாணவன்
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி



நான் 1950 ஆம் ஆண்டில் நான்காம் ஆண்டில் கல்வி பயில் "இங்கிலீஸ் பள்ளிக் கூடம்" என அழைக்கப்பட்ட உரும்பிராய் இந்து விற்கு வந்த சமயம் மாடிக்கட்டடங்கள் இல்லை. ஒரே ஓலைக் கொட்டில்கள் வகுப்பறைகளாக இருந்தன. அப்பொழுது எமது ஊரவர்களே ஆசிரியர்களாகப் பணி புரிந்தார்கள். இவர்களுடன் இந்தியாவில் இருந்து வந்த ஆசிரியர்களான திரு.கிருஷ்ணமூர்த்தி ஐயர், சக்கரையா, தேவசகாயம், துரைராஜ் என்பவர்களுடன் சிங்களம் கற்பிப்ப தற்காகப் புத்தபிக்கு தர்மலோகா என்பவரும் ஆசிரியர்களாகக் கடமையாற்றினார்கள். அக்காலத்தில் இவர்களுடன் பழகி, அளவளாவி கல்வி பயின்ற காலத்தை மறக்க இயலாது. இந்தப் பசுமையான நினைவை இன்றும் எண்ணிப் பார்ப்ப துண்டு.

திரு.சீதாராமன், ஸ்ரீநிவாசன் ஐயர் அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் இல்ல மெய்வல்லுநர்ப் போட்டிகள், கிரிக்கெட், உதைபந்தாட்டம், கலை விழாக்கள், பரிசளிப்புக்கள், திறந்தவெளி அரங்கில் இடம்பெறுவது இரவு நேரத்தில் இதுவும் ஒரு பசுமையான நினைவு. இத்துடன் எமது ஊர் மக்கள் விளையாட்டுப் போட்டிக் காலத்தில் மைதானத்தில் நிரம்பி வழிவதுடன், உதைபந்தாட்டத்தின் போது நாம் கோலடித்தால், சால்வையையும் தூக்கி எறிந்துவிட்டு, சேட்டையும் கழற்றி எறிந்துவிட்டு, நடுமைதானத்தில் அத்துமீறி நுழைந்து, கோலடித்தவரைக் கட்டித்தழுவி, முத்தம் கொடுத்துச் செல்லும் பசுமையான காட்சியை உயிர் உள்ளவரை மறக்க இயலாது.

மேற்கூறிய அதிபர் அன்றைய காலத்தில் மாணவர்களுடன் மாலை நேரத்தில் தானும் ஒரு மாணவனாக விளையாடுவதையும், பின் இரவு நேரத்தில் பெற்றோல்மாக்ஸ் விளக்கை ஏற்றிக்கொண்டு சைக்கிள் மூலம் பாடசாலை சென்று இரவுவேளையில், விளையாட்டு வீரர் களுக்கு ஆங்கிலக் கல்வியை ஊட்டியமை என்றென்றும் மனதில் பசுமையாக பதிந்து இருக்கிறது. அன்றைய காலத்தில் Standed English என்ற ஆங்கில அறிவை யூட்டும் நல்ல தரமான ஆங்கிலப் புத்தகத்தை Father Long உடன் சேர்ந்து எழுதிய பெருமையும் திரு.சீ.ஸ்ரீநிவாசனுக்கும், எமது பாடசா லைக்கும் உரியதாகும்.

நான் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் கல்வியயின்ற காலப் பகுதியில் பாடசாலை உதைபந்தாட்டக் குழுவிலும், மெய்வல்லுநர் போட்டிகளிலும் பங்கு கொள்வேன். நான் "வீமா" இல்லத்தில் இருந்த காலத்தில் இல்லத் தலைவராகவும் செயற்பட்டேன். நான் 220யார் ஓட்டம், 440யார் ஓட்டம், 880யார் ஓட்டம், ஒரு மைல் ஓட்டப் போட்டிகளில் பல வருடங்களில் முதலாவதாக வந்துள்ளேன். இதே போல் தடி ஓட்டப் போட்டியிலும், நான் தான் முடிவுறும் பகுதியில் இருந்து ஓடி, எமது இல்லத்தை முதலாம் இடத்திற்கு கொண்டு வருவேன். இதே போல் வலிகாமம் கிழக்கு பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டிகளிலும் ஓடி எமது கல்லூரிக்கு முதலாம் இடத்தைப் பெற்றுக்கொடுக்கப் பாடுபடுவதை நினைக்கும் போதும் இன்றும் எனது மனக்கண் முன் ஊஞ்சலாடும். இதேபோல் எனது தம்பி ஸ்ரீகாந்தன் என்னிலும் ஒருபடி மேலாக, இலங்கைத்தேசிய மட்டத்திலும் 880 யார், ஒரு மைல் ஓட்டங்களிலும் பங்குகொண்டிருந்தார். அவருடன் நானும் கொழும்பு சென்று அவருக்கு உதவி செய்தமையை இன்றும் மறக்க இயலாது.

நான் கல்வி பயின்ற போது கடமை புரிந்த ஆசிரியர்களான திரு.சபாநாயகம், திரு.இராசநாயகம், திரு.தாமோதரம் பிள்ளை, திரு.கார்த்திகேசு, திரு.ப.சுந்தரலிங்கம், திருமதி.சத்தியா விமலேந்திரன், திருமதி.தவமணி இரத்தினசிங்கம், திரு.பொன்னுச்சாமி, திருமதி.மீனாம்பிகை தவரத்தினம், திருமதி.தங்கம் ராஜானந்தன், திருமதி.காந்திமதி இராசகோபால், திருமதி.குமரேஸ்வரி, திரு.வேலுப்பிள்ளை, திரு.ஆறுமுகம், திரு.மகாலிங்கம், திரு.சபாரத்தினம், திரு.த.வடிவேலு, திரு.C.கனகலிங்கம், திரு.செ.ஐயாத்துரை, திரு.க.பொன்னம்பலம், திரு.காசி விசுவநாதன் எமது அதிபராக இருந்த திரு.ஆ.இளையதம்பி, திரு.அ.வைத்திலிங்கம் ஆகியோர் என்னுடன் அன்பாகப் பழகி, தங்கள் பிள்ளையைப் போல் அரவணைத்து எனக்குக் கல்வி ஊட்டியமையை இன்றும் நினைத்து ஆதங்கப் படுவேன். இப்படியான காலம், இனி ஒரு போதும் எமக்குக் கிடையாது. இவற்றிற்கு எல்லாம் காரணம் எனது தந்தை சண்முகம் இக்கல்லூரியில் இரசாயன பாட ஆய்வுகூட உதவியாளராகப் பணிபுரிந்தமையே காரணமாகும்.

## இதயத்தில் நிழலாடும் எங்கள் ஆசான் (திரு.கந்தையா பொன்னம்பலம் ஆசிரியர்)



உரும்பிராய் கிழக்கிலே புகழ்பூத்த குடும்பமாகிய கந்தையா சேதுப்பிள்ளை தம்பதிகளுக்கு ஐந்தாவது புத்திரனாகப் பிறந்தவரே அமரர் திரு. பொன்னம்பலம் ஆசிரியர் ஆவார். இவர் சிறுவயதிலேயே தந்தையை இழந்ததால் தாயாரினதும், சகோதரர்களினதும் அரவணைப்பில் வாழ்ந்து வந்தார். இவர் தனது கல்வியை தான் பிறந்த கிராமமாகிய உரும்பிராயில், சைவத்தமிழ் வித்தியாசாலை, உரும்பிராய் இந்துக்கல்லூரி ஆகிய பாடசாலைகளில் மேற்கொண்டார்.


இவர் இளமையில் அழகிய தோற்றமும், கம்பீரமான வளர்ச்சியும் உடையவராக இருந்தமையினால் பாடசாலையில் மாணவத்தலைவனாகவும், உதைபந்தாட்ட அணி


யின் தலைவராகவும் செயற்பட்டு அணியின் வெற்றிக்காக உழைத்தார் என அறிந்தேன். இவர் சிறுவயதிலேயே கல்வியில் சிறந்து விளங்கியமையால் இவரது சகோதரர்கள் இவரை மேற்படிப்பிற்கு உற்சாகமூட்டி, பண உதவிகள் புரிந்தனர். இவர் 1950 ஆம் ஆண்டில் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராக உரும்பிராய் இந்துக்கல்லூரியில் இந்து போட் அதிகாரசபையின் மூலம் முதன் முதலாகக் கடமையை ஏற்றுக் கொண்டார். பின் இவர் தனது முயற்சியால் லீவு நேரங் களில் கல்வியை கற்று ஒரு B.A பட்ட தாரியாக நியமனம் பெற்றார். அப்போது மிகவும் கஷ்டமான பாடங்களாகிய பாளி, சமஸ்கிருதம், தமிழ் ஆகியவற்றையே B.A பட்டப் படிப்பிற்கு மேற்கொண்டார்.

இவர் ஒரு துடிப்பானவராகவும், அழகிய தோற்றமும், கொண்டிருந்தமையால் உரும்பிராய் கிழக்கில் புகழ்பூத்த குடும்பமாகிய (மலேசியாவில் கடமை யாற்றிய) கதிரேசு என்பவரின் மகள் புனோறா பரிமளம் ஆசிரியர் என்பவரைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டார். இவருக்கு இல் வாழ்க்கையில் 5 ஆண் பிள்ளைகளும், 2 பெண்பிள்ளைகளும் பிறந்து அவர்களும் கல்வியில் நல்ல நிலையில் இருந்து இன்று வெளிநாடுகளில் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகிறார்கள்.

இவர் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்த வேளை ஒழுக்கக் குழுவிற்கு தலைமை ஆசிரியராகவும், மாணவர்களுடனும் அன்பாக பழகும் சுபாவம் உடையவராகவும் இருந்தார். இவர் H.S.C கலைப்பிரிவு மாணவருக்கு வகுப்பாசி ரியராக இருந்ததுடன் எங்களுக்கு சமஸ்கி ருதம், தமிழ், இலக்கணம் ஆகிய பாடங் களையும் மிகவும் திறமையாகக் கற்பித்தார். இத்துடன் கல்விப்பொதுத் தராதர சாதாரண வகுப்பு மாணவர்களுக்கு தமிழ், சமயம், ஆங்கிலம் முதலிய பாடங்களையும் கற்பித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. இவர் 1975ம் ஆண்டுவரை ஆசிரியத் தொழிலை மேற்கொண்டு பல சேவைகளைச் செய்து வந்தார். இளைப்பாறியபின் பல பொதுப் பணிகளிலும் ஊரில் செயற்பட்டு வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கவை. பிற்காலத்தில் சுகயீனமுற்று 1987இல் சிவபதம் அடைந்தது எமக்கு எல்லாம் ஒரு பேரிழப்பாக அமைந்தது. அவரது நாமம் என்றும் எமது மனதில் நிலைத்திருப்பதால், இன்றைய புதிய மாடிக்கட்டடத்தில் ஒரு வகுப்பறைக்கு அவரது பெயரைச் சூட்டும்படி, எமது பழைய மாணவரும், இக்கட்டடத்தை அமைத்துத்தரும் கொடைவள்ளலும், தொழிலதிபருமான திரு.க.தர்மகுலசிங்கம் அவர்கள் குறிப்பிட்டதிலிருந்து நான் மேலே குறிப்பிட்ட விடயம் புலனாகிறது. அத்துடன் இவரது அயல் வீட்டுக்காரர் என்பதால் இவரது குறிப்புக்களை நான் ஞாபகமாக வைத்து எழுதியுள்ளேன்.

# எமது கல்லூரியின் பழைய ஆராதனை மண்டபம்
## (அகற்றப்பட முன்னர்– 2010)





நூற்றாண்டுவிழா காணப்போகும் எமது கல்லூரியின் வரலாற்றில் 29-04-2010 பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய முக்கிய தினமாகின்றது. ஏனெனில் எமது ஆராதனை மண்டபம் நீண்டகாலப் போரினாலும், மிகப் பழைய கட்டடமானதாலும் மிகவும் பாதிப்புக்குள்ளானது. இதைப் புனரமைக்க முடியாததால் புதிய ஆராதனை மண்டபம் ஒன்று கட்டப்பட வேண்டும் என்ற எண்ணமும் தேவையும் ஏற்பட்டது. வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் வாழும் பாடசாலை நலன்விரும்பிகள் பலரும் இது சம்பந்தமாக ஆழமாகச் சிந்திக்கத் தலைப்பட்டனர். 6, 7 வருடங்களாகக் கல்லூரி அதிபரும், பழையமாணவர் சங்க, அபிவிருத்திச்சங்க முக்கிய உறுப்பினர்கள் பலரும் இவ்விடயமாகப் பலரோடு பல தொடர்புகளை ஏற்படுத்தி, தீவிர முயற்சியில் இறங்கினர்.

இருந்தும் காலம் கடந்து போனதேயொழிய காரியங் கைகூடவில்லை. இதற்கு காரணிகளாக நவீன வசதிகள் கொண்ட இரண்டுமாடிக் கட்டடம் அமைய வேண்டும் என்ற விருப்பும் அப்போதைய நாட்டுச் சூழ்நிலையும் காரணமாக அமைந்தன. இறுதியாகக் காலம் கனிந்தது. கைகொடுக்க முன்வந்தார் எமது கல்லூரியின் பழைய மாணவரும் இலண்டன் மாநகரில் தொழிலதிபராக விளங்குபவருமான **திரு.கந்தசாமி தர்மகுலசிங்கம்** என்ற பெருவள்ளல். இவர் கட்டடத்துக்கான முழுச் செலவுகளையும் தான் பொறுப்பேற்பதாகவும், கட்டடத்தை 2011-04-03 அன்று நூற்றாண்டு விழாவோடு திறப்பதற்கான சகல ஒழுங்குகளையும் செய்யுமாறு எம்மைப் பணித்தார். அத்தோடு நின்று விடாமல் எமது வேண்டுகோளை ஏற்று இலங்கைக்கு வருகைதந்து, 29-04-2010 அன்று 2010ம் ஆண்டிற்கான கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் பிரதமவிருந்தினராகச் சிறப்பித்து, இரண்டுகோடி ரூபாவில் கட்டப்பட இருக்கும் இரண்டுமாடிக் கட்டடத்துக்கான அடிக்கல்லை சுபமுகூர்த்த வேளையில் நாட்டி வைத்ததோடு, அன்றைய நாளை கல்லூரியின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கவும் செய்தார்.

# இனிய நினைவுகள்

**திருமதி.தங்கலட்சுமி இராசானந்தன்**
**ஓய்வு பெற்ற ஆசிரியை**
**கனடா**



உரும்பிராய் இந்துக் கல்லூரி நூற்றாண்டு விழாவை அங்குள்ள கல்லூரிச் சமூகம் விமரிசையாகக் கொண்டாட இருப்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். நான் இக்கல்லூரியில் எனது வாழ்க்கையின் பெரும்பகுதியைக் கழித்துள்ளேன். உரும்பிராய் இந்துக் கல்லூரியின் மாணவியாக இருந்து, பின் இராமநாதன் கல்லூரியில் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பில் கல்வி கற்று, பின் பல்கலைக்கழக படிப்பு முடிந்ததும் தொடர்ந்து உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றும் சந்தர்ப்பத்தைப் பெற்றேன். இக்கல்லூரியில் நான் 1960ம் ஆண்டு தொடக்கம் 1990ம் ஆண்டு வரையும் ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றேன். இக்கல்லூரியில் எனது சேவைக் காலத்தில் மிகவும் சந்தோசமான சூழ்நிலையில் கல்விகற்பிக்கக் கூடியதாக இருந்தது. இக்காலப்பகுதி, எனது வாழ்க்கையில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

நான் ஆசிரியராக இருந்த காலத்தில் அமரர் வைத்திலிங்கம், அமரர் கனகலிங்கம், அமரர் சச்சிதானந்தம், திருவாளர் சிவன்பாலன் ஆகியோர் அதிபர்களாக இருந்தனர். அதிபர் வைத்திலிங்கத்தின் காலத்தில் கல்லூரி "A" தரத்திற்கு உயர்த்தப்பட்டது. சிறந்த ஆசிரியர்களின் சேவையே கல்லூரி பல்துறைகளிலும் முன்னேறிக் கொண்டு செல்ல வாய்ப்பாக இருந்தது. அக் காலத்தில் இக்கல்லூரியில் இருந்து பல மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு வைத்தியத்துறையில் கற்கத் தெரிவாகியுள்ளனர். அதிபர் சிவன்பாலனின் பிள்ளைகள் இருவர் பல்கலைக் கழகத்திற்கு வைத்தியத்துறையில் கற்கத் தெரிவாகியிருந்தனர். இன்று அவர்கள் யாழ்ப்பாண அரசினர் வைத்திய சாலையில் சிறந்த வைத்திய நிபுணர்களாகக் கடமை புரிகின்றனர். மற்றும் திரு.துரை.மனோகரன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் பேராசிரியராகக் கடமை புரிகின்றார். இப்படி இன்னும் பலர் சிறந்த நிலையில் புகழுடன் உள்ளனர். உரும்பிராய் இந்துக்கல்லூரி மென்மேலும் ஓங்கி வளர்ச்சியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

# மீட்டும் நினைவுகள்... (1971-1976)

Earlier:- **Dr.செல்வி.வா.சரவணமுத்து**
**(மிருக வைத்தியர்/இலங்கை)**
Now:- **Mrs.வாணிதேவி அநந்தநாதன்**
**(அவுஸ்திரேலியா)**



"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்த னவே" என்ற முதி யோர் கருத்து முற்றும் உண்மையே! பல்லா யிரக்கணக்கான மைல்களுக்கப் பால் நாம் வாழ்ந்தாலும், நாம் பிறந்து, வளர்ந்த மண், நமக்கு அறிவூட்டி நம் நல் வாழ்விற்கு வழிகாட்டிய அறிவுக் களஞ்சியங்களை மறக்க முடியுமா!

எட்டாம் வகுப்பு வரை உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையில் கற்று, உயர் படிப்புக்காக உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு வந்தசமயம், அதிபர் ஆசிரியர்களின் அன்பான வரவேற்பும், பாடசாலை ஒழுங்கு முறையும் என்னை நன்றாகவே கவர்ந்து விட்டது. என்றே சொல்ல முடியும். காரணம் பல தூரம் கால்நடையாகப் பாடசாலை போய்வர வேண்டிய நிலைமை இருந்தும், 5 வருடக் கல்லூரி வாழ்க்கை எவ்வாறு பறந்து சென்றது என்பது தெரியவில்லை. இக்கல்லூரி வாழ்க்கையில் எனக்கு ஏற்பட்ட பசுமையான நினைவுகள் பலவுண்டு.

அவற்றுள் சில முக்கியமாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பிரார்த்தனை மண்டபத்தில் நடக்கும் ஆராதனை, அதிபரின் சொற்பொழிவு, ஆசிரியர்களின் அன்பான வழி நடத்துதல், மற்றும் மாணவர் நிகழ்ச்சிகள் மறக்க முடியாதவை. இது தவிர வகுப்பறைகளிற்கு ஆசிரியர்கள் வந்ததும், நாம் பாடங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காகவும், நமது பண்பாடுகள் சீராக இருக்க வேண்டும் என்பதற்காகவும் தரும் அறிவுரைகள் இன்றும் என்னை விட்டுப் போகவில்லை. எல்லா மாணவர்களும் பாடங்களில் அதிக புள்ளிகள் எடுக்கா விட்டாலும், அம்மாணவர்களை இனங் கண்டு, அவர்களை விளையாட்டு, சங்கீதம், சமையற்கல்வி, வரைதல் என்பவற்றில் ஊக்குவித்து அம்மாண வர்களைப் பாடசாலை வாழ்க்கையில் கவர வைத்து, கல்வியூட்டிய ஆசிரியர் களை மறக்க முடியுமா?

அன்பு, கண்டிப்பு, கடமையுணர்வு ஆசிரியர்கள் எல்லோரிடமும் படிக்க எனக்கு வாய்ப்புக் கிடைக்கா விட்டாலும், அதிபர் திரு.சச்சிதானந்தம், திருமதி.

இரட்ணசபாபதி, திரு.பூரணச்சந்திரன், திரு.சிவன்பாலன், திருமதி.அ.துரைச் சாமி, பண்டிதர்.நவரட்ணம், திரு. இரட்ணம், திருமதி.கணேசலிங்கம், திருமதி.இரட்ணசிங்கம், திரு.பொன்னம் பலம் ஆசிரியர்களுக்கு, மாணவியாக 1971ம் ஆண்டு காலகட்டத்தில் கிடைத்தமை எனது வரப்பிரசாதமே!

பாடசாலை வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த சக மாணவர்களும் அவர்களது கலந்துரையாடல்களும் இன்றும் மறக்க முடியாதவை. அன்பும், பண்பும் நிறைந்த சகமாணவர்களை வகுப்பறையில் மட்டுமல்ல இடைவேளைகளிலும், பாட சாலை விடுமுறைகளிலும் சந்திப்பதில் ஆர்வமாக இருந்தேன். மேலும் பல தொடர்புகளை வருடாந்த இல்லப் போட்டிகளிலும், சாரணீய இயக்க நிகழ்ச்சிகளிலும், பாடசாலை சுற்றுலா முக்கியமாக திருக்கேதீஸ்வரம் தல யாத்திரையிலும் ஏற்படுத்தி, பல அனுபவங்களைப் பரிமாறினோம். உயர்தர வகுப்பு ஒன்று கூடல் ஒவ் வொரு கிழமையும், பாடசாலை வாசிக சாலையில் நடைபெறும் பொழுது நம்மையே மறந்து விடுவோம்.

“இளமையிற் கல்விசிலையில் எழுத்து”, “காற்றுள்ள போதே தூற்றிக் கொள்” என்ற முதியோர் முது மொழிகளும் “படிக்கிற பிள்ளை எங்கிருந்தாலும் படிக்கும்” என்ற எனது தாயாரின் எச்சரிக்கையும், இன்று உண்மையானதென்பதை உணர வைப்பதுடன் எடுத்துக்காட்டாகவும் விளங்குகின்றது. அவுஸ்திரேலியா, கனடா, இலண்டன், ஜேர்மனி, சுவிற்சலாந்து, நோர்வே, இன்னும் பல நாடுகளிலும் உரும்பிராய் இந்துக்கல்லூரி பழைய மாணவர்கள் வாழ்கின்றனர்..

“வாழ்க! நூற்றாண்டு காணும் உரும்பிராய் இந்துக்கல்லூரி!
வளர்க! உரும்பிராய் இந்துக்கல்லூரி.”

# உரும்பிராய் இந்துக்கல்லூரி நூற்றாண்டு விழா மலருக்கு

திரு.சி.இராஜநாயகம்
B.Sc, Dip in Edu, SLEAS
உங்கள் ஆசிரியனும் கல்வி அதிகாரியும்



உரும்பிராய் இந்துக் கல்லூரி நூற்றாண்டு மலர் வெளியிடுவதையிட்டுப் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். எனது பசுமையான நினைவுகள் ஐம்பத்தாறு ஆண்டுகளுக்கு மேற்பட்டவை. மலரின் ஓர் இதழ் ஆகட்டும். இது கல்லூரி நூறு ஆண்டுகளுக்கு முன் பிறந்து வளர்ந்து கல்விப்பணி செய்து சிறந்தபண்பான அறிவுடைய மக்களைக் கிராமத்துக்குக் கொடுத்தது நாடறிந்த உண்மை.

இந்துக்கல்லூரிகளின் அதிகாரசபை பல இந்துக்கல்லூரிகளை நிர்வகித்தது. உரும்பிராய் இந்து, யாழ்ப்பாண இந்து, சாவகச்சேரி இந்து, கொக்குவில் இந்து, காரைநகர் இந்து, வட்டுக்கோட்டை இந்து அதன் பராமரிப்பில் யாழ்.குடாநாட்டு, உயர்ந்த கல்வியாளர்களையும் தூரநோக்கு உடையவர்களையும் கொண்டிருந்த காலம். மக்கள் கல்வி அறிவு பெற்று உயர்ந்த மனித சமுதாயம் தோன்றும் என நம்பிக் கல்லூரிகளைக் குடாநாடு எங்கும் ஸ்தாபித்தார்கள்.

உரும்பிராய் இந்துக்கல்லூரி நாற்பத்தொரு ஆண்டுகள் வளர்ந்து, உயர்ந்து புகழ் பெற்றிருந்தகாலம். என்னையும் ஒரு ஆசிரியராக ஏற்றுக்கொண்டது.

சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் விஞ்ஞானப்பட்டதாரியானேன். குடா நாட்டுக் கல்லூரிகளில் விஞ்ஞானப்பட்டதாரிகள் குறைவு. இந்தியப் பல்கலைக் கழகப் பட்டதாரிகள்தான் விஞ்ஞான ஆசிரியர்கள். உரும்பிராய் இந்துவிலும் இருவர். இரசாயனம், பௌதீகம் பாடங்கள் கற்பித்தார்கள்.

எனக்கும் பட்டப்படிப்பு முடிந்தது. பாடம் உயிரியல் விஞ்ஞானம். வேலை வேண்டும். பெரிய கல்லூரிகளில் ஆசிரியப் பணி செய்வது கௌரவமாகக் கருதப்பட்ட காலம். இந்துக்கல்லூரி நிர்வாகத்துக்கு விண்ணப்பித்தேன். தந்தியில் நியமனம் வந்தது. கிடைத்த இடம் உரும்பிராய் இந்துக்கல்லூரி. உயிரியல் பாடம் சொல்ல ஆசிரியர்கள் இல்லை. நான் யாழ் இந்துவில் படித்த காலம். பல மாணவர்கள் உரும்பிராயிலிருந்து வந்து படித்தார்கள். விடுதியிலும் சிலர். எனக்கு நண்பர்களானவர்கள் பலர். அறுபது ஆண்டுகளுக்கு முன்பே உரும்பிராய்க் கிராமத்தைப் பற்றி நன்கு அறிந்திருந்தேன். அந்நியப்பிரதேசமாக உணரவில்லை. மன மகிழ்வுடன் ஆசிரிய சேவையை ஏற்றுக்கொண்டேன். ஆண்டு 1954 ஜனவரி.

பட்டப்படிப்பு முடிந்து ஆசிரியப் பணிக்கு வந்த முதல் கல்லூரி. அதிபர் ஸ்ரீநிவாசன்

காலம். அவர் ஆங்கில இலக்கியத்தில் M.A பட்டதாரி. இந்தியப் பிறப்பு. அந்தணர் சிறந்த கல்விமான், அன்பானவர், பண்பானவர், விளையாட்டுத்துறையில் மிகவும் விருப்பம் கொண்டவர். கல்லூரியைக் கால்ப்பந்தாட்டத் திலும், துடுப்பாட்டத்திலும் நாடறியச் செய்தவர்.

முதல் நாள். காலைப் பொழுது. கல்லூரி ஆரம்பமாகும் நேரம். நான் அதிபர் அலுவலகத்தில். அன்பான வரவேற்பு. சென்னை கிறிஸ்தவக் கல்லூரி மாணவன் என்றேன். அதிபர் முகத்தில் புன்னகையும் மகிழ்ச்சியும் தெரிந்தது. கண்டிப்பான அதிபராக இல்லாது தந்தை யின் நிலையில் இருந்து அன்பு செலுத்தி அறிவூட்டி வேலை வாங்கினார். உரும்பி ராய் இந்துவை நேசித்தவர். கொழும்பு புனிதர் யோசேப்பு கல்லூரியில் பட்டதாரிப் பிரிவுக்கு ஆங்கில இலக்கியம் கற்பிக்க நியமனம் பெற்றார். போகவில்லை. இந்துவில் அதிபராகவே இருந்தார். உரும்பிராய் மக்களையும் கல்லூரியையும் இழக்க மனம் மறுத்தது. அதிபர் ஸ்ரீநிவாசன் அவர்களின் தந்தை சீதாராமன் ஐயர். இந்துவில் அதிபராய் இருந்தவர். ஓய்வானதும் தனையனிடம் கல்லூரியை ஒப்படைத்தார். தமிழ் நாட்டில் கொடுமுடி இவரது ஊர். "பாண்டிக் கொடுமுடி" எனப்பாடல் பெற்ற தலம் உண்டு. இவர் இல்லத்தில் நான் ஒரு வாரம் சிறப்பு விருந்தினர். பரிவான அன்பு. நல்ல உணவு. தோழமை உறவு அந்த வயதிலும் சுறுசுறுப்பான வாழ்வு. காலை காவேரியில் இருவரும் இன்பமான நீராடல். பிரிவு கஷ்டமாக இருந்தது. இவர் காலத்தில் கல்லூரி மிகவும் உயர்நிலையில். கண்டிப் பானவர். சிறந்த நிர்வாகி. மனத்துணிவும் இருந்தது. மக்கள் மத்தியிலும் நன்மதிப்புப் பெற்றவர். முதல் நாள். கல்லூரியில் என் போன்றவர்களும், வயது முதிர்ந்த ஆண், பெண் ஆசிரியர்களும் அறிமுகமானார்கள் புன்சிரிப்புடன். அன்பான, பண்பான, சிறந்த கல்வியாளர்கள் குழாத்தில் இருப்பதாக உணர்ந்தேன். அன்றே கல்லூரி பிடித்து விட்டது.

அழியாத நினைவுகள். காலம் அதிகம். இவர்கள் என் மனதில் அழிக்கப்படா தவர்கள். திருவாளர்கள் சபாநாயகம், ஆறுமுகம், வேலுப்பிள்ளை, இளையதம்பி, தாமோதரம்பிள்ளை, சண்முகராசா, அம்பி கைபாகன், சிவபாலன், பரமேஸ்வரன், கிருஷ்ணமூர்த்தி, துரைராசா, கார்த்திகேசு, சபாரத் தினம், தேவன், இராதாக்கிருஷ்ணன். பெண் ஆசிரியைகளில் திருமதிகள் இரத்தினசிங்கம், காந்திமதி, வைத்திலிங்கம், இளையதம்பி, பேராயிரவர், செல்வி.இராசா அன்பான, பண்பான ஆசிரியர்கள். கல்லூரிக்காக அர்ப்பணிப்புடன் பணி செய்தவர்கள். நல்ல ஆசிரியனாக, என்னைப் புடம் போட்டு ஆக்கியவர்கள். கல்வி அதிகாரியாக உயர்ந்ததும் இவர்கள் வழிகாட்டலில்தான்.

கல்லூரியில் உயிரியல் ஆய்வு கூடம் இல்லை. மாணவர்களுடன் காங்கேசன் துறை, கீரிமலை, மண்டைதீவு, சிறுத்தீவு, குருநகர் கடற்பகுதிக்குச் சென்று கடல் வாழ் உயிரினங்களைச் சேகரித்தோம். தரையி லிருந்தும் சில உயிரினங்கள். பாதுகாக்கக் கூடிய தாவரங்கள், உயிரியல் விளக்கப் படங்கள். மருந்திட்டு, போத்தல்களில் பாதுகாக்கப்பட்டன. இவ்உயிரினங்களை,

இயற்கை சூழலில் மாணவர்கள் அவதானித்துச் சேகரித்தார்கள். ஒரு உயிரியல் ஆய்வு கூடம் அமைந்தும் விட்டது.

உயர்தர வகுப்பில் இணுவில், திருநெல்வேலி, கோண்டாவில், கோப்பாய், ஊரெழு, ஈவினை, வயாவிளான் போன்ற தூர இடங்களிலிருந்தும் கல்லூரிக்கு வந்தார்கள். மேல் வகுப்புகளில் ஆண், பெண் மாணவர்கள் அதிகம். கலை, விஞ்ஞானப் பிரிவுகளில் சிறந்த ஆசிரியர்கள், அர்ப் பணிப்பான சேவை, மாணவர்கள் கல்வியில் உயர்ந்தார்கள். மிகவும் பணிவான ஊக்கமான அன்பான மாணவர்கள். ஆசிரிய மாணவர் உறவு மேம்பட்டது. விருப்புடன் கல்வி போதிக்க அவர் இருந்தது ஆசிரியர்களுக்கு.

உரும்பிராயில் ஒரு நண்பர். திரு. இராசதுரை அவரிடமிருந்து ஒரு கார் காலை சென்ஜோன்ஸ், சுண்டுக்குளி பெண்கள் கல்லூரிக்கும் உரும்பிராயிலிருந்து போகும். திரும்பும் காரில் நான் கல்லூரி வருவேன். மாலையும் இதே காரில் வீடு. நல்ல ஒழுங்கு. தொடர்ந்தும் இருந்தது.

மதிய உணவு. கோப்பாய் வீதியில். வைரவர் கோயில் குருக்கள் வீட்டில். வேறும் பல ஆசிரியர்கள் நல்ல உருசியான தாவர உணவு. குருக்களின் உபசரிப்பு அபாரம். உண்ணீர்! உண்ணர்! என்று நிரப்பி விடுவார். உண்டகளை இல்லை. பின்னேர வகுப்பைப் பாதிக்காது.

பிரமச்சரியம் முடித்து இல்லற வாழ்வு நுழைந்த போது எனது மனைவியாரையும், என்னையும் அழைத்து கௌரவித்து அன்பு சொரிந்து பரிசுப் பொருள் கொடுத்தார்கள். ஆண்டு 55 ஆகிவிட்டது. மறப்பதற்கு இல்லை. பரிசுப் பொருள் என்றும் எம் கண் முன்னே. உரும்பிராயில் மனைவி, பிள்ளைகளுடன் பல ஆண்டுகள் வாழ்ந்தவர். அதிபர் ஸ்ரீநிவாசன். அதிபராகக் கல்லூரியை வளர்த்து உயர் நிலை பெறச் செய்தவர். தந்தை சீதாராமனுக்குப் பின் நல்ல நிர்வாகம். கல்வித் தரம் உயர்ந்தது. விளையாட்டுத் துறை மேம்பட்டது. ஆர்வத்துடன் மாணவர்கள் என்றும் மைதானத்தில். பெற்றோர், பழைய மாணவர், ஆசிரியர்கள், மாணவர்கள் என்றும் நேரில் கண்ட நிகழ்வுகள்.

இருந்தும் அதிபர் ஸ்ரீநிவாசன் வேறு கல்லூரிக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அனுப்பி விட்டார்கள் நிர்வாகத்தார்.

சிறிது காலம் பதில் அதிபர் நிர்வாகத்தில். திரு.எம்.இளையதம்பி அவர்களிடம் கல்லூரி. நிரந்தர அதிபர் நியமனத்தில் ஒரு சிக்கல். நிர்வாகம் நிரந்தர அதிபர் நியமனத்தில் தாமதம் செய்தது. ஆசிரியர்களின் விருப்பம் அறிய விரும்பியது. எல்லோரையும் யாழ்.இந்துவுக்கு அழைத்தது. ஒரு மாலை நேரம் எல்லோரும் யாழ்.இந்துவின் கீழ் மண்டபத்தில் நிர்வாக அதிகார சபை வந்தது. தலைவர் நீதவான் நாகலிங்கம், செயலர் அப்புக்காத்து முத்துச்சாமி அவர்கள் வைத்தியக் கலாநிதிகளும் சில நியாய துரந்தரர்களும் அதிகார சபையின் அங்கத்தவர்கள். கூட்டம் ஆரம்பமானது. ஆசிரியர்கள் எல்லோரும் ஏகோபித்த கருத்தாக ஒருவர் பெயர் சொன்னோம். பல

ஆண்டுகளாக பதில் அதிபராக பணி செய்தவர். சிறந்த கல்வியாளர், பண்பானவர், அன்பானவர். கல்லூரிக்காகத் தன்னை அர்ப்பணித்தவர். வளரச் செய்தவர். உரும்பி ராயைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

எம் நிர்வாகத்திற்கு ஏற்புடையதாக இருக்கவில்லை. ஆளுமைக் குழுவின் அங்கத்தவர்களில் ஒருவர் யார் "இராஜ நாயகம்" என்றார். நான் எழுந்து அறிமுகம் செய்தேன். நிர்வாகத்திற்கு இசைவுடைவன் இல்லைப் போலும் என்று உணர்ந்தேன். எங்கள் வேண்டுதல் நிறைவுறாது திரும்பி விட்டோம்.

உரும்பிராய் இந்துவின் அதிபராக திரு.ஏ.வைத்திலிங்கம் அவர்கள் வந்தார்கள். உயர்ந்த கல்விமான். கேம்பிறிச் சர்வகலா சாலையில் படித்தவர். கணிதபாட விற் பன்னர். சிறந்த ஆசிரியர். பொது உடமை சிந்தனை உடையவர். உலகறிந்த அரசியல் வாதி. நல்லவர். அன்பானவர், பண்பானவர். கல்லூரிக்குப் பொருத்தமான அதிபர் என்று ஏற்றுக் கொண்டோம். இவர் காலத்திலும் என் பணி தொடர்ந்தது.

அதிபர் ஸ்ரீநிவாசன் போல் நானும் அனுப்பப்படலாம் என்று என்னில் ஒரு உணர்வு. முன்னெச்சரிக்கையாக இருப்பதும் நல்லது. அரச சேவை ஆசிரியராக விரும்பி னேன். கல்வி அமைச்சில் உயிரியல் விஞ்ஞானப் பட்டதாரி என்று வேலை கேட்டேன். அரசு கல்லூரிகளிலும் விஞ்ஞான ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு. கொழும்புக்கு அழைக்கப்பட்டேன். யாழ் ஸ்ரான்லி கல்லூரியில் நான் ஒரு அரச பாடசாலை ஆசிரியன்.

ஓர் இளம் ஆசிரியனாக ஐந்து ஆண்டுகள் என்னை ஏற்றுக் கொண்டது. உரும்பிராய் இந்துக்கல்லூரி. அக்கால மனப் பதிவுகள் இன்றும் பசுமையானவை. நூறு ஆண்டுகள் தன்னலம் கருதாது சேவை மனப்பான்மையுடன் பணி செய்த அதிபர் கள், ஆசிரியர்கள், கல்லூரியை ஆரம்பித்த நல்உள்ளம் கொண்டவர்கள் யாவரையும் நாம் என்றும் போற்றக் கடமைப்பட்டுள் ளோம்.

நூற்றாண்டு விழாக்காண துணிவுடன் செயற்படும் அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், மாணவர்கள் யாவரையும் அன்புடன் பாராட்டுகின்றேன்.

எனது மனப் பதிவுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள வாய்ப்புத் தந்த மலர்க் குழுவினருக்கு அன்பான நன்றியைத் தெரிவித்து நிறைவு செய்கின்றேன்.


# ஆயிரத்தில் ஓர் ஆசிரியர்

திரு.இ.தங்கராஜா (கனடா)
பழையமாணவன்
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி



உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நான் 1959ஆம் ஆண்டு முதல் காலடி வைக்கும் பொழுது, வெள்ளை உடை அணிந்து, கம்பீர மான தோற்றமுடைய ஒருமனிதர் என்னை வரவேற்று அழைத்துச்சென்று அதிபர் காரியாலயம் முன் இருந்த இருக்கையில் இருக்கச் செய்தார். அவர்தான் எனது வாழ்க்கையில் ஒரு வழிகாட்டியாக இன்றுவரை இருப்பார் என நான் எதிர்பார்க்க வில்லை. அவர் தான் என் மனதைவிட்டு அகலாத அமரர்.திரு.எஸ்.இரத்தினம் (P.T.I.) ஆசிரியர். நான் 1963ஆம் ஆண்டு வரை இவருடைய விளையாட்டுத் துறைப் பயிற்சியில் ஒரு சிறந்த மாணவனாகவும், விளையாட்டு வீரரா கவும், திகழ்ந்தேன். நான் வகுப்பறையில் பல ஆசிரியர்களிடம் கற்றுக் கொண்ட திலும் பார்க்க இவரிடம் மைதானத்தில் நான் கற்றுக் கொண்டது அதிகம். மாணவர்களின் விளையாட்டுத் திறமையை அறிந்த ஆசிரியர் மாணவர்கட்கு விளையாட்டின் நுட்பங் களைத் திறம்படப் பயிற்றுவித்தார். அவரிடம் பயின்ற மாணவர்கள் உலகம் முழுவதும் வாழ்ந்துகொண்டு இருக்கி றார்கள். அவர்களில் நானும் ஒருவன்.

திரு.இரத்தினம் ஆசிரியர் அவர்களிடம் உதைபந்தாட்டத்தில் கற்றுக் கொண்ட திறமையான நுட்பங்களாலும், பயிற்சியினாலும், வழி காட்டலாலும், நான் உரும்பிராய் இந்துக்கல்லூரியில் தொடங்கி யாழ்ப் பாண மாவட்ட (Jaffna District) உதைபந்தாட்டக் குழுவரை 500க்கு மேற்பட்ட உதைபந்தாட்டப் போட்டி களில் விளையாட எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. அதற்கு மேலாக நான் திறமையான உதை பந்தாட்ட மத்திய ஸ்தனாக (Referee) யாழ் மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்திலும் (J.D.F.R.A. Referee) இலங்கை உதை பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்திலும் (Sri Lanka F.F. Referee) தெரிவு செய்யப் பட்டேன்.



திரு.எஸ்.இரத்தினம்
ஆசிரியர்

நான் மாணவனாக இருந்த காலத்தின் பின் இரத்தினம் ஆசிரியரைத் துவிச் சக்கரவண்டியில் முன்னுக்கு ஏற்றிக்கொண்டு யாழ்.பாடசாலைகளின் மெய் வல்லுநர் போட்டிகளுக்கும் (track and field) மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி களுக்கும், மத்தியஸ்தராகப் பணிபுரியச் சென்று வருவோம். இவைபோல பலநிகழ்வுகள் இன்றும் எனது மனதை விட்டு அகலாத நினைவுகள். எனது 13 வயதில் முதல் சந்தித்த இரத்தினம் ஆசிரியர் மறைந்தாலும் அவர் போதித்த விளையாட்டுத் துறையின் பாடங்கள், பயிற்சிகள், நுட்பங்கள், அறிவுரைகள், இன்றும் 51ஆண்டுகள் ஆகியும் எனது மனதை விட்டு நீங்காத நினைவாக ஒலித்துக்கொண்டு இருக்கிறது. இவர் ஆசிரியராக இருந்த 22 வருடகாலத்தில் மாணவனுக்கு வழிகாட்டியாகவும், விளையாட்டு வீரருக்கு நண்பனாகவும், பெற்றோருக்கு ஆசிரியராகவும், எதிரிக்கு நண்பனாகவும், இருந்து தமது கடமையைச் சரிவரச்செய்ததால் "இரத்தினம் மாஸ்ரர்" என்று மாணவர் களாலும் ஊர் மக்களாலும் போற்றப்பட்டு வந்தார். இரத்தினம் ஆசிரியர் அமரராகி 32ஆண்டுகள் கடந்தும் அவர் வகுப்பறையிலும், மைதானத்திலும் கற்பித்த பாடங்கள் இன்றும் என் மனதில் வாழ்ந்து கொண்டு இருக்கிறது. நான் விளையாட்டுத் துறையில் ஆசிரியனாக, பயிற்றுநராக, அமைப்பாளனாக, திறமையான மத்தியஸ்தனாக, சமூகத் தொண்டனாக, இன்றும் செயல்பட்டுக கொண்டு இருக்கிறேன். உரும்பிராய் இந்துக்கல்லூரியின் பெயரையும், உரும்பிராய் மண்ணின் பெயரையும், காப்பாற்றிக் கொண்டு வருகிறேன் நான் வாழ்ந்து கொண்டு இருக்கும் கனடாவில். எனது 51 ஆண்டு விளையாட்டுத்துறை வாழ்க்கையில் பாடசாலைகளில் ஓர் ஆசிரியர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உதாரண புருசராக இருந்தவர் அமரர் திரு.ச.இரத்தினம் (P.T.I.) ஆசிரியர் அவர்கள் ஆகும். அவரைப் பற்றி இன்னும் நிறைய எழுதிக்கொண்டு போகலாம்.

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் 100வது ஆண்டு நிறைவுவிழாமலர் "நூற்றாண்டுமலர்" இல் எனது மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய ஆசிரியரைப் பற்றி எழுதச் சந்தர்ப்பம் கொடுத்த உரும்பிராய் இந்துக் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் எல்லோருக்கும் எனது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அமரர் திரு.ச.இரத்தினம் (P.T.I.) ஆசிரியரின் நினைவுகள் என்றென்றும் நிலைத்து இருக்க வேண்டிக்கொள் கிறேன். இவரின் விளையாட்டுத் துறையின் சேவைக் காலம் கல்லூரியின் பொற்காலம் ஆகும்.

"வாழ்க கல்லூரி மாதா "
"வளர்க! கல்வியும், விளையாட்டுத் துறையும்"

# வாழ்க பல்லாண்டு

திரு.வீ.ஆறுமுகம் (இலண்டன்)
முன்னாள் ஆசிரியர்
பழையமாணவன்
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி



2011.04.03ல் மலரப் போகும் நூற்றாண்டு தினத்தை நினைத்து, நினைத்து கற்பித்த ஆசிரியர்களும், கல்வி கற்ற மாணவர்களும் அகமகிழ்வுடன் வாழ்த்திப் பெருமை யடைகின்றோம்.

சந்திரோதயா வித்தியாசாலை, சைவத்தமிழ்ப் பாடசாலை, இந்துக் கல்லூரி ஆகிய மூன்றிலும் கற்பித்த பெருமை எனக்குண்டு. அவற்றில் இந்துக் கல்லூரியில் கற்பித்த காலம் (01.07.1972 - 30.04.1985) மிக மிக மகிழ்வைத் தந்த தோடு, இன்னும் பல்லாண்டு, பல்லாண்டு கல்விப்பணியைத் தொடர வேண்டுமென எல்லாம்வல்ல கற்பக விநாயகனின் பாதக்கமலங்களில் வீழ்ந்து வணங்கி வாழ்த்துகின்றேன். இப்பொழு துள்ள அதிபர் திரு.அ.ஈஸ்வரநாதனும் பகுதித்தலைவர் கமலவேணியும் சைவத்தமிழ்ப் பாட சாலையில் நான் கற்பித்த பொழுது என்னிடம் கற்ற மாணவர்கள் என்பதில் மனமகிழ்வடைகிறேன்.

வலிகாமம் கிழக்கிலுள்ள பாடசாலை களில் இந்துக்கல்லூரியே முதன்மை வகித்தது என்று "வித்தியா" பகுதியினர் பாராட்டினர். காற்பந்து விளையாட்டிலும் சம்பிய னாகி மேலும் மேலும் புகழ் பெற்றது என்று கூறினால் அது மிகையாகாது.

"வாழ்க கல்லூரி! வளர்க கல்லூரி!
வாழிய! வாழிய!! வாழியவே!!!"

# பசுமைக் காலம்

திருமதி.அ.குணரத்தினம்மா
ஓய்வு நிலை ஆசிரியை
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி




கடமையாற்றிய சேவை காலம் 01.01.1972 21.02.1999 வரை ஆகும். நான் தொடர்ந்தும் உதவி ஆசிரியராக கடமை யாற்றியுள்ளேன் என்பதை நினைவு கூருகின்றேன்.

எனது ஆசிரியர் சேவைக்காலத்தில் மாணவராக இருந்து கல்வி கற்று பின் பல்கலைக்கழகம் சென்று பட்டதாரி ஆகிப் பின் ஆசிரியராகப் பதவி ஏற்று பின் படித்த கல்லூரியிலேயே அதிபராகக் கடமை ஆற்றிக் கொண்டிருக்கும் திரு.அ.ஈஸ்வ ரநாதன் அவர்களின் சேவை பெருமைக்கும் மகிழ்ச்சிக்கும் உரியது என்பது மறக்க முடியாது.


# ஆசான் கவிஞர் அமரர் செல்லப்பா ஐயாத்துரை

திரு.த.செல்லத்துரை
(உப செயலாளர் நூற்றாண்டு விழாக்குழு)
பழைய மாணவன்
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி



உரும்பிராயின் வடபால் இராசசூரிய முதலியார், மாப்பாண முதலியார் பரம்பரையிலுள்ள திலகராக விளங்கியவர் திரு. செல்லப்பா அவர்கள். செல்லப்பா பர்வதம் தம்பதியினர் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இலட்சியப்படி இல் வாழ்க்கை நடத்தினர். இவர்களுக்கு மூன்றாவது புத்திரராக உதித்தவரே எங்கள் ஆசான் அமரர் ஐயாத்துரை அவர்கள் ஆவார்.

இவர் சிறுபிராயத்திலிருந்தே கல்வியில் ஆர்வம் உடையவராகவும், ஒழுக்கசீலராகவும், மாமிசம் புசியாத வராகவும், ஆன்மீகப்பற்று உடைய வராகவும் வாழ்ந்து வந்தார். இவர் தமது கல்வியை உரும்பிராய் இந்துக் கல்லூரியில் பெற்றுக்கொண்டபின் ஒரு பயிற்றப் பட்ட ஆசிரியராகக் கடமை புரிந்தார். இவர் ஆங்கிலத்திலும், மகரகம ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியிலும் கல்வி பயின்று ஒரு சிறந்த ஆங்கில அறிவுடையவராகிய இவர் உரும்பிராய் இந்துக்கல்லூரியில் தனது கற்பித்தல் தொழிலை ஆரம்பித்தார். இவர் பாடசாலைக்கு வரும்போது தமிழர் பண்பாடான வெள்ளை வேட்டி, நாஷனல் சால்வை அணிந்து கம்பீரமாக நடந்தே கடமைக்கு வருவார். அவரது மீசை கிட்லரின் மீசைபோல் இருந்ததால் நாமும் அவரைக் "கிட்லர்" எனப் பட்டப் பெயர் சூட்டி அழைப்போம். இவர் G.C.E O/L வகுப்பிற்கு எண்கணிதம், விவசாயம், சுகாதாரம் முதலிய பாடங்களைக் கற்பித்தார். முன்னைய கால ஆசிரியர்கள் எல்லாப்பாடங்களையும் கற்பிப் பதில் வல்லவர்கள். இத்துடன் இவரது காலத்தில் சாரணர் (Scout) அமைப்பை எமது பாடசாலையில் ஆரம்பித்து மாணவர்களைப் பல இடங்களுக்கும் அழைத்துச் சென்று கூடாரங்களை அமைத்து பல பணிகளைச் செய்து வந்தார். சாரணர் அமைப்பிற்குப் பொறுப்பாசிரியராகவும் இவரே செயற்பட்டார். அத்துடன் பாடசாலை ஒழுக்கக் குழுவிற்குப் (Disipline) பொறுப்பாசிரியராக இருந்து



திரு.செ.ஐயாத்துரை
ஆசிரியர்

செயற்பட்டமையையும் நினைவு கூருகின்றோம். மேலும் இவர் பாடசாலை வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து முன்னைய அதிபர் திரு.அ.வைத்திலிங்கம் அவர்களுக்கு உறுதுணையாகச் செயற்பட்டார். சனி, ஞாயிறு பாராது எல்லாநாட்களிலும் சேவையை மேற்கொண்டார். இவர்களது முயற்சியால் உருவானதே மாலாயன் மேல்மாடிக் கட்டடமாகும். இது மாத்திரம் அல்லாது ஓலைக்கொட்டில்களாக இருந்த கட்டடங்கள் எல்லாம் மாடிக் கட்டடமாக அமைவதற்கும் அயராது உழைத்தவர் ஆவார்.


இவர் இளைப்பாறிய பின் தனது சேவையைப் பாடசாலை அபிவிருத்திச் சங்கச்செயலாளர் என்ற பதவியுடன் முன்னின்று செயற்படுத்தி வந்தார். இவரது அயராத உழைப்பால் தான் 1994ம் ஆண்டு பாடசாலையின் ஸ்தாபகர்களை இனங்கண்டு மலர் வெளியீட்டுடன் பெருவிழாவையும் நடாத்திய பெருமை இவருக்குண்டு.


இவர் பாடசாலையுடன் நிற்காது தனது சேவையை ஆன்மீகத்துறையிலும் பதித்துள்ளார். உரும்பிராயிலுள்ள கருணாகரப்பிள்ளையார், சிதம்பரசுப் பிரமணியசுவாமி, பர்வதவர்த்தினி அம்பிகை மேல் பிரபந்தங்கள் பாடிய பின் கற்பகப்பிள்ளையார் மேலும் ஒன்று பாடுதல் வேண்டும் என்ற எண்ணத்தால் 07.08.1987 இல் "ஓடையம்பதி கற்பக விநாயகர் திருவந்தாதி" என்ற நூறு பாட்டுக்களுடன் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. இத்துடன் உரும்பிராய் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகப் பல வருடங்கள் தொடர்ச்சியாக இருந்து அப்பகுதி மக்களுக்குப் பல சேவைகளை ஆற்றியுள்ளமையும் மறக்க இயலாது. இத்துடன் உரும்பிராயில் இந்துசமய அபிவிருத்திச்சபை ஒன்றை ஆரம்பித்து வைக்கும் வரை தலைவராகவும் இருந்து சேவை செய்தமை குறிப்பிடத்தக்கது. நாம் இடப்பெயர்வினால் புலம்பெயர்ந்து திரும்பி ஆறுமாதங்களின் பின் அதாவது 1996 வைகாசி மாதம் இங்கு திரும்பி வந்த சமயம் அவர் எம்முடன் இங்கு வந்து சில தினங்களில் எம்மை விட்டுப் பிரிந்து விட்டார். அவரது சேவை போற்றுதற்குரியது.

"ஆதவன் தனக்காக உதிப்பதில்லை
ஆறுகள் தனக்காக ஓடுவதில்லை
மரம் தனக்காகப் பழுப்பதில்லை
வானம் தனக்காகப் பொழிவதில்லை
நிலவு தனக்காக ஒளிப்பதில்லை
பொழுது தனக்காக விடிவதில்லை"

என்ற அடிக்கு அமைவாக வாழ்ந்த உத்தம புத்திரனே கவிஞர் தி.செ.ஐயாத்துரை அவர்கள். அன்னாரைப்பற்றி இன்று ஞாபகம் ஊட்டக் கிடைத்த சந்தர்ப்பத்தை எண்ணி மகிழ்ச்சி அடைவதுடன், கல்லூரியின் நூற்றாண்டு மலர்க்குழுவிற்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

# ஆராதனை மண்டபம் அகற்றப்படுகின்ற காட்சி – 2010





இதோ ஓடுகள் கழற்றப்பட்டு, மரங்கள், சிலாகைகள் கழற்றப்பட்டு, மண்ணோடு மண்ணாக, கல்லோடு கல்லாகப் போகிறது எமது கல்லூரியின் ஆராதனை மண்டபம். எமது கல்லூரியின் பழைமையைப் பறைசாற்றிக் கொண்டிருந்த இறுதி வாரிசின் இறுதி மூச்சு அடங்கிப்போகிறது. தள்ளாடும் தூண்களுக்கும், சிதிலமடைந்த சுவர்களுக்கும் நடுவே இன்றோ நாளையோ என்று தன் விதியை எதிர்நோக்கியிருக்கும் அந்த ஆராதனை மண்டபத்தை ஒருமுறை திரும்பிப் பாருங்கள். அந்த நாள் ஞாபகம் உங்களுக்கு வரவில்லையா? நீங்கள் மிகச் சிறந்த வைத்திய நிபுணர்கள், பொறியியலாளர்கள், பேராசிரியர்கள், பட்டதாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், தொழிலதிபர்கள், வங்கியாளர்கள், அரச உத்தியோகத்தர்கள், கணக்காளர்கள், சமூக சேவையாளர்கள், குடும்பத்தலைவர்கள், அத்தனைபேரும் இதே மண்டபத்தில் தான் க.பொ.த. சாதாரண பரீட்சையை எழுதினீர்கள் என்பதை மறக்க முடியுமா? அதோ! தெரிகிறதே அந்த மேடை, எத்தனையோ அறிஞர்கள், கல்விமான்கள், சமயப் பெரியோர்கள், மகான்கள் ஏறி அமர்ந்த மேடை. விண்ணைத்தொட்ட ரஷ்யாவின் விண்வெளி வீரன் யூரிக்ககாரினும், தோழர் வி.பொன்னம்பலமும் ஒருமித்து நின்ற மேடை அது. இன்றைய பேராதனைத் தமிழ்த்தறைத் தலைவர் கலாநிதி. துரை மனோகரனின் முதற் சிறுகதையான "பாவையின் பரிசு" கலையரசு சொர்ணலிங்கத்தின் தலைமையில் இங்கு வைத்துத்தான் வெளியிடப்பட்டது. எத்தனையோ பரிசளிப்பு விழாக்களை, கலைமகள் விழாக்களை, கலைநிகழ்ச்சிகளைக் கண்ட மேடை இது. சோதிலிங்கம் வாத்தியாரின் "தேரோட்டி மகன்" இங்கு தான் முதலில் அரங்கேறியது. எத்தனையோ நாவன்மை மிக்க பேச்சாளர்களை உருவாக்கிய மேடையிது. மிகுந்த வேதனையோடும் கனத்த இதயத்தோடும் இறுதி விடையளிக்கத் தயாராகிறோம். "பழையன கழிதலும் புதியன புகுதலும் இயற்கையின் நியதி" என எண்ணி எம்மைத் தேற்றிக் கொள்கிறோம். அந்த மேடையும் மண்டபமும் எம் கண்ணில் இருந்து மறைந்தாலும் இதயங்களில் இருந்து மறையாது.



இரண்டு மாடிக் கட்டட அடிக்கல் நாட்டும் வைபவம் - 2010



பிரதம விருந்தினர். திரு. க. தர்மகுலசிங்கம் அடிக்கல் நாட்டும் போது... - 2010

# உரும்பிராய் இந்துக்கல்லூரியும் நானும்...

திரு.க.சோதிலிங்கம்
கனடா
பழைய மாணவன் (19561965)
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி



உரும்பிராய் இந்துக் கல்லூரின் ஆரம்ப காலம் பொன் எழுத்துக் களால் பொறிக்கப்பட வேண்டியதாகும். காரணம் இக்கல்லூரி ஆரம்பிப்பதற்கு வாய்ப்பாகப் பூதானஞ் செய்தவர் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய வள்ளல் திருவாளர் சின்னத்தம்பி வேலுப்பிள்ளை அவர்கள். இந்த நிலப் பரப்பில் இக்கல்லூரியை அமைத்து வளர்வதற்கு வித்திட்டவர் மேன்மைக் குரிய டாக்டர் வல்லிபுரம் அவர்கள். இந்த இரண்டு வள்ளல்களும் இணைந்து செய்த பூதானமும், வித்தியாதானமும் உரும்பராய் மக்களின் கல்வி மேம் பாட்டிற்கு உதவி நிற்கின்றன. இந்துக் கல்லூரி ஆரம்பித்த 1911ம் ஆண்டு சித்திரைத் திங்கள் மூன்றாம் நாள் வரலாற்றுப் பெருமை மிக்கது.

இந்தக் கால கட்டத்தில் ஆரம்பகால மாணவனாக எனது தந்தையார் சுப்பிர மணியம் கந்தையா அவர்களும் இக்கல்லூரியில் கல்வி பயின்றார் என்பதை எண்ணும்போது மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. நானும் எனது ஆரம்பக் கல்வியைச் சைவத்தமிழ் வித்தியாசாலையில் மூன்றாம் வகுப்புடன் முடித்துவிட்டு 1956ல் நாலாம் வகுப்பு முதல் இந்துக் கல்லூரியில் கல்விபயில ஆரம்பித் தேன். அப்போது எனது வகுப்பு ஆசிரியையாக இருந்த பத்மாவதி ரீச்சர் ஒருநாள் விளையாட்டாக, இன்று நாங்கள் மரவள்ளிக்கிழங்கு அவித்து சாப்பிடு வோமா? என்றார். நானும் எனது நண்பர்களும் இதை உண்மையென எண்ணி ஆசிரியை கிரியாசக்தி அவர்களின் மரவள்ளித் தோட்டத்தில் கிழங்குகளைப் பிடுங்கி மறைவாக ஒளித்து வைத்தோம். விடயமறிந்த ஆசிரியரின் தந்தையார் அதிபரிடம் முறையிட, அதிபர் ஆறுமுகம் ஆசிரியரிடம் கூற, அவர் எமது வகுப்பிற்கு வந்து விசாரித்துவிட்டு தாராளமாகப் பிரப்பம் பழங்களைத் தந்துவிட்டுச் சென்றதைக் கூறவா? இல்லையேல் பொன்விழா மண்டபம் கட்டிக் கொண்டிருந்த போது அதன் முதலாம் மாடியிலிருந்து கீழே குவித் திருந்த மணல் மீது மாறி மாறிக் குதித்து முழங்காலில் பல்லுக்குத்திக் காயம் ஏற்பட்டதைக் கூறவா? அல்லது எமது

கல்லூரி 1961ல் பொன்விழாக் கண்டபோது அதில் **"David and Goliath"** என்ற நாடகத்தை அரங்கேற்றி அதில் நடித்து மகிழ்ந்ததைக் கூறவா?

'யார் சண்டியன்" என்று பந்தயம் கட்டி சண்டை போட்ட போது என்னை எதிர்த்துச் சண்டை போடவந்த நித்தியா னந்தன் என்ற மாணவனின் காலில் உடைந்த கண்ணாடிப் போத்தல் வெட்டி இரத்தம் கொட்டியதைக் கண்டு மனம் பதறிப் போய் உடனே அவனை தோளில் சுமந்து கொண்டு அதிபரின் அறைக்குச் சென்றதும் அதிபர் அம்மாணவனின் நிலை கண்டு உடனே தனது வாகனத்தை திரு.குணரத்தினம் ஆசிரியரிடம் கொடுத்து எங்களை அருகேயுள்ள கோப்பாய் அரசினர் மருத்துவமனைக்கு அனுப்பி, சிகிச்சை அளிக்க உதவிய அதிபர் திரு.வைத்தி லிங்கம் அவர்களின் நல்ல பண்பினைக் கூறுவதா? இல்லையேல் கல்லூரிக்கு முன்பாக உள்ள வீட்டின் கிணற்றைக் குறுக்கே கடந்து பாய்ந்த போது எனது தமையனாரிடம் பூவரசம் பழங்கள் வாங்கியதைக் கூறுவதா? இப்படி எத்தனை எத்தனையோ பசுமை நினைவுகளை எல்லாம் எப்படித்தான் மறக்க முடியும்?

1911ம் ஆண்டு ஆரம்பகாலத்தில் எனது தந்தையாருடன் கொட்டில்களாக ஆரம்பித்த இக்கல்லூரி பல தர்ம சிந்தனையுள்ள பெரியோர்களின் உழைப்பாலும் உதவியினாலும் இன்று பல மாடிக் கட்டடங்களாக மாறியிருப் பதைக் காணும்போது மனதிற்கு எவ்வளவோ மகிழ்ச்சியாக இருந்தாலும் கல்வித்தரத்தில் சிறிது காலம் பின்ன டைவு இருந்து இப்போது வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்கின்றது.

இக்கல்லூரியில் 1956ம் ஆண்டு தொடக்கம் 1965ம் ஆண்டு வரை நானும், இதற்கு முன்பும் பின்பும் எனது உடன்பிறப்புக்களும், எனது மனைவியும், இதேகல்லூரியில் கல்விகற்று உயர் நிலையில் இருக்கும் இவ்வேளையில், ஆரம்பகால மாணவனாக எனது தந்தையார் படித்த இந்தக்கல்லூரி, நான் படித்த கல்லூரி, எமது ஊரில் அமைந்த கல்லூரி, 1961ல் பொன்விழாவும், 1986ல் பவள விழாவும் கொண்டாடிய எமது கல்லூரி, இன்று "நூற்றாண்டு விழா" கொண்டாடும் இவ்வேளையில் நானும் எனது மனைவி (கந்தையா சோதிலிங்கம், கௌரி சோதிலிங்கம் - net ball shooter) இவ்விழாவில் பங்கு கொள்வதையிட்டு பேருவகையடைகிறோம். நான் பேசும் ஒவ்வொரு சொல்லையும், முறையோடு பேசவைத்த எந்தன் கல்லூரி, நான் எழுதும் ஒவ்வொரு எழுத்திற்கும் உரிமை கோரும் எந்தன் கல்லூரி, உரும்பிராய் இந்துக்கல்லூரி என்றென்றும் நெஞ்சை விட்டகலாத அறிவாலயம்.

"வாழ்க! பல்லாண்டு. !!"

# எனது அன்னையின் அறிவாலயம்

செல்வி.சுசிலா சாரங்கபாணி
Retired Teacher ( J.P)



சீதாராமன் அதிபராக இருந்த நேரத்தில் பெண்கள் அதிகம் பாடசாலை செல்லாத காலத்தில் "School Final" என்றும், அன்றைய கடைசி வகுப்பு வரை ஒரே பெண்பிள்ளையாகக் கல்விகற்ற என் அன்னையின் அறிவாலயம் உரும்பிராய் இந்துக்கல்லூரி. MN என்னும் ஆசிரிய ரைப்பற்றியும், தனது ஆங்கிலக் கட்டுரைகள் திறமை கருதி அறிவித்தல் பலகை (Notice board) இல் ஆசிரியரால் போடப்பட்டது பற்றியும், தான் Geography ல் Referred ஆனது பற்றியும் கூறுவார். எனது தாயார் அடிக்கடி கூறுவது English தெரியாத படிப்பும் ஒரு படிப்பா? என்பதுதான். இப்போது அதே விடயம் பேசப்படும் போது நான் என் அன்னையை உணர்ந்தேன்.

பின்னர் எனது மாமன்மார்களான கனகரத்தினம் (காஞ்சோண்டி) மகேந்திரன் (சூரியன்), தவரத்தினம் அண்ணை, பெரியதம்பி போன்றோரும் படித்து, உதை பந்தாட்டத்தால் ஊருக்கே பெருமை தேடிக் கொடுத்தனர். அது அதிபர் ஸ்ரீநிவாசன் காலம். அதிபர் பிராமணராக இருந்தபோதும் உதைபந்தாட்டப்போட்டி வருகின்ற தென்றால் ஒரு கிழமைக்கு முதலே பாடசாலையில் விளையாடுபவர்களை நிற்பாட்டி அசைவ உணவு சமைப்பித்து கொடுத்து தொடர்ந்து practice பண்ண வைப்பாராம்.

உதைபந்தாட்டத்தில் உரும்பிராய் இளைஞர்களை வெல்லவே முடியாது என்ற நிலையை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தியவர் ஸ்ரீநிவாசன் அதிபரே. தலை சிறந்த ஒரு நூலகமும் எமது பாடசாலையில் இருந்தது. கிடையாத நூல்களைக் கல்விமான்கள் உரும்பிராய் இந்துவில் தேடினால் கிடக்குமென்ற காலம் ஒன்றிருந்ததாம். உரும்பிராய் என்றால் படித்தவர்கள் கூடியஇடம், நல்ல இடம் என்கிற ஒரு கருத்துருவை (image) அனைவரிடமும் ஏற்படுத்த அடிப்படைக்காரணமாக இருந்தது. எனது அன்னை கல்விகற்ற இந்த அறிவாலயமே.

இன்று நாட்டின் சூழ்நிலை போன்ற பல காரணங்களால் சிறிது பின்தங்கி விட்ட போதிலும் இலண்டன் வாழ் திரு.க.தர்ம குலசிங்கம் உருவாக்கும் புதிய மண்டபம் பாடசாலையின் புதிய வளர்ச்சிக்குக் காரணமாக அமையும், அமையவேண்டும். நூற்றாண்டைக் கொண்டாடும் எனது அறிவாலயமான அன்னையை எனக்குத் தந்த எனது மாமன்மார்களையும் என் ஊரவர்களையும் கற்றோர்களாக்கிய, எமது இந்தப்பாடசாலையைத் தலைவணங்கி, மேன் மேலும் இக்கல்லூரி சிறப்புற இயங்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டு கின்றேன்.

# அகவை நூற்றாண்டைப் பெருமையுடன் பூர்த்தி செய்யும் கல்லூரி

திருமதி.மீனா தவரட்ணம்
B.Sc.PGDE
முன்னாள் ஆசிரியை (கனடா)



உரும்பிராய் இந்துக்கல்லூரி நிறுவப்பட்டு ஆண்டுகள் நூறு பூர்த்தியாகின்றது என்பதை அறியும் போது அங்கு வாழ்ந்து, அக்கல்லூரியிலேயே கல்வி கற்ற மாணவர்களாகிய எமக்கொல்லாம் மன மகிழ்ச்சியும் மனநிறைவும் ஏற்படுகின்றது. நலன் விரும்பி ஒருவரின் வீட்டின் முன் விறாந்தையில் ஒரு சில மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட ஒரு சிறுபள்ளி இன்று யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பெரியகல்லூரிகளில் ஒன்றாக உயர்வுபெற்று இருப்பதை எண்ணும் போது மனம் பூரிப்படைகின்றது, பெருமை கொள்கின்றது.

பிரித்தானிய ஆட்சிக்காலப் பகுதியில் ஆங்கிலக்கல்வியையும், அதனுடனான கிறிஸ்தவ சமயமும் மிக வேகமாகப் பரவி வந்த வேளை, தமிழ்க் கல்வியும் சைவ சமயமும் நலிவடைவது கண்டு மனம் நொந்த ஆறுமுகநாவலர் பெருமான், சேர்.பொன்.இராமநாதன் போன்ற பல ஆவலர்களின் பெரு முயற்சியாலும் அர்ப்பணிப்புக்களாலும் பல இந்து தமிழ்ப் பாடசாலைகள் நிறுவப் பட்டு நடாத்தப்பட்டன. அவர்களின் நற்பணியின் விரிவாக்கமாகவே நாட்டின் பலபாகங்களிலும் படிப்படியாக இந்துக் கல்லூரிகள் உருவெடுத்தன.

கடமையுணர்வு உள்ள பல அதிபர்கள், ஆசிரியர்களின் அயராத உழைப்பினாலும் தன்னலமற்ற சேவையினாலும் எமது கல்லூரியும் மிகத் துரிதமாக வளர்ச்சி பெற்று, நிறைவான, பூரணமான கல்வியை வழங்கியமை என்றென்றும் நன்றியுணர்வுடன் நினைவு கூறவேண்டிய விடயமாகும். கல்லூரியின் கட்டடங்களும் பழைய மாணவர்கள், ஊர்மக்கள், நலன் விரும்பிகள், பிறநாடுகளில் வாழும் நம் ஊர் மக்களின் முயற்சிகளினாலும், தாராள பங்களிப்புகளாலும் கட்டி எழுப்பப்பட்டன. விளையாட்டு மைதானம், நூலகம், விஞ்ஞான கூடங்கள், மலசலகூடங்கள், நீர் விநியோகம் போன்றவை புனரமைக்கப்பட்டன. கணினிக் கல்வி முதலியன புதிதாகத் தொடங்கப்பட்டன. இவை நமது பழைய மாணவர்களால் செய்யப்பட்ட சில முக்கிய பணிகளாகும்.

திறமைச் சித்தி பெற்ற மாணவர்களுக்கும் ஊக்கப் பரிசாக பணம் வழங்கப்பட்டது. அத்துடன் மதிய போசனச் செலவு களையும் நம் பழைய மாணவர் சங்கம் அனுப்பி அவ்வப்போது உதவி செய்துள்ளது.

கல்வி தரத்தில் மட்டுமன்றி விளையாட்டு, உடற்பயிற்சி, கலைகள் சார்ந்த கல்வி, சமயக் கல்வி போன்ற துறைகளும் சமமாக முன்னேற்றம் அடைந்தன. ஆசிரியர்களின் பெரு முயற்சியால் தேசிய மட்டத்தில் கூட நமது மாணவர்கள் பல விளையாட்டுக் களில் பங்குபற்றி வெற்றியீட்டினார்கள்.

பல்கலைக்கழகங்களில் உள்ள பல வளாகங்களுக்கும் நமது மாணவர்கள் பலர் திறமைச்சித்திபெற்று, அனுமதி பெற்று இன்று உலகின் பல நாடுகளில் பொறியியலாளர்களாகவும், மருத்துவர் களாகவும், கணக்காளர்களாகவும், தொழிலதிபகளாகவும், பொறியியல் சார்ந்த உத்தியோகத்தர்களாகவும், ஆசிரியர்களாகவும், விரிவுரையா ளர்களாகவும் பணியாற்றி வருவது எமது கல்லூரிக்குப் பெருமை சேர்க்கின்றது. இவர்கள் யாவரும் இன்று நமது கல்லூரியை நன்றி உணர்வோடு நேசிப்பதுடன் தாராளமாக உதவியும் வருகின்றனர். இவர்களுக்கும் எமது உளமார்ந்த வாழ்த்துக்களும், பாராட்டுக் களும்.

கல்லூரி தந்த கல்வி அறிவும், பண்பும், கலாசாரப் பழக்க வழக்கங் களும், சமய உணர்வும், கட்டுப்பாடும், ஒழுக்கமும் இன்றும் எம்முடன் துணை நின்று பெருமை தருகின்றன. வசதி குறைந்த பிள்ளைகளுக்கு எல்லாம் வழி திறந்த எமது கல்லூரித்தாயை நாம் என்றென்றும் தலை தாழ்த்தி நன்றியோடு வணங்குகின்றோம். பல திறமைசால் கல்விமான்கள் நகரப்புறக் கல்லூரிகளின் கௌரவ பதவிகளைத் துறந்து நம் கல்லூரிக்கு வந்து கடமையாற்றி எமக்கு எல்லாம் நல்ல தரமான கல்வியறிவை வழங்கியுள்ளனர். எமக்கு வாழ்வு அளித்த அப்பெருமக்களை நாம் பணிவோடு சிரம் தாழ்த்தி, வணங்கி நன்றி கூறுகின்றோம். நாட்டில் நிலைமை கல்லூரியைப் பல வழிகளில் நலிவடைய வைத்துள்ளமை மனதிற்கு மிகக் கவலையைத் தருகின்றது. மீண்டும் நாம்பெற்ற கல்வியை, அனுபவித்த வளங்களை, வருங்காலச் சமுதாயமும் பெற்று முன்னேற எல்லோரும் இதய பூர்வமாக ஒன்று சேர்ந்து உழைத்திடு வோமாக!

"வாழ்க எமது கல்லூரி! வளர்க எமது கல்வி வளங்கள்!! "

# நெஞ்சகலா நினைவுகள்

திருமதி.ப.ஆனந்தராசா
ஓய்வு பெற்ற பகுதித்தலைவர்
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி



இன்று போலிருக்கிறது நான் வாழைச்சேனை தமிழ் மகா வித்தியா லத்திலிருந்து உரும் பிராய் இந்துக்கல்லூ ரிக்கு மாற்றலாகி வந்த அந்த 01-01-1982ம் நாள். நான் வெளி மாவட்ட சேவையில் 5 வருடங்களை மிக இனிமையாக, அருமையாகப் பூர்த்தி செய்து ஊரிலேயே சேவையாற்ற எனக்கு கிடைத்த அந்தநாள்.

01.01.1982 இலிருந்து நான் ஓய்வு பெறும் வரை என்னை அரவணைத்து எனது குடும்பத்தில் ஏற்பட்ட நன்மை தீமைகள் சுகதுக்கங்களில் எல்லா வற்றிலும் ஒரு குடும்ப உறவாக ஈடுகொடுத்து நின்றவள் உரும்பிராய் இந்து. இவளின் உறுப்பினர்களாகிய இனிய அதிபர்கள், ஆசிரியத்திலகங்கள், மாணவச்செல்வங்கள் எம் வாழ்நாளில் என்றும் மறக்கமுடியாத முத்துக்கள்.

நான் வந்த அந்த வேளையில் முப்ப திற்கும் மேற்பட்ட அருமையான ஆசிரிய குழாம், ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்தொகை. ஒரு பாடசாலைக்கு வேண்டிய வளங்களில் 70% பூர்த்தியுடன் ஓங்கிய மாடியுடன் ஓர் உன்னத பௌதீக வளங்களைக் கொண்ட யாழின் 1AB தரமுள்ள வளமான கல்லூரியாக இருந்தது. எனக்கு சற்று மலைப்பாக இருந்தபோதிலும் எனது கணவரின் தலையாய குருவாக இருந்த "அகில் ரீச்சர்" என்ற திருமதி. அ.துரைசாமி அவர்களின் அன்பான அரவணைப்பும் ஆறுதல் வார்த்தை களும் என்களைப்பைப் போக்கி நாளடைவில் எனது குடும்ப உறவாக அத்தனை ஆசிரியர்களும் மாணவர் களும் இணைந்ததை எண்ணிப் பார்க்கிறேன்.

என்னோடு பணியாற்றிய அதிபர்கள் வரிசையில் திரு.சிவானந்தன், திரு.சிவன்பாலன், திரு.பாலசுப்பிர மணியம், திரு.ம.சண்முகரத்தினம், திரு.அ.ஈஸ்வரநாதன் ஆகியோர் இடம் பெறுகின்றார்கள்.

இதில் திரு.சிவானந்தன் அவர்களின் காலத்தின் முற்பகுதியில் மிகவும் சுமுகமாக நாட்டின் சூழல் இருந்தது. அவ்வேளை பாடசாலை தனக்கே உரிய

பாணியில் மிகவும் அற்புதமாக வளர்ந்தது. பின்பு அவர் உயர்வு பெற்றுச் செல்ல திரு.சிவன்பாலன் காலம் ஓரளவு சுமாராக ஓடியது. எமது மகளும் இந்துவில்தான் எம்மோடு சேர்ந்து படித்து இன்று ஓர் வைத்தியராக இருக்கின்றார். அதற்கு எனக்கு வாழ்வளித்த உரும்பிராய் இந்துவே காரணி என்று சொல்வதில் பெருமையடைகின்றேன்.

எமது முன்னாள் அதிபர் திரு.சி.சிவன்பாலன் ஒரு சிறந்த இரசாயன வியல் ஆசிரியர் ஆவார். அவரும் இன்று வைத்தியத்துறையில் தனக்கென ஓர் இடத்தைத் தக்க வைத்து புகழ் பூத்த சேவையை யாழ் மக்களுக்கு ஆற்றிக் கொண்டிருக்கும் திரு. சிவன்சுதனை தானே இப்பள்ளியில் வைத்துப் படிப்பித்தே இந்த நிலைக்கு ஆளாக்கி னார் என்பதை நினைக்கும் பொழுது எம்முள்ளம் சிலிர்க்கின்றது.

சூழல் மாறியது போர் உக்கிர மடைந்தது. இடப்பெயர்வுகள் ஏற்பட்டன. மாணவர்கள் ஆசிரியர்கள் இடம் மாறி னார்கள். திருவாளர் சிவன்பாலன் அவர்கள் ஓய்வுபெற திரு.பாலசுப் பிரமணியம் அவர்கள் அதிபரா கினார்கள். இவரின் காலம் மிகமிகக் கடினமானது. இவருக்கு மட்டுமல்ல நாட்டு மக்கள் அனைவருக்குமே. எத்தனை பாடசாலை நாட்களை இழந்தோம். எத்தனை பள்ளி உறவுகளை இழந்தோம். எமது பள்ளி யாழ்.பலாலி பிரதான பாதையில் இருந்ததால் புலிகள்-இராணுவ மோதல்களால் பல்வேறு வகையான இடர்பாடுகள் ஏற்பட்டன. அவற்றை எல்லாம் தாங்கிவரும்வேளை அந்தோ! வலிகாமம் ஒட்டு மொத்த இடப்பெயர்வு ஏற்பட்டு நாம் அனைவரும் மீசாலைக்கு இடம் பெயர்ந்து தற்காலிகமாக மீசாலை விக்கினேஸ் வராவில் இயங்கி வந்தோம். இந்த நாட்களை உரும்பிராய் இந்துவின் கல்விச் சமூகத்தினர் மறக்கவே முடியாது. ஆம்! இந்த வேளையில் தான் எமது பிரதான மாடித்தளம் தகர்க்க எத்தனிக் கப்பட்டது. ஆனாலும் சிறு பாதிப்புடன் தப்பிவிட்டது.

மீண்டும் வந்த வேளை அதிபர் திரு.சி.பாலசுப்பிரமணியம் அவர்கள் வன்னி சென்றதால் திரு.ம.சண்முக ரத்தினம் அவர்கள் பதில் அதிபராகப் பொறுப்பேற்று மீண்டும் படிப்படியாக இயங்கத் தொடங்கினார். அவ்வேளை இப்போது கடமையாற்றும் எமது இனிய அதிபர் திரு.அ. ஈஸ்வரநாதன் அவர்கள் பொறுப்பேற்று இன்று இத்துணை சிறப்பாக வளர்ந்து பவளவிழாவைக் கொண்டாடியது. அப்பொழுது எமது பாடசாலை மலராகிய வித்தியாவை நான் ஆசிரியையாகப் பொறுப்பேற்று வெளியிட்டு வைத்தோம். மேலும் வளர்ந்து இன்று மிகப்பெரிய சாதனை யாக நூற்றாண்டு விழா மாடி மணி மண்டபத்தை தாங்கி ஓங்கித் தனித்து வமாக மிளிர்கின்றது.

நினைவகலா நினைவுகளாக எனது 27 வருட இப்பள்ளியின் பதிவுகள் பலப்பல பட்டியலிடின் பக்கங்கள் போதாது. சிலவற்றைக் குறிப்பிடாது விடமுடியவில்லை. எமது உதைபந்தாட்ட அணி, உடற்பயிற்சி அணிகள் வலய மட்டம் சென்று வெற்றிவாகை சூடியமை. சில மாணவமணிகள் அமரத்துவம் அடைந்தமை. என்னோடு தன் தாயைப்போல எண்ணி துன்பதுயரங்க ளைப் பகிர்ந்து அமரத்துவம் அடைந்த அதி உன்னத திறமை வாய்ந்த விஜயானந்தி ஆசிரியை அவர்களின் இழப்பு எமது பாடசாலை வரலாற்றில் ஒரு துயரச் சம்பவம் ஆகும். இன்றும் கணினி அறையை நினைக்கும் பொழுது அவர் அந்த வாசலில் நிற்பது போன்ற பிரமை ஏற்படுகின்றது.

இரு நேரப் பாடசாலையாக இருந்த பொழுது ஒரு மணிநேரமதியபோசணை இடைவேளையின் போது எமது ஓய்வு அறைகளைக் கட்டும் பலவிதமான பிரச்சினைகளும் அலசி ஆராயப்படும். அகில்ரீச்சர், தங்கம்ரீச்சர், பராசக்திரீச்சர், சக்திரீச்சர், அமிர்தலிங்கம்ரீச்சர் மிகவும் வாயாடிகள். அவர்களுடன் அளவளா வியதனால் நான் நல்ல அறிவு பெற்றேன். பஞ்சலிங்கம்ரீச்சர் மிகவும் அமைதியாக அவதானித்துக் கொண்டிருப்பார். அமிர்தலிங்கம் ரீச்சர் நல்ல பரோபகாரி. எனக்கு பல வழிகளில் உதவி செய்துள்ளார்.

அது மட்டுமல்ல எப்படிச் சமாளிப் பேன் என நினைத்துக் கொண்டு ஓர் உதவி ஆசிரியையாக வந்த என்னை பகுதித்தலைவராக, உதவி அதிபராகத் தரமுயர்த்தி பணியாற்றிய வேளைகளில் ஓரிருவருடமல்ல 27 வருடங்கள் என்னை அனுசரித்து எதுவித வெறுப்புக்களுமின்றி என்னோடு பணி யாற்றிய அத்தனை ஆசிரியர்களையும் மறப்பேனா?

நிறைவாக இப்பாடசாலையில் வெள்ளி விழாக்கண்ட என்னை எமது மணிவிழாவாக எனது கணவரையும் ஒருசேர அழைத்து மலர்மாலையிட்டு, கணையாழி நல்கி, பாராட்டுப்பத்திரம் வழங்கி, கவினுறு விழா எடுத்த அதிபர், ஆசிரியர்கள், மாணவச்செல்வங்கள், பழையமாணவர்சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சங்கம் அனைவரையும் இதயத்தில் ஏற்றி 37 வருட என் சேவையில் 27 வருடங்கள் தன்னகத்தே தாங்கி சாதனையாக்கிய என் தாய் உரும்பிராய் இந்து நூற்றாண்டென்ன பல நூற்றாண்டு விழாக்கண்டு மக்கள் பணி செய்ய மனதார வாழ்த்துகின்றேன்.

வாழ்க உரும்பிராய் இந்து!
வளர்க இவள் புகழ்!

# பசுமைக் காலம்

**திருமதி ச.மயில்வாகனம்**
Sp. Trd. Science (S.L.T.S- I)
**ஓய்வுபெற்ற பகுதித்தலைவர்(1982-2000)**
**யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி**



நான் ஒரு பயிற்றப் பட்ட விஞ்ஞான ஆசிரியர். நான் கிட்டத் தட்ட 39 வருடங்கள் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டு, மாணவர்களின் கல்வியில் மிகவும் அக்கறை கொண்டு கல்வியைப் புகட்டி வந்தேன். இவற்றில் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் மாத்திரம் 01.01.1982 முதல் 24.07.2000ம் ஆண்டு வரையிலான 19 ஆண்டுகள் கடமையாற்றி வந்தேன். இக் காலப்பகுதியில் ஐந்து அதிபர்களின் கீழ் கடமையாற்றியுள்ளேன். ஒவ்வொரு அதிபர்களிடமும் ஒவ்வொரு விதமான அனுபவங்களைப் பெற்றேன். மேலும் நான் எனது விடுமுறை லீவையே எடுப்பது மிக மிகக் குறைவு. ஆதலினால் தான் சிறந்த ஆசிரியராக 1993ம் ஆண்டு தேர்ந்து எடுக்கப்பட்டு என்னை ஆசிரியர் தின விழாவில் கௌரவித்து பரிசில்களும் தந்தார்கள். இப்பெருமைக்கு வழிவகுத்ததே இக்கல்லூரியாகும். இத்துடன் நான் ஓய்வு பெறும் காலப்பகுதியில் பகுதித் தலைவராகவும் இருந்து செயற்பட்டேன். திரு.அ.ஈஸ்வரநாதன் இக் கல்லூரிக்கு அதிபராக வந்த சமயமே எனக்குப் பகுதித் தலைவர் பதவியும் கிடைத்தது என்பதை இச்சந்தர்ப்பத்தில் பெருமையுடன் கூறிக் கொள்ளுகின்றேன். இவரது காலப் பகுதியிலேயே 25.07.2000ல் ஓய்வும் பெற்றேன். ஓய்வு பெற்ற சமயம் எனக்கு அளித்த பிரியாவிடை என்றென்றும் என்மனதில் மறக்க முடியாத அளவிற்கு பசுமையான நினைவாக உள்ளது. கல்லூரியின் நூற்றாண்டு விழா சிறப்புடன் விளங்க எனது வாழ்த்துக் களைக் கூறிக் கொள்கின்றேன்.

"வாழ்க! எங்கள் கல்லூரி."

# வாழ்க கல்லூரி!

திரு.C.கனகலிங்கம்
ஓய்வு பெற்ற ஆசிரியர்



எனது ஆரம்பக் கல்வியை உரும்பிராய் சந்திரோதயா வித்தியா லயத்தில் ஆரம்பித் தேன். பின் ஆங்கில மொழி மூலம் கல்வி யைத் தொடர்வதற்காக உரும்பிராய் இந்துக்கல்லூரிக்கு 1947ம் ஆண்டு சென்றேன். அங்கு 4 வருடம் கல்வி கற்று எனது SSLC பரீட்சையில் சித்தி எய்தினேன்.

நான் அங்கு கல்வி கற்கும் காலத்தில் தான் முதன்முதல் கிரிக்கெட் விளை யாட்டு ஆரம்பிக்கப்பட்டது. எனது அண்ணனே இதனை ஆரம்பித்து வைத்தார். நானும் அவ்விளையாட்டில் பங்கு பற்றி வந்தேன். பின் எனது பட்டக் கல்வியை கல்கத்தாவில் கற்று முடித்து 1954ம் ஆண்டு திரும்பினேன்.

1954ல் உரும்பிராய் இந்துக்கல்லூரி யில் எனது முதலாவது ஆசிரியப் பணியினை ஆரம்பித்தேன். அக்கா லத்தில் பாடசாலைக்கு கட்டடம் ஒன்று அமைக்கத் தீர்மானித்து ஒரு குழு அமைத்து அதில் ஆசிரியர்கள் பங்கு பற்றி நிதி திரட்டினோம். அப்போது என்னிடம் கார் இருந்ததால் ஊர் ஊராக நானும் சகஆசிரியர்களும் அதில் சென்று நிதி திரட்டினோம். அது மட்டுமல்லாது அப்போதைய உப அதிபர், ஆசிரியர்களான சபாநாயகம், ஐயாத்துரை ஆகியோரும் சேர்ந்து இலங்கை முழுவதும் சென்று நிதி திரட்டி வந்து கட்டடம் கட்ட ஆரம்பித்தோம்.

அப்பணத்தில் கட்டப்பட்டது தான் முதலாவது மேல்மாடிக்கட்டடமாகும். அக் கட்டடத்துக்கும் மலேசியா, சிங்கப்பூரில் வசித்து வந்த உரும்பிராய் வாழ் மக்களும் நிதி உதவி புரிந்தனர். அதனால் அம் மண்டபத்துக்கு 'மலாயன் மண்டபம்" எனப் பெயரிடப்பட்டது. இவ்வாறு நான் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் எனது கல்வியினைக் கற்று அங்கு எனது முதல் ஆசிரியர் நியமனத்தை பெற்றதையிட்டு பெருமைப் படுவதுடன் அக்கல்லூரி நூற்றாண்டில் காலடி எடுத்து வைப்பதையிட்டு பெருமகிழ்ச்சி கொள்கிறேன். எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# எனது சேவைக்காலம்

செல்வி.குகனேசமலர் பொன்னுத்துரை
B.A(Hons) S.L.T.S - 1
ஓய்வுபெற்ற உப அதிபர்
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி
(1985 - 2003)



நான் ஒரு புவியியல் சிறப்புக்கலைப்பட்டதாரி ஆசிரியர். நான் கிட்டத்தட்ட 39வருடங்கள்ஆசிரியத் தொழிலை மேற்கொண்டு, மாணவர்களின் கல்வியில் மிகவும் அக்கறை கொண்டு கல்வியைப் புகட்டி வந்தேன். இவற்றில் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் மாத்திரம் 29.04.1985 முதல் 29.12.2003ம் ஆண்டு வரையிலாக 18 ஆண்டுகள் கடமையாற்றிவந்தேன். இக்காலப் பகுதியில் ஐந்து அதிபர்களின் கீழ் கடமையாற்றியுள்ளேன். ஒவ்வொரு அதிபர்களிடமும் ஒவ்வொரு விதமான அனுபவங்களைப் பெற்றேன். ஆசிரியராகக் கடமையாற்றிய பின் உப அதிபராகக் கடமையாற்றினேன். இப்பதவி திரு.அ.ஈஸ்வரநாதன் இக் கல்லூரிக்கு அதிபராக வந்த சமயமே எனக்குக் கிடைத்தது என்பதை இச்சந்தர்ப்பத்தில் பெருமையுடன் கூறிக் கொள்கின்றேன். இவரது காலப்பகுதியிலேயே 27.03.2003ல் ஓய்வும் பெற்றேன். ஓய்வு பெற்ற சமயம் எனக்கு அளித்த பிரியாவிடை என்றென்றும் என் மனதில் மறக்க முடியாத அளவிற்கு பசுமையான நினைவாக இருக்கின்றது. கல்லூரியின் நூற்றாண்டு தின வாழ்த்துக்களையும் கூறிக்கொள்கின்றேன்.

# மறக்கமுடியுமா?

**திரு.நடராஜா சச்சிதானந்தன்**
**இலண்டன்**
**பழைய மாணவன்**
**யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி**



1953 ஆம் ஆண்டு தொடங்கி இணுவில் - உரும்பிராய் கிராமங்களின் எல்லையில் உள்ள கருணாகரப் பிள்ளையார் கோயில், சிதம்பரசுப்பிரமணியர் கோயில், பர்வதவர்த்தனி அம்மன் கோயில், கற்பகப்பிள்ளையார் கோயில், காளி கோயில் ஆகியவற்றைக் கடந்து உரும்பிராய் இந்துக்கல்லூரிக்குக் கல்வி கற்கச்சென்றதை மறக்கமுடியுமா? நிச்சயமாக இல்லை.

அதிபர்களாக இருந்த திரு.ஸ்ரீநிவாசன், திரு.அ.வைத்திலிங்கம், தமிழாசிரியர்களாக இருந்த வித்துவான் வடிவேல், வித்துவான் மு.சபாரத்தினம், திரு.பொன்னம்பலம், திரு.ஆறுமுகம், ஆங்கில ஆசிரியர்களாக இருந்த திரு.இ.இளையதம்பி, திரு.ஞானசுந்தரம், திரு.சபாரத்தினம், திரு.மகாலிங்கம், புவியியல் ஆசிரியர்களாக இருந்த திருமதி.குமரேஸ்வரி, திருமதி.தவமணி இரத்தினசிங்கம், விளையாட்டுத்துறை ஆசிரியர்களாக இருந்த திரு.சண்முகராஜா, திரு.இரத்தினம், பௌதீக ஆசிரியர்களாக இருந்த திருமதி.சாரதா பேராயிரவர், திரு.கனகலிங்கம், இரசாயன ஆசிரியர்களாக இருந்த திரு.சிவபாலன், திரு.வைத்தியநாதன் (உபஅதிபர்), கணிதவியல் ஆசிரியர் திரு.புவனபூசனம், தாவரவியல் ஆசிரியர் திருமதி மீனாம்பிகை தவரத்தினம், விலங்கியல் ஆசிரியர் திரு.சுந்தரலிங்கம், மற்றும் திரு.தேவன், யாழ்ப்பாணம் திரு.அம்பிகைபாகன் போன்ற பலரிடம் மாணவனாக இருந்திருக்கின்றேன். இவர்களை மறக்கமுடியுமா? நிச்சயமாக இல்லை.

உரும்பிராய் இந்துக்கல்லூரியில் கல்விகற்ற காலத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்களுடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அக்காலங்களில் விளையாட்டு இல்லத்தலைவனாகவும், சைவ மாணவர் சங்கத்தலைவனாகவும், மாணவர்மன்றத் தலைவனாகவும், மாணவ முதல்வர் தலைவனாகவும் **(Senior Prefect)** கடமையாற்றியிருக்கிறேன். பாடசாலை மாணவர்களுடன் தீவுப்பகுதிகளுக்கும், மன்னார், இரணை

மடு போன்ற இடங்களுக்களுக்கும், மற்றும் இலங்கை பூராகவும் சுற்றுலாச் சென்ற நினைவுகளையும் மறக்க முடியுமா? நிச்சயமாக இல்லை.

திரு.ஸ்ரீநிவாசன் அதிபராக இருந்த காலத்தில் கல்லூரி விளையாட்டுத்துறை யில் மிகவும் முன்னணியில் திகழ்ந்ததையும், வெள்ளிக்கிழமை தோறும் வகுப்பு மாணவர் நடாத்திய பூசை வழிபாடுகளும் மறக்கக்கூடிய வையல்ல. இக்காலங்களில் உதைபந் தாட்ட வீரர்களாகத் திகழ்ந்த திரு.பெரிய தம்பி, பரராசசிங்கம், கனகசபாபதி, இலகுநாதன் போன்றோர் குறிப்பிடத்த கவர்கள்.

ஒருமுறை மாணவர் மன்றக் கூட்டத்திற்கு திரு.அ.அமிர்தலிங்கம் அவர்களும், திருமதி.மங்கையற்கரசி அமிர்தலிங்கம் அவர்களும் எனது அழைப்பின்பேரில் கல்லூரிக்கு வந்து நீண்ட நேரம் உரையாற்றியதையும், மாணவ மாணவியர்கள் அன்றைய அரசியலில் மிக அக்கறையுடன் கலந்துகொண்டதும் இன்றும் என் கண்கள் முன்னால் வந்து நிற்கின்றது. 1961 ஆம் ஆண்டு யாழ்.கச்சேரிக்கு முன்பாக நடந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் உயர்தரவகுப்பு மாணவர் சகிதம் சென்று கலந்துகொண்டோம். உ.இ.க மாணவர்களே இச்சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்துகொண்ட முதல் கல்லூரி மாணவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அதன் பிறகு தமிழ்மக்கள் இச்சத்தியாக்கிரகப் போராட் டத்தில் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட்டதும் குறிப்பிடக்கூடிய ஒன்றா கும்.

உ.இ.க யில் கல்விகற்ற மாணவர்கள் உலகெல்லாம் பரந்து வாழ்கிறார்கள். சிலர் மிகுந்த உயர் பதவிகளிலும் உள்ளார்கள். பெரிய பிரித்தானியாவில் வாழ்பவர் களில் சிலர் குறிப்பிடத்தக்கவர்கள். பொறியியலாளர் திரு.எம்.ரி.செல்வராஜா அவர்கள் மேற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலையில் தலைமை ஆசிரிய ராகவும், ஒரு கவிஞராகவும், எழுத்த ளராகவும் தமிழுக்குச் சேவை செய்கின் றார். திரு.க.தர்மகுலசிங்கம் அவர்கள் ஒரு பெரியதொழிலதிபர். இவருடைய தர்மசிந்தனையால் உ.இ.கவிற்கு ஒரு புதிய மண்டபம் உருவெடுத்துள்ளது. இனிவரும் காலங்களில் உரும்பிராயிலும் சுற்றுக்கிராமங்களிலுமுள்ள மாணவர் களும், மற்றவர்களும் பயன்பெறும் வகையில் இக்கட்டடம் உதவும் என நான் திடமாகக்கருதுகிறேன். இன்னும் பல பழைய் மாணவர்கள் பல விதத்திலும் உ.இ.க.வின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக உள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்..

கடந்த 30 வருட காலப் போர்ச்சூழல் காரணமாக எமது மக்கள் அமைதியான வாழ்க்கை வாழவில்லை. இதனால் பல ஆயிரம் மக்கள் நாட்டைவிட்டு புலம்பெயர்ந்துவிட்டனர். இதனால் பாடசாலைகளில் தகுந்த முறையில் கல்வியை ஊட்ட முடியவில்லை.

இக்காரணங்களினால் எம்மவர் மத்தியில் திறமை வாய்ந்த ஆசிரியர்கள், அதிபர்கள், பொறியியலாளர்கள், மருத்துவர்கள், கணக்காளர்கள் மிகவும் பற்றாக் குறையாகவே காணப்படுகின்றார்கள். எமது சமூகம் முன்னேறுவதற்கு எதிர்காலத்தில் ஆசிரியர்களின் பங்கு மிக முக்கியமானதாகும். அதற்கு பாடசாலைகள் தகுந்த தரத்துடன், சகல வசதிகளுடன் இயங்கவேண்டும். அந்த வகையில் உ.இ.க. சகல வசதிகளுடனும், திறமை மிக்க ஆசிரியர்களையும் உள்ளடக்கக் கூடியதாக அமைய பழைய மாணவர்களின் பங்கு மிக மிக அவசியமானதாகும். இவையனைத்தையும் கருத்திற் கொண்டு கல்லூரியின் நூறாவது ஆண்டு விழா கொண்டாடுவது மிகப் பொருத்தமானதாகும். இச்சந்தர்ப்பத்தில் சில கருத்துக்களையும், பாடசாலையின் பழைய நினைவுகளையும் பகிர்ந்து கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மிக மகிழ்ச்சியும் அடைகிறேன். அதே வேளையில் பாடசாலையின் நூற்றாண்டு விழா சிறப்பாக அமைய எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

# Urumpirai Hindu College O.S.A

Information By
Chelliah Nagaratnam
Treasurer-OSA

## Flow of funds

It is our duty to express the ways and means of the source of funds to our association for its survival, which was inaugurated on the 18th of July 1999. This information is given with the purpose to honour the good hearts who had made the arrangements to have these deposits, and to encourage others to move towards it.

1. Deposits in our Name

a. Deposit of Rs.300,000/= by OSA Canada, monthly interest, for the purpose of general maintenance.

b. Deposit of Rs.194400/= by OSA Canada, annual interest, for the purpose of conducting football and cricket matches.

c. Deposit of Rs.50,000/= by us annual interest, to cover the partial expenses of the Sports meet.

d. Deposit of Rs.650,000/= by us annual interest, to pay casual teachers and employees monthly salary.

It was resoled that the said deposits should not be liquidated for any purpose at anytime

2. Third party deposits


a. In memory of late Dr M.Sriranganathan, an old student, deposit of Rs.300,000/=made by his family members, to award cash prizes for the best (adv-level) students for the year and the balance towards the welfare of the poor year "6" students.

b. In memory of late Mr N.DevaRajan surveyor, an old student, deposit of Rs.200,000/= made by his family members for the purpose of awarding cash prizes for students who have obtained best results in Maths and English in the G.C.E (O/L) exams and the balance may be utilized to conduct special maths and English classes.


c. Mr.K.T.Nathan of London, an old student made a deposit of Rs.150,000/= and arranged to remit the interest to our OSA account annually for the purpose of paying electricitybill.

d. Mr.M.T.Selvarajah and Subramaniam both from London jointly agreed to remit Rs.28000/= annually to cover the basic cost of our annual festival at Thiruketheeswaram.


# அதிபர், ஆசிரியர் குழாம்




1942




1950




1951



1955



1958



1961




1986



1988




2008



2010

# என் இனிய நினைவுகள்

திரு.சி.குகநாகராஜா
பழைய மாணவன்
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி



யா/உரும்பிராய் இந்து கல்லூரியின் பழைய மாணவர்களில் ஒருவன்யான் என்ற சந்தோசத்துடன் இம்மலரூடாக என் எண்ணங்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

தற்பொழுது 24 வருடங்களாக நான் இலண்டனிலே வசித்தாலும் எனது ஊரையோ பாடசாலையையோ ஒரு போதும் மறந்ததில்லை. நான் 1960 ஆம் ஆண்டிலிருந்து 1965 ஆம் ஆண்டு வரை கல்வி கற்றதுடன் இப்பாடசாலையின் வளர்ச்சியிலும் மிகவும் அக்கறையாக இருந்தது மாத்திரமல்லாது அதற்காக நிறையத் தொண்டுகள் செய்து ஆசிரியர்களிடமும், சகமாணவர்களிடமும் மிகவும் நல்ல மதிப்பையும், பாராட்டையும் பெற்றேன்.

அன்று இப்பாடசாலையில் 1500 1700 மாணவர்கள் கல்வி கற்றார்கள். அன்று கல்வியிலும், விளையாட்டுத் துறையிலும் சிறந்து விளங்கிய இப்பாடசாலை மெய்வல்லுநர் போட்டிகளிலும், உதைபந்தாட்டத்திலும் மிகவும் பிரபல்யமாகியிருந்தது. நான்கு வருடங்களாக நான் எனது இல்லமாகிய “அர்ச்சுனா” இல்லத்திற்கு மத்திய பிரிவிலும், மேற்பிரிவிலும் நிறையப் புள்ளிகள் பெற்றுக்கொடுத்து 4 வருடமும் வெள்ளிக் கிண்ணங்களையும் பெற்றுக் கொடுத்தேன். அந்த நேரத்தில் சந்தோச மிகுதியால் எமது இல்ல வீரர்கள் என்னைத் தூக்கிச் சென்று கிண்ணத்தை வாங்க வைத்தார்கள்.

2001 ஆம் ஆண்டில் இருந்து நான் இப்பாடசாலைக்கு அடிக்கடி விஜயம் செய்துகொண்டிருக்கிறேன். 2001 ஆம் ஆண்டு நான் போகும்போது 420 மாணவர்கள் மாத்திரம் கல்வி கற்றார்கள். அதிலும் உயர்தர வகுப்பில் ஒரு மாணவன் மாத்திரம் படித்துக்கொண்டு இருந்தார். பார்ப்பதற்கு மிக மிக வேதனையாக இருந்தது. ஆனால் இப்போது படிப்படியாக முன்னேறி பழைய மாதிரி நிறைய மாணவர்கள் வந்துகொண்டு இருப்பதைப் பார்க்கச் சந்தோசமாக இருக்கிறது.

2010 ஆம் ஆண்டு என்னையும் எனது மனைவியையும் மெய்வல்லுநர்

போட்டிக்குப் பிரதம விருந்தினராக அழைத்துச் சிறப்பித்தார்கள். நாங்கள் பார்த்துத் தெரிந்து கொண்டது இக்கல்லூரிக்கு ஒரு தரமான விளை யாட்டு மைதானம் இல்லாதது. இம்மலரி னூடாக இக்கல்லூரியின் பழைய மாணவர்களை நான் அன்போடு கேட்டுக் கொள்வது இக்கல்லூரிக்கு ஒரு நல்ல விளையாட்டு மைதானம் அமைவதற்கு தங்களாலான பணஉதவிகளைச் செய்ய வேண்டும் என்பதே. இதை வெளி நாட்டில் இருக்கும் பழைய மாணவர் களின் கவனத்திற்கு கொண்டு வருவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இப்பாடசாலையின் வளர்ச்சியையிட்டு மகிழ்ச்சியடைவதில் நானும் ஒருவன் என்பதைக்கூறி விடை பெறுகிறேன்.

"வாழ்க! இந்துக்கல்லூரி
வளர்க! அதன் புகழ்."

# உரும்பிராய் இந்து என்னும் அன்னையே!

சுமணா, கயூர்சனா, அனிஸ்ரிகா
தரம் 12

*வளமார்த்த வன்னி மண்ணில்*
*வளமுடனே வாழ்கையிலே*
*வலிதந்த யுத்தத்தினால் வாழ்வு*
*கெட்டு வந்தவர் நாம்*
*உறவிழந்து உடைமை இழந்து*
*உன்னத*
*உயிர்களையும் இழந்து எம்*
*உயிரை மட்டும் மிச்சமாக்கினோம்*
*திசை தெரியாது பறந்து வந்த எம்மை*
*தித்திப் பெனும் அமுதமாம் கல்வி*
*தந்தீர்*
*உரும்பிராய் இந்துக்கல்லூரி எனும்*
*அன்னையே*
*உவகையுடன் அணைத்தே ஆதரவு*
*நல்கினீர்*
*ஊர் தேடி மீண்டும் நாம் சென்றாலும்*
*உங்களுடன் வாழ்ந்து பழகிய நாட்கள்*
*உறவாகி நின்றே ஊட்டிய கல்வி*
*உணர்வோடு கலந்துவிட்ட*
*நினைவுகளுடன்*
*உளமாற நன்றி கூறி விடை*
*பெறுகின்றோம்.*

# எங்கள் அதிபர்

செல்வன்.த.அருட்குமார்
பழையமாணவன்
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி



"சித்திரமும் கைப் பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம், வைத்த தொரு கல்வி மனப் பழக்கம் – நித்தம் நடையும் நடைப் பழக்கம் நட்பும் தயையும் கொடையும் பிறவிக்குணம்" என்றார் ஔவையார். இந்தவரிசையில் ஓவியம் வரைவதும், சொற்களை உச்சரிப்பதும் இடைவிடாத செயற்பாட்டாலே செம்மைபெறும். அதேபோல நமது ஒழுக்கமும், நட்பும், இரக்கமும், கொடைக்குணமும் நமது பிறவிக்குணங்கள் ஆகும். இங்கு கீழே சொல்லப்பட்ட நட்பு, இரக்கம், கொடை என்பவற்றிற்கு இலக்கணமாகத் திகழ் பவரே எங்கள் கல்லூரியின் அதிபர் திரு.அ.ஈஸ்வரநாதன் என்று கூறிக் கொள்வதில் நான் பேருவகை யடைகின்றேன்.

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரிக் கெனத் தனித்துவமான பண்பு ஒன்றிருப்பதை யாவரும் அறிவர். அதாவது "சகல மாணவரும் கல்வி கற்க வேண்டும், கல்வியில் சமத்துவம் பேணப்படல் வேண்டும்" என்பதில் உறுதியாக உள்ளமையே அதுவாகும். அதிலும் குறிப்பாக, ஏனைய பாடசாலை களிலிருந்து ஒதுக்கி விடப்படும் மாணவர்களை அன்புடன் அரவ ணைத்து, கல்வி போதித்து அனுப்புகின்ற தர்மகைங்கரியத்தைச் செய்து வருகி ன்றது. அதற்குக் காரணமானவர் கல்லூரியின் அதிபர் ஈஸ்வரநாத னேயாவார்.

குறிப்பாக க.பொ.த(சா/த) பரீட்சை யில் கணிதம் மற்றும் பிறபாடங்களைச் சித்தியடையாத, சித்தியை அண்மித்தி ருக்கும் மாணவர்களாகிய எங்களைப் பாடசாலையினுள் உள்வாங்கி, அக் குறித்த பாடங்களைச் சித்தியடைய மேலதிக வகுப்புக்களை ஒழுங்கமைத்துத் தந்து, எமது வாழ்வில் ஒளியேற்றிய பெருந்தகையாளர் எமது அதிபராவார். நகரிலுள்ள பெரிய பாடசாலைகளும் சரி, ஏனைய பாடசாலைகளும் சரி தங்களது பாடசாலைகளும் சரி தங்களது பாடசலை யிலேயே கல்வி கற்று க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடையத் தவறும் பட்சத்தில் அந்த மாணவர்களுக்கான வாய்ப்பையே நிராகரித்து விடுகின்ற வேளையில், யா/உரும்பிராய் இந்துக்

கல்லூரி அவர்களை அன்புடன் அரவணைத்து க.பொ.த (உ/த) கல்வி கற்கச் சந்தர்ப்பம் வழங்குகின்றதென்றால் அதனை எம்மால் போற்றாமலிருக்க முடியவில்லை. அத்துடன் எமது கல்விப்பயணத்தில் ஒருவருடத்தினைச் சேமிக்கவும் வழி செய்கின்றது. "காலம் பொன்னானது, காலத்தை வீணாக்காதே!" என்று வெற்று வார்த்தைகளால் கூறாமல், அதனைச் செயலிலும் காட்டி நிற்கின்ற எமது கல்லூரி, ஏனைய கல்லூரிகளுக் கெல்லாம் ஒரு முன்னுதாரணமாகும். இத்தகைய அரிய பெருந்தியாகச் செயலில் தன்னை அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்திய அதிபர் திரு.அ.ஈஸ்வர நாதன் அவர்களின் துணிவினைப் பாராட்டாமலிருக்க முடியவில்லை.

1999ல் இக்கட்டான சூழ்நிலையில் கடமையைப் பொறுப்பேற்ற அதிபர் அவர்கள் பாடசாலையின் பௌதீக வளம், ஆசிரிய வளம் அனைத்தையும் படிப்படியாக முன்னேற்றியதோடு, வருடந்தோறும் க.பொ.த(சா/த) பரீட்சை யில் சித்தியடையத்தவறும் மாணவர்கள் 20-30 பேரையாவது உள்வாங்கி, அவர்களில் கணிசமானோரைச் சித்தியடையச் செய்கின்ற பெருமையும் போற்றுதற்குரியதாகும்.

பொய்யாமொழிப்புலவர்

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்று
ஆய்ந்து
அதனை அவன் கண் விடல்"

(குறள்-517)

என்று பாடியமை எங்கள் அதிபர் ஈஸ்வரநாதனுக்கே சாலப் பொருந்தும். அதிபரின் கருணையுள்ளத்தால் உயர் தரத்தில் கல்விகற்ற எத்தனையோ மாணவர்கள் பெரிய பெரிய பதவிகளை அலங்கரித்த வண்ணமேயிருக்கின்றனர். அதே போல எமது கல்லூரியன்னையும் நூற்றாண்டு விழாவில் அழகிய பிரார்த் தனை மண்டபத்துடன் பொலிவுற்று விளங்குகின்றதென்றால் அவை யாவும் ஈசன்செயலே ஆகும்.

"பல்லாண்டு காலம் கல்லூரியும், எங்கள் அதிபரும் வாழ வேண்டும்" என இறைவனை வேண்டுகின்றோம்.

"எண்ணியது முடித்தல் வேண்டும் .
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய மனமும் வேண்டும்
தெரிந்த நல்லறிவும் வேண்டும்"

# பசுமையான என் நினைவுகளின் பகிர்வு

திருமதி.த.மனோகரன்
ஆசிரியர்
பழையமாணவி
யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி



நாம் 5ம் தரத்தில் பயிலும் போதே எப்போது பெரிய பள்ளிக்கூடம் (உ.இ.க) போவோம் என்பதே கனவாக இருக்கும். 1974ம் ஆண்டில் தரம் 6ல் உரும்பிராய் இந்துக்கல்லூரியில் எனது அக்கா, அண்ணாமாருடன் கல்வி பயில இணைந்தேன். வந்த சில நாட்களிலேயே இனிய பல நண்பர்களைச் சம்பாதித்துக் கொண்டது மட்டுமல்ல மிகச் சிறந்த ஆசிரிய வழிகாட்டல்களையும் பெற்றுக் கொண்டேன். அவற்றில் சிலவற்றை உங்களுடன் பகிர்வதில் மனநிறை வடைகின்றேன்.

இப்பாடசாலை வந்த ஆரம்ப காலத் திலே நிகழ்ந்த ஒரு சம்பவம் இன்றும் எனது மனதில் அன்றைய ஆசிரியர் களின் ஆசிரியத்துவப் பண்பையும், ஆளுமையையும் பசுமையாக நினைவு படுத்துகின்றது. விஞ்ஞான பாடவேளை, அழகான எமது விஞ்ஞான ஆசிரியரை அழைக்க ஆசிரியர்கூடம் சென்று தயங்கி நின்றேன். அப்போது ஓர் ஆசிரியை (அகில் ரீச்சர்) யாரை அழைத் துப்போக வந்திருக்கிறீர் என்றார். நானும் "மைனா ரீச்சர்" என்றேன். (எனது அண்ணன்மார் கூறுவது போல்) அப்போது அந்த ஆசிரியை என்னை மிக அருகில் அழைத்து அப்படிச் சொல்லக்கூடாது திருமதி.இரட்ணசபாபதி என்று அழைக்க வேண்டும் என்றார். அந்த ஆசிரியை என்னைச் சிறிதும் கண்டிக்காமல், நான் அறியாமற் செய்த பிழையைச் சுட்டிக்காட்டியது என் மாணவ பருவத்திலும், ஏன்? ஆசிரிய வாழ்விலும் நான் கடைப்பிடிக்கக் கூடிய ஓர் இனிய செயற்பாடாகவே என் மன தில் பதிந்தது.

இது மட்டுமல்ல, எம் ஆசிரியர் குழாம் எவ்வளவு அன்பாக, அந்நி யோன்யமாக ஒரு குடும்பம் போல் இனிமையாகப் பழகுவார்கள். அவர்கள் சிரித்துக் கதைத்து மகிழ்வதுடன் மாண வர்களாகிய எம்முடனும் அன்பு, பாசமாகப் பழகுவதும் இன்றும் என் மனக்கண்முன் நிழலாடுகின்றது. காலை

ஆராதனையோ கோயிலில் நிற்பது போன்ற உணர்வையே கொண்டு வரும். அப்போது தமிழ் ஆசிரியராக இருந்த பண்டிதர் நவரத்தினம் அவர்களின் பூஜை மட்டுமல்ல அவரின் நற்சிந்தனை (உரை) எம்மையெல்லாம் பக்தியில் ஆழ்த்தும், இறைநம்பிக்கையை ஊட்டும். அவர் அடிக்கடி தனது சுத்தமான தமிழில் கூறும் 'புண்ணை உண்கிறீர்கள்" என்பது அவரின் கொல்லாமை, எல்லா உயிர்க ளிலும் அன்பு செலுத்துதல் எனும் தத்து வத்தை இன்றுவரை நினைவூட்டும்.

அதுமட்டுமா? ஒவ்வொரு உயர்தரப் பரீட்சை முடிவு வெளியீட்டின் போதும் எமது பாடசாலை மகிழ்வலையில் தள்ளா டும். எத்தனை வைத்தியர்கள், பொறியி லாளர்கள், பட்டதாரிகள் எனக் கணக்கிட்டு மகிழும்.

உதைபந்தாட்டம் என்றால் அந்தக் குழுவில் சிறப்பாக விளையாடுபவர் மட்டுமல்ல. நல்ல பல நுட்பங்கள் தெரிந்த வர்களும் இருப்பார்கள். அவ்வாறு விளையாடி வெற்றி பெற்று வரும் போது அவர்கள் குதூகலமாக வீதியால் எப்போது போவார்கள் என மாலையில் காத்திருப்போம்.

எமது வகுப்பாசிரியையாகப் பலகாலம் இருந்த திருமதி.இரட்ண சிங்கம் (தவமணி ரீச்சர்) என் உள்ளக் கோயிலில் என்றும் அம்மன் போல் குடியிருப்பவர். அவ்வாறு அமைதி பொறுமை, ஆளுமை, அறிவு, அழகு நிறைந்தவர். அவர் நடந்து வருவதைக் கூட நான் இரசிப்பதுண்டு.

எனது உயர்தரக் கல்வி வாழ்க்கை தான் என் இன்றைய கலையுலக வாழ்வுக்கு வித்திட்டது. அன்றைய ஆசிரியர்களே எமது வாழ்விற்கு வழி காட்டிகள், தாய், தந்தையரைவிட ஆசிரி யர்களையே நம்பினோம். நான் உயர்தரம் விஞ்ஞானப்பிரிவில் படித்த போது எமது வகுப்பாசிரியராக இருந்தவர் தாவர வியல் ஆசிரியர் திரு.பூரணச்சந்திரன் ஆவார். நான் பாடசாலையில் சங்கீத பாடம் பயிலும் ஒரு மாணவியாக இருந்த போதும் வெளிவாரியாக நடனம் பயின்ற தால் பாடசாலைக் கலைநிகழ்வுகளில் நடனநிகழ்ச்சிகள் செய்வதைக்கண்டு எனக்கு அத்துறையே சிறந்தது எனக் கூறினார். நானும் பலரின் எதிர்ப்பின் மத்தியிலும், இவ்வாசிரியரின் வார்த் தையை மதித்தும், நடன ஆசிரியை பத்மினி நடராஜா அவர்களின் 'வழி காட்டலின்படியும் எமது தாயாரின் ஆசீர் வாதத்துடனும், நுண்கலைக்கல்லூரி சென் றேன். இன்று நடன ஆசிரியராகத் திகழ் வது இவர்களின் ஆசீர்வாதமே! என்பது அசைக்க முடியாத உண்மை.

நாம் கற்ற காலத்தில் இருந்த என் மனம் நிறைந்த அதிபர், ஆசிரியர் தெய்வங்கள் சிலர். திரு.சிவானந்தன், திரு.சிவன்பாலன், திருமதி.இரட்ண

சிங்கம், திருமதி.இரட்ணசபாபதி, திருமதி. இராஜாநந்தம், திருமதி.அமிர்தலிங்கம், திருமதி.கார்த்திகேசு, திருமதி. சுப்பிர மணியம், திருமதி.சிவலிங்கம், திருமதி. நவரட்ணசிங்கம், திருமதி.தவரட்ணம், திருமதி.பஞ்சலிங்கம், திரு.திருச்செல்வம், திரு.சின்னத்தம்பி, திரு.இரட்ணம், திரு.ஆறுமுகம், திரு.பூரணச்சந்திரன், திரு.ஸ்மைல் (முஸ்லீம் ஆசிரியர்)

இவ்வாசிரியர்களின் வழிகாட்டல் கள், முன்மாதிரி நடத்தைகள் தான் சமுதாயத்திற்குப் பல கல்விமான்களை உருவாக்கித் தந்தன. நான் இறக்கும் முன் இவர்களை யெல்லாம் ஒரு முறையேனும் தரிசிக்க வேண்டும் என்பதே எனது அவா.

இவற்றையெல்லாம் நான் பகிர எண்ணியது இன்றைய மாணவ சமுதாயம் மனம் போன போக்கில் நடவாது மாதா, பிதா, குரு, சொற்கேட்டு, தம் உள்ளார்ந்த திறனை வெளிக் கொணரவும் எதிர்காலத்தை வள மாக்கவும் பயன்படுத்துவது மட்டுமன்றி, எல்லாவற்றிற்கும் மேலாக இறை நம்பிக்கையுடன் நல்லதே நினைத்து நன்மையே செய்து நன்மையே பெற்று வாழ வேண்டும் என்றும் எனது ஆசிரியத் தெய்வங்களுக்கு நன்றி கூறும் ஒரு களமாகவும் இதைத் கருதி நிறைவு செய்கின்றேன்.

# கல்லூரி நினைவுகள்

Dr. (திருமதி)அருள்மொழி சுதர்மன் BSMS (Hons)
மருத்துவப்பொறுப்பதிகாரி,
பழையமாணவி
யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி



உரும்பிராய் இந்துக் கல்லூரியில் எனது பாடசாலைப் பருவம் 1987ம்ஆண்டு தொடங்கியது. 1987 தை மாதம் தரம் 6 இற்கு அனுமதி பெற்றேன். (எழுத்துப்பரீட்சை ஒன்று நடந்தது. அதில் தேர்ச்சி பெற்றவர்களுள் நானும் ஒரு மாணவி). இக்காலத்தில் அதிபராக இருந்தவர் திரு.சி. சிவபாலன் அவர்கள்.

1987 ஆம் ஆண்டில் நாட்டில் இனக்கலவரம் மிகுந்து காணப்பட்டது. கோட்டைப் பிரச்சினை என்று யாழ்ப்பாணப்பாடசாலைகளுக்குச் செல்வது சிரமமான காரியமாக இருந்ததாலும், எனது தாயார் திருமதி.ப.ஆனந்தராசா அவர்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக கடமை யாற்றியதாலும் என்னை எனது பெற்றோர் ஊர்ப்பாடசாலையில் உயர்தரக் கல்விக்காகச் சேர்த்தனர். அன்றைய காலங்களில் போராளிகளின் camp ஒன்று எமது பாடசாலைக்குச் சமீபமாக இருந்தமையினால் குண்டு வீச்சு விமானங்களின் குண்டுகளிற்கு ஒரு முறை எமது பாடசாலை இலக்கானது. அந்தக் காலத்தில் பாடசாலை வேளை யில் குண்டுவீச்சு விமானங்கள் வட்ட மிட்ட போது எமது வகுப்பு ஆண்டு 6 மாடிக்கட்டடத்தில் இருந்தமையால் எல்லாமாணவர்களையும் கீழே இறங்கி வரச்செய்து படிகளுக்கு கீழேயும், மாடிகளுக்கு கீழேயும் பதுங்கச்செய்து பாதுகாக்கப்பட்டோம். இச்சம்பவங்களை இன்று நினைத்ததாலும் எனது உடலில் ஒரு நடுக்கம் ஏற்படுவதை உணரக் கூடியதாக உள்ளது.

1987ல் இந்திய இராணுவத்தின் வரவினால் ஏற்பட்ட போரினால் எமது பாடசாலை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டது. காலை ஆராதனை நடக்கும் ஆராதனை மண்டபம் மற்றும் மலசல கூடத்துடனான மாடிக்கட்டடம் எரியூட்டப்பட்டது. குண்டு வீச்சு விமானங்களினால் குண்டு வீசி உடைத்து நாசமாக்கப்பட்டது. இதனால் மாணவர் களது பிறப்பத்தாட்சிப் பத்திரங்கள், மற்றும் பரீட்சைப்பெறுபேறுகள் கூட எரிந்து நாசமானது வரலாற்றில்

இடம்பெற வேண்டிய ஒன்று. இவ்வாறு போர் அனர்த்தங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்ட பாடசாலைகளில் எமது பாடசாலையும் ஒன்று.

இருந்த போதும் அதிபர், ஆசிரியர், பழைய மாணவர் சங்கம் இவற்றின் முயற்சியினால் வெட்ட வெட்டத் தளிர்க்கும் வாழை போல உரும்பிராய் இந்து வளர்ச்சியடைந்தது. அன்று எமது ஆசிரியர்களாக தமிழ் திருமதி. S.சிவலிங்கம், கணிதம் திருமதி.A. துரைசாமி. இவர் எனது தந்தையார் திரு.க.ஆனந்தராசா (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களுக்கும், வயாவிளான் ம.ம. வித்தியாலத்திலும் கணிதபாடம் போதித்தவர். மற்றும் சுகாதாரம் திருமதி. மீ.நவரெட்ணம். விஞ்ஞானம் திருமதி. S.பாலகிருஷ்ணன், திருமதி.N.மயில் வாகனம், தமிழ் திருமதி.சு.அமிர்தலிங்கம் மற்றும் செல்வி.S.சாரங்கபாணி, சமூகக்கல்வி, வரலாறு செல்வி.S. செல்லையா, செல்வி.ஆ.பொன்னுத் துரை, மனையியல் திருமதி.S.சுந்தரம், உடற்கல்வி திரு.S.தம்பித்துரை, ஆங்கிலம் திருமதி.S.கந்தசாமி, திருமதி.S.கந்தையா, திரு.S.செல்வநாதன், திரு.N.வாமதேவன், சமயம் திருமதி.வ. சண்முகசுந்தரமூர்த்தி, வர்த்தகம் திரு.அ. ஈஸ்வரநாதன் (தற்போதைய அதிபர்), திருமதி.க.விஜயகுமார், செல்வி. S.சந்தியா என சிறந்த ஆசிரியர் குழாம் எமக்கு அர்ப்பணிப்புடன் பாடங்களை அழகாக கற்றுத் தந்தனர்.

இதில் பல பேர் 1990 ஆம் ஆண்டு வெளிவந்த சுற்றுநிருபம் ஒன்றிற்கமைய 20 வருட சேவையில் ஓய்வு பெற்று வெளிநாடுகளுக்கு சென்று அங்கு குடியமர்ந்தும் விட்டார்கள். இதற்கு எமது நாட்டின் இனப்பிரச்சினையே பிரதான காரணமாகும். இதனால் சிறந்த பல ஆசிரியர்களை உரும்பிராய் இந்து அன்றைய காலகட்டத்தில் இழந்தது உண்மை.

எனினும் காலச்சக்கர மாற்றத்தில் புதிய ஆசிரியர்களின் வரவினால் பாடசாலை சீராக இயங்கியது. திரு.சி. சிவபாலன் அவர்கள் ஓய்வு பெற்றுச் சென்றதும் திரு.B.பாலசுப்பிரமணியம் அவர்கள் அதிபராகக் கடமையேற்றார். இவரது காலப்பகுதியில் தான் வயா விளான் மத்திய மகாவித்தியாலம் இடம்பெயர்ந்து எமது பாடசாலையில் ஒரு பகுதியில் இயங்கியது. அது 1990 ஆம் ஆண்டு என நினைக்கின்றேன்.

உரும்பிராய் இந்துக்கல்லூரியின் இல்ல விளையாட்டுப்போட்டிகள் மறக்க முடியாதவை. எமது கல்லூரியில் பஞ்சபாண்டவர்களின் பெயர்வரிசையில் வரும் நால்வரின் பெயரில் இல்லங்கள் இருந்தன. ஆரம்பத்தில் நான் "நகுலா" விலும் இடையே "வீமா", "அர்ச்சுனா", ஆகிய இல்லங்களில் இருந்து அணி நடை, சுவட்டு நிகழ்ச்சிகளில் பங்கு பற்றிய நிகழ்வு மறக்க முடியாதவை. எமது இல்லங்களின் அலங்கரிப்பு

நிகழ்வுகள் மிகவும் அழகாக இருந்தமை பற்றி இன்றும் நான் நினைவு கூருவ துண்டு. இயற்கை அலங்காரங்களாக அமைந்தது சிறப்பான ஒன்று. மற்றும் உடற்கல்வி ஆசிரியர் திரு.S.தம்பித்துரை காலங்களில் எமது பாடசாலை அணி யான உடற்கல்விக் கண்காட்சி ஆண்கள் அணி மாவட்ட மாகாண மட்டங்களில் எல்லாம் பங்கு பற்றிப் பரிசில்களை வென்றுள்ளது. அதில் சிறப்பான அம்சம் நெருப்பு வலயத்தினுள் மாணவர்கள் பாய்வது ஆகும்.

எமது பாடசாலை ஊர்ப்பாடசா லையாக இயங்கியமையால் திருவள் ளுவர் மன்றம் திரு.S.கமலநாதன் (உரும்பிராய் தபால் அலுவலகத்தில் கடமையாற்றியவர்) அவர்களது முயற்சி யில் கலை நிகழ்வுகளை 3 நாட்கள் தொடராக எமது கல்லூரி திறந்தவெளி அரங்கில் நிகழ்த்தியது. இதற்குப் பெருந்திரளானோர் பார்வையாளராக வந்திருந்தனர். இது தவிர கல்லூரியின் கலைவிழாக்கள் எனது பாடசாலைக் காலத்தில் இடம்பெற்றன. எமது பாடசாலையில் இயங்கிய வயாவிளான் ம.ம.வித்தியால அதிபர் ஆ.சி.நடராசா அவர்களது "மேலும் கீழும்" என்ற நாடகம் இவைகள் எல்லாம் எமது கல்லூரியின் திறந்த வெளி அரங்கில் அரங்கேறியவை, நான் கண்டு களித்தவை.

இன்னும் நவராத்திரி பூஜைகள், பரிசளிப்பு விழாக்கள், முத்தமிழ் விழாக்கள் என்று இணைப்பாடவிதான நிகழ்வுகளில் எல்லாம் எமது பாடசாலை பெரும் பங்களிப்புச் செய்துள்ளது என்றால் மிகையாகாது. சந்தோஷ மடையச் செய்கின்றன. எமது பாடசா லையின் வெள்ளி ஆராதனை முக்கிய மாகக் குறிப்பிடல் வேண்டும். இதில் அன்று "பண்டிதர்" என்று அழைக்கப் படும் திரு.S.நவரட்ணம் அவர்கள், பூஜை செய்து எமக்கு சிறிய அறிவுரைக் கதைகளும் கூறுவார். அவரது பல அறிவுரைக்கதைகள் எனக்கு இன்றும் கூடப் பசு மரத்தாணி போல நெஞ்சில் நிலைத்திருக்கின்றது. அவரது கணீ ரென்ற குரலுடனான மந்திர உச்சாட னங்கள், அவர் விஜயதசமி அன்று ஏடு தொடக்கும் விதம் இவை யெல்லாம் மறக்க முடியாதவை. பண்டிதர் அவர்கள் மறைந்த பின்பு எமது வெள்ளி ஆராதனை அவ்வளவாக சோபிக்க வில்லை என்பதும் உண்மை. எமது பாடசாலையில் பல்வேறுபட்ட மன்றங் கள் இயங்கின. தமிழ்மன்றம், விஞ்ஞான மன்றம், சைவசமய மன்றம் இவற்றுள் சிலவாகும். இவை மூலம் பல்வேறுபட்ட நிகழ்வுகள், கூட்டங்கள் எமக்கு இனிய அனுபவங்களாக விளங்கின. பல்வேறு போட்டிகளில் நாம் பங்கேற்க முடிந்த துடன் மற்றும் பல்வேறு பதவி களையும் நாம் அலங்கரித்தோம். நான் அநேக மன்றங்களில் பதவிவகித்துள்ளேன் என்று எண்ணும் போது எனக்கு இன்றும்

பெருமிதமாக உள்ளது. இம் மன்றங் களின் போஷகராகச் சிறந்த முறையில் எம்மை ஆசிரியர்கள் வழிகாட்டி னார்கள். இதில் அமரத்துவம் அடைந்த ஆசிரியர் திரு.அருள்குமார் மற்றும் திரு. ஜெ.ஈஸ்வரன் இவர்களைக் குறிப்பிட லாம்.

அன்று எனது பாடசாலைக் காலங்களில் ஒரு வகுப்பில் 4 பிரிவுகள் இருந்தன. அவை A,B,C,D என அதில் இரண்டு பெண்கள் வகுப்பு, இரண்டு ஆண்கள் வகுப்பு. பின்னைய நாட்களில் மாணவர் தொகை குறைந்து கொண்டு போனபோது 3 வகுப்புக்களாகின. 1992 இல் நான் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் அதிசிறந்த பெறுபேற்றைக் கோட்ட மட்டத்தில் பெற்றேன்.

பின்பு விஞ்ஞானக் கல்வியினையும் உரும்பிராய் இந்துவில் தொடர்ந்து கற்று 1995இல் க.பொ.த உயர்தர தேர்வில் தேர்ந்தவுடன் எனது பாடசாலை வாழ்க் கை முற்றுப் பெற்றது.

உயர்தரத்தில் ஆசிரியர்களாக திருமதி.சி.மகேந்திரன், திருமதி S.வக்சலா, திரு.S.தில்லைநாதன் விளங்கினார்கள். பின்னர் நாட்டில் ஏற்பட்ட சுமூகமான சூழல் காரணமாக நகர பாடசாலைகளில் அதிக ஆர்வத்துடன் மாணவர்கள் சேர்ந்தமையினால் ஊர்ப்பாடசாலை களில் கணித, விஞ்ஞான பாடங்களில் ஒரு தொய்வு நிலை தோன்றியது. எனினும் எனது உயர்தரப் பாடசாலை நாட்களில் எனது சக மாணவன் பொறியியல் பீடத்திற்குத் தெரிவானதும் மற்றும் கணித, விஞ்ஞான மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் பல்வேறுபட்ட துறைகளில் தேர்ச்சி பெற்றதும் உரும்பிராய் இந்துவிற்கு கிடைத்த பாராட்டு என்றே கொள்ளல் வேண்டும்.


ஒவ்வொரு தனி நபரது வாழ்க்கை யிலும் பாடசாலை வாழ்க்கைக் காலம் வசந்தம் மிக்கது. எனக்கும் அவ்வாறே இனிய அனுபவமாக, பசுமை நினைவாக எனது பாடசாலைக் காலம் அமைந்தது.

இன்று உரும்பிராய் இந்து நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் வகையில் வெளியிடும் நூற்றாண்டு மலரில் உரும்பிராய் இந்துவின் மாணவர்களான எம்மையும் இணைத்து ஆக்கம் ஒன்று கோரியமைக்காக நன்றி கூறி, எனது பாடசாலைப் பசுமை நினைவுகளை இன்னும் எழுதின் பல பக்கங்கள் அதிகரித்துச் செல்லும். எனது நினைவுப் பெட்டகத்தில் பல நினைவுகள் விடுபட்டுப் போயிருக்கும் என எண்ணுகின்றேன். என்னால் மறக்க முடியாத சில நினைவுகளை இதில் பகிர்ந்துள்ளேன்.

எனது பாடசாலை உரும்பிராய் இந்து ஆல் போல் தழைத்து அறிவு விருட்ச மாக வளர வேண்டும் என்று ஆண்ட வனைப் பிரார்த்தித்து நிறைவு செய் கின்றேன்.

# தித்திக்கும் நினைவுகள்

திரு.சி.டிகுகுமார்
(B.A. Dip.in.Edu) ஆசிரியர்
பழைய மாணவன்
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி



நான் தற்போது மு/மல்லாவி மத்திய கல்லூரியில் கற்பிக் கிறேன். இந்நிலையில் என்னை வளர்த்து ஆளாக்கிய கல்லூரி அன்னை நூற்றாண்டு விழாக் கொண்டாடுவதையிட்டு இறைஆசி வேண்டி வாழ்த்துவதில் பேருவகை அடைகிறேன். நான் ஒரு பட்டதாரி ஆசிரியர் என்று கூறுவதைக் காட்டிலும் கல்லூரியின் பழையமாணவன் என்று சொல்லுவதில் பெருமை அடைகிறேன். உரும்பிராய் இந்து அன்னையின் மடியில் தவழ்ந்த நாட்களில் நான் பெற்ற அனுபவங்கள் எண்ணிலடங்காதவை.

முன்னர் எமது கல்லூரியை "இங்கிலீஸ் பள்ளிக் கூடம்" என்றே கூறுவார்கள். அவ்வளவிற்கு அன்றும் தரமான பாடசாலையாகவே இது விளங்கியது. கல்வியில் மட்டுமல்ல இணைப்பாடவிதானச் செயற்பாடு களிலும் கொடிகட்டிப்பறந்து வான்புகழ் பரப்பியது என்பது மறுக்க முடியாத வரலாற்று உண்மை. கல்லூரி மைதானத்தின் மாமரத்தடியில் இரட்ணம் மாஸ்ரர் உடற்பயிற்சி பழக்குவார். அப்போது டம்பிளஸ் அடிக்கும் சத்தம் கேட்போரை மெய்சிலிர்க்க வைக்கும். வயதானவர்கள் ஏதாவது ஒன்றை நல்லதாகச் செய்தால் "இரட்ணம் மாஸ்ரர் றில்ப் பழக்கின மாதிரிக் கிடக்குது" என்று ஒப்பிட்டுப் பாராட்டுவது வழக்கம்.

அடுத்து உடற்பயிற்சி (P.T)க்காக வந்தவர் தம்பித்துரை சேர். அவரும் சளைத்தவர் அல்லர். அவர் உடற்பயிற்சி பழக்கும் போது பார்த்திருக்கிறேன். பெரியவகுப்பு அண்ணாமார் உடற் பயிற்சி செய்து 'டம்பிள்ஸ்" அடிக்கும் போது பெரிய சந்தோசமாக இருக்கும் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்று பூரிப்புடன் வருவார்கள். நானும் இதில் சேர்ந்தால் என்ன என்ற எண்ணம் தோன்றியது. எட்டாம் வகுப்பில் அணியில் சேர்ந்தேன். அப்போது 6ம் வகுப்புப் பெடியன் மாதிரி. அணியில் முன் வரிசையில் தான் நான். பயிற்சிகள் பாடசாலை மரத்தடியில் நடைபெறும். வெயிலில் எல்லாம் ஒரே பயிற்சி, நிறையப் பயிற்சி. "டம்ளஸ்" தூக்கி யடிப்பது எனக்குப் பெரும் பிரச்சி னையாக இருக்கும். சேரின் பகிடிகள்

களைப்பை மாற்றும். இன்னும் இரண்டு நாளில் புது அணியினராகிய நாம் சந்திக்கும் முதலாவது போட்டி ஒத்திகை பார்க்க கணித ஆசிரியர் சின்னத்தம்பி சேர் வந்தார். அவரைக் கண்டாலே கால்கள் நர்த்தனமாடும். அவ்வளவு பயம் எல்லோருக்கும். நேரம் கணிக்கப் போவதாக கூறினார். ஆரம்பமானது நாங்களும் உற்சாகமாக வெயிலையும் பொருட்படுத்தாது தலைவரின் கட்ட ளைக்குத் துலங்கினோம். ஆசிரியர்கள் முகத்தில் மகிழ்ச்சியும் ஆவலும் டம்பிள்ஸ் அடிக்கும் சந்தர்ப்பம் வந்தது. வெயிலில் படுத்திருந்து காலைத்தூக்கி அடிக்க வேண்டும். அவ்வாறு அடிக்கும் போது எனது முழங்காலுக்கு மேல் பின்புறத்தில் தசையுடன் சேர்த்து 'டம்பிள்ஸ் ஆ! என்னால் வலியைத் தாங்க முடியவில்லை. ஆனாலும் நிறுத்த முடியாது, என உணர்ந்து தொடர்ந்து செய்தேன். ஆனாலும் கன்னங்கள் நனைந்து கொண்டிருந்தன. ஒருவாறு எல்லாம் முடிந்து அணி கலைந்த பின்னர் மாமரத்தடியில் அப்படியே விழுந்து விட்டேன். நண்பர்கள் சூழ்ந்து கொண்டனர். ஆசிரியர்களும் ஓடி வந்து தண்ணீர் போட்டுத்தடவி விட்டனர். தலையைக் கோதி வெகுவாகப் பாராட்டினர். பின்னர் போட்டியிலும் வென்று தேசியமட்டத்தில் தெரிவா னோம் (ஆதாரங்கள் உண்டு). இன்றும் அந்த உன்னதமான ஆசிரியப் பெருந்த கைகளை நினைத்தால் எப்படி மறக்க முடியும்? மீண்டும் பிறப்புண்டேல்.. யா/உரும்பிராய் இந்துவின் மாண வனாகப்பிறக்க ஆசைப்படுகின்றேன்.

# எனது கல்லூரிக் காலத்துப் பசுமையான நினைவுகள்

திருமதி.மீ.சோமநாதன்
பழைய மாணவி
யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி



முதற்கண் எனக்கு கல்விக் கண்ணைத் திறந்த உரும்பிராய் இந்துக்கல்லூரித் தாய்க்கு எனது மேலான வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு எனது கல்லூரிக் காலத்துப் பசுமையான நினைவுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆசைப் படுகிறேன்.

இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு எமது கல்லூரியில் நான் 5ம் வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்டேன். நிறை வாக 1960ல் கல்விப் பொதுத் தராதரம் (சாதாரணதரம்) சித்தியெய்தும் வரை கல்வி கற்றேன். நான் படித்த ஒவ்வொரு வகுப்பிலும் பல ஆசிரியர் களிடம் கல்வி பயின்றேன். அவர்களில் பலர் எம்மை விட்டுப்பிரிந்திருந்தாலும் அவர்களின் கடமையுணர்வையும் எமக்குக் கல்வி கற்பித்த முறைகளையும் என்றுமே மறக்கமுடியாது. மேலும் உரும்பிராய் இந்துக்கல்லூரி கல்வியில் மட்டுமல்ல விளையாட்டிலும் அந்தக் காலத்தில் சிறந்து விளங்கியது. குறிப்பாக விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றிய மாணவர்கள் முறையே "தர்மா", "வீமா," "அர்ச்சுனா," "நகுலா" என நான்கு இல்லங்களைச் சேர்ந்தவர்களாக இருந் தார்கள். நான் அர்ச்சுனா இல்லத்தில் இருந்ததை பெருமையாகக் கூற விரும்பு கிறேன். 1959ல் நான் தலைவியாக இருந்து மற்ற மாணவிகளை வழிநடத்திய பசுமையான நினைவை என்றும் மறக்க முடியாது. போட்டிகளில் பங்குபற்றிப் பல பரிசில்களை வென்ற நினைவு இன்றும் பசுமையாக நிலைத்து நிற்கிறது. குறிப்பாக எனக்குக் கல்வி கற்பித்த ஆசிரிய, ஆசிரியைகளில் பலர் மறைந்து விட்டாலும் சிலருடன் இன்னும் பழகும் வாய்ப்புக் கிடைத் திருக்கிறது. அவர்களில் திருமதி. தவமணி இரத்தினசிங்கம், திருமதி. காந்திமதி இராஜகோபல் சிவமலர்ரீச்சர், திருமதி. சாரதாதேவி பேராயிரவர், திருமதி.பராசக்தி நவரத்தின சிங்கம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். எது எப்படி இருப்பினும் இவர்களின் தன்னலமற்ற கற்பித்தலினால் நான் ஒரு அரச ஸ்தாபனத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்று, குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழ்கிறேன். இது எனது கல்லூரித்தாய்க்கு அர்ப்பணம்.

"வாழ்க! வளர்க! உரும்பிராய் இந்துக் கல்லூரி"

# பசுமை நினைவுகள்

திருமதி. ஜெயலதா கெங்காதரன்
பழைய மாணவி
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி



சின்னஞ் சிறு பிள்ளையாய் இருக்கையில் வீட்டில் சிதறிக் கிடக்கும் விளையாட்டுப் பொருட்களைப் போல என் மனது முழுவதும் சிதறிக் கிடக்கிறது என் கல்லூரி நாள் ஞாபகங்கள். என் அன்னையாம் உரும்பிராய் இந்துக்கல்லூரி அன்னையவள் தனது வீறுநடைப் பாதையில் தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இக் காலப்பகுதியில் இவ் இனிய ஞாபங்களை அசைபோட்டுப் பார்ப்பதில் எத்தனை திருப்தி! எத்தனை ஆனந்தம்!

மனிதனாகப் பிறந்த எவரும் காலச்சக்கரத்தில் பல்வேறு வாழ்க்கை முறைகளிற்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளனர். ஆனாலும் மனிதனாகப் பிறந்த எவரும் மறக்க முடியாதது எது வென்று நோக்கின் அது அவர்களுடைய பாடசாலை நாட்களேயாகும். அந்த வகையில் உரும்பிராய் இந்துக் கல்லூரி அன்னையின் மாணவியாகிய நான் இத்தருணத்தில் எனது கல்லூரி நாள் நினைவுகளை வீணையின் தந்தியினை மீட்பதைப் போல மீட்டிப் பார்க்கலாம் என எண்ணுகின்றேன். பல வைத்தியப் பெருந்தகைகளையும், பொறியியலாளர்களையும் கல்விமான்களையும் உருவாக்கிய இந்து அன்னையிடம் நான் கல்வி கற்ற காலம் 1979-1986 வரையான பகுதி என் வாழ்வில் மறக்கவே முடியாத காலங்களாகும்.

அந்த வகையில் நான் கல்வி கற்ற காலத்திலேயே அன்னையவள் தனது பவளவிழாவைக் கொண்டாடி இருந்தாள். அப்போது கல்லூரி அதிபர் திரு.செ. சிவன்பாலன் அவர்கள் பவளவிழா பெருங்காட்சியை சிறப்பாக நடத்தியதோடு பவளவிழா மலரினையும் வெளியிட்டு மூன்று தினங்கள் வெகு விமரிசையாக விழாவை நடத்தினார். அவ்விழாக்காலத்தின் போது நான் மாணவத் தலைவியாக இருந்தது இப்பொழுதும் கண்களின் முன்னே நிழலாடுகிறது. மேலும் மாணவரிடத்து சைவத் தையும் தமிழையும் வளர்க்கும் நோக்கில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் பண்டிதர் நவரத்தினக்குருக்கள் அவர்களினால் மகாபாரதம், கம்பராமாயணம் போன்றவற்றை அறிந்து

இலக்கியச் சுவை பருகியதையும் நினைக்கும் போது கண்கள் பனிக்கிறது.

இவை மட்டுமல்லாமல் மாணிக்க வாசகரின் திருவாசகத்திற்கு பெருவிழா எடுத்த ஆசிரியர் திருவாளர், சிவமகா லிங்கம் அவர்களின் வழிகாட்டலில் பத்திராதிபராக நானும் கலந்து கொண் டமை இவ்வேளையில் மனதிற்கினிக் கின்ற ஒன்றாகும். எமது கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியராகத் தம்பித்துரை அவர்கள் இருந்து எமது பாடசாலை மாணவர்கள் பல்வேறு சாதனைகள் புரிந்தமையும் இவ்வேளையில் நினைவு கூர வேண்டிய ஒன்றாகும். இவ்வாறு தனது நீண்ட நெடும் பயணத்தில் வீறுநடை போடும் அன்னையவள் தற்போதைய அதிபர் திரு.அ.ஈஸ்வர நாதன் அவர்களின் காலத்தில் தனது நூற்றாண்டு விழாவை விமர்சையாக கொண்டாடுவதோடு, உலக நாடுக ளெங்கும் பதிந்துள்ள தனது விழுது களின் உதவியோடு நிலைத் திருக்க எல்லாம் வல்ல இறைவனின் ஆசிகளை வேண்டுகின்றேன்.

# Wishes from Retired Teacher

Mrs.Thavamany Rathinasingham
Retired Teacher
Australia



It is a great mile stone for Urumpirai is in general and UHC in parti cular to have comp leted 100 years of educational signifi cance I'm happy to send these wishes.

I recall the long years at UHC, first as a student from 1936 and then as a teacher from 1945-1980. This period also includes the two years of 1948 and 1949 when I was in Teacher Training at GTC Good training college in Colombo. Memories are many and varied. In the following years UHC has benefited through the contribution of many teachers and principals. It is with pride I think of the men and women who had gone out of the portals of this institution to serve in many societies of the world.

UHC needs the good will and especially of the past students. Having had a long connection with UHC I feel privileged and proud to send this message to the 100th of celebration committee. May all students past and present be proud of their alma mater.

# நீங்காத நினைவுகள்

திரு.V. பாலேந்திரா
ஓய்வு பெற்ற உப அதிபர்
பழைய மாணவன்
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி



உரும்பிராய் இந்துக்கல்லூரியில் நாங்கள் கற்றபோது பெற்ற அனுபவங்கள் பல. அவற்றில் என்றும் எம் மனதில் நிலைத்து நிற்கக் கூடியவற்றில் சிலவற்றை உங்களோடு பகிர்ந்து கொள்ள ஆர்வமாய் உள்ளேன்.

எங்களுக்கு பௌதீகம் கற்பித்த ஆசிரியர் திரு.இ.யோகேஸ்வரன். அவர் வகுப்பறைக்குள் நுழையும் போது "physics in nothing but maths" என்ற வாக்கியத்தோடு தொடங்குவார். வழமை போலத் தனது குறிப்புக் கொப்பியை திறந்து வைத்து வாசிக்கத் தொடங்குவார். எழுதுவதுதான் எங்கள் வேலை. இந் நிகழ்ச்சி ஒருநாள் தடங்கலாகப் போய் விட்டது. காரணம் இரத்தினம் அண்ணை வரவுப் புத்தகங்களுடன் குறிப்புக் கொப்பியையும் தூக்கிக் கொண்டு போய்விட்டார். இதை நாங்கள் கண்டு விட்டோம். சந்தர்ப்பத்தை விடாமல் Sir படிப்பம் Sir படிப்பம் என்று கோசமிட்டோம். Sir அங்கும் இங்கும் கொப்பியைத் தேடினார். கொப்பியைக் காணவில்லை. நாங்களும் விட்டபாடில்லை. Sir பொறுமையை இழந்துவிட்டார். அவருக்கு கிடைத்த தடியால் அடிக்கத் தொடங்கினார். அடி தாங்காமல் வகுப்பை விட்டு வெளியே சென்று விட்டோம். அங்கிருந்து கொண்டு இரத்தினம் அண்ணை கொண்டு போனவர் என்று கூறினோம். ஏன் அதை முதலில் கூறவில்லை என்று இரண்டாம் தரம் அடி கிடைத்தது. எங்களில் ஒருவன் அவர் பாணியில் "அடி is nothing but physics" என்று கூறினார். Sir க்கு சிரிப்பு வந்தது. இரத்தினம் அண்ணனைத் தேடிக் கொப்பியை வாங்கிவரப் பணித்தார். கொப்பி வந்ததும் அதை வழமை போல விரித்து வைத்து வாசிக்க தொடங்கினார்.


கணிதம் கற்பிக்கும் ஆசிரியர் திரு.கனகலிங்கம். இவர் அடித்தொண்டையால் கதைப்பதனால் சத்தம் தடிப்பாக வரும். கணக்கை தந்து விட்டு மேசையில் நித்திரை தூங்கிக் கொண்டிருப்பார். அவர் முழித்துப்பார்க்கும் போது யார் கணக்கு செய்யாமல் இருப்பது. நிமிர்ந்து பார்த்துக் கொண்டிருப்பவரை நோக்கி ஏன் தெரியாதோ Board க்கு வா என்பார். அங்கு கணக்கை எழுதிச் செய் என்பார். செய்யாமல் விட்டால் கன்னத்தில் அடி.

போய் இருந்து செய்! என்பார். அந்த நேரத்தில் வகுப்பில் ஏதோ கணக்கு செய்து கொண்டிருப்போம். நிமிர்ந்து பார்க்கமாட்டோம். காரணம் நிமிர்ந்தால் Board க்கு போக வேண்டிவரும்.

ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர் திரு.ஆறுமுகம். இவர் நன்றாக வெற்றி லை போடுவார். போட்டபடியே வகுப்பிற்கு வருவார். அவர் அந்த நிலையிலே பாடத்தையும் கற்பிப்பார். ஒரு நாள் வழமைக்கு மாறாக கேள்வி கேட்டார். அதாவது What in Adjective? முன் வாங்கில் ஐந்து மாணாக்கர்கள் இருந்தோம். அதில் நானும் ஒருவன் முதல் நான்கு மாணவர்களும் விடை சொல்லவில்லை. எனது முறை வந்ததும் நான் Its describe Nown என்று கூறினேன். அவர் உடனே very good என்று பாராட்டினார். ஆனால் வெற்றிலைத் துப்பல் எனது உடுப்பிலும் முகத்திலும் பட்டுவிட்டது. சொல்லாத நால்வருக்கும் அடி அகோரமாக விழுந்தது. நால்வரில் ஒருவன் என்னைப்பார்த்து நாங்கள் ஏன் சொல்லவில்லை என்பது தெரியுதோ என்று கேலி செய்தார்கள்.

எமது கல்லூரியின் நூற்றாண்டு விழா மலரில் எனது நீங்காத நினைவுகளைப் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைவதோடு, கல்லூரி மென்மேலும் வளர்ந்து விருட்சமாக வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


# உதைபந்து அணி



1961



1972



1986



1987




2009



2010

# உடற்பயிற்சி அணி



1978



1986

# என் ஞாபகத்தில்...

திரு.S.கணேஸ்
ஓய்வு பெற்ற நூலகர்
பழைய மாணவன்
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி



சிறுவயதில் நான் பாடசாலைக்குச் செல்லும் போது பனம் பழ மூகிழைக் காலால்த் தட்டித் தட்டிச் சென்று கால் நகத்தினைப் பல முறை இழந்தவன். உதைபந்தாட்டத் துக்காகவே இக்கல்லூரிக்கு மாறியவன். ஒருநாள் உதைபந்தாட்டத்தில் விளையாட ஆர்வம் உள்ளவர்கள் கல்லூரி மைதானத்திற்கு அழைக்கப்பட்டனர். அங்கே அரைக்காற்சட்டை அணிந்த மெல்லிய ஒருவர் கையில் பிரம்புடன் நின்று பந்தை ஓர் இடத்தில் வைத்து குறித்த ஓர் இலக்கை நோக்கி அடிக்கச் சொன்னார். சிலர் சரியாகவும் பலர் பிழையாகவும் அடித்தனர். பிழையாக அடித்தவர்களுக்கு பின்புறமாகப் பிரம்படி விழுந்ததுடன் குறித்த இடத்தில் வைத்து பந்தைச் சரியாகவும் அடித்துக்காட்டினார். அவர் வேறு யாருமல்ல அன்றைய அதிபர் ஸ்ரீநிவாசன் தான். அந்த அடி எனக்கும் கிடைத்தது தான். அதுவே என்னை உதைபந்தாட்டத்தில் நன்கு வளர்க்க உதவியது. அன்று அந்த அடி, வகுப்பில் நாடியில் விழும் அடி, முதுகில் முழங்காலால் இடிக்கும் இடி, புறங்கை விரல்களில் றூளரால் விழும் அடி, காதில் நகத்தால் கிள்ளும் கிள்ளு, இவை எல்லாம் அன்று உறைத்தனதான். ஆனால் இன்று நினைக்கும் போதெல்லாம் இனிக்கிறது. இவையெல்லாம் என் வளர்ச்சிக்கும் உதவியுள்ளதுடன், இவர்களே மற்றைய எல்லோரையும் விட எம் மனதில் நீங்கா நினைவுடன் நீடித்து வாழ்பவர்கள் ஆகும்.

தம்மை ஏணியாக்கி எம்மையெல்லாம் மேல்நோக்கிச் செல்ல உதவியவர்கள் ஆசிரியர்களே. நாம் எந்நிலைக்கு உயர்ந்தாலும், எப்போதும் அவர்கள் எமக்கு குருவானவர்களே அவர்களுக்கு என்றென்றும் தலைவணங்குவோம். எனது உதைபந்தாட்ட வளர்ச்சிக்கும் நூலகத்துறையில் 40 வருடம் கடமையாற்றி பிரதம நூலகராக வளர்ந்தமைக்கும் எனது இக்கல்லூரிக்கும் பெரும்பங்கு உண்டு. இறுதியாக என்னுடன் படித்த மாணவர்கள், கற்பித்த ஆசிரியர்கள், சக விளையாட்டு வீரர்கள் இவர்களில் பலர் தற்போது எம்மிடையே இல்லை. இருப்பவர்களேயாவது அருகி வரும் நாட்களில் ஒரு முறையேனும் காண, கதைக்க முடியாதா என்றொரு ஏக்கம். சிலர் எக்காலத்திலும் மறக்க முடியாதவர்கள். மீண்டும் வராத அக்கால வாழ்வை நினைக்கும் போதெல்லாம் கண்கள் குளமாகின்றன.

# நான் கண்ட தமிழ் மேதை பண்டிதப் பெருந்தகை

திருமதி.சகுந்தலா பரங்கிரிநாதன் (கனடா)
ஓய்வுபெற்ற அதிபர்,
யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.



சைவமும், தமிழும் தனிச்சிறப்புடன் ஒப்புயர்வுடன் விளங்கும் யாழ்ப்பாணத்துப் புகழ் பூத்த உரும் பிராய்ப் பதியினை 20ம் நூற்றாண்டின் பெரும்பகுதிக் காலம் கல்வியின் வாயிலாக அலங்கரித்த ஆசிரியப் பெருந்தகை பண்டிதர், வித்துவான், சைவப்புலவர், சிவத்திரு.இ.நவரத்தினக் குருக்கள் அவர்கள் ஆவார்.

1911ம் ஆண்டில் தோற்றம் பெற்று இன்று 2011ம் ஆண்டில் தமது நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி, அதன் காலப்புலத்தில் அரும்பணியாற்றிய, தமிழ்மொழியில் பாண்டித்தியம் பெற்ற, தலைசிறந்த கல்விமானும், சமஸ்கிருத மொழியில் சிவநெறிப்பற்று மிக்கவராகவும் விளங்கிய பண்டிதர்ஐயா அவர்களின் பணியைப் போற்றுவதிலும் இறும்பூதெய்துகின்றோம்.

இணுவில், உரும்பிராய்ப் பதிகளைப் பிறப்பிடம், வதிவிடமாகக் கொண்ட இளையதம்பி இராமுஐயருக்கும், கந்தையாஐயர் அன்னம்மா தம்பதியினருக்கும் இரண்டாவது சற்புத்திரனாக 1918.06.23ல் பிறந்தவரே பண்டிதர் ஐயா அவர்கள். தமது ஆரம்பக்கல்வியை உரும்பிராய் சந்திரோதயா வித்தியாசாலையிலும், கனிஷ்ட, சிரேஷ்ட கல்வியினை யா/கோப்பாய் சரவணபவானந்தா, யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி, திருநெல்வேலி முத்துத்தம்பி, காவியப் பாடசாலைகளிலும் கற்றுத்தேறினார்.

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் ஆசிரியப்பயிற்சி பெற்றார். அவ்வேளை பண்டிதமணி, சி.கணபதிப் பிள்ளை அவர்களிடம் தமிழைக் கற்றுத்தேறி செந்தமிழ்ப் பேச்சு-எழுத்து எனச் செயற்பட்டதுடன் பண்டித மணியின் பெருமைக்குரிய நன்மாணாக்கர் ஆனார். "நான் பண்டிதமணியின் மாணவன்" என்று கூறுவதன் மூலம் தன் குருவைப் பெருமைப்படுத்துவார்.

யா/நாவலர் வித்தியாலய ஆசிரியராகவிருந்த சீதாராம சாஸ்திரிகள், கோப்பாய் தம்பிஐயாக்குருக்கள் ஆகியோரிடம் சமஸ்கிருதமும், மந்திரங்களும் கற்றுக் குருக்களானார். ஊரெழுவில் உயர்கல்விமானாகத் திகழ்ந்த முருகையர் முதலான பௌராணிகர்களிடம் பயிற்சி பெற்றுப் புராணபடனனானார். ஊரெழு சோதிடசிகாமணி, வே.சிவஞானஐயரிடம்

சோதிடம் கற்று சோதிடரானார். கொழும்பு விவேகானந்தா சபையினரின் மேற்பிரிவு சமயப்பாடப்பரீட்சையும், இந்தியா-சைவசித்தாந்தக்கழகச் சைவப்புலவர் பரீட்சையிலும் விசேடசித்தி பெற்று தங்கப்பதக்கங்களைப் பரிசாகப் பெற்று பாராட்டுப்பெற்றவர். பண்டித, வித்துவான் தேர்வுகளிலும் தேர்ச்சி பெற்றவர். கல்வி உலகில் ஒளிவிட்டுத் திகழவேண்டு மெனின், பட்டங்களைப் பிறரிடம் இருந்து பெறாமல் பரீட்சைகள் மூலம் பெற வேண்டும் என்று செயற்பட்டுக் களிப்படைந்தவர். இளமையிலேயே வீரசைவமரபு துலங்க வளர்ந்து சிவபூசாதுரந்தனர் ஆனார்.

குருக்கள், பண்டிதர், வித்துவான், சைவப்புலவர், புராணபடனர், சோதிடர், வாஸ்துசாத்திரி, நிலஅளவையாளர், போதனையாளர், பிரசங்கி போன்ற பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கிய பண்டிதர் ஐயா அவர்கள்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்ற வள்ளுவனின் கூற்றுக்கு இணங்க வாழ்ந்து காட்டிய பெருமகனார். தனது ஆசிரியப்பணியை மலையகப் பிரதேசத்தில் ஹற்றன் என்ற இடத்தில் ஆரம்பித்து தொடர்ந்து யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், யா/உரும்பிராய் இந்துக்கல்லூரிகளில் அற்புதமாக ஆற்றிச் சென்றார்.

பண்டிதர் ஐயா அவர்கள் ஹற்றனில் இருந்து உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்திற்கு "இந்துக்கல்லூரி அதிகாரசபை" யினரால் நியமனம் பெற்று கடமையாற்றி வருகின்றார் என்ற செய்தியை அறிந்ததும் பெரும் மகிழ்ச்சி தாண்டவமாடியது. அந்தநாளை நான் இன்றும் நினைத்துப் பார்க்கின்றேன். ஆசிரியர்களாகவே சிலர் பிறக்கிறார்கள், அவர்கள் உருவாக்கப்படுவதில்லை. "தாரமும் குருவும் தலைவிதிப்படி" என்றனர் நம் பெரியோர்கள். நல்லாசிரியர் ஒருவர் கிடைத்தால் உலக இன்பம் யாவும் கிடைத்துவிடும். ஆசிரியரின் கடமை கற்பித்தல் மட்டுமல்ல மாணவர்களை ஆளுமையுடையவர்களாக மாற்றுவது மாகும். பண்டிதர் ஐயாவின் வருகையுடன் நமது பாடசாலை மாணவர்களும், நமது ஊரவர்களும், அயலூரவர்களும் சைவசமய அறிவும், தமிழ்மொழி இலக்கண, இலக்கிய அறிவும் பெற்றுச் சிறப்படைந்தனர். நமது பாடசாலையில் சைவமும், தமிழும் மட்டுமல்ல கணிதம், சரித்திரம், பூமிசாஸ்திரம் (புவியியல்), சுகாதாரம் என எந்தப் பாடத்தையும் கற்பிக்கும் திறனுடையவராய் இருந்தார். வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் பூசைகளை வெகுசிறப்பாக நடத்துவதோடு பூசை முடிவில் ஆன்மீக நற்சிந்தனைகள், புராணக்கதைகள் பலவற்றைக் கூறி, மாணவ சமுதாயத்தை மேம்பாடடையச் செய்தார். நம் பாடசாலை மேம்பாட்டுக்கு உறுதுணையாய் இருக்கும் காலத்தில், யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி உயர்தர மாணவர்களின் சைவசமய பாட, தமிழ்மொழிஇலக்கண, இலக்கிய, சமஸ்கிருத பாட அறிவுத் தேவைகருதி பண்டிதர்ஐயா அவர்களை தமது கல்லூரிக்கு ஆசிரியராகக் கடமையாற்றக் கேட்டுப் பெற்றனர்.

மாணவர்களுக்கு அரிச்சுவடு ஏடு தொடக்குதல், சமயதீட்சை வைத்தல் போன்ற நிகழ்ச்சிகளை முறையாக முன்னின்று நிகழ்த்தியவர். பண்டிதர் தனது குருத்துவப் பணியையும் இலங்கை பூராவும் ஆற்றினார். வீரசைவ சமயக் குருக்கள் பரம்பரையில் உதித்த ஒரு மாணிக்கம் என்றே கூற வேண்டும் அனைவருக்கும் ஒரு முன் மாதிரியாக வீரசைவத் திலகமாக விளங்கினார். இந்துக்கோயில்களில் கொடியேற்றித் தேர், தீர்த்த திருவிழாக்களை, சமயக்கிரியைகளை, அனுஷ்டானங்களை மிகவும் நேர்த்தியாகச் செய்து முடிப்பார்.

பண்டிதர் ஐயா அவர்கள் யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரியின் கனிஷ்ட பிரிவுக்கு அதிபராக இருந்து அரிய பல சேவைகளை ஆற்றியுள்ளார். உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்திலும், யா/உரும்பிராய் இந்துக்கல்லூரியிலும் ஆசிரியராகக் கடமையாற்றிய காலப் பகுதியில் அப்பாடசாலைகளின் பெற்றோர், ஆசிரியர்சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் இணைத்தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளை அவ்வப் போது ஏற்று பாடசாலைகளின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்தார். இவரது சேவையின் சான்றுகளாக அவர் சேவைக்காலத்தில் வெளிவந்த யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரியின் “வித்தியா” சஞ்சிகைகளின் ஆண்டு அறிக்கைகளும், உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் "கற்பகம்" சஞ்சிகைகளின் ஆண்டு அறிக்கைகளும் உள்ளன. எனினும் விசேடமாக இந்துக் கல்லூரியின் பவளவிழாச் சிறப்பு மலர் (1911-1986) "வித்தியா" சஞ்சிகையும், சைவத்தமிழ் வித்தியாலய பவளவிழா மலர் (1915-1990) 1992ல் நூலும் சிறப்பித்துக் கூறியும், கௌரவித்துப் பாராட்டியமையும் நினைவு கூரத்தக் கவை.

இலங்கையில் இருந்து அன்னார் கனடா வந்திருந்தவேளை தமது மாணவர்கள், பழைய சக ஆசிரியர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரையும் சந்தித்துக் கலந்துரையாடி மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார். உரும்பிராய் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கம் (கனடாக்கிளை) நடாத்திய அங்குரார்ப்பண வைபவத்திலும், பொங்கல் விழாவிலும் ஆசியுரை வழங்கி நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்து அனைவரையும் ஊக்குவித்தார்.

'மக்கள் சேவையே மகேசன் சேவை"

தமிழ் மொழிக்கும், சைவசமயத் திற்கும் அரும்பணியாற்றிய பண்டிதர், வித்துவான், சைவப்புலவர் சிவஸ்ரீ இ.நவரத்தினக் குருக்கள்ஐயா அவர்கள் 1997ம் ஆண்டு எம்மைவிட்டுப் பிரிந்து இறையடி சேர்ந்த துயரச் செய்தியறிந்து அனைத்துக் தமிழ்பேசும் மக்களும் துயரத்தில் ஆழ்ந்தோம். அவர்தம் சேவையை இவ் வேளையில் நினைவு கூருகிறோம்.

'மக்கள் சேவையே மகேசன் சேவை"

# நெஞ்சில் நிறைந்த அதிபர்கள்

திரு.சி.கிருஷ்ணானந்தன்
பழையமாணவன்
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி



முதற்கண் உரும்பிராய் இந்துக் கல்லூரி அன்னையின் பாதார விந்தங்களைப் பணிந்து வணங்கி எம் நினைவுகளை இச்சந்தர்ப்பத்தில் மீட்டுப்பார்க்கின்றேன். இக் கல்லூரிக்கும் எமது குடும்பத்திற்கும் நீண்டகால உறவு நிலைத்திருக்கிறது. சுமார் அறுபது ஆண்டுகளுக்கு மேலான காலத் தொடர்பினை நாம் கொண்டிருக்கிறோம். எனது கல்லூரி வாழ்க்கை இங்கு 1953ல் ஆரம்பித்து அறுபதுகளில் பூர்த்தியடைந்தது. இக்காலப்பகுதியில் இரண்டு ஆளுமைமிக்க, ஆற்றல் மிகுந்த அதிபர்களின் தலைமைத்துவத்தின் கீழ்க் கல்விகற்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்தது எனது பெரும்பேறாகும். இதில் முதலாவதாக நான் குறிப்பிட விரும்புவது திரு.சீதாராமன், ஸ்ரீநிவாசன் அவர்களை யாகும். இப்பெருந்தகையின் காலப் பகுதியில் இக்கல்லூரி கல்வி கேள்வி, விளையாட்டுத்துறைகளில் மிளிர்ந்து நின்றது. இப்பெரியார் தென்னிந்தியாவில் உள்ள கொடுமுடி என்ற கிராமத்திற் பிறந்து வளர்ந்து பல்கலைக்கழகத்தில் தனது மேற்படிப்பில் ஆங்கில மொழியையும், இலக்கியத்தையும் பிரதான பாடங்களாகக் கற்று முதுகலைமாணி ப்பட்டமும் பெற்றவர்.

திரு.சீ.ஸ்ரீநிவாசன்ஐயாவும், தென்னிந்தியாவில் தமிழ்நாட்டின் முன்னணிப்பாடகியும் நடிகையுமான ஔவை, கே.பி.சுந்தராம்பாளும் ஒரே கிராமத்தில் உதித்துப் புகழ் பெற்றவர்களாவர். இவரிடம் கல்வி கற்ற மாணாக்கர் இன்றும் ஸ்ரீநிவாசன்ஐயா என்ற சொல்லைச் சொன்னதும் நம் இருகரங்களையும் கூப்பி நெஞ்சில் தொட்டு நினைவு கூருவர். அந்தளவிற்கு ஐயாவின் ஆங்கிலப் புலமையும் கற்பிக்கும் திறன்களும் சிறந்து விளங்கின. அத்துடன் மேல் வகுப்பிற்கான சில ஆங்கில நூல்களையும் ஆக்கியுள்ளார். அக்காலத்தில் இவருடன் கற்பித்த ஏனைய ஆசிரியர்களும் ஆங்கிலம் உட்பட சகலதுறைகளிலும் திறமைசாலிகளாகக் காணப்பட்டனர். இவற்றுடன் விளையாட்டுத்துறை இவருடன் கூடப்பிறந்த ஒரு கலை யாகும். கல்லூரிமட்ட விளையாட்டுப் போட்டிகளிலும் யாழ் மாவட்டப் பாடசாலைகளின் உதைபந்தாட்டச் சம்மேளனத்தில் (J.S.S.A) இருந்த மத்தியஸ்தர்களில் பிரபல்யமான ஒருவராகத் திகழ்ந்தார். அது மட்டுமல்ல இவருடைய சில விளையாட்டுத்துறை சம்பந்தமான சீர்திருத்தங்கள் இங்கிலாந்தில் உள்ள International Amateus Athletic fiederation வரை சென்றதாக அறிந்திருக்கிறேன். அந்தளவிற்கு இவருடைய பெயரும் புகழும் திறமையும்

சிறப்புற்றிருந்தது. இப்பெரியாரை ஒரு சகலகலாவல்லவன் என்றால் மிகையாகாது. அடுத்ததாக நான் இங்கு குறிப்பிட விரும்புவது பொதுவுடமைவாதியும், பெரியாருமான திரு.அ.வைத்திலிங்கம் ஐயா அவர்களையாகும். இவர் அராலி யூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆரம்பக்கல்வி இடைநிலைக்கல்வியை யாழ்ப்பாணத்திற் கற்றுத்தேறி உயர் கல்வியை இங்கிலாந்தில் உள்ள கேம்பி றிஜ் சர்வதேசப் பல்கலைக்கழகத்திற் கற்று கணிதத்துறையில், வெள்ளையர்களையே பிரமிக்கச் செய்து முதல் வகுப்பில் (1st class) தேறியவராவார். அங்கு இவருக்கு இரு பட்டங்கள் அதாவது B.A, M.Sc கிடைக்கப்பெற்றன. பின்பு தாய்நாடு திரும்பியதும் இவருடைய தகைமையை அறிந்த இலங்கை பல்கலைக்கழகச் சமூகம் இவருக்கு ஒரு விரிவுரையாளர் பதவியை வழங்கிய போதும் அதை ஏற்க மறுத்துப் பெற்றோரின் விருப்பத்திற்கேற்ப யாழ். இந்துக்கல்லூரியில் ஓர் ஆசிரியராகத் தன்னை இணைத்துக் கொண்டார். அதனைத் தொடர்ந்து 1960ற்கு சற்று முன்னதாக உரும்பிராய் இந்துக்கல் லூரியில் அதிபராகத் தன்னை இணைத்துக் கொண்டார். இவர் அராலியூர் மண்ணின் முதலாவது பட்டதாரி என்ற பெருமை யையும் கொண்டவர்.

இவருடைய காலமும் கல்லூரி வரலாற்றில் ஒருபொற்காலமாகும். இவ ரிடம் கல்வி கற்ற மாணவர்கள் அரச துறைகளிலும், தனியார் துறைகளிலும் உயர் பதவிகளைப் பெற்று அலங்கரித்துக் கொண்டிருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. மற்றும் சிலர் வெளிநாடுகளில் கல்வியிற் சிறந்து பிறந்தநாட்டிற்கும், வாழும் நாட்டிற்கும் பெருமையையும், புகழையும் வழங்கிக் கொண்டி ருக்கின்றனர். இத்தகைய இந்த அதிபர் என்றும் எளிமையான உடையணிந்து (வேட்டி, நஷனல்) சாதாரணமானவராகவே தோற்றமளிப்பார். கல்லூரி அதிபரின் அறையில் இவரைக்காண்பது அரிது. பெரும்பாலும் வகுப்பறைகளிலேயே கணிதபாடம் கற்பித்தலில் ஈடுபட்டுக் கொண்டிருப்பார். பொதுவுடமை வாதியாக இருந்து வட்டுக்கோட்டைத் தொகுதியில் திரு.அ.அமிர்தலிங்கத்துடன் போட்டி யிட்டுத் தோல்வியைத் தழுவியிருந்தாலும் தன் கொள்கையிலிருந்தென்றும் விலகா தவர்.

என்றைக்கும் கல்லூரியில் மறந்தும் அரசியல் பேசாத பெருந்தகை. இவருடன் அன்றைய காலகட்டத்தில் இலங்கைப் பாராளுமன்றத்திலிருந்த புகழ்பூத்த சிங்கள இடதுசாரித்தலைவர்கள் தோழமை கொண்டு அடிக்கடி யாழ்ப்பாணம் வந்து தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டு இவர் வீட்டில் தங்கிச் சென்றதை நான் அறிவேன்.

நல்லாசிரியர்கள் உருவாக்கப்ப டுவதில்லை. அவர்கள் ஆசிரியர் களாகவே பிறக்கின்றனர் என்பதற்கு இப் பெருந்தகை ஓர் எடுத்துக்காட்டு.

# உரும்பிராய் இந்துக்கல்லூரியில் நடந்த மறக்கமுடியாத உண்மைச் சம்பவம்

திரு.V.S.செல்வரத்தினம்
பழைய மாணவன்
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி



"சிரித்தால் எரிப்பேன்"

யாழ் மண்ணில் உள்ள கிராமங்களில் உரும்பிராய் பல கோயில்களையும் பல பாடசாலைகளையும் கொண்ட ஒரு அழகான கிராமமாகும். இந்தக் கிராமத்தில் பலாலி வீதியில் ஊரெழு கிராமத்திற்கு அண்மையில் அமைதியான சூழலில் உரும்பிராய் இந்துக்கல்லூரி அமைந்துள்ளது. உரும்பிராய் இந்துககல்லூரியில் 1958ம் ஆண்டு தொடக்கம் 1966ம் ஆண்டு வரைக்கும் கல்வி கற்கும் அரிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

நான் அன்று 1963ம் ஆண்டு க.பொ.த சாதாரணதரம் விஞ்ஞான வகுப்பில் கல்வி பயின்று கொண்டிருந்தேன். எனது வகுப்பு மாணவர்கள் மிகவும் அமைதியானவர்கள். அப்போது எங்களுக்கு சமய பாடம் கற்பித்த ஆசிரியர் ஒரு பட்டதாரி. வேஷ்டி, சட்டை அணிபவர், கொட்டைப்பாக்களவு குடுமி வைத்தவர், எளிமையானவர், எல்லோருடனும் இனிமையாகப் பழகுபவர், உரும்பிராயை வசிப்பிடமாகக் கொண்டவர். இதே வகுப்பில் எனது சக மாணவன், நல்ல நண்பன் வேறொரு பாடசாலை அதிபரின் மகன், கால் சிறிது ஊனமானவர், எந்த நேரமும் சிரித்த முகத்துடனே இருப்பார்.

அன்றொரு நாள் காலை நேரம் எமது சமயபாட ஆசிரியர் வகுப்பிற்கு வந்திருந்தார். அப்போது எனது நண்பன் சிரித்துக் கொண்டிருந்தார். நாங்கள் சமய பாடப்புத்தகத்தை எடுத்துப் படிப்பதற்கு ஆயத்தமானோம். ஆசிரியர் நண்பனைப் பார்த்து சிரிக்காதே என்று கூறினார். நண்பன் கீழே பார்த்துச் "சிரிக்காதே!" என்று கூறினார். நண்பன் கீழே பார்த்துச் சிரித்துக் கொண்டேயிருந்தார். இதைக்கண்ட ஆசிரியர் கோபமடைந்து "சிரித்தால் எரிப்பேன்" என்று கோபமாகக்கத்தினார். எங்கள் எல்லோருக்கும் சிவபெருமானின் நெற்றிக் கண்தான் ஞாபகத்திற்கு வந்தது. வகுப்பில் உள்ள எல்லோரும் சிரித்து விட்டார்கள். ஆசிரியர் சினம் கொண்டு தாண்டவக் கூத்தாடினார். நண்பனை ஆசனத்திலிருந்து இழுத்தெடுத்தார். மேசை புரண்டது, கரும்பலகைத் தாங்கியும் பெரியசத்தத்துடன் கீழே விழுந்தது. கால் ஊனமான எனது நண்பன் தன்னை சமநிலைப்படுத்துவதற்காக ஆசிரியரைக் கட்டிப்பிடிக்க இருவரும் சமநிலைகுலைந்து நிலத்தில் விழுந்தனர். மாணவர்கள் எல்லோரும் திகைத்துக் கல்லானார்கள். நாடிநரம்புகள் செயலிழந்து இரத்தம் உறைந்த உணர்வு. பெரிய சத்தத்தைக் கேட்ட பக்கத்து வகுப்பு ஆசிரியர் உடனே இருவரையும் பிரித்துத் தூக்கி விட்டார். இச் சம்பவத்தை இப்போது நினைத்தாலும் "சில நேரத்தில் சில மனிதர்கள்" என்ற வசனம்தான் ஞாபகத்திற்கு வரும்.

# Message From Dr.Brenda BECK about Pandit.Navartnam Master

Dr. Brenda Beck
Canada

My 1974 stay in Urumpirai was very memorable. The Navaratnam family was warm and welcoming. They provided me with a comfortable private room near the front of the house where I stayed for approxi mately two weeks after the Jaffna International Tamil Conference in which I was a parti cipant.

I remember the good food and especially my discovery of a variety of Sri Lankan Tamil culinary styles, with which I was not yet familiar. I also enjoyed many family activities, including the husking of raw rice! For the most part I focused on trying to learn a little Sri Lankan Tamil, a big challenge for me, as I was mainly familiar with a dialect common only to the rural areas of Kongunad, a region of Northwestern Tamilnadu.

I also had many good discussions in Urumpirai that helped me explore local Jaffna-based cultural traditions. In particular, I remember learning many new details about the ritual customs of the Linggayat community.


I was allowed to photograph a number of family-based ceremonial activities. These images became very useful to me later. I used them to illustrate various topics during my Canadian university teaching career.

Both the Navaratnam family and their neighbours have now relocated to the Toronto area where they made contact with me once more .... Many years after my visit to Urumpirai. I thank the entire family for the fine experience they gave me as a guest in their home!




# Early Memories of London Old Student Association


2001




2003




2004




## Science Union



1963



1966



1978



1986

# It Is Urumpirai Hindu College

Mr.Chelliah Nagaratnam
Retired Bank Manager
Old Student
J/ Urumpirai Hindu College



I could still remember my 1st day at Urumpirai Hindu College. On the 2nd of January 1960 I walked in to Urumpirai Hindu College together with my father to gain admission. I was admitted to prep "A" division. Mrs. T.Ratnasingam was our class teacher. Those days except Tamil language and Hinduism all other subjects were taught in English medium for science stream. It was a difficult but challenging task for me, but it had not retarded my progress on studies. I got through my G.C.E (O/L) in 1963 with colours. This entailed very late nights and early mornings, but brought success. During my school career, most of the teachers had a special care and affection towards me as they were impressed by my accademic feats and excellence in other activities. I had the Golden opportunities to study Tamil language from Saivapulavar Pandit R.Navarat nam and English from Ms.Sabana yagam, Mahalingam and V.Elaya thamby. Mr,Sabanayagam was a versatile character of teaching any subjects, mainly English. I personally had real experiences of his talent and brilliance in teaching English. He was an authority in Shakespeare's Dramas. He, himself transformed in to that character. I could still remember, how he had came out with Mark Antony's speech in Julius Caesar. Brutus was the best friend of Julius Caesar, even though, he also Stabed Caesar, he could not bear it, raised his head and asked Brutus. "You too Brutus. At this instant the facial expression of Mr.Sabanayagam could not be expressed in words. So cute.

Mr.Mahalingam was studying for LLB, History and English were his subjects. He had the mayor share in moulding me to write few words in English. Certain phrases used by him are very famous. One is; Have-nots always like to have what the have's have and the other one is. You can feed some people free all the times; You can feed all the

people free for some time, but you cannot feed all the peoples free all the time. It was uttered at a time when the rice and the rice subsidy were a vexed issue.

I also would like to recall the memories of Mr M.Vaithiyanathan (vice Principal) and Mr V.Suntha ralingam. Mr.Vaithiyanathan very good in industrial Chemistry, was my Chemistry teacher in the preliminaries. Mr V. Suntharalingam was my Botany and Zoology teacher in the advanced level. He was young and energetic, slim and smart. His Botanical and Zoological colour chalk drawings were very beautiful. On many occasions we were very reluctant to erase his drawings from the blackboard, especially the drawings of Embryology. He moved very friendly with advanced level students.

I was elected as a member of the board of prefects in 1964 by the disciplinary committee and ended up as senior prefect in 1967. 1967 was the year of success for me. I was the house caption of Nagula house, and won almost all the trophies.

Some of us had not reached the target. It was not the fault of our school or of our teachers. It was entirely our fault. My school had given me the best and the time hascome for me to do the best to my school.

In addition to the accademic, athletic and soccer boosts, Urumpirai Hindu College was also very famous for its Romeos and Juliets most cases reached matrimonial status too.

It is Urumpirai Hindu College, has given me the knowledge and the talent to win my bread and butter.
It is U.H.C

## Principal of Principles



(Cambridge London)

Our college has a 100 years old history and a long and glorious educational heritage. It has been a fountain of wisdom and know ledge from its inception, many well distinguished and dedicated principals and teachers adorned this institution and guided this its destiny. The writer is very unfortunate as he couldn't be a student of eminent principals like Mr.Sitaram and Mr.Srinivasan, However has the authority of writing few words about Mr.A.Vaithilingam, the principal of his time.

It is our duty to remember with gratitude the layers of the foundation of this esteemed institution. It is the uttering efforts of these was instrumental in maudling the students entering this institution in to men of good qualities. The college has produced hundreds of outstanding persons who have risen high in many professions.

On a bright sunny day in January 1960 I stepped in to Urumpirai Hindu College with my father; a magnificent imposing figure with radiantly enticing features inspired me, causing a feeling of respect combined with fear in my mind. I was told that he was Mr.A.Vaithilingam a brilliant maths graduate, carved in Cambridge University London,the principal of Urumpirai Hindu College.

Mr.A.Vaithilingam was a great administrator, disciplinarian and above all a real socialist, appointed as our principal in 1958. It is our poorva punniyam. He at that time was at the height of popularity as a genius in mathematics. In his tenure our college advanced in all respects.

He was calm, quite, simple and soft spoken gentleman, always adhered to principles. The London returned Vaithilin gam's attire was always a verti and national.

He was a strong communist and never deviated from it until his death. He had never mixed up the political ideas with academical affairs. His contribution to the educational uplift as a principal to our college can not be expressed in words. He was neither an old student nor a native of Urumpirai, but went all alone to Malaysia to collect funds to put up a double story building in connection with the Golden jublee, with the assistance of Malayan Urumpirayar sangam. Though he was not a sportsman he had an insatiable thirst and fancy for sports.

He was a person stood by his convictions and where an important principle at stake he would not be swaged by opposition or criticism. To face the challenges of some dirty politicians he had retired prematurely at the age of 55 and got in to the political arena on full time.

I had the opportunity of attending the farewell dinner held at park view hotel, Colombo-7 organised by the OSA Colombo branch to our retired principal Mr Vaithilingam. Mr.A.Thatpa ranathan was the secretary of the association, had done a good job. Mr C.Thiyagalingam QC on his speech appreciating the services of Mr Vaithilingam said: Mr Vaithiya lingam was a principal of principles.

# Those Pleasant Memories

Mr.Nadarajah Thilothmanarajah
Colombo
Old Student
J/Urumpirai Hindu College



When in September 2010 I walked into the premises of the College after a lapse of forty plus (40+) years, I could not hide my joy and the feelings of nostalgia in me. I stood there little later with the permission of the teachers I noticed some of the old building missing and the assembly hall being newly built. I was told that the entire cost is being financed by Tharmaku lasingham, the tall guy of our time. May God bless him for his noble act.

I was ten years old when I joined the College in 1960 in the sixth standard. I left the College in 1967 soon after the end of the Soccer season. I played in the 2nd and 1st XI of the soccer teams having also excelled in athletics. I was in the Bhima House and the House captain was Ehambaram annai whose father Mr Shanmugam was in the College's staff. Ehambaram annai's younger brother Srikanthan was my classmate and was the mile race champion like his elder brother in the preceding years. My forte was 100 metres and 200 metres. Thanks to Ehambaram annai who would run after me in the 200 metre race with a stick in his hand commanding me to run even faster. Having come to Colombo in 1969 I visited the College in 1970 again in order to obtain the college leaving certificate etc as I was going to face an interview. Since then I never visited the College until 2010 September.

**Mr. A.Vaidialingam (Principal)**

During the early sixties, the then Principal "vertied" Mr A Vaidia lingam went over to Malaysia to meet with the Old Boys of the College to collect funds to build the Jubilee building on the North end of the College. I was told that he visited the College before he left for Malaysia and was in long trouser. It was the talk of the College that day. As usual even those who had not seen him in long trouser boasted that they saw him and that he looked funny. He was a highly qualified scholar having MA and MSc degrees adorning his name at its end. He was the Advanced Mathematics teacher for the GCE Advanced Level classes. When teaching Trigonometry, by practice, he had the knack to draw a perfect circle on the blackboard without much effort in one go. He was a soft spoken gentleman and a avowed Communist. I have never seen him attending the assembly on Fridays except for making some important announcements.

He was involved to some extent with the lawyers Mr V W Kularatne and Mr Coomaraswamy who drafted the manifesto of the SLFP which contested the parliamentary elections in coalition with the Communist party among others. When I was interviewed by Mr Kularatne who was the lawyer of a firm I was about to join, Mr Kularatne seemed pleased that I studied under Mr Vaidialingam.

It was again the tireless effort of him that the second building facing the Palaly Road was built. He was one of the greatest Principals and benefactors the College ever had. A few years before I joined the College, it also had a cricket team and the coach was the then principal Mr SrinivasanIyer who while coaching kept the wickets despite the fact that he underwent surgery and treatment for cancer on his face due to a bad hit on his face. He was also a scholar in the English Language and had authored several books in English grammar. The last

captain of the cricket team was my uncle Mr. Navaratnarajah who was called Boscos as he had his early education at St John Boscos College.

I have four sisters three of whom also studied in the same College. My eldest sister studied at the Uduvil Girls' College.

**Mr.S.T.Gunaratnam**

**(later Navaratnam)**

There was a teacher by the name Mr Gunaratnam who officially changed his name later to Navaratnam. He was a Christian-turned Hindu. He was the official priest at all assemblies and really resembled a true Bhramin priest. But he didn't have much hair on his head but always did a hair-do which resembled a thin loop on the back of his head. He was such a vicious character found wanting in restraining his temper. He was capable of unleashing blows on the students using his hands and legs. Sometimes it was brutal and merciless. It was immaterial whether the students faltered him or they were only referred to him by other teaches. He only heard the charges. Neither his former name nor the latter did have any bearing in his volatile reactions. But one day he met his Waterloo. A lady teacher had referred a student to him. This student was a well built and more than average size for his age and the class. The male teachers' room was just behind the Assembly Hall. Mr Gunaratnam was standing at the entrance to this staff room and he heard the charges from the student's mouth itself and released a barrage of beatings. This student having recovered from the first session of beating slapped Mr Gunaratnam. This stunned Mr Gunaratnam. I never found out what happened to this student but Mr Gunaratnam's culture comp letely changed. Until I left the College I never heard of this tea cher's volatile reactions.

**Mr.Arumugam**

There was another teacher by the name of Mr. Arumugam. He always used a cane but that again

somewhat severe. However he never faced a situation like Mr Gunaratnam turned Navaratnam.

**Mr.Mahalingam**

Mr Mahalingam a avowed Chinese Communist and one day he was assigned to fill-in for the absence of our regular religion teacher. In a short spell of forty-five minutes he exposed to the students the nature of demy-gods like Inthiran, Krishna, and Tharmar (son of Gundi the wife of Bandu of Mahabharatham). I may not write what he said about Inthiran except to say how he satiated his lust. He also told us about the chronic gambling of Tharmarajah who even gambled

away his wife shared by five brothers. He asked us how a gambler could, a lustful person could be called god and worshipped. He also narrated the things god Krishna did and said that under the current laws of the countries he could have been punished for harassment to young girls. He also explained that Gundi gave birth to three different children through different fathers and she got another wife of Bandu to do likewise. He said how she had secretly tested the power and had another child by god Sun and gave birth to Karnan. He made the students think. If you think that was not good the blame should rest on those who assigned him to a Religion class. To a great extent this 45-minute class changed my life.

It was at this time the College presented a stage drama named "Karnan". Sundaralingam master from Sandrodaya Vidyalayam directed it. It was a big hit and the team went from place to place staging this drama. If I am correct it was staged also in the Town hall in Jaffna. I should say that the College earned a name through this drama.

My favourite teacher was Ratnam Master who was in charge of sports. He was such a friendly soul, He would ask one of the

members of the Soccer team to go with him to town to repair the soccer boots. We didn't have auto trishaw like nowadays. Once he asked me if I could go with him. I tuned up at the College in the morning and we went to the town in the bus and carried the boots in the bus. On the Kasthuriyar Road there were some cobblers. When it was around ten o'clock he asked me if I would like to go for a movie until the boots were done. By the time I returned he was still seated in from of the cobbler seeing that the repairs were done properly.

Once he was an invigilator at an examination in the College. He noticed one of the students was trying to copy the answer of another fellow student. He went upto that student and asked if he could help in getting the other student's paper for him so that he could copy without difficulty. This student agreed and Ratnam Master went and told the other boy what the first boy wanted. He took the answer paper and gave it to the student who was attempting to copy.

I was seated close by and he turned and winked at me. Later on in the play ground he told me that he knew that both students were poor in their studies and he didn't mind both failing the examination writing the same foolish answers. I don't want to mention the name of the students for obvious reasons.

We were at practice for the Sports Meet. Mahalingam master who was on the fat side challenged Ratnam master for a hundred metre race. Ratnam master agreed and when they went to the starting point Mahalingam master inquired if he could be given a lead of twenty-five metres. Ratnam master agreed but when Mahalingam master turned and looked behind he lost all his confidence in his ability that he could ever win the race even with such a lead and suggested that he should be given a 50 metre lead.

From the 50 metre lead position he asked if the race could be reduced to 75 metre instead of 100 metre. To the laughter of all around the race was abandoned.

Yogeswaran master was called foxer. I think that was actually his father's nick name and he inherited it. Once I was standing with some of my friends in the village who were studying in the town school. As he was passing on his mobike some of them called out the name loud "foxer". There was no helmet those days. He heard that call and turned his bike and those around me took to their heels. I didn't because I didn't do any wrong, He came to me and inquired who there were and if they were from the same College. I said they were my friends but they studied in the town school. He asked me if I too joined them in calling out the name foxer and I told him if I had done that I also would have run with them. Without saying anything he turned and proceeded on his journey. He was a football fan. He became so engrossed in the game and would sometime kick someone closer to him watching the game whenever there was an opportunity of shooting a goal.


The College soccer team had a great fan by the name of Sundaram who lived on the eastern side of the play ground. He was a very dark-skinned person. He would be there when we practised. After the practice was over he would come and chat with us and would give productive criticism of the players. He was loved by all the players because he was so genuine in his remarks.

He wassuch an entertainment and noisy in that at all our matches. He would go for all the matches the College team played travelling on his own cost and expenses. He never failed to scream and shout whenever the team scored a goal, Once it was a match in home ground and our team was wining and when we scored a last-minute goal that


sealed our victory Sunderam went berserk and ran across the play ground in his birthday suit to the screaming and embarrassment of the girls who also came to witness the match, This was a time streaking was not heard of even in the western world. But Sunderam did that in the mid sixties. No photograph appeared in any newspaper but the story went around the village very fast. Sunderam was not looked down and instead he became an instant hero to us.

When I was in my Prep, G C E Class during a free time I was drawing something on my drawing book. A bully continued to disturb me spoiling what I was doing. I could not do anything except begging him several times not to do so, But he was not in the mood of giving up his bullying. I think at one point I lost my cool and with the lead pencil I jabbed his forehead. The point of the pencil was broken. To my utter horror the point was on the forehead of this bully buried. I ran to the teacher next room and more through fear I confessed. She came and inspected the bully's forehead and sent both of us to Principal's room. Nobody ventured to take the point out of that bully's face (forehead). On that day the Principal was absent and we were sent to the Vice Principal Mr Vaidiyanathan who was in the Chemistry lab at the time. I was shaking within myself not knowing what the outcome would be. He inquired from me what happened and I told him that I lost control after begging him several times not to disturb me. Mr Vaidiyanathan asked the bully if I was telling the truth and he admitted. I was asked to go to my class room and the bully was asked to go home and get the point out and attend to his wound.

# Early Memories of Canada Old Student Association (2001-2009)


2001-2002


2002-2003


2003-2004


2004-2005


2005-2006


2006-2007


2007


2008


2009


Pongal Day 2009

# Urumpirai Hindu College
# 100th Centernary Sweet Memory

Mr.V.Periathamby
Vice President UHCOSA UK
Old Student
J/ Urumpirai Hindu College



It is a pleasure to give you small account during my student period in 1950's for the school centenary celebration.

Well done. CONGRTULATION to URUMPIRAI HINDU COLLEGE. UHC has raised the flag for a century with the talented teachers who have educated our children to a better and respected citizen, and not only that, but also produced very good sports men & women. Especially in football, this student has shown extra ordinary performance and has earned a good reputation. Jaffna schools and college students and also, the general public football fans has witnessed several matches with UHC and appreciated the skills and standards of the football game.

A word or two to be mentioned Mr.SRINEVASAN who was the Principal for UHC during 50's, was one of the brilliant English Teacher and also encourage students in sports activities. Along with the physical instructor Mr.SHANMUGARASA, he took a keen interest in coaching football. Mr.SRINEVASAN was a well known football referee in Jaffna sports association. Many happy and inspiring events has taken place, such as Prize giving day, Sports day, entertaining events like drama, music etc. Major Hindu religious festivals were celebrated where the students played a great part. On occasions like these, the Principal Mr.SRINEVASAN always talks about Hindu religious stories.

We appreciates the present teachers, students and others of UHC making all the efforts, in spite of extremely difficult environment situation for organising the 100th centenary celebration, and we wish every success and good luck in future.



Standing L.R: Sivananthan, Periyathamby, Maheswaran, Logeswaran, Poornachandran.
Setting L.R - Not known, Mahadeva, Krishnamoorty (Head of Chemistry Dept), Shanmugarajah (Physical instructor), Not know (Librarian)

# Late Dr.M. Sriranganathan MBBS (CEY) 1958, M RCOG (Gt Britain) 1981 FCOG (SriLanka) 1985

Late Dr.Murugesu Sriranganathan born in Urumpirai on 31st December 1931, and studied at our college, where Mr.Sitaraman was the principal, until 1942. Then he moved on to Colombo with his parents and studied at Colombo Royal College. Young Sriranganathan was an excellent debator and was an active member of the Royal College senior Tamil society.



Dr.Murugesu Sriranganathan MBBS (CEY), M RCOG (Gt Britain) FCOG (SriLanka)

He gained admission to the Colombo medical college and graduated as medical doctor in 1958. One of his early appointment was as register to professor Sinnathamby in the obstetrics and Gynaecology dept at the faculty of medicine in the kandy campus of the university of Ceylon. In 1966 he went to the United Kingdom for his post graduate studies. Having completed his exams, he was conferred with the membership of the Royal College of obstetricians and Gynaecologists ; and a few years later was elected as a fellow of the college.

He returned to Srilanka and worked as consultant obstetricians and Gynaecologist in Ratnapura, Kurunagala, Ragama and Colombo. In 1964 he returned to the UK and worked as Locum Consultant in OBS and GYN in UK and Ireland. Dr.Sriranganathan had a great affinity towards Carnatic music and attended music festivals in Chennai on several occations He had some health problem since 1995 and after a short stay in hospital he passed away on the 8th of April 2008.

Although the eminent doctor had to spent most of his lifetime outside the peninsula and the Island. He couldn't just forgot the gentle breeze from the young palmyrah trees of Jaffna, embrased his bare body in his young ages, and the school where he had his primary education. He had made same arrangements with Bank of Ceylon prince street Branch, to remit the annual interest to our OSA account since 1999, and also prescribed us, how to dispense the funds. As there were no capable Bio Students in the G.C.E (advanced level) it was suggested to utilize the funds towards the academic needs of the under preveledged students. He had accepted it with pleasure and it is going on.

After his demise, very recently his wife and children contacted me, and inquired, keenly about the school and its current activities. They came forward voluntarily to increase the deposit upto 300,000/= for us to get more funds. The proceeds of this deposit will be utilized for the upliftment of the academic standard of the poor students, whose parents are living below the poverty line. It is decided to concentrate more on the children of war victims.

The beneficiaries of this mission had not seen the donor, but had heard about him. It is like this, we have not seen the God but benefited by his grace.


Mr.Namasivayam DevaRajan F.S.I

The family members of the late Mr.Namasivayam DevaRajan. F.S.I had deposited a sum of Rs.200, 000/= and directed the interest of which to be credited to our OSA account at at Jaffna Super grade Branch of BOC annually. They requested us to donate same among the best maths and English students in the G.C.E (O/L) as per results obtained by them in memory of their late father Mr.Namasivayam DevaRajan, an old boy of our precious college. We suggested them to divert some fund towards the enhancement of the standard of Maths & English in the year six level, by way of special classes. It was agreed to.

Late Mr. Namasivayam DevaRajan F.S.I of Neervely. Born on the 19th of April 1926, had his primary schooling in Malaya and then at Attiyar Hindu College. After passing the J.S.C Examination there, he had joined Urumpirai Hindu College in January 1940 with the main idea of mastering the Queen's language under the expertise of Mr.Sitaram & Mr.Srinivasan. He had achieved his target by obtaining credit pass in English in the S.S.C examination held in December-1943 and joined the survey dept. As a govt surveyor and retired in 1967 as an Asst supt of surveys. Late Mr.DevaRajan was a free lance writer in addition to the social and welfare works, his thundering articles, with relevant facts and figures, exposing the volatile situations prevailed at that time were appeared in the Times and Saturday review medias. Which were highly appreciated for the lance he had used wherever necessary? Late Mr.Namasivayam DevaRajan was the elder brother of Mr. Namasivayam Pancha dcharam a wellknown English teacher in the Island passed away in Australia an the 11th of September 1991.

Mr.Chelliah Nagaratnam
Retired Bank Manager
Old Student
J/ Urumpirai Hindu College

# Appreciation of late Mr.C.Subramaniam Teacher and some known facts about our school

Mr.P.Thuraisamy
(Rtd Divitional Superintendent of Post offices)
Colombo in UK
Old Student
J/Urumpirai Hindu College



It gives me great pleasure to write about our subra maniam teacher who was teaching Geog raphy in our JSC SSC. He was a very good Geography master and thereby 70% of the SSC students got credit passes in Geography, including myself.

Our classmates were Dr. Yoges waran, Dr. Indirajah, Dr. Somaka nthimalar, Accountant Satkura runathan, Saravnapavan, S.M. Sivapragasam, Ahil, Prasakthy, Kulasingam, Navaratnum and others.

Mr. Subramaniyam was a very strict disciplinarian. Some students who helped the parents on their farms would attend school late with some mud on their feet and long nails. They were caned and punished because of this and advised to arrive clean and tidy in the future. Certain students cursed him at the time due to this. When I went to Uduvil in 1990, I thanked and praised Mr. Subramaniam for his strict discipline, which, I believe, enabled his students to become accountants, doctors, staff officers, graduate teachers etc.

Our principal was Mr. Sitaraman, father of Mr. Srinivasan, who also was a strict person. He allowed Mr. Subramaniam to look after the college displine due to his ablity and good personality. I was a good football player and Mr. Subramaniam attended matches and praised my powerful kicks from Full Back to the other Full Back line. Mr. Srinivasan, sports master, praised my talented forcible kicks in the

prayer hall, which helped the left extreme to shoot goals easily. Thereby our school became the champions in the year 1945/46.

When the village school was started in 1911 on the veranda at Sundaraligam's mother's house. There were only five students; Mr. Visuvalingam and four others. Our school land (nearby 6 lachams) was donated by Mr. Iyampllai Velupallai (ponthar) the grandfather of Dr Maheswaran and the late kiriasakthy Somasundram (teacher at Urumpirai Hindu College). Mr. Iyadurai teacher took a lot of interest and went to college funds to put up the two-storey building. Dr. Vallipuram's son, Mr. Selvanayagam, who came from Malaysia in the 1950s, opened this building.

Mr. Iyadurai who admired my football sports presented me as chief guest seconded by Mr. Eswaranathan (the then vice principal for Teacher's Day in October 1993). The following teachers were in our school in the 1940s; Mr. M. Nagalingam, Thiag arajah, Sinnathamby, Kanaganayagam, Ambikaivakar and others.

I studied Arivari (Nursery) in our Tamil School, which was in the Hindu College compound in the year 1932. Our teacher was Thangamani of Urelu. She taught me alphabet. Showed kindness to teach her foundatations and me have helped me to rise up to a good standard, which helped to give me good status.

Mr. Subramaniam started his teaching career with school certificate. Later he graduated with BA from Calcutta University and became the college principal.

# Memories

Mr.A.TambithuraiB Com, FCCA, ACMA, ACIS
THURAI & CO, ACCOUNTANTS (UK)
Old Student
J/ Urumpirai Hindu College



Mr & Mrs Tham bithurai My memory of Urumpirai Hindu College goes back to the days when both the Tamil school and the College were functioning from the same premises. Children of my age group were already familiar with the college long before starting to study there. The college is not just an educational institution. It is much more than that. There is some kind of interdependent partnership in which the students are the bridge bringing together the college and the community. The culture and character of the college are influenced by the village and vice versa. In the days I remember dramas and cultural events put up by the college were abundant. It was lucky to have been gifted with home grown teachers who were innovative and devoted to their profession. I recall with reverence personalities like Ponnambalam master and Thamotharampillai master who wrote and staged dramas and cultural events that brought the college to the very heart of the people.

It was in 1948 that I myself joined the college. Along with me were others like Vamadevan and Nithyananthan who were my batch mates from the Tamil school. It is sad about Vama devan who, I heard, died some years ago. We were of same age and grew up together from kindergarten. He was a champion athlete and used to call me English champion with affection, referring to a prize that I won for my performance in English. I had to leave Urumpirai Hindu for a while and joined back again in 1954. It so happened that this particular year is one to be remembered in the history of the college. There was the application test in June of that year to select the students who were to be allowed to sit

Mr & Mrs Tham bithurai My memory of Urumpirai Hindu College goes back to the days when both the Tamil school and the College were functioning from the same premises. Children of my age group were already familiar with the college long before starting to study there. The college is not just an educational institution. It is much more than that. There is some kind of interdependent partnership in which the students are the bridge bringing together the college and the community. The culture and character of the college are influenced by the village and vice versa. In the days I remember dramas and cultural events put up by the college were abundant. It was lucky to have been gifted with home grown teachers who were innovative and devoted to their profession. I recall with reverence personalities like Ponnambalam master and Thamotharampillai master who wrote and staged dramas and cultural events that brought the college to the very heart of the people.

It was in 1948 that I myself joined the college. Along with me were others like Vamadevan and Nithyananthan who were my batch mates from the Tamil school. It is sad about Vama devan who, I heard, died some years ago. We were of same age and grew up together from kindergarten. He was a champion athlete and used to call me English champion with affection, referring to a prize that I won for my performance in English. I had to leave Urumpirai Hindu for a while and joined back again in 1954. It so happened that this particular year is one to be remembered in the history of the college. There was the application test in June of that year to select the students who were to be allowed to sit for S S C final. For those who are unfa miliar with the system then, S S C was the predecessor to present day G C E with the difference that a student had to pass at least in six subjects in the same sitting in order to qualify. Schools were keen to minimise their failure rates and so conducted this application test internally as a hurdle to eliminate those who, they thought, were not going to make it in the final. Obviously this policy didn't go well with all the students.

The application test finished smoothly; teachers had done their markings and passed on the results to the principal Mr Srinivasan who

promptly kept the papers under lock and key in his office. On the morning of the day when the students had to be told of their fate and application for the exam sent off, when the principal went to open his office he was aghast to find it already broke open and the cupboard where he kept the papers cleared of them. There were panic and pandemonium of a scale never seen before. Police were called in, teachers and students summoned and enquiries and investigations of all sorts followed but of no avail. Story went that a particular student who went for second show in one of the cinemas in the town with his friends decided to play Robin Hood that night on his way back past the college. Nobody got caught despite all efforts. It was total embarrassment to the authorities and fun and gossip to the students. It was a first, never happened or anticipated anywhere before The college had no choice but to allow all the 86 or so students to sit the exam and faced the poorest results in its history of just one pass.

Pranks on teachers were not in short supply either. My wife Rajamalar was well known in the college in her student days for her athletics. She was normally a very quiet student, but couple of her friends somehow managed to persuade her to play April fool one year. It was the term test time and they prepared between them a list of students in their form showing phoney marks for the various subjects and took it to the teacher in charge pretending it was from the class teacher. The list was taken seriously until found out much later and the teacher didn't like the joke a little bit and my poor wife was at the receiving end.

# மாணவ முதல்வர்கள்



1967




1968




1978



1978



1986




2004



2005



2006



2007


# பொறியியலாளர் (கட்டடக்குழு,UNDP )



யா/உரும்பிராய் இந்துக்கல்லூரியின் பழைய மாணவனான திரு.S.சசிக்குமார் என்பவர் UNDP நிறுவனத்தின் பொறியியலாளராகக் கடமையாற்றி வருகின்றார். இவர் உரும்பிராய் இந்துக்கல்லூரியின் கட்டடக்குழுவின் உறுப்பினராக இருந்து சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றார். அத்துடன் எமது கல்லூரியின் நூற்றாண்டு மண்டபக் கட்டடம் அமைப்பதற்குப் பொருத்தமான வழிகாட்டல்களையும், ஆலோசனைகளையும் வழங்கியுதவியமை பாராட்டுக்கும், போற்றுதற்குரியதுமாகும்.

# இறையன்பை நாடுவோம்

செல்வி.கு.சுரேந்தினி
தரம் 11A



*பூ நூல் தரித்த புத்திரர்களாய்
ஆனாலும்
பூ மாலை இறை கழுத்திலும்
சாத்தினாலும்
பா வளர்த்து பண்ணோசை
எழுப்பினாலும்
பாவப் பிணியறுக்க இறையன்பை
நாடவேண்டும்.*

*வருகின்ற துன்பங்கள் தலை
காட்டினாலும்
வசந்தங்கள் எம் வழியில்
தொடர்ந்தாலும்
குறி தவறி நம்பிக்கை இழந்தாலும்
குறையின்றி இறையன்பை நாட
வேண்டும்.*

*பக்தி சிந்தனையுடன்
விரதமிருந்தாலும்
பக்தியுடன் நேர்த்திக் கடன்களைச்
செய்தாலும்
அவை ஒவ்வொன்றும்
நிறைவேறினாலும்
அவற்றிற்காகவும் இறையன்பை
நாடவேண்டும்.*

# J/URUMPIRAI HINDU COLLEGE
# UNIVERSITY ENTRANCE (1969 - 1986)

| NAME | FACULTY |
|---|---|
| T. Manokaran | Faculty of Arts |
| R. Selvakumar | Faculty of Engineering |
| P. Ragavan | Faculty of Science (Physical Science) |
| T. Navarajasekaram | Faculty of Agriculture |
| I. Sivagnasiththiyar | Faculty of Agriculture |
| S. Vanithevi | Faculty of Veterinary Science |
| V. Thevathasan | Faculty of Engineering |
| S. Selvaratnam | Faculty of Engineering |
| P. Ravimannan | Faculty of Science (Physical Science) |
| S. Partheeban | Faculty of Science (Physical Science) |
| K. Vikneswaran | Faculty of Science (Physical Science) |
| A. Shanthini | Faculty of Agriculture |
| A. Ramani | Faculty of Arts |
| T. Thamayanthy | Faculty of Arts |
| M. Lalithamani | Faculty of Arts |
| S. Sivarajini | Faculty of Medicine |
| M. Yogarani | Faculty of Engineering |
| P. Nanthan | Faculty of Agriculture |
| K. Kamesan | Faculty of Agriculture |
| M. Kathirkamanathan | Faculty of Science (Bio Science) |
| S. Jeevaranjini | Faculty of Arts |
| N. Rubika | Faculty of Commerce |
| T. Kamalaverni | Faculty of Commerce |
| S. Sivansuthan | Faculty of Medicine |
| A. Kathirkamanathan | Faculty of Science (Physical Science) |

# UHCOSA UK Committee Members Since 1994 to 2011

### 1994 - 2000

President Mr.T.Jeevaratnam
Vice President Mr.M.T.Selvarajah
Secretary Mr. S.G.Segaram
Asst.Secretary Mr.K.Vivekananthan
Treasurer Mr.S.Sathiananthan
Asst.Treasurer Mr.K.T.Nathan

**Committee Members**

| | | |
|---|---|---|
| Mr.V.Arumugathas | Mrs.T.Jaijam | Mr.A.Pathmanathan |
| Mrs.G.Ranganathan | Mr.N.Ruthiran | Mrs.T.Satkunanathan |
| Mrs.M.Rasaneson | Mr.S.Sivalingam | Mr.S.Thevaraja |
| Mr.M.Yoganathan | | |

### 2000 - 2002

President Mr.K. Nithiananthan
Vice President Mr.S.Thevarajah
Secretary Mr.M.T.Selvarajah
Asst.Secretary Mr.A.Pathmanathan
Treasurer Mr.S.Sathiananthan
Asst.Treasurer Miss.Meera Gunaratnasingam

**Committee Members**

| | | |
|---|---|---|
| Mr.V.Aravinthan | Mr.S.Balasundaram | Mr.K.Gunnan |
| Mrs.I.Loganathan | Miss.Mathy Rasanesan | Mr.M.Nadesan |
| Mr.SaiShanathan | Mrs.J.Sathiananthan | Mr.T.Subramaniam |
| Mr.T.Thavatheva | Mrs.T.Jaijam | Mr.M.Ruthiran |
| Mrs.C.Ganeshalingam | Mr.T.Jeevaratnam | Mr.V.Mayooran |
| Mr.K.T.Nathan | Mrs.G.Ranganathan | Mr.S.Sivalingam |

### 2003 - 2004

President Mr.M.T.Selvarajah
Vice President Mr.V.Periathamby
Secretary Mr.S.Sathiananthan
Asst.Secretary Mr.K.Vivekananthan
Treasurer Mr.M.Nadesan
Asst.Treasurer Mr.K.Nithiananthan

**Committee Members**

Mr.V.Arumugathas Mrs.C.Ganeshalingam Mr.T.Jeevaratnam
Mr.V.Krishnakumar Mrs.I.Loganathanm Mr.K.T.Nathan
Mr.A.Pathmanathan Mr.C.Perananthan Mrs.J.Sathiananthan
Mr.S.Sivalingam Mr.A.Sriranganathan Mr.T.Thavatheva

**2004 - 2005**

President Mr.M.T.Selvarajah Vice President Mr.V.Periathamby
Secretary Mr.S.Sathiananthan Asst.Secretary Mr.S.Sivalingam
Treasurer Mr.V.Mayooran Asst.Treasurer Mr.M.Nadesan

**Committee Members**

Mr.S.Pathmanathan Mr.T.Thavatheva Mr.R.Sivakumar
Mr.C.Krishnadasan Mr.K.T.Nathan Mrs.L.Loganathan
Mr.A.Renganathan Mr.T.Subramaniam

**2006 - 2008**

President Mr.S.Sathiananthan Vice President Mr.V.Periathamby
Secretary Mr.S.Sivalingam Asst.Secretary Mr.R.Sivakumar
Treasurer Mr.V.Mayooran Asst.Treasurer Mr.A.Renganathan

**Committee Members**

Mr.C.Jayanathan Mr.K.T.Nathan
Mr.A.Pathmanathan Mrs.G.Ranganathan
Mr.N.Ruthiran Mr.M.T.Selvarajah
Mr.T.Thavatheva Mrs.Vanathy Suriyakumar


**2008 - 2011**


President Mr.S.Sathiananthan Vice President Mr.V.Periathamby
Secretary Mr.S.Sivalingam Asst.Secretary Mr.R.Sivakumar
Treasurer Mr.V.Mayooran Asst.Treasurer Mr.M.Nadesan

**Committee Members**

Mr.C.Jayanathan Mr.K.T.Nathan
Mr.A.Pathmanathan Mr.N.Ruthiran
Mr.M.T.Selvarajah Mr.T.Thavatheva
Mrs.Vanathy Suriyakumar Mr.N.Gowreesan
Mr.S.Thavendran Mr.K.Jeyaveerasingam
Mrs.S.Sivalingam


## யா/உரும்பிராய் இந்துக்கல்லூரியின் மைதானம்






கல்லூரிக்கு முக்கிய தேவையாக இருந்த விளையாட்டு மைதானம் 1944 ம் ஆண்டு உயர்திரு. ஏ.சீதாராமன். ஸ்ரீநினிவாசன் அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் விளையாட்டு மைதானம் கிடைக்கப்பெற்றது. 1958ம் ஆண்டு விளையாட்டு மைதானம் மீண்டும் புனரமைக்கப்பட்டது. நாட்டின் அரசியல் குழப்பம் காரணமாக மைதானத்தின் சுற்றுமதில்கள் சிதைவடைந்து காணப்பட்டது. அதிபர் அவர்களின் பெரு முயற்சியினால் உரும்பிராய் அரிமாக் கழகம் ஊடாக மீண்டும் விளையாட்டு மைதானம் புனரமைக்கப்பட்டது. இவ் விளையாட்டு மைதானத்தைப் புனரமைத்து. புதிய பார்வையாளர் அரங்கு. நவீன வசதிகள் கொண்ட விடுதி என்பன அமைப்பதற்கான முயற்சிகளை இலண்டன் பழைய மாணவர் சங்கம் மேற்கொள்ள வுள்ளது.


## மெய்வல்லுநர் போட்டி பதிவுகள் – 2011



பிரதம விருந்தினர் அழைத்து வரப்படும் போது...



பிரதம விருந்தினர் அழைத்து வரப்படும் போது...



பிரதம விருந்தினர் அழைத்து வரப்படும் போது...



கல்லூரி முதல்வர் மங்கள விளக்கேற்றும் போது...


# மெய்வல்லுநர் போட்டி பதிவுகள் – 2011




விளையாட்டுப் பொறுப்பாசிரியர்
மங்கள விளக்கேற்றும் போது...




கல்லூரி முதல்வர் கல்லூரிக்
கொடி ஏற்றும் போது...



விளையாட்டுத் தலைவரும், இல்லத்தலைவர்களும்
சத்தியப்பிரமாணம் செய்யும் போது...



மரதன் ஓட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு
பிரதமவிருந்தினர் பரிசு வழங்கும் போது...



மாணவர்கள் உடற்பயிற்சியின் போது...




மாணவர்கள் உடற்பயிற்சியின் போது...




முதலாம் இடம் பெற்ற தர்மா இல்லம்
வெற்றிக் கேடயத்துடன்...



வீமா இல்லம்



அர்ச்சுனா இல்லம்



தர்மா இல்லம்

# இலண்டன் வித்யா கவின் கலை மாலை அறிக்கை

இலண்டனில் உரும்பிராய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஆரம்பித்து 16 வருடங்கள் ஆகிவிட்டது. கல்லூரித்தாய் நூற்றாண்டு காணப் போகின்றாள். ஆனால் எமது சங்கத்தின் பெயர் சொல்ல அங்கே எதுவுமே இல்லையே என்று என் மனம் ஏங்கிய வண்ணமே இருந்தது.

நூற்றாண்டு விழாவின்போது புதிய பிரார்த்தனை மண்டபம் எழுந்திருக்க வேண்டும், விளையாட்டு மைதானத்தில் புதியதொரு பார்வையாளர் அரங்கு அமைந்திருக்க வேண்டும், நாம் எல்லோரும் அங்கு வந்து நூற்றாண்டு விழா நிகழ்வுகளிலே கலந்துகொள்ளவும் வேண்டும் என்று அங்கிருந்து அன்புக் கட்டளைகள், முக்கியமாக . நண்பர் திரு.செ.நாகரத்தினம் அவர்களிடமிருந்து பலமுறை வந்திருந்த போதும், காலமும், நேரமும் கை கொடுக்காத காரணத்தினால் அன்று எதனையும் ஆரம்பிக்கவே முடியவில்லை.

புதிய பிரார்த்தனை மண்டபத்தை நண்பர் திரு.க.தர்மகுலசிங்கம் பொறுப் பேற்றார். நாம் என்ன செய்யலாம் என்று எண்ணியபோதுதான் இலண்டன் பழைய மாணவர் சங்கத்தின் பெயரால் விளையாட்டு மைதானத்தில் புதியதொரு பார்வையாளர் அரங்கு அமைத்துக் கொடுக்கலாம் என நண்பர் திரு.செ.நாகரத் தினம் கூறினார். இலண்டன் பழைய மாணவர் சங்கம் நிதி திரட்டும் பொறுப் பினை என்னிடமே ஒப்படைத்தி ருந்தார்கள். அதன்படி 02.10.2010 அன்று ஒரு விழாவை நடத்தலாமெனக் கூறி னேன். ஆனால் அதற்குரிய ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. ஆனால் திரு.செ.நாகரத் தினமும், திரு.க.தர்மகுலசிங்கமும் தந்த அறிவுரைகளின்படி எப்படியும் இந்த விழாவினை நடாத்துவதென எண்ணி, அதற்கான ஆயத்தங்களை ஆரம்பித் தேன்.

திரு.க.தர்மகுலசிங்கமும், நானும், பெரும்பான்மையான சங்கஅங்கத்தி னர்களும், உரும்பிராய் மக்கள் அனை வரையும், உரும்பிராய் இந்துக்கல்லூரியில் கல்விகற்ற அயலூர் மக்களையும் அழைக்கவேண்டும் என்று இரவு பகலாகப் பாடுபட்டோம். அடுத்தடுத்துப் பலரது ஒத்துழைப்புக்களும், ஆலோசனைகளும் கிடைத்தமை மனநிறைவையும் தந்தது.

தாய்ப்பாடசாலையின் பரிசுநாள் மலராக வெளிவரும் "வித்தியா" என்ற பெயரையே தேர்ந்தெடுத்து "வித்தியா கவின் கலை மாலை" என்ற பெயரில் மண்டபம் நிறைந்த மக்களோடு மிகவும் வெற்றிகரமாக அதனை நடாத்தினோம். சிறந்த வழி நடத்தலில் கண்களையும்,

காதுகளையும் குளிர வைக்கும் தரமான நிகழ்ச்சிகளுடன், வாய்க்கு ருசியான உணவும் வழங்கினோம். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களான திரு.திருமதி.தம்பித்துரை தம்பதியினர் பிரதம விருந்தினர்களாகவும், திரு.திருமதி தர்மகுலசிங்கம் தம்பதியினர் சிறப்பு விருந்தினர்களாவும் கலந்து சிறப்பித்தனர். சுமார் 10,000 பவுண்ஸ் வரையில் அன்று மேடையில் சேகரித்தோம். "இதுவரை எமது பழைய மாணவர் சங்கம் நடாத்திய விழாக்களில் இதுவே சிறந்தது" என்று பலர் எம்மிடம் வந்து கூறினார்கள். மனம் மகிழ்வாக இருந்தது. இதனை நடாத்து வதற்கு முன்னர் எமது கல்லூரியிலிருந்து பெற்ற அனுபவங்களே அடிப்படைக் காரணிகளாக அமைந்தன என்பதும் சரித்திரமாகிவிட்டது. "அடுத்த விழா எப்போது வருகிறது?" என்று கேட்கவும் இப்போது ஆரம்பித்து விட்டார்கள்.

நான் இந்த "வித்தியா கவின் கலை மாலை" என்ற பெயரைத் தேர்ந் தெடுத்தபோதே இவ்விழாவை ஆண்டு தோறும் நடாத்தவேண்டும், மற்றைய பாடசாலைகட்கும் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும் என்ற எண்ணமும் மேலோங்கிநின்றது. அதற்கு எல்லோ ருடைய மனமுவந்த ஒத்துழைப்புக்களும் கிடைக்க வேண்டும். எம்மால் ஒரு காரியத்தைச் செய்ய முடியாது போனால் அதனைச் செய்யக்கூடியவர்களிடம் ஒப்ப டைக்க வேண்டும். நன்மை செய்யாது விட்டாலும் தீமை செய்யாத மனப் பக்குவத்தை நாம் அடையவேண்டும். இதன்படி என்னால் முடிந்தவரை முயல் வேன் என்பதனையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

விளையாட்டு மைதான புதிய பார்வையாளர் அரங்கு விரைவில் அமைய வேண்டும் என்பதே எனது அவா. அதற்கான ஆரம்ப வேலைகளும் விரைவில் ஆரம்பமாகும் என்றும் எண்ணு கிறேன். அன்றைய விழாவில் பல புதியவர்கள்தான் தமது பங்களிப்புக்களை பெருமளவில் செய்திருந்தார்கள். இனி வரும் காலங்களில் எல்லோரும் மனமு வந்து தமது பங்களிப்புக்களைச் செய்வார் கள் என்றும் எதிர்பார்க்கிறேன்.

எமது பாடசாலைப் பணிகள் பல இருக்கின்றன. எம் இளமைக் காலத்தில் இருந்த நிலைக்கு எமது பாடசாலைகளை மீண்டும் கொண்டுவர முடியுமானால் மகிழ்வுடன் முயல்வோம். இந்த நிகழ்வு ஓர் ஆரம்பமேதான். அதேவேளையில் இவ்விழாவிற்கென நாம் கேட்டவற்றை யெல்லாம் இன்முகத்துடன் செய்து கொடுத்த அத்தனை அன்புள்ளங்களின் இருகரங்களையும் இறுகப்பற்றி எனது நன்றியினையும் கூறிக்கொள்கிறேன்.

நீங்கள் வித்தியா கவின் கலை மாலை அறிக்கை ஒன்று என்னிடமிருந்து வேண்டுமெனக் கேட்ட பின்னர்தான் இதனை எழுத எண்ணினேன். என் மனதில் எழுந்த சிலவற்றை மட்டுமே எழுதியிருக்கிறேன். "பணிகள் செய்வதற்கு பதவிகள் தேவையில்லை" இதுவே எனது தாரக மந்திரம். முடிந்தவர்கள் முன்னே வாருங்கள் என்று கேட்டு, கல்லூரித் தாயின் நூற்றாண்டு விழா சிறப்புடன் நிகழ எல்லாம் வல்ல இறைவனையும் வேண்டு கிறேன்.

**எம்.ரி.செல்வராஜா**
**இலண்டன்**

# இலக்கண வரம்புகளும், தமிழ் இலக்கண இயல்புகளும்

பேராசிரியர் அ.சண்முகதாஸ்,
Ph. D. (Edinburgh), D.Litt.(Hon.UJ)
தகைசார் வாழ்நாட் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



இலக்கண வரம்புகள் என்றால் மொழியைச் சுற்றி முள்வேலி போடுவது என்ற ஓர் எண்ணமே பலரிடம் ஏற்படுகிறது. வயலுக்கு வரம்பு அமைக்காவிட்டால் நீரெல்லாம் வெளியே வழிந்தோடிவிடும். வரம்பு நீரினைத்தேக்கி வைத்து நெல்லின் வளர்ச்சிக்கு உதவுகின்றது. இதே போலத்தான் மொழி வரம்பும்,

**"பெயரில் தோன்றும் பாலறி கிழவியும்,**
**வினையில் தோன்றும் பாலறி கிழவியும்,**
**மயங்கல் கூடா தம்மர பினவே"**

( சொல், கிளவியாக்கம் சூத். 11 )

என்னும் தொல்காப்பியச் சூத்திரம் தமிழ் மொழியின் சொற்றொடர் ஒழுங்கு பற்றிக் கூறுகின்றது. தொல்காப்பியர் காலந்தொடக்கம் இன்று வரையும் இதே ஒழுங்கு முறையிலேயே நம்முடைய வாக்கிய ஒழுங்கு அமைகின்றது. ஆங்கில மொழியிலே "He Comes" என்றும், "They Come" என்றும் பேசுவதும் எழுது வதுமே சரியானதாகும். எவராவது "They Comes" என்றோ "He Come" என்றோ எழுதுவதும் பேசுவதும் இல்லை. இத்தகைய தொடர்பு இயைபினை ஆங்கில மொழியிலே சொற்றொடர் வரம்பாக அமைந்துள்ளது. எவரும் அதனை மீறுவதில்லை. அதே போன்ற இயைபுவரம்பு தமிழ்மொழியிலும் இருக்கின்றது. இதனையே தொல்காப்பியச் சூத்திரமும் ( கிளவியாக்கம்: 11) கூறுகின்றது. இன்று இந்த வரம்பினைக் கற்றவரும், மற்றவருமே மீறுவதைக் காண்கிறோம். "பல கூட்டங்கள் நடைபெற்றது" என்றும், "நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் நடைபெற்றன" என்றும் எழுதியும் பேசியும் வருகின்றனர். ஆங்கில மொழியினை எழுதும் பொழுதும், பேசும் பொழுதும் வரம்பு மீறாத கனவான்கள் தமிழ் மொழியிலே இலகுவாக மீறுகின்றார்கள். இதற்காகத்தான் இவ்விலக்கண வரம்பினை மீறக்கூடாது என்று இளவயதிலேயே பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டியுள்ளது.

பேச்சுவழக்கினை சிறுகதை, நாவல், நாடகம், கவிதை ஆகியவற்றிலே கையாண்டு இலக்கியங்கள் படைக்கத் தொடங்கிய போது, இவ்வாறு இலக்கியங்கள் படைப்போர் இலக்கண வரம்பினை மீறுவோரென உயர்இலக்கிய நூல் வல்லாராலே கூறப்பட்டது. நம்முடைய மொழி இருவழக்குப் பண்புடையது. பேச்சு

வழக்கினைச் சில சந்தர்ப்பங்களிலும், எழுத்து வழக்கினை வேறு சந்தர்ப்பங் களிலும் பயன்படுத்தி வருகின்றோம். இன்றைய இலக்கியங்களைப் படிக்க பேச்சு வழக்கு வேண்டியுள்ளது. இவ்வழக்கு பிள்ளைகளுக்குத் தனியாகக் கற்பிக்க வேண்டியதில்லை. அது அவர்கள் இயற்கையாகவே அறிகின்றமொழி. ஆனால் நம்முடைய மொழியிலே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட செம்மொழி இலக்கியங்கள் இருக்கின்றன. அவற்றை நம்முடைய பிள்ளைகள் படித்து இரசிப்பதற்கு இலக்கிய வழக்கினை அவர்கள் அறிய வேண்டிய அவசிய முண்டு. இதனால் பண்டைத்தமிழ் இலக்கணப் பயிற்சி பெறவேண்டிய தேவை ஏற்படுகின்றது. மேலும் இன்றும், அன்றி லிருந்து வரும் செந்தமிழ் அமைப்புள்ள மொழியிலேயே பேசுகிறோம். சொற்களின் வடிவம், ஒலிகள் சிற்சில இடங்களில் வேறுபடலாம். ஆனால் அமைப்பு ஒன்றா கவே உள்ளது. எனவே பண்டைய மொழி இயல்புகளைக் கூறும் நம்முடைய இலக்கண நூல்கள் கூறும் இலக்கண வரம்புகளை நாம் நமது நல்ல தேவைகளுக்காகப் பேண வேண்டியுள்ளது.

### தமிழில் இலக்கிய மொழி, பேச்சு மொழி வேறுபாடு:-

மொழிக்கல்வி என்பது நமக்கு தமிழ் இலக்கண, இலக்கியக் கல்வியாகவே அமையும். ஆனால் மேலைத்தேயத்தில் அது தனியே மொழி இலக்கணக் கல்வியாகவே அமையும். அவர்களுக்கு இலக்கிய மொழி, பேச்சுமொழி என்ற வேறுபாடு கிடையாது. இலக்கண அமைப்புக்கு எடுத்துக்காட்டுகள் தேடி இலக்கியங்களுக்குச் செல்ல வேண்டிய தேவையில்லை. ஆனால் தமிழ் மொழி யிலோ இலக்கிய மொழி, பேச்சு மொழி என இரு வேறுபட்ட வழக்குகள் உள. மொழி அமைப்புக்கு பேச்சு வழக்கிலே எடுத்துக் காட்டு கொடுக்கும் அதேவேளை இலக்கிய வழக்கில் இருந்தும் எடுத்துக்காட்டுத் தரவேண்டியுள்ளது. இவ்வாறான வேறு பாடுகள் இருப்பினும் சில மொழி அமைப்புக்கள் சொற்றொடர்கள் ஆகியன இலக்கிய வழக்கென்றாலும், பேச்சு வழக்கென்றாலும் இலக்கண வரம்பு பேணவேண்டியுள்ளது. எடுத்துக்காட்டாக, "குயில் கூவிற்று" என்றோ "குயில் கூவிச்சு" என்றோ கூறினாலும் இவை இலக்கண வரம்பினைப் பேணுகின்றன. ஆனால் "குயில் கரைகின்றது" என்றோ "குயில் கரையுது" என்றோ கூறினால் அவை இலக்கண வரம்பினை மீறுவனவாக அமைகின்றன. இலக்கணக் கல்வியில் இவ் விடயத்திலே நாம் கவனம் செலுத்த வேண்டும்.

### புணர்ச்சி விதிகள்:-

தமிழ் மொழியில் இலக்கணம் தொடர்பாகப் புணர்ச்சி விதிகள் ஒரு வகையில் இலக்கண வரம்புகளாக அமைகின்றன. எடுத்துக்காட்டாக, "சேதா" என்ற சொற்றொடர் "செம்மை + ஆ" எனப் பிரித்துக் காட்டி, மையீற்றுச் சொற்களின் மாற்றங்களுக்குக் கூறப்பட்ட விதிகளுக் கேற்ப புணர்த்திக் காட்டலாம். சிறிய பகுதிகளாக உள்ள மொழிக் கூறுகள் பல விதிகளின் பிரயோகத்தினால் முழுமை யடைகின்றன என மொழியியலூடாக அறிகிறோம். மையீற்றுச் சொற்புணர்ச் சிகளும் அவ்வாறே நடைபெறுகின்றன.

"சேதா" வைப் பார்க்கும் (நன்னூல் சூத்.136):

செம்மை + ஆ

செம் + ஆ விதி 1: ஈறு போதல்

செம் + ஆ விதி 2: இடையுகரம், ஆதல் இவ்விதி பிரயோகிக்கப்படவில்லை.

சேம் + ஆ விதி 3 ஆதி நீடல் செம் சேம்

சேம் + ஆ விதி 4 அடியகரம் ஐ ஆதல் இவ்விதி பிரயோகிக்கப்படவில்லை.

சேம் + ஆ விதி 5 தனனொற்றிரட்டல். இவ்விதி பிரயோகிக்கப்படவில்லை.

சேத் + த் விதி 6 முன்னின்ற மெய் திரிதல் மகரம் தகரமாக திரிகின்றது.

சேத் + த் விதி 7 இனமகல். இவ்விதி பிரயோகிக்கப்படவில்லை.

= சேதா

மொழியினுடைய இயல்புகளை அவதானித்து அவற்றினுடைய இயல்பான போக்குகளையே தமிழ் இலக்கண நூலார் விதிகளாகக் கூறியுள்ளனர். அவை விதிமுறைகள் அமைக்க வேண்டுமென அமைக்கப்பட்ட சூத்திரங்கள் அல்ல. எண்கணிதத்தில் விதிகள் அமைந்திருப்பன போலவும், "சொம்ஸ்கி" என்னும் மொழியியலாளர் உருவாக்கிய பிறப்பாக்க மாற்றமைப்பு இலக்கணத்தில் விதிகள் அமைவன போலவும் தான் தமிழ் இலக்கண விதிகளும் அமை கின்றன. எனவே தமிழ் இலக்கணத்தை மாணவர்களுக்குக் கற்பிக்கும் போது இலக்கண வரம்புகளின் இன்றியமையாமையை உணர்த்த வேண்டும். எண் கணிதத்தை விரும்பிப் படிக்கும் மாணவர்கள் தமிழ்மொழியின் இலக்கண விதிகளைப் பிரயோகிக்கும் பயிற்சியினைப் பெறும் போது அதனை விரும்பிப் படிப்பார்களென நம்பலாம்.

**தமிழெழுத்துக்களின் உச்சரிப்பு**

இலக்கண வரம்பினை இறுக்கமாகப் பேணவேண்டும் என்பதற்கு இன்னொரு விடயத்தினை நோக்கலாம். தொல்காப்பியர் அவரைப் பின்பற்றி நன்னூலார் தமிழ் எழுத்துக்களின் உச்சரிப்பினை மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். தமிழில் மூன்று பிரிவழி ஒலிகள் இருக்கின்றன. அவை: ல், ழ், ள் ஆகிய மூன்றுமாகும்.

**"நுனி நா அணரி அண்ணம் வருட**
**ரகார ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்."**
**(பிறப்பியல்:13)**

**"நா விளிம்பு வீங்கி அண்பல் முதல் உற**
**ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்**
**லகார ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும்."**
**(பிறப்பியல்:14)**

மேற்படி சூத்திரங்கள் முறையே ழ், ல், ள் ஆகியன பிறக்கும் முறையினைக் கூறுகின்றன. இவற்றில் பெரும்பாலான தமிழ் பேசும் இடங்களிலெல்லாம் ழ், ள், என்பன "ள்" என்றே ஒலிக்கின்றன. வாழ், வாள் என்பன "வாள்" என்றே உச்சரிக்கப் படுகின்றது. இதனால் இவற்றை எழுதும் போதும் ஒரே எழுத்தினால் எழுதிவிட்டு சந்தர்ப்பம் நோக்கிப் பொருள் கொள்ள லாமே எனச்சிலர் அபிப்பிராயப்படு கின்றனர். இதில் நாம் எவ்வித விட்டுக் கொடுப்பும் செய்ய வேண்டியதேயில்லை. மாணவர்களுக்கு அம்மூன்று எழுத்துக் களையும் பயிற்றுவதுடன் பண்டைக் காலந்தொட்டுக்கம் இம்மூன்று எழுத்துக்களால் அமைந்த சொற்களையும் பயிற்ற வேண்டும்.

**நிறைவுரை**

உலகத்திலே உள்ள சில மொழிகளைப் போலத் தமிழ் மொழியும் இருவழக்குப் பண்புடைய மொழியென்பதை நக்குனராத

மேலைத்தேயத்தவர் சிலர் தமிழ்மொழியைக் கற்பது சிரமமானதே எனக் குறிப்பிட்டுள்ளனர். நம்மவர்கள் சிலரும் தமிழ் இலக்கணக் கல்வி கடினமானது என்று கூறி வந்துள்ளனர். பழந்தமிழ் இலக்கியங்களை படிக்காமலும், பழந்தமிழ்மொழி இலக்கணப் பயிற்சி பெறாமலும் ஆக்க இலக்கியம் படைத்தவர்கள் தம்முடைய ஆக்கங்களைப் பழந்தமிழ் வல்லுநர் குறைகூறிய பொழுது பழந்தமிழ் இலக்கணப் பயிற்சி வேண்டியதில்லை என்னும் வாதத்தினை முன்வைக்கத் தொடங்கினர். இன்று அது கூர்மை பெற்றுள்ளது. தமிழைப் பிழையாக எழுதவும், பேசவும் முடியுமென்ற நிலைக்குக் கூடச்செல்கின்றன. தமிழ் இலக்கணம் பல வரம்புகளைக் காட்டியுள்ளது. இது தமிழ் வளர்ச்சிக்குத் தடையாயுள்ளது என்று கூட வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. எமது அருமையான பழந்தமிழ் இலக்கியங்கள் இரண்டாயிரம் ஆண்டுச் சுமை என்று கூடச் சொல்லப்பட்டன. ஆனால் தமிழ்மொழி இது போன்ற பல அச்சுறுத்தல்களைக் காலத்துக்குக் காலம் எதிர்கொண்டு வந்த மொழி, தமிழ் இலக்கண வரம்புகள் மீறவேண்டிய தேவையில்லை. புதிய வளர்ச்சியை நாம் தடைசெய்ய வேண்டியதும் இல்லை. 'பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல காலவகையினானே" என்ற இலக்கண ஆணையுமுண்டு.

# A Dream of School Supplies

Master. S.Alex
Grade 13 (2011) ARTS



I had a dream of school supplies,
Where paperclips could talk;
Where poster paper hung around
With marking pens and chalk.

The stationery idled
While the pencils madly raced.
The clocks went round in circles,
And the glue sticks merely paced.

The binders were inseparable
They bonded with the tape
The workbooks exercised
And helped the stencils stay in shape.

Some calculators added
To the numbers in this land,
And music was provided by
A singing rubber band.

My dream was strange and truly cool,
But this was even cooler:
The dictionaries all looked up to me.
I was the ruler.

# சுந்தரர் பாடிய சீபர்ப்பதம்

திரு.ச.லலீசன்,
M.A.(தமிழ்),M.Ed,S.L.T.E.S (Class III)
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.



பல்லவர் காலப் பக்திப் பாடல்களைப் பாடியோருள் சுந்தரருக்குத் தனிச் சிறப்புண்டு. இயற்கை அழகை இரசித்துப் பாடும் இவரது ஆற்றல் அற்புதமானது. திருக்காளாத்தி மலையைத் தொழுதபின் சுந்தரர் அங்கு தங்கியிருக்கும் நாட்களில் சீபர்ப்பதத்தலத்தைப் பணிந்து வணங்கியது போல மகிழ்ந்து பாடியதே "சீபர்ப்பதம்" என்ற பதிகமாகும். இதனை

**"வடமாதிரத்துப் பருப்பதமும்**
**திருக்கேதார மலையும் முதல்**
**இடமா அரனார் தாம் உவந்த**
**எல்லாம் இங்கே இருந்து இறைஞ்சி**
**நடம் ஆடிய சேவடியாரை**
**நண்ணினார் போல் உள்நிறைந்து**
**திடம் ஆம் கருத்தில் திருப்பதிகம்**
**பாடிக் காதல் சிறந்திருந்தார்"**

(பெ.பு.: 3357)

என்ற பெரியபுராணப் பாடல் எடுத்தியம்புகின்றது. திருநாவுக்கரசர் திருப்பருப்பதத்தை நேரில் சென்று வணங்கிய செய்தியைப் பெரியபுராணம் காட்டுகின்றது

**"மானவிஞ்சையர் வானநாடர்கள்**
**வான்இயக்கர்கள் சித்தர்கள்**
**கான கின்னரர் பன்னகாதிபர்,**
**காமசாரிகளே முதல்**
**ஞானமோனிகள் நாளும் நம்பரை,**
**வந்து இறைஞ்சி நலம்பெறும்**
**தானம் ஆன திருச்சிலம்பை**
**வணங்கி வண்தமிழ் சாற்றினார்"**

(பெ.பு.: 1619)

சீபர்ப்பதம் என்ற தலம் தமிழ் வழக்குப்படி திருப்பருப்பதம் என அழைக்கப்படுகின்றது. இதனை திருச் சிலம்பை எனவும் அழைத்தனர். இந்தியாவில் தற்போது "ஸ்ரீசைலம்" என இத்தலத்தை அழைக்கின்றனர். (திரு- ஸ்ரீ சைலம், பருப்பதம் என்பன மலையைக் குறிக்கும் சொற்களாகும்) இயற்கை அழகு நிரம்பப் பெற்ற இத்தலத்தின் இறைவனைத் தரிசிக்க வருபவர்களின் பட்டியலை மேற்காட்டிய பெரிய புராணப்பாடல் எமக்குக் காட்டுகின்றது.

### சீபர்ப்பதம் - இன்று

இந்தியாவில் ஆந்திர மாநிலத்தில் வடமேற்கில் உள்ள எழில் நிறைந்த தலம்தான் ஸ்ரீசைலம். சக்தி பீடங்களுள் "மாதவிபீடம்" என்றும் சிவலிங்கங்களுள் "ஜோதிர்லிங்கம்" அமைந்திருக்கும் தலமாகவும் இது விளங்குகின்றது. தமிழகத்தில் பன்னிரு தலங்களில் ஜோதிர்லிங்கம் இருப்பதாகக் கொள்ளப்படுகின்றது. இறைவன் திருநாமம் மல்லிகாஜுனசுவாமி. இறைவி பிரம ராம்பிகா.

அருணன் என்னும் அசுரன் ஐந்து கால்கள் வரையுள்ள பிராணிகளால் தனக்கு ஆபத்து நேர்ந்துவிடக்கூடாது என இறைவனிடம் வரம் வாங்கியிருந்தான். இவனது கொடுமைகள் கண்டு பொறுக்க முடியாத இறைவி பிரமரம் என்ற வண்டாக உருவெடுத்து (வண்டு - ஆறுகால்கள் உடையது) அருணனைக் கொன்றாள். இதனால் இறைவி பிரமராம்பிகா என்ற பெயரைப் பெற்றாள். அசுரனைக் கொன்ற உக்கிர கோலத்துடனேயே இறைவி இத் தலத்தில் காட்சி கொடுக்கிறாள்.

ஜோதிர்லிங்கமும், சக்திபீடமும் ஒன்றாகச் சங்கமித்த தலமாதலால் இந்தியா வின் பல பகுதிகளிலிருந்தும் அடியவர்கள் இத்தலத்தை நாடி வழி பாடாற்றுகின்றனர். சிவராத்திரி விரதம் இத்தலத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படுவதாகவும் இந்நாளில் ஈசனுக்கும் பிரமராம்பிகாவுக்கும் திருமணம் நடாத்தப்படுவதாகவும் அறிய முடிகின்றது. இத்திருமணத்திற்கு ஸ்ரீசைலம் மலைப் பகுதியில் வாழ்கின்ற ஆதிக்குடிகள் சீதனம் கொண்டு வருவார்களாம். இன்றும் இந் நடைமுறை தொடர்ந்த வண்ணம் உள்ளது.

**சீபர்ப்பதம் - அன்று**

பல்லவர் காலத்தில் (கி.பி. 7 ஆம் நூற்றாண்டில்) சீபர்ப்பதம் (ஸ்ரீசைலம்) தலத்தின் இயற்கை எழிலைச் சுந்தரர் தன் பதிகத்தின் ஊடாகப் பதிவு செய்கிறார். பத்துப் பாடல்களுள் ஒரு பாடலில் மட்டுமே அதாவது 8 ஆவது பாடலில் மட்டுமே இறைவனை நேரடியாக நினைக்கிறார்.

**"திரியும் புரம் நீறாக்கிய செல்வன்"**

என அவரது நினைப்பு மேலிடுகின்றது. பத்தாவது பாடலில் பாடற்பயன் சொல் கின்றார். ஏனைய எட்டுப் பாடல்களும் இம் மலையில் இருக்கும் இறைவனை வணங்கச் சென்றால் அருமையான இயற்கைக் காட்சிகளைக் காணலாம் என்ற ஆசையை யூட்டுவதாக அமைந்திருக்கின்றன. சுந்தரர் திருக்காளாத்தி மலைக்குச் சென்று அங்கிருந்தவாறே சீபர்ப்பதத்தலத்தைத் தனது ஞானக்கண்களால் தரிசித்துப் பதிகம் பாடினார். சுந்தரரது இலக்கிய ஆளுமை இப்பாடல்களுடாக வெளிக்காட்டப்படு கின்றது.

சீபர்ப்பதம் பதிகத்தின் ஊடாக வெளிப்படும் இயற்கைக் காட்சிகளும் மலையில் இடம்பெறும் செயற்பாடுகளும் மானும், மரையினமும், மயிலினமும் எங்கும் உலாவுகின்றன. தமக்குரிய உணவுகளைத் தேடியுண்டு பெரிய சுனைகளில் நீரைப் பருகி வாழ்கின்றன. மலையில் பூக்களை யுடைய பெரிய மரங்கள் நெருக்கமாகச் செறிந்து காணப்படுகின்றன. அம்மரங்களில் உராய்ந்து சென்று தேமாமரச் சோலையை அடைந்து அதன் நிழலில் அவை உறங்கு கின்றன. மலைச் சாரலுக்கு அப்பாலிருந்து வரும் யானைகளைச் சீபர்ப்பத மலை வாழ் வேடர்கள் பிடித்துத் தங்கள் மலைக்குக் கொண்டு வந்து கட்டி வைத்து வலிந்து உணவூட்டுகின்றனர். இவ்வேளையில்


**சீபர்ப்பதம் தல முகப்பு**

இக்காட்சியைக் கண்ட பெண்யானைகள் தமது ஆண்யானைகளும் இவ்வாறு பிடிக்கப்படுமோ எனக் கலங்கி அவற்றை அழைத்தவாறு ஓடுகின்றன. என்ன நடந்தது என்பதை அறியாத அம்மலையில் உள்ள ஆண் யானைகள் தம் பெண்யானைகள் பிடிபட்டுவிட்டனவோ எனக் கலங்கிப் பிளிறுகின்றன. திகைத்துத் தம் பிடியைத் தேடுகின்றன.

இளமைச் சொற்களையுடைய இளம் பெண்கள் அங்குள்ள தினைப் புலத்தைக் காவல் செய்கின்றனர். இளங்கிளிகள் வந்து தினைத்தாளைக் கோதிக் கதிர்களைக் கோலுகின்றன. அப்போது "என்னை மதிக்காது இக்கிளி வந்து தினைத்தாளைக் கோதி உண்கிறதே" எனக் கோபித்த குறமகள் சினந்து கவணை எடுத்துக் கல்லை வைத்து அடிக்கிறாள். அவ்வழகிய கிளி தன் எண்ணம் மாறிப் பறந்து செல்கின்றது.

தினைப்புனத்தைக் காக்கும் பெண்கள் "ஆய்... ஓ.." எனச் சத்தமிட்டவாறு செயற் படுகின்றனர். அதற்கும் கிளிகள் பறப்பதாக இல்லை. கவணெடுத்து வீசுகின்றனர். சிவந்த வாயையுடைய கிளிகள் ஒலியெழுப் பியவாறு அஞ்சியோடி ஒளிக்கின்றன. ஆண் யானைகள் கூட்டமாகத் தம் பெண் யானைகளைத் தேடுகின்றன. பெண் யானைகளும் தமது ஆண் யானைகளின் குரலோசையைக் கேட் பதற்காகச் செவியைத் தாழ்த்தி நிற்கின்றன. இக்காட்சியைக் கண்ட வேடர்கள் இரக்கம் கொண்டு இலையாற் கல்லை செய்து தேனை அப்பெண்யானை களுக்கு இனிது ஊட்டி விடுகின்றனர்.

மாற்றுக் களிறடைந்தாய் என மதம் வேழும் தன் துதிக்கை எடுத்துச் சினக்கி ன்றது. "நீர் இவ்வாறு பழி தூற்றினால் நான் உயிர் தரிக்கமாட்டேன்" எனப் பெண் யானை தற்கொலைக்குத் துணிகின்றது. தன் தவறின்மையைத் தெளியச் செய்து ஆண் யானையைத் திருப்திப்படுத்துகின்றது.

கிளிகள் மீண்டும் மீண்டும் தினைப் புனத்தை நோக்கி வருகின்றன. "அப்போதும் வந்துண்டீர்கள். நான் இரங்கி அதட்டா திருந்தேன். எப்போதும் உமக்கு இதுவே தொழிலாகி விட்டது. இவ்வாறு நீர் உண்டீரானால் எம்மை எம்முறவினர்கள் கோபிக்கமாட்டாரோ?" என்று குறமகள் கிளியை நோக்கி எறிகின்றாள். மலைச் சாரலில் பன்றிகள் நிலத்தைக் கிளறுகின்றன. நெருப்பை ஒத்த தோற்றமுடைய மாணிக்கக் கற்கள் அங்கு வெளிப்படுகின்றன. அத னைக் கண்டு நெருப்பெனப் பயந்த மான், மரை போன்ற விலங்குகள் அவ்விடத்தை விட்டு ஓடுகின்றன. பின்பு மலையிலுள்ள சோலைகளில் காணப்படும் தேனைக் குடித்துக்களிப்படைகின்றன. இத்தகைய இயற்கை வர்ணனைகளை எடுத்துக் கூறிய சுந்தரர் இப்பாடல்களைப்பாடுபவர்கள் "ஒல்லை செலஉயர்வானகம் ஆண்டங் கிருப்பாரே" என்றும் குறிப்பிடுகின்றார்.

சீபர்ப்பதம் பதிகம் பல்லவர் கால இலக்கியப் பண்புகளுடன் பொருந்தும் விதம் சுந்தரர் பாடிய "சீபர்ப்பதம்" என்ற பதிகம் தமிழ் இலக்கிய வரலாற்றில் பல்லவர் காலத்துக்குரியதாகும். இப்பதிகத்தில் பல்லவர் காலத்திற்குரிய பண்புகள் காணப் படுகின்றன. பல்லவர் கால இலக்கியங்கள் தல வர்ணனையை வெளிப்படுத்திப் பக்தி உணர்வை வளர்க்கும் இயல்புடையவை. இங்கும் பக்தி அனுபவங்களைக் வெளிப் படுத்துவதற்காக இறைவன் வீற்றிருக்கும் தலமாகிய சீபர்ப்பதத்தைப் பற்றிச் சுந்தரர் பாடுகின்றார். பல்லவர் கால இலக்கியங்கள் இயற்கையில் இறைவனைக் காண்பவை யாக உள்ளன. இதனால் இயற்கை வர்ணனைக்கு அவை முதன்மை வழங்கின. சீபர்ப்பதம் பதிகத்திலும் மலைவளம்

கூறுவதனூடாகச் சுந்தரர் இயற்கையில் இறைவனைக் காண்கிறார்.வனஜீவராசிகளதும், வனவாசிகளதும் வாழ்வியலைத் தமிழர் பண்பாட்டுச் சூழலினூடாக வெளிக் கொணரல், (உ+ம் : விருந்தோம்பல்) பல்லவர் காலத்தில் சமய நம்பிக்கைகளைக் கட்டி எழுப்பு வதற்காகப் புராணக்கதை களைத் தம் இலக்கியங்களில் வெளிப்ப டுத்தும் வண்ணம் பாடினர். சீபர்ப்பதம் பதிகத்திலும் சுந்தரர் புராணக்கதை ஒன்றைப் பயன்ப டுத்துகின்றார். (உ+ ம்: திரிபுரதகனம் பற்றிய எட்டாவது பாடல்)

தாம் கண்ட தலச்சிறப்புக்களையும் வாழ்வியலையும் வாசகர் கண்டு இன்புறு மாறுபாடுதல் ஒரு விடயத்தைப் பத்துப் பாடல்களில் கூறுகின்ற பதிக அமைப்பைச் "சீபர்ப்பதம்" கொண்டிருக்கின்றது. பல்லவர் காலப் பதிகங்கள் அதனைப் படிப்போர் அடையும் பயனையும் வெளிப்படுத்தும் இயல்புடையவை. சுந்தரர் சீபர்ப்பதம் பதிகத்தைப் படிப்போர் விரைவாக வானகம் சென்று அதனை ஆண்டிருப்பர் எனப் பயன் கூறுகின்றார். பல்லவர் காலத்தில் "முத்திரைக்கவி" பாடும் வழக்கம் காணப்படு கின்றது. சீபர்ப்பதம் பதிகத்திலும், இறுதிப் பாடல் முத்திரைக் கவியாக அமைந்துள்ளது. இதேவேளை சீபர்ப்பதம் பதிகத்தில் சங்க இலக்கியங்களின் தாக்கத்தையும் இனங் காட்டலாம். சீபர்ப்பதப் பதிகத்தில் காணப்படுகின்ற சங்க இலக்கியங்களின் தாக்கம் சங்க இலக்கியங்கள் இயற்கை வர்ணனைக்கு முதன்மை வழங்கின. சீபர்ப்பதம் பதிகமும் இயற்கை வர்ணனைக்கு முதன்மை வழங்கியுள்ளது. குறப்பெண்கள் தினைப்புனத்தைக் காத்த லென்பது சங்ககாலத்தின் வாழ்வியற் கூறுகளுள் ஒன்று. சீபர்ப்பதம் பதிகத்தில் இக்காட்சி காணப்படுகின்றது.

சங்க அகத்திணை ஒழுக்கக் கூறுகளுள் ஒன்று "ஊடல்"ஆகும். இந்த ஊடல் ஒழுக்கம் விலங்கினங்களில் ஏற்றிப்பாடப்படுகின்றது. குறிப்பாக, மானிடர்களுக்குரித்தான அன் பின் ஐந்திணை ஒழுக்கத்தை யானைகளில் ஏற்றிச் சுந்தரர் பாடியுள்ளார். சீபர்ப்பதப் பதிகத்தின் ஊடாகத் தற்கால வாழ்வியலுக்கு நாம் பெறக்கூடியவை சீபர்ப்பதப் பதிகத்தைச் சமயம் கடந்த நிலையில் அனைவரும் படித்து உணரவேண்டும். இதனூடாக இக்காலத்திற்கும் தேவையான வாழ்வியல் கருத்துக்கள் நிறைவாக உள்ளன. உயிர் களுக்குத் தேவையானவற்றை இறைவன் படைத்தளித்துள்ளான். சீபர்ப்பதத்தில் வாழும் உயிரினங்கள் யாரிலும் தங்கியி ருக்காது சுதந்திரமாக வாழ்கின்றன. நாமும் யாரிலும் தங்கியிருக்காது வாழவேண்டும் என்பதை இப்பதிகம் உணர்த்துகின்றது. அன்பான இல்லறத்தில் வாழ்வதற்கான அடிப்படையை இப்பதிகம் உணர்த்து கின்றது. அத்துடன் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கற்பு நெறியையும் போதிக்கின்றது. யானைகளே கற்பு நெறியைக் கடைப்பிடிக் கின்றன என்றால் மனிதர்கள் இந்நெறியைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வை இப்பதிகம் தருகின்றது.

பிறரது துன்பத்தைத் தீர்ப்பதற்குரிய உணர்வையும் இப்பதிகம் ஏற்படுத்து கின்றது. கொடுங்கொலைத் தொழில் புரிகின்ற இரக்கம் காட்டாத வேடர்கள் கூட இலையாற் கல்லை கோலி தேனைப் பிழிந்து யானைகளுக்கு ஊட்டிவிடுகின்றனர். இக்காட்சி பிறருக்கு உதவும் மனோபாவத்தை வளர்க்கின்றது. அத்துடன் பசித்தோருக்கு உணவளிக்க வேண்டும் என்ற உணர்வையும் ஏற்படுத்துகின்றது.

### நிறைவாக

இயற்கை வர்ணனைக்கு முதன்மை கொடுத்து வாழ்வியல் அம்சங்களை வெளிப்படுத்துவதனூடாகப் பக்தி உணர்வைச் சுந்தரர் வளர்த்தெடுக்கிறார். சீபர்ப்பதம் இதனை அழகிய முறையில் வெளிக்காட்டுகின்றது.

# நிதி நெருக்கடியும் உலகப் பொருளாதாரத்தில் அதன் விளைவும்

# Financial Crisis and its Impact on World Economy

பேராசிரியர் க.தேவராஜா
பீடாதிபதி,
முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.



**அறிமுகம்**

இன்று உலக நாடுகளைப் பெரிதும் அச்சுறுத்தும் விடயமாக நிதி நெருக்கடி காணப் படுகிறது. நாடுகளுக் கிடையில் இடம்பெறும் நாணயப்போர், நாணயங்களில் ஏற்பட்டு வரும் பெறுமான வீழ்ச்சி என்பன எந்தவொரு உலக நாட்டிற்கும் அச்சுறுத்தலாகவே உள்ளன. இன்றைய உலகில் ஒருநாட்டிற்கு ஏற்படும் தாக்கம் தொடராக மற்றைய நாடுகளையும் பாதிப்புக்குள்ளாக்குவதனால் சர்வதேச நிதிநெருக்கடியையும், அதனால் ஏற்படும் பாதிப்புக்களையும் கண்டறிவது உலகப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமா கின்றது.

அரசியல், சமூக, பொருளாதார, கலாசார, சமய நடவடிக்கைகளூடாக உலகநாடுகள் ஒன்றிணைந்து காணப்படுகின்றன. ஒவ் வொருநாடும் தம் உற்பத்திகளை விற்பதற் காகவோ அல்லது தமது மத நம்பிக்கைகளை மற்றவர்களுக்குப் பரப்புவதற்காகவோ, தமது ஆட்சி அதிகாரத்தினை விரிவுபடுத்து வதற்காகவோ, குடியேற்றங்களை விஸ்தரிப் பதற்காகவோ தொழில்நுட்ப அறிவினைப் பகிர்ந்து கொள்வதற்காகவோ மற்றைய நாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கின்றன. இன்று எந்த ஒரு நாடும் தனித்தோ அல்லது மூடப்பட்ட நிலையிலோ இருக்க முடிவதில்லை.

ஏதோ ஒரு வகையில் ஒரு நாடு இன்னொரு நாட்டில் சார்ந்திருக்க வேண்டிய தாகவேயுள்ளது. 20ம் நூற்றாண்டின் இறுதிக்காலாண்டுப் பகுதியில் விருத்தி யடைந்த உலகமயமாக்கற் செயற்பாடு பொருளாதாரத்தொடர்புகளை வலுப்படுத்து வதோடு உலக வர்த்தக விரிவாக்கத்தி னூடாக எல்லா நாடுகளும் நன்மையடைய முடியும் என அபிவிருத்தியடைந்த நாடுகளால் பரப்புரை செய்யப்பட்டது. இவ்வாறான வர்த்தக விரிவாக்கத்தினூடாக நேரடியாகவோ, மறைமுகமாகவோ வறிய, சிறிய நாடுகளும் நன்மையடைய முடியு மெனக்கருதப்பட்டது.

**நிதிநெருக்கடியின் அடிப்படை**

உலகமயமாக்கம் நேரடியானதும், மறைமுகமானதுமான முதலீட்டு வசதிகளை எல்லா நாடுகளிற்கும் விரிவுபடுத்தியுள்ளது. அவ்வாறான செயற்பாடுகளுக்குப் பொருத்த மான வகையில் பங்குச்சந்தைகள் உலகளா வியரீதியில் விரிவடைந்துள்ளன. ஒரு நாட்டின் குடி மகன் இன்னொரு நாட்டில்

உற்பத்தித் துறைகளிலோ அல்லது முதலீட்டுச் சந்தைகளிலோ பங்குகளை வாங்கி முதலீட்டு நடவடிக்கைகளில் தன்னைப் பங்குதாரராக இணைத்துக் கொள்ள முடியும். இவ்வாறான பொருளாதார செயற்பாட்டிற்கான வாய்ப்பிருப்பதால் ஒரு நாட்டின் பொருளாதாரச் செயற்பாடோ அல்லது ஒரு பொருளாதார நிறுவனத்தின் செயற்பாடோ அல்லது கடன்களை வழங்கும் வங்கிகளின் செயற்பாடோ அல்லது தனிப்பட்ட ஒருவரது பங்கு கொள்வனவு விற்பனைச் செயற்பாடோ அத்தகைய பொருளாதாரங்களில் தாக்கங்களை ஏற் படுத்தவல்லனவாகும்.

இவ்வாறான பின்னணிகளைக் கொண்ட இன்றைய உலகப்பொருளாதாரத்தில் ஒரு நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சி னையின் விளைவை ஏனைய நாடுகளும் எதிர் கொள்ளவேண்டியதாயிருந்தது. குறிப்பாக, இன்றைய உலகளாவிய நிதி நெருக்கடிக்குக் காரணமாயிருந்த அமெரிக்கப்பொருளாதாரப் பிரச்சினை அமெரிக்காவை மாத்திரம் பாதிக்கவில்லை. உலகின் எல்லா நாடுகளையும் பாதித் துள்ளது. இவ்வாய்வுக் கட்டுரை அமெரிக்காவில் ஏற்பட்ட நிதி நெருக்க டிக்கான காரணங்களைக் கண்டறிவ தோடு அதன் தாக்கம் அமெரிக்காவில் என்ன விளைவை ஏற்படுத்தியுள்ளது? ஏனைய நாடுகளில் என்ன விளைவை ஏற்படுத்தி யுள்ளன? என்பதை ஆராய்வ தாகவே யிருக்கும்.

உலகமயமாக்கத்ததின் நன்மைகளை யெல்லாம் தன்னகத்தே உள்வாங்கக் கூடியதான பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்குவதில் அக்கறை செலுத்திய நாடுகள் பல. அமெரிக்கா பலம் பொருந்திய அரசியல் பொருளாதார வல்லாதிக்க நாடாக இருந்த வேளையில் 2006ற்குப் பின்னர் துணை முதன்மை ஈட்டுக்கடன் நெருக்கடி யோடு நிதிநெருக்கடிக்கு முகங்கொடுத்து பொருளாதார மந்தநிலைக்குத் தள்ளப் பட்டது. இதன் பெறுபேற்றை எல்லா உலக நாடுகளும் "உலகமயமாக்கம்" என்பதன் வழியாகச் சேர்ந்து அனுபவிக்க வேண்டி யதாயிற்று.

நிதி உலகமயமாக்கலின் விளைவு தான் இதுவா? என்ற வினா எழுகின்றது. நிதி நெருக்கடிகள் விரிவாகப் பரந்த அளவில் கடந்த 40 வருடங்களாக ஏற்பட்டுள்ளது. அவை பின்வருமாறு 1986 தொடக்கம் 1996 வரையிலான அமெரிக்காவின் சேமிப்பும், கடன்வசதிகளும் நிதிநெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. 1990 தொடக்கம் 1995 வரை இருந்த "யப்பான் வங்கி நெருக்கடி" இன்னொரு காரணியாகும். 1998 தொடக்கம் 1999 வரையான "ஆசிய நிதி நெருக்கடி" மற்றொரு காரணியாகும்.

2007ல் அமெரிக்காவில் ஏற்பட்ட வீட்டுக் கொள்வனவிற்கு வழங்கப்பட்ட துணை முதன்மை ஈட்டுக்கடன் நெருக்கடி இதில் மிகப்பெரிய பாதிப்பைக் கொண்டு ள்ளது. அண்மைக் காலத்தில் உலகில் ஏற்பட்டிருக்கும் நாணயப்போர் (currency war) குறிப்பாக அமெரிக்க நாட்டினதும் சீன நாட்டினதும் நாணயப்போர் இன்னொரு நிலையாகும்.

இவை எல்லாவற்றிற்குமான நெருக் கடிகளுக்கெல்லாம் அடிப்படை 1929ம் வருடப் 'பொருளாதாரப் பெருமந்தம்' எனக் குறிப்பிட்டால் அது மிகையாகாது.

இன்றைய அமெரிக்க நிதிப்பிரச்சினை வீட்டு விலைகளின் பொங்கு நிலையில் **(housing bubble)** ஏற்பட்டதாகும். இப் பொங்கு நிலைக்கு அமெரிக்காவில் வீட்டுக் கொள்வனவிற்காக வழங்கப்பட்ட துணை முதன்மை ஈட்டுக்கடன் வசதிகள்தான் அடிப்படைக் காரணமாயிற்று. கடன் பெற்றவர்கள் கடனை மீளச்செலுத்தும் வல்லமை குன்றிக்காணப்பட்ட போதும் அவர்கள் கேட்கும் கடனை வழங்குவதற்கு சாதகமான வகையில் வங்கிக் கட்டுப் பாடுகளை ஒழுங்காகப் பின்பற்ற முடியாத அளவிற்கு உத்தேச செயற்பாடுகளும் இலாபத்தை எவ்வழியிலென்றாயினும் பெற்று விடவேண்டுமென்ற போட்டியுட னான கடன் வழங்கற் செயற்பாடுகளும் இந்நிதி நெருக்கடியை விரிவாக்கியது.

கடன் கொடுப்போருக்கும், கடன் பெறு வோருக்குமிடையில் கடனுக்கான துணைப் பிணைகளுக்கு அடிப்படையான மெய்ச் சொத்துக்கள், கடன் பத்திரங்கள், சாட்டுதல் பங்குகள் நிறுவன ரீதியான முதலீட்டா ளர்கள், அவர்களின் உத்தரவாதங்கள், நிறுவனக்காப்புறுதி வசதிகள் ஈட்டுக்கடன் வழங்குவோரை மிகையளவில் செயற்பட வைத்தது.

முதன்மை ஈட்டுச்சந்தையில் கடன் வழங்கு நடவடிக்கைகள் மிக ஆரோக்கி யமான அமெரிக்க உற்பத்தி வளர்ச்சியுடன் 1990ன் மத்தியிலிருந்து ஏற்பட்டது. அதற்குப் பணவீக்கம் தவிர்ந்த நிலையில் 1974-1995 காலப்பகுதியில் சராசரியாக வருடமொன்றிற்கு **1.4%** வளர்ச்சியென்பது 1996-2007ல் **2.5%** விரைவான வளர்ச்சி யினை எட்டியதால் கடன் வழங்கலுக்கான சாத்தியத்தன்மை அதிகரித்துக் காணப் பட்டது. இதனால் வீடுகளிற்கான கேள்வி அதிகரித்தது. **US** வீட்டுச் சந்தைப் பெறுமதி **$ 20 trillion** ஆகவிருக்கும் போது வீட்டு நிர்மாணத் தொழில் **$ 13 trillion** அளவை எட்டியிருந்தது. வீட்டுத்துறைச்செல்வம் **$45 trillion** ஆகவும், அதில் துணை முதன்மை ஈட்டுக்கடன் செல்வம் **$6.5 trillion** ஆகவும், வீட்டு ஈட்டுக்கடன் **$10 trillion** ஆகவும், அதில் துணை முதன்மை **$2.5 trillion** அது **25%** ஆகவுமாகக் காணப்பட்டது. இந் நிலையில் சராசரி வீட்டு விலை அதிகரிப்பு **40%** ஆகவுமிருந்தது. இந் நிலையில் (2000-2006) சராசரியாக ஒரு வீட்டின் விலை **$ 234400** ஆக இருந்தது.

### நிதிநெருக்கடி அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் ஏற்படுத்தும் விளைவுகள்

இன்றைய நிதிநெருக்கடியும் நாணயப் போரும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பலபாதிப்பை ஏற்படுத்தி யுள்ளன. குறிப்பாக இரண்டு சாத்தியமான வழிகளில் தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.

### நிதி கடத்தப்படும் நிலை (Financial contagion)

ஒன்றிலிருந்து இன்னொன்றிற்கு நிதி கடத்தப்படும் நிலை. உதாரணமாகப் பங்குச்

சந்தையின் வழியாக மேலெழுந்தவை சந்தைக்கும் பரவுதல். 2008 மே மாதத்தில் ரஷ்யப் பங்குச்சந்தை இரண்டு முறை வர்த்தகத்தை நிறுத்தியது. ஒரு நாளில் இந்தியாவின் பங்குச்சந்தை 8% அளவுக்கு வீழ்ச்சியடைந்து. அதே நேரம் அமெரிக்கா வினதும், பிரேசிலினதும் பங்குச்சந்தை குழப்பமடைந்து காணப்பட்டன. 2008 மேயிலிருந்து உலகத்தில் வளர்ச்சியடைந்த, வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் குறிப் பிடக்கூடியளவிற்கு பங்குவிலை வீழ்ச்சி யடைந்தது. அமெரிக்காவின் பங்குவிலை 12% - 19% வீழ்ச்சியடைந்தது. அக்காலத்தில் ஐக்கியஇராச்சியத்தினதும், யப்பானினதும் பங்குச்சந்தைவிலை 23% வீழ்ச்சியடைந்தது. இது பிரேசில், தென்ஆபிரிக்கா, இந்தியா, சீனா போன்றவற்றின் பங்குச் சந்தைகளிலும் ஏற்பட்டது. ஒன்றிலிருந்து இன்னொன்றிற்கு பரவும் அபாயம் நிதிச்சந்தையில் ஏற்பட்டது.

**பொருளாதாரச்சரிவு**

அபிவிருத்தியடைந்த நாடுகளில் பொரு ளாதாரச்சரிவின் விளைவு அபிவிருத்திய டைந்து வரும் நாடுகளில் பின்வரும் விளைவுகளை ஏற்படுத்தியது.

**அ) வர்த்தக விளைவு**

சீனாவினதும், இந்தியாவினதும் வளர்ச்சி அதிகரித்த இறக்குமதியிலும் தூண்டப்பட்ட செப்பு, எண்ணெய், மற்றும் இயற்கை வளங்களிற்கான கேள்வி உயர்வு, ஆபிரிக்க நாடுகளில் ஏற்றுமதியை உயர்த்தியதோடு விலையிலும் அதிகரிப்பினை ஏற்படுத் தியது. இதனால் சீனாவினதும் இந்தியா வினதும் வளர்ச்சி வேகம் குறைந்தது. இது ஏனைய வறியநாடுகளையும் பாதித்தது.

**ஆ) பெறுகைகள்**

வெளிநாட்டு வருமானப் பெறுகைகள் வீழ்ச்சியடைந்தது. பொருளாதார மந்தத்தால் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு வந்த தொழிலாளரின் வருமானமும் வீழ்ச்சிய டைந்ததால் ஒருவருக்கான வெளிநாட்டு வருவாய் குறைந்தளவு வீழ்ச்சியடைந்தது.

**இ) வெளிநாட்டு நேரடி முதலீடு**

வெளிநாட்டு நேரடி முதலீடும் (FDI), பங்கு முதலீடும் அண்மைக்காலங்களில் பதிவு செய்யப்பட்டதன்படி அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளில் குறைந்தது.

**ஈ) வர்த்தகக் கடன் பெறுகைகள்**

அபிவிருத்தியடைந்த நாடுகளின் வங்கிளிற்கு ஏற்பட்ட நெருக்கடியால் முன் னைய காலங்களிற் பெற்ற அளவு கடனை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பெற முடியவில்லை. இதனால் வங்கிக்கடன் களின் அளவு குறைந்து காணப்பட்டது.

முதலீட்டாளர்கள் கஷ்டங்களை எதிர் நோக்கியதால் கடன் வழங்க முன்வர வில்லை. ஐஸ்லாந்தின் நிதி உடைவு அல்லது முறிவு கடன் ஆபத்தினை வெளிப் படுத்தியது. இதனால் முதலீடு மட்டுப் படுத்தப்பட்டது. குறிப்பாக ஆஜென்ரீனா, ஐஸ்லாந்து, பாகிஸ்தான், உக்ரேயின் போன் றவை குறைந்த முதலீடுகளால் பாதிக்கப் பட்டன.

**உ) வெளிநாட்டு உதவி**

பலவீனமான அரசிறை நிலைமை களால் வளர்ச்சியடைந்த நாடுகள் உதவிக் காக ஒதுக்கும் தொகை பாரியளவில் வீழ்ச்சி யடைந்தது. U.K,EU,USA போன்றவை 2005ம் ஆண்டு Gleneagles மாநாட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட உதவிகளைக் கூடக் கடந்த 5 வருடங்களாக வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**ஊ) அரசமுதலீட்டின் வீழ்ச்சி**

ஏனைய அரச பாய்ச்சல்கள் முதல் பற்றாக்குறையாகவுள்ளது. நிதிநிறுவனங்களுக்கு ஏற்பட்ட ஆபத்து அரசமுதலீடுகளும் பாதிப்படையக் காரணமாகிவிட்டது. இந்நிலையில் உலக மயமாக்கத்தினை நிராகரிக்கும் நேரமாக இதைக்கருத முடியாது. இதை எவ்வாறு முகாமைத்துவப்படுத்தி ஒழுங்குபடுத்த வேண்டும் என்பதனையும் அது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு நன்மையளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

**நிதி நெருக்கடி ஏற்படுத்தும் ஆபத்துக்கள்**

ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பியஒன்றிய நாடுகள் பொருளாதாரச்சரிவு நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருக்கும் போது நேரடியாகவும், மறைமுகமாகவும் இந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நாடுகள் பாதிப்படையும். இதற்கு மெக்சிக்கோ நல்லஎடுத்துக்காட்டு. ஏற்றுமதி செய்யும் நாடுகளின் பொருட்களுக்கான விலை அல்லது உற்பத்தி உயர்வருமான நெகிழ்ச்சியினால் பாதிக்கப்படும்.

வெளிநாட்டில் வேலை செய்வோர் அனுப்பும் வருமானம் அல்லது பெறுகையின் வீழ்ச்சியால் இலண்டனில் இந்தியத் தொழிலாளர் குறைந்த வருமானத்தையே பெற்று இந்தியாவுக்கு அனுப்புகின்றனர். தற்போது வேலை வாய்ப்பும் வெகுவாகக் குறைந்தளவுடன் வேலையின்மைப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. வெளிநாட்டு முதலீடுகளில் தங்கியுள்ள நாடுகள் நடைமுறைக் கணக்கிலும் பிரச்சினையை எதிர்கொள்கின்றன.

உயர்ந்த நடைமுறைக்கணக்கு குறைநிலை நாணயமாற்று வீதத்தினாலும் பணவீக்கத்தினாலும் ஏற்பட்டது. தென்னாபிரிக்கா வட்டிவீதத்தினைக் குறைக்க முடியாமற் போனதால் நடைமுறைக் கணக்கில் குறைநிலை ஏற்பட்டது. இந்தியா அதிக பணவீக்கத்தினால் மதிப்பிறக்கம் செய்ய நேரிட்டது. இறக்குமதிப் பொருட்களாலும் ஏற்கனவே நடைமுறைக் கணக்கு பலவீனமடைந்திருந்தது என்பதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகும்.

அரசாங்க வரவுசெலவுக் குறைநிலை உயர்வாக இருந்தது. பலவீனமான அரசாங்க இறைநிலைமை காரணமாக இந்தியா பலவீனம் அடைந்தது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் இனிவரும் காலங்களில் வெளிநாட்டு உதவியைப் பெறுவதில் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியதாயிருக்கும் என்பதுடன் இக்கடன்களின் அளவும் குறைவடைந்து வரும் என்பதில் ஐயமில்லை.

நிதிநெருக்கடியும் பொருளாதாரச் சரிவும் அதன் போக்கில் ஏற்பட்ட பொருளாதார மந்தமும் ஏற்படுத்திய விளைவுகள் நாட்டுக்குநாடு வேறுபட்ட அளவான பாதிப்பை ஏற்படுத்தியது.

அ. பலவீனமான ஏற்றுமதி வருவாய்
ஆ. சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கில் அழுத்தம்
இ. குறைந்த வீத முதலீடும், வளர்ச்சி வீதமும்
ஈ. வேலை இழப்பும் வேலையில்லாப் பிரச்சினையும்
உ. நிதி, மற்றும் பொருளாதார நிறுவனங்கள் முறிவடைந்துபோதல்
ஊ. வாகன உற்பத்தி வீழ்ச்சியும், விற்பனை வீழ்ச்சியும்

இதன் சமூக விளைவாகக் குறைந்த வளர்ச்சி வீதம் அதிகளவான வறுமையை ஏற்படுத்திவிடும். அதிககுற்றச் செயல்,

ஒழுங்கற்ற சுகாதார முறைமைகள் நூற்றாண்டு இலக்கினை அடைவதில் சிரமங்களை ஏற்படுத்திவிடும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**நிதி நெருக்கடியைக் குறைப்பதற் கான வழிகள்**

நிதி உறுதிப்படுத்தல் சர்வதேச நிதிச் சட்டங்களுக்கேற்பவும், அபிவிருத்திக் கேற்பவும் பொதுப் பொருளை உற்பத்தி செய்து சந்தைக்கு விடுதல். எப்படியாவது இந்நாடுகள் ஒன்றிலிருந்தொன்றிற்குத் தாவும் நிதிப்பிரச்சினையைக் குறைத்தல். இன்றைய பொதுவான பொருளாதார அமுல்படுத்தல். குறிப்பாகக் கட்டமைப்புடைய காரணிகளின் வளர்ச்சி சர்வதேச "பருநிலைப் பொருளாதார" (MACRO Economics) முகாமைத்துவம் நோக்கிய கொள்கை நகர்வுகள் இறைக்கொள்கை, நாணயக்கொள்கையில் மாற்றங்கள் செய்ய வாய்ப்புண்டா என்பதை அறிதல். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் நிதி நிறுவனங்கள் சில ஆபத்துகளின் மத்தியில் முதலீட்டுப் பாய்ச்சலை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் ஏற்படுத்த வேண்டும். ஆபத்து விளைவிக்கக்கூடிய நிதி நிறுவனங்களின் செய்கைக்குட்படாதிருத்தல் வேண்டும்.

**வேலையின்மையின் அதிகரிப்பு**


2008 மே-ஓகஸ்ட் மாதங்களுக்கிடையில் 164000 பேர் வேலையை இழந்துள்ளனர். இது வேலையின்மையில் உள்ளவர்களில் 10% அதிகரிப்பைக் காட்டியது. இது இன்று 16.3 மில்லியன் அளவாகவுள்ளதுடன் எதிர்காலத்தில் அதிகரிக்கும் சாத்தியமும் உள்ளது.

**முடிவுரை**

துணை முதன்மை ஈட்டுக் கடனுக் கான பிணை (Collateralized debt obligation and suprime mortgage line) அவற்றிற்கான பாதுகாப்புச் சொத்துக்கள் (Securitization and Foreclosures) அவற்றின் வருவாய் வீதங்கள் கடன்பட்டோர் திருப்பிச் செலுத்தத்தவறின் கடனை மீளப்பெறுவதற்கான வழி வகைகள் போன்றவற்றில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தக்கூடிய பருநிலைப் பொருளாதாரக் கொள்கையை அமுலாக்கக் கூடிய அதிகாரமுள்ள மத்திய வங்கி எல்லா நாடுகளிலும் நிதி நாணயப் பொறுப்புக்களை ஏற்றுச் செயற்பட வேண்டும். தவறின் உத்தேச நோக்கில் மேற்கொள்ளப்படும் சூதாட்டக்காரரிடம் நாணய நடைமுறைகள் மீண்டும் சென்று மீண்டுமொரு உலகளாவிய நிதி நெருக்கடியேற்படுவதைத் தவிர்க்க முடியாது போய்விடும். எவ்வாறாயினும் சர்வதேச நிதிநெருக்கடி குறைவிருத்தி நாடுகளை அதிகம் பாதிக்குமென்பதனால் அவற்றின் மீது அதிக கரிசனை காட்டப்படல் வேண்டும். அத்துடன் நாணயங்களுக்கிடையிலான போர் ஏற்படுவதை முடிவுக்குக் கொண்டு வருதல் வேண்டும். இவை பொதுவில் சர்வதேச நிதிநெருக்கடியைச் சமாளிக்க உதவும் என்பதை மனதிற் கொள்ள வேண்டும்.

# மறைந்திருந்து உயிர் குடிக்கும் இரத்த அழுத்தம்!

வைத்தியநிபுணர் சி.சிவன்சுதன்,
யாழ். போதனா வைத்தியசாலை,
பழைய மாணவன்,
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.



உயர் இரத்த அழுத்தம் (High blood Pressure) சம்பந்தமாக மக்களிடையே போதிய அறிவின்மையால் பல அநாவசியமான இறப்புக்களும், கடுமையான இறப்புக்களும், கடுமையான பாதிப்புக்களும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இது சம்பந்தமாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் பல தீய விளைவு களைத் தடுத்து நிறுத்த முடியும்.

உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்குப் பொதுவாக எந்த அறிகுறியுமே இருக்காது. இரத்த அழுத்தத்தை அளந்து பார்ப்பதன் மூலம் மாத்திரமே இதனைக் கண்டறிய முடியும். பலர் தலையிடி, தலைச்சுற்று, களைப்பு, வாந்தி என்பவற்றை உயர்இரத்த அழுத்தத்தின் அறி குறியாகக் கருதுகிறார்கள். அது தவறான ஓர் அபிப்பிராயமாகும்.

35வயது கடந்தவர்கள் ஒரு தடவையேனும் தமது இரத்த அழுத்தத்தை அளந்து பார்த்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் கண்டறியப்படாமல் இருக்கும் பல உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களைக் கண்டறிந்து அவர்களின் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும்.

உயர் இரத்த அழுத்தம் எந்த அறிகுறியையும் ஏற்படுத்தாத பொழுதும் அதனைக் கட்டுப்படுத்தி வைத்திருக்க வேண்டியதன் அவசியம் என்ன?

இதைக் கட்டுப்படுத்தாவிடின் பாரிசவாதம் (Stroke), மாரடைப்பு (Heart attack), சிறுநீரகக் கோளாறுகள், பார்வைக் குறைவு போன்ற பாரதூரமான விளை வுகள் ஏற்படக்கூடும். உயர் அழுத்தம் காரணமாக இரத்தக் குழாய்கள் வெடிக் கலாம் அல்லது சேதமடையலாம். சில சமயங்களில் திடீர்மரணங்கள் கூட சம்பவிக்கலாம்.

மருந்து மாத்திரைகள் உட்கொள் ளாமல் இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்த முடியுமா?

ஆம்! இதுதான் சிறந்த முறையும் கூட. பல்வேறு நடைமுறைகள் மூலம் இரத்த அழுத்தத்தைக் குறைத்துக் கொள்ளலாம். அவற்றில் முக்கியமானவை உடலின் நிறையைக் குறைத்துக் கொள்ளுதல்,

ஒழுங்காக உடற்பயிற்சி செய்து வருதல், புகைத்தலையும், குடிவகைகள் பாவித் தலையும் நிறுத்திக் கொள்ளுதல், உண விலே உப்பு, எண்ணெய் வகைகளைக் குறைத்து, மரக்கறிவகைகளையும், பழ வகைகளையும் அதிகம் சேர்த்துக் கொள்ளுதல், கோபம், கவலைகள் ஏற்படும் சூழ்நிலைகளைத் தவிர்த்துக் கொண்டு அமைதியான சூழ்நிலையில் இளைப்பா றுதல் அல்லது தியானித்தல் போன்றவை யாகும்.

வாரத்தில் நான்கு நாட்கள் 30-45 நிமிடங்கள் வரை வேகமாக நடத்தல் ஒரு சிறந்த உடற்பயிற்சியாகும். இதன் மூலம் இந்தக் குருதிஅமுக்கம் குறைவடைவது மட்டுமல்லாது உடலின் நிறையும் இரத்தத்தில் உள்ள கொலஸ்ரோலின் அளவும் குறைவடைகிறது, அத்துடன் மன நிலையைச் சாந்தப்படுத்துவதற்கும் இவ்வா றான உடற்பயிற்சிகள் பெரிதும் உதவியாக அமைகின்றது.

மாமிச வகைகளிலே மீன், கோழி இறைச்சி என்பனவும், எண்ணெய் என்பனவும் பாதுகாப்பானவை. இவை உடலின் கொலஸ்ட்ரோலின் அளவை அதிகப்படுத்தமாட்டாது.

தேங்காய் எண்ணெய் பாதுகாப் பானதா? என்பது பற்றி அண்மையில் பல் வேறு விதமான கருத்துக்கள் தெரிவிக்கப் பட்டுள்ள பொழுதிலும் மனிதனின் நீண்டகால தேங்காய் எண்ணெய்ப் பாவனை பாதுகாப்பானது என்பதை உறுதிப்படுத்தத் திட்டவட்டமான ஆய்வுகள் எதுவும் இன்னும் நடத்தப்பட வில்லை.

மேலே குறிப்பிடப்பட்ட நடைமுறை களைத் தொடர்ச்சியாகக் கடைப் பிடித்து வந்தால் 2-4 மாத காலத்தில் இரத்த அமுத் தத்தைப் பெருமளவில் கட்டுப்படுத்த முடியும். சில சமயங்களில் இந்த நடை முறைகளால் மாத்திரம் உயர் இரத்த அமுத்தத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போகலாம். அந்தச் சந்தர்ப்பங்களில் இந்த நடைமுறைகளுக்கு மேலதிகமாக சில மருந்துகளையும் உட்கொள்ள வேண்டிய தேவை ஏற்படலாம்.

எனவே உயர் இரத்த அமுத்தம் உள்ளவர்கள் எப்பொழுதும் ஒரு மருத்து வரின் கண்காணிப்பில் இருந்து வருதல் அவசியமாகும்.

**உயர் இரத்த அமுத்தம் ஏற்படுவதன் காரணம் என்ன?**

பல்வேறுபட்ட காரணிகளால் உயர் இரத்த அமுத்தம் ஏற்படுகிறது. ஒருவரின் தாய், தந்தை, சகோதரர்களுக்கு இந்த நோய் காணப்படின் அவருக்கும் இது ஏற்படு வதற்கான சந்தர்ப்பம் உண்டு.

அதிக உடற்பருமன், புகைத்தல், குடிவகைகள் பாவித்தல், போதிய உடற் பயிற்சி இல்லாமை, மனஅமைதியின்மை, போன்ற காரணங்களாலும் இது ஏற்படலாம்.

இவை தவிர சிறுநீரகக் கோளாறுகள், ஓமோன் (Hormone) சுரப்பிகளில் ஏற்படும் நோய்கள், சில மருந்துகளின் பாவனை என்பவற்றாலும் இது ஏற்படக் கூடும். உயர் இரத்த அமுத்தம் ஏற்பட்ட தற்கான காரணங்கள் ஏதாவது கண்டறி

யப்படின் அவை கூடுமான வரையில் நிவர்த்தி செய்யப்படுதல் அவசியமாகும். உயர் இரத்த அழுத்தம் என்பது ஒரு கடுமையான நோய் அல்ல. ஆனால் இதனைக் கட்டுப்படுத்தாது விட்டால் ஏற்படும் விளைவுகளே கடுமையானவை.

மருத்துவ ஆலோசனைக்கு அமைய நாம் எமது உணவையும், அன்றாட நடவடிக்கைகளையும் மாற்றி அமைப்பதன் மூலமும், தேவை ஏற்படின் மருந்துகளைச் சரியான முறையில் உட்கொள்வதன் மூலமும் இரத்த அழுத்தத்தைக் கட்டுப் படுத்த முடியும். இதன் மூலம் தீய விளைவு களைத் தவிர்த்து ஒரு சாதாரண வாழ்க்கை யை வாழ முடியும். எனவே இது பற்றிச் சற்றுச் சிந்திப்போமாக!

# நம்பிக்கை

செல்வி.சு.துஷி
தரம் 10 A



நம்பிக்கை என்பது ஐந்தெழுத்து
அதில்
உள்ளது உன் தலை எழுத்து
உன்னையே நீ நம்பு ஆனால்,
பிறரை நம்பி ஏமாறாதே!

நம்பிக்கை மனிதனின் ஆயுதம்
உன்னை
முன்னேற்றிச் செல்ல அது உதவும்.
உயிரற்ற உடல் ஒரு போதும்
பயனில்லை அது போல்
நம்பிக்கை அற்ற வாழ்வு ஒரு போதும்
பயனில்லை!

நம்பிக்கை உன் வாழ்வின் அத்திவாரம்
அத்திவாரம் சிறப்பானால் உன்
வாழ்வு சிறக்கும்
உன் வாழ்வு சிறக்க நம்பிக்கை வை.
தீயவற்றில் நம்பிக்கை வைத்து உன்
வாழ்வை நீயே அர்த்தமற்றதாக்கி விடாதே!

# அறிவுப் பொருளாதாரத்தின் வாய்ப்பும், போக்கும், பொருளாதார அபிவிருத்தியும்

பேராசிரியர்.ப.சிவநாதன்,
தலைவர்,
பொருளியல்துறை ,
யாழ். பல்கலைக்கழகம்.



அபிவிருத்தியடைந்த ஐரோப்பியப் பொருளாதாரங்கள் நிலத்தை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை ஆரம்பமாகக்கொண்டு பின்னால் கைத்தொழில் இயந்திரத்திற்கு மாற்றமடைந்து பின்தொடர்பாடலுக்கு மாறி இன்று அறிவுப் பொருளாதாரத்திற்கு மாறியுள்ளது. தொடர்பாடற்காலம் அறிவுப் பொருளாதார எண்ணக்கருவாக்கத்தை வரையறுப்பதற்கு உதவியதோடு அறிவுப் பொருளாதார நடவடிக்கைகளை நாடுகளின் பொருளாதாரங்களில் அதை விரைவு படுத்தியுமுள்ளது. அறிவுப் பொருளாதாரத் தொழிற்பாட்டின் பரவல் திரண்ட பொருளாதார அபிவிருத்தியாகின்றது. அபிவிருத்திக்கு அறிவுதவியதென்பது புதியதொரு விடயமுமல்ல. அபிவிருத்தியின் மையமாக அறிவு எப்போதும் இருந்தே வந்துள்ளது. அறிவுப் பொருளாதாரம் உயர்தொழில் நுட்பக்கைத்தொழிற்சாலைகளும் ஆக்கமும், புத்தாக்கமும் உள்ள முயற்சியாண்மைக் கலாசாரமுமல்ல. சிலநாடுகள் இலகுவாக ஏற்கனவே பரந்தளவில் இருந்த தொழில் நுட்பத்தைச் சேர்த்துக் கொண்டு எல்லாப் பொருளாதார நடவடிக்கைகளையும் அறிவுக் காரணியின் வலைப்பின்னலுக்குள் இணைத்துக் கொண்டதால் வியக்கத்தக்க வகையில் அபிவிருத்தியடைந்துள்ளன. இங்கு பொருளாதார வளர்ச்சியும், உற்பத்தியும் வேகம் கொண்டுள்ளன. அதற்கு அகப்புறச் சூழல்களில் அறிவுக் காரணி முதன்மையாகச் செயற்பட்டுள்ளது. இலங்கையில் இவ்வாறான அறிவுசார் முன்மொழிவுகள், கொள்கை ஆக்கங்கள், அறிவுசார் பொருளாதாரத்தை நோக்கிய சந்தர்ப்பங்கள் உண்டா? என்பதை நோக்குதல் வேண்டும். இதற்கான அடித்தளமாக வர்த்தகச் சூழல், தொடர்பாடல், கட்டுமானம், புத்தாக்க வழிமுறைகள், மனிதவளம் போன்றவையிருத்தல் வேண்டும்.

உற்பத்திக்கான உள்ளீட்டுக் காரணிகளில் ஒன்றான உழைப்பு, கல்வியறிவு, தொழிற்பயிற்சி என்பவற்றைப் பெறுவதோடு நேரான பொருளாதார மாற்றங்களுக்கு இசைந்தும், நெகிழ்ந்தும் பழக்கச் செயலும் கூடிய எண்ணப்பாங்கு போன்றவற்றுடன் எல்லாமட்டங்களிலும் இயலுமை கொண்டதாகவும் தொடர்ந்து உயர்மட்டம் நோக்கிச் செல்வதை அறிவுப் பொருளாதாரம் உள்ளடக்கமாகக் கொள்கின்றது.

அபிவிருத்தியடைந்தநாடுகளில் அறிவுப்பொருளாதாரம் பொருளாதார

நிறுவனச் செயற்பாடுகள், மனித மூலதனம், தொடர்பாடல், கட்டுமானம் வழமையாய் இருந்தவற்றை மாற்றி புதுமையைப் புகுத்தும் முறை புத்தாக்கம் என்ற நன்கு பலமான தூண்களில் கட்டப்பட்டதே அறிவுப் பொருளாதாரமென்பர். முதலாவதாக பொருளாதார நிறுவனச் செயற்பாடுகளில் அறிவை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கு ஊக்குவிப்பு வேண்டும். அத்துடன் நவீனமானதும் புதியதுமான அறிவினை உருவாக்க வேண்டும். இதற்கு உதவும் வகையில் நெகிழ்வானதும் உள்வாங்கக் கூடியதுமான சந்தைசார் பொருளாதாரமும், முயற்சியாண்மையும் ஆக்கங்களை யுடையதுமான அறிவுச் சமூகம் வேண்டும். போட்டியும், நெகிழ்வுத் தன்மையும் சமூக பொருளாதாரச் செயற்பாடுகளில் இருக்க வேண்டும். அறிவுடைச்சமூகம் ஒன்று சமூக மாற்றங்கள் சமூக மேம்பாடுகளுக்கு அவசியம். இச்சமூகம் அறிவுசார் பொருளாதாரக் கட்டுமானமாக நிலைத்து நிற்கும் பண்பு கொண்டதாக இருக்கும். இரண்டாவதாக அறிவுப்பொருளாதாரத்தின் இன்னொரு தூணாக மனித மூலதனம் இருக்கிறது. இம்மனித மூலதனம் உயர்திறன் கொண்ட நெகிழ்வுடைய ஊழியப்படையும், மனிதவள அபிவிருத்தியுமுடையதாக இருத்தல் வேண்டும். இம்மனித மூலதன உருவாக்கத்திற்கான கல்வித்தரத்தை உயர்த்தக்கூடியதாய் இருப்பதோடு ஆக்க இயல்பு கொண்டதாயும் வாழும் வரை கற்றல் இயல்புடையதாய் இருக்க வேண்டும். பன்முகப்படுத்தலும் அரசாங்க ஒழுங்கு படுத்தல்கள் அற்றதாக பலதிசைமுகப் படுத்தலுக்குட்பட்டதாகவுமுள்ள கல்வியும், பயிற்சியும் அறிவுப் பொருளாதாரத்திற்குரியதான மனித மூலதனத்தை உருவாக்கும்.

அறிவுப் பொருளாதாரத்தின் மூன்றாவது தூணாகத் தொடர்பாடல் கட்டுமானங்கள் இருக்குமென குறிப்பிடுகின்றனர். அத்தொடர்பாடல் கட்டுமானங்கள் நவீனமயப்படுத்தப்பட்டதும், தாராளமயப்படுத்தப்பட்டதுமான தொலைத் தொடர்புக் கட்டுமானங்களும் வலைப்பின்னலுடையதுமான அறிவுப்பொருளாதாரத்திற்கு ஏற்றதுமாய் இருத்தல் வேண்டும். தொடர்பாடல், கட்டுமானம் உள்ளகத்திலும் பிரதேசரீதியாகவும் பயன்படுத்தக்கூடிய சக்கரங்களும், இணைப்புக்களுமுடைய தந்திரோபாய அணுகுமுறையுடன் கூடியதாக இருத்தல் வேண்டும். இதற்கான அடிப்படைத்தளமாக இயங்கியல் தன்மை கொண்ட இலத்திரன் வணிகமும், இலத்திரன் அரசாங்கமும் நவீனத்துவத்துடனும், பொருளாதாரத்துடனும் இணைத்துக்கொண்டதாய் இருத்தல் வேண்டும்.


அறிவுப் பொருளாதாரத்தின் நான்காவதும், இறுதியுமான தூணாகப் புத்தாக்க முறை குறிப்பிடப்படுகின்றது. இது வரையும் நடைமுறையிலிருந்த வழக்கத்தை மாற்றி புதுமையைப் புகுத்த வேண்டும். இது வினைத்திறன் வாய்ந்த வகையில் புத்தாக்கம் அல்லது புதுமையைப் புகுத்தும் உற்பத்தி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், விஞ்ஞான ஆய்வுகள், ஆராய்ச்சி மையங்கள், ஆலோசனைகள், சிந்தனைக் கூடங்கள், வினைத்திறனுடன் செயற்படுவதோடு உலக அறிவைப் பெற்றுக் கொள்ளுதல் பெற்றுக்கொண்ட உலக அறிவை உள்ளூர்த்தேவைகளுக்கு ஏற்ற வகையில் ஒன்றைப் பிரதி செய்தல். அதாவது உலக அறிவையும் புதிய ஆக்கங்களையும்

தன்மயமாக்குதல் அவ்விதமே புதிய கண்டு பிடிப்புக்களையும் உலகத் தொழில் நுட்பத்தையும் தன்மயமாக்கி அதனையே திறன் வாய்ந்த அறிவுடை முயற்சியாண் மையையும், அறிவுடை முகாமைத்துவம் கொண்டதாகவும் நிறுவனங்கள் இருத்தல் வேண்டும். ஆரம்பத்தில் ஜப்பானும், இன்றைய கொரியாவும் இதற்கு நல்ல உதாரணமாகும். சிறிய நடுத்தர முயற்சி யாண்மையில் இதை இணைத்துக் கொள்ள வேண்டும். தன்மயமாக்கக்கூடியதான புத்தாக்க அடிப்படை வலைப்பின்னல் தொடர்பும், தொகுதிகளும் உள்ளூர் அதிகார மளிக்கப்பட்ட பங்குபற்றலும் இதற்கு அவ சியம். புத்தாக்கச் செய்முறைகளை முனைப் புடன் ஆரம்பிக்கும் போது பொருளாதா ரத்தில் அறிவு ஒன்றிணைந்ததாகவும், வெளிநின்று இணைந்ததாகவும் இருப்ப தோடு உற்பத்தியில் செய்முறைகளில் மரபுநிலைகளிலும் அதில் மேலும் புத்தாக்கங்கள் சேர்த்துக் கொள்ளக்கூடிய தாகமாற்றி, அவ்வுற்பத்திகளை கைத் தொழிற்சந்தைக்கானதாக மாற்றுவதோடு பொதுத்துறையிலும், தனியார்துறையிலும், சிறப்புத் தேர்ச்சியும் ஒருங்கிணைந்த முன்னேற்றத்தையும் ஏற்படுத்துதல் வேண் டும். அதற்கமைவாக மக்களின் தொழி லின்மையும் குறிப்பிட்ட தொழில் அறிவுசார் பொருளாதார செய்முறைகளை உள்வாங்கக் கூடிய நெகிழ்வுத் தன்மையுடையதாகவும் இருத்தல் வேண்டும். இப்பின்னணியில் புதிய அறிவை மூன்றாம்நிலைக்கல்வி ஊடாகவும் ஆய்வும், அபிவிருத்தியும் என்ற வகையில் பெறுதல் வேண்டும். அது முறைப்படுத்தப்பட்ட நிலையிலும், முறைப் படுத்தப்படாதநிலையிலும் பாரம்பரிய விழுமியங்களினூடானதாக வெளிப்படுத் தப்பட்ட நிலையிலும் இருக்கமுடியும். கல்வியை வேலைத்தளத்திலும், வகுப்பறை யிலும் பெறக்கூடியதாகவும் இருக்கலாம்.

சொத்துக்கள், தொழிற்சாலைகள், கட்டடங்கள் பௌதீக முதல் இருப்பு ஆகியவற்றிற்குப் பதிலாகப் பார்வைக்குத் தெரியாத ஆனால் கூடிய வினைத்திறன் கொண்ட அறிவு இருப்பு மற்றும் அதனைப் பிரயோகப்படுத்தல் என்பன பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியபங்களிப்புச் செய்துள் ளது எனவலியுறுத்தப்படுகிறது. பொருளா தாரவளர்ச்சிக்கு முதல் இருப்பினை அதிகரிப்பது தேவைப்படுவதானாலும் அதனைவிட அறிவு அடித்தளத்தினை பேணுதலையும், அதனுடைய விரிவாக்கு தலையும் செய்வது மேலும் கூடுலான பயனையளிக்கிறது.

# Global Warming

Miss. Y.Rojini
Grade 7 A



Global warming is the term used to describe a gradual increase in the average tempe rature of the earth's atmosphere. It hap pens when green house gases trap heat and light from the sun in the earth's atmosphere, which increase the temperature. This hurts many people, animals and plants. Many can't take the change, so they die.

Many things cause global warming. One thing is electrical pollution. In most case, fossil fuels are burned to create electricity. Fossil fuels are made of dead plants and animals. Many pollutants are sent into the air when fossil fuels are burned. Some of these chemicals are called greenhouse gases. When we throw our garbage away, the garbage goes to landfills. Landfills are those big hills that you go by on an expressway that stink. They are full of garbage. The garbage is then sometimes burned. This sends an enormous amount of greenhouse gases in to the air and makes global warming worse. Another think that makes global warming worse, is cutting down the trees. Trees and other plants collect carbondioxide (co2), which is a greenhouse gas.

Global warming is affecting many parts of the world. Global warming makes the sea rise, and when the sea rises, the water covers many low land islands. This is a big problem for many of plants, animals and people on islands. Global warming is destroying many huge forests. The pollution that causes Global warming is linked to acid rain. Acid rain gradually destroys almost everything is touches. Global warming is also causing many more fires that wipe out whole forests. This happens because Global warming can make the earth very hot.

The government is doing many things to help to stop Global warming. The government made a low called the clean Air Act. Global warming is making people get very bad illnesses that could make them disabled, very sick and sometimes even die. This law is making many companies change their products to decrease these problems. It is very important to protect our trees to stop the greenhouse effect, and also so we can breathe and live.

# இலங்கைப் பாடசாலைக் கல்வியில் தர உறுதிப்பாடு (Quality Assurance in Srilankan Schools)

பேராசிரியர்.மா.சின்னத்தம்பி,
கல்வியியல் பேராசிரியர்,
தலைவர், சட்டத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



**அறிமுகம்:**

இலங்கையின் கல்விமுறையின் பிரதான உபசெயலமைப்பு பாடசாலைக்கல்விமுறையாகவே காணப்படுகின்றது. 2009 ஆம் ஆண்டு 9662 பாடசாலைகளில் 4.0 மில்லியன் மாணவர்களுக்கு 212,683 ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர். தனியார் பாடசாலைகள் 36உம் செயற்பட்டு வருகின்றன. 330 தேசிய பாடசாலைகளும், 700வலுவான 1AB பாடசாலைகளும் இயங்குகின்றன. மாகாணப் பாடசாலைகள் 9332 இயங்கி வருகின்றன. ஆங்கிலமொழி மூலம் கல்வியூட்டும் 449 பாடசாலைகளும், கணினி வசதி கொண்ட 2033 பாடசாலைகளும் இவற்றுள் அடங்குகின்றன. ஆசிரிய மாணவ விகிதம் 18:1 ஆகக் காணப்படுகின்றது.

தென்னாசியாவில் இலங்கையின் கல்வித்தரம் ஒப்பீட்டு ரீதியில் திருப்தியளிப்பதாக உள்ளது. ஆரம்பக் கல்வித் தரம் 42%ஆகவும், விஞ்ஞானம் மற்றும் கணித கல்வித்தரம் 41% ஆகவும், கல்விமுறையின் தரம் 44% ஆகவும், இருப்பதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. வருடாந்தம் 2375 அமெரிக்க டொலர் தலாவருமானம் கொண்ட இலங்கையில் கல்வியின் தரம் பற்றிய அக்கறை அண்மைக்காலங்களில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தொகை ரீதியான இலங்கையின் கல்வி வளர்ச்சி அல்லது விரிவாக்கம் போதியளவில் காணப்படுகின்றது. இலங்கைப் பாடசாலைகளில் கல்வி கற்கும் ஒவ்வொரு பிள்ளைக்கும் வருடாந்தம் சராசரியாக ரூ21,127 (2008) செலவிடப்படுகின்றது. ஆரம்பக் கல்விக்கென மொத்தமாக14000 மில்லியன் ரூபா வரையிலும் செலவிடப்படுகின்றது.

இத்தகைய பாரிய அரச முதலீட்டுக்கு ஏற்றதான விளைவுகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதில் இலங்கை அரசாங்கம் அதிக அக்கறை காட்டுகின்றது. இதனால் கல்வியின் தரத்தை உறுதிப்படுத்துவதில் அதீத அக்கறை செலுத்தி வருகின்றது.

**பாடசாலைகளின் குறிக்கோள்**

பிள்ளைகளை எதிர்காலத்தில் சமூகத்தினால் விரும்பப்படுகின்ற நடத்தையும், உணர்வும், நோக்கமும் கொண்டவர்களாக மாற்றுவதற்கான அறிவையும், திறன்களையும், மனப்பாங்கையும் வளர்க்கும்

சமூகநிறுவனங்களாகப் "பாடசாலைகள் முறை" கருதப்பட்டது. உளவியல் ரீதியாகவும், மனவெழுச்சி ரீதியாகவும் சிறந்த குடிமக்களாகச் சிறார்களை மாற்றுதற்கான குறிக்கோள்களை நிறைவேற்றும் சேவை நிறுவனங்களாக அவை நோக்கப்பட்டன. தனிநபர்களாக சிறார்களை ஒழுங்குபடுத்தி சிறந்த சமூகத்தைக் கட்டியெழுப்புதற்குரிய கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி, மதிப்பீடு செய்து, தொடர்ந்து முன்னேற்றங்களை உறுதிப்படுத்தும் சமூக நிறுவனமாகவே பாடசாலைகள் கருதப்படலாயின. பாடசாலைகள் பொதுவாகப் பின்வரும் குறிக்கோள்களைக் கொண்டு செயற்படுகின்றன.

**அறிவு:-**

விளங்கிக் கொள்வதற்கு தேவையான அடிப்படை அறிவை வழங்குதல். தன்னையும், சமூகத்தையும் பற்றிய புரிந்துணர்வைப் பெற்றுக் கொள்வதற்கு இது உதவுகின்றது.

**தொழில்நுட்பம்:-**

செய்வதற்குக் கற்றல் என்ற அடிப்படையில், தொழில்நுட்பம் சார்ந்ததிறன் மிக்கவர்களாவதற்கு இது உதவுகின்றது.

**ஞானம்:-**

இது உள்ளார்ந்த அறிவு வளர்ச்சியைக் குறிப்பிடுகின்றது. தனி நபர்கள் தமது முன்னுரிமைகளை ஒழுங்குபடுத்துவதற்கு இது உதவும்.

**பண்பு நலன்கள்:-**

சமூகத்தில் தனிநபர்கள் ஒவ்வொருவரும் நம்பிக்கைக்கும், மரியாதைக்குமுரிய நபர்களாவதற்கான பண்புகளை விருத்தி செய்தல் முக்கியமானது. இணங்கிச் செல்லும் பண்பை விருத்தி செய்வதன் மூலமாக சிறந்த சமூகப்பிரஜைகளாக விளங்குதற்கு பண்பு நலன்களை விருத்தி செய்தல் உதவுகிறது.

இத்தகைய நோக்கங்களுடன் பாடசாலைகள் தொழிற்படுகின்றன. பாடசாலைகள் தமது வாடிக்கையாளர்களைத் திருப்திப் படுத்தும் வகையில் தமது செயலமைப்பினை நிர்வகித்து வருகின்றன. "வாடிக்கையாளர்கள்" என்பது மாணவர், அவர்தம் பெற்றோர், எதிர்காலத்தில் அவர்களுக்குத் தொழில் வழங்கக்கூடியவர்கள், இவர்கள் அனைவரையும் கொண்ட முழுமையான சமூகம் ஆகிய அனைவரையும் குறிப்பிடுகின்றது.

பாடசாலைகள் உள்ளீட்டு - வெளியீட்டு காட்டுரு (input-output model) மாதிரியில் தொழிற்படுகின்றன. பொருட்கள், கற்பித்தலுக்குதவும் சாதனங்கள், தகவல்கள், திறன்கள் போன்றவற்றை உள்ளீடு செய்து பாடசாலைமட்ட நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் என்பவற்றைப் பாடசாலை ஒழுங்குபடுத்திக் கொள்கின்றது. பல்வேறு வகையான வளங்கள் நிர்வாகக்கட்டமைப்பு என்பவற்றையும் பயன்படுத்திக் கொள்கிறது. இதனடிப்படையில் வெளியீடுகளையும் சமூகத்திற்கு வழங்குகின்றது. சமூகத்தின் சிறார்களை உள்வாங்கி 18 வயது வரை (5+6+2 வருட) அறிவையும் திறன்களையும், மனப்பாங்கையும், சுயநம்பிக்கையையும், சமூக உணர்வையும் விருத்தி செய்து, தனக்கும் சமூகத்துக்கும் பயன்படக் கூடியவர்களாக வெளியீடு செய்கின்றது. முன்பள்ளிகள், ஆரம்பப் பாடசாலைகள்,

இடைநிலைப் பாடசாலைகள் என்பன நிரல் ஒழுங்கு முறையில் இவ்வாறு சமூக முன்னேற்றத்திற்காகவும் தேசிய அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்காகவும் செயற்படு கின்றன.

இத்தகைய பாடசாலைச் செயலமைப்பு பல கட்டங்களில் படி நிலைகளில் வளர்ச்சியடைய வேண்டியுள்ளது. அவை **அறியப்படாத நிலை (Unknown)**- செயன்முறை பற்றிய தெளிவான தீர்மானங்கள் எதுவும் நிர்ணயிக்கப்படாத நிலையில் தொழிற்படுதல். **அறிந்து கொள்ளும் நிலை (Understood)**- செயன் முறை ஒழுங்கும் வடிவமைப்பும் தெளி வாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கும் விபரமாக குறிப்பிடப்பட்ட ஆவணங் களுக்கு அமைவாகப் பாடசாலை தொழிற் படுதல்.

**விளைதிறன் மிக்கது (Effective)** செயன்முறைகள் எல்லாம் ஒழுங்கு முறையின்படி அளவிடப்படும் வாடிக்கை யாளரின் இறுதித்தேவை முழுமையாக நிறைவு செய்யப்படும். **வினைத்திறன் மிக்கது (Efficient)**- செயன் முறைகள் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும் பாட சாலையின் வினைத்திறன் மட்டம் உயர்ந் திருக்கும்.

**தவறேதுமற்றது (Error-Free)**- பாடசாலை மட்டத்தில் செயன் முறைகள் எல்லாம் மிகவும் உயர்ந்த தாக்க விளைவு களைத் தரவல்லனவாயிருத்தல். உள்ளீடு களுக்கெதிரான வெளியீடுகளின் விகிதா சாரம் (input-output ratio) மிகவும் உயர்வாயிருக்கும்.

**உலகத்தரத்திலானது (World Class)**- பாடசாலைச் செயன்முறைகள் அனைத்தும் உலகத்தரத்திற்குச் சமனானதாயிருத்தல். இச் செயன்முறைகள் தொடர்ச்சியாக முன்னேற்ற கரமான முறையில் மாற்றியமைக்கப்படுதல். இவற்றில் "தவறேதுமற்றது" என்ற நிலையே தர உறுதிப்பாடு கொண்ட நிலை என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். இந்த நிலையை உருவாக்குதல், அதனை தக்க வைத்துக் கொள்ளுதல் என்பதற்கான ஆற்றல் மிக்க முகாமைத்துவம் "தரமுகா மைத்துவம்" (Quality Management) என்று குறிப்பிடப்படுகின்றது. சிறந்த தரமுகாமைத்துவம் இருந்தால் மாத்திரமே பாடசாலைகளின் தரப்பரிசோதனை (Quality Audit) யை மிகவும் சிறப்பாகக் கையாண்டு நிறுவனத்தைத் தொடர்ச்சியாக முன்னேற்ற முடியும். அவ்வாறான இடைய றாத செயற்பாடுகளினால்தான் தர உறுதிப் பாடு (Quality Assurance) பாடசாலை களில் சாத்தியமாகும்.

**அரசாங்க முயற்சி**

இலங்கையின் பாடசாலைக்கல்வி அபிவிருத்திக்கு அதிக நிதியுதவி வழங்கி வரும் நிதி நிறுவனமாக **"ஆசிய அபிவிருத்தி வங்கி"** செயற்படுகின்றது. இந்நிறுவனம் தர அபிவிருத்தி (Quality Development) பற்றி அதிக கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது. 2007ம் ஆண்டில் ஐக்கிய இராச்சியத்தில் தர உறுதிப்பாட்டு முகவர் நிறுவனம் ஒன்று உருவாக்கப்பட்டது.

இலங்கை அரசாங்கம் 2000 ஆண்டு ஜனவரி 15ல் கல்வி அமைச் சில் மதிப்பீடு மற்றும் தர உறுதிப் பாட்டுக்கான அலகு ஒன்றை உருவாக்கி அதனூடாகக் கல்வி முறையிலான தவறு களை இனங்காண முயன்றது. பின்பு இது **"முகாமைத்துவம் மற்றும் தரஉறுதிப்பாட்டு அலகு"** எனப் பெயர் மாற்றம் செய்யப் பட்டது.

பாடசாலைக் கல்வி முறையில் உற்பத்தித்திறனையும் சமத்துவத்தையும் நிலைநிறுத்துவதற்கான நியமங்களையும், குறிகாட்டிகளையும் தயாரிப்பதில் இந்த அலகு கவனம் செலுத்தி வருகின்றது.

செயலாற்றலில் எடுத்துக்காட்டாக விளங்கிய பாடசாலைகளை முன்மாதிரியாக வைத்து தளக்குறி **(Bench mark)** களையும் உருவாக்கியது. உள்வாரியான மற்றும் வெளிவாரியான மதிப்பீட்டு உபாயங் களையும் பயன்படுத்தி பாடசாலை முகாமைத்துவத்தைத் தர உறுதிப்பாட்டு நடைமுறைகளை நோக்கித் திசைப்படுத்தி வருகின்றது.

**தரம் பற்றிய எண்ணக்கரு**

தரம் என்ற பதம் பல்வேறு இடங்களில் வெவ்வேறுபட்ட பரிமாணங்களில் விளக்கப் படத்தக்கது. கைத்தொழில் உற்பத்தி நிறுவனங்களில் கட்புலனாகக் கூடியதும், மிகச்செறிவாக ஒருங்கிணைக்கப்பட்டதும், நுட்பமான பல படிநிலைகளினூடாக உருவாக்கப்படுவதுமான பண்டங்கள் சார்ந்து தரம் என்பது விளக்கப்படுகிறது. பண்டங்கள் தேசிய ரீதியாகவும், சர்வ தேசரீதியாகவும், பரிமாற்றப்படுவதற்கு தரம் பற்றிய நியமங்களும், அங்கீகாரமும் அவசியமாகின்றது. இதனடிப்படையில் தொழிற்துறையினர் தரஉறுதிப்பாடு என்பதை உலகத்தரத்தில் பேணுவதில் ஆர்வம் கொண்டுள்ளனர். தமது முதலீடுகளுக்குரிய வருவாய் மற்றும் இலாபத்தை உறுதிப் படுத்துதல், இதற்கு அடிப்படையாக வாடிக்கையாளர் திருப்தியை உயர்ந்த மட்டத்தில் பேணுதல் என்பதிலும் கவனம் செலுத்துகின்றனர்.

கடந்த ஒன்றரை தசாப்தகாலமாக உலகமயமாதலுடன் இணைந்த வகையில் கல்வி என்பது வணிகப்பண்டமாகவும், கல்விநிறுவனங்கள் வியாபார அல்லது கைத்தொழில் மாதிரி நிறுவனங்களாகவும் அங்கீகாரம் பெற்றுள்ளன. உலகமயமாதலில் சேவைக் கைத்தொழில்களும் தகவல்தொடர் பாடல்நுட்பங்களும் வளர்ச்சி பெற்றபோது இந்த புதிய ஓட்டத்தில் கல்விக்கைத்தொழில் **(Education Industry)** முன்னொரு போது மில்லாத அளவுக்கு வளர்ச்சி பெற்றபோது, இத்துறையிலும் "தரமுகாமைத்துவம்" மற்றும் தரஉறுதிப்பாடு" என்பதும் முக்கியத்துவம் பெற்றுவிட்டது.

"தரம்" என்ற பதம் செயலாற்றத்தின் உத்தம சிறப்புநிலை பற்றிய எண்ணத் தையும் செயலையும் ஒன்றிணைத்த வகையில் குறிப்பிடுகின்றது. பாடசாலைகள் செயற்படவேண்டிய அளவுக்கு, இலக்கை அடையும் அளவிற்குத் தொடர்ந்து பேணக்கூடிய அளவுக்குத் முதல்முயற்சி யிலேயே தவறேதுமின்றிச் செயற்படும் நிலையைக்குறிப்பிடுகின்றது. விரயமில்லாது நிறுவனங்கள் தொடர்ந்து செயலாற்று

வதையும் மாணவர்களைத் தொடர்ந்து திருப்திப் படுத்தும் வகையில் இயங்குவதையும் குறிப்பிடுகின்றது. மாணவர் திருப்தி என்பதும் கல்வி முதலீட்டுக்குரிய பயன்பாடு என்பதும் அடையப்பட வேண்டும். இரண்டும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் என்பதை உணர வேண்டும். பாடசா லைகளின் குறிக்கோள்களைத் தெளிவாக விளங்கிக் கொண்டு செயற்படும் போதே தவறேதுமின்றிச் செயற்படும் முனைப் புடன் கல்வியின் எல்லாச் செயன் முறைகளிலும் கவனம் செலுத்துவதையே தரம் என்பது குறிப்பிடுகின்றது.

ஊழியருக்கான சுதந்திரம், பயிற்சி என்பவற்றில் அதிக கவனம் செலுத்து வதனூடாகவும், தொழிலிட வசதிகளை மேம்படுத்துவதனூடாகவும் கற்றல்-கற்பித்தல் சேவையின் தரம் உயர்த்தப் படவேண்டும் என்பதையும் இதில் பாடசாலை முகாமைத்துவம் தீவிர அக்கறை செலுத்த வேண்டும் என்ப தையும் வற்புறுத்துகிறது

## தரமுகாமைத்துவம்
## (Quality Manage ment)

தரஉறுதிப்பாடு என்பது பின்வரும் ஆறு தகுதிப்பண்புகளைக் குறிப்பிடு கின்றதென முகாமைத்துவ விஞ்ஞா னிகள் கருதுகின்றனர். கல்வி நிறுவனங் களின் குறிக்கோள்கள் பின்பற்றப் படுவதில் உள்ள பொருத்தப்பாடு, ஏற் படுத்தப்பட்டுள்ள நியமங் களின் பொருத் தப்பாடு முகாமைத்துவ வழி காட்டல் களின் பயன்பாடு சிறந் ததரத் தை ஊக்குவிப்பதற்கான பயனுறுதிமிக்க செயன்முறை ஒழுங்குகள் (Proce dures), மதிப்பீட்டுச் செயன் முறையின் பயன் பாடு, நடைமுறைகளை மேம்படுத்து வதில் காணப்படும் முழுமையான தாக்கவிளைவுகள், இவற்றைப் பாடசாலை களில் நிலைநிறுத்துவதற்கான முகாமைத் துவத்திறன்கள் கல்வி முகாமைத்து வத்திறன்கள் கல்விமுகாமைத்துவத் துறையினருக்கு அவசியமாகின்றன. தர முகாமைத்துவம் என்பது பாடசாலை மட்டத்தில் தொடர்ச்சியாக முன்னேற்றங் களை ஏற்படுத்திக் கொள்வதாகும். இதில் மூன்று பிரதான நடவடிக்கைகள் அவசியமாகின்றன.

கல்வி நிறுவனங்களின் குறிக்கோள் களையும் நியமங்களையும் தெளிவாக உருவாக்குதல் அத்தகைய குறிக் கோள்கள் மற்றும் நியமங்கள் தொடர்பாக நிறுவன நடவடிக்கைகளை மதிப்பீடு செய்தல் தொடர்ச்சியாக எல்லா நடை முறைகளையும் முன்னேற்றுதல். கல்வி நிறுவனங்கள் ஒவ்வொன்றும் தரஉறுதிப் பாடு, தரமுகாமைத்துவம் என்ற இரண்டையும் நன்கு மதிப்பீடு செய்து கொள்வதற்கான அணுகுமுறை அவ சியம். அது "தரப்பரிசோதனை" (Quality Audit) என்றழைக்கப்படுகிறது. இதற்குப் பல்வேறு கருவிகளையும் கையாள வேண்டியுள்ளது. அவை: கல்வி நிறுவ னங்களின் தொலைநோக்குப் பற்றிய கூற்று (Mission Statement) கல்வி நிறுவனங்களின் முகாமைத்துவத்தின் செயற்பாடுகள்பற்றிய திட்டம் (Management map), தர உறுதிப்பாடுகள் சார்ந்த செயன்முறைகளைப்

பரிசீலனை செய்தல் (procedures), தர உறுதிப்பாட்டு செயன்முறைகளை நியாயப் படுத்து வதற்கான தகுதி விதிகளை வரையறை செய்து கொள்ளுதல் (Cretaria for Judgement), செயன்முறைகளின் தாக்க விளைவுகளுக்குரிய சான்றாதா ரங்களை உருவாக்குதல் (Evidences), இவற்றைப் பயன்படுத்தி கல்வி நிறுவ னங்கள் ஒவ்வொன்றும் எவ்வாறு மிகச் சரியாகச் செயற்படுகின்றன, அவற்றின் தாக்க விளைவுகள் எவ்வாறுள்ளன? என்று கண்டறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

இன்று பாடசாலைகள் மட்டுமன்றி பல்கலைக்கழகங்களும் தமது நடவடிக் கைகள் தொடர்பான முகாமைத்துவத் தேவை கருதி பின்வரும் மூலங்களில் கவனம் செலுத்த வேண்டும் என வற்புறுத்தப் படுகிறது. அவை கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்கள் (Educational Progra mmes), ஆராய்ச்சி- பாடசாலைகளில் செயல்நிலை ஆய்வு (Educational Research), சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்தல் (Service to Community), கல்விசார் ஊழியர்கள் (விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரியர்கள்) மற்றும் பொதுவான பதவிநிலையில் இருப்ப வர்கள் (Staff), மாணவர்கள்- அவர்களது கற்றல் மற்றும் ஏனைய செயற்பாடுகள் (Students), கல்விசார் துணைச்சேவைகள், பல்வேறு வகையான வளங்களும், சொத்துக் களும் (Resources and Assets). பொதுவான ஆளுகை முறை (Governance), இவற்றில் முதல் மூன்று அம்சங்களும் ஏனையவற்றைவிட அதிக முக்கியத்துவம் கொண்டவை.

பாடசாலைகள் ஒவ்வொன்றும் தமது செயற்பாடுகளின் தரத்தை முன்னேற்று வதனால் நிர்வாகப் பொறிமுறையில் சிறந்த நடைமுறைகளிலிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். இதற்கு ஏற்றதாக நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர் பான விதிகளையும், சட்டங்களையும் உருவாக்கிக் கொள்வதும், நடைமுறைகள் தொடர்பான நன்நடத்தை நியமங்களை ஏற்படுத்திக் கொள்வதும் அவசியமாகும். அதே போன்று பணி இலக்குகளையும் பொருத்தமுடைய வகையில் தீர்மானித்துக் கொள்வதில் கூடிய அக்கறை செலுத்த வேண்டும்.

பாடசாலைகள் பொதுவாகத் தொழில் வாய்ப்புக்குரிய நிறுவனங்களாக இலங்கை போன்ற நாடுகளின் அரசாங்கங்கள் கருதுவதனால் பாடசாலைகள் ஊழியச் செறிவானவையாக விளங்குகின்றன. மாணவர்கள் மற்றும் பாட ஏற்பாடுகளின் அடிப்படையில் ஆசிரியர் பற்றாக்குறை சிலசமயங்களில் தென்படுவதுமுண்டு. செலவு அடிப்படையில் நோக்கும் போது, ஆசிரியர்கள் தமது பணிக்காலம் முழு வதிலும் பெறக்கூடிய வேதனச்செலவுகள், கல்வி நிறுவனங்களில் முடக்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் மீதான நிலையான செலவுகளுடன் ஒப்பிடும் போது மிக அதிகம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். இலங்கை போன்ற நாடுகளின் அரசவரவு - செலவுத்திட்டங்களில் கல்வித் துறைச் செலவுகளிலும் அரசின் மொத்தச் செலவீனங்களிலும் கூட ஆசிரியர்

சம்பளங்கள் குறிப்பிடத்தக்கனவாயுள்ளன. இத்தகைய செலவுக்குரிய பயன்பாடு பெறுவதை உறுதிப்படுத்துவது தர உறுதிப் பாட்டு எண்ணக் கருவில் முக்கியமானது.

இதற்காக ஆசிரியர்களுடைய வேலை பற்றிய எதிர்பார்க்கை மற்றும் சம்பள அடிப்படையிலான வேலை நியமம் என்பவற்றுக்கு ஏற்ற அளவில் மணித்தியால அடிப்படையிலும், பண்புநல அடிப்ப டையிலும் ஆசிரியர் பணி தொடர்பாக மதிப்பீடு செய்து கொள்வது மிகவும் அவசியமாயுள்ளது. பாடசாலைகளில் வயது முதிர்ந்த சிரேஷ்ட ஆசிரியர்கள், நீண்ட தூரம் தினமும் பயணம் செய்து பாடசாலை வரும் ஆசிரியர்கள், நோயினால் பாதிக்கப்படும் ஆசிரியர்கள், மன அழுத்தங்களினால் மிகவும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் போன்றவர்களின் வேலை தொடர்பான வினைத்திறன், விரயங்கள் ஏனைய வருடன் ஒப்பிடுமிடத்து அதிகமாகி விடுகின்றது. பெரிய கைத்தொழிற் சாலைகளில் வேலைசார் வினைத்திறன், விளைதிறன் என்பவற்றில் பொறியங்கள், இயந்திரங்கள், வலுவிநியோகங்கள் என்பன எவ்வாறு மையக்காரணிகளாக விளங்கு கின்றனவோ அதேபோல் பாடசாலைகளில் ஆசிரியர்களின் வேலை தொடர்பான தர உறுதிப்பாடும் மிகவும் முதன்மையுடையது.

இதனடிப்படையில் ஆசிரியர்களுக் குரிய முன்னாரம்பப்பயிற்சி, சேவைக்காலப் பயிற்சி, விஷேடவலுவூட்டற் பயிற்சி என்பன எந்தளவு ஒழுங்காகவும், வினைத் திறனுடையதாகவும் வழங்கப்படுகின்றது என்பதைப் பொறுத்தே ஆசிரியர்களின் வேலைகளின் தரநிலையில் முன்னேற்ற ங்கள் ஏற்படுகின்றன. பாடசாலைகளில் ஆசிரியர்கள் தமது வேலைகளில் உச்சப் பயன்பாட்டை உறுதிப்படுத்துவதனால் அவர்களின் வேலை செய்யும் திறன்கள் மேம்படுவது மாத்திரம் போதுமானதன்று. உண்மை ஈடுபாட்டுடன் பணியாற்று வதற்கான உளரீதியான ஒழுங்கு முறையும் ஊக்கமும் முக்கியமானவை. தமது முழு அறிவையும் திறன்களையும், ஈடுபாட்டையும் ஒன்றிணைத்துப் பாடசாலையில் தமக்கென ஒதுக்கப்பட்ட வேலைகளை உத்தம மட்டத் தில் மேற்கொள்வதற்குப் பொருத்தமான ஊக்குவிப்புகளும், வெகுமதிகளும் வழங் கப்படல் வேண்டும். இவற்றைப் பொருத்த மான முறையில் வடிவமைத்துத் தேவை களுக்கு ஏற்றதாக நடைமுறைப்படுத்தி வருவதும் அவசியமாயுள்ளது.

இத்தகைய மதிப்பீடுகள் ஒழுங்கான கால இடைவெளியில், நன்கு தீர்மானிக் கப்பட்ட அடிப்படையில் இயன்றளவு ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையினரான தனிநபர்களினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். குழுரீதியில் தரநிலை மதிப்பீடு செய்யப்படும் ஏற்பாடுகளுக்குப்பின் குழுவில் நியமிக்கப்படுபவர்கள் தெளி வான தீர்மானங்களின் அடிப்படையில் நியமனம் பெற வேண்டும். மதிப்பீட்டை மேற்கொள்பவர் எவ்வகையிலும் முற்சாய் வுடையவராகவோ, மதிப்பீட்டுக் கருவிகள் மற்றும் முறைகள் பற்றி போதிய தகைமை பெறாதவராக இருத்தலாகாது என்பதைப் பாடசாலைகள் உறுதிப்படுத்திக் கொள்வது மிகவும் முக்கியத்துவமுடையதாகும்.

தர நிலையை மதிப்பீடு செய்வதற்கு மிகவும் பொருத்தமான அளவிடும் கருவிகள் (Parameters) தேவை. இவை

தெளிவான கொள்கை மற்றும் மாதிரிகையின் அடிப்படையில் உருவாக்கப்படுதல் வேண்டும். இவை ஆசிரியர்களின் பாட சாலை மட்டப்பணிகளை மதிப்பிடுவதில் விளைதிறன்மிக்க வகையில் கையாளப் படுதல் வேண்டும். பின்வருவன இவ்வாறு தரநிலையை மதிப்பிடக் கூடிய சில அளவிடும் கருவிகள் ஆகும். இவை வினாவடிவில் தரப்படுகின்றன. அவை வகுப்பறைகளில் ஆசிரியர்களின் ஆற்றுகை திருப்திகரமானதா? விரிவு ரைகளில் உள்ளடக்கப்படும் தகவல்களின் தொகை எத்தகையது? வகுப்பறை மட்டத்தில் காணப்படும் மாணவர் சித்திகளின் எண்ணிக்கையாது? சர்வதேச ரீதியில் தரப்படுத்தும் போதுள்ள மாணவர் நிலை யாது? மாணவரது கற்கும் பாணி (styles)கள் பற்றிய பகுப்பாய்வு முறை யாது? மாணவர்கள் பாடசாலைகளின் வாடிக்கையாளர் என்ற நோக்கில் ஆசிரியர் கற்பித்தல் தொடர்பாக மாணவரது திருப்தி (பல சமயங்களில் பெற்றோர் திருப்தியுடன் இணைந்து) சர்வதேச ரீதியில் ஒப்பிட்டு நோக்கப்படும் போக்கு அண்மைக் காலங்களில் அதிக முக்கியத்துவம் பெற்று வருகின்றது. கல்வியியல் சார்ந்த பல்வேறு ஆய்வுகள் தற்போது மாணவர்களதுகற்கும் பாணிகள் வேறுபடுவதற்கேற்ப கற்றலின் தரம் வேறுபடுவதையும் அவற்றினூடாக ஆசிரியர் தரநிலையை மதிப்பிட முடியும் என்று கண்டறிந்துள்ளனர்.

### தரஉறுதிப்பாடு (Quality Assurance)

தரஉறுதிப்பாடு பற்றி சிந்திக்கும் போது பாடசாலைமட்டத்தில் தரமுகா மைத்துவம் மற்றும் தர உறுதிப்பாடு தொடர்பான புலக்காட்சி எவ்வாறு காணப்படுகிறது என்பது அவசியம். ஏனெனில் அதனடிப்படையில் அதன் சர்வதேச அளவுக் கருவிகளின் தன்மையும், எண்ணிக்கையும், பிரயோக, ஒழுங்கும் தீர்மானிக்கப்படுகின்றது.

பாடசாலைகள் ஒவ்வொன்றும் தமது தொழிற்பாடுகள் தொடர்பான தர உறுதிப்பாட்டை மதிப்பீடு செய்து கொள் வதற்குப் பொருத்தமான பரிசோதனை உபாயம் (Audit Strategy) ஒன்றை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். எத்தகைய குறிக்கோள்களுடன் பரிசோத னைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதற்கு மிகச்சரியான நியாயப்பாடு (Rationale) அவசியமாகின்றது. பாட சாலை முகாமைத்துவத்தின் பலமான அம்சங்கள் பற்றி அளவீடு செய்து கொள்வது தரப்பரிசோதனையின் அடிப் படையான குறிக்கோளாக அமை கின்றது. ஒன்றுக்கு மேற்பட்ட பாடசாலைகள் பலதன்மைகளில் ஒத்த தன்மைகளைக் கொண்டிருக்கும் நிலையில் அவற்றை ஒப்பீட்டு அடிப்படையில் பரிசோதனை செய்வது மிகவும் பொருத்தமான முறையாகக் காணப்படுகின்றது.

ஒவ்வொரு பாடசாலையும் தான் சென்றடைய வேண்டிய இலக்கு பற்றியும் அதற்கு கையாளப்படும் வழிமுறை பற்றி யும் பரிபூரணஅறிவையும் விளக்கத் தையும் கொண்டிருப்பது முதலில் உறுதிப் படுத்தப்படவேண்டும். சிறந்த செயலாற்றம் என்பது கொண்டிருக்க வேண்டிய பண்புகள் யாவை என்பது பற்றியும் தெளிவான

எண்ணக்கருக்களைக் கொண்டிருக்க வேண்டும். இதில் பாடசாலை ஒவ்வொன்றினதும் இயலுமைகள் (capacities) இனங்காணப்படுவதும், அவை குறிக்கோள்களுடன் மிகச்சரியாக பிணைக்கப்பட்டிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதும் முக்கியமாகும்.

பாடசாலைகள் எத்தகைய விளைவுகளை (Outcomes) உருவாக்குகின்றன என்ற வினாவுக்கு கிடைக்கும் விடைக் குரிய அங்கீகாரம் எவ்வாறமைகிறது என்பது முக்கியமானது. இது பாடசாலைகள் தமது தொலை நோக்கு, அதை அடைவதற்கான முயற்சியிலான உண்மை, அர்ப்பணிப்பு என்பவற்றில் எந்தளவு முனைப்புக் கொண்டுள்ளன என்பதில் தங்கியுள்ளன.

இதேபோல் தமது குறிக்கோள்களை அடைதற்கான செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்படும் முறை என்பதும் மிகவும் முக்கியமானது. இது பாடசாலைகள் பின்பற்றும் செயலொழுங்கு அல்லது படிநிலையிலமைந்த செயல்கள் (Procedures) என்பதைக் குறிப்பிடுகின்றது. பாடசாலை தமது குறிக்கோள் நியமங்கள் (Goals and Standards) என்பவற்றை எத்தகைய ஒழுங்கின் படி உருவாக்கின? மதிப்பீடு செய்வதற்கான நடைமுறைகளைச் செம்மைப்படுத்துவதற்குக்கையாளும் வழிமுறைகள் எவை? போன்ற வினாக்களுக்கு விடைதரும் போது ஈடுபாடு நிறைந்த, செயலமைப்பு மாதிரியிலான வழிமுறைகள் பின்பற்றப்படுவது உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

பாடசாலையில் பணியாற்றும் ஆசிரியர்களும், துணைநிலை அலுவலர்களும், முகாமையாளர்களும், சிற்றூழியரும் பொறுப்புணர்வுடனும், அக்கறையுடனும் எல்லா நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதைப் பாடசாலை முகாமைத்துவம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இவர்களது இயலுமைகள், அதனை பாடசாலைத் தேவைக்காகப் பயன்படுத்துவதற்குக் கிடைக்கும் வாய்ப்புக்கள், அதனை நிறைவாக மேற்கொள்வதற்குக் கிடைக்கும் ஊக்குவிப்புக்கள், முக்கியத்துவமுடையன. மதிப்பீடு செய்யப்படுகின்ற பாடசாலை மட்டத்தின் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் தமக்கிடையே பிணைப்பைக் கொண்டுள்ளன. இவைபற்றி நன்கு ஒழுங்கமைந்த தரவுகளைச் சேகரிப்பதும், விளக்கமளிப்பதும் அவசியமாயுள்ளது. தரவுகள் போதியளவில், ஒழுங்குமுறையில், தொடர்ச்சியாகச் சேகரிக்கப்படாதபோது அவற்றினடிப்படையில் அளிக்கப்படும் விளக்கம் உண்மையான தரநிலையை வெளிப்படுத்த முடியாது.

மதிப்பீடுகள் ஒவ்வொன்றும் மிகவும் துல்லியமானதும் ஏற்கத்தக்கதுமான சான்றாதாரங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். மதிப்பீட்டை மேற்கொள்ளும் மேலா ளரின் உள்மன சுயமதிப்பீடாக இருப்ப தைத் தவிர்த்துக் கொள்வதும் மிகவும் அவசியமாகின்றது. சான்றாதாரங்களின் வலுவான தன்மை என்பது மதிப்பீட்டின் தரத்தை உயர்த்திவிடும் என்பதை மதிப்பீட்டாளர் விளங்கிக் கொள்ள வேண்டும்.

உண்மையில் தரஉறுதிப்பாடு சிறந்த தரமுகாமைத்துவத்தில் தங்கியுள்ள தென்பதால், தரமுகாமைத்துவம் தனது தொலைநோக்கு, குறிக்கோள், நியமங்கள் என்பவற்றின் பொருத்தப்பாட்டை உறுதிப்படுத்துவதிலும், முகாமைத்துவத்திட்ட ஒழுங்கின் பயன்பாட்டை வலியுறுத்துவதிலும், செயல் ஒழுங்குகள் ஒவ்வொன்றிலும் தரமான சிறந்த நடைமுறைகளை உறுதிப்படுத்துவதிலும், எதிர்கால நடைமுறைகளை மேம்படுத்துவதற்குரிய உள்ளடங்கிய திறனை அதிகரிப்பதிலும் கவனம் செலுத்தி வருவது மிகவும் அவசியமாகும்.

**முடிவுரை**

இலங்கைப்பாடசாலைக் கல்வியிலான முதலீடுகளுக்குரிய விளைதிறனை அதிகரிப்பது அவசியமென்பதால் தரஉறுதிப்பாடும் அவசியம்.

பொதுமக்களின் வரிப்பணத்தில் வழங்கப்படும் பொதுக்கல்வியில் தரஉறுதிப்பாடு நிச்சயிக்கப்படாவிடில் அரசநிதி விரயமாகிவிடும்.

இதனால் பாடசாலை முகாமைத்துவத்தில் குறிக்கோள், அணுகுமுறை, உபாயம், நுட்பசெயற்பாடுகள், தலைமைத்துவம் போன்ற பலவற்றையும்தரமுயர்த்துவதில் தொடர்கவனம் செலுத்தினால் மாத்திரமே தரஉறுதிப்பாட்டைத் தொடர்ந்து பேணுதல் சாத்தியமாகும்.

# Good Food Habits

Miss.P.Kajani
Grade 7B



We should eat wholesome food. It must have all the main nutrients. We should eat our meals at regular intervals. We must keep cooked food covered. We shouldn't eat between main meals. We shouldn't eat too many sweets and chocolates. They will give us toothache.

We should eat more of vegetables and washed well before cooking. They should be cooked only for a short time. Otherwise the vitamins in them will be lost. We mustn't skip our breakfast as it is the most important meal. We must drink a lot of water. We should boil water before drinking. At the dinners table we shouldn't talk much. We mustn't spill food everywhere. We should use separate spoons for different dishes. We shouldn't drink water while eating. An apple a day keeps the doctor away. So we should eat some fruits every day.

# ஆசிரியர் வாண்மை விருத்திக்காகப் பாடசாலைகள் பாத்திரமேற்றல்

திரு.பா.தனபாலன்,
இணைப்பாளர்,
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி.



ஆசிரியர்கள் தம்வசமுள்ள கல்வி என்ற ஒளித்தாரை வாயிலாக வகுப்பறை, பாடசாலை, சமூகம் பூராகவும் வியாபித்துள்ள இருளினை அகற்றுவதற்காக ஒவ்வொரு மாணவனையும் ஒளிரும் தீபங்களாக்க வேண்டியுள்ளது. இப்பணியினூடாக மாணவர்களை இனங்கண்டு அவர்களது கல்வி வாழ்க்கையைப் பாடசாலை விருப்பத்துக்குரியதாக்கி ஒழுக்கத்துடன் மிளிரச்செய்யும் நல்லாசிரியரே குருதேவர்கள். பாடசாலை வகுப்பறையை தம் வாழ்க்கையின் ஒரு முக்கிய அங்கமாக மாற்றிக்கொள்ள வேண்டும். ஒளிரும் தீபத்தினாலேயே இன்னொரு தீபத்திற்கு ஒளியேற்ற முடியும்.

தேசவிடுதலை நோக்கியும், புரட்சிகரமான இலட்சிய ரீதியான எதிர்காலவியல் நோக்கில் மாற்றமும் அபிவிருத்தியும் அடைந்துவரும் கல்வி உலகில் ஆசிரியப் பாத்திரத்தின் மகிமை தொடர்ந்து உயர்ந்து கொண்டே செல்கின்றது. ஆசிரிய-மாணவ உயிர்ப்பான மானிட உறவின் மூலமாகவே மெய்யான கற்றல் நிகழ்வதை நவீன உளவியல் ஆய்வு முடிவுகள் உறுதிப் படுத்துகின்றன.

## பாடசாலைகளை ஆதாரமாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி

கல்வி ஓர் அடிப்படைத் தேவையும், அடிப்படை உரிமையுமாகும். கல்வியை வழங்குகின்ற பிரதான மானுட அமைப்பு பாடசாலையாகும். அதனை நடைமுறைப் படுத்தும் மானிடர் ஆசிரியர் ஆவார். மாணவச்செல்வங்களை நாட்டுக்குத் தேவையான பயனுறுதிமிக்கோராக மாற்றும் முழுப்பொறுப்பும் ஆசிரியரையே சாரும். ஆசிரியப் பணியைச் சீரானவகையில், சமூகம் எதிர்பார்க்கும் விதத்தில் நிறைவு செய்வதற்காக ஆசிரியர் எப்போதும் தம் கற்றல் திறன் தேர்ச்சியையும், மனப் பாங்குகளையும், தொடர்ச்சியாக வலுவூட்ட வேண்டும். கல்வியினால் எதிர்பார்க்கப்படும் எந்த ஒரு குறிக்கோளையும் அடைவதற்கான செயன்முறையின்பால் மாணவரை வழிப்படுத்துபவர் ஆசிரியர் ஆவார். அதனாலேயே ஆசிரியர் கல்வியின் இதயம் எனக் கருதப்படுகின்றார்.


பாடசாலைத் தொகுதியில் இடம் பெற்றுவரும் பல்வேறு மாற்றங்களை எதிர் கொண்டு, சவால்களை வெற்றி கொள்வ தற்காக ஆசிரியர் எப்போதும் தனது தொழில்சார் விருத்திச் செயன்முறையில் ஆர்வத்துடன் ஈடுபட வேண்டும். கல்விச் செயன்முறையானது விஞ்ஞானபூர்வ செயன்முறைகளைக் கடந்து, ஆசிரியர் மானுடவியல் செயன்முறையாக மலர்ந் துள்ளது. எனவே அதனை நெறிப்படுத்து வோராகிய ஆசிரியர் பலசவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதற்குப் பாடசாலைகளை ஆதாரமாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்திச் செயலமர்வுகள் பல வழிகளைக் காட்டுகின்றன.

அறிவும் தேர்ச்சிகளும் துரிதமாக விருத்தியடைந்துவரும் இன்றைய யுகத்தில் புத்தறிவினால் யோசித்து வரும் இன்றைய மாணவர்களுக்கு எதிர்கால வாழ்க்கை, தொழில் உலகுக்குத் தேவையான தேர்ச்சி களை வழங்குவதே இன்றைய ஆசிரியர் களின் முக்கிய பணியாகும். இதற்கு ஆசிரியர்கள் தம் அறிவையும், தேர்ச்சி களையும் இற்றைப்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்குக் கல்வியின் நவீன தொழில்நுட்பங்களை, புதிய வழிகளைக் கற்றுப் பிரயோகித்தல். தமது அறிவையும், அனுபவங்களையும் மீள்பயிற்சி, தொடருறு மூலம் மீள உயிர்த்தெழச் செய்தல்.

**கற்றலுக்குக் கற்றலுக்கான தேர்ச்சிகளை விரிவாக்குதல்**

எதிர்பாராத வகையில் எழும் பிரச்சி னைகள், சவால்களைத் தீர்க்கும் நெருக்கடி முகாமைத்துவ நுட்பங்களை நடை முறைப் படுத்தும் திறன்பெறல். நவீன உளவியல், தத்துவார்த்தங்களைக் கற்றுப்பிரயோகித்தல், பாடசாலையை ஆதாரமாகக் கொண்ட பல்வேறு ஆய்வுகளையும், தமது வாண் மையை விருத்தியாக்கும் செயலாற்று கைகளையும் மேற்கொள்ளல், தமது தொழில்சார் கல்வி உயர் தகவல்தொழில் நுட்பக்கல்விகளை மேலும் உயர்த்திக் கொள்ளல். மேற்குறிப்பிட்ட வகையில் ஆசிரியர்கள் தமது வாண்மையினை உயர்த்தப் பாடசாலையை ஆதாரமாகக் கொண்ட ஆசிரியர் வாண்மைவிருத்தி **"வேலைத்திட்டச் சக்கரம்"** வழிகாட்டு கின்றது.

**ஆசிரியர் வாண்மைவிருத்தி வேலைத்திட்டச் சக்கரம்**



நவீன இவ் வேலைத்திட்டச் சக்கரத்தின்படி இயங்கு நிலையிலுள்ள பாடசாலை என்ற நிறுவனத்தில் செயற்படும் எல்லா ஆசிரியர்களையும் பயிற்றுவிப்பதே அன்றித் தனியாட்களை அல்ல. மேலும் பாடசாலை மட்ட ஆசிரியர்களின் முழுமையானவிருத்தி, ஆசிரியர் குழாத்தின் அங்கத்தவர்களுக் கிடையிலான தொடர்புகளின் விருத்தியே கூடுதலாக எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில் பாடசாலைகளின் பெருமளவு வினைத்திறன் குறைவுக்குக் காரணம் குறித்த பாடசாலை ஆசிரியர்களிடையே நிலவும் புரிந்துணர்வின்மை, முரண்பாடுகளே எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதை நீக்கப் புறவாரியாக வேறு ஒரு நிறுவனத்தில் வழங்கும் பயிற்சியை விட, பாடசாலைகளிலேயே ஆசிரியர்கள் அனைவரும் ஒன்று சேர்க்கப்பட்டு வாண்மை விருத்திப் பயிற்சியை வழங்குவதையே மேற் குறித்த "வேலைத் திட்டச் சக்கரம்" குறித்து நிற்கிறது. இதற்கு பாடசாலை அதிபர், பணிப்பாளர்கள் புரிந்துணர்வுடன் ஒன்று சேர வேண்டியுள்ளது. அத்துடன் பின்வரும் பண்புகள் முக்கியம் பெறுகின்றன.

**ஆசிரியர் அபிவிருத்திக்காகப் பாடசாலைகள் தலைமை ஏற்றல்**

இதற்கு அமைவான பாடசாலைக் கொள்கைகளையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் உருவாக்குதல். ஆசிரியர் அபிவிருத்திக்குப் பொருத்தமான சூழ்நிலைகளைப் பாடசாலையில் ஏற்படுத்திக் கொடுத்தல். பாடசாலையின் வினைத்திறன்-விளைதிறனை விருத்தி செய்யக் கூடிய இசைவுடைய ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை உருவாக்கல்.

ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து செயலாற்றுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல், ஊக்கங்களை வழங்குதல்.

**தரமேம்பாட்டு செயலாற்றுகைகள்**

இன்று பாடசாலைகளில் வழங்கப்படும் கல்வி தொடர்பாக ஆசிரியர்கள் மட்டுமன்றி, பெற்றோர்களும் சமூகத்தவர்களும் பங்கு கொண்டு ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியுள்ளனர். பாடசாலைகளில் காணப்படும் இந்த நிலையானது ஆசிரியர்கள் மீது புதிய சவால்களை அதிகரித்துள்ளது. ஆசிரியர்களின் விரிவாக்கப்பபட்ட வாண்மை பாடசாலையை அடித்தளமாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி (School Based Staff Development) என்பனவற்றினூடாக ஆசிரியர் கல்வி அபிவிருத்திக்குப் புதுப்புது அர்த்தங்களும், செயலாற்றுகைகளும் கிடைத்த வண்ணமுள்ளன.

வகுப்பறையில் ஒரு சிறப்பறிஞராகக் கடமையாற்றிவரும் ஆசிரியர், பாடசாலையை ஒரு நிறுவனமாகக் கொண்டு விளங்கிச் செயலாற்றப் பாடசாலையின் விழுமியத்தொகுதி, சட்டத்தொகுதி, முகாமைத்துவத்தொகுதி, பாரம்பரியத்

தொகுதி, சமூகத்தொகுதி, தேசிய- சர்வதேசியத்தொகுதி வரை விளங்கி நடக்க வேண்டியுள்ளது. இதற்கு- கல்வி, வாண்மை, தேர்ச்சிகளை விரிவாக்கும் செயலாற்றுகைகள், அர்ப்பணிப்பு, வகை கூறல், உடன்பாடான இசைவு, ஆற்றுப் படுத்தல் - சீர்மியம், ஆக்கத்திறன்களை ஏற்படுத்தும் செயலாற்றுகைகள், குழுவு ணர்வு, குழுச்சிந்தனை தொடர்பான உயிர்ப்பான மனிதத்தத்துவச் செயற் பாடுகள், பாடசாலையைக் கற்கும் ஒழுங்க மைப்புக்குள் உள்ளாக்கும் முகாமை த்துவத் தேர்ச்சிக் கருத்தரங்குகள், ஆசிரியர்களின் இணைவு, முரண்பாடு தீர்த்தல், பிரச்சினைதீர்த்தல் வேலைத் திட்டங்கள்.

பாடசாலை ஓர் உயிர்ப்பான ஒழுங் கமைப்பாகும். அவ்உயிர்ப்பான ஒழுங்க மைப்புக்கே உரித்தான பிரச்சினைகள், அங்கேயே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற தேவை, அதற்கான உண்மை, முயற்சி, இதற்குத் தேவையான பண்பாடு, எமது பாடசாலைகளில் எந்த அளவு காணப்படுகிறது? இதைத் தீர்க்கும் போது பாடசாலையின் வெளியீடுகள் அதி கரிக்கும். பெறுபேறுகள் அதிகரிக்கும். இவ் அடிப்படை நவீன ஆசிரியர்கல்வி பல பரிமாணங்களில் விரிவடைந்து வருகின்றது. கற்பித்தல் தேர்ச்சித் திறன்கள், வாண்மை, தனிப்பட்ட குண நலன்கள், விழுமியங்கள் என்பவை பற்றி நிலவும் புதிய தேவைகளுக்கு ஏற்ப ஆசிரியர்களுக்கான நவீன வெளியீடு கள், செயலாற்றுகைகள் நடைமுறைக்கு வருகின்றன. கல்வியின் புத்தாளர் களாகவும், சமூகமாற்றத்தின் முகவர்களா கவும் செயலாற்றும் ஆசிரியர்களின் பாடசாலை ஆதார வகிபாகத்தை உறுதிப்படுத்தும் பல்லூடக வெளிப் படுத்தல்கள் (Multimedia Presen tation) வெளிவந்து கொண்டிருக்கி ன்றன. இவை அணிக் கலந்துரை யாடல்களாக, சிந்தனைக் கிளறல்களாக, குழுநிலைச் செயற்பாடுகளாக, ஒப்படை களாக, விடய ஆய்வுகளாக, பாத்திர மேற்று நடித்தலாக, பிரச்சினை தீர்த்தல் முறைகளாக, கண்டுபிடித்தல், செய்து காட்டல், தரவட்டங்கள், வெளிக்கள ஆய்வு விடயங்களாக நடைமுறைப்ப டுத்தப்படுகின்றன.

**அதிபர், ஆசிரியர், நிலையம், தேசியகல்வி யியற் கல்லூரிகளின் பங்கு**

பாடசாலைகளில் பிரயோகிக்கக் கூடிய ஆசிரியர்வாண்மை அபி விருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக அதிபர்கள் விழிப்புடன் செயலாற்ற வேண்டும். கல்விசார் உள்ளடக்க ஆசிரியர்கள் கூட்டங்கள், பாடசாலை ஆதாரசெயற்பாட்டு ஆய்வுகள், கற்றல், கற்பித்தல், தொழில்நுட்பம்சார் சந்தர்ப் பப்பகிர்வுகள், களச்சுற்றுலாக்கள், விசேட முகாமைத்துவச் செயலாற்றுகைகள் மூலம் அதிபர்கள், ஆசிரியர்களுடன் இணைந்து செயலாற்றி அவர்களைப் பாடசாலை அபிவிருத்தியின்பால் ஒன்றிணைக்க வேண்டும். இதற்கு

ஆசிரியநிலையத்துடனான, வலயக் கல்வி அலுவலகத்துடனான தொடர்பை அதிபர்கள் வலுவுள்ளதாக்க வேண்டும். ஆசிரிய நிலையங்களும், வலயக்கல்வி அலுவலகங்களும் அதிபர்களை ஒதுக்கி வைத்து ஆசிரியர்களிடத்தே வாண்மை விருத்தியை ஏற்படுத்த முடியாது. எனவே அதிபர்களின் தொடர்தொழில்சார் விருத்தியிலும் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

அதிபர் தொடர்ந்து விருத்தி அடைவாரானால், அதன் பெறுபேறு ஆசிரியர்களுக்கு மிகத்துரிதமாகக் கிடைக்கும். பாடசாலையின் அன்றாடச் செயற்பாடுகள், விசேடஉத்திகள், முறைமைகள், பிரச்சினை தீர்வுகளுக்கான வாய்ப்புக்கள் பற்றிய சரியான திறன்களை அதிபர் பிரயோகிக்க, அதிபர்களுக்கான ஒன்றிணைவுகள், களஆய்வுகள், சுற்றுலாக்களை ஆசிரியர் மையங்கள் ஒழுங்குபடுத்தலாம். இவற்றின் தொடர்ச்சியாக ஆசிரியர்களின் சுயவாண்மையைப் பாடசாலை மட்டத்தில் மேம்படுத்த நடவடிக்கைகளை எடுக்கலாம். பாடசாலை அதிபர்களையும், ஆசிரியர்களையும் இணைத்து சமர்ப்பிப்புக்களை மேற்கொள்ளலாம்.

தேசிய கல்வியியற் கல்லூரிகளின் தொடருறு ஆசிரியர் கல்விப் பிரிவு ஆசிரியர்களைச் சிறு குழுக்களாக அமைத்தும், பாடசாலைகளிலும் ஆசிரியர்களின் பாடசாலை ஆதார சுயவிருத்தி வாண்மைவிருத்திச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தலாம். சுயகற்றல், கற்கைச் சாதனங்களைத் தயாரித்து ஆசிரியர்களுக்கு வழங்கலாம். பாடசாலைகளைக் குடும்பங்களாக அல்லது திரள்களாக ஒழுங்கமைத்து பிரச்சினைத் தீர்வுகளுக்கான செயல்நிலை ஆய்வுகளை ஆசிரியர்களைக் கொண்டு மேற்கொள்ளவைத்தல், "ஆசிரியம் சுமையானதல்ல, சுகமானது" என்ற உணர்வை ஏற்படுத்த வாண்மை விருத்திச் செயலாற்றுகைகளை மேற்கொள்ளல், ஆசிரியர்களால் சமூகம் நோக்கிய வேலைத் திட்டங்களை அமுலாக்கல், உயர் கல்விக்கான ஆக்கத்திறன்களுக்கான வழிகாட்டல் ஆலோசனை வழங்கல், வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் என்ற வகையில் ஆசிரியர் களின் வாண்மையை உயர்த்தப் பாடசாலைக் களங்களைப் பயன்படுத்தி நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யலாம்.

# Mother's Day

Miss.K.Sara
Grade 6A



International Mother's Day falls on the 14th of May. It was celebrated in our school the on that day. "A child learns its first lessons at its Mother's Knee". The Mother is the first teacher for a child. It is the Mother's hand that rocks the cradle. It is her hand that rules the world too. There is no temple holier than mother. Great men like Mahathma Ganthi and Swami Vivekanda owe much to their mothers' influence in their early childhood. We must respect and revere our mother.

# யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தியில் நிலப்பயன்பாடு இடவமைவு கொள்கைகளும், திறமுறைகளும்

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை,
முன்னாள் துணைவேந்தர்,
யாழ். பல்கலைக்கழகம்.



நிலப்பயன்பாட்டை திட்டமிடுவதன் அவசியம் ஒரு பிரதே சத்தின் நிலப்பயன் பாட்டைத் திட்டமிட்டு ஒழுங்கு படுத்தி உச்சப்பயனைப் பெறுவதற்கு அப்பகுதி யிலுள்ள நிலப்பயன்பாடு பற்றிய விபரங்களைத் தொகுத்தும், நிலப்பயன் பாட்டில் செல்வாக்குச் செலுத்தும் காரணி களைக்கண்டறிய வேண்டும். மனிதனது தொடர்ச்சியான நடவடிக்கைகளால் அபிவிருத்திக்குட்பட்ட பகுதிகளில் நிலப்பயன்பாடுகள் காலப்போக்கில் சிக்கல் தன்மை கொண்டதாக மாறிவிடும். இதனால் இப் பகுதிகளில் மாற்றங்களைக் கொண்டு வருவது கடினமாக இருப்பதுடன் மக்களிட மிருந்து பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும். அபிவிருத்திக்குட்படாத பகுதிகளில் நிலப்பயன்பாடு சிக்கலற்று இருப்பதால் மாற்றங்களைக் கொண்டு வருவது ஓரளவு இலகுவானதாகும். முன்னது கீறிய படத்தில் திருத்தங்கள் மேற் கொள்வது போன்றதும் பின்னது புதி தாகப்படத்தைக் கீறுவது போன்றதுமாகும்.

## நிலப்பயன்பாட்டு ஆய்வுகள்

சர்வதேச புவியியற் கழகத்தின் ஊக்கத் தாலும் கொடுத்த ஆதரவாலும் நிலப்பயன் பாட்டு ஆய்வுகள் தேசிய மட்டங்களில் இடம்பெறலாயின. ஆரம்பத்தில் வெளிக்கள ஆய்வுகள் மூலமாகவே நிலப்பயன்பாட்டு விபரங்கள் பெறப்பட்டன. பின்னர் விமானப்படங்களின் உதவியுடன் நிலப் பயன்பாட்டு விபரங்கள் பெறப்பட்டு அவைபின் நேரடி வெளிக்கள ஆய்வுகள் மூலம் மேம்படுத்தப்பட்டன. அண்மைக் காலத்தில் செய்மதிகள் மூலம் கிடைக்கும் படங்கள் வழியாக பரந்த பரப்புக்களின் நிலப்பயன்பாட்டு விபரங்களைக் குறுகிய கால இடைவெளிகளில் பெறக்கூடியதாக இருப்பது இத்துறை ஆய்வுக்குக் கிடைத்த பெரிய வசதிகளாகும். மிகச்சிறிய பரப்புக் களின் நுணுக்கமான விபரங்களையும் பெற முடியும். தற்பொழுது புவியியல் தகவல் ஒழுங்கு G.I.S மூலம் தரமான நிலப் பயன்பாட்டுப் படங்களைத் தயாரிக்க முடியும். தரவுகளைப் பேணமுடியும். நிலப்பயன்பாட்டுத் திட்டமிடலுக்கு G.I.S பெரிதும் உதவியாக இருக்கின்றது.

**நிலப்பயன்பாட்டு அதிகாரிகளும் அவர்களின் சேவைகளும்**

மாவட்டமட்டத்திலும் பிரதேச செயலக மட்டங்களிலும் இன்று நிலப்பயன்பாட்டு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு இருக்கின்றார்கள். இவர்கள் பட்டதாரிகளாக இருப்பதுடன், பலர் புவியியல் தகவல் ஒழுங்குத் (G.I.S) துறையிலும் ஓரளவு புலமை பெற்றவர்களாக வந்துகொண்டிருக்கின்றார்கள். இவர்களுடன் நிலஅதிகாரிகளும் கடமை புரிகின்றனர். நிலப்பயன்பாடு நிலம், விவசாய, நீர்ப்பாசனம், சுற்றுச்சூழல் போன்ற பல்வேறு துறைகளுக்கு அண்மைக்காலத்தில் பணிநியமனங்கள் பெற்றிருப்பதால் மாவட்ட, பிரதேச, கிராம, நகர மட்டங்களில் சிறந்த நிலப்பயன்பாட்டுக் கொள்கைகளை, செயற் பாட்டுத்திட்டங்களை முன்னெடுக்க ஓரளவு வினைத்திறன் கொண்ட பயிற்றப்பட்ட ஆளணி இன்று உண்டு. இவர்களது சேவைகள் நன்கு பயன்படுத்தப்பட வேண்டும். இவர்கள் மூலம் புதிய செயற்றிட்டங்கள், நடைமுறைகள் கொண்டுவரப்பட வேண்டும்.

நிலப்பயன்பாடு குறித்து சர்வதேச புவியியற்சங்கங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக, சர்வதேசத்துக்குப் பொருத்தமான நிலப்பயன்பாடு ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. இது பிரதானமாக ஒன்பது பிரிவுகளை முதல் மட்டத்தில் கொண்டுள்ளது. அவையாவன. குடியிருப்புகளும் அவற்றோடு தொடர்புடைய பயிர்ச்செய்கையற்ற நிலங்களும், தோட்டப்பயிர்நிலம் மரங்களும், ஏனைய வருடப்பயிர்களும், பயிர்ச்செய்கைக்கு உட்பட்ட நிலம், பராமரிக்கப்பட்ட புல்நிலம், பராமரிக்கப்படாத புல்நிலம், மரக்காடுகள், சேற்றுநிலமும், சதுப்புநிலமும் பயனற்ற நிலம், மேற்குறிப்பிட்ட நிலப்பயன்பாட்டுப் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு வெவ்வேறுநாடுகள், பிரதேசங்கள் தத்தம் உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ப உபபிரிவுகளை வகுத்து நிலப்பயன்பாட்டுப் படங்களைத் தயாரித்துள்ளன. இலங்கையில் மேற்குறித்த பாகுபாட்டு அடிப்படையில்தான் முதலில் நிலப்பயன்பாட்டுப் படங்கள் தயாரிக்கப்பட்டன. அதனால் அண்மைக் காலத்தில் செய்மதித் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு நிலப்பயன்பாட்டுப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் அண்மைக் காலத்தில் செய்மதித் தரவுகளைப் பெறக்கூடிய வாய்ப்புக்கள் இன்று இலங்கையிலும் ஏற்பட்டன. சர்வதேச ரீதியில் செய்மதிகள் மூலம் நிலப்பயன்பாடுகள் பற்றியும், மற்றும் வள ஆய்வுகள் இடம்பெற்ற வண்ணமிருக்கின்றன.

**பரப்பளவும் குடிசனத் தொகையும்:-**

யாழ்ப்பாண மாவட்டம் 1025 சதுரகிலோமீற்றர் பரப்பையும் இன்று 6 இலட்சம் மக்களையும் கொண்டுள்ளது. குடிசன அடர்த்தி சதுர கிலோமீற்றருக்கு 650 பேருக்கு மேற்பட்டுள்ளது. மாவட்டத்துக்குள் பிரதேச செயலக பிரிவு அடிப்படையில் குடிசன அடர்த்தி பெரியளவில் வேறுபடுவதைக் காணலாம். அட்டவணையில் பிரிவுகள் அடிப்படையில் பரப்பு, குடிசனத் தொகை, குடிசனவடர்த்தி காட்டப்பட்டுள்ளன.

| பிரிவு | பரப்பு (ச.கீ.மீ) (பெரிய நீர்ப்பரப்புகள் நீங்கலாக) | மக்கள்தொகை | குடிசனவடர்த்தி (சதுரகிலோ மீற்றருக்கு) |
|---|---|---|---|
| நெடுந்தீவு | 47.50 | 5658 | 119 |
| தீவுகள் தெற்கு | 94.60 | 17588 | 186 |
| தீவுகள் வடக்கு | 41.40 | 14638 | 234 |
| காரைநகர் | 21.30 | 10622 | 499 |
| யாழ்ப்பாணம் | 20.80 | 51539 | 2478 |
| நல்லூர் | 26.80 | 61845 | 2379 |
| வலி / தென்மேற்கு | 48.00 | 54092 | 1127 |
| வலி / மேற்கு | 47.30 | 46687 | 987 |
| வலி / தெற்கு | 31.20 | 52349 | 1678 |
| வலி / வடக்கு | 58.50 | 240361 | 411 |
| *வலி / கிழக்கு* | *101.10* | 71508 | 707 |
| தென்மராட்சி | 217.10 | 73049 | 337 |
| வடதெற்கும் மேற்கும் | 63.70 | 46106 | 724 |
| வடமராட்சி வடக்கு | 50.20 | 51289 | 1022 |
| வடமராட்சி கிழக்கு | 114.90 | 16649 | 143 |
| மொத்தம் | 983.60 | 597,500 | 608 |

யாழ்ப்பாண மாவட்டப் புள்ளி விபரக் கொத்து

**நிர்வாகப்பிரிவும் அவற்றின் புவியியற் பண்புகளும்**

இப்பிரிவுகள் நிர்வாகப் பிரிவுகளாக இருந்த பொழுதும், ஒவ்வொன்றும் தனித்த புவியியற் பண்புகளைக் கொண்டுள்ளன. இதனால் ஒவ்வொரு பிரிவுகளும் வெவ்வேறு பண்பு கொண்ட நிலப்பயன் பாட்டுப் பிரச்சினைகளை எதிர்நோக்கி யுள்ளன. பிரிவுகள் மட்டத்தில் நிலவளம், நீர்வளம் வேறுபடுகின்றன. யாழ்ப்பாண மாவட்டம் நீண்ட காலமாக மக்கள் குடியிருப்புக்களைக் கொண்ட பிரதேசமாக இருந்தபடியால் மிகவும் சிக்கலானதும் செறிவானதுமான நிலப்பயன்பாட்டு முறைகள் காணப்படுகின்றன. பெரிய யாழ்ப்பாணம், தீவுகள், வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி மேற்கு, வடமராட்சி கிழக்கு ஆகிய உப பிரதேசங்கள் தமக்கேயுரிய நிலப்பயன்பாட்டு ஒழுங்குகளைக் கொண்டுள்ளன. பெரிய யாழ்ப்பாணம், தீவுகள், வலிகாமம்பகுதி குடியிருப்புகளுடன் இணைவான பயிர்ச் செய்கை வீட்டுத்தோட்ட நிலப்பயன் பாட்டையும், தென்மராட்சி நெற்செய்கை, தென்னை செய்கையுடன் சார்பான நிலப்பயன்பாட்டையும் கொண்டிருக்க,

வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி குறைந்த பிரதேசத்திற்குரிய நிலப்பயன்பாட்டைக் கொண்டுள்ளது. வடமராட்சி மேற்கு, தீவுப்ப குதிகள் நெற்செய்கை, பனை, புற்தரவை, குடியிருப்புக்களுடன் இணைவான வீட்டுத் தோட்ட நிலப்பயன்பாடு முக்கியம் பெறு கின்றன.

நிலப்பயன்பாட்டுக் கொள்கை வகுப்பதில் கவனிக்கப்படும் காரணிகள் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நிலப்பயன் பாட்டுக்கொள்கை வகுப்பதில் பின்வரும் காரணிகள் முக்கிய கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டும். நீண்ட காலமாகத் திட்டமிடப்படாது சந்தை சக்திகளினதும், சமூக சக்திகளினதும் தொடர்ச்சியான செயற்பாட்டினால் உருவாகிய நிலப்பயன் பாடாக இருப்பதுவும், இது தன்னுள் சிறப்பான நிலவுடைமை, நிலவாட்சி முறைகளுடன் சிக்கலான, செறிவான நிலப் பயன்பாட்டு ஒழுங்கைக் கொண்டுள்ளது. இதில் மாற்றங்கள் இலகுவாகச் செய்யமுடி யாது. மக்களின் ஒத்துழைப்பு இல்லாது மேற்கொள்ளும் முயற்சிகள் பெரும்பிரச்சி னைகளைத் தோற்றுவிக்கலாம். யாழ்ப்பாண மாவட்டம் மிக உயர்வாகக் குடிசன அடர்த்தியைக் கொண்டிருப்பதுடன் நில மின்மை முக்கிய பிரச்சினையாக இருக்கி ன்றது. குறிப்பாக சமூகரீதியில் பின்தங் கியவர்கள் மத்தியில் இப்பிரச்சினை மிகவும் கூடியதாக இருக்கின்றது.

அரசாங்கம் அபிவிருத்தி முயற்சிகளை முன்னெடுக்கும் போது அதற்குரிய நிலத்தைப் பெறுவதில் பெரும் பிரச்சினை களை எதிர் நோக்குகின்றது. உயர்பாதுகாப்பு வலயங்கள் உருவாக்கத்தால் யாழ்ப்பாண மாவட்டத்தில் 150 சதுரகிலோமீற்றருக்கு மேல், முன்னர் மக்கள் இருந்த பகுதிகள் தற்பொழுது மக்களற்ற பாதுகாப்புப் பகுதி களாக இருக்கின்றன. சமாதானம் உருவாகிய பின்னரே இப்பகுதிகளின் நிலைமைகள் பற்றித்தெளிவு ஏற்படலாம். மாவட்டத்தில் அரசுக்குச் சொந்தமான நிலம் குறைவாக இருப்பதுடன், இருக்கும் நிலங்களும் எல்லை நிலங்களாக இருக்கின்றன.

**நிலஅபிவிருத்தி தரைக்கீழ் நீரின் தரத் தைப் பாதிக்காதிருத்தல் வேண்டும்**

கிடைக்கும் கலட்டுக் காணிகள், தாழ்வான தரவைக் காணிகள், சதுப்பு நிலங்கள் கூடிய மூலதனத்தின் மூலமே குறித்த தேவை களுக்குப் பயன்படுத்த முடியும். இக்காணி களை மேம்படுத்தும் போது சுற்றுச்சூழல் விடயம் முக்கியமாக கருத்திற்கொள்ள வேண்டும்.

கிராமங்களில் 5 வகையான நிலங்க ளைப் பொதுவாகக் கமக்காரர் கொண்டு ள்ளனர். வீடுவளவு, தோட்டநிலம், நெல்வயல், பனைவளவு, தரவை மற்றும் கால்நடைகளின் பாவனைக்கு பொதுக் குளம், குட்டை இருப்பது வழக்கம். சிலர் தரவைகள் காணிகளைச் சொந்தமாகக் கொண்டுள்ளனர். கூடுதலாகத் தரவைக் காணிகள் அரசகாணி களாக இருப்பதால் கால்நடை மேய்ச் சலுக்காக எல்லோரும் பயன்படுத்துகின்றனர். நிலம் மிகவும் துண்டாடப்படும் சிறுகாணி களாக இருப்பதுடன், காணிகளின் அள வைப் பரப்பளவாகச் சொல்லாது 1000, 3000

சொரியல் காணிகள் பரவலாகக் காண முடியும். சில இடங்களில் ஒருகிணறு பலருக்குப் பங்கு இருப்பதைக் காண முடிகின்றது. மேற்குறிப்பிட்ட காரணிகளின் செல்வாக்குப் பின்னணியிலேயே மாவட்ட நிலப்பயன்பாட்டுக்கொள்கை வகுக்க வேண் டும். இதனால் இங்கு கிடைக்கக் கூடிய நிலவளத்தை முன்னுரிமை அடிப்படையில் பயன்படுத்த வேண்டும். நிலப் பயன்பாட்டில் செல்வாக்குச் செலுத்தும் இடம்சார் அபிவிருத்தித்திட்டங்கள், இடவமைவுத் தீர்மானங்கள் கவனமான பரிசீலனையின் பின்னர் எடுக்கவேண்டும். தெளிவான இடவமைவுக் கொள்கைகளைக் கடைப் பிடிக்காதுவிடின், நிலைமைகள் மேலும் சிக்கலடைவதுடன் பொருளாதார அபிவிருத் தியும் பாதிப்புறுவதுடன் மக்களுக்குப் பல வசதியீனங்கள் ஏற்படலாம். இம் மாவட்ட மக்களினது, நலன்களைப் பேணக்கூடிய நிலப்பயன்பாட்டுக் கொள்கை வகுக்கு மிடத்து நல்ல பயன்களைப் பெறமுடியும்.

## நிலப்பயன்பாட்டுக் கொள்கை வகுக்கு மிடத்து ஏற்படும் பலன்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் இடஞ்சார்பு அபிவிருத்தியில் மாவட்டத்தின் கிழக்குப் பகுதிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு மக்களை மேற்கிலிருந்து கிழக்கிற்கு நகர்த்த வேண்டும். தென்மராட்சி கிழக்கு, அரியாலை, வடமராட்சி கிழக்குப் பகுதிகள் இன்று சாதகமான நிலையைப்பெற்றிருக்காத போதும், சாதகமான சமாதான காலம் வரும் பொழுதும் இப்பகுதிகளில் கூடிய அபி விருத்திகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கொடிகாமத்தை யாழ்ப்பாணத்தின் இரண்டாவது நிர்வாகமையமாகவும், முக்கிய சந்தை/சேவை நிலையமாக விருத்தி செய்து இதனை ஒரு சிறு வளர்ச்சித்துருவமாக மாற்ற வேண்டும். இந் நகரின் வளர்ச்சி தென்மராட்சி கிழக்கில் வளர்ச்சிக்கு வழிசமைக்கும். செம்மண் பிரதேசத்தில் நல்ல விவசாய நிலங்கள் மாற்று நிலப்பயன் பாட்டுக்கு மாறும் போக்கைச் சட்டத்தாலும், பல்வேறு மாற்று நடவடிக்கைகளாலும் கட்டுப்படுத்த வேண்டும். செம்மண் பிரதேசம் குடாநாட்டு மக்களின் காய்கறிப் பழத்தேவைகளைக் கொடுத்து வரும் பகுதியாக இருக்க இதன் நல்ல நிலை பேணப்பட வேண்டும். கிராமப்புறங்களில் விவசாயம் மற்றும் நிலங்கள், குடியிருப்பு, கைத்தொழில் நிலப்பயன்பாட்டுக்கு உட்படு வதைக் குறைக்கச் சிறுநகர்களை விருத்தி செய்ய வேண்டும். பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, கொடிகாமம், சுன்னாகம், நெல்லியடி, அச்சுவேலி, உரும்பிராய், மானிப்பாய், ஆகியன விருத்தி செய்யக் கூடிய நகரங்களாகவும் முக்கிய சேவை மையங்களாகவும் இருக்கின்றன.

ஒருங்கிணைந்த குடிநீர்த்திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டால் நன்னீர் தோட்ட நிலங்களில் வீடுகள் அமைக்கப்படுவது குறைக்கப்பட்டு, வீடுகள் விவசாயத்துக்கு பொருத்தமற்ற பகுதிகளில் அமைக்க முடியும்.

குடாநாட்டில் உள்ள கடல்நீரேரிகளான தொண்டைமானாறு, உப்பாறு, யாழ்ப்பாண நீரேரிப்பகுதிகளையும் அவற்றை அண்டிய

சிறுதீவுகளையும் ஒதுக்குப்பகுதிகளாக மாற்றி அவற்றைப் பாதுகாக்க வேண்டும். இதனால் மீன் இனப்பெருக்கம் ஏற்படுவதுடன், பறவைகள் வருகை அதிகரிக்கும். மண்டைதீவு, அல்லைப்பிட்டி, பண்ணைக்கு இடைப்பட்ட முக்கோணப்பகுதியும், வழுக்கையாற்றுக் கழிமுகப்பகுதியும் பறவைச் சரணாலயங்களாக விருத்தி செய்யப்பட வேண்டும். **Birds Sanctuary** மேலும் தொண்டைமானாறு கண்டல் காட்டுப் பகுதிகளும் பாதுகாக்கப்பட வேண்டும். இவ் இடங்கள் சுற்றுச்சூழல், சுற்றுலாத்துறை **(Echo Tourism)** வளர்ச்சிக்கும் உதவியாக அமையலாம். இம்மாவட்டத்தில் தேர்ந்த சில சிறு பரப்புகள் இயற்கை ஒதுக்குகளாக **Natural Reserves** வரையறுக்கப்பட வேண்டும். இதன் மூலம் இப்பிரதேசத்திற்கேயுரிய தாவர, உயிரினங்கள் அழிவுறாது காப்பாற்ற முடியும்.

இம் மாவட்டத்தில் தரைக்கீழ் நீர் முக்கியமாக இருப்பதால், விவசாய மற்றும் நடவடிக்கைகளால் தரைகீழ்நீர் மாசுறாதும், உவர் நீராக மாறாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். வலிகாமம் குடியிருப்பு விருத்தியில் தரைகீழ் நீர் முக்கியமாக இருப்பதால் நீரின் தரம் கிடைக்கும் அளவுக்கு ஏற்ப விவசாய நடவடிக்கைகள் இருக்க வேண்டும். தீவுகள் மற்றும் வலிகாமம் மேற்குப்பகுதிகளில் விவசாயம் செய்து வந்த பரப்புக்களும், குடியிருப்புப் பகுதிகளும் உவர் நீராக மாறி வருவதும் அதனால் உற்பத்தி குறைந்து வருவதையும் காணமுடிகின்றது. இதனால் இம் மாவட்டத்தின் நிலப் பயன்பாட்டுக் கொள்கை நீர்வளத்தைத் தழுவியதாக அமைய வேண்டும்.

யாழ்ப்பாண நகரின் பழைய பாழடைந்த பகுதிகள் புனருத்தாரணம் செய்யப்பட்டு, புதுவாழ்வு கொடுக்கப்பட வேண்டும். யாழ்ப்பாண நகருக்கு, நாவற்குழி, கல்லுண்டாய் பகுதிகளில் உபநகர்கள் நிறுவுவதன் மூலம் யாழ்ப்பாண நகரம் வடக்கு நோக்கி செம்மண் பகுதியில் பரவுவது தடுக்க முடியும். குழாய் மூலம் நீர்விநியோகத்திட்டம் ஏற்படுத்தப்பட்டு, மற்றும் பல வசதிகள் விருத்தி செய்தால் கல்லுண்டாய், நாவற்குழி சிறு உப நகர்களாக வளர்ச்சி பெறும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒருங்கிணைந்த சிறந்த நிலப்பயன்பாட்டு முறை அமுல்படுத்தப்பட்டால், இயற்கை வளங்கள் அழிவுறாது பேணப்படுவதுடன், நிலப் பற்றாக்குறையையும் தணிக்க முடியும். சுற்றுச் சூழலை மேம்படுத்த முடியும். ஒட்டுமொத்தமாக மாவட்ட மக்கள் தரமான சிறப்பான வாழ்க்கைத்தரத்தை அனுபவிக்க உதவியாக அமையும்.

# Education

Miss.D.Jeni Teransiya
Grade 9



Education gives to human well being things such as power, knowledge, bright, discipline, patience, good behaviour, matual, punctuality, friendly, expe rience, maintaining the prestige, adventure, communal understanding, tolerance, volunteer service, well-intention, realizing the sins, moral, goodness, viewpoint, judgement, committing merit, conscience, divinity, kind, good leading, good process, affection and other good things.

So, the education is like a back bone of the human body. In first of all, Education means containing how to write and read. Reading will make perfect man. Everybody should read all kinds of books. It may be in social, politic, religious books or novels. When a person can read any kinds of books, but, he must collected whatever there are good things. Many inventions have been invented by the Education. The man who researched about the water he invented the ship. The man who researched about the sky he invented the plane. The man who learnt about the Biology he invented the medicines. The man who learnt about technology he invented many important things such as phone. radio, television, fax, computer and others whatever needs for human. The man who learnt about psychology he tries to maintain the peace in this world.

When the population is increased the time is limited because the world is going fast. Men are called scientists who are the educated persons are inventing many kinds of things for the present people in the world so that they can cover every needs quickly.
Wherever the education is neglected there will be ignorance and indecision. When we see the most of criminals are in prison (jail) they are uneducated persons because they have committed crimes such as murdered and robbers. The knowledge which was collected by Education will never destroyed. It will stand till his/her final aspiration.

# இலங்கை அடிப்படை வாதமும் அகழ்வுகளும்

பேராசிரியர்.செ.கிருஸ்ணராசா,
வரலாறு தொல்லியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



தென்னாசியாவின் தென்கோடியில் இந்து சமுத்திரத்தின் முத்துப் போல் இலங்கும் இலங்கைத்தீவில் தொல்லியல் என்ற அறிவியற்றுறை பெயரளவில் அப்பணிக்குரிய குறியீட்டினைக் (spade) கொண்டிருந்தாலும், இன்னும் அத்துறையானது அடிப்படைவாத இணைவிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியாதவோர் அரசியற் பொருளாதாரச் சூழலுக்குள் அகப்பட்டுள்ளது. 1920 களின் பின்னர் இலங்கையின் அரசியற் பொருளாதார அடிப்படைகளிலிருந்து உருவான பெரும்பான்மை-சிறுபான்மை பற்றிய கருத்தமைவுகளின் தோற்றமும் வளர்ச்சியும் இலங்கையின் தொல்லியல்துறை வளர்ச்சியுமே இலங்கையின் தொல்லியல்துறை வளர்ச்சியினைப் பெருமளவு பாதித்த அம்சமாகக் காணப்பட்டது.

"இலங்கையின் அரசியற் பொருளாதாரத்தை இன உணர்வுகளும் அவற்றை அடிப்படையாகக் கொண்ட இனவாதமுமே கூடியளவில் ஆக்கிரமித்துக்கொண்டிருந்தது. ஏனைய பல நாடுகளையும் போன்றே வர்க்க அமைப்பும், வர்க்கங்களுக்கிடையிலான போராட்டங்களுமே பொருளாதாரத்தை வழிப்படுத்தியிருந்தாலும், வர்க்க உணர்வுகளை இன உணர்வுகள் படிப்படியாக ஆட்கொள்வதே இலங்கை அரசியற்-பொருளாதார வரலாற்றின் முக்கிய அம்சமாகத் துலங்குகின்றது. இந்த வர்க்கங்கள் தமது வர்க்க நலன்களைப் பேணும் பொருட்டுக் கையாண்ட நடவடிக்கைகள் மரபு வழிப்பட்டனவாக இருக்கவில்லை. அதற்குப் பதிலாக இன உணர்வுகளைத் தூண்டி அதன் வழி தமது வர்க்க நலன்களைப் பேணும், பொருட்டுக் கையாண்ட நடவடிக்கைகள் மரபுவழிப்பட்டனவாக இருக்கவில்லை. அதற்குப் பதிலாக இன உணர்வுகளைத் தூண்டி அதன் வழி தமது வர்க்க நலன்களைப் பேணும் பாதுகாத்துக் கொள்ளும் ஓர் ஆபத்தான போக்குக் குடியேற்ற நாட்டுவாத காலம் முதலே தோன்றியிருந்தது. இலங்கைச் சமூக அமைப்பிலான பொதுவான இன வேறுபாடுகளுக்குப் புறம்பாக நாட்டின் தொழிலாளர்வர்க்கம், அந்நியர், குறிப்பாக இந்தியர் வருகையால், இன அடிப்படையிற் பலவாறு பிளவுபட்டிருந்தமை அதற்குரிய வாய்ப்பானகளமாயிற்று. இக்களத்தின் பின்னணியில் தொல்லியலும் இணைந்திருந்தது. இனப்பிறழ்வினை மேலும் மேலும் அகட்டிச் சென்றதோடு, அடையாளக்

கட்டுமானத்தில் பரஸ்பரம் இரு சமூகங்க ளுக்கிடையே ஓயாத மோதல்களையும் உருவாக்கத் தவறவில்லை. பௌத்த- சிங்களப் பண்பாட்டு இருப்பினை அதற்குக் கீழும், அதற்கு மேலும் இருந்திருக்கக் கூடிய பண்பாட்டுப்படை அலகுகளிலிருந்து தனித்துவமாகப் பிரித்தெடுத்து, அதன் தனித்துவத்துடன் தொல்லியலுடன் ஒன்றிக்கச் செய்த பெரும்பணியே இன்றைய பின் நவீனத்துவவாதிகளின் பங்களிப் புக்களாக அமைந்துள்ளன. 1960களுக்குப் பின்னர் உலகத் தொல்லியல் வரலாற்றில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு நேரெதிராக, இலங்கைத் தொல்லியல் வரலாற்றில் "புனிதப் பிரதேசப் பிரகடனங்களை" உறுதிப்ப டுத்துதல், எல்லாளன் சமாதியில் துட்டகை முனுவின் சாம்பலை (ash) கண்டுபிடித்தல், கல்வெட்டுகளின் பொறிப்புகளுக்கிடையே புதிய வாசகங்களுக்குரிய வரிகளைக் கண்டுபிடித்தல், (Inter liner inscrip tions) இந்து திராவிடக் கலையம்சங்களை அகழ்வின் பொழுதே ஆவணப்ப டுத்தலின்றி மறைத்துவிடுதல் போன்றன வற்றில் அதன் பணி மிகவும் சிரத்தை யாயிருந்தமையைக் காணலாம். தென்னா சியத் தொல்லியல் வரலாற்றில் காணப்படாத ஒரு சிறப்பம்சம் இலங்கைத் தொல்லியல் வரலாற்றில் உண்டு என்றால் அது பௌத்த குருமார் தமது மத அங்கியுடன் அகழ்வுப் பணிகளில் நேரடியாக ஈடுபடுவதாகும்.

இலங்கைத் தீவின் "வசிப்பிடமாதல்" என்ற கருத்தமைவில் "ஆரியர்"- "திராவிடர்" என்ற எண்ணக்கருக்கள் வலுவூன்றி யிருந்தமை இலங்கையின் "மூதாதையர்" யார் என்ற பிரச்சினையைக் கிளறிவிட்டிருந்தது.

"ஆரியரும் திரா விடரும் இரு வேறு இனங்கள் என்னும் பொதுவான எண்ணம் தவறானதென அறிஞர்களால் நிராகரிக்கப் பட்டுள்ளது. ஆயினும் அது பொதுமக்கள் உள்ளத்திலும், அறிஞர்களின் சிந்த னையிலும் ஆழமாகப் பதிந்துள்ளதுடன் அது தொடர்ந்தும் பரவலாகச் செல்வாக்குச் செலுத்தியிருக்கின்றது."

"ஆரியர்- திராவிடர் பற்றிய தவறான எண்ணக்கருவானது இலங்கைச் சூழலில் (இந்தியச் சூழலிற் போல்) முற்றிலும் தவறான நவீன கருத்து விளக்கங்கள் வரலாற்றிலே ஊடுருவவிடப்படுகின்ற விதத்திலும், இலங் கையில் வாழும் சிங்களவர்- தமிழர் ஆகிய இருபெருந் தேசிய இனங்களுக்கு வரலாற்று அங்கீகாரம் வழங்குவதில் முக்கிய பங்காற்றுகின்ற வகையிலும் வெளிப் படுகிறது. இதனோடு தொடர்பான விவா தங்கள் "உங்களுக்கு முன்னே நாங்கள் இங்கே வாழ்ந்தோம்", "இது எமது புராதன தாயகம்" என்னும் தர்க்கங்களிலிருந்து உருவெடுத்த புராதன வரலாற்று இருப்பை அடிப்படையாகக் கொண்ட பிரதேச உரிமை கோரல்களை மையமாகக் கொண்டிருந்தன. முன்னேறிய நவீன தேசங்களின் அடிப்படை பற்றிய பிரச்சினை எழும்பு கின்ற இத்தகைய முன்மொழிவுகளின் தகுதிபற்றி ஒருபோதும் கேள்வி எழுப்பப் படவேயில்லை. ஆய்வாளரின் அக்கறை இம் முன்மொழிவுகளின் மெய்மை- பொய்மை பற்றி ஆராய்வதில் மாத்திரம் சென்றதே தவிர, நவீன தேசங்களின் உருவாக்கற் செயல்முறையில் புராதன வரலாற்று இருக்கையின் தொடர்பு- தொடர்பின்மை பற்றிச் செயற்படவில்லை."

இங்குதான் தொல்லியலின் நோக்க விதானங்களை அதன் வரையறைகளுக் குள்ளிருந்து வெளியே கொணர்ந்து ஓரினத்தின் கருத்தமைவினை மேலும் மேலும் உறுதிப்படுத்துவதற்காகப் பயன் படுத்தப்பட்டு வருகின்ற செயன்முறையை இலங்கையில் காண்கின்றோம். ஜப்பானியப் பேராசிரியர் ஒருவர் இத்தன்மையை நன்கு அவதானித்ததன் அடிப்படையில் மிகப்பொ ருத்தமாகவே "A Political dig" என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்தப் "Political dig" இலங்கையில் தொடர்வதற்குரிய சாதக நிலைமைகளில் ஒன்று தமிழர் வாழ்வியலில் இருந்து பௌத்தமதம் தனது தொடர்பினை இழந்தமையாகும். இற்றையிலிருந்து 900 ஆண்டுகளுக்கு முன்னரிலிருந்தே அந் நிலை ஆரம்பித்து விட்டிருந்ததிலிருந்து தமிழர், 'பௌத்தம்' என்றால் "சிங்களம்" என்ற ஒரு ஐதீகக் கருத்தமைவு வடிவினைத் தமக்குள் கற்பிதமாகக் கொண்டு தமது அரசியற் பொருளாதார இருப்பிற்கான தேடலில் ஈடுபட்டு வந்துள்ளனர். இதற்கான பண்பாட்டுப் பகைப்புலமாக வடக்கு-கிழக்கு தாயகக் கோட்பாடு முன்வைக்கப்பட்டது. இக் கோட்பாட்டை முறியடிப்பதற்குப் பௌத்த-புனிதமையப் பிரகடனங்களைக் காலத்திற் குக் காலம் இலங்கையின் அரசியற் திட்டத்தினூடாகப் பௌத்தசாசன அமைச்சு உருவாக்கி வந்ததோடு, இலங்கைத் தொல்லியற் திணைக்களத்தினை அப்பிரகட னங்களின் பின்னணியில் வைத்துச் செயற்படுத்துவதன் மூலம் கருவியாகப் பயன்படுத்தி வந்தது. இந்நிலையே இன்றைய நவீன ஸ்ரீலங்காவின் இன மோதல்களுக்கும் பரஸ்பர நம்பிக்கை யீனத்திற்கும் அடிப்படையாக அமைந்தது என்றால் மிகையாகாது.

"தமிழர்களுக்கு எதிரான சிங்களவர்கள் எதிர்ப்பின் 'ஊற்று மூலம்' வேறுபட்டது. வரலாற்று ரீதியாகத் தமிழருக்கும் சிங்கள வருக்கும் மத்தியில் நிலவிய மோதல், இன அடிப்படையைவிட அரசியல் அடிப்படை யிலானது. ஆட்சியாளருக்கு இடையிலான போராட்ட வடிவத்தினையே அது எடுத்தது." அதில் மூன்று கருத்து அமைவுகள் பிரதான அங்கம் வகித்தன. அவையாவன:

"ஆரிய இனம்" பற்றிய கருத்தமைவும், சிங்களவர்கள் இன ரீதியாக "ஆரியர்கள்" என்ற நோக்கும் நிலையும். "சிகதீப" என்ற கருத்தமைவு- அதாவது விஜயனின் இலங்கை வருகையும், சிங்கள இனம் நிறுவப்பட்டதும் பற்றிய ஐதீகமும் "தம்மதீபக்" கருத்தமைவு- புத்தர் இலங் கைக்கு மும்முறை வருகை தந்தமையும், அவருக்கும் இத்தீவுக்குமிடையிலான விசேட உறவுகளும் பற்றிய ஐதீகமும். இம் மூன்று கருத்தமைவுகளின் அடிப்படை யிலேயே மகாவம்சத்தைத் தழுவிய வகையிலான சிங்கள-பௌத்தப் பண் பாட்டுப் பாரம்பரியத்தை நிலை நிறுத்தும் நோக்கில் இலங்கையின் தொல்லியல் அகழ்வுகள் பெரும் எடுப்பில் நிகழ்த்தப் பட்டுக்கொண்டு இருப்பதனைக் காணலாம். 'Cultural Triangle' கலாசார முக்கோண வலயம் எனக் கண்டி, பொலன்னறுவை, அனுராதபுரம் ஆகிய மையங்கள் இணைந்து நிற்கும் முக்கோணப் பரப்பினுள் யுனெஸ்கோ ஆதரவுடன் பல அகழ்வுத்

திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதும் நோக்கத்தக்கது. வடக்கு-கிழக்கு மாகாணப் பரப்புகளில் அவ்வாறான அகழ்வுகள் எப்போதுமே முன்னெடுக்கப்பட்டது கிடையாது. அவ்வாறான சந்தர்ப்பங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் பௌத்தப் பண்பாட்டு எச்சங்களை வழங்கும் மண்படையுடன் அகழ்வு நெறியினை வடக்கிலோ அல்லது கிழக்கிலோ நிறுத்தி விடுவதும் தொல்லியல் திணைக்களத்தின் மரபாக இருந்து வருகின்றது. வடக்கில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள கந்தரோடை மீதான அகழ்வு அதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். இங்கு 'பௌத்த இருகாட்டு" எச்சங்களைக் குறிப்பிட்ட அம்மண் படையுடன் மட்டும் அகழ்ந்து வெளிப்படுத்திய பின் தொல்லியல் திணைக்களம் அகழ்வுகளை நிறுத்திக் கொண்டது. அக் குறிப்பிட்ட மண்படைகளுக்குக் கீழ் வேறொரு பண்பாட்டுப் பரிமாணத்திற்குரிய எச்சங்கள் காணப்பட்டிருந்தமையினைப் பென்சில்வேனியப் பல்கலைக்கழக அகழ்வியலாளரான விமலா பெக்லியின் ஆய்வுகள் எடுத்து நிரூபித்துள்ளன. இவ்வாறு இலங்கைத் தொல்லியற் திணைக்களம் பௌத்த-சிங்கள அடிப்படைவாதத்திலிருந்து இன்னும் விடுபட முடியாத நிலையில் தொல்லியல் நெறியினை வளர்த்தெடுத்துச் செல்வதற்கு மிகச் சிறந்த ஓர் உதாரணமாக "எல்லாளன் சமாதியினுள் துட்டகைமுனுவின் சாம்பல்" பற்றிய பிரச்சினை அமைந்து கொண்டமையைக் குறிப்பிடலாம்.

# The Fox and the Grapes

Miss.S.Saththitha
Grade 8



A fox lived in a forest. One day he was very hungry. He wondered for a long time in search of food.

At last he came across a grapevine big bunches of grapes were hanging from it. They were very high above the ground. The fox jumped up to reach the grapes but could not reach them. After several attempts he was about to give up when he heard a laugh.

He looked up to see a monkey sitting on a tree nearby. The monkey said "So, you are going to do what one of your fore fathers did".

"What you mean?" Asked the fox.

The monkey said, "long ago. When a fox could not reach the grapes. He walked away saying, "These grapes are sour. I do not want them. But, you cannot go away with that excuse. These grapes are very sweet. I have tasted them."


"Oh thank you for telling me" Said the fox "If the grapes are sweet, I do not want them."

"Why?" the monkey asked.

"Because I am a diabetes patient. My doctor has strictly warned me to keep away from sweets" the fox said and ran away.


# செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence)

கலாநிதி. A.A.அன்றூசாள்ஸ்,
B.Sc (Jaffna), PhD (Cardiff, UK)
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கணினி விஞ்ஞானத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



செயற்கை நுண்ணறிவு என்பது மனிதனால் நுண்ணறிவுச் செயற்பாடுகள் என்று கருதப்படுவனவற்றை இயந்திரங்கள் மூலம் செய்வதனை நோக்கமாகக் கொண்ட கணினி விஞ்ஞானத்தின் ஒரு பிரிவாகும். செயற்கை நுண்ணறிவானது இயந்திரங்களின் நுண்ணறிவு மற்றும் அவற்றை உருவாக்கும் அறிவியல் மற்றும் எந்திரவியல் என்றும் பொதுவாக வரையறுக்கப்படுகின்றது. நுண்ணறிவுள்ள இயந்திரங்களை உருவாக்குவதற்கான விஞ்ஞானம் மற்றும் எந்திரவியலை செயற்கை நுண்ணறிவு என்று பொதுவாகக் குறிப்பிடலாம்.

### செயற்கை நுண்ணறிவு என்றால் என்ன?





செயற்கை நுண்ணறிவினை விளங்கிக் கொள்வதற்கு முதலில் நுண்ணறிவு என்றால் என்ன என வரையறுப்பது மற்றும் இது மனிதனுக்கு மட்டும் உள்ளபண்பா? என அறிவதும் மிக முக்கியமானதாகும். நுண்ணறிவானது உலகியல் காரியங்களைத் துல்லியமாகச் செய்வதற்கான திறன் எனக் கொள்ளலாம். உதாரணமாக ஒருவர் ஓடும் போது அல்லது நடக்கும் போது வழியிலுள்ள ஒரு பள்ளம் அல்லது தடையினை அவதானித்து தனது ஆற்றலிற்கு ஏற்றவாறு அதைக்கடந்து செல்வதற்கான வழிமுறையைக் கண்டுபிடித்து அதன்படி செயற்படுவது ஒரு நுண்ணறிவுச் செயற்பாடாகக் கொள்ளலாம். வழியில் ஒரு சிறு பள்ளம் இருப்பின் அதனைக் கடந்து செல்லலாம். ஒரு அளவான பள்ளமாக இருப்பின் பாய்ந்து செல்லலாம். ஒரு கிணறு அல்லது பெரிய கல் வழியில் இருப்பின் அதனைத் தவிர்த்து அதைச் சுற்றிச் செல்ல வேண்டியிருக்கும். இதுவே பாரிய நீண்ட மதிலாக இருக்கும் பட்சத்தில் நுழைவாயிலைக் கண்டுபிடித்து அதன் வழியாகச் செல்ல வேண்டியிருக்கும் அல்லது வேறு வழிவகைகளை நாடவேண்டியிருக்கும். பொதுவாக ஆடு, மாடு, நாய் போன்ற வீட்டு

விலங்குகளால் கூட இது முடியும் என்று பலர் வாதிடலாம். ஆனால் உண்மையில் இது ஒரு நுண்ணறிவுச் செயற்பாடே. மனிதர் மற்றும் விலங்குகளின் நுண்ணறிவு அவற்றின் குழந்தைப் பருவத்திலிருந்து அவதானித்தல் மற்றும் அனுபவங்கள் மூலமாக வளர்கின்றது. அனைத்து விலங்குகளிடமும் வேறுபட்ட விதங்களில் அளவுகளில் நுண்ணறிவு காணப்படுகின்றது. உதாரணமாக மேற்கூறப்பட்ட செயற்பாட்டில் கால்கள் சமநிலையாக உடம்பினைத் தாங்கி ஓர் இடத்திலுருந்து இன்னோர் இடத்திற்கு நகர்த்திச் செல்கின்றது. கண்கள் நிலத்தின் அமைப்பை அவதானித்து தரையின் அமைப்பினை (சமதரை, பள்ளம், கிணறு, கல்) மூளைக்குச் சரியாக அனுப்புகின்றது. மூளை அது எவ்வகையான தடை என்று தீர்மானித்து அதற்குத்தக்கதான முடிவினை எடுக்கின்றது. இம்முடிவினை உடல் சரியாகச் செயற்படுத்துகின்றது. இங்கு பல நுண்ணறிவுச் செயற்பாடுகள் ஒன்றிணைந்து நடந்து செல்லும் தொழிற்பாடு நிறைவேற்றப் படுகின்றது.

விலங்குகளிற்கு இயல்பிலேயே இருக்கின்ற ஆற்றல்கள் (ஐம்புலன்கள்) மற்றும் பரம்பரையலகுகளினூடாகக் கடத்தப்படுகின்ற தன்னிச்சையான இயக்கங்கள் (நெருப்பில் பட்டகை தானாகவே இழுத்துக் கொள்வது, பருந்தினைக் கண்ட கோழிக்குஞ்சுகள் தாயிடம் ஓடிச்செல்வது) மனிதன் மற்றும் விலங்குளின் நுண்ணறிவுக்கு அடிப்படையாக அமைகின்றன. ஆனால் செயற்கை நுண்ணறிவைப் பொறுத்தவரை செயற்கையாக ஐம்புலன்களை உருவாக்குவது. புலன்களின் மூலம் பெறப்படும் சுற்றுப்புறத் தகவல்களை இயந்திரத்தினால் கணிப்பீடு செய்யக்கூடியவகைக்கு மாற்றுவது. அத் தகவல்களிலிருந்தும் ஏற்கனவே சேமித்து வைக்கப்பட்டிருக்கும் தகவல்களின் உதவியுடனும் முடிவினை எடுப்பது, மேலும் அந்த முடிவினைச் செயற்படுத்துவது என்ற பல நிலைகள் வெற்றி கொள்ளப்பட வேண்டும். ஓர் இயந்திர மனிதன் எவ்வாறு மேலே சொல்லப்பட்ட பள்ளத்தைக் கடந்து செல்லும் செயற்பாட்டைச் செய்யமுடியும் என்று சிந்தித்தால் செயற்கை நுண்ணறிவு என்றால் என்ன என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

**செயற்கை நுண்ணறிவின் பிரயோகம் :-**



செயற்கை நுண்ணறிவு என்பது மனிதனைப்போல் செயற்படக்கூடிய ஒரு இயந்திரத்தை உருவாக்குவதை மட்டும் நோக்கமாகக் கொண்டதல்ல. மேற்கூறப்பட்ட பாதை கண்டறியும் உதாரணத்தில் சொல்லப்பட்டது போன்ற செயற்கை நுண்ணறிவு கொண்ட ஒரு தொகுதியினை உருவாக்கினால் அதன் மூலம் ஒரு வாகனத்தைச் சாரதி இன்றி இயக்க முடியும். மேலும் மனிதனின் நுண்ணறிவினைச் செயற்கையாக உருவாக்குவது மட்டும்

செயற்கை நுண்ணறிவல்ல. செயற்கை நுண்ணறிவு ஒரு கற்பனையோ அல்லது புனைகதையோ அல்ல. இது எண்ணற்ற துறைகளில் மனிதனுக்குச் சிறப்பாகத் துணை புரிகின்றது. தற்போது சாரதிகளற்ற செயற்கை நுண்ணறிவு கொண்ட இரயில் வண்டிகள் பல நகரங்களில் பொதுமக்கள் பாவனையில் உள்ளன. சாரதிகளற்ற தன்னியக்க வாகனங்கள் (கார், வான் போன்றன) பரீட் சார்த்தமாக உருவாக்கப்பட்டுச் சிறப்பாகச் செயற்படுகின்றன. ஆனால் பொதுமக்கள் பாவனைக்கு இன்னும் விடப்படவில்லை.



செயற்கை நுண்ணறிவு பல படிகளிலும் சிக்கல் தன்மையிலும் வேறுபடுகின்றது. இதை விளங்கிக்கொள்வதற்கு அண்மையில் வெளிவந்த "எந்திரன்" திரைப்படம் ஒரு நல்ல உதாரணமாகும். இத்திரைப் படத்தில் வரும் "எந்திர மனிதன்" முதலில் நடப்பதற்குப் பயிற்றப்படுகின்றான். இது ஒரு வகையான செயற்கை நுண்ணறிவு. படத்தில் முடிவெட்டும் நிலையத்தில் வரும் காட்சி ஒரு வகையான செயற்கை நுண்ணறிவினைக் காட்டுகின்றது. இங்கு தொலைபேசி எண்களைப் படித்து குறித்த நபர்களின் இலக்கங்களைக் கண்டறிவதாகக் காட்டப்படுகின்றது. தொலைபேசி எண்கள் கொண்ட பக்கங்கள் இயந்திர மனிதனின் கண்களில் உள்ள புகைப்படக் கருவியால் படம் பிடிக்கப்படுகின்றது. இப்படத்திலுள்ள இலக்கங்கள், மற்றும் பெயர்களைத் தகவல்களாக மாற்றுவது ஒருவகை செயற்கை நுண்ணறிவாகும். (Optical Character Recognition). இதே போல் ஒலியாக வழங்கப்படும் கேள்விகள் இயந்திர மனிதனுக்குரிய தகவல்களாக மாற்றப்பட வேண்டும் (Speech Recognition). இவை இரண்டும் சிறப்பாக இருக்கும் பட்சத்தில் குறிப்பிட்ட நபருடைய தொலைபேசி இலக்கத்தக் கண்டுபிடிப்பது ஒரு சிக்கலான விடயமல்ல. ஏற்கனவே உள்ள அட்டவணையில் தேடுவதாகவே இருக்கும். ஏனெனில் இங்கு கண்களிலுள்ள கருவியால் பிடிக்கப்பட்ட படங்களிலுள்ள தகவல்கள் இயந்திர மனிதனின் நினைவகத்தில் சேமிக்கப்பட்டிருக்கும். குறிப்பிட்ட நபரின் இலக்கத்தினை நினைவகத்தில் தேடிக்கண்டுபிடிப்பது ஒரு கணினி போன்ற இயந்திரத்திற்கு மிகவும் இலகுவான காரியம். இது கண்டுபிடிக்கப்பட்ட பின் அதனை வெளியிடக்கூடிய சரியான வாக்கியம் அமைக்கப்பட்டு, பின்னர் கண்டு பிடிக்கப்பட்ட தகவல் ஒலியாக மாற்றப்பட்டு வெளியிடப்படுகின்றது (Speech Synthesisation). இங்கு குறிப்பிடப்பட்ட அனைத்தும் வெவ்வேறு விதமான செயற்கை நுண்ணறிவின் பிரயோகங்களாகும். மேலும் இங்கு குறிப்பிடப்பட்ட அனைத்தும் பாவனையில் உள்ளது.


இன்னோர் உதாரணமாக "எந்திரன்" படத்தில் பரீட்சைக் கேள்விகளுக்கு விடையளிக்கும் காட்சியினைக் கருதலாம்.

இது மிகவும் சிக்கலான ஒரு செயற்கை நுண்ணறிவைக் குறிப்பிடுகின்றது. அதாவது பலநூல்களை வாசித்துக் கிரகித்து கேட்கப்படும் கேள்விகளுக்கு விடையளிப்பது என்பது மிகவும் கடினமான ஒரு விடயம். எம்மில் பலரிற்கும் இது முடியாத காரியம். காரணம் பரீட்சை வினாக்கள் பொதுவாகப் புத்தகத்தில் இருக்கும் விடயத்தை நேரடியாகக் கேட்பதில்லை. ஒரு சில விடயங்களைத் தவிர ஏனையவை நாம் சிந்தித்தே விடையளிக்கவேண்டும். தர்க்க ரீதியாகச் சிந்தித்து விடையளிப்பது என்பது செயற்கை நுண்ணறிவின் மிகவும் அதீதமான ஒரு நிலையாகும்.

செயற்கை நுண்ணறிவென்பது சிந்தித்து காரணங்களுடன் முடிவுகளை எடுப்பதனை (Formal Reasoning) அடிப்படையாகக் கொண்டது. நிழற்படம் ஒன்றில் பகுதியாகத் தெரியும் வாகனம் எந்த வகை வாகனம் என்று அடையாளம் காண்பது, சதுரங்க ஆட்டத்தில் அடுத்த நகர்வு என்ன? என்று கண்டுபிடிப்பது, ஒரு நோயாளியின் நோய் என்ன என்று தீர்மானிப்பது இப்படியாகப் பல உதாரணங்களைக் கூறலாம். தர்க்க ரீதியாக முடிவெடுக்கக் கூடிய நிபுணத்துவத் தொகுதி எனப்படுகின்ற செயற்கை நுண்ணறிவுத் தொகுதிகள் (Expert System) தற்போது பாவனையில் உள்ளன.

### செயற்கை நுண்ணறிவு பற்றிய ஆராய்ச்சி:-

செயற்கை நுண்ணறிவு பற்றிய சிந்தனைகள் பண்டைய காலம் தொட்டே இருந்து வந்துள்ளது. ஆனால் இவை பெரும்பாலும் ஆற்றல்மிக்க மனிதன்




போன்ற ஓர் இயந்திரத்தை உருவாக்குவதாகவே இருந்தது. பிற்காலத்தில் தத்துவவியலாளர்களாலும், கணிதவியலாளர்களாலும் தர்க்கரீதியாக முடிவுகளை எடுப்பதற்கான பொறிமுறைகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது. **"அலன் ரியூறிங்"** (Alan Turing) போன்றவர்களது தர்க்கவியல் பற்றிய ஆராய்ச்சி செயற்கை நுண்ணறிவு என்ற எண்ணக்கருவிற்கு வித்திட்டன. இவர்களது ஆராய்ச்சி, செயலொழுங்குகளைச் செயற்படுத்தக்கூடிய இலத்திரனியல் கணினிகளின் (Programmable Digital Computer) உருவாக்கத்திற்கு வழியமைத்தன.

1943களில் இவ்வாறான கணனிகள் உருவாக்கப்பட்டன. செயற்கை நுண்ணறிவினை செயற்படுத்துவதற்கான வாய்ப்பினைக் கணினிகளால் வழங்கக் கூடியதாக இருந்தது. "அலன் ரியூறிங்" அவர்கள் 1947ல் செயற்கை நுண்ணறிவு பற்றி ஒரு உரையினை ஆற்றினார். அவரே செயற்கை நுண்ணறிவு பற்றிய ஆராய்ச்சி இயந்திரங்களை உருவாக்குவதிலும் பார்க்க

கணினிச் செயலொழுங்குகள் (Computer Programs) மூலம் சிறப்பாக மேற்கொள் ளலாம் என்று தெரிவித்தார். செயற்கை நுண்ணறிவு என்ற ஆராய்ச்சித்துறையானது 1956ம் ஆண்டு அமெரிக்க டார்ட் மௌத் (Dart Mouth) கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற மாநாட்டில் உருவாக்கப்பட்டது. "ஜோன் மக்கார்த்தி" (John McCarthy, Marvin Minsky, Allen Newell, Herbert Simon) உள்ளடங்கலாக அம் மாகாநாட்டில் பங்கு பற்றியோர் செயற்கை நுண்ணறிவு பற்றிய ஆராய்ச்சியின் முன்னோடிகள் எனலாம்.

கடந்த 60 வருடங்களில் செயற்கை நுண்ணறிவு மிகவும் பெரிய அளவில் வளர்ந்திருப்பினும் மனித நுண்ணறிவின் சிறப்பினை அடையவில்லை என்றே கூறவேண்டும். அனுபவம் மிக்க மனிதர்களால் மட்டுமே ஆற்றக்கூடிய பல பணிகளினை செயற்கை நுண்ணறிவு மூலம் மிகவிரைவாகச் செய்யக்கூடியதாக உள்ள அதேவேளை குழந்தைகளால் செய்யக் கூடிய பல வேலைகளைச் செயற்கை நுண்ணறிவு தற்போதும் செய்ய முடியா துள்ளது.

கணினிகள் மிகுந்த கணித்தல் வேகமும் பாரிய நினைவகங்களையும் கொண்டதாக இருப்பினும் அதனது திறனானது கணினிச் செயலொழுங்கின் திறனில் தங்கியுள்ளது. ஒரு குறித்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கான கணினிச் செயலொழுங்கின் திறன், அச்செய லொழுங்கை எழுதியவரின் குறித்த பிரச்சினையை எவ்வாறு தீர்க்கலாம் என்ற அறிவிலும் அவ்வறிவினை எவ்வாறு செயலொழுங்கின் மூலம் செயற்படுத்தி யுள்ளார் என்பதிலும் தங்கியுள்ளது. இவை யிரண்டுமே செயற்கை நுண்ணறிவின் ஆராய்ச்சித் தளமாக விளங்குகின்றது. மனிதன் தனது பல நுண்ணறிவுச் செயற்பாடுகளை மேற்கொள்கின்றான் என்பது பற்றிய பூரணமான அறிவு இன்றும் எட்டப்பட வில்லை. மனித நுண்ணறிவு மட்டத்தினை செயற்கையாக அடைவதற்கு பல புதிய எண்ணக்கருக்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பது பல செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும். தற்போது அடையப்பட் டிருக்கும் செயற்கை நுண்ணறிவானது பெரும்பாலும் கணினிகளின் அபரிதமான வேகத்தினாலேயே அடையப்பட்டி ருக்கின்றது. சதுரங்கம் விளையாடக்கூடிய கணினிச் செயற்பாடுகளை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். இவை உலகின் தலை சிறந்த வீரர்களுடன் போட்டி யிடக்கூடியவையாக உள்ளன. ஆனால் இவை பல்லாயிரக்கணக்கான கணித்தல், தேடல் மற்றும் ஒப்பிடல்களை ஒரு சில நொடிகளில் மேற்கொண்டு ஒவ்வொரு நகர்வினையினையும் செய்கின்றன.

செயற்கை நுண்ணறிவு ஆராய்ச் சியானது பல பிரிவுகளில் வெவ்வேறான பிரச்சினைகளைக் கையாளுவதற்காக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அவ்வா றானவற்றில் மிக முக்கியமானவையாக துணிதல் மற்றும் அதற்கான காரணம் அறிதல் (Deduction and Reasoning) அறிவுவகைக் குறித்தல் (Knowledge Representation), திட்டமிடல் (Planning) சுயகற்றல் (Learning) உரு

வகை அறிதல் (Pattern Recognition), பகுத்தறிவு (Commonsense Knowledge and Reasoning) இயல் மொழி செயலாக்கம் (Natural Language Processing), இயக்க மும்கையாளும் திறனும் (Motion and Manipulation) ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

செயற்கை நுண்ணறிவானது பல்வேறுபட்ட துறைகளில் மனிதனுக்குத் துணையாற்றி வருகின்றது. தன்னியக்க இயந்திரங்கள், சிக்கலான பிரச்சினைகளில் முடிவுகளை எடுக்கக்கூடிய தன்னியக்கத்தொகுதிகள் மற்றும் முடிவுகளை எடுப்பதற்குத் துணை செய்யும் தொகுதிகள் போன்றன குறிப்பிடப்படலாம். செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சியானது மென்மேலும் விரிவடைந்து மனிதசமுதாயத்தின் வளர்ச்சியில் காத்திரமான பங்காற்றும் என்பதில் ஐயமில்லை.

# My School

Miss.J.Priyanka
Grade 9



The name of our school is J/Urumpirai Hindu College. It is one of the leading schools in Kopay division. It is in Urum pirai. It is situated close to the Palaly road. It is big mixed school. We have big building. There are classes from grade 6 to 13.

There are about six hundred students and thirty five teachers in our school. Our principal is Mr.A. Eswaranathan. There are about twenty five classrooms, nice staffroom for the teachers and the school office with modern facilities. There is a big play ground and we play cricket, football, volleyball, and netball. My school is famous for the sports. There is a laboratory with more facilities. My school has a good library with many valuable books.

We have an agriculture science laboratory and home economic lab with more facilities. We have separate classrooms and with modern facilities for the aesthetic subjects. There are western music band in my school.

There are two computer units and an Audio visual room with modern instruments. I am very proud of my school. I am also proud to say, it will reach its century in 2011. Now we have a new assembly hall with more facilities. The motto of my school is "To Thine own self be true"

# இளையோரே கேளீர்!

செல்வி.க.பவானிதேவி
தரம் 13 (2011)
கலைப்பிரிவு



நாளை நலம் பெற
ஞாலம் தோள் தூக்கும்
நல்லோரே
கடனுரைப்பேன் கேளீர்!
பரமன் தந்த மானுடம்
அது மிகப் புனிதம்
கண் போற் காத்தல்
பாரில் நம் கடனே.

வேண்டா நாகரிக மோகம்
இளையோரே நமக்கேன்?
கூச்சமின்றிக் கும்மாளமிட்டு
குதூகலிக்கும் உம் மதியென்ன?

எண்ணு மெழுத்தும் மிகவே
காக்கும் உனக்கு கேவலம்
பெண்ணும் மதுவும்
இன்று எதற்கு?

பொன்னான பொழுதுகள்
வீணாக்கி மண்ணில்
வாழ்வு தொலைக்க
உமக்கு மதியெங்கு போயிற்று?

பண்பாடு தொலைந்து
பரிதவித்தீர் பாரிடை நங்கையரே
அநாகரிகச் சாக்கடையில்
நழுவி நீர் விழுந்தீர்.

இளமை துள்ளியது
முதுமையை அவமதித்தது
அறனும் நல்வாழ்வும்
அறியாப் பொருளாச்சு

இதுவே முடிவென்றால்
மோட்சம் எங்கு எமக்குண்டு?
நீர் நீக்கிப் பாலுண்ணும் பறவை
தீது நீங்கி நாம் சிறப்பது பெருமை.

# Yoga

Mr.K.Ketheeswaran (Lecturer)
Sports Science Unit
University of Jaffna



Yoga is the richest and noblest legacy the ancient Indians have gifted to the World .It is a timeless programatic science; It is an expermental science; it is an age old science; It is a culture- cum-science; It is the grandest of all sciences; It is the science of the integral man; It is the science of sciences. It is the mother of all sciences; Yoga is the culture of tomorrow.

Yoga is a method of education in the society. It is an art of successful living. It is a way of healthy living at all levels. It is a tool for positive change. It is the Sovereign remedy for all worldly miseries. It is a voyage of discovering truth or knowing the reality. It is a utilitarian commodity. Yoga is a total experience of human life. Thus, Yoga is creation. Yoga is intimate and ultimate.

The word yoga is derived from the Sanskrit root "Yuji" meaning to bind, to join, to attach, to merge, to connect, to add, to meet, to establish link, to use, to yoke, to concentrate, one's attention on, to use and to touch, to apply and to contact. It also governs the Latin words 'iungere' and 'iugum', the French 'joug' and so on.

The meaning of yoga is union or communion or to tie the strands of the mind together or discipline or hold fast or meditation in the sense of union with the supreme Being or to come together.

Yoga means the union of the imperfect self with the divine self. It is the union of individual self (jivatma) with the universal self (paramatma). It is the union of individual will with the universal will. It is the Union of individual consciousness with the

universal spirit. Yoga is the union of individual soul with the unioversal soul. Yoga leads man from the ignoble to noble. Yoga transforms a brute man into a godly man.

The quality of one's life depends upon the quality of work he or she does. Fitness enhances the quality of life. In order to improve one's fitness, we ought to practice yoga. Fitness in the sense, the holistic approach-physical, mental, moral, emotional, social and spiritual.

In today's so called modern society, most of the people suffer from various sophisticated and incurables ailments which were not reported by ancient people. The stress, an overused phenomenon has found a firm place in our new age vocabulary, just as fast food, junk bonds or software packages have. Yoga is a needed and a powerful remedy not only for the day-to-day stresses but also to overcome niggling health problems.

Medicine can relieve us for the time being, but there is no tablet to prevent premature death. Yoga cures diseases and controls premature death. It is strange to note that all the methods of modern treatment fail, the yogic treatment succeeds. Chronic diseases are never cured radically by the medical process can cure it.

India today is in need of a strong and healthy race of persons. Regular and judicious practice of the reliable yogic exercises is needed for a stronger and healthy race.

Western traditions of health and healing have tended to separate body and mind. The Yoga tradition has a very strong link between the two.

Many of our thoughts are negative. We all develop fixed attitudes, behaving that there are certain challenges in life that we can't cope with sucessfully. Yoga practice will distance your mind from day-to-day anxieties and give you the opportunity to view challenges and problems.

## Yoga is needed for sports too

There are many naturally gifted sports persons who fail to achieve their full potential. They may lack total concentration and control over their

emotions. Yoga thus is needed to improve the 'mental' game.

Many sports such as golf, tennis and squash encourage the leading side, whether you are right-or left-handed. Practicing these sports develops the side holding the club or racket more than the 'passive side' resulting in stronger muscles on one side of the body. Yoga practices are essential to help to redress this imbalance and the problems it can cause.

Today, many of the people do not know what the goal of life is. They do not relize the purpose of life. The science of Yoga, a practical and scientifically prepared method is needed for the people to realize their goal of life- to achieve or to find out truth along with perfection, peace, joy, happiness and immortality.

**SCHOOLS OF YOGA IN THE NEW MILLENIUM**

Divisions of yoga and practices of yoga have become more numerous and within the 20 years more influential such as

- Flow yoga (focuses on cultivating the qualities of balance, flexibility, strength end endurance on both psychological domains)
- Iyengar yoga (focuses on promoting on overall state of well ness, health, rejuvenation, regulating breathing, adapting yoga poses therapeutic values and other physical conditions with the use of blocks, chairs and other props.) It is developed by B.K.S. Iyengar, the michaelangelo of yoga.
- Viniyoga(A methodology for developing personal practice developed by T.K.V.Desikachar; makes relevant to every person and every situation adapted to suit individual needs and circum stances; slow, repetitive move ments linked with breathing).
- Ashatanga yoga (taught by Sri. K. Pattabhi jois involves synchro nizing breathing with progressive series of poses- a process producing intense internal heat and a profuse, purifying sweat; it is a gymnastic type of yoga. It is the fast, atheletic power yoga.
- Power yoga (incorporates Sun salutations, floor exercises, back bends and standing postures for high energy)

- Ruff yoga or doga (allows one to meditate with dogs)
- Yogalatis(a combination of Yoga and Pilates, power, artistic and passion yoga)
- Cardiac yoga(combination of Meditation, Pranayama and stationary exercises meant for cardiac patients)
- Suryayog(combination of yoga and Meditation)

A number of new techniques like Christian Yoga, Anusara Yoga, Sivananda Yoga, yoga fit, Kriya yoga, Kundalini Yoga, Bikram Yoga(Hotyoga), stretch kit(Runners) yoga, Badminton yoga, Golf yoga, Kalari yoga, Siddha yoga, Hatha fusion, Tibetan yoga, yoga-lates, steam yoga, Sound yoga, Cat Yoga, Laughter Yoga, Tai-chi yoga, Aerobic yoga, Dance yoga, Nithya yoga, Arka yoga, Krida yoga are available to satisfy personal needs.

Yoga thus, contributes to wholeness and wellness. There are many different paths of Yoga. Assessment is to be done whether the style and level is right and then to be continued.

# Life long Happiness

- Master. P.Jasinthan
Grade 10A



*If you want happiness*
*For an hour watch comedy*

*If you want happiness*
*For a day be with your friends*

*If you want happiness*
*For a week stay outside*

*If you want happiness*
*For a month learn to do something*

*If you want happiness*
*For a year earn your self*

*If you want happiness*
*For life time serve others*

# ஆசிரியர் இடமாற்றம்

திரு.அ.பஞ்சலிங்கம்,
முன்னாள் அதிபர்,
கொக்குவில் இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.



ஆசிரியர் சேவை பிறஅரசசேவைகளிலிருந்து வேறுபட்டதென்பதை உணர வேண்டும். முக்கியமாக கல்வித்திணைக்களங்கள், கல்வியமைச்சு ஆகியவற்றிலுள்ள அதி காரங்களும் கொள்கை வகுப்பாளர்களும் உணரவேண்டும். ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பிற அரச சேவையைப் போன்று கொள்கை வகுத்து ஆசிரியர்களை இடமாற்றம் செய்வது பாதிப்பினை ஏற்படுத்தும். குறிப்பிட்ட ஓர் இடத்தில் சேவையாற்றிய காலத்தை வைத்து ஆசிரியர்களை இடமாற்றம் செய்யும் பொழுது ஏற்படும் பாதிப்பினைக் கூறுவதற்குப் பின்வரும் எடுத்துக்காட்டு ஒன்றினைப் பார்ப்போம்.

ஆசிரியர் ஒருவர் நேரம் தப்பாது வகுப்பிற்குச் சென்று கற்பித்தலில் ஈடுபடுபவர். அவர் தமது பாடத்தில் பாண்டித்தியம் உள்ளவர். கற்பித்தல் திறனும் உள்ளவர். அதே பாடசாலையில் மேற்கூறப்பட்ட தன்மைகள் உள்ள இன்னொரு ஆசிரியரும் உள்ளார். அவர் கூடிய காலம் அங்கு சேவை செய்தவர். அப்பாடசாலையின் சமூகத்தினை நன்கு அறிந்தவர் மற்றும் குடும்பநிலை, பெற்றோரின் தொழில் மனப்பாங்கு போன்றவற்றை நன்கு அறிந்தவர். இதனால் தமது பொறுப்பிலுள்ள பிள்ளைகளுக்கு வழிகாட்டியாகவும், ஆலோசகராகவும் செயற்படுபவர். சமூக மற்றும் பாடசாலை உறவினை மேம் படுத்துபவர்.

இவ்விருவரிலும் பாடசாலைக்கும் மாணவர்களுக்கும் கூடுதலாகப் பயன் படக்கூடிய ஆசிரியர் இரண்டாமவர் என்பதில் சந்தேகமில்லை. இருவரும் இடமாற்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டவராயின் இரண்டாமாவருக்குத்தான் முதலில் இடமாற்றம் கிடைக்கும். காரணம் அவர் தான் ஒரே பாடசாலையில் கூடிய காலம் சேவையாற்றியுள்ளார். பாதிப்புக்குள்ளாவது மாணவர்களும் சமூகமும்தான். இரண்டாமவர் பாடசாலைச் சமூகத்தை நன்கு அறிவதற்கு எவ்வளவு காலம் முயற்சித்திருப்பார்? இன்னொருவர் இவரின் இடத்தை நிரப்புவாரா? அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்? சில சமயங்களில் அதிபருக்கும், ஆசிரியருக்குமிடையே முரண்பாடு நீடித்தால் சில இடமாற்றம் செய்ய வேண்டிய தேவை ஏற்படலாம். அவ்வேளையில் பாடசாலையின் நலனை முன்னிலைப் படுத்தியே இடமாற்றம் செய்வது சிறந்தது.

வினைத்திறன் அற்றவர் சிலர் அதிபர்,

ஆசிரியர் தொடர்புக்குப் பங்கம் ஏற்படுத்து பவர் (அதிபராக இருக்கலாம் அல்லது ஆசிரியராக இருக்கலாம்) சமூகஉறவு ஏற்படுத்த முடியாதவர் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் குறைஉள்ளவர். இடமாற்றத் திற்கு அல்லது ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்படலாம்.

தனியார் கல்லூரிகள் அறுபதுகளுக்கு முன்னிருந்த, அதாவது அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்கமுன் அரசமானியம் பெற்றபாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களை ஒருகணம் நோக்குவோம். மேற்கூறப்பட்ட பாடசாலையின் அதிபர்கள் எவ்வாறு தெரிவு செய்யப்பட்டனர் என்பதைப் பார்ப்போம்.

இவர்கள் அநேகமாக ஒரே பாடசா லையில் உபஅதிபராகக் கடமையாற்றி, பல வருடங்களின் பின் அதே பாடசாலையில் அதிபராகப் பதவியேற்றார்கள். அவ் அதிபர்கள் தடம் பதித்தவர்கள் இன்றும் அவர்களை அப்பாடசாலைகளுடன் இணைத்து, பாடசாலைச் சமூகம் பெருமைப் படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இத்தனைக்கும் காரணம் அவர்கள் நெடு நாட்கள் ஒரே பாடசாலையில் கடமை யாற்றியமையேயாகும்.

முன்னைய அதிபர் தெரிவு முறைமை யின்படி ஒருவர் ஒரு பாடசாலையின் அதிபராக நியமிக்கப்படவுள்ளமை அவருக்கு பல வருடங்களுக்கு முன்பே தெரிந்துவிடும். அவர் அதிபர் பதவிக்குத் தன்னை முன்கூட்டியே தயார் செய்து கொள்வார். தனக்குப் பரீட்சயமான ஒரு சூழலிலோ சமூகத்திலோ அதிபராகப் பதவியேற்கும் போது அவரின் செயற்பாடு சுலபமாகவும் திறமையாகவும் அமை கின்றது.

ஆனால் இன்றைய அதிபர் தெரிவு முறையின்படி அதாவது பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படும் பொழுது இன்று ஆசிரியராக கடமையில் இருக்கும் ஒருவர் பரீட்சையில் தேர்ச்சியடைந்தும் அதிபராகத் தெரிவாகி அடுத்த கணமே வேறு பாடசாலைக்கு மாற்றலாகிச் செல்கின்றார். புதிய பாடசாலையில் புதிய சூழலில் அனுபவமற்ற நிலையில் ஒருவர் அதிபரா கின்றார். அவரால் தமது பாடசாலையை திறம்பட முகாமைத்துவம் செய்ய முடியுமா? இன்றைய கல்வி நிலைக்கு இப்படியான நியமனங்களும், மாற்றங்களும் காரணமாகக் கொள்ள முடியும்.

ஒரு குறிப்பிட்ட உருவான சூழலில் நன்கு செயற்பட்ட ஓர் ஆசிரியர் இன்னொரு சூழலுக்கு மாற்றலாகும் பொழுது முன்னைய செயற்பாடு இருக்குமென எதிர்பார்க்க முடியாது. நான் இங்கே கூற முற்படுவது ஆசிரியருக்கோ அல்லது அதிபருக்கோ இடமாற்றம் செய்யக்கூடாது என்பதல்ல. ஆனால் பிறஅரசசேவைகளைப் போலல் லாது ஆசிரியர் சேவை வேறுபட்டது. எனவே அதிபர், ஆசிரியர் இடமாற்றங்கள் நன்கு திட்டமிடப்பட்டு ஒவ்வொரு தனி யாளினதும் தன்மை, சேவை, பயன்பாடு மற்றும் பாடசாலைகளின் தேவை ஆகிய வற்றைக் கருத்தில் கொண்டு செய்யப்படுவது அவசியம்.

"மாற்றத்திற்காக மாற்றம் செய்வது, ஆசிரியர் சேவைக்குப் பொருத்தமற்றதாகும்."

# புவியும் ஓசோன் படையும்

செல்வி.ச.றகிதா
தரம் 10A



நாம் வாழும் புவி 6 மில்லியன் மக்கள் சனத்தொகை கொண்ட கோளாகும். இக்கோள் மாத்திரமே பொருத்தமான வெப்பநிலையையும், நீரையும் நாம் சுவாசிப்பதற்கும் பல்வேறு உயிரினங்கள் வாழ்வதற்கும் ஆதாரமாக உள்ளவளிமண்டலத்தைக் கொண்டுள்ளது. சூரியனிலிருந்து பூமியின் தூரம் 149.6 மில்லியன் கிலோமீற்றராகும். சூரியனுக்கு மிக அண்மித்த தூரம் 147.2 மில்லியன் கிலோமீற்றராகும். சூரியனுக்கு மிக அதிகரித்ததூரம் 152.2 மில்லியன் கிலோமீற்றராகும்.

புவியானது சூரியனுக்கு மிக அண்மித்ததாகவோ, மிகத்தொலைவிலோ இல்லாது மத்திமமான மத்திய கோட்டுப் பிரதேசத்தில் சூரியன் உச்சங்கொடுக்கும் காலம் மாற்றமடைகிறது. இதனால் வட அரைக்கோளத்திலும் தென் அரைக் கோளத்திலும் மாறுபட்ட பருவகாலம் நிகழ்கிறது. புவி தனது அச்சில் தன்னைத் தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் நீள்வட்டப்பாதையில் சுற்றி வருகின்றது.

ஞாயிற்றுத் தொகுதியிலிருந்து புவியை நோக்கிவரும் சூரியக் கதிர்களில் உள்ள நச்சுக்கதிர்களை உறிஞ்சிக் கொள்வதன் மூலம் உயிர் வாழ்வதற்குப் பொருத்தமான விதத்தில் செயற்படும் மெல்லிய வாயுப்படை, ஓசோன்படையானது புவி மேற்பரப்பில் இருந்து 17-50Km க்கு அப்பால் படை மண்டலத்தில் ஒரு பாதுகாப்பு வலயமாக நிலை பெற்றிருக்கின்றது. 90% ஓசோன் வாயுக்கள் படைமண்டலத்துக்குள்ளேயே காணப்படுகின்றது. 1940ல் அந்தாட்டிக் பகுதியில் இப்படையில் துவாரம் ஏற்பட்டுள்ளது என கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

**ஓசோன் படை சிதைவுக்கு காரணம்**

* எரிபொருட்கள் தகனமடைதல்.
* குளிர்சாதனப் பெட்டியில் பயன்படுத்தப்படும் குளோரோபுளோரோ காபன் வளியில் வந்து சேரல்.
* மெதேன், கீலோன் போன்ற நச்சு வாயுக்கள் வளிக்கோளத்தை வந்தடைதல் போன்ற காரணிகளால் ஓசோன் படை சிதைவடைந்து வருகின்றது.

ஓசோன் படை சிதைவடைந்து வருவதால், பாதகமான விளைவுகள் பல ஏற்படுகின்றன. அவையாவன.

* காலநிலை மாற்றம்.
* பயிர் விளைச்சல் குறைவடைதல்.

* கடல்தாவரம் அருகிச் செல்லல்.
* தோல் புற்றுநோய் ஏற்படல்.
* கண்நோய் பரவுதல்.

**ஓசோன்படை பாதுகாப்பில் உலக நாடுகளின் பங்களிப்பு**

ஓசோன் படை விரைவாகச் சிதைந்து வருவதால் ஏற்படும் பாதகமான விளைவுகள் பல ஏற்படுகின்றன. ஒரு நாட்டில் மாத்திரம் ஓசோன் படையைப் பாதுகாக்க முடியாது என்பதனால் சர்வ தேசமட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் பயனாக உலகளாவிய ரீதியில் பல மாநாடுகள் நடத்தப்படுகின்றன. அவ்வாறு நிகழ்ந்த மாநாடுகளாக,

* 1985ல் "வியன்னா" மாநாடு
* 1987ல் "மொன்றியல்" கூட்டமைப்பு
* 1997ல் "கியோடோ" உடன்படிக்கை

என்பன அவற்றுள் சிலவாகும்.

இவ்வமைப்புக்களின் மூலம் ஓசோன் படையில் ஏற்படும் துவாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன.

# The Foolish Farmer

Miss.V.Suviththa,
Grade-11C



Once there was a foolish farmer lived in a village. His name was Bhola. He grew cotton in his fields and sold it in the market. One day he brought a big bundle of cotton to the market but no one bought it. Everyone looked at the cotton and said, "It is dirty". Bhola was sad and he returned to his village in the evening.

On his way back to the village Bhola saw a goldsmith in his shop. He was blowing the fire. Bhola went to him and asked, "What are you doing?" The goldsmith replied, "Don't you see? I am blowing the fire. I will put this dirty gold will become clean. It will shine then."

Bhola was pleased. He left the goldsmith's shop and ran to his house with the bundle of cotton on his head. He made fire and put his cotton into it. The fire burnt the cotton to ashes. That was the end of Bhola's foolish hopes.

# குரு பக்தி

திருமதி.செ.பத்மினி,
ஆசிரிய ஆலோசகர்,
யாழ்.கல்வி வலயம்.



இறைவனை விட ஒரு பெரியவர். இறை பக்தியைவிட குருபக்தி மேலானது. இந்த விடயம் நீண்ட நாட்களாகவே பலரிடையே சந்தேகத்தை எழுப்பும் வினாவாக உள்ளது. ஆம்! இறைவனை நாம் கண்களாற் காணமுடியாது. (நாம் எந்நேரமும் எம் உயர்ச்சி பற்றியே சிந்திப்பவராகவும், ஞானமுடையவராகவும் உள்ளவர் குரு.) அப்படிப்பட்ட குரு எமக்கு அமைந்துவிட்டால், இறைவனிடம் இருந்து எமக்குக் கிடைப்பது குரு மூலம் கிடைத்து விடுகின்றது. எனவே இறைவன் மீதும் பக்தி செலுத்து என்பதை எமக்குக் கூற எம் முன்னோர்கள் கையாண்ட வழியே இது. இந்த உலகம் எல்லோரும் இறைவனின் திருவடியைப்பற்றியுள்ளமையை யாமறிந்த விடயமே. இறைவனிடம் உள்ள அனைத்து உத்தமகுணங்களும் குருவிடம் உண்டு. இறைவன் தூய்மையானவர். எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர். அந்த இறைவனை எம்மாற்காணமுடியாது. எனவே இறைவன் வடிவாக உள்ள குருவின் பாதாரவிந்தங்களைப் பற்றினால் இறை வழிபாட்டின் மூலம் கிடைக்கும் அனைத்து அனுகூலங்களும் எம்மை வந்தடைகின்றன. அதனால்தான் குரு பக்தியானது மேலானது என முன்னோர்கள் இயம்பி உள்ளனர்.

எம்மிடையே குருபக்தி இருக்க வேண்டும். ஆனால் நாம் தெய்வத்தை மறக்கக் கூடாது. ஏனெனில் அந்தக் குருவையும், எம்மையும் இணைத்து வைப்பவனே அந்த இறைவனாவான். தெய்வ அனுக்கிரகம் எமக்கு இல்லாவிட்டால் நாம் எப்படி நல்ல குருவைப் பெறுவது? அது முடியாத விடயம்.

"துஸ்பம் த்ரயமேவைத் தேவானுக்ரஹ ஹேதுகம்
மனுஷ் யத்வம் முமுக்ஷ/த்வம்
மஹாபு ருஷஸம்ச்ரய"

தெய்வ அனுக்கிரகத்தால் மனிதப்பிறவி, சத்தியத்தை அறிந்து கொள்ளல், சிறந்த குரு கிடைத்தல் போன்றன இடம் பெறுகின்றன. அந்தக்குருவுக்கு குரு, அவருக்கு குரு என நாம் எண்ணிப் பார்த்தால் இறுதியில் இறைவனே அனைவருக்கும் குரு ஆவான். எனவே தான் பரம்பொருளாகிய குரு, எமது குருவின் வடிவில் வந்து எமக்கு உபதேசிக்கின்றான். காலத்தால் கட்டுப் படாத ஈசனே அனைவருக்கும் குரு. எனவே குருவின் மீது நாம் வைக்கும் பக்தி இறைவன் மீது நாம் வைக்கும்

பக்திக்கு ஒப்பாகையால் தெய்வ அனுக்கிரகம் தாமாகவே வந்து சேரும்.

குரு பக்தியானது மிகவும் விசேடமானது. நல்ல குருநாதர் எமக்கு கிடைக்கவில்லை என்றாலும், எமக்கு கிடைக்கும் குருவின் மூலம் நாம் இறை பக்தியின் உச்சநிலையை அடைய வேண்டும். எமது இறைபக்தியினால் இறைவனுக்கோ, குருவுக்கோ எவ்வித இலாபமும் இல்லை. எமக்கே அதிக இலாபம், நாம் அனைத்திற்கும் ஆசைப் படுகின்றோம், சஞ்சலப்படுகின்றோம், மனதை உறுதியாக வைத்திருக்க முடியாதவர்களாக உள்ளோம். நாம் எப்போதும் தூய்மையாக ஞானம் நிறைந்த இறைவனை நினைத்தால் அதே நிலையை நாமும் அடையலாம். ஒரு குருவை நாம் இந்த நிலையில் வைத்து நோக்கினால் எம் ஆன்மா பிரகாசிக்கும். உண்மையான ஆனந்த நிலை விளங்கும். எம் மனம் பக்குவப்படும். இதற்கு குருபக்தியும், இறை பக்தியும் எமக்கு அவசியம். இதையே எம் சாத்திரங்கள் கூறுகின்றன.

குருவின் அனுக்கிரகத்தால் ஞானம் கிடைக்கும் என சாந்தோக்கிய உபநிடதத்தில் "ஆசார்யாவின் புருஷோவேத" எனக் கூறப்பட்டுள்ளது. ஆசாரியனைப் பெற்றவன் ஞானத்தை அடைகின்றான் என்பது அதன் பொருளாகும். கண்கள் கட்டப்பட்ட நிலையில் ஒருவன் பாலைவனத்தில் விடப்பட்டால் அவன் தன் இலக்கை அடையமுடியாது. பின் ஒருவன் வந்து கட்டை அவிழ்த்து, போகும் வழியைக் கூறின் அவன் இலகுவாக தன் இலக்கை அடைவான். இது போலவே குருவின் உபதேசத்தால் நாம் எங்கிருந்து வந்தோமோ அங்கு போய்ச்சேர முடியும் என சாந்தோக்கிய உபநிடதத்தில் கூறப்பட்டுள்ளது. ஒருவனுக்கு எத்தனை பெருமைகள் இருந்தாலும், தன் குருவின் பாதாரவிந்தங்களைப் பணியாவிட்டால் அதனாற் பயனில்லை.

எமது இதயத்திற்கு இன்பம் ஊட்டுவது இறை பக்தி. இறைவனிடமும், குருவிடமும் பக்தி செலுத்தினால் மனம் தானாகச் சாந்தமடைகிறது. மனம் குரு பக்தியில் நிறைந்திருந்தால் உடனே பலன் கிடைக்கும். எமது அஞ்ஞானம் தேய்ந்து ஞானம் உதயமாகும் இடம்தான் குரு வீற்றிருக்கும் இடம்.


எமது ஆன்மா பிரம்மத்தோடு ஐக்கியப்படும் அதற்கு வழிகாட்டுவது குரு. இதனாலேயே அனைத்து சமயங்களிலும் குருபக்தி சிறப்பாக சொல்லப்படுகின்றது.

**"ஸத் வித்வான் உபஸருப்யதாம்**
**ப்ரதிதினம் தத்பாதுகா ஸேவ்யதாம்**
**ப்ரஹ்மை காக்ஷரம் அர்த்யதாம்**
**ச்ருதிசிரொவாக்யம் ஸமாகர்ண்யதாம்"**

சந்தான, வித்தான குருவை வரிந்து கொள். தினமும் அவருக்கு பாதபூஜை செய், அவரிடமிருந்து உபதேசம் எல்லாம் வாங்கிக் கொள்வாயாக! என்பதே இதன் பொருளாகும். எனவே நாம் குரு பக்தியிற் சிறந்து எல்லாம் வல்ல பரம்பொருளை மகிழ்வித்து அவன் திருவடி எய்துவோமாக.

# ஆங்கிலக்கல்வியின் அவசியம்

செல்வன்.கு.சென்போல்,
தரம் 13 (2011),
கணிதப்பிரிவு.



"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பது ஔவையாரின் வாக்காகும். இளமைப் பருவத்திலே நாம் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்றல் அவசியமாகும். இளமைப்பருவத்திலே தமிழோடும் ஆங்கிலக் கல்வியையும் கவனமாகக் கற்று சிலைமேல் எழுத்துப்போல அழிக்க முடியாததாகப் பதித்தல் வேண்டும். சிறுவயதில் கற்கின்ற கல்வி நமது உள்ளத்தில் நன்றாகப் பதிகின்றது. "தூய்மையானதும் புதியதுமான துணியில் சாயம் நன்றாகப் பதிவதைப் போல" இளமையில் ஆங்கிலத்தைக் கற்க வேண்டும். எனவே தான் இளமைப் பருவத்தை கல்விக்குரிய பருவமாக் கினார்கள்.

"இலட்சியமற்ற மனிதன் மிருகத்திற்கு சமமானவன்" என்பது சுவாமி விவேகானந்தரது கருத்தாகும். ஒவ்வொரு மனிதனுக்கும் ஓர் இலட்சியம் அவசியம். அந்த இலட்சியத்தை அடையப் பக்க பலமாகக் கை கொடுப்பது ஆங்கில மொழி என்றால் மிகையாகாது. உலகில் பொது மொழியாக ஆங்கிலம் காணப்படுகின்றது.

இன்று சர்வதேச அரங்கில் நடை பெறும் அனைத்து நிகழ்ச்சிகளையும் நாம் இணையத்தின் மூலம் விரிவாக அறிந்து கொள்வதற்கு ஆங்கில மொழியே பயன் படுகின்றது. இன்றைய உலகில் அடிக்கடி விஞ்ஞானக்கண்டுபிடிப்புக்கள் நிகழ்கி ன்றன. நிலாவைக் காட்டி குழந்தைக்கு அன்னம் ஊட்டிய காலம் மாறி சந்திரனில் காலடி வைத்தது மாத்திரமன்றி, அதனையும் மிஞ்சி செவ்வாயில் செயற்கைக்கோள் இறங்கியது வரை விஞ்ஞானத்தின் சாதனைகள் பல ஆகும். இவற்றை உடனு க்குடன் அறியவும் அவை பற்றி விரிவான ஆராய்ச்சிகளையும், ஆய்வுகளையும் மேற்கொள்ளவும் ஆங்கில மொழியில் காணப்படும் நூல்கள், பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளுமே உதவுகின்றன.

இன்றைய இளைஞர்கள் அதிவி வேகிகள். அவர்களிற்கு தேவையான அறிவைப்பெற தமிழ் மொழியில் போதியளவு அறிவியல் நூல்கள் காணப் படுவதில்லை. அவர்களின் ஆராய்ச்சிக்குத் தமிழில் உள்ள நூல்கள் 'யானைப் பசிக்கு சோளப் பொரி' போன்றே உதவுகின்றன என்பதை எவரும் மறுக்க முடியாது.

எமது அரசு இன்று ஆங்கில மொழியைக் கட்டாயமாக்கியுள்ளது. இன்று உலகம் சுருங்கிவிட்டது. மனிதன் தன் இடத்திலிருந்தவாறே வேலைகளைச் செய்து முடிப்பதற்கு கணினிகள் கண்டுபிடிக்கப் பட்டுவிட்டன. இவற்றை பயன்படுத்த

ஆங்கில மொழியே உதவுகின்றது. இவற்றிற்கான விரிவுரைகள் ஆங்கிலமொழி யிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இன்று பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களி லும் கூட பாடங்களுக்கு ஆங்கில மொழியி லேயே விரிவுரைகள் நடைபெறுகின்றன.

மாணவர்கள் பல்வேறு துறைகள் ரீதியாகவும் தகவல்களையும், பல நூல்களின் வாயிலாகத் திரட்டக்கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தகவல்களைப் பெறத் தமிழில் காணப்படும் நூல்களை விரல்விட்டு எண்ணலாம். ஆனால் ஆங்கிலமொழியில் இத்தகைய நூல்கள் அதிகமாகக் காணப் படுகின்றன. இன்றைய கல்வியை எடுத்து நோக்கினால் ஆங்கிலம் தெரிந்த மாணவனே முதன்மை மாணவனாகத் திகழ்கின்றான். நாம் உலகில் எப்பாகத்திற்குச் சென்றாலும் எவருடனும் சரளமாக ஆங்கிலத்தில் உரையாட முடியும். ஏனைய மொழிகளில் உரையாட முடியாது. இலத்திரனியல் வர்த்தகம் போன்றவற்றைக் கையாள ஆங்கில மொழியே உதவுகின்றது. ஆங்கிலம் கற்ற மனிதனே பூரண மனிதனாக இன்றைய உலகில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றான்.

இன்றைய உலகில் மனிதனுடன் பின்னிப்பிணைந்துள்ள விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் ஆங்கில மொழியின் உதவியுடன் எமக்குக்கிடைத்தவையே. இன்று உலகில் ஒரு மூலையில் உள்ள பல்வேறு நபர்களுடன் தொடர்புகொள்ள நாம் ஆங்கில மொழியையே பயன்படுத்த வேண்டும். வளர்ச்சியடைந்த நாடுகளிற்கு சமமாக எமது நாட்டை மாற்றவும், சர்வதேச அரங்கில் நாம் பிரகாசிக்கவும், நவீன இலத்திரனியல் தொழில்நுட்பசாதனங் களைக் கையாண்டு எமது வேலையை இலகுவாக்கி நேரத்தை மீதப்படுத்தவும், இணையத்தின் மூலமாக எமது செயற் பாடுகளை ஆற்றவும், உலகில் நடக்கும் நிகழ்ச்சிகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளவும் நிறைந்த அறிவைப் பெறவும் ஒரு மனிதன் பூரண மனிதனாக வாழ்வதற்கு ஆங்கிலக் கல்வி அவசியமாகின்றது.



# International Language

Miss.K.Vijitha
Grade 12 (2012)



English is an inter national language. It is an essential lan guage, however the knowledge of English for purpose of commu nication is beyond debate. It is an accepted fact that it is the mostly widely spoken foreign language and in order to reap the maximum benefits the knowledge of English is essential. It is linking the all communities by communicating. If a man doesn't have atleast little knowledge in English he will be as a frog in a well. English is used in every Airport, in harbor, in U.N.O and in politic affairs. According to our country there are two racial Tamils and Sinhalese. They completely misun derstand. Because any language is used by anybody as one of the medias. It may be Tamil or Sinhalese, when they speak each other in English different of the language is disappearing.

# யா/உரும்பிராய் இந்துக்கல்லூரியின் கணினி அலகு

கல்விப்புலத்தில் கணினிப்பாவனை துரிதமாக அறிமுகப்படுத்தப்பட்ட வேளை அப்போதைய நாட்டின் சூழல் கணினி வசதியை வழங்கக்கூடியதாய் இருக்கவில்லை. ஆயினும் பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழையமாணவர் சங்கம் என்பவற்றின் அயராத முயற்சியினால் 03.04.2000 இல் கல்லூரியின் மேற்குப்பக்கக் கீழ்த்தளத்தில் கனடா பழைய மாணவர் சங்க நிதியுதவியுடன் கணினி அலகு நிர்மாணிக்கப்பட்டு. அவர்களால் பதினைந்து கணினிகளும் அன்பளிப்புச் செய்யப்பட்டன. அத்துடன் அரசாங்கத்தால் ஐந்து கணினிகள் வழங்கப்பட்டன. இக்கணினி அலகின் தற்போதைய பொறுப்பாசிரியராக திருமதி. ம.மோகனராசன் கடமையாற்று கின்றார். மாணவர்களின் கணினிக்கல்வி விருத்தியை வளர்த்ததோடு, முறைசாராக் கல்விப் பிரிவுக்கும் இக்கணினி அலகு தன்னாலான பணியினை செய்துவருகின்றது. இவற்றின் உச்சப் பயன்பாடுகளை மாணவர்கள் பெற்றிருந்த போதும் பெரும்பாலான கணினிகள் பழுதடைந்து திருத்த முடியாத நிலையில் உள்ளன.

நவீன வசதிகளோடு கூடிய இரண்டாவது கணினி அலகு கல்லூரியின் கீழ்த்தளத்தில் வடக்குப் புறமாக அமைந்த அறையில் 03.04.2009இல் திறந்து வைக்கப்பட்டது. அரசாங்கத்தின் EKSP செயற்றிட்டத்தினூடாக ஐந்து கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. இக் கணினி அலகின் பொறுப்பாசிரியராக செல்வி.சா.இரஞ்சினி கடமையாற்றுகின்றார். மாணவர்களுக்கான கணினிச் செயற்பாடுகள் சிறப்புற நடைபெற்று வருகின்றன. ஆசிரியர்களும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்காகக் கணினிகளைப் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நூலகங்களில் கணினியின் அறிமுகமும், அவசியமும்

திருமதி.மைதிலி விசாகரூபன்,
உதவி நூலகர்,
யாழ்.பல்கலைக்கழகம்.



**நோக்கம்**

கணினிமயமாக்கம் என்பது பற்றிய கருத்து நிலையை விளங்கிக் கொள்ளல், இன்றைய நூலகங்களைக் கணினி மயப்படுத்த வேண்டியதன் அவசியத் தைப் பற்றி கருத்துரைத்தல், நூலகவியல் துறையில் பயன்படும் தன்னியக்க மென்பொருட்களைப் பற்றி (Library Automation Software) அறிதல்.

**முன்னுரை**

இன்றைய சமுதாயம் தகவற் சமுதாயம் (Information Socity) என்று அழைக்கப்படுகின்றது. இன்று நாம் அனைவரும் கணினிப்புரட்சி யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். கணினி எமது வாழ்க்கை முறையை முற்றிலுமாக மாற்றியமைத்துள்ளது. பொதுவாக கணினி பற்றிய வரைவிலக்கணத்தைக் கூறும் போது பின்வரும் இரண்டு கருத்துக்கள் வலியுறுத்தப்படுகின்றன.

கணினி ஒரு மின்னணுச் சாதனம் (Electronic Device)

கணினி ஒரு தகவல் செயலாக்க இயந்திரம் (Information processing machine)

ஆரம்பகாலக் கணினிகள் பெரிய இயந்திரங்களாக இருந்தன. பல்வேறு கடினமான ஆய்வுகளுக்குப் பின்னரே இன்று நாம் காணும் கணினியின் பல்வேறு வடிவங்கள் தோன்றியுள்ளன. இத்துறையில் மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான ஆய்வுகளாலும், தொழி நுட்ப வளர்ச்சியினாலும் கணினிகள் வடிவமைப்பும், திறனும் மாறிய வண்ணமே உள்ளன. பொதுவாக இன்றைய கணினிகளின் புறவடிவ மைப்புச் சிறிதாகவும் அவற்றின் செயற்றிறன் மிக அதிகமாகவும் உள்ளமை அவதானிக்கப்படக் கூடிய தாக உள்ளது.

**கணினி மயமாக்கல்**

கணினியானது பாமரர் முதல் படித்தவர் வரை அனைவராலும்

அறியப்பட்ட ஒரு விடயமாகவுள்ளது. கணினியின் பயன்பாடு தற்போது உலகின் முழுமையும் பரந்து விரிந்துள்ளது. கல்வி, அரசியல், பொழுது போக்கு, வியாபாரம் என்று அனைத்துத் துறைகளிலுமே இது செல்வாக்குச் செலுத்துகின்றது. பின்வருவன போன்ற கணினியின் பண்புகள் அல்லது சிறப்பியல்புகள் காரணமாக எல்லாத் துறைகளிலும் இதனைப்பயன்படுத்தும் ஆர்வம் காணப்படுகின்றது.

* வேகம் (Speed)
* துல்லியம் (Accuracy)
* நம்பகத்தன்மை (Reliability)
* செயல்திறன் (capability)
* தகவல் கொள்ளளவு ( storage capacity)
* சளைக்காத பணியாற்றல் (Diligence)

கணினியின் செயற்றிறன் மிக்க மேற்படி தன்மைகள் நிறைவாகவும் விரைவாகவும் செய்யமுடிகின்றது. கணினியைப் பயன்படுத்துவதன் மூலம் செய்யப்பட வேண்டிய வேலைகளை மனிதனின் உடல் உழைப்பினைச் சிக்கனமாக்கிச் சரியாகவும் விரை வாகவும் செய்ய முடிகின்றது. கணினி யின் பயன்பாட்டினால் மனிதவளம் மேம்படைகின்றது. தனிமனித வாழ்க்கைத்தரம் உயர்வடைகின்றது. கணினிமயப்படுத்தலின் பின்னர் நிறுவனம் ஒன்றிலே பின்வரும் சூழ்நிலை காணப்படும்.

- வேலைகள் தன்னியக்க அடிப்படை யில் நடைபெறும்
- மனிதச் செயற்பாடு குறைக்கப்படும் அல்லது தவிர்க்கப்படும்
- வேலைகள் துரிதமாகவும் சிறப்பாகவும் நடைபெறும்.

**கணினிமயமாக்கலின் அடிப்படைத் தேவைகள்**

கணினிமயமாக்கலின் அடிப்படைத் தேவைகள் இரண்டு உள்ளன.

* கணினி வன்பொருள் (Hardware)
* கணினி மென்பொருள் (Software)

கணினி மயமாக்கல் என்பது பின்வருமாறு இலகுவாக விளங்கிக் கொள்ளப்படக்கூடியது.

வன்பொருள் , மென்பொருள் , தரவு ஸ்ரீ தீர்வு கணினி அமைப்பின் முதற் பொருளாக வன்பொருள் உள்ளது. கணினியின் புறவடிவம் சார்ந்த பாகங்கள் எல்லாம் வன்பொருட்கள் என வரையறுக்கப்படக் கூடியன.

Harddisk, Keyboard, Mouse, etc.

கணினி மென்பொருள் என்பது மனித மூளையைப் போன்று அறிவுத்திறனுடன் செயற்படக் கூடியது. கணினி என்ன செய்ய வேண்டும், அதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதைச் கட்டளையாகப் பதிவு செய்து கணினிக்குக் கொடுத்தால் அது அதன்படி வேலையைச் செய்யும். அக்கட்டளை மொழியையே மென்பொருள் என்பர். ஒவ்வொரு துறையிலும் பயன்படக்கூடிய தனித்தனியான பல்வேறு மென்பொருட்கள் இன்று பயன்பாட்டில் உள்ளன.

**நூலகங்களைக் கணினிமயப்படுத்தல்**

நூலகவியல் என்னும் துறை இன்று தகவல் தொழில்நுட்பத்திற்கு ஆட்பட்ட ஒரு துறையாக (Information Communication Technology) வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. மேற்குலக நாடுகளில் 1930ஆம் ஆண்டுகளிலிருந்து நூலகங்களைக் கணினிமயப்படுத்தத் தொடங்கிவிட்டனர். இந்தியாவிலே ஏறத்தாழ 1970களில் இது தொடங்கப்பட்டதாக அறியப்படுகின்றது.

கீழே குறிப்பிடப்படுவன போன்றே காரணங்களால் நூலகங்களைக் கணினிமயப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

* நூலகத்தின் அன்றாட பணிகளை நிறைவு செய்தல்
* அதிகளவு தகவல்களைச் சேகாரத்தலும் பாதுகாத்தலும்
* பெருகி வரும் தகவல்கள்
* வாசகர்களின் எண்ணிக்கை அதிகரித்தல்
* தகவல் வளப்பகிர்வு
* கணினிமூலம் மட்டுமே படிக்கக் கூடிய தகவல் சாதனங்களின் பெருக்கம்

உ+ம்: e-journal, e-books, etc

* தரமான நூலகசேவை
* வாசகர்களின் எதிர்பார்ப்புக்களும் தேவைகளும்.

நூலகங்களைக் கணினிமயப்படுத்திச் செயற்படுத்த நடைமுறையிலே பின்வரும் இரண்டு நிலைகள் கடைப்பிடிக்கப்படலாம்.

நூலகம் ஒன்று பல்வேறு பிரிவுகளைக் கொண்டிருக்கும். நூற்சேர்க்கைப் பிரிவு, தொழிநுட்பப் பிரிவு, பருவ இழைப்பிரிவு, வாசகர் சேவை மற்றும் நூற்சுழற்சிப்பிரிவு என்று இத்தகைய தனித்தனியான பிரிவுகளின் வேலைகளைத் தனியாகவே கணினிமயப்படுத்துதல்.

நூலகத்தின் அனைத்துப் பிரிவுகளையும் ஒரே கணினி மென்பொருளின் கீழ் ஏற்றி ஒருங்கிணைத்துச் செயற்படுத்தும்.

**நூலக மென்பொருள்**

நூலகவியல் துறையில் தற்போது ஏறத்தாழ ஐம்பது வரையான மென்பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றுட் சில மென்பொருட்கள் கீழே குறிப்பிடப்படுகின்றன.

* அலைஸ் - Alice
* ஓட்டோலிப் - Auto lib
* கலிப்லான் - Caliblan
* லிபா சொப்ட் - Liba soft
* லைப்ரேரியன் - librarian
* லிப்சொப்ட் - Lib soft
* லிப்சிஸ் - Libsys
* நிர்மல் - Nirmal
* சோல் - Soul
* ஆக்கைவ்ஸ் - Archives
* கொல்லிப் - Collib

* டெல்சிஸ் - IsiDeS
* கோல்டன் லிப்ரோ Golden Libra
* லைபிரரி மனேஜ்மென்ட் - Library management
* லைபிரரி மனேஜர் - Library manager
* லிப்மன் - Lip man
* லிப்ரிஸ் - Libras
* லைபிரரி 2000 Library 2000
* லிப் இன்வ் மனேஜர் - Lib inf manager
* லைபிரேரியன் சூட் - Librarian suit

மேலே கூறப்பட்டவாறு பல நூலகத்துறை சார்ந்த மென்பொருட்கள் உள்ள போதும் அவற்றுட் சில மென் பொருட்கள் பற்றிக் கூடுதலாகத் தெரிந்து கொள்வது பொருத்தமானது.

## Alice for windows

இது பல பயன்பாடுகொண்ட ஒரு மென்பொருளாகும். பின்வருவன போன்று நூலகங்களின் வகைக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

* பொது நூலகத்திற்கு ஏற்ற வடிவமைப்பு
* சிறப்பு நூலகத்திற்கு ஏற்ற வடிவமைப்பு
* பல்கலைக்கழக மற்றும் கல்லூரி நூலகங்களுக்கு ஏற்ற வடிவமைப்பு
* பாடசாலை நூலகத்திற்கேற்ற வடிவமைப்பு

நூலகங்களிலே இணைய வசதியை ஏற்படுத்தக் கூடிய வகையிலே இது தயாரிக்கப்பட்டுள்ளது.

## Soul

இது பல்கலைக்கழக நூலகங்களுக்கு ஏற்ற ஒரு மென்பொருளாகும். நூலகம் ஒன்றின் அன்றாட பணிகளை மேற் கொள்ள உதவுவதுடன் எல்லாப் பல் கலைக்கழக நூலகங்களே ஆகும். இணையவழித்தொடர்பை ஏற்படுத்தும் வசதிகளையும் கொண்டுள்ளது.

## Libsys

இது கணினியின் C++ மொழியி னால் எழுதப்பட்ட ஒரு மென்பொரு ளாகும். OPAC வசதிகளைக் கொண்டுள்ளது. நூலகம் ஒன்றின் அன்றாடப் பணிகளை ஒன்றிணைத்துக் கணினிமூலம் செய்வதற்கான வசதிக ளைக் கொண்டுள்ளது.

## Nirmal

நூலகவியலாளர்களும் கணினி மென்பொருள் வல்லுநர்களும் இணைந்து தயாரித்த ஒரு மென்பொருளாக இது உள்ளது. பூலியன் இயங்கிகள் (Boolean operation) மற்றும் தேடும் சொற்களைக் கொண்டும் (Keyword) நூலக ஆவணங் களை இதன்மூலம் தேட முடிகின்றது.

## Auto lip

பாடசாலை நூலகங்கள், பல்கலைக் கழக நூலகங்கள் போன்ற ஆராய்ச்சி நூலகங்கள் போன்ற ஆராய்ச்சி நூலகங்களுக்குக்காகத் தயாரிக்கப்பட்ட மென்பொருளாக இது உள்ளது.

வாசகர்கள் இலகுவாகப் பயன்படுத்தும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை**

நூலகக் கணினிமயவாக்கம் (Library Automation) மூலம் நூலகத்தின் அன்றாட பணிகளை இலகுவாகவும், விரைவாகவும் செய்து முடிக்கலாம். இலங்கையில் காணப்படுகின்ற பல்வேறு நூலகங்களும் அடிப்படை வசதிகள் அற்றவையாகவும், நன்கு ஒழுங்கமைக்கப்படாமலும் பல பற்றாக்குறைகளுடனேயே இயங்கி வருகின்றன. இத்தகைய நிலைமையை நீக்கி அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படுவதுடன் அவற்றைக் கணினிமயப் படுத்துவதன் மூலமே சிறந்த நூலக சேவையை வழங்கமுடியும். கணினிகளைப் பயன்படுத்தாத துறைகளே இல்லை என்ற நிலையே தற்போது காணப்படுகின்றது. எனவே நூலகங்களில் கணினியின் பிரயோகம் இன்றைய நூலகத்தின் தேவையாகவுள்ளது.

# World Children's Day

Miss.J.Thuvaraka
Grade 7B



This day falls on 1st October, every year. The Children's day as well as the adults' day is celebrated on this day. Having a special day for children are very important because a special attention is paid to children is very children and it is aimed at solving problems related to them on this day. But paying attention for children should not be limited to that day only. Every time their needs must be catered to Rights of children have been safeguarded by the UNO convention.

Children are the real owners of the country in the future. Therefore, it is the duty of the adults to protect them well, and look after them with much care. Therefore dedicating a special day for children helps to develop their personalities as well as thoughts in many ways. There are several advantages of having a special day for children. Finding solutions to the problems of children can be done on this day. However, the responsibility of adults towards children should not be limited only to one day per year. Even though, there is only one special day for children throughout the year they must be look after by adults in every way possible.

# சைவசமயத்தின் இன்றைய தேவை

திரு.நா.கிருபானந்தசிவம்,
Sp.Trd(Religion),SLTS-2.I,
ஆசிரியர்,
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.



மனித வாழ்க்கை என்பது சக்கரம் போன்றது. இத்தகைய மனித வாழ்க்கை நிலை யற்றது. இந்தப் பிர பஞ்சத்தில் வாழுகின்ற மக்களாகிய நாம் எம்மில் யார் பெரியவர், யார் சிறியவர், உயர்ந்தவன் நான், தாழ்ந்தவன் நீ என்றெல்லாம் எம்மில் எத்தனை போட்டி பூசல்கள் இதில் "உயர்ந்தவர் தாழ்வர், தாழ்ந்தவர் உயர்வர்" இதுதான் இயற்கையின் நியதி என்ற தத்துவத்தின்படி வாழ்க்கையில் இவை இரண்டையும் ஏற்றுக்கொள்ளும் சக்தி மனிதனுக்கு அவசியம். இந்த மனநிலை உருவாக வேண்டுமானால் மனித மனம் பக்குவம் அடைய வேண்டும். அத்தகைய மனப்பக்கு வத்தைத் தருவதுதான் சமயநெறி ஆகும்.

இத்தகைய சமயநெறி தான் மனிதனைப் பூரணமனிதனாக்குகின்றது. இதனையே ஆதிசங்கரர் கூறுமிடத்து "மதம் என்பது பாமரனை பண்புள்ளவனாகவும், பண்புள்ளவனைத் தெய்வமாகவும் உயர்த்துவதே மதம்" என்கின்றார். சமயம் வேறு, வாழ்க்கை வேறல்ல. இரண்டும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்ததே எமது சமய வாழ்க்கை யாகும். எமது சமயத்தின் பிரமாண நூல்களாகக் கொள்ளப்படுகின்ற வேதம், ஆகமம், உபநிடதம் போன்ற நூல்களில் கூறப்படுகின்ற உயர்ந்த கருத்துக்களைப் பாமர மக்களும் புரிந்து கொள்ளத்தக்க வகையில் இதிகாசபுராணங்கள் விளங்குகின்றன.

சைவசமய அறிவைப் பின்தங்கிய குக்கிராமங்களிலும், பாமரமக்களிடையேயும் ஏற்படுத்துவது அவசியமாகின்றது. ஏனெனில் சைவமதத்தின் கருத்துக்களைப் பூரணமாக விளங்கிக் கொள்ளவேண்டும். ஏனெனில் பிறமதங்கள் ஆதிக்கங்கள் அதிகரித்து வரும் இக்காலப்பகுதியில் மக்களிடையே சைவமதம் பற்றிய விழிப்புணர்வுகள் கட்டாயம் அவசியமாகின்றது.

வானுற ஓங்கிய கோபுரங்களைக் கொண்ட ஆலயங்களை அமைப்பதனால் சைவசமய அறிவு ஏற்பட்டுவிடாது. இதனால் சைவசமயமும் வளர்ந்துவிடும் என்ற எண்ணமும் உருவாக இயலாது. சைவமக்கள் மனதில் சமயத்தின் தத்துவங்கள், சமயப்பண்புகள், மதப்பற்று, மதஈடுபாடு, தனித்தும் ஒருமித்து இயங்கும் மனிதப்பண்புகள் மக்களின் மனதில் ஆணிவேர் போல் பதிந்துவிடும் அளவிற்கு அவர்களுக்கு சைவசமய அறிவை ஊட்டிவிடவேண்டும்.

ஈழத்தில் சைவசமயத்தைக் காத்த பெருமை எம் சைவப்பெரியார்களைச் சாரும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சுவாமிவிபுலானந்தர், சுவாமிஞானப்பிரகாசர் போன்றவர்களையே சாரும். நாவலர் அவர்கள் சைவசமயத்தையும், தமிழையும் தனது இருகண்கள் போல் பேணிக்காத்தார். இதனை சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள்.

**"நல்லை நகர் நாவலர் பிறந்திலரேல்**
**சொல்லு தமிழெங்கே சுருதி எங்கே-எல்லவரும்**
**ஏத்து புராணாகமங்கள் எங்கே பிரசங்க மெங்கே**
**ஆத்தனறி வெங்கே அறை"**

இவ்வாறு கூறுவதிலிருந்து நாவலர் பெருமானின் பிறப்பும் அவரது பணிகளும் நன்கு புலப்படுத்துகின்றது. அந்நியர் ஆட்சிக்காலத்தில் சைவத்தை வளர்க்கத் தமது வாழ்வை அர்ப்பணித்தவர் என்பதனை சைவமக்களாகிய நாம் மறந்துவிட முடியாது. இவ்வாறு போற்றிப் பாதுகாக்கப்பட்ட எமது சமயத்தை நாமும் போற்றிப்பேண வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமையும், பொறுப்பும் ஆகும்.

பெரியபுராணம் கூறுகின்ற மெய்யடியார்கள் 63 பேர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட சைவசமயம் இன்று சிதை வடைந்து தேக்க நிலைக்குத்தள்ளப்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இதற்கு பல காரணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

- எம்மிடையே காணப்படுகின்ற ஒற்றுமையின்மை.
- மதப்பற்று, தெய்வநம்பிக்கை குறைந்து வருகின்றமை.
- மதரீதியான கட்டுப்பாடுகள், சம்பிரதாயங்கள்.
- தீண்டாமை.
- சிறந்த வழிகாட்டல் ஆலோசனை இன்மை.
- மதத்தலைவர்களது சுயநலப்போக்கு.
- மக்களின் அலட்சியப்போக்கும், விரக்தி மனப்பாங்கும்.

இப்படியாக இன்னோரன்ன காரணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். நாயன்மார்கள் காட்டிய சைவநெறியின் கண் நின்று மதத்தை வளர்ப்பவர்களாக நாம் எம்மை மாற்றிக் கொள்ள முயல வேண்டும். அப்பர் சுவாமிகளது தேவாரத்தை நோக்குமிடத்து

"அங்கமெல்லாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத்தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே"

எனப்பாடுமிடத்து இறைவனது அடியாராக இருந்தால் எத்தொழிலைப் புரிபவனாக இருந்தாலும், எந்தக் குலத்தில் பிறந்திருந்தாலும் அவன் இறைவனது அடியவனாக இருந்தால் வணங்கத்தக்கவன் என பாடுகின்றார். சுந்தரர் தனது திருத்தொண்டர் தொகையில் கூறுமிடத்து,

**"தில்லைவா ழந்தணர்தம் மடியார்க்கு மடியேன்**
**திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்"**

என்று 63 மெய்யடியார்களின் சிறப்பைப் பாடியிருக்கின்றார். அந்தணர் என்போர் அறவோர் என்பதனைக்கூறி மட்பாண்டம் செய்கின்ற குயவனையும் கூறுவதிலிருந்து மெய்யடியார்கள் எம்பெருமானை மெய்யன்போடு வணங்குவாராயின் அவர்களையும் நான் வணங்குகின்றேன் என்று ஆணித்தரமாக கூறுகின்றார். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற முதுமொழி திருத்தப்பட்டுள்ளது.

சேரமான் பெருமாள் நாயனார் வீதியால் வந்தபோது எதிர்ப்பட்ட குடியானவனைத் தனது பட்டத்து யானையில் இருந்து கீழிறங்கி அவனது திருவடிகளில் வீழ்ந்து வணங்க வில்லையா? மெய்ப்பொருள் நாயனார் தன்னை வஞ்சகமாகக் கொலை செய்தவனை சிவனடியாராகக் கருதி, திரு நீற்றுக்கு மதிப்புக்கொடுத்து மன்னிப்ப திலிருந்து சிவனடியார்களை மதித்து இறைவனாகவே நினைத்து வணங்கி வந்தமை இங்கு கவனிக்கத்தக்கது.

இளையான்குடிமாறனார் தம்மை வறுமை தாக்கும் போது கூட சிவனடியார் களுக்கு அமுதுசெய்வித்து உபசரிக்க வில்லையா? குங்கிலியக்கலயனார் தன் மனைவியின் தாலியை விற்று கோயிலில் தூபம் காட்டி இறையடி சேரவில்லையா? சண்டேஸ்வரநாயனார் தன் தந்தை என்றும் பாராமல் அவரின் காலை வெட்ட வில்லையா? இத்தகைய புனிதம் மிக்க எம்மால் செய்யத்தக்க சரியைத் தொண்டு களை நம்மவர்கள் ஆலயங்களில் செய்யப் பின்னிற்பதும், பரிகாசம் செய்வதும் வேத னைக்குரியது. இளையசமுதாயங்கள் இவ்விடயங்களில் முன்னின்று செயலாற்ற வேண்டும். திருமுறைகளை ஓதுவதற்கும், மனனம் செய்வதற்கும் மனம் திருந்திச் செயலாற்ற வேண்டும். சிலஊர்களில் இளைய சமுதாயம் இத்தகைய தெய்வப்ப ணிகளில் தம்மை அர்ப்பணித்து செய லாற்றுவது வரவேற்கத்தக்கது. வருங்கால இளைய சமுதாயத்திற்கு ஒரு முன்மாதிரி யானது.

பாடசாலைகளிலும் சைவ அறிவை வளர்க்கும் முகமாகச் சமய செயல்திறன் போட்டிகள், வாண்மைவிருத்திப் போட்டி கள், பண்ணிசைப் போட்டிகள் என்பன பாடசாலை மட்டத்திலும், வலய, மாகாண, தேசியரீதியிலும் நடத்தப்படுகின்றன. அதி லும் ஒரு சில மாணவர்களே பங்கு கொள்கின்றனர். ஏனையோர் அலட்சியப் போக்கு, ஆர்வமின்மை என்பன உடைய வர்களாகத் திகழ்கின்றனர். இதற்கு அவர்கள் வாழும் சூழல் ஒரு காரணமாகவும் இருக்க லாம். இத்தகைய மாணவசமுதாயம் பிற்காலத்தில் எந்நெறியைப் பின்பற்று வார்கள் என்பதனை ஊகிக்க முடிய வில்லை.

சைவர்களைப் பொறுத்தவரையில் கட்டாயவழிபாடு வெள்ளிக்கிழமைகளி லாவது ஆலயவழிபாடு செய்வது கட்டாய மாகக் காணப்படுகின்றது. ஆலயங்கள் கிராமங்களின் நிலைக்களங்களாக விளங் கிய காலமும் உண்டு. ஏனைய மதங்களைப் போன்று எமது சமயத்தில் கட்டுக்கோப்பு, கட்டமைப்புகள் இல்லாமையே காரணமாக அமையலாம். சில ஆலயங்களின் நிர்வா கங்கள் பணம் சம்பாதிக்கும் இடங்களாக ஆலயங்களை மாற்றி வருகின்றன. பக்திக்கும், ஆத்மீகத்திற்கும் முக்கியத்துவம் கொடுப்பது குறைவடைந்து வருகின்றமை வேதனைக்குரியது. பாமரமக்களுக்கு ஆலயங்களில் சரியான இடமோ சந்தர்ப்ப மோ வழங்கப்படுவதில்லை. இதனால் அத்த கைய மக்கள் ஒதுக்கப்பட்ட உணர்வைப் பெறுகின்றனர். எங்கு தம்மையும் மனிதராக மதித்துச் சந்தர்ப்பமும், மரியாதையும் கிடைக்கின்றதோ அதை நாடிச் செல்கின் றனர். இத்தகைய மதமாற்றத்தைத் தடுக்க முடியாத, தவிர்க்க முடியாத விடயமாகவே போய் விடுகின்றது. இத்தகைய நிலை வேதனைக்குரியது. பொதுவாக பாமர மக்களே அதிகமாக மதமாற்றத்திற்கு உள்ளாகின்றார்கள் என்றே கூறலாம். இதற்கு நாம் அடிமட்டத்தில் உள்ள மக்களின் பண்புகளை கடைப்பிடிக்கத் தவறி விட்டோம். மதத்தினூடாக நாம் நமது சுய தேவைகளைப் பூர்த்தி செய்வதில் கண்ணும்

கருத்துமாக உள்ளோம் என்றே கூற வேண்டும்.

எனவே, இத்தகைய நிலைகளைத் தொடரவிடாமல் சைவசமயத்தினையும், சைவ மதத்தினையும் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு இந்துக்களின் கடமையும், பொறுப்பும் ஆகும். இத்தகைய சேவைகளில் சமய நிறுவனங்கள் தம்மால் இயன்ற சேவையை செய்துவருகின்றன. சைவ வித்தியாவிருத்திச்சங்கம், சைவபரிபாலன சபை, அகில இலங்கை இந்துமாமன்றம், விவேகானந்தாசபை, தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயம், வேறு அறக் கட்டளை நிறுவனங்கள் என்பன சைவ மக்களிடையே சைவசமய அறிவை வளர்க்கப் பல நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்துச் செயலாற்றுகின்றன. இது தவிர அரசசார்பான நிறுவனங்களும், அரசசார் பற்ற நிறுவனங்களும் தமது பங்களிப்பை வழங்கத்தவறவில்லை. இது வரவேற்கத் தக்க விடயமாகும்.

எல்லோருக்கும் ஒரே உலகைப் படைத்திருக்கின்ற இறைவன் இயற்கை சக்திகளிலும் ஒரே விதமான செயல் களையே மேற்கொள்ளுவான் என்பதில் மாறுபாடில்லை. எனவே மதத்தைக் கூறு போட அனுமதிக்காமலும், சிதைக்காமலும் பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும். நாம் ஒவ்வொருவரும் சைவன் என்ற உள்ளுணர்வோடு வாழ்பவனாக இருந்தால், மனித விழுமியங்களையும், மதப்பண்பு களையும் கடைப்பிடித்து வாழ்பவனாக இருந்தால் எமது மதத்தையும் மக்களையும் பாதுகாக்க முடியும்.

திருமூலரது திருமந்திரப் பாடலை நோக்குமிடத்து..

"ஒன்றது பேரூர் வழியாறதற்குள்
என்றது போல இருமுச்சமயம்
நன்றிது தீதிது என்றுரையாளர்கள்
குன்று குரைத்தெழு நாயை யொத்தார்களே"

ஒன்றேகுலம் ஒருவனே தேவன் என்பதும் இறைவன் ஒருவன் மதப்பூசல் களைத் தவிர்த்து சமரசவாழ்க்கையை வாழ முற்படவேண்டும். ஒரு மதத்தினர் ஆலயத் தினை அமைக்க இன்னோர் மதத்தினர் ஸ்தலத்தை அழிப்பது ஏனைய மதத்தினை இம்சைப்படுத்தும் செயல் அல்லவோ? நாம் மதத்தின் வழியில் நடவாது தான்தோன்றித் தனமாக நடந்து அதனால் ஏற்படும் தீயவிளைவுகளுக்காக மதத்தை குற்றம் சுமத்துவது விவேகமான செயல் ஆகாது. வேறு மதத்திற்கு மாறுவதும் விரும்பத்தக் கதல்ல. வேதனைப்பட வேண்டிய விடய மாகும்.

முன்னைப் பழமைக்கு பழமையாகவும், பின்னைப் புதுமைக்கு புதுமையாகவும் விளங்குகின்ற சைவசமயம் என்றும் மாறா நிலை கொண்டு வாழ சைவநன்மக்கள் விழிப்பாகவும், விசுவாசமாகவும் செயல்படு வது அவசியமாகும். இந்நிலை எல்லோ ராலும் எய்தப்படுமானால் சைவ சமயத்தின் இன்றைய தேவை எய்தப்படும் எனலாம்.

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெலாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்க்கவே"


திருமூலரால் "சிவபூமி" என வர்ணிக் கப்பட்ட இந்த ஈழநாட்டில் சைவநெறி தழைத்திடச் செய்வோமாக.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

ஆன்மாவால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் நினைக்காதே அது சமயத்திற்கு முரண்பட்ட கருத்தாகும் - சுவாமிவிவேகானந்தர்.

# Advantages and Disadvantages of Mobile Phones

Master.S.Mayooran
Grade 13(2011) ARTS



Mobile phone is a good technology which is not lacking from our lives. Today, mobile phone has become popular to everybody since it is very convenient. The most advantage of having a mobile phone is, you can communicate to your family and your friends no matter where you are for instance, you can contact easily to your friends by calling and sending messages everywhere without electricity. It is may be the main reason why almost all people today choose to own mobile phone. From the customer's point of view, it is obvious that mobile phones assist you in business a lot, and keep in touch with their companies. Moreover, you can relax with mobile phone's applications, for example, play games, listen to music or chat with your friends.

On the other hand there are also disadvantages. Using a lot mobile phone can harm your brain, partic ularly teenagers and children who are under 16 years old. If you use mobile phones too much, you will get bad effects like dizzy, blood-brain barrier or ear problems. In addition when you use mobile phones while you are driving. You will meet an accident. More over "radiations emitted from the phone are dead harmful for the eardrum" has proved by many scientists.

Owing a mobile phone in your hand can solve many issues and hold most of information around the world. Even though it is harm for your health and you have protect yourself from bad effects of mobile phones if you choose to have one.

# HINDU UNION - 2011



Seated(L-R) : Mrs.V.Shanmugasuntharmoorthy, Mrs.K.Vijayakumar, A.Kanista, Mr.A.Eswaranathan(Principal), S.Partheepan(President) Mr.N.Kirubananthasivam,

Standing(L-R) : T.Thushara, T.Tharsika, K.Bavanithevi, S.Alex, S.Mayuran

# CHRISTIAN UNION - 2011



Seated(L-R) : Mrs.K.Vijayakumar, Mrs.B.Paulkamalaraj, K.Terin, Mr.A.Eswaranathan(Principal) Mr.R.L.Robinson, V.Anojan, G.Senpaul, Mrs.J.Aras Daniel

Standing(L-R) : A.Volestin juliya , S.Nishamini, A.Ramya, J.Rohini, R.Subeka

# உத்தம பணியாளன் மேதகு ஆயர் தியோகுப்பிள்ளை அவர்கள்

திருமதி.அ.ஜெ.அரஸ்டானியல்,
B.A(Hons),SLTS-3.I,
ஆசிரியர்,
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.



இலங்கையின் வட பகுதியிலுள்ள ஊர்காவற்றுறை என்னும் இடத்தில் கரம்பொன் என்னும் கிராமத்தில் திரு. திருமதி.வஸ்தியாம்பிள்ளையின் பதினொராவது பிள்ளையாக 1917ம் ஆண்டு சித்திரை மாதம் 9ம் திகதி தியோகுப்பிள்ளை பிறந்தார். பாரம்பரியக் கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்தமையினாலும், பெற்றோரினது நல்வழி காட்டலிலும் சிறுவயது முதலாக இறைபக்தியில் வளர்ந்தார் என்பதற்கு இவர்களது குடும்பத்திலிருந்து இறை அழைத்தலுக்கு செவிசாய்த்து குருவாகவும், அருட்சகோதரிகளாகவும் மூவர் அழைப்புப்பெற்றமை சிறந்த சான்றாக உள்ளது. குடும்பத்தில் ஊன்றிய இறைபக்தி பள்ளிப் பருவத்திலே சுடர்விட்டெரிந்து பிரகாசிக்கலாயிற்று. தமது ஆரம்பக் கல்வியைக் கரம்பொன் திருக்குடும்ப கன்னியர் பாடசாலையிலும், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் பெற்றவேளை இவரிடமிருந்த இறைபற்றின் காரணமாக "சின்னச்சுவாமி" என எல்லோராலும் அழைக்கப்பட்டார். இவருக்கிருந்த ஆர்வமும், சமூகத்தினரது தூண்டுதலும், தாயினது இறைபக்தியும் இவரை இறை அழைப்பிற்குச் செவிசாய்க்கத்தூண்டியது. தமது கல்வியை யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியில் தொடர்ந்த அவர் குருத்துவக்கல்வியை உரோமபுரி ஊர்பான் பல்கலைக்கழகத்தில் பயின்றார். மார்கழி மாதம் 22ம் நாள் 1941ம் ஆண்டு உரோமபுரியில் குருவாக திருநிலைப்பட்டார். மெய்யியல், இறையியல் துறைகளில் உயர்கல்வியைப் பெற்ற அவர் பல்வேறு இன்னல்கள் மத்தியில் 1945ம் ஆண்டு இலங்கை திரும்பினார்.

**கல்வியும் இளமைப் பருவமும்**

மாணவப் பருவத்திலே கல்வி, ஒழுக்கம், விளையாட்டுத்துறை போன்றவற்றில் சிறந்து விளங்கிய இவரிடத்தில் தமிழ்ப்பற்றும் கலை ஆர்வமும் குடிகொண்டிருந்தது. இவையே இவரது பணிக்காலங்களில் இவரை உண்மைக்கும், நீதிக்கும் குரல் கொடுத்துப் பணியாற்றும் உத்தமனாக மிளிரச் செய்தது. குருவாகப் பல பணித்தலங்

களில் இவர் பணியாற்றிய காலங்களிலே பல பாடசாலைகளில் ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றியதுடன் மிகவும் கண்ணியத்துடனும், பொறுப்புடனும் செயற் பட்டு, தமக்கு வழங்கப்பட்ட கடமைகளைச் சரிவரச் செயற்படுத்தி வந்தார். கொழும்புத் துறை ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின் முதல்வராகச் செயலாற்றிய காலத்திலும் நல்லாசான்களை உருவாக்குவதில் தம் கவனத்தைச் செலுத்தினார். தம் பணிக் காலங்களில் இறைபணியில் மட்டுமன்றி சமூகப் பணிகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

இயல்பிலேயே இளமைத்துடிப்பும், புலமையும் மிக்க குருவாகவும், ஆயராகவும், அதிபராகவும் கடமையாற்றிய இவர் தம் வாழ்வை இறைபணிக்காக அர்ப்ப ணத்துடன், தவத்திரு தனிநாயகம் அடிகளார் காட்டிச்சென்ற வழியைப் பின்பற்றித் தமிழிலக்கியத் துறையிலும், கலைத் துறையிலும், சமூகப்பணியிலும் தம்மால் இயன்றவரை பணிசெய்ததுடன், தமிழ் மக்களின் உரிமைக்காகவும் குரல் கொடுத்து உண்மை, நீதிக்கு சான்று பகரும் நற்சாட்சியாகத் திகழ்ந்தார்.

**இறைபணி**

குருவாகவும், ஆயராகவும் பணி யாற்றிய இவர் தம் பணிக்காலத்தில் கத்தோலிக்க மறையறிவு அளிப்பதற்கு சிறந்த வழியாக நல்லாசான்களை உருவாக்குவதனை தம் நோக்காகக் கொண்டு செயலாற்றியதுடன் மறைசார் உண்மைகளை விளக்கும் வகையில் சிறியோர் முதல் பெரியோர் வரை பயன்படுத்தக் கூடிய "சிறியகுறிப்பிடம்", "பெரியகுறிப்பிடம", மூன்று பக்கங்களைக் கொண்ட "கத்தோலிக்க திருமறை விளக்கம்", 'மாணவர் கிறிஸ்தவ போதகம்" எனும் நூல்களையும் வெளியிட்டு மறைக்கல்விப் பணிக்கு பெரும் சேவை யாற்றினார்.

1967ம் ஆண்டு வைகாசி மாதம் 11ம் திகதி திருமலை மட்டுநகர் துணை ஆயராக திருநிலைப்பட்ட இவர் சிலகாலம் அங்கு பணியாற்றிய பின் 1972ம் ஆண்டு யாழ் ஆயராக நியமனம் பெற்றார். இவரது கம்பீரத் தோற்றமும், கணீரென ஒலிக்கும் குரலொலியும், உண்மைக்கும் நீதிக்கும் துணிந்து குரல் கொடுக்கும் ஆர்வமும், அனைவரையும் ஈர்க்கும் வகையில் மறையுரையாற்றும் பண்புகளும் மக்கள் மத்தியில் இவருக்கு நன்மதிப்பையும் நற்பெயரையும் பெற்றுக்கொடுத்தது எனலாம். தம் வாழ்நாளில் இறுதி மூச்சுவரை இறை பணிக்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்த இவர் சுதேசகுருக்களின் உருவாக்கத்திலும் யாழ் மடுத்தீனார் குருமடத்தின் வளர்ச் சிக்கும் ஆற்றிய பணிகளையும் மறந்து விடமுடியாது. மறைக்கல்வி நிலையம், திருவழிபாட்டு நிலையம் என்பவற்றை நிறுவியதுடன் பல்வேறு ஆணைக் குழுக்களை நிறுவி இரண்டாம் வத்திக்கான் சகல செயற்றிட்டங்களிற்கும் செயல் வடிவமளித்தார்.

**சமூகப்பணி**

இவர் யாழ் ஆயராகப் பணியாற்றிய காலம் ஈழத்தமிழ் மக்கள் வாழ்வில் மனிதஉரிமை மீறல்கள் நிறைந்த காலமாகும். மக்கள் தமது வாழ்வில் பல துன்பங் களையும், துயரங்களையும் எதிர் கொண்டு சமூக அநீதிகளைச் சுட்டிக்காட்ட முடியாத

நிலையில் உண்மைக்கு குரல் கொடுக்க அஞ்சிய இக்கட்டானதோர் காலப்பகுதி. அக்காலத்தில் பல்வேறு உரிமை மீறல்கள், அநீதிகள் இடம்பெற்ற வேளையில் அஞ்சா நெஞ்சத்துடன் தவறுகளைச் சுட்டிக்காட்டி உண்மைக்கும் நீதிக்கும் சான்று பகர்ந்தார்.

அரசியல் அதிகாரிகளின் அச்சுறுத் தல்களுக்கு அஞ்சாது செயற்பட்ட இவருக்கு பல எதிர்ப்புக்களும், உயிர் அச்சுறுத் தல்களும் எழலாயின. எனினும் உறுதியான உணர்வுடன் வன்செயல்களால் பாதிக்க ப்பட்ட மக்களுக்கு நிவாரணம், புனருத் தாரணம், மீள்குடியேற்றப்பணிகளை மேற் கொண்டதுடன், தொழிற்பயிற்சி, சிறுகட னுதவி போன்ற பல்வேறு திட்டங்களினால் வறிய மக்களின் நலனில் அக்கறையுடன் செயற்படலானார். "அகவொளி" எனும் குடும்பநலநிலையம், "கியூடெக் நிறுவனம்" போன்ற நிறுவனங்களை நிறுவியதுடன் அவற்றினூடாக மதவேறுபாடின்றி ஏழைமக்களின் நல்வாழ்விற்காக உழைத் ததினால் அனைத்து மக்களின் நன்மதிப் பையும் பெறலானார்.

பல்வேறு இடப்பெயர்வுகள் மத்தி யிலும் மக்கள் தம் உடைமைகளை விட்டு விட்டு உயிரைக்காப்பாற்ற ஓடிய வேளைகளில் தம் இல்லமாகிய ஆயர் இல்லத்திலிருந்து தமிழ் மக்களின் உண்மைநிலையினை உலகறியச் செய்த உத்தமராக விளங்கினார்.

**கலை இலக்கியப்பணி**

சிறுவயது முதலே இவரிடமிருந்த கலையார்வமும், தமிழ்ப்பற்றும் சமயப் பணியுடன் கலைஇலக்கியப் பணியிலும் இவரை ஈடுபடவைத்தது. தாம் எந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டாலும் அங்கு தாம் கற்றுப் படித்தனுபவித்த நாட்டுக் கூத்தின் சில பகுதிகளைப் படித்து இன்புறும் தன்மையே இவரிடமிருந்து கலையார வத்தை உலகிற்கு எடுத்தியம்பியது. இக் கலையார்வத்தினால் ஆரம்ப காலத்தில் கத்தோலிக்க மதத்தை வளர்க்க உதவிய நாட்டுக்கூத்துக் கலையில் வளர்ச்சியை ஊக்குவித்தார். கலைஞர்களின் கௌரவிப் புக்கள் எங்கு நிகழ்ந்தாலும் அவற்றில் கலந்து சிறப்பிக்க இவர் தவறுவதில்லை. கத்தோலிக்கக் கலை இலக்கிய மேம்பாட்டிற்கு திருமறைக் கலாமன்றத்தினர் மூலம் ஊக்குவித்ததுடன் மதபேதமின்றி மக்களின் கலையினை ஊக்குவிக்கும் பண்பைக் கொண்டிருந்தார்.


மேலும் அம்மானைப் பள்ளு போன்ற இலக்கிய வடிவங்களை இன்புற்று, படித்து இரசித்த இவர் 17ம், 18ம் நூற்றாண்டுகளில் இலங்கையில் தோற்றம் பெற்ற கத்தோலிக்க இலக்கியங்கள் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியதுடன் அவை பற்றி பல்வேறு ஆய்வுரைகளையும் வெளி யிட்டார். இவ்வாறு இவர் வெளியிட்ட நூல்கள் இன்று உயர் கல்வி கற்கும் மாணவர் களிற்குப் பெரிதும் உதவியாக அமைந்துள் ளன.

**முடிவுரை**

இவரிடம் விளங்கிய உயர்பண்பு களும், இவர் ஆற்றிய சமய, சமூக, கலை இலக்கியப் பணிகள் காரணமாகக் கத்தோ லிக்கர் ஏனைய மதமக்கள் மத்தியிலும் பெரிதும் மதிக்கப்பட்டார். இவர் ஆற்றிய அனைத்துப் பணிகளையும் கருத்திற் கொண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவருக்கு 1999ல் கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

# கணினியின் வேகத்தை அதிகரிக்கச் சில வழிகள்

செல்வன்.சி.கௌசிகன்
தரம் 11A



கணினி முழுவதுமாக Boot ஆகுவதற்கு முன்பாக எந்த ஒரு Application ஐயும் திறக்க முயற்சிக்காதீர்கள்.

Digital Camara வில் எடுத்த புகைப் படங்களை நேரடியாக Wall paper ஆகப் போட வேண்டாம். ஏனெனில் அதிக கொள்ளளவுள்ள படங்களை Wall paper ஆக்கி விடும் பொழுது அதிகப்படியான Memory ஐ எடுத்துக்கொள்கின்றது.

ஒவ்வொரு Application ஐ நீங்கள் Close பண்ணிய பின்பும் Desktop ஐ Refresh செய்து கொள்ளுங்கள். (Mouse Right Click-Refresh/F5)

Desktopல் நிறைய Shortcut களை உருவாக்கி வைக்காதீர்கள். அதிக கொள்ளளவு கொண்ட File/Folders களை வைத்திருக்கவேண்டாம். ஒவ்வொரு Shortcut ம் 500 Bytes Memory ஐ எடுத்துக் கொள்கின்றது.

அடிக்கடி Recycle Bin ஐ Empty ஆக்கி விடுங்கள்.

Temporary Internet files ஐ அடிக்கடி கிரமமாக அழிக்கத்தவறாதீர்கள்.

மாதம் ஒருமுறை உங்கள் Hard Disk ன் Partition னை Defragment செய்யவும். இது உங்கள் files களை சீரமைத்து Speed ஆக இயங்க வழி வகுக்கும்.

Auto CAD, 3D Studio MAX, Corel Draw, Photoshop போன்ற செயலிகளை நிறுவும் போது, உங்கள் Hard Diskல், Operating System நிறுவப்படாத Partition இல் பதிந்து கொள்ளுங்கள்.

- எந்தவொரு Software ஐ நிறுவும் பொழுது Windows startup இல் வராதவாறும், Task bar Tray icon வசதிகளையும் பெரும்பாலும் தவிர்த்து விடுங்கள்.

உங்கள் கணினியைத் தூசு, துகள்கள் படியாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் கணினியில் வேலை செய்யும் பொழுது Processor Heat ஆகிக் கொண்டிருக்கும் Processor மற்றும் Heatsink இல் தூசுகள் படிந்து Fan இன் வேகம் குறைந்து போவதால் Processor ன் வெப்பம் அதிகரிப்பதால் கணினியின் வேகம் குறையலாம். எனவே தூசு விடயத்தில் மிகக் கவனமாக இருங்கள்.

# ADVANCED LEVEL UNION - 2011



Seated(L-R) : Mrs.K.Vijayakumar, S.Rushanthi(Secretary), Mr.A.Eswaranathan(Principal), P.Niroshan(President), Mr.S.Sivakumar(Incharge-Teacher) Mrs.P.Dikukumar(Incharge-Teacher)

Standing(L-R) : M.Sathiya, T.Janarthanan, S.Thanushan, S.Subaskaran, S.Kavaskaran, S.Thinesh, S.Nishamini

# DISCIPLINE COMMITTEE-2011



Seated(L-R) : Mr.C.G.Thirumalalakan, Mr.M.Vinokanthan, Mr.M.R.Narenthira, Mrs.K.Vijayakumar, S.Vani(S.P), Mr.A.Eswaranathan(Principal), U.Thushyanthan(S.P), Mr.S.Sivakumar, Mrs.S.Mahenthiran, Mrs.B.Thiyagalingam

Standing(L-R) : M.Priya, A.Volestin Juliya, S.Shamili, Y.Rohini, R.Subeka, A.Kanista, K.Terin, Y.Lamsa(A.S.P), G.Senpaul(A.S.P), P.Pakeerathan, V.Robinson, S.Thanushan, M.S.Thinesh, P.Panchaseelan, T.Janarthanan, S.Alex

# வெற்றிகரமான கற்றல், கற்பித்தலுக்கு வகுப்பறையில் ஊக்கம்

திரு.செ.குணரத்தினம்,
B.A,PGDE,Sp.Trd(Science),SLTS-2.I,
ஆசிரியர்,
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.



கல்வி என்பது "உள்ளே இருப்பதை அகழ்ந்து வெளிக் கொணர்க" என அமையும். ஆகவே மாணவர்களின் உள்ளே இருக்கும் அறிவாற்றல் முதலியவற்றை மலரச் செய்தல் கல்வியாகும். இதை 'தொம்சன்' என்பவர் "ஒரு தனியாளின் வாழ்க்கையில் நடத்தை, சிந்தனை, மனப்பாங்கு என்பவற்றில் நிரந்தரமாக மாற்றத்தை ஏற்படுத்தும் சூழற் செல்வாக்கே கல்வியாகும்". எனவே இதற்கேற்ப இன்றைய மாறிவரும் உலகிற்கு ஏற்பவும் கல்வி ஒரு வர்த்தகப்பண்டமாக மாற்றமடைந்துள்ளது. அறிவு, பொருளாதாரம் என்ற நிலைக்கு மாறியுள்ளநிலை இன்று காணப்படுகின்றது. எனவே பதின்மூன்று வருடங்கள் பொதுக்கல்வியில் பாடசாலையில் தங்கியுள்ளனர் மாணவர்கள். இவர்களை உலகிற்கு பொருத்தமானவர்களாக மாற்றுவது ஆசிரியர் பொறுப்பாகும். இதற்கு ஆசிரியர் வகுப்பறையில் சிறந்த ஊக்கம் உபாயங்களைக் கடைப்பிடித்து எல்லா மாணவனையும் அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தியுள்ளவனாக மாற்றுவது ஆசிரியரின் கடமையாகும். இதற்கு ஆசிரியர் சிறந்த வகுப்பறை ஊக்கம், உபாயங்களைக் கடைப்பிடித்து அவர்களை மேம்பாடடையச் செய்ய வேண்டும்.

ஊக்கல் என்பது வகுப்பில் மாணவர் நடத்தையை எழுச்சி பெறச்செய்தல், வெற்றி பெறச்செய்தல் ஆகும். இந்த ஊக்கலானது அகஊக்கலாகவோ, புறஊக்கலாகவோ அமையலாம். மாணவரிடம் ஏற்படும் உள்ளார்ந்த எண்ணங்கள், விருப்பு, ஆசை போன்றவை அகஊக்கலாக அமையும். இதில் கற்றலுக்குச் சாதகமானஊக்கி விருத்தி செய்யப்படும். பாதகமானஊக்கி நீக்கப்படும். புறஊக்கி இருவகையாக அமையும். சொல்சார்ந்த புகழ்ச்சி, பாராட்டுக்கள் போன்றவை அடங்கும். மற்றையது சொல்சாராவெகுமதி, பொருள் போன்றவையாக அமையும். இதனால் இதை பொருத்தமானவாறு ஆசிரியர் வகுப்பறையில் பயன்படுத்தவேண்டும். இதற்கு ஆசிரியர் ஊக்கல் தொடர்பான நுட்பங்களை அறிந்திருத்தல் வேண்டும். இவை தவிர ஆசிரியர் தொழில்வாண்மை பெற்றவராயும், சிறந்த உளவியல்அறிவு உடையவராயும் இருத்தல் தனியாளின் வேறுபாடுகளை அறிந்து சிறப்பான கற்றல் கற்பித்தலுக்கு வழியமைக்க வேண்டும். எனவே சிறந்த ஊக்கல் உபாயங்களை நோக்குதல் வேண்டும்.

ஆசிரியர் வகுப்பறையில் கற்கும் பாடங்கள் தொடர்பாக வினைத்திறனான இலக்கைக் குறித்தல் வேண்டும். இது குறிப்பானதாயும் நேரடியாக மாணவர்களில் இனங்காணக் கூடியதாயும், ஐயப்பாடு அற்றதாயும் இருத்தல் வேண்டும். அத்துடன் சவால்களாக அமையக்கூடியதாக இருந்தால் மாணவர்கள் அவற்றை விருப்புடன் செய்ய முற்படுவர். இதற்கு ஊக்குதல் இவை அடையக்கூடியதாயும், மாணவர்கள் செய்யும் பணிக்கு பொருத்தமானதாயும் ஏற்றதாயும் அமைய வேண்டும். இவை செயல்சார்ந்தும், சமூகத்தொடர்பு சார்ந்தும் அமைதல் வேண்டும். இங்கு வேலை களின் ஒவ்வொரு பணிகளினதும் கிடைக்கும் திருப்தி அல்லது வெற்றி ஊக்கல் பாராட்டு கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். இங்கு இலக்கு ஆனது மாணவர்களால் ஏற்கக் கூடியதாக இருத்தல் போன்றவற்றை உள்ளடக்கி பாடஇலக்கு அமைய வேண்டும்.

மாணவனுடைய விருப்பு வெறுப்புக்கு ஏற்ற தன்மைகள் கவனிக்கப்பட வேண்டும். இதற்கு விருப்புடன் செய்யக்கூடிய செயலாக அமைய வேண்டும். நடைபெற்றதாகவும், பிள்ளையின் விருப்பு தூண்டப்படக் கூடியதாகவும் இருத்தல். மேலும் பாடத்துடன் தொடர்புடைதாகவும், கற்றலுடன் இணைந்ததாயும், விருப்புடன் பாடங்களை அல்லது செயல்களை ஆற்றக் கூடிய, கற்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

பொதுவாக ஆசிரியர்களிடம் எதிர்பார்க்கப்படும் ஊக்கப்பாடுகள் மாணவர் சார்பான முன்னேற்றத்திற்கு வழிகாட்டல் வேண்டும். அத்துடன் மாணவர்களின் அடைவுகளுக்கு இடையே ஊக்குதல் தன்மை அவசியம். இவை தவிர கற்பித்தலுக்கு ஒழுங்குபடுத்திக் கொடுப்பதுடன் அவை ஊக்கல் உடையதாக இருத்தல் வேண்டும். இங்கு வேலையைச் சிறப்பாகச் செய்வதால் அல்லது திருப்தி செய்வதால் ஊக்கல் உடனடியாக வழங்க வேண்டும்.

ஊக்கலில் மாணவர் மனதில் எழுச்சி அல்லது பதற்றம் ஏற்படின் அவற்றை ஏற்புடையதாக்க வகைசெய்ய வேண்டும். குறிப்பாக, நேர்மனவெழுச்சியைத் தூண்டவும், மேலும் விருத்தி செய்யவும் வழி சமைக்க வேண்டும். மாறாகச் சிக்கல் தன்மையுள்ள மனவெழுச்சியை மறைப்பதற்கு வகை செய்யவேண்டும். இங்கு சிக்கல் தன்மையற்றதாக ஊக்கல் அமைய வேண்டும். அதாவது மாணவர் எதிர்நோக்கும் அசௌகரியத் தன்மையை அகற்ற வேண்டும். இங்கு எதிரான அல்லது அளவுக்கதிகமான மனவெழுச்சி ஏற்படாது பாதுகாத்தல் ஆசிரியரின் மதிநுட்பத்தில் தங்கியுள்ளது.

பொதுவாக வகுப்பறையில் ஊக்கல் மிகக்குறைந்த அளவில் தொடங்கி மிக அதிக அளவிற்குச் செல்லாது இருத்தல் வேண்டும். அதாவது ஊக்கல் அதிகூடிதாய் இருந்தால் இனி என்ன செய்தாலும் இவைதான் என்ற நிலை மாணவனுக்கு ஏற்படும். அதேவேளை ஆகக் குறைந்த ஊக்கல் மாணவனை மேலும் செயற்படத் தூண்டாது. எனவே ஊக்கல் ஆகக் குறைவாகவோ அன்றி ஆகக் கூடுதலாகவோ அமையாது. இரண்டுக்கும் இடைப்பட்டதாக அமையவேண்டும். மேலும்

உற்சாகமாகக் கற்கும் மாணவரை ஊக்க ஆசிரியர் பல ஊக்குவித்தல் திறன்களை அறிந்திருப்பதுடன் முன்மாதிரியாய் நடத்தல் வேண்டும். பாடசாலைகளிலே மாணவர்களுக்கு கல்வி ஆண்டு முழுவதும் அகமதிப்பீடு கற்றலில் ஊக்கவித்தல் நிலையில் நீடித்ததாக ஊக்கிவித்தல் அமைய வேண்டும். இதன் மூலம் சுயமதிப் பீட்டிற்கு உதவுவதுடன் குழுமுறைக் கற்பித்தலுக்கும் ஊக்கல் உதவுவதாக அமையும். இங்கு இலக்குத் தொடர்பான தெளிவான முன்னறிவை ஆசிரியர், மாணவர்கள் முன்வைத்தல் வேண்டும். இதற்காக அவனிடம் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். அதாவது இது உன்னால் முடியும், நீ செய்வாய், மேலும் சிறிது முயற்சி செய்போன்றவகையில் அவனிடம் நம்பிக்கையை ஊட்டி வளர்க்க வேண்டும். இது அவனின் செயலாற்றலை அதிகரிக்கும்.

மாணவர்களிடம் காணப்படும் உயிர் வாழ்வதில் விருப்பம் எனும் வலுமிக்க ஊக்கி சூழ்நிலை செல்வாக்கு காரணமாக பல்வேறு மாற்றங்களை பெறுகின்றது. இவற்றைச் சிறப்பாக, சமுதாயவளர்ச்சிக்கு உதவும் வகையில் ஊக்குதல் வேண்டும். இங்கு மாணவனின் முதிர்ச்சிநிலைக்கு ஏற்பவும், அதனுடன் இணைந்த வகையில் ஊக்கல் அமையவேண்டும். கற்றல் செயல்முறையானது முன்னைய கற்றல் அனுபவத்துடன் இணைந்து புதிய கற்றல் அனுபவமானது வளர்த்தெடுக்கப்பட வேண்டும். இங்கு கவர்ச்சியான தான் விரும்பும் தேவையை நிறைவு செய்யக் கூடியபயனும் மகிழ்ச்சியும் ஏற்ற பிணைப்புத் தோன்றவும் ஊக்கல் கற்பித்தலில் அமையவேண்டும்.

ஊக்கலானது பள்ளி வகுப்பறை பற்றிய கற்றற் செயற்பாடு, நல்ல மனப்பாங்கு விருத்தியை மாணவனிடத்தே ஏற்படுத்தல் வேண்டும். இதற்குச் சிறந்த ஆசிரியர், மாணவர் தொடர்பு இருக்கவேண்டும். இவற்றை விருத்தி செய்வதாக ஆசிரியர் செயற்பாடு அமைய வேண்டும். மாண வனிடம் இயல்பாகக் காணப்படும் ஊக்க த்தை அவற்றை கற்றலுடன் இணைக்க ஆசிரியர் முயல வேண்டும். இது வளர்ச்சி நிலைக்கு ஏற்ப அமைய வேணடும். மேலும் கற்றல் மாணவருடன் இன்றைய தேவையை இணைத்ததாக இருத்தல் வேண்டும். இது பிற்கால வாழ்க்கைக்கு உதவுவதாக அமைய வேண்டும்.

மாணவனிடம் வெற்றிபற்றி உடனடி அறிவு, தனியாள் தேவை, இயல்பு என்பதற்கு ஏற்ப தூண்டல்பெற ஊக்கல் வகைசெய்ய வேண்டும். இதற்கு புரிந்து கொண்டு ஒன்றை கற்றல் மேலும் கற்கத் தூண்டும். "ஆசு பெல்" என்பவரின் கருத்துக்குஏற்ப தூண்டல் அமைய வேண்டும். புதிய கவர்ச்சியை தோற்று வித்தல் நவீன கற்றல் துணைச்சா தனங்களைக் கையாண்டு மாணவரை வகுப்பறையில் எழுச்சி பெறச் செய்ய ஆசிரியர் முயல வேண்டும்.

வெற்றிகரமான கற்றல்-கற்பித்தல் செயன்முறையில் ஊக்கல் முக்கிய பங்குவகிப்பதில் ஆசிரியர், மாணவரை

அறிந்தும் அவன் சார்பான சூழலை இனங்கண்டு தேவைக்குஏற்ப பொருத்த மான உபாயங்களைக் கையாண்டு ஊக்கலை ஆசிரியர் மாணவனிடத்தே ஏற்படுத்த வேண்டும். இதன்மூலம் மாணவனிடம் ஏற்படும் நடத்தை மாற்றம், கற்றல் கற்பித்தலில் வெற்றி என்பன கிடைக்கப் பெறும். எனவே வாண்மை நிறைந்த நல்லாசிரியரானவர் தொடர்ந்து கற்றுக் கொண்டே இருப்பவராகவும் அர்ப்பணிப்பும், புத்தாக்க சிந்தனையும் உடையவராகவும் இன்றைய மாணவனை சிறப்பாக ஊக்கப்படுத்தி, நடைமுறை உலகிற்கு தேவையானவற்றை மாணவர் களிடம் உருவாக்க ஆசிரியர்களாலேயே முடியும். எனவே ஒரு சமூகம், நாடு என்ப வற்றின் தலையெழுத்து ஆசிரியராலேயே நிர்ணயிக்கப்படுவதால் சிறப்பான மாணவர் சமூகத்தை உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர் கைகளிலேயே அமைந்துள்ளன.

# Benefits of the English Literary Association

Miss.S.Sinthusha
Grade 12 (2012) ARTS



There are English literary associations in almost all the schools. A literary association paves way for the students to enrich their knowledge practically. Such an association helps the students to get over their stage fright and become good speakers on leaving their schools.

Meetings of these associations are held monthly or fortnightly. Various items are included in the agenda of the meeting. There are debates, speeches, play lets, quiz competitions, and songs etc. Therefore students have plenty of opportunities to show their talents. At the debates students have a chance of exchanging their ideas with others. Before they take part in these debates they compel together necessary information about the relevant topic. This gathering of information too helps them to improve their knowledge.

Most of the English literary asso ciations prepare wall papers. The main objective of a wall paper is to pave the way for the students to improve their writing skill. English literary associations publish even monthly magazines. Learning through books plays only a very small part in the education of the students. In view of the above mentioned facts it appears that an English literary association helps students in numerous ways to improve their knowledge.

# MATHS - SCIENCE UNION - 2011



**Seated(L-R)** : Mr.S.Gunaratnam, Mr.M.R.Narenthira, Mr.K.Thillainathan, R.Gowshikan, Mr.A.Eswaranathan(Principal), G.Senpaul(President), Mr.S.Senthilnathan, Mrs.S.Mahenthiran

**Standing(L-R)**: Mr.R.L.Robinson, K.Tuestan, S.Thinesh, Mrs.M.Mohanarajan, Mrs.S.Sivasithamparalingam, P.Abiramy, T.Anastiga, Y.Priyanka, K.Surenthini, S.Marymedona

# ENGLISH UNION - 2011



**Seated(L-R)** : Mrs.B.Paulkamalaraj, S.Rushanthy, A.Volestin Juliya(President), Mr.A.Eswaranathan(Principal), G.Senpaul(Secretary), Mrs.T.Sukumar, R.Subeka

**Standing(L-R)** : M.S.Thinesh, S.Pakeerathan, S.Partheepan, S.Subaskaran

# உயிரியல் பல்வகைமை

திருமதி.ம.மோகனராஜன்,
B.Sc,PGDE,SLTS-2.II,
ஆசிரியர் ,
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.



பூமியில் வாழும் அனைத்து உயிரினங்களினதும் பல்வகைமையைக் குறிப்பதற்கே உயிரியல் பல்வகைமை என்ற சொல் பயன்படுகின்றது. நுண்ணிய விலங்குகள் முதல் பாரிய விலங்குகள் வரையான உயிரினங்களின் பல்வேறு வகைகள் இதற்குள் அடங்குகின்றன. சூழல் தொகுதி ஒன்றின் நிலைத்தலுக்கு உயிர்ப்பல் வகைமை அவசியம். உயிர்ப்பல்வகைமை இழக்கப்படுவதைக் குறைப்பதற்கான கால இலக்காக 2010ஆம் ஆண்டினைக் கொண்டிருந்தமையினால் 2010ஆம் ஆண்டு (சர்வதேச உயிரியல் பல்வகைமை ஆண்டாக) ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டது. வருடந்தோறும் மே 22 ஆம் திகதி சர்வதேச உயிர்ப் பல்வகைமைத் தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. உயிரியல் பல்வகைமையின் பிரதான அம்சங்களாக மரபணு பல்வகைமை, விசேட பல்வகைமை, சூழல்க்கட்டமைப்பு பல்வகைமை என்பவற்றைக் குறிப்பிடலாம். மரபணுத் தாக்கத்தினாலான மாற்றங்களினால் குறிப்பிட்ட ஓர் உயிரினத்துள் ஏற்படுகின்ற பல்வகைமையே 'மரபணு பல்வகைமை" எனப்படுகின்றது. பல்தரப்பட்ட உயிரினங்களில் காணக்கூடிய பல்வகைமை "விசேட பல்வகைமை" எனப்படுகின்றது. தற்போதைய கணக்கெடுப்பின்படி 1.8 மில்லியன் உயிர்ப்பல்வகைமைகள் உலகில் இருப்பதாக அறியப்பட்டுள்ளது. சூழல் கட்டமைப்பு அடிப்படையிலான பல்வகைமையே "சூழல் கட்டமைப்புப் பல்வகைமை" என அழைக்கப்படுகின்றது.

**உயிரியல் பல்வகைமையின் பயன்பாடுகள்**

* உயிரினங்களுக்கான உணவு உயிரியல் பல்வகைமையினாலேயே பெறப்படுகின்றது.
* மருந்துகள் தயாரிப்பிற்கு உயிர்ப் பல்வகைமை பயன்படுகின்றது.
* சூழல் சமநிலை பேணப்படுகின்றது.

இயற்கை வளங்களின் சிறந்த செயற்பாட்டிற்கு உயிரியல் பல்வகைமை அவசியமாகின்றது.

சூழல் அழகு மற்றும் அழகியல்சார் முக்கியத்துவமானது மக்களுக்கு பொழுது போக்கு, மன அமைதியை அளிப்பதுடன் அந்நியச் செலாவணியையும் பெற்றுத்தருகின்றது.

உ+ம்: இலங்கையின் முருகைக்கற்பாறை, பூந்தல தேசிய பூங்காவின் பறவைகள்

**இலங்கையில் உயிரியல் பல்வகைமையின் அவசியம்**

* இலங்கை சிறந்த உயிரியல் பல்வகைமையுடைய நாடாகும்.
* இங்கு அறியக்கிடைக்கின்ற தனித்து

வமான உயிரினங்களின் எண்ணிக்கை அதிகமாகும்.

* உயிரியல் பல்வகைமை தொடர்பிலான பாரம்பரிய அறிவுடைய ஒரு நாடாக எமது நாடு விளங்குகின்றது.
* சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த சூழல் கட்டமைப்புகள் எமது நாட்டில் நிலவுகின்றன.

1992 இல் பிரேசிலின் "ரீயோடி ஜெனிரோவில்" நடைபெற்ற, "உலக புவித்தின மாநாட்டில்" வெளியிடப்பட்ட சர்வதேச உடன்படிக்கையாக "சர்வதேச உயிரியல் பல்வகைமை உடன்படிக்கை" திகழ்கின்றது. 1992ஆம் ஆண்டு புவித்தின மாநாட்டிலேயே இலங்கையும் புதிய அங்கத்துவ நாடாகக் கையொப்பமிட்டதுடன் 1994 இல் அது இலங்கையில் நிறை வேற்றப்பட்டது.

## 2010 சர்வதேச உயிரியல் பல் வகைமை ஆண்டின் நோக்கம்

1. உயிரியல் பல்வகைமையின் முக்கியத்துவம் மற்றும் உயிரியல் பல்வகைமைப்பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வை அதிகரித்தல்.
2. தீர்வுக்கான முறையை முன்னெடுத்தல்.
3. உயிரியல் பல்வகைமை அழியும் வேகத்தினை கட்டுப்படுத்துவதற்கான துரித நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

## 2010 சர்வதேச உயிரியல் பல் வகைமை வருடத்தின் பிரதான செய்தி

* மனித இனத்தின் நன்மைக்காக உயிரியல் பல்வகைமையைப் பாதுகாத்தல் அவசியம்.
* உயிரியல் பல்வகைமை அழிவடைந்து வரும் வேகம் தற்போது அதிகமாக இருக்கின்றது. சில உயிரினங்கள் இயற்கையாக அழியும் வேகத்தினைவிட 100 மடங்கு வேகத்தில் அழிவடைந்துவருகின்றன.
* இந்த உயிரியல் பல்வகைமை அழிவடைந்துவரும் ஆபத்தினைத் தடுக்கவென நாம் இணைந்து செயற்பட வேண்டும்.

## 2010 ஆம் வருட உயிரியல் பல்வகைமைக்கான இலக்குகள்

தேசிய, பிராந்திய மற்றும் உலகளாவிய மட்டத்திலில் தற்போது நிலவும் உயிரியல் பல்வகைமை அழிவடைந்து வரும் வேகத்தினைக் குறிப்பிட்ட அளவுக்குக் குறைத்தல். இதனூடாக வறுமை நிலையைக் குறைத்தல்.

## உலகின் அனைத்து உயிரினங்களும் நன்மையடையச் செய்தல்

ஏறத்தாழ 4 மில்லியன் வருடங்களாகப் பரிணாம வளர்ச்சியடைந்து இன்றைய நிலைக்கு மாற்றம் பெற்றுப் புவியில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற உயிரினங்கள் மனித நடவடிக்கைகள் காரணமாக குறுகிய காலத்திற்குள் அழிவடைவது கவலைக்குரிய விடயமாகும். மனிதன் தனக்கு ஏற்ற முறையில் சூழலை மாற்றியமைக்க முற்படும் போது உயிரினங்களும் அவற்றின் வாழ் விடங்களும் அழிக்கப்படுவதுடன் அவை தனிமைப்படுத்தப்பட்டு நாளடைவில் அழிவடையும் நிலை உருவாகின்றது. உயிரினங்கள் அழிவடைந்தால் உலகம் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும். புவிவெப்பமடைதல் போன்ற பிரச்சினைகளுக்கும் உயிர்ப்பல்வகைமை இழப்பே பிரதான காரணமாகும். எனவே நாம் பொருத்தமான நுகர்வுமுறைகளைக் கடைப்பிடித்து உயிரியல் பல்வகைமையின் பாதுகாப்பிற்காக செயற்படுவோமாக.

# யாழ்ப்பாணம் பற்றிய ஒரு நோக்கு

செல்வி.ப.அபிராமி,
தரம் 10A



யாழ்ப்பாணம் என்பது இலங்கையின் வட மாகாணத்தைச் சேர்ந்த ஐந்து மாவட்டங்களில் ஒன்றான அதன் வட கோடியில் அமைந்துள்ள மாவட்டத்தையும் அம்மாவட்டத்தின் பிரதான நகரத்தையும் குறிக்கப்பயன் படுத்தப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணம் என்ற பெயர்வந்த வரலாறு பற்றி ஆய்வாளர்களிடையே பல கருத்து வேறுபாடுகள் நிலவிவருகின்றன. 18ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இயற்றப் பட்ட யாழ்ப்பாணத்தின் வரலாறு கூறும் "யாழ்ப்பாண வைபவமாலை" என்னும் நூல் முற்காலத்தில் இலங்கையை ஆண்ட அரசன் ஒருவனால் இந்தியாவிலிருந்து வந்த யாழிசையில்வல்ல குருடனான யாழ்பாணன் ஒருவனுக்கு வடபகுதியி லிருந்த மணற்றி (அல்லது மணற்றிடல்) என்னும் இடம் பரிசாக அளிக்கப் பட்டதென்றும் அப்பகுதி யாழ்ப்பாணம் என்று பெயர் பெற்றுப் பின்னர் முழுப் பிரதேசத்துக்குமே சொல்லப்படுகிறது எனக்கூறுகின்றது.

வேறு சிலர் நல்ல ஊர் என்னும் கருத்தைத் தருகின்ற சிங்களச் சொல்லான 'யஹபனே" என்பதிலிருந்தோ அல்லது சிங்கள இலக்கியங்கள் சிலவற்றில் குறிக்கப் பயன்பட்ட 'யாபா பட்டுண" என்ற சொல்லிலிருந்தே யஹபனே, யாபா பட்டுண ஆகியசொற்கள் மருவிவந்ததாகச் சொல்லப் படுகிறது.

யாழ்ப்பாண அரசு கி.பி.13ம் 14ம் நூற்றாண்டை அண்டிய காலப்பகுதிகளில் தொடங்கி இருக்கக்கூடும் என ஆய்வா ளர்கள் கருதுகின்றார்கள். யாழ்பாடி வாரிசு இல்லாது இறந்த பின்னர் இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட கூழங்கைச் சக்கரவர்த்தியிலிருந்து தொடங்கி ஆரியச் சக்கரவர்த்திகள் என்று அழைக்கப்பட்ட வம்சம் யாழ்ப்பாண அரசு போர்த்துக்கீசரால் கைப்பற்றப்படும் வரை ஆண்டு வந்ததும். இவர்கள் பரராசசேகரன், செகராசசேகரன் என்ற பட்டப் பெயர்களை மாறிமாறி வைத்துக் கொண்டு ஆண்டு வந்ததாகவும் சொல்லப்படுகிறது. யாழ்ப்பாண இராச்சி யத்தின் தலைநகராக விளங்கியதாகக் கருதப் படுகின்றது. கி.பி.1450 வந்த செண்பகப் பெருமாள் (சப்புமல் குமாரய்யா) என்பவ னிடம் தோல்வியடைந்தது. எனினும் பதினேழு வருடங்களின் பின் தோற்றோடிய கனகசூரிய சிங்கையாரியன் இந்தியா விலிருந்து படைதிரட்டி வந்து பின்னர் யாழ்ப்பாணம் ஐரோப்பிய நாடுகளான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகியோரின் ஆட்சிக்குட்பட்டது. இறுதி

யாக ஆண்ட பிரித்தானியர் யாழ்ப்பாணத்தையும் அவர்களால் கைப்பற்றப்பட்ட இலங்கைத்தீவின் ஏனைய பகுதிகளுடன் சேர்த்து ஒரே அலகாக நிர்வகித்தனர். 1948 பெப்ரவரி 4ம் திகதி முழுத்தீவையும் ஒரே நாடாகவே சுதந்திரம் கொடுத்துவிட்டு வெளியேறினர். யாழ்ப்பாண மாவட்டம் இலங்கையின் உலர்வலய பிரதேசத்தில் அமைந்துள்ளது. வளங்களை விரிகுடாவிலிருந்து வரும் வடகீழ்ப் பருவப்பெயர்ச்சிக் காற்றினால் மழையைப் பெறும் இப்பகுதி 1250 மில்லிமீற்றர் வருடாந்த மழை வீழ்ச்சியைப் பெறுகின்றது. ஆகக்கூடிய மாதாந்த சராசரி வெப்பநிலை 29.5 பாகை செல்சியஸ் ஆகஉள்ளது. அடையற் சுண்ணக்கற் பாறையைக் கொண்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தின் தாவர வகையை நோக்கின் அம் மாவட்டத்தின் தனித்துவமான தன்மையாகத் தெரியும் மைல் கணக்கில் பரந்த கிடக்கும் பனந்தோப்புக்களாகும். பௌதீக இயல்பைப் பொறுத்த வரையில் யாழ்ப்பாணம் ஒரு குடாநாடாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் இந்தியப் பெருங்கடலும் மேற்கிலும் தெற்கிலும் யாழ்ப்பாணக் கடல் நீரேரியும் அமைந்துள்ளது. இந்தக்குடாநாடு ஆனையிறவு என்ற இடத்தில் ஓர் ஒடுக்கமான நில இணைப்பு உண்டு. மேலும் யாழ்ப்பாணக் குடாநாடு உப்பாறு கடல் நீரேரி, தொண்டைமானாறு கடல் நீரேரி என்பவற்றால் கிட்டத்தட்ட மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டதுபோல் தோற்றமளிக்கிறது. இந்த இயற்கைப் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு யாழ்குடாநாடு, வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் என்னும் பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டம் வரண்டதாகவும், அளவிற் சிறியதாகவும் இருந்தும் இது மிகவும் சனத்தொகை செறிவு மிக்க பகுதியாக காணப்படுகிறது. ஐந்து மாவட்டங்களையும் 8848.11 ச.கீ.மீ பரப்பளவைக் கொண்ட வடமாகாணத்தில் 1025.2 ச.கி.மீ அளவுக்குள் அடங்கியுள்ள இம் மாவட்டத்தில் 66.6% வீதமான மக்கள் வாழ்ந்ததாக 1981ம் ஆண்டுக் கணக்கெடுப்புக் காட்டுகிறது. தமிழர், சிங்களவர்கள், முஸ்லீம்கள் என்னும் மூவினத்தவரும் வாழ்ந்தாலும், யாழ் மாவட்டத்தின் சனத்தொகையில் மிகப் பெரும்பான்மையினர் தமிழர் ஆவார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வரலாற் றுப் பிரசித்தி பெற்ற ஆலயங்கள் பல காணப்படுகின்றன. அவற்றுள் நல்லூர் கந்தசுவாமி கோவில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், தொண்டைமனாறு செல்வச்சந்நிதி முருகன் கோவில், கீரிமலை நகுலேஸ்வரம், காரைநகர்ச் சிவன் கோவில் போன்றன முக்கி யத்துவம் பெறுகின்றன. பழம் பெருமை வாய்ந்த நகரங்களுள் ஒன்றாக விளங்கும் யாழ்ப்பாணம் என்றும் வளம் மிக்க ஒரு நகராகத் திகழ்கிறது எனலாம்.

# உலக மயமாதலில் கல்வி

திரு.க.தவசீலன்
B.Com,PGDE,Sp.Trd(Agri)SLTS-2.II
ஆசிரியர்
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி



உலக நாடுகள் இன்று ஒருமைக் கோட்பாடாக ஒரே குடையின் கீழ் வளர்ச்சி பெற்றிருப்பது உலகமயமாதல் ஆகும். இங்கு நாடுகளின் எல்லைக் கோடுகள் முதன்மை இழந்து வருகின்றன. நாடுகளிடையே பொருட்கள், மூலதனம், தொழில்நுட்பம், ஊழியர்கள் மற்றும் முயற்சியாளர்கள் போன்ற அனைத்தும் தங்குதடையற்ற முறையில் பரிமாற்றப்படுகின்றன. நாடுகள் ஒன்றிலொன்று தங்கியிருக்கும் வலையமைப்புநிலை வலுவடைந்து காணப்படுகின்றது. இதனால் உலக நாடுகள் எல்லா நாடுகளையும் சந்தைகளாகப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. இங்கு நாடுகள் ஒவ்வொன்றினதும் வளர்ச்சியானது அவைகளின் போட்டியிடும் ஆற்றலிலேயே தங்கியுள்ளது. இங்கு சந்தையைக் கைப்பற்றும் ஆற்றலே ஒரு நாட்டின் வளர்ச்சியைத் தீர்மானிக்கின்றன. இங்கு நாடுகளின் தேசிய வாதம் முதன்மையற்று சர்வதேச அம்சம் முக்கியம் பெறுகின்றது. இவற்றினை வழிநடத்துவதாக நாடுகளுக்கிடையேயான நிறுவனஅமைப்புக்கள் முக்கியம் பெறுகின்றன. இவை சர்வதேச நிறுவனங்களாகவும், பிராந்திய நிறுவனங்களாகவும் அமைகின்றன.

உலகமயமாதலின் வளர்ச்சியை எடுத்து நோக்கில் 1989ல் சோவியத் யூனியன் நாட்டின் (USSR) வீழ்ச்சிக்குப் பின் வளர்ச்சி பெற்றதால் இங்கு சமவுடைமைப் பொருளாதார அமைப்பு, கோட்பாடு மூடப்பட்டதால் மேலைத்தேய சந்தைப் பொருளாதாரக்கோட்பாடு வலுப்பெற்று உலகமயமாதல் கோட்பாட்டை வலுவடையச் செய்தது. இதன் வளர்ச்சிக்கான காரணிகளாக உலகில் ஏற்பட்ட பொருட்கள் சேவைகளின் சடுதியான உற்பத்திப் பெருக்கமும் உலக வங்கியில் ஏற்பட்ட நிறுவன ரீதியான மாற்றங்களும், உதாரணமாக GATT நிறுவனம் நிறுத்தப்பட்டு WTO உருவாக்கப்பட்டது. மற்றும் பல்தேசியக் கூட்டுத் தாபனங்களின் வளர்ச்சியும், பிராந்திய பொருளாதார ஒத்துழைப்புக்களின் வளர்ச்சியும், கல்விசார் மூலதனமும், தொழில் நுட்பரீதியான துரிதவளர்ச்சியும், பிரிவாக்கமும், தகவல்இயல் மற்றும் தொடர்பாடல் தொடர்பான மின்னியல் வளர்ச்சியும் உலகமயமாதலை விரிவாக வளர்ச்சியடையச் செய்தன.

கல்வியில் உலகமயமாதலின் செல்வாக்காக கல்வி இன்று வணிகப் பண்டமாக நோக்கப்படுவது ஆகும். இங்கு ஒரு நாட்டின் கல்வி நடைவடிக்கைகள் ஏனைய

நாடுகளுடன் தொடர்புற்றுக் காணப்படுகின்றது. இன்று உலகமயமாதல் அதிக பாதிப்பை ஏற்படுத்திய துறையாக கல்வித் துறை காணப்படுகின்றது. இதன் காரணமாக மனிதவள அபிவிருத்தியில் முக்கியமான தாக கல்வி அமைந்துள்ளது.

இன்று கல்வியானது முதலீட்டுத் தெரிவுத் துறையாக விரிவடைந்துள்ளது. அதாவது உலக முதலீட்டுத் தெரிவுகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. அத்துடன் உலகமயமாதல் அறிவுப் பொருளாதாரத்துடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. அதாவது மனித வளத்தை வளர்ப்பதாயும், கல்வி முதலீடாககருதப் படுவதாலும் கல்வியானது அறிவுப் பொருளாதாரத்தை நோக்கி நகர்வதாலும் முக்கியம் பெறுகின்றது.

உலகமயமாதலானது கல்வியை வணிகப்பண்டமாகக் கருதுவதால் இதனை கைம்மாற்றக் கூடியதாயும் பெறுமதி அடிப் படையில் விலை தீர்மானிக்கப்படுவதாலும் இலாப விகிதத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்கப்படுகின்றது. அத்துடன் கல்வி இலாபகரமான வர்த்தகமாகக் கருதப்படுகின்றது. எனவே வர்த்தக அணுகு முறைகளாக நிறுவனங்களிடையேயான கூட்டு முயற்சி, தரமிடல், தனியுரிமையை நிலை நிறுத்தல் போன்றவை பின்பற்றப்படுகின்றது.

இன்று உலக வலையமைப்பில் கல்வியானது இணைக்கப்பட்டுள்ளது. அதாவது தகவல் சேகரிப்பு, வர்த்தக ஆய்வு, டிஜிட்டல் ஊடகம், அனிமேசன், மென்பொருள் உற்பத்தி இணையத்தள அபிவிருத்தி மற்றும் பல வளங்கள் கல்வியுடன் பிணைக்கப்பட்டுள்ளன. அத்துடன் கல்வி சுற்றுலாத்துறையுடன் இணைந்ததாகக் காணப்படுகின்றது. இதற்கமைய பயணிகள் பாதுகாப்பு, உணவு, பொழுது போக்கு, சரணாலயம், கலாசார பண்டம், கட்டட நிர்மாணம் போன்றன உலக ரீதியில் வளர்ச்சி அடைந்துள்ளன.

உலகமயமாதலில் கல்வியை அறிவு சார்ந்த பண்டம் என்பதில் இருந்து திறன்சார்ந்த பண்டமாக வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. மேலும் இன்று கம்பனிகளும், வியாபார நிறுவனங்களும் கல்வித்துறையுடன் இணைந்து செயற்படுவதை அவதானிக்கலாம். இங்கு நாட்டின் மிகப் பெரிய நிறுவனங்கள் பல்கலைக் கழகத்தை நடாத்துவதுடன், நாட்டிற்கு எவ்வாறான மனிதவளம் தேவை என்பதையும் இவைகளே தீர்மானிக்கின்றன.

நாடுகளின் கல்விக்கலைத்திட்டமானது உலகின் ஒரே மாதிரியான போக்கைக் கொண்டதாகத் திட்டமிடப்படுகிறது. இங்கு பாடவிதானம், எண்ணக்கரு, பயிற்சி என்பன எல்லா நாட்டிலும் தொழில்செய்ய படிப்பைத் தொடர்வாய்ப்பாக ஒருமைப்படுத்தப்பட்ட தரநிர்ணயத்தை கொண்டுள்ளது. அத்துடன் பல்நாட்டு நிபுணர்களும், விரிவுரையாளர்களும் எங்கும் சென்று கற்பிக்க முடியும். மேலும் நாடுகள் பல இணைந்து உலக ரீதியில் சந்தைப்படுத்தக்கூடிய கற்கை நெறிகளுக்குப் பட்டங்களை வழங்கி வருவதும் இங்கு முக்கியவிடயமாகும். மேலும் கற்றல் - கற்பித்தல் -மதிப்பீடு என்பன இலத்திரனியல் சார்ந்த மூலகங்களில் விரிவாக்கப்பட்டுள்ளது.

இதனால் தொழில் நுட்பத்துடனும் சந்தை விற்பனையுடனும் கல்வி இணைக்கப் பட்டுள்ளது. இவ்வாறு கல்வியில் உலகமய மாதல் பலவாறு பாதிப்பை ஏற்படுத்தி யுள்ளது.

இலங்கையில் கல்வி நடவடிக்கையில் உலகமயமாதலின் பாதிப்பை எடுத்து நோக்கில் அண்மைய ஒரு தசாப்த கல்வி நடவடிக்கையானது உலகமயமாதலை அடிப்படையாகவைத்தே உருவாக்கப் பட்டுள்ளது. இலங்கை இதற்கு இணங்கக் கல்வித்துறையில் திறன்களும் பயிற்சி, ஆய்வு, தொழில்நுட்ப, விஞ்ஞான அபிவிருத்தி ஊடாக மனித வளத்தை வலுப்படுத்த முனைகின்றது. இதற்கு சார்பாக உயிர்த் தொழில்நுட்பம், தகவல் தொழில் நுட்பம், தன்னியக்க தொழில்நுட்பம், நனோ தொழில்நுட்பம், புதியபொருள் உற்பத்தி என்பன ஊடாகவும் வன்பொருள், மென்பொருள், இலத்திரனியல் போன்ற அபிவிருத்திக்கு உலகமயமாதலைப் பயன் படுத்துகின்றது.

இலங்கையின் கல்வி உலகமய மாக்கலுக்கு ஏற்ற கொள்கையாக ஏற்றுமதி, இறக்குமதி பெறுமதி அதிகரிப்புக்கான மாற்று உபாயங்களை உருவாக்குவதுடன், பரந்த அறிவும், தொழில்நுட்பப் பயிற்சி, விஞ்ஞான ஆய்வாளரை உருவாக்குதலும், செயலாற்றல் திறன்களை விருத்திசெய்தல், மற்றும் சந்தைகளை முழுமையாகப் பயன் படுத்தி ஆய்வு, அபிவிருத்தி உயர் தொழில்நுட்ப செயல்முறையை விரிவாக் குதல் முதலியவற்றை மேற்கொள்கின்றது.

உலகின் முன்னணிப் பல்கலைக்கழ கங்களையும், தனியார் துறைகளையும், தொழில்நிறுவனங்களையும் இலங்கையின் உயர்கல்வியில் இணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு அமைவாக இலங்கையில் சர்வதேச தரம் கொண்ட ஐந்து பல்கலைக்கழகங்கள் உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளன. அத்து டன் கல்வித்துறையில் முயற்சியாண் மையினரை ஊக்குவிப்பதன் மூலம் கல்வியில் வியாபார நிறுவனங்களின் பங்கேற்றலை அதிகரிக்கவும் செய்கின்றனர்.

எந்திரவியல் விஞ்ஞான தொழில் நுட்பப் பூங்காக்கள், உயர் தொழில் நுட்பம் சார்ந்த தனியார் நிறுவனங்களைக் கவரு வதற்காக ஆய்வாளருக்கும், விஞ்ஞானி களுக்கும், தேசிய ரீதியிலான உதவிகளை வழங்குதல். அத்துடன் ஆய்வு அபிவிருத்தி ஏற்றதாகத் தேசிய மனிதவளக் கொள்கை யை மாற்றியமைத்தல். இதில் தகவல் தொழில்நுட்பம், சுற்றாடல், மருத்துவம், மற்றும் நுண்இலத்திரனியல் துறைகளுக்கு உலகின் முன்னணி உயர், நிறுவனங்களைப் பயன்படுத்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் உலகரீதியிலான வளர்ச்சியில் இலங்கை யர்கள் பங்காற்றவும் அதன் பயன்களை இலங்கைக்கு கைம்மாற்றவும் முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றன.

கல்வியில் உலகமயமாதலால் பெறப் படும் அனுகூலங்களாக அமைவது உலகத் தரம் வாய்ந்த கல்வியை எல்லோரும் பெற முடியும். மேலும் உலக ரீதியில் சிறப்பான தொழில் வாய்ப்பைப் பெறமுடியும். அதாவது தொழில் உலகத்திற்கும் கல்விக்குமான இடைவினை சிறப்பாக

அமையும். அத்துடன் நாடுகளின் தொழில் நுட்ப முன்னேற்றத்திற்கு ஏற்ற கல்வி வளர்ச்சியை நாடுகள் அனுபவிக்க முடியும். நாடுகளில் பன்மைக்கலாசார கல்விச் சூழல் வளர்ச்சி பெற வாய்ப்பளிக்கின்றது. அதற்கு மேலாக ஒருவர் குறித்த நாட்டில் தொடர்ந்து கல்வியினை வேறு ஒரு நாட்டில் தொடர் வதற்கான வாய்ப்புக்களும் விரிவடைந்து காணப்படுகின்றமை இந்த உலகமய மாதலின் செல்வாக்கே ஆகும்.

உலகமயமாதலினால் கல்வியில் ஏற் படும் பாதிப்புக்களாக அமைவன உற்பத்தி நிறுவனத்தின் வேகத்திற்கு கல்வி நிறுவனங்கள் ஈடுகொடுக்க முடியாத நிலை காணப்படுதல். கல்வியில் வறியவர்களின் பங்குபற்றல் வீழ்ச்சி அடையும். மேலும் சிறிய நாடுகளின் வருமான மட்டத்திற்கு ஏற்றதான கல்வி வாய்ப்பையே பெற முடியும். அத்துடன் பல்நாட்டு தொடர்பு நாட்டின் சுதேசிய விழுமியம், பண்பாடு புறக்கணிக்கப்படும் அபாயம் காணப்படும் மனிதர்கள் தொழில்நுட்ப உபகரணம், இயந்திரங்களின் மேலாதிக்கம் அதிகரிப் பதால் மனிதனுக்கும் மனிதனுக்குமான இடை வினைக்குறைவாகத் தொடர்பு காணப்ப டுவதனால் மனிதப்பண்பு வீழ்ச்சி அடையும்.

வியாபார நிறுவனங்கள் கல்வி நோக்கத்தைத் தீர்மானிப்பதால் சமூக நோக்கு புறக்கணிக்கப்படும். சுயகற்றல் தொழில்நுட்ப முன்னேற்றத்தால் ஆசிரியர் மாணவர் இடைவினை உறவு பாதிப்படைவதோடு கலைத்திட்டத்தில் மேலை நாட்டுச் செல்வாக்கு அதிகரித்துக் காணப்படும். இன்று பாடசாலைகளில் காணப்படும் சீர்மிய செயற்பாடு மேலைத்தேய அணுகு முறைகளே. பட்டதாரிகளின் (Class) தரத்தை மையமாகவைத்து தகுதி தீர்மா னிக்கப்படுவதால் உண்மையான பல்துறை திறமை சார்ந்தவர் வெளியேநிற்க பாட மையம் சாராதவர்கள் நிறுவனத்தில் சேர்வதால் நிறுவனங்களிலே எதிர்பார்க் கப்படும் திறன் இன்மையால் வேலைக்கு "அமர்த்தலும் துறத்தலும்" என்ற நிலைமை காணப்படும்.

எந்தவொரு நாடும் இன்று தனித்து இயங்க முடியாத நிலைகாணப்படுவதால் உலகப் போக்கிற்கு அவை இசைவு காட்டி வாழ வேண்டும். தனது நாட்டுக் கல்விமுறைகளை உலக சவாலை எதிர் கொண்டு தீர்வு காணுவதற்கு ஏற்ற வகையில் மாணவருக்கு வழங்க வகை செய்ய வேண்டும். உலகமயமாக்கலின் பாதக விளைவுகளை இழிவாக்கும் வகையில் தமது கொள்ளைத் திட்டங்களை நாடுகள் வகுத்து அறிவுப் பொருளாதாரத்தை அனுபவிக் கின்ற மக்களாக மாற்ற வேண்டும். இதன் மூலம் தேசியத்திற்கும் சர்வதேசத்திற்கும் ஏற்ற மனித வளத்தொகுதியை உருவாக்க நாடுகள் உலகமயமாக்கலைச் சாதகமாகப் பயன்படுத்தி வெற்றிகாண வேண்டும்.

# English as a Life skill Sri Lanka plan Model India's English Education System

Mrs.T.Sukumar,
Sp.Trd( English),SLTS-3.I,
Teacher,
J/ Urumpirai Hindu College.



Sri Lanka currently holds more than 20000 ESL teachers and over 2100 private English education facilities throughout the country. However, English is far from being a communication tool. The English instructors are simply not fluent enough and students are not properly immersed in English. In an effort to battle this non-productive cycle of education, the government is pushing business to adopt the 'English as a life skill' program. English will be taught as a tool that can be used in the business world rather than previous education methods. Private English schools will be granted government assistance while switching over to the new model of education.

Presidential Initiative on English as a life Skill programme was launched in the President's official residence Temple Trees. The programme promotes English Language Skills, especially speaking and commu nication skills across the country with the guidance and support of the presidential Task Force on English and IT headed by Sunimal Fernando. The Ministry of Education and the Provincial Ministries of Education facilitate the task force to conduct the programme. Under the first phase of the programme, a cadre of 80 master trainers and 320 assistant trainers in spoken English from all nine Provinces were trained at the English and Foreign Languages University (EFLU), Hyderabad. The training was given in 10-day workshops that are being held regionally. The teachers are taught many language workshops that are being held regionally. The teachers are taught many language games and they are provided with opportunity to speak English through numerous activities such as debates and presentations. It can be considered a rare opportunity for many teachers of the schools in remote areas to brush up their knowledge and skills.

The English teacher community and the general public have been mobilized to support this programme. 60% of the 22,500 English teachers of the country were trained to teach spoken English through an accelerated programme. In addition, the country's trained to teach spoken English through an accelerated programme. In addition, the country's first teacher guide for spoken English was produced, used and revised after one year by the Master Trainers themselves during the 1st phase. A Sri Lanka-India centre for English Language Training (SLICELT) with modern technology and local and India resource persons was established at Peradeniya with Indian government assistance was successfully negotiated to establish nine provincial Sri Lanka India Centers for English Language Training (SLICELTs) with state-of-the-art teaching technology, residential facilities for 80 trainers and local and India resource persons in each Centers in the course of 2010-2011.

The programme, English as a Life Skill promotes English Language Skills, especially speaking and commu nication skills across the country. Children should be allowed and encouraged to speak English our way and that they should not feel ashamed or inferior to do so. Many countries in the world have their own ways of speaking English and there is no reason for Sri Lanka to be an exception. Children should not be deterred from speaking English our way.

The Ministry aims to focus also on testing the listening and speaking skills of students at the O level examinations to be held from 2012. Currently, only the reading and writing skills are evaluated at the exam. The Examination department is to intro duce a new system to provide 30 percent marks for spoken and listening for English in the G.C.E.(O/L) examination in the future. The testing of listening and speaking skills at the O/Level Examination was targeted for 2010 with testing tools developed by NIE and the Sri Lanka India Centre for English Language Training in collaboration with the commissioner General of Examinations. Re-visiting the school English syllabi commenced to ensure that they cater to the needs of the second language learner in the Sri Lankan context and is not beyond his/her capabilities.

The end result of this new system of English education is employability of Sri Lanka's people; teachers who can teach, and students who can work in work in an English environment.

# TAMIL UNION - 2011



**Seated(L-R)** : Mr.K.Selvachandran, Mr.K.Uruthirakumaran, M.Piriya(Secretary), S.Vani, Mr.A. Eswaranathan(Principal), V.Robinson(President), Mrs.S.Sritharan, Mrs.J.Murugathas , Mr.S.Sivakumar

**Standing (L-R)** : U.Thushyanthan, S.Rushanthy, Y.Lamsa, S.Shamily, R.Saththiya, S.Subashkaran

# SOCIAL SCIENCE UNION - 2011



**Seated(L-R)** : Miss.S.Ranjini, R.Subeka, Mr.A.Eswaranathan(Principal), U.Thushyanthan(President), Mrs.B.Thiyagalingam , Mr.S.Sivakumar

**Standing(L-R)** : K.Surenthini, P.Abirami, P.Sivasangaran, B.Jasinthan, P.Niroshan, M.S.Dinesh

# சிங்கராஜவனம்

செல்வி.யோ.சர்மினா,
தரம் 9.



இலங்கை மிகச்சிறிய நாடாயினும், வெவ்வேறு பிரதேசங்களுக்கும் இடையே காணப்படும் வேறுபாடுகள் வியப்பை ஏற்படுத்துகின்றன. இங்கு காடுகள், புல்நிலங்கள், சதுப்பு நிலங்கள், தண்ணீர்க்குளங்கள், கடற்கரை போன்ற பல்வேறு சூழற் தொகுதிகள் காணப்படுகின்றன. மகாவலிகங்கை, சிவனொளி பாதமலை, சிங்கராஜக்காடு என்பன எங்களுடைய இயற்கைச் செல்வங்களுள் சிலவாகும்.

சிங்கராஜவனம் இலங்கையில் அமைந்துள்ள பாதுகாக்கப்பட்ட தேசியவனமாகும். இது இலங்கையில் சப்ரகமுவ தென்மாகாணங்களின் எல்லையில் இரத்தினபுரி, காலி, மாத்தறையிலுள்ள அயனமண்டல மழைக் காடாகும். 1988ஆம் ஆண்டு சிங்கராஜக் காடு தேசிய மரபுரிமைப் பரப்பாகப் பிரகடனப்படுத்தப்பட்டதுடன் 1989ம் ஆண்டு உலகமரபுரிமைத்தலமாகவும் பெயரிடப்பட்டது. இது இலங்கையின் தாழ் நில ஈரவலயத்தில் அமைந்துள்ளது. ஆண்டுச் சராசரி வெப்பநிலை 23.6°C ஆகும். மே தொடக்கம் யூலை வரை தென்மேல் பருவக்காற்று மூலமும் ஒக்டோபர் முதல் டிசம்பர் வரை வடகீழ் பருவக்காற்று மூலமும், இக்காடு மழையைப் பெறுகின்றது. ஆண்டுக்கு சராசரியாக 2500mm மழைவீழ்ச்சியைப் பெறுகின்றது. அயனமண்டல மழைக்காட்டில் பல்வேறு மட்டங்களில் அதாவது படைகளில் (படை கொள்ளல்) தாவரங்கள் அமைந்திருப்பதைக் காணலாம். வெளிப்பாட்டுப்படையை அமைக்கும் உயரமான மரங்கள் 40m-45m வரை வளரும். இவை உச்சிப்பகுதியில் இணைத்துக் காணப்படும். அதற்கு அடுத்த படையில் மரங்கள் தொடர்ச்சியாகக் காணப்படும். இத்தாவரங்களின் வேர்தொகுதி நன்கு பரந்து வளர்ந்திருக்கும். தாவரங்கள் அடர்த்தியாக வளர்வதால் சூரிய ஒளி மிகக் குறைவானது. இதனால் நிலத்தில் பூண்டுகள் மிகக்குறைவு. ஒளியைப்பெறுவதற்காக உயர்ந்த மரங்களின் தண்டுகள் ஆதாரத் தைப்பெறும் கொடிகள், ஏறிகள், மேலொட்டிகள் அதிகளவில் காணப்படுகின்றன. ஆசினிப்பலா, நதுன், காட்டுப்புன்னை, காட்டாமணக்கு போன்ற பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மரங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. உள்நாட்டு இனங்களும், பழமையான தாவர விலங்கினங்களும் காணப்படுவதால் இவற்றில் பரந்த உயிர்ப்பல்வகைமை காணப்படுகின்றது. இங்குள்ள விலங்குகளும், பறவைகளும், பூச்சியினங்களும் அதிக உயர்ப்பல்வகைமையைக் காட்டுகின்றது. உயிர்ப்பல்வகையைக் கொண்ட சிங்கராஜ வனத்தைப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்குவது எமது கடமையாகும்.

# Good Health Habits

Miss.A.Ramya
Grade 13 (2011) ARTS



In everyday life we see people live in many different ways, some clean, some dirty and who have both of these quali ties. But everyone should learn to be clean and of course healthily. Creating a healthy environment in home and school is not sufficient. This healthy environment can be made by growing plants around your home and putting out things such as plastic wrappers and old tyros. These things pollute not only your home but the whole enviro nment. You can grow even flowers and plants that can be use useful such as trees like mango jar etc. These kinds of trees even make your garden beautiful and they also up gases such as carbondioxide.

Creating a healthy environment in your school is the easiest way you can organize a Shramadana campaign and grow trees around the school. You can clean up the whole school easily. It you can advise and maker the children not to throw plastic bags and cans every where and advice them to put them in proper places you can easily create a healthy environment at your school as well as in your own home.

Taking healthy food is another essential thing. Infact it is most important. You should always eat the very best of food. You must always wash fruits before you eat and must eat nutritious foods. Every time you should have needed to provide your body with energy and that is why you must take nutritious food and healthy foods not to keep you fit but also to keep you healthy. Working out or exercising is another important thing if you have to stay healthy and fit. Exercising means not only running and weight lifting your body in good shape and it helps you to stay healthy by bumming fat and reducing the fatty tissue inside our body. This keeps us healthy because it prevents us by being fat. Exercising a good healthy environment and mostly healthy food lead to a healthy body and by doing these habits everyone will have a great healthy life.

# இசையின்பம்

திருமதி.கௌ.மகேந்திரராஜா,
B.FA,PGDE,SLTS-2.II,
ஆசிரியை ,
யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி.



"இயலிசையி லுசிதவஞ்சிக் கயர்வாகி
இரவு பகல் மனது சிந்தித் துழலாதே
உயர் கருணை புரியுமின்பக் கடல்மூழ்கி
உனையெனது ளறியுமன்பைத் தருவாயே."

இது போன்ற ஆயிரக் கணக்கிலுள்ள திருப்புகழால் இயலைப் பற்றியும், இசையைப் பற்றியும் இலக்கணத்துடன் எடுத்துரைத்து முருகப்பெருமானை இன்னிசையாற் பாடிப் போற்றிய அருணகிரிநாதர் ஏழிசையாய் இசைப்பயனாய் விளங்கும் அப்பெருமானது திருவருளின்பத்தில் இரண்டறக் கலந்து இன்புறுவராவர்.

இசையின் பெருமை அளவிடற்கரிய தாகும். உலகம் முழுவதும் ஓசை ஒளியாய் நிறைந்து விளங்குவது இறைவனாகிய முழுமுதற் பொருளே எனப் பெரியோர் கூறுவர். அவ்வாறு நாதப்பிரம்மமாய் விளங்கும் இறைவனையடைவதற்குச் சிறந்த சாதனமானது இசையேயாகும்.

மக்களிற்கு சிறந்தவராகிய முனிவர் முதல் பசு,பாம்பு வரை எல்லாவுயிர் களினதும் மனத்தையும் ஒருநிலைப் படுத்துவது இசையின் இயற்கையாகும். தும்புரு, நாரதர் என்னும் இருவரும் யாழேந்திய கையராய் இடையறாது பாடி, இறைவனை மகிழ்வித்தனர். கம்பளர், அசுவதரர் என்னும் இருவர் குண்டல வடிவமாய் பரமசிவன் திருச்செவிகளிலமர்ந்து இசைப் பாடல்களால் இன்புறுத்தி வருகின்றனர் என்றும் நூல்கள் கூறுவதாலும், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கடல் கொள்ளப்பட்ட தென் மதுரையில் பாண்டிய மன்னர்கள் ஆதரவில் நடைபெற்ற முதற்சங்கத்தின்கண் இயல், இசை, கூத்து (நாடகம்) என்ற முத்தமிழும் ஆராயப் பெற்ற போது இசை நூல்கள் பல வெளிவந்தன என்று சிலப்பதிகார உரையாசிரியர் முதலானோர் கூறுவதாலும் சரித்திர ஆராய்ச்சியாளருக்கு எட்டாத மிகப்பழைய காலந்தொட்டே இசை தோன்றி வளர்ந்து வந்துள்ளது எனக் கூறுதல் மிகையாகாது.

ஒருநாட்டின் பண்பாட்டைக் காட்டுவது அந்நாட்டின் நுண்கலைகளிலேயே தங்கி யுள்ளது. கலைகள் இல்லாத எந்த நாடும் மற்றைய வளங்கள் இருப்பினும் சுபீட்சமாக இருக்க முடியாது. இதுவே பல அறிஞர்கள் கண்ட உண்மை. இக்கலைகளுள் முதன்மையானது இசை. இசையினால்த் தான் அகிம்சா தர்மம், சமாதானம், சாந்திநிலை, சமயம் போன்றயாவும் ஒருங்கே வளர முடியும். இசையினைச் சகல ஜீவராசிகளுமே கேட்டு இன்பமடைகின்றன. இசையைக்

கேட்டு உருகாதார் உலகில் இருப்பினும் அவர்கள் வெறும் நடமாடும் உருவங் களேயன்றி, ஆத்மீக தர்மத்தின் படி பகுத்தறிவாளராகக் கருதப்படமாட்டார்கள். பண்டைத் தமிழ் நாட்டின் மூதாதையர்கள் இசைநிலையை தம் உயிரினும் மேலாகப் போற்றி சுப, அசுப கருமங்களிலும் தேவாலயங்களிலும் விதிமுறைக்கேற்ப முதலிடங்கொடுத்தனர். இவ்வழக்கம் அப்பண்பாட்டுத் தொடர்புடைய நாடுகளில் காணலாம்.

இசைக்கும், யோகாப்பியாசம் போன்ற சுவாசப் பயிற்சிக்கும் நெருங்கிய இணைப்பு இருப்பதைக் காணலாம். நாத அலைகள் நீளவும், குறுகவும், உதிரவும் சரீரத்தில் பல நாட்கள் அப்பியாசம் செய்த பின் தான் சுலபமாக நினைத்தபடியெல்லாம் நாத வடிவாம் இசையினைப் பாடி சம்பிரதாய முறைப்படி இராகங்களை உருவாக்கலாம். இசை மூன்று பிரிவுகளையுடையது. அவை:- கீதம். நிருத்தியம், வாத்தியம் என்பனவாம். இவை மூன்றும் ஏகோபித்த நிலையில்த் தான் இசை பூரண சோபையை அடைகிறது. பண்டைக்கால இசை வல்லுநர்கள் மிகவும் ஆராய்ச்சி விற்பன்னர்களாகவே இருந்தார் கள் என்பதும் அவர்கள் எமக்காக விட்டுச் சென்ற பொக்கிசங்கள் எடுத்துக் கூறுகின்றன.

இசையின் ஸ்வரநிலைகளின் இடை களை அலை அலையாகவும் அணு அணுவாகவும் கணக்கிட்டு வைத்திருக்கும் பெருமை இசை வல்லுநர்களுக்கே உண்டு. தற்காலத்தில் அணு ஆராய்ச்சி நடக்கி ன்றதெனப் பெருமிதம் கொள்ளும் இன்றைய உலகில் இற்றைக்கு பல்லாயிரம் ஆண்டு களுக்கு முன்பே அணு ஆராய்ச்சி இசை மேதைகளால் நடாத்தப்பட்டிருப்பதை அறிய நாம் எவ்வளவு பெருமிதம் அடைய வேண்டும். மூர்த்திகளைச் செதுக்கும் சிற்பிகள் ஆன்மார்த்தம், பரார்த்தம் என்று தனித்தனியாக உருவாக்குகிறார்கள். ஆன்மார்த்தம் என்பது "தனது ஆன்மா விற்காக: என்று பொருள். பரார்த்தம் என்பது பிறருக்காக என்பது பொருள். ஆனால் இசையானது இரண்டினையும் ஒருங்கே கொண்டுள்ளது. பாடகர் பாடும்பொழுது அதனை அவர் ஆத்மாவாகவும், பிறர் ஆத்மாவாகவும் ஒரே நேரத்தில் ஆனந்தம் அடைவதை நாம் காணலாம். நாதத்தை சதாஸ்மரணை செய்பவன் இறைவனையே சதாநினைப்பவன் எனலாம். பண்டைக் காலத்தவர்கள் அமைத்த கோவிற் கோபுரங்களை நாம் கவனித்தால் இசை வடிவானது முக்கோண வடிவில் அமைந்தி ருப்பதைக் காணலாம். இறைவனை இசையால் வழிபடுங்கள். "அன்பே இறைவன்" என்பது முதுமொழி.

இசையின்பத்தால் தான் நாட்டின் சகல வளங்களும் பெருகிப் பொலிய மன்னனும், மக்களும் துன்பமடைந்து இன்பமாக வாழ முடியும். இசையின்பம் பரவாத எந்த நாட்டிலும் துன்பமே தாண்டவமாடும். இசையின்பத்தால் சகல சம்பத்துக்களையும் பெற்றவன் இலங்காதிபதி இராவணே ஸ்வரன். இவனின் இசை மானிடரை மட்டுமன்றி தேவர்கள் மற்றும் அஃறிணைப் பொருட்கள் யாவற்றிலும் செறிந்து அவன் வசப்பட்டதாகச் சரித்திரம் கூறுகின்றது. இசையின்பத்தையே தனது உறுதுணையாகக் கொண்ட இலங்காதிபதி தனது கொடியில் வீணைச் சின்னத்தைப் பொறித்து வானில் பறக்கவிட்டு தனது தலைநகரை "வேணு கானபுரம்" எனவும் பெயரிட்டான். இறை வனிடத்தில் எவரும் பெற்றிராத ஈஸ்வரப்

பட்டம், மந்திரவாள், பலகோடி ஆயுள் என்பவற்றை இசையால் பெற்றான். வேய்ங்குழலால் கண்ணன் மந்தைகளை ஓட்டவும், கூட்டவும் செய்தார் எனப்புராண சரித்திரங்கள் கூறுகின்றன. பெருங்கதையில் உதயணன் தனது நளகிரி என்ற மதம் பிடித்த யானையை யாழ் வாசித்து மதம் நீக்கித் தனக்கு உதவியாகக் கொண்டு போர் செய்தான்.

மலர் மொட்டுக்களைப் பூரண புஸ்ப மாக்க வண்டுகளின் ரீங்கார இசையும் ஏற்றத்தில் நீர் இறைப்போர் ஏற்றப்பாட்டும், கப்பலோட்டிகளது கப்பற்பாட்டும் நாம் கேட்கக் கூடியதாக உள்ளது. இவைகள் யாவும் பண்டைத் தமிழன் கண்ட பண்பா ட்டின் சிகரம் என்றே சொல்லவேண்டும். இசையால் எரித்தார்கள் கர்வத்தைப் போக்கினார்கள் பட்டமரங்களைப் பசுந் தளை பொலியச் செய்தனர் நாயன்மார் காலத்தில் எலும்பைப் பெண்ணாக்கினார்கள் விடம் செறிந்து இருந்தவனை உயிர்ப் பித்தனர், மழையைப் பொழியச் செய்தனர், இறைவனையும் தூது செல்லும்படி செய்த னர்.

கோவலன் கண்ணகி திருமணத்தின் போது நடனமாட மாதவி சகல அணி அலங்காரத்துடனும் தன்னுடன் பிறந்த பொன்னுருவி மாலையுடனும் வந்து யாழ், முழவு, குழல் இன்ப இசையைப் பரப்ப நடனமாடி ஈற்றில் தானே வீணையோடு இசையின்பத்தைப் பெருக்கி உணர்ச்சி உண்டாக்கி "ஏய்! என் உயிர் மணிமாலையே உன்னை இச்சபையின் கண் கழற்றி எறிவேன் ஆனால் நீ எனக்குகந்த மணாளன் கழுத்தில் மாட்டிக்கொள்" என்று சபையோர் விருப்பத்துடன் வீசினாள். அது பூர்வீகத் தொடர்புடைய கோவலன் கழுத்தில் மாட்டிக்கொள்ள, போதையுற்றவன் போல் அவர்களுடன் செல்லவில்லையா? இசையின்பத்திற்கு அடிமைப்படாதவர் உலகில் எவருமே இல்லை.

திருக்கோயில்களில் பூசைகளும் அதற்கேற்ப மணியோசை, மந்திரவோசை, முழவோசைகளும் அமைய இசைக்காக முதலிடம் கொடுத்திருக்கின்றனர். இசை யின்பம் சூழாது இறையின் எந்த விழாக்களேனும் நடைபெறாது. இத்தகைய சிரஞ்சீவத்துவம் பெற்ற இசையின்பத்தைச் சோபையுடன் உலகிற்கு பரப்புபவர்கள்தான் உண்மையான இசைமேதைகளாவர். இசைவளம் பெறுவதற்கு ஒருவருக்கு முற்பிறவித் தொடர்பு அல்லது இறைவனின் அனுக்கிரகம் இருக்க வேண்டும். அல்லாமல் இசையைக் கற்றுவிடலாம் என்பது முடியாத காரியமாகும். இசை முத்தமிழின் நடுவில் இருப்பதன் காரணம் இயற்பகுதி இசையின்றி இசைப்பகுதியின்றி சோபிதம் அடையாது. நாடகம் இவ்விரண்டும் இன்றி உருவமடையாது.

எனவே இசையின்பம் சகல இன்பங் களுக்கும் ஏதுவாக உள்ளது. நாம் இசை யைப் பயின்றால் சகல இன்பங்களையும் அடைய முடியும் என்பதை மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

# Uses of Computers

Master. A.Janoshan,
Grade 7 A.



Computers are help ful because they offer a wide range of func tions and services that are not available anywhere else. There are four main uses: word processing, internet/ communications, digital video/audio composition, and desktop publishing. Although one can create a typed paper with a typewriter, the computer has more features to do it with. Internet and communications, digital video and audio composition, and desktop publishing are all features that are only offered on computers. With these tools human society has progressed exponentially.

The word processing capabilities of computers are amazing. They can automatically correct your spelling and grammar mistakes. The cutting and pasting features are incredibly simple and very useful for revision.

The Internet is one of the greatest inventions of humanity. It is a massive network of computers, each with the ability to access any of the others. Ungodly amounts of information can be found on the internet. It is the ultimate from of media, a combination of newspaper, radio, and as the average bandwidth is increasing, television. Using the internet, any two people any where can communicate for free, whether it is with text or voice. Video conferencing tools are becoming readily available to the public. New uses are being found for the Internet every day.

Computers have so many uses that cannot be found anywhere else. Word processors are the perfect writing device because you can compose quickly and make changes easily. The Internet provides a fast, free, and unique way get information or to communicate with others. Computers supply an affordable solution to non professional audio and video composition. These reasons are why computers are so helpful in modern society. With the aid of computers, humankind is entering a new era of enlightenment.

# COMMERCE UNION - 2011



**Seated(L-R)** : Mr.C.G.Thirumalalakan, Mrs.K.Vijayakumar, S.Thanushan, Mr.A.Eswaranathan(Principal), Y.Lamsa, Mrs.T.Vimalanathan, R.Gowshikan

**Standing(L-R)** : N.Vipushanan, J.Jeyadshan, K.Surenthini, P.Anushiya, S.Thusi, K.Lavanya

# AESTHETIC UNION - 2011



**Seated(L-R)** : R.Tharshikan, Mrs.G.Mahenthiraraja, K.Vijitha(Secretary), Mr.A.Eswaranathan(Principal), T.Janarthanan(President), Mrs.J.Murugathas, Miss.M.Kunanayaki,Mrs.P.Dikukumar

**Standing(L-R)** : S.Shamily, S.Rushanthy, P.Niroshan, S.Pakeerathan, J.Yalini, R.Thushya, N.Nishalini

# காளிதாசரின் சாகுந்தலம்

திருமதி.பி.டிகுகுமார்,
B.A(Hons),SLTS-3.I,
ஆசிரியை ,
யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி.



காளிதாசர் சமஸ்கிருத நாடக உலகின் மிகச் சிறந்த நாடக ஆசிரியராகக் கணிக்கப்படுகின்றார். இவர் வேத இலக்கியம், இதிகாசங்கள், புராணங்கள், பகவத்கீதை முதலியவற்றையும் வானநூல், மருத்துவ நூல், சங்கீதசாஸ்திரம், காவியநூல் முதலியவற்றையும் நன்கு கற்றிருந்தார். சுருங்கக்கூறின் இந்திய அரசியல் சமூக, பொருளாதார சமய மரபுகளை நன்கு அறிந்திருந்தார்.

இவர் எழுதிய நாடக நூல்களாக

1. அபிஜ்ஞான சாகுந்தலம்
2. மாளவிகா நிமித்திரம்
3. விக்கிரமோர் வசிபம்

என்பனவாகும். இவற்றில் காளிதாசருக்கு பெயரையும், புகழையும் பெருமையையும் சேர்த்தது சாகுந்தலம் ஆகும். இயற்கையின் தோற்றம் காதலர் கருத்தில் உண்டாகும் கிளர்ச்சிகளை வர்ணிக்கும் முறைமையில் காளிதாசருக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை. உணர்ச்சிகளை மிக இனிமையாகக் கூறுவார். கற்பனைக்கு அவர் களஞ்சியம். இதனால் காளிதாசர் மகாகவிகளுள் சிறந்த இடத்தைப் பெற்ற ஒருவராவார்.

இவர் எழுதிய சாகுந்தல நாடகம் ஓர் மகிழ்நெறி நாடகமாகும். இந்நாடகக் கதைப்பின்னல் வருமாறு:

அரசன் மானைக் கலைத்து வருதல், மான் ஆச்சிரமத்தை நோக்கி ஓடுதல் துறவியின் வேண்டுகோளுக்கிணங்க கன்னுவ முனிவரது ஆச்சிரமத்தில் துஸ்யந்தன் செல்வது சகுந்தலை காணுதல், காதல் கொள்ளுதல் சகுந்தலையை வண்டு துரத்துதல், அரசன் காப்பாற்றுதல் சகுந்தலை அரசன் மீது காதல் செய்தல், சேனாதிபதி வேட்டையாடல் தவறல்ல எனக்கூறல் இரு டிகுமாரர்கள் வேள்விக்குக் காவல் காக்குமாறு கூறல், கரபகனின் நகரிலிருந்து செய்தி கொண்டு வருதல், விதுசன் அங்கு செல்லுதல், சகுந்தலை கடிதம் எழுதுதல், அரசன் தன்னை வெளிப்படுத்தல், இருவரும் காதல் கொள்ளல். காசிபர் சகுந்தலையின் காதல் திருமணம் பற்றி அறிதல். சகுந்தலையினை துஸ்யந்தனிடம் அனுப்புதல். துஸ்யந்தன் சகுந்தலையைக் கண்டும் நினைவற்றிருத்தல், கௌதமி முகத்திரையை அகற்றுதல், சகுந்தலை கணையாளியினைக் கொடுத்தல். துஸ்யந்தனுக்கு சகுந்தலை நினைவு வருதல். இந்திரனின் கட்டளைக்கு இணைந்து அரசருடன் போர் செய்தல், மகனைக் காணுதல், சகுந்தலையுடனிணைதல்.

போன்ற விடயங்கள் இந்த நாடகக் கதைப்பின்னலாக அமைகின்றது. இந் நாடகவாக்க முறையினை நோக்கின்,

* கடவுள் வாழ்த்துடன் ஆரம்பிக் கப்படுகிறது.
* முடிவு வாழ்த்துடன் மகிழ்வாக நிறை வடைகிறது.
* உயர்செழுமையுடைய வடிவமாகத் திகழ்கின்றது.
* மிகச்சிறந்த கவிதை மொழியாக அமைந்துள்ளது.
* அபினயித்தல், அசைதல் என்பவற்றைக் கொண்டுள்ளது.

சூத்திரதாரி ஆரம்பத்தில் நாடகத்தை அறிமுகப்படுத்துகின்ற முறை.

* பாத்திரப்பட்டியல், இடம் என்பன உரை யாடல் மூலம் புலப்படுத்தல்.
* திரையினூடாக காட்சிமாற்றம் செய்யப் பட்டுள்ளது. (திரங்கரினி, ஜவனிகா)
* திரையின் பின்னிருந்து பேசுகின்ற அந்திர சந்தி அல்லது இடப்புனைவு.
* நடிகர் தமக்குத் தாமே பேசும் சுவாதகம் பெறல்.
* நடிகரும் ஒருவருக்கு மாத்திரம் கேட்கும் படி பேசும்படி பேசும் அபரிவாதம் இடம் பெறல்.
* நடிகர் தமக்குள்ளே நடத்தும் சல்லாபம் அல்லது சனாநதிகம் இடம் பெறல்.
* நடிகரை அரங்கிற்கு கொண்டு வராமல் பாவனையால் பேசுகின்ற ஆகாச பாஷி தம் இடம் பெறல்.

* அங்கங்களால் பிரிக்கப்பட்டு கதை நகர்த்தப்படுகிறது.
* மரபு வழிக்கலாசார முறைக்கூடாக கதை இடம்பெறுதல்.
* வேட உடை ஒப்பனை மோடிப்படுத்தப் பட்டதாக இருத்தல்.
* விசேட அரங்கக் கட்டடத்தில் நிகழ்த் தப்பட்டது.
* சமயப்பணி, களிப்பூட்டல், அறிவூட்டல் பணியினையும் மேற்கொள்வதாகவும் அமைந்துள்ளது.
* பன்மொழியினைக் கொண்டதாகவும் காணப்படுகிறது.
* சிருங்காரரசம் மேலோங்கிக் காணப் படுகின்றது.
* காண்போரின் உணர்ச்சியைப் பழுதடை யும் காட்சிகள் தவிர்க்கப்படுகின்றன.
* நிகழ்ச்சிகள் காரணகாரியத் தொடர் புடையதாக அமைக்கப்பட்டுள்ளன.
* ஐந்து வளர்ச்சிப் படிகளைக் (அவத் தைகள் அல்லது அவஸ்தா அல்லது நாடக நிலைகள்) கொண்டிருத்தல்.
* ஆரம்பம்:- நாடகச் செயலின் நோக்க மாகும். அதாவது யாதாயினும் ஒரு கருமத்தை நிமித்தமாக அல்லது நோக்கமாகக் கொண்டு நிகழ்வதாகும்.

  உ-ம்:- துஸ்யந்தன் சகுந்தலையைக் காணல்.
* பிரயத்தினம்:- முயற்சியுடைமையாகும். அதாவது கருமத்தை அல்லது நிகழ்வி னை நிறைவேற்றுவதற்காக மேற்கொள் ளப்படும் முயற்சியே பிரயத்தனம் ஆகும்.
* உ-ம்:- துஸ்யந்தன் சகுந்தலையை அடைய உபாயம் தேடல்.
* பிரத்தியாசம்:- நோக்கம் நிறைவேறும் என்ற நம்பிக்கை உண்டாவதாகும். இது நோக்கத்தை நிறைவேற்றுவதற்குரிய அனுகூலமாகவும், பிரதிகூலமாகவும் உள்ள நிலைமைகளை ஆராய்ந்த பின்னரே உண்டாகின்றது.

  உ-ம்:- துருவாசரின் சாபம் நீங்க துஸ்யந்தனை அடைய முடியுமென்ற நம்பிக்கையுண்டாதல்.

* நியதாத்தி:- எதிர்ப்படும் துன்பங்களை நீக்குவதனாற் குறிக்கோள் நிறை வேறும் என்ற துணிவு பிறப்பதாகும்.
* உ-ம்:- கணையாழி கிடைத்தலும், சாபம் நீங்கலும். துஸ்யந்தனிடம் சகுந்தலை பற்றிய நினைவுகள் வரலும்
* பலாகமம்:- இறுதியில் நோக்கம் நிறை வேறி பலனடைதலாகும்.
* நாடகச் செயல் நிகழ்வு அமைக்கப்படும் சந்தியினைக் கொண்டு காணப்படல்.
* முகம்- முதலாம் அங்கம் தொடங்கி இரண்டாம் அங்கத்தில் சேனாதிபதி புறப்படும் வரை முகம் எனப்படும்.
* பிரதிமுகம்:- செயலின் வளர்ச்சி யாகும்.
* உ-ம்:- துஸ்யந்தன் தன் காதலை விதூசகனிடம் சொல்வது, தொடங்கி மூன்றாம் அங்கம் வரையுள்ளவை பிரதிமுகம் ஆகும்.
* கருப்பம்:- நாடகச் செயலின் ஒரு தேக்கமாகும்.
* உ-ம்:-நாலாம் ஐந்தாம் அங்கங்களில் கௌதமி சகுந்தலையின் முகத்திரை வரை உள்ளவை கருப்பம் ஆகும்.
* விமர்சம்:- நாடகத்தின் நோக்கத்தால் உண்டாகும் நெருக்கடி ஆகும்.

உ-ம் :- சகுந்தலையின் முகத்தை நேராகப் பார்த்தும் அரசன் அடையாளம் கண்டும் அவளை ஏற்றுக்கொள்ளாமல் துருவா சரின் சாபத்தால் நினைவின்றியிருத்தல் வரை விமர்சம் ஆகும். (ஆறாம் அங்கம் வரை)

* நிர்வகனம்:- நோக்கம் நிறை வேறு வதாகும்.

உ-ம்:-கடைசி அங்கத்திலே காரியம் என்னும் நோக்கம் நிறைவடைய நாடகம் முடிவடைதல் நிர்வகனம் ஆகும். (சகுந்தலை துஸ்யந்தன் இணைவு ஆகும்.)

* நாடக மூலகங்கள் (அர்த்த பிரகிருதி) இடம்பெறல்.
* பீசம்:- நாடகக் கதைக்கு விதை போன்ற தாகும். இந்த விதையிலிருந்தே நாடகத்தின் தொழிற்பாடு அரும்பி முளைக்கும்.
* விந்து:- துளியாகும் அதாவது தேங்கி நிற்கும் கதையின் நிகழ்ச்சிக்கு அல்லது வினைத்தேக்கத்திற்கு இயக்கம் கொடுப்பதாகும். இது நாடகத்தின் பல செயல்களை ஒன்றாக இணைக்கும். செயன்முறையிலே பிளவு உண்டானால் அதனை யொட்டி விடும்.
* பதாகை:- நாடகக்கிரியையமைப்பில் ஒரு சம்பவம் ஆகும். இதனால் கதையின் ஓட்டம் துரிதப்படும் அன்றேல் தடைப் படும்.
* பிரகரி:- கிரியை அமைப்பில் வரும் ஒருசிறு நிகழ்ச்சியாகும். இது சிறியது தலைமையற்றது. ஆனால் சில கருமங் களை விளக்கும் நோக்குடையது.

உ-ம்:- துருவாசரின் தோற்றமும் மறைவும்.

* காரியம்:- முடிவாகும். விசாரமெல்லாம் தீர்ந்து நாடகத்தின் நோக்கம் முடி வடைதல் ஆகும்.
* வசனமும், செய்யுளும் இணைந்த இலக்கிய நடை காணப்படுகிறது (மிஸ்ர காவியம்)
* கதாநாயகன், கதாநாயகி, நண்பர், தோழி, விதூசகன் எனப் பல பாத்திரங்களைக் கொண்டிருத்தல்.
* உயர்வர்க்கத்தைச் சேர்ந்த ஆண்கள் சமஸ்கிரதத்திலே (செம்மையான மொழி) பெண்களும், பிற பாத்திரங்களும் பிரகிருத மொழியிலே (மக்களின் இயல்பான மொழியில் பேசியிருக்கலாம்).
* உயர் நிலைப் பாத்திரங்களைக் கொண்டது போன்ற விடயங்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு நிறைவாக ஆக்க முறையில் இந் நாடகம் ஆக்கப்பட்டிப்பதைக் காணமுடிகிறது.

# Unforgettable Trip

Miss.S.Rushanthy,
Grade 13 (2011) ARTS.



I have gone on many picnics in my life and gained many expe riences through the picnics. Last year, I went on a picnic. It is an unforgettable experience in my life. How can I forget it because it was an exciting one. It was September 26th 2010. We planed to visit Thiruketheeswaram. It is a beautiful and famous place in Srilanka. There is a famous worship centre. It is a good gift. Hundreds of people go to visit it. On that day I got up early in the morning and took a bath. My mother had prepared a very good breakfast. We all gathered in school at about 7.00 am. our bus was ready. Our three teachers also came with us, we started our journey towards Thirukethees waram. While going we saw many places through the bus windows and took some photos. While going to there, our bus was stopped at Madhu Church. We all went to the Madhu Ave Maria Church. It is located in centre of madhu village. It is full of natural beauty. we entered the church and prayed there, we could see a lot of people in and outside the church. We all saw around the church and took some photos, after that we took our lunch there.

Again our bus was started, we were going to Thiruketheeswaram, we could see the most beautiful places. We reached Thiruketheeswaram at 3.30pm. It was most beautiful , It is also full of natural beauty, I never saw a place like that, There is a beautiful famous temple, there were some beautiful trees around the temple. We saw some peacocks there, Then we all came to the palavi water pond by walk. It was fantastic, we all got in to the palavi pond, and washed our legs, we enjoyed well and took some photos there also. After that we came to the temple again. When entered the temple, pooja was going on there. We also joined the pooja and prayed.

Then we got in to the bus, which was coming towards Jaffna. Both worship centers are miracle of God. We reached at home at about 11.00 pm. It is an unforgettable day in my life.

# எண்களை இலகுவாகப் பெருக்குதல்

செல்வி.சி.மீரா
தரம் 8



**10, 100, 1000. போன்ற எண்களை 25 ஆல் பெருக்கல்**

பெருக்கும் எண்ணிலுள்ள ஒவ்வொரு 0 ற்கும் பெருக்கப்படும் எண்ணின் ஈற்றில் ஒவ்வொரு 0ஐக் கூட்டி எழுதுவதன் மூலம் விரைவாகப் பெருக்கலைச் செய்யலாம்.

Eg: 27 x 10 = 270

146 x 100 = 14600

4.32 x 10 = 43.2

**5, 25, 125 ஆகியவற்றால் பெருக்கல்**

**5 ஆல் பெருக்கல்:**

5ஆல் பெருக்குவதற்கு பெருக்கப்படும் எண்ணை 10 ஆல் பெருக்கி பின்னர் 2 ஆல் வகுப்பதன் மூலம் இலகுவாகச் செய்யலாம்.

Eg: 485 x 5 = 1850 ÷ 2 = 2425

27.36 x 5 = 273.6 ÷ 2 = 136.8

**25 ஆல் பெருக்கல்**

25ஆல் பெருக்கப்படும் எண்ணை 100 ஆல் பெருக்கிப் பின்னர் 4 ஆல் வகுப்பதன் மூலம் இலகுவாகச் செய்யலாம்.

EG: 372 x 25 = 37200 ÷ 4 = 9300

**0.5, 0.25, 0.125 ஆகியவற்றால் பெருக்கல்**

0.5 ஆல் பெருக்கல்:

0.5ஆல் ஒரு எண்ணைப் பெருக்குவதற்குப் பதிலாக அவ் எண்ணை 2ஆல் பிரிக்கலாம்.

Eg: 364 x 0.5 = 364 ÷ 2 = 182

0.25 ஆல் பெருக்கல்:

0.25ஆல் ஒரு எண்ணைப் பெருக்குவதற்குப் பதிலாக அவ் எண்ணை 4ஆல் பிரிக்கலாம்.

Eg: 128 x 0.25 = 128 ÷ 4 = 32

**9, 99,999 ஆகியவற்றால் பெருக்கல்**

9 ஆல் பெருக்கல்:

9ஆல் பெருக்குவதற்குப் பதிலாக பெருக்க வேண்டிய எண்ணை 10 ஆல் பெருக்கி வரும் எண்ணில் இருந்து அதே எண்ணைக் கழிப்பதால் விடையைப் பெறலாம்.

Eg: 46 x 9 = 46(10-1) = 460 46 = 414

673 x 9 = 6730 673 = 6057

99 ஆல் பெருக்கல்:

99 ஆல் பெருக்குவதற்குப் பதிலாக பெருக்க வேண்டிய எண்ணை 100 ஆல் பெருக்கி வரும் எண்ணில் இருந்து அதே

எண்ணைக் கழிப்பதால் விடை காண முடியும்.

Eg: 235 x 99 = 23500-235 = 23265

21.7 x 99 = 2170 - 21.7 = 2148.3

இவ்வாறே 999ற்கு 1000 ஆலும் 9999ற்கு 10000 ஆலும் பெருக்கி வரும் எண்ணில் இருந்து அதே எண்ணைக் கழிப்பதால் விடை காண முடியும்.

**11 ஆல் பெருக்குதல்**

ஓர் எண்ணை 11 ஆல் பெருக்குவதற்கு அவ்வெண்ணை 10ஆல் பெருக்கி வரும் எண்ணுடன் அதே எண்ணைக் கூட்டி விடை காணலாம்.

Eg:225x11=225(10+1)

2250+225=2475

11ன் மடங்குகளால் (22,33) பெருக்குவதாயின் மேற்கூறிய 11ன் பெருக்கத்தைச் செய்து வரும் எண்ணை மீண்டும் குறித்த எண்ணினால் (உ-ம் 22ஆல் பெருக்குவதாயின் 2ஆல்) பெருக்கி விடை காணலாம்.

Eg:235x22 235(10+1) 2350 + 235

2585x2 = 5170

**111 ஆல் பெருக்கல்**

Eg: 146 x 111=146(100+10+1)

14600+1460 +146=16206

**வேறு எண் பெருக்கங்கள்**

18,27,36,45,54 ...............போன்ற எண்களால் பெருக்குதல்.

18ஆல் பெருக்குவதை 20 ஆல் பெருக்கி 2இன் மடங்கைக் கழிக்க வேண்டும்.

Eg:32x18 = 32 (20-2) = 640 - 64 = 576

இவ்வாறே 27இ36இ45 எண்களையும் பெருக்கலாம்.

Eg: 125x27=125(30-3)

=3750-375=3375

216x36=216(40-4)

=8640-864=7776

432x54=432(60-6)

=5920-2592=23328

# நிறையுணவு

திருமதி.ப.சிறிதரன்,
Sp.Trd (Home Economics),SLTS-2.II,
ஆசிரியை ,
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.



உடலின் சத்துத் தேவை பிறந்த நேரத்தில் தொடங்கி இறக்கும் வரை விழிப்பிலும், நித்திரையிலும், ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொருவரின் உடம்பிற்கும் சக்திப் பிரயோகம் நடந்த படியே இருக்கின்றது. தானாகவே இயக்கும் தொழில்களாகிய மூச்சு விடுதல், இரத்த ஓட்டம் முதலியவற்றிற்குச் சக்திப் பிரயோகம் தேவை. அத்துடன் ஒருவர் செய்யும் ஒவ்வொரு வேலை காரணமாயும் சக்திச் செலவு ஏற்படுகிறது. தினமும் ஒருவருக்குத் தேவைப்படும் சக்தியின் அளவு, அவருடைய வயது, இனம், உடலின் பருப்பம், செய்யும் முயற்சி போன்ற பல அம்சங்களில் தங்கியுள்ளது. தான் உண்ணும் உணவு மூலமே தனக்குத் தேவையான சக்தியை ஒருவர் பெற இயலும். வாலிப நிலையில் உள்ள ஒருவருக்கு வயோதிப நிலையிலுள்ள ஒருவரிலும் பார்க்கக் கூடியளவு உணவு தேவைப்படும். ஒரு பெண்ணிற்கு ஓர் ஆணிலும் பார்க்க பத்திலொரு பங்கு குறைந்த உணவு போதுமானதெனக் கணிக்கப்பட்டுள்ளது. அதற்குக் காரணம் பெண்கள் பொதுவாக பலமான வேலைகளில் ஈடுபடாதிருப்பதே. தேகத்தின் பருமன் எவ்வளவுக்கு கூடுகிறதோ அவ்வளவிற்கு உணவின் அளவும் கூட வேண்டும். அதே போல் செய்யும் வேலையும் எந்தளவிற்குக் கடின மானதோ அந்தளவிற்குச் சக்திப்பிர யோகமும் கூடும். ஆகையால் வேண்டி யளவு சக்தியை அளிக்கக் கூடிய உணவு தேவையாகும்.

### உணவின் சக்தியைக் கணித்தல்

உணவு உடலிற் செறிந்து சக்தியையும் வெப்பத்தையும் அளிக்கிறது. உணவிலுள்ள வெவ்வேறு கூறுகள் வெவ்வேறு அளவிற் சேர்ந்து சக்தியைத் தருகின்றன என்பது முன்விளக்கப் பட்டுள்ளது. உடம்பில் உணவு செறிவதால் உண்டாகும் வெப்பத்தின் அளவும், அதனை வெளியே எரிக்கும் போது உண்டாகும் வெப்பத்தின் அளவும் ஒரே தன்மையானது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வெப்ப அளவை இத்தனை "கலோரி" எனக் கணிக்க இயலும். இதை அளக்க

உபயோகிக்கப்படும் கருவி "கலோரி மானி" எனப்படும். இதில் இரு அறைகள் உண்டு. வெளியே உள்ள அறையில் குறித்தளவு நீரிருக்கும். உள்ளறையில் முற்றாக விலக்கப்பட்ட உணவு ஒரு குறித்த அளவு வைக்கப்படும். மின்சக்தி மூலம் அந்த உணவு எரிக்கப்படும் போது வெளியாகும் வெப்பம் வெளி அறையிலுள்ள நீரைச் சூடாக்கும். நீரினைச் சூடேற்ற முன்னும் பின்னும் உள்ள வெப்ப நிலைகளின் வித்தியா சத்தை அறிந்து அதன் மூலம் வெளியான வெப்பத்தின் அளவு கணிக்கப்படும். ஒரு கலோரி என்பது ஒரு கிலோகிராம் அளவு நீரை ஒரு சதவளவைப் பாகைக்கு அல்லது ஓர் இறாத்தல் கனமான நீரை நான்கு பரனைட் அளவு பாகைக்கு சூடாக்கத் தேவையான வெப்பத்தின் அளவே யாகும். உணவாகப் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு வகைப்பதார்த்தத்தின் வெப்பவளவும் கலோரிமானி மூலம் இத்தனை கலோரி எனக் கணிக்கப் பட்டுள்ளது. அதன்படி ஒரு அவுன்சு சுத்தமான புரதம் 116 கலோரியையும், ஓர் அவுன்சு சுத்தமான காபோவை தரேற்றும் அதேயளவு கலோரியையும், ஒரு அவுன்சு கொழுப்பு 264 கலோரியையும் அதாவது இரண்டேகால் மடங்கு கூடிய கலோரியையும் அளிக்கின்றன வெனக் கணிக்கப்பட்டுள்ளது. பின்வரும் அட்டவணையில் பல்வேறு பிரிவினர் ஒவ்வொருவருக்கும் தினம் எவ்வளவு சக்தி தேவை என்பது அட்டவணை மூலம் விளக்கப்படுகிறது.

| பிரிவு | கலோரி |
|---|---|
| கடினமான வேலை செய்யும் மனிதன் | 3000 |
| மிதமான வேலை செய்யும் மனிதன் | 2600 |
| பருவப் பெண் | 2250 |
| பாலூட்டுந்தாய் | 3000 |
| 16-18 வயது வாலிபன் | 3000 |
| 16-18 வயது கன்னி | 2250 |
| 13-15 வயது இளைஞன் | 2030 |
| 13-15 வயது மங்கை | 2550 |
| 1-3 வயது குழந்தை | 1025 |

# Dengue Fever

Master. S. Jelson Hosly
Grade 7A



In a lifetime, the typical human would suffer from fever which is commonly brought about by infection, fatigue, and the like. While this is no cause for alarm, a certain not-so-typical strain of this fever is hitting the world, particularly countries with poor sanitation practices. Year by year, this problem is getting worse, and though it is curable the dengue outbreak, there is an increasing need to probe into this disease.

Dengue fever is a flu-like viral illness that is spread by the bite of infected mosquitoes. Recently Dengue fever has become a major threat to the global public health. This illness is usually found in tropical and sub-tropical regions around the world; more, specifically, in urban and semi urban areas the regions.

Dengue is spread by the aedes aegypti, a domestic, day-biting mosquito that prefer to bite humans. Currently, there is no vaccine available to prevent dengue. Each type of the dengue virus is re-emerging worldwide, especially in the western Hemisphere. Research has shown that several factors are contributing to the resurgence of dengue fever such as uncontrolled urbanization, increased international travel, substandard socio-economical conditions, and finally global warming. Global warming has shown to be major contributor to the spread of dengue fever.

Although, dengue is a year-round disease, it is observed to be more rampant during rainy seasons. Discarded solid waste items, such as plastics, glass containers and used automobile tyres collect rain water and moisture. These become breeding ground for the Aedes mosquito. Aside from seasonal changes, other phenomena are suspected to be associated to dengue. Global warming can cause dry spells in some countries and increased rainfall and ponds to

small puddles that become potential breeding ground for mosquitoes. Likewise, increased rainfall and humidity also leads to collection of water that affords possible breeding grounds for mosquitoes.

It is also known as break bone fever and bone-crusher disease. The classic symptoms, following an incubation period of five to eight days, are high fever, chills, severe headache, pain in the joints, pain behind the eyes, rash, sweating and prostration, but infected persons may experience milder symptoms. Symptoms subside in two to four days, but after a remission lasting from a few hours to two days there is another rise in temperature, and a generalized rash appears. Convalescence is sometimes prolonged, with weakness and low blood pressure.

Treatment focuses on relieving symptoms. Patients should be isolated during the first three days, when mosquitoes can pick up the disease from them. Prevention relies on mosquito control. There is no specific treatment for dengue fever except good nursing care. Both diseases can be controlled by eradicating the mosquitoes and destroying their breeding places.

# CENTENARY COMPUTER UNIT MEMBERS - 2011



**(L.R):** Miss.S.Vinotha, Mrs.M.Mohanarajan(Computer incharge), Miss.S.Ranjini(Computer incharge), Mr.A.Eswaranathan(Principal), Mrs.K.Vijayakumar, Mrs.D.Garnan, Miss.S.Piratha

# ICT UNION - 2011




**Seated(L-R) :** Miss.S.Ranjini, R.Gowshikan(President), Mr.A.Eswaranathan(Principal), G.Senpaul, Mrs.M.Mohanarajan

**Standing(L-R):** K.Lavanya, S.Vani, S.Shamili, S.Thusi, Y.Lamsa, T.Anastiga(Secretary), K.Surenthini

# நவீன தொலைத்தொடர்பு தொழிநுட்பங்கள்
## CDMA (Code Division Multimedia Access)

செல்வன்.மு.நிலக்சன்
தரம் 10A



இது 30 ஆண்டுகளாக முன்னர் இராணுவ தேவைக்காக உருவாக் கப்பட்ட ஒரு கம்பியில் லாத் தொலைத் தொடர் புத் தொழிநுட்பம் (Wireless Technology) ஆகும். ஒன்றுக்கு கூடியதாக இருப்பதே இதன் சிறப்பம் சமாகும்.

முன்னொரு போதுமில்லாத வகையில் தற்போது மிகஅதிகமானவர்கள் கம்பி யில்லாத் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப வளர்ச்சியைப் பெரிதும் எதிர்பார்க்கின்றனர். காரணம் மூன்றாம் சந்ததிக்குரிய (Third Generation) (3G), மின்னஞ்சல்(E-mail), இணையம் (Web), Digital படங்கள் எடுத்தல் மற்றும் அனுப்புதல், தொலைக்காட்சி ஒலி ஒளிபரப்பு என்ப வற்றில் கம்பியில்லாத் தொலைத்தொடர்பு தொழிநுட்பம் மிகப் பெரும் பங்காற் றுவதாகும்.

GSM (Global System for Mobile Communication) வலையமைப்புடன் ஒப்பிடும் போது CDMA வலையமைப்பு தடங்கல்கள் அற்றதெளிவான, துல்லியமான தகவல் பரிமாற்றத்தைத்தருவதுடன் ஒன் றுக்கு மேற்பட்ட அலைவரிசைகளை ஒரே தடவையில் பாவிக்கக்கூடிய பெரிய பரந்த வலைப்பின்னலை இது கொண்டிருக்கும். CDMA தொலைபேசிக் கருவியானது GSM தொலைபேசிக் கருவியைவிட மிகக்குறைந்த அளவு மின்சாரத்தையே பயன்படுத்துவதால் 'பச்சைத் தொலைபேசிக்கருவி" (Green Handset) என இது அழைக்கப்படுகின்றது. சாதாரண GSM மற்றும் அனைத்து தொலைபேசிகளும் 600 மில்லிவாற் (milli watt) மின்சாரத்தையே பாவிக்கும் அதே நேரம் CDMA 200 மில்லிவாற் (milli watt) மின்சாரத்தையே பயன்படுத் துகின்றது. இதனால் தொலைபேசி பயன்படுத்தக்கூடிய நேரம் அதிகரிப் பதுடன், உடலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய கதிரியக்க அச்சுறுத்தலையும் தவிர்த்துக் கொள்ளலாம். மின்கலப் பாவனைக்காலமும் அதிகரிக்கின்றது. அதுமட்டுமன்றி மற்றவர்களால் ஒட்டுக் கேட்க முடியாத அளவுக்கு இது பாதுகாப்பா னதும் கூட. காரணம் ஏதாவது ஒரு தொலை பேசிக்குரிய அலைவரிசை எண் (Frequency code) தெரிந்திருக்க வேண்டும். சாதாரண தொலைபேசிகளில் அலைவரிசை எண் குறிப்பிட்ட ஒரு எண்ணாக இருப் பதால் இது இலகுவாக கண்டுபிடிக் கப்படுகின்றது. ஆனால் CDMA இல்

ஒவ்வொரு முறை தொலைபேசியைப் பாவிக்கும் போதும் எழுந்தமானமாக (Randomly) அலைவரிசை எண் மாறுபடுவதால் அலைவரிசை எண்ணைக் கண்டுபிடித்து ஒட்டுக்கேட்பது முடியாத காரியமாகி விடுகின்றது. CDMA வலையமைப்பானது 2.5G, 3G வலையமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளதால் அதிக கொள்ளளவுள்ள ஸ்திரமான மிகவேகமான தகவல் பரிமாற்றத்தை வழங்குவதுடன் மிகக் குறுகிய இணையங்களுக்குள் நுழையவும் முடிகிறது. படங்களை, பாடல்களை மற்றும் விளையாட்டுக்களை இலகுவாக இணையங்களுக்கு ஊடாக இறக்கிக்கொள்ள (Download) முடிகிறது. தகவல் தொழில்நுட்பத்தில் ஒரு CDMA மைல்கல். ஆனால் இதிலிருக்கக்கூடிய குறைபாடுகளையும் நீக்கிக் கொண்டு நாளை இன்னோர் முன்னேற்றமடைந்த தொழில்நுட்பம் இதை பின் தள்ளக்கூடும். பொறுத்திருந்து பார்ப்போமா?

# சிந்தனைத் துளிகள்

செல்வன்.ஜெ.வினோட்,
தரம் 9.



* பிறருக்கு நன்மை செய்யப் பிறந்த நீ, நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிரு.
* நேற்று என்பது அனுபவம், இன்று என்பது நிகழ்வு, நாளை என்பது நம்பிக்கை.
* முயற்சிகள் தவறலாம் - ஆனால் முயற்சிக்கத் தவறக்கூடாது.
* தொடர்ந்து செய்யப்படாத முயற்சி தோல்வியையே தரும்.
* பணிவு மனிதனின் வாழ்வை உயர்த்தும்.
* பொன்னிலும் பார்க்கப் பொழுது மிகப்பெரியது.
* உலகம் ஆயிரம் சொல்லட்டுமே, உனக்கு நீதான் நீதிபதி.
* மனிதன் எதையோ பேசட்டுமே, உன்மனதைப் பார்த்துக்கொள் நல்லபடி
* உனது எதிரியை அச்சுறுத்தும் வலுவான ஆயுதங்கள் உன் மௌனமும், பொறுமையும்.

# வியத்தகு உயிரி ஆலைத்தொழிலில் நுண்ணங்கிகள் பற்றிய ஓர் பார்வை

செல்வி.ச.சங்கீதா,
உள்ளகப்பயிற்சி ஆசிரியர்,
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.



நுண்ணங்கிகளையும் அவற்றின் அனுசேபச் செயன் முறைகளையும் பயன் படுத்திப் பொருளாதாரரீதியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பதார்த்தங்களைப் பாரிய மட்டத்தில் உற்பத்திசெய்வதே ஆலைத் தொழிலில் நுண்ணங்கியியலின் முக்கிய நோக்கமாகும். அண்மைக் காலங்களில் நுண்ணங்கிகள் பாரம்பரிய பொருள் பிறப்புரிமைப் பொறியியல் முறையினால் மாற்றியமைக்கப்பட்டும் நுண்ணங்கிகள் விகாரங்களிற்கு உட்படுத்தப்பட்டும் பெறப்படும் உற்பத்திப் பொருட்களின் அளவு அதிகரிக்கச் செய்யப்படுவதுடன் மேலும் பல உற்பத்திப் பொருட்களும் பெற்றுக் கொள்ளலாம்.

உயர்ந்த வளர்ச்சி வீதமும், பல்வேறு பதார்த்தங்களைக் கீழ்ப்படையாகப் பயன் படுத்துகின்ற வல்லமையையும் நுண்ணங்கிகள் கொண்டிருப்பதனாலே ஆலைத் தொழிலில் இவற்றைப் பயன்படுத்துவது அனுகூலமானதாகும். பாண்தயாரிப்பதற்கு Saccharomyces cerevisiae என்ற மதுவஇனம் பயன்படுத்தப்படுகின்றது. மதுவங்களின் அற்ககோல் நொதித்தல் காரணமாக வெளிவிடப்படும் $Co_2$ வாயு மாக்கலவையைப் பொங்கச்செய்யும். பின் பாண் வெப்பமாக்கப்படும் போது $Co_2$ வெளியேறுவதனாலேயே பாணில் நுண்துளை அமைப்பு ஏற்படுகின்றது. அது போன்று பனை, தென்னை ஆகிய தாவரங்களில் இருந்து பெறப்படுகின்ற பூந்துணரின் சாறு அதிகளவு சுக்குரோசைக் கொண்டிருக்கும். இது வளியிலுள்ள மதுவங்களினால் நொதித்தல் அடைந்து "எதையில் அற்ககோல்" தோன்றுவதனால் கள் உருவாகின்றது. சில சமயங்களில் சேகரிப்புப் பாத்திரங்களின் உட்புறத்தில் சுண்ணாம்பு பூசப்பட்டு மதுவங்களின் தொழிற்பாடு தடுக்கப்பட்டு சுக்குரோசுச் செறிவுள்ள பதநீர் (Sweet toddy) பெறப்படுகின்றது.

வினாகிரி தயாரிப்பின் போது முதலில் அதிகளவு வெல்லத்தைக் கொண்ட பதார்த்தங்களில் Saccharo myces cerevisiae என்ற இனத்தைச் சேர்ந்த மதுவங்கள் காற்றின்றிய நிலையில் தொழிற்பட்டு "எதையில் அற்க கோல்" உற்பத்தி செய்யப்படுகின்றது. பின்னர் எதையில் அற்ககோலானது காற்றூட்டப்பட்ட நிலையில் Acetobacter or

Gluconobaccter போன்ற பக்றீரியாக்க ளினால் அசற்றிக்கமிலமாக (வினாகிரி) ஒட்சியேற்றப்படுகின்றது.

பால் உற்பத்திப்பொருட்களின் தயா ரிப்பிலும் இந்நுண்ணங்கிகள் முக்கியத் துவம் பெறுகின்றன. அதாவது chees தயாரிப்பில் பாஸ்ரராக்கம் செய்யப்பட்ட பாலிற்கு lactrobacillus bulgaricus, strept rococcus lactrase ஆகிய பக்றீரியாக்களின் தூயவளர்ப்பைச் சேர்த்து சிலமணிநேரம் நொதிக்கவைக்கப்படும். இதன்போது பாலிலுள்ள lactrose வெல்லம் மேற்படி பக்றீரியாக்களின் தொழிற்பாட்டினால் "Lactric Acid" ஆக நொதிக்கும். Lactric Acid பாலிலுள்ள "கேசின்" என்ற புரதத்தை வீழ்படியச் செய்கிறது. இந்நிகழ்வு "தயிராக்கல்" எனப்படும். வீழ்படிவாக்கலைத் துரிதாக்க Rennet சேர்க்கப்படும். இவ் வீழ்ப்படிவில் தேவையற்ற நுண்ணங்கிகளின் வளர்ச்சி யைத்தடுக்க அதிக உப்புச் சேர்க்கப்படும். பின் அழுத்தப்பட்டு நீரகற்றப்பட்டு கட்டி யாக்கப்படுகின்றது. இவ்வாறு பெறப்பட்ட Cheese குளிரான அறையில் நீண்டகாலம் விடப்பட்டு Penicillium requefori வளரவிடப்படும். இதன் காரணமாக தனித்துவ மணமும் இழைய அமைப்பும் பெறப்படும்.

"யோகட்" தயாரிப்பின் போது lactro bacillius bulgaricus ம் streptro coccus themophillus ஆகியவற்றின் தூய வளர்ப்பை 45°C வெப்பநிலையில் ஏறத்தாழ 8 மணித்தியாலம் நொதிக்க வைக்கும்போது "யோக்கட்" பெறப்படும்.

"வைன்" (Wine) தயாரிப்பின் போது திராட்சைப்பழச்சாற்றிற்குத் தேவையற்ற நுண்ணங்கிகளின் வளர்ச்சியைத் தடுக்க $SO_2$ சேர்த்துப்பின் Saccharomyces cerevisiae என்ற மதுவஇனத்தின் தூயவளர்ப்பைச் சேர்த்து காற்றின்றிய நிலையில் சில நாள் விடப்படும். இதன் போது பழச்சாற்றிலுள்ள வெல்லமானது "எதனோல்" ஆக மாற்றப்பட்டு வைன் உருவாகும். பின் பாஸ்ரராக்கம் செய்யப் பட்டு மதுவங்கள் அகற்றப்பட்டு மேலதிக நொதித்தல் தடுக்கப்படும்.

"பியர்" (Beer) தயாரிப்பின் போது பார்லி வித்துக்கள் நீரில் ஊற விடப்பட்டு மதுவங்களால் பயன்படுத் தக்கூடிய வகை யில் மாப்பொருளானது வெல்லமாக மாற்றப்படுகின்றது. பின்னர் முறையாக் கப்பட்ட பார்லி 64°C-80°C யில் உலர்த்தப்பட்டு "மோல்ற்" ஆக மாற்றப்ப டுகின்றது. மோல்ற் ஆனது தூயநீர் சேர்த்து நன்கு அரைக்கப்பட்டு வடிகட்டி Wort என்ற வடிதிரவம் பெறப்படும். வடிதிரவத்திற்கு notps எனப்படும். தாவரப் பூந்துணர் சேர்த்து கொதிக்கச் செய்வதன் மூலம் சுவையும் நறுமணமும் சேர்க்கப்படும். பின் வடிதிரவத்தை குளிரச்செய்து Saccharomyces cerevisiae, Saccha romyces carlbergenisis ஆகிய மதுவ இனம்சேர்த்து காற்றின்றிய நிலையில் நொதிக்க வைத்து 10-15% எதையில்

அற்ககோலைக் கொண்ட Beer பெறப்படும். தும்புக்கைத்தொழிலிலும் நார்கள் பிரித் தெடுப்பில் காற்றின்றி வாழ் பக்றீரி யாக்களினால் சுரக்கப்படும் பெக்ரினேசு எனும் நொதியங்கள் பயன்படுகின்றன. அதேபோல் உலோகப்பிரித்தெடுப்புச் செயன்முறையில் இரசாயனத் தற்போசனைப் பக்றீரியாக்களான Thiobacillus thiooxi dans, Thiobocollus ferroxidens ஆகியன பயன்படுத்தப்படுகின்றன.

மேலும் விவசாயத்துறையில் இவ் ஆலைத் தொழில் நுண்ணங்கிகள் பிரயோ கிக்கப்படுகின்றன. தற்போது Bacillus thuringiensis எனப்படும் ஒரு பக்றீரியா இனமானது பீடைகளை அழிக்கப்பயன் படுத்தப்படுகிறது. செயற்கைமுறை நைதரசன் பதித்தலுக்கும் Rhizobium என்ற பக்றீரியா பயன்படுத்தப்படுகின்றது.

மதுவங்கள் பிரித்தெடுக்கப்பட்டு "மாமைற்" பெறப்படுகின்றது. இதனைத் தவிர Soirulina என்ற சயோனா பக்றீரியாவில் இருந்தும் Agaricu, Pleroius போன்ற காளான் வகைகளில் இருந்தும் தனிக்கலப் புரத உணவுகள் பெறப்படுகின்றன. மேலும் நீர்ப் பரிகரிப்பிலும் நுண்ணியிர்க் கொல்லி தயாரிப்பிலும் தாவர ஓமோன்கள் தயாரிப் பிலும் நுண்ணங்கிகள் அதிகளவு பயன் படுத்தப்படுகின்றன.

**நுண்ணியிர்க்கொல்லி தயாரிப்பில் பயன் படும் நுண்ணங்கிகள் சில.**

Pencillin - Pencillium notatum

Pencillium chrysogeauim

Streptomycin -

Streptomyces griseus

Tetracycline -

Streptomyces aureo faciens

இலைசீன்- Corynebacterium glutamic

Vitamin B12 - Streptomyces spp.

# இதிகாசங்கள் கூறும் அறக் கருத்துக்கள்

செல்வி.சி.மேனுதா,
தரம் 12 (2012),
கலைப்பிரிவு.



இதிகாசங்களாக இராமாயாணம், மகாபாரதம், சிவரகசியம், என்பவற்றைக் கூறலாம். இராமாயாணத்தை வடமொழியில் வான்மீகியும், தமிழில் கம்பரும் இயற்றினார்கள். மகா பாரதத்தை வியாசரும், சிவரகசியத்தை ஒப்பிலாமணிப்புலவரும் இயற்றினார்கள். இராமாயணம் 24000 பாடல்களையும் 7 காண்டங்களையும் கொண்டது. மகாபாரதம் 12600 பாடல்களையும் 18 பருவங்களையும் கொண்டுள்ளது. ஒருவன் தகாதசெயல்களுக்காக விருப்பப்படுகின்றானோ அவன் அழிவான் எனக்கூறுகின்றது. இதிகாசங்கள் ஆசையை மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என வகைப்படுத்துகின்றது. மண்ணாசை ஏற்பட்டதனால் கைகேயி தசரதனை இழந்தாள் என்றும், பெண்ணாசையினால் இராவணன் மாற்றான் மனைவியாகிய சீதையைக் கவர்ந்து சென்றான் இதனால் அழிந்தான் என்றும் கம்பராமாயணம் கூறுகின்றது. பொன்னாசை, மண்ணாசை என்பவற்றால் துரியோதனன் அழிந்தான் என மகாபாரதம் கூறுகின்றது.

அடுத்து இதிகாசங்கள் தந்தை, தாய், குரு என்பவர்களைத் தெய்வமாகப் போற்றும் தன்மை காணப்படுகின்றது. அதாவது இராமாயணத்தில் வரும் தசரத புத்திரர்கள் தந்தை சொல் தட்டாமையும், பஞ்சபாண்டவர்கள் குந்திதேவியின் சொல்லிற்கிணங்க நடப்பதையும் குறிப்பிடலாம். இதிகாசங்கள் பெண்களுக்குரிய கற்புநெறி தவறாத தன்மையையும் காட்டுகின்றது. இதற்கு உதாரணமாக இராமாயணத்தில் வரும் சீதையையும் மகாபாரதத்தில் வரும் திரௌபதையையும் குறிப்பிடலாம். இதிகாசங்கள் மக்களுக்கு இடையே ஏற்றத்தாழ்வு காணப்படக்கூடாது எனவும் கூறுகின்றது. இதற்கு சான்றாக சக்கரவர்த்தியின் மகனாகிய இராமன் குகனுடனும், வானரகுலத்தவருடனும் உறவு கொண்டுள்ளதைக் காட்டலாம். அத்துடன் இதிகாசங்கள் தர்மம் பற்றியும் கூறுகின்றது. அதாவது எதிரி துயிலும் பொழுதும் புறமுதுகு காட்டி ஓடும் போதும், சரணடையும் போதும் அவர்களைத் தாக்கக்கூடாது. அத்துடன் எம்மைவிட பலம் குறைந்தவர்களுடனும் சண்டையிடக் கூடாது எனவும் எமக்கு எதிரே வணக்கத்துக்குரியவர்கள்/மதிப்பிற்குரியவர்கள் இருந்தால் அவர்களை வணங்கிய பின்பே போர்புரிய வேண்டும் எனவும் கூறுகின்றது. இதிகாசங்கள் சைவசமய வழிபாடுகள் பற்றிக் குறிப்பிடுகின்றது. தசரதனின் மனைவியாகிய கோசலை ஆலயம் சென்று வழிபட்டார் எனவும் இராமனின் மனைவியாகிய சீதை "சீத்தா" எனும் ஒருவகை மரத்தை வழிபட்டு வந்தாள் எனவும் கூறுகின்றது. இவற்றை தவிர இதிகாசங்கள் பல அறக்கருத்தை கூறி நிற்பதனால், அந்த அறக்கருத்துக்களை எம் வாழ்வில் கடைப்பிடிப்போம்.

# கல்வி உளவியல் அறிவு ஆசிரியருக்கு ஏன் அவசியம்?

செல்வி.க.சுயாழினி,
உள்ளகப்பயிற்சி ஆசிரியர்,
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.



இன்றைய நவீன உலகில் வெற்றிப் பாதையைக் காட்டி நிற்கும் தொழில் குறிகாட்டியாக அமைவது ஆசிரியத் தொழிலே ஆகும். எனவே ஆசிரியத் தொழிலைச் செய்வதற்கு ஆசிரியர்களுக்கு "கல்வி உளவியல்" அறிவு அவசியமான ஒன்றாகும்.

அந்தவகையில் பாடசாலையில் உள்ள ஒவ்வொரு மாணவர்களும் தனியாள் வேறுபாடுகளை உடையவர்களாகவும் பல்வேறு தரங்களில் உள்ளவர்களாகவும் காணப்படுகின்றனர். அவ்வாறான மாணவர்களையும் இனங்கண்டு அவர்களையும் வெற்றிப் பாதையில் இட்டிச்செல்வது ஒவ்வொரு ஆசிரியரதும் தலையாய கடமையாகக் காணப்படுகின்றது.

ஆசிரியர்கள் தம்மைத் தாமே அறிந்து கொள்ளவும், விசேட தேவையுடைய பிள்ளைகளை இனங்காணவும் அவர்களுக்கு ஏற்றவாறான கற்பித்தல் முறைகளைத் தெரிவு செய்து கொள்ளவும் ஆசிரியர்களுக்கு உளவியல் அறிவு அவசியமானதாகும்.

வெவ்வேறுபட்ட இடங்களிலும் வெவ்வேறுபட்ட சூழலிலும் இருந்து பாடசாலைக்கு வருகைதரும் மாணவர்களின் மனவெழுச்சிப் பிரச்சினைகளைத் தீர்த்து அவர்களுக்கு வேண்டிய வழிகாட்டல் ஆலோசனையைக் கொடுப்பதற்கு ஆசிரியர்களுக்கு உளவியல் அறிவு அவசியமானதாகும்.

மாணவர்களின் கற்றலை ஊக்கப்படுத்தவும் அவர்களுக்கு வழங்கப்பட்ட கற்றலில் இடமாற்றம் ஏற்படவும், அவர்களின் கற்றல் தொடர்பான மதிப்பீட்டை அறிந்து கொள்ள ஆசிரியர்களுக்கு உளவியல் அறிவு அவசியமானதாகும்.


மாணவர்கள் தவறு விடும் பட்சத்தில் அவர்களுக்குத் தண்டனைகள் வழங்காமல் உரியமுறையில் அவர்களின் பிரச்சினைகளை இனங்கண்டு பிள்ளைகளின் விருத்திசார் இயல்புகளைப்பற்றி அவர்களிற்கு எடுத்துக்கூறி உரிய முறையில் வழிப்படுத்தி விடுவதற்கு உளவியல் பற்றிய அறிவு ஆசிரியர்களுக்கு இன்றியமையாததாகும். அதுமட்டுமன்றி இன்றைய தொழிநுட்ப உலகின் போக்கிற்கேற்ப மாணவர்களைப் புத்தாக்க முயற்சிகளில்

ஈடுபடுத்தவும் ஊக்குவிப்புக்களை வழங்கு வதற்கும் ஆசிரியர்களுக்கு உளவியல் பற்றிய அறிவு அவசியமானதாகும்.

வெற்றிகரமான பாடசாலை ஒன்றினை உருவாக்குவதில் ஆசிரியர்களின் பங்க ளிப்பு முக்கியமானதாகும். அந்தவகையில் பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடை யிலான இடைத்தொடர்பினை மேம்படுத்தி பாடசாலைத் தரத்தினை உயர்த்துவதற்கு ஆசிரியருக்கு உளவியல் பற்றிய அறிவு அவசியமானதாகும்.

பாட இணைப்பாடவிதானச் செயற் பாடுகளைத் திட்டமிடவும், மாணவர்களின் இடைவிலகலைக் குறைத்து அவர்களின் எதிர்காலத்தில் ஒரு தொழில்துறைக்கு இட்டுச் செல்வதற்கும் ஆசிரியர்களுக்கு உளவியல்பற்றிய அறிவு அவசிய மானதாகும். எனவே இன்றைய சிப்பிகள் நாளைய முத்துக்களாக மாறவுள்ள மாணவச் செல்வங்களின் எதிர்காலம் சிறப்படையச் செய்வதற்கு ஆசிரியர்களிற்கு உளவியல் பற்றிய அறிவு மிகமிக முக்கியமானதாகும்.


## யா/உரும்பிராய் இந்துக்கல்லூரியின் நூலகம்






கல்லூரியின் தொடக்க வரலாற்றோடு பின்னிப்பிணைந்து காணப்படும் நூலகம் கல்லூரிக்கு மலாயன் பென்சனியர் நினைவு மண்டபம் 1966 இல் திறந்து வைக்கப்பட்ட பின் அக்கட்டடத்தின் மேல் மாடியின் தென்புறத்தில் சகல வசதிகளோடும் அமைந்துள்ளது. இந் நூலகப் பராமரிப்பை கனடாவில் வாழும் திரு.இரத்தினம் குடும்பத்தினர் மேற்கொண்டு வருகின்றனர். நூலகத்தில் பல்துறை சார்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட நூல்கள் மாணவர்களின் பாவனைக் காகப் பயன்படுத்தப்படுகின்றன. நூலகத்திற்கு பொறுப்பாசிரியராக செல்வி.சா.இரஞ்சினி ஆசிரியையும், நூலக உதவியாளராக செல்வி.ம.வசந்தினியும் கடமையாற்றுகின்றனர். உரும்பிராய் இந்துக் கல்லூரி மாணவர்களின் கற்றல் விருத்தியை வழங்கும் இந்நூலகம் இன்னும் விரிவாக்கப்பட்டு, சேவை வழங்கப்படவேண்டியதாய் உள்ளது.

## யா/உரும்பிராய் இந்துக்கல்லூரியின் இரசாயன ஆய்வுகூடம்





கல்லூரியின் பிரதான மண்டபத்தின் வடக்குப் புறமாக அமைந்திருக்கும் மாடிக்கட்டடத்தின் கீழ்மாடியில் இரசாயன ஆய்வுகூடம் அமைந்துள்ளது. எமது கல்லூரியின் இரசாயன ஆய்வு கூடம் யாழ் மாவட்டத்திலுள்ள மிகச்சிறந்த இரசாயன ஆய்வுகூடங்களில் ஒன்றாகும். இது கல்லூரியின் பிரபல இரசாயனவியல் ஆசிரியரும், அதிபருமான திரு.செ.சிவன்பாலன் அவர்களின் வழிகாட்டலுடன் அவரது காலத்திலே கட்டப்பட்டு அவராலேயே திறந்து வைக்கப்பட்டது பெருமைக்குரியதாகும்.

மாணவர்களின் உள ஆற்றலை விருத்திசெய்யும் தமது பணியை இவ் ஆய்வு கூடம் நிறைவேற்றி வருகின்றது. இவ் இரசாயன ஆய்வுகூடத்திற்குப் பொறுப்பாசிரியராக திருமதி.சி.மகேந்திரன் கடமையாற்றுகின்றார். கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியர்களின் பெருமுயற்சி இவ் ஆய்வு கூட விருத்திக்கு வழிவகுத்துள்ளது. திணைக்களத்தின் பெரு முயற்சியும் வழிகாட்டலும் எமது கல்லூரியின் இரசாயன ஆய்வுகூடம் சிறப்புற்று விளங்க உதவுகின்றது. எமது கல்லூரியைப் பொறுத்த வரையில் இடைநிலைப் பிரிவுக்கான விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்றின் தேவை மிக அவசியமாக உள்ளது.

# விஞ்ஞானம் புரியும் விந்தைகள்

செல்வி.தி.அனஸ்ரிக்கா
தரம் 11A



இன்றைய நவீன உலகிலே விஞ்ஞானம் புரிந்துவரும் சாதனைகள் அளப்பரியன. ஆரம்பகாலத்தில் இருந்தே மனிதன் தனது நுண்ணறிவைப்பயன்படுத்தி பல சாதனைகளைச் செய்தான். அது இன்று கூட தொடர்ந்து வந்து விஞ்ஞானமானது இவ் இயந்திர உலகில் தனக்கென ஒரு இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளமை வியப்பிற்குரிய ஒரு விடயமாகும். ஆதியிலே மனிதன் தனது முதலாவது விஞ்ஞானக் கண்டு பிடிப்பாகக் கல் லோடுகல்லை உரசி நெருப்பைக் கண்டு பிடித்தான். இவ்வாறாகப் படிப்படியாக முன்னேற்றமடைந்தான். ஆம்! பாம்பைக் கண்டான். புகைவண்டியைப் படைத் தான். மீனைக்கண்டான். கப்பலைப் படைத்தான். இவ்வாறாக தனது விஞ் ஞானக் கண்டுபிடிப்புக்களைப் படிப்ப டியாக அதிகரித்த வண்ணமே உள்ளான். காட்டினில் வாழ்ந்த மனிதன் ஏட்டை எடுக்க மறந்தான். காலம் செல்லச்செல்ல தனது நிலையை உணர்ந்த மனிதன் தனது சிந்தனைகளைத் தட்டிவிட்டு இன்று பரிமாண வளர்ச்சியடைந்து ள்ளான்.

விஞ்ஞானமானது இன்று அளப் பரிய சாதனைகளைப் பல்வேறு துறைகளிலே ஆற்றிய வண்ணம் உள்ளது. உதாரணமாக வைத்தியத்துறை, தகவல்துறை, போக்குவரத்துத்துறை என எல்லாத் துறைகளிலும் விஞ்ஞானமானது பல அளப்பரிய சாதனைகளை நிகழ்த்திக்கொண்டுள்ளது. விஞ்ஞான வளர்ச்சியின் நன்மைகள் அளப்பரிய மக்கள் பெருக்கத்திற்கேற்ப புதுப்புது கண்டுபிடிப்புக்கள் துரித வேகத்தில் மின்சார இரயில்கள், தூரஇடத் தொலைத் தொடர்புகள், கண்ணிமைக்கும் நேரத்தில் வேலைகள் செய்யும் கணினிகள் என எல்லாவிதமான செயற்பாடுகளிலும் விஞ்ஞானமானது தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது.

அன்றாடம் பல சாதனைகளைப் புரிந்த வண்ணம் விஞ்ஞானம் உள்ளது. அவற்றில் சிலவற்றைப் பற்றி இங்கு நோக்கலாம். உதாரணமாக, "சோலர்" கப்பலை எடுத்துக்கொண்டால் எரி பொருட்தேவையைச் சிக்கனப்படுத்த வும், சுற்றுப்புறச்சூழல் மாசுக்களைக் குறைக்கவும் சூரியஒளியைப் பயன் படுத்திக்கொள்ளும் தொழிநுட்பம் வேகமாக வளர்ந்து வருகின்றது.

சமீபத்தில் சூரிய ஒளியில் இயங்கும் விமானம் உருவாக்கப்பட்டது. இது விரைவில் உலகையே வலம்வர இருக்கின்றது. இதுவும் விஞ்ஞானத்தின் அளப்பரிய சாதனைகளில் ஒன்றாகும். இதேபோல் சூரிய ஒளியில் இயங்கும் சரக்குக்கப்பல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச்சரக்குக் கப்பலின் பெயர் "எம்.வி.அரிகர்" என்பதாகும். இந்தக் கப்பல் ஜப்பானின் டொயோட்டோ நகருக்கும் அமெரிக்காவின் நியூயோர்க் நகருக்கும் இடையே இயக்கப்படுகின்றது. விஞ்ஞானத்தின் அளப்பரிய பல விந்தைகளை இந்தக் கப்பலிலே காணக்கூடியதாகவுள்ளது. இந்தக் கப்பல் 6400 கார்களை எடுத்துச் செல்லும் திறன் கொண்டது. மற்றக் கப்பலை விட 10சதவீத எரிபொருள் செலவே இதற்குப் போதுமானது. அதற்காகக் கப்பலின் மேற்புறத்தில் 325 சூரிய ஒளித்தகடுகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கப்பல் மூலம் 40KW மின்சாரம் தயாரிக்கமுடியும்.

விஞ்ஞானமானது தனது சாதனைகளை உலகம் பூராகவும் விஸ்தரித்தது மட்டுமன்றி இன்று நிலவினுள் கூட சென்று பல சாதனைகளை நிலைநாட்டும் நிலைக்கு வளர்ந்து சென்றுவிட்டது. கடந்த 300 ஆண்டுகளாக விஞ்ஞானமானது அளப்பரிய சாதனைகளை நிலைநாட்டிய வண்ணம் உள்ளது. விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் விண்ணகத்தின் நிலைகளை அதாவது வானிலைகள் முதற்கொண்டு அதன் தாற்பரியங்களை அறிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. மேலும் பூமியில் மனித உயிரினங்களும் ஏனைய உயிரினங்களும் பல்கிப் பெருகி வருகின்றன. இவற்றை வேறுகிரகங்களில் குடியேற்றுவதற்கும் விஞ்ஞான சாதனைகள் பயன்படுகின்றன. விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புக்களினால் மனிதன் ஒருவனுக்கு இயற்கையாகவுள்ள பொருட்களைக் கூடச் செயற்கையாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது. உதாரணமாக இன்று விற்பனையில் முதலிடம் வகிக்கும் செயற்கைத்தோலினை எடுத்துக் கொண்டோமேயானால் சுற்றுப் புறச்சூழல் மாறும், சூரிய ஒளிக்கதிர்த் தாக்கத்தால் தோல் பாதிப்படைகின்றது. இப்பாதிப்புக்களையெல்லாம் ஈடுசெய்ய நவீன விஞ்ஞான தொழிநுட்பத்தில் செயற்கைத் தோல் உற்பத்தி செய்யத்தொடங்கிவிட்டனர் விஞ்ஞானிகள். இவ்வாறாக விஞ்ஞானமானது தினமும் தனது வெற்றிப் பாதையின் ஒவ்வொரு படிகளையும் எடுத்து வைத்த வண்ணம் உள்ளது. வைத்தியத்துறையிலே விஞ்ஞானமானது அளப்பரிய பல சேவைகளை ஆற்றிய வண்ணம் உள்ளது. உதாரணமாக "எக்ஸ்ரே" பொறியை எடுத்துக் கொண்டோமேயானால் மனிதஉடலின் உள்ளுறுப்புக்களை அறிந்து கொள்ளமுடியும். அது மட்டுமன்றி விஞ்ஞானத்தின் சாதனையால் அளப்பரிய மருந்து வகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை பல பாரிய நோய்களை இலகுவாகக் குணப்படுத்தக் கூடியதாக உள்ளது.

விஞ்ஞானத்தின் சாதனையானது மருத்துவத்துறையில் மட்டுமன்றி பல துறைகளிலும் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துள்ளது. உதாரணமாக தொடர்பாடற்துறையை எடுத்துக் கொண்டோமேயானால் இன்று எங்கு பார்த்தாலும் பெரியவர் தொடக்கம் சிறியவர்வரை எல்லோரது கைகளிலும்

கையடக்கத்தொலைபேசி. இதுவும் விஞ்ஞானத்தின் ஒரு அளப்பரியசாதனை என்றுதான் குறிப்பிடவேண்டும். ஏனெனில் உலகில் எந்தவொரு மூலையிலும் வாழும் எந்த உறவுகளுடனும் நாம் இலகுவாகப் பேச முடியும். உறவுகளை இணைக்கும் ஓர் பாலமாக விஞ்ஞானத்தின் சாதனையான கையடக்கத்தொலைபேசி அமைந்துள்ளது. இவ்வாறாக விஞ்ஞானம் புரியும் பலவிதமான சாதனைகளும் மனிதனுக்கு சாதனை தருவனவாக அமைந்துள்ள போதிலும் சில சாதனைகள் மனிதனுக்கு வேதனைதரும் வகையிலும் அமைகின்றன. மனிதர்கள் தாங்களாகவே தங்களுக்கு அழிவைத் தேடிக்கொள்கிறார்கள். விஞ்ஞானத்தின் பயனால்தான் இன்று மனிதன் மிகவேகமாக ஆக்கங்களைச் செய்கின்றான். நாம் பல ஆக்கங்களைப் பெறுவதற்கு சில அழிவுகளையும் பெற்றுக் கொள்ளத்தான் வேண்டும். எங்கும் எதிலும் அழிவில் இருந்துதான் ஆக்கங்கள் தோன்றுகின்றன. எனவே நாம் விஞ்ஞானத்தின் சாதனைகளைச் சிறந்தமுறையில் பயன்படுத்தி நன்மையடைவோமாக!

# மோனாலிசா ஓவியத்தில் கண்டறியப்பட்ட உண்மைகளும் இரகசியங்களும்

திரு.கா.பிரகாஷ்,
உள்ளகப்பயிற்சி ஆசிரியர்,
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.



"இந்த உலகத்தையே என் அற்புதங்களினால் நிரப்ப விரும்புகிறேன்" என எழுதிய சகலகலா மேதையான "லியானா டோவின்" சொல்லை இவ் ஓவியம் எடுத்துக் காட்டியுள்ளது. உலக அதிசயங்களில் ஒன்றாகக் காணப்படும் இவ்ஓவியத்தின் சிறப்பைச் சொல்லால் வடிக்க முடியாது.

ஓவியர் லியானாடோவின் ஓவியங்கள் பல பாரிஸ் நகரின் "லூவர்" என்ற அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அங்கு மோனாலிசா உள்ளிட்ட 7 ஓவியங் களை விஞ்ஞானி 'பிலிப் வால்டர்" தலைமை யிலான விஞ்ஞானிகள் சேர்ந்து ஆய்வு செய்தனர். ஆய்வின் முடிவில் இவ் ஓவியத்திற்கு 30 அடுக்கு வண்ணம் பூசியுள்ளார் என்பதும், ஒவ்வொரு வண்ண அடுக்குகளுக்கும் 40 மைக்ரோ மீட்டர் அளவுக்கு நுண்ணியமாக வரையப்பட்டி ருப்பதும் கண்டறியப்பட்டது. இவ் ஆய் வுக்கு எக்ஸ்ரேகதிர்களைப் பாய்ச்சிபரி சோதனையை மேற்கொண்டனர்.

மேலும் மோனாலிசா ஓவியத்தில் "மோங்கனீஷ் ஆக்சைட்டு" என்ற உலோகமும் ஓவியம் பளபளப்பாக இருப்பதற்காகக் "காப்பர்" என்ற உலோகமும் பயன்படுத்தப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

லியானாடோ "ஸ்புமோடோ" என்ற முறையைப் பயன்படுத்தி மோனாலிசா ஓவியத்தை வரைந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ் ஓவியம் வரை வதற்கு மாதிரியாக புளோரன்சைச் சேர்ந்த வியாபாரி பிரான்சிஸ்கோ டெல்ஜியோ காண்டோவின் மனைவி விசாகெராந்தினி என்பதும் தெரியவந்துள்ளது.

இவ்ஓவியத்திற்குக் கிடைத்த புகழ் போல் உலகில் இதுவரை எந்த ஓவியமும் புகழ்பெற்றது இல்லை என்றே கூறலாம். இவ் ஓவியத்தைப் பார்த்த நவீன ஓவியப் பாணியை விரும்புவர்களும் மரபுவழியை முற்றாக எதிர்ப்ப வர்களும் எந்த ஆக் கத்தைப் பார்த்தாலும் குறைகூறுபவர்களும் இவ் ஓவியத்தைப் புகழ்ந்தனர்.



இவ்ஓவியம் 77X53 சென்ரிமீற்றர் அளவில் வரையப்பட்டுள்ளது. இவ் ஓவியத்தை இவர் வரைந்து முடிப்பதற்கு 4 வருடம் எடுத்தது. இவ் ஓவியம் பொப் லயாவூட் (பொப்பிலார்) என அழைக்கப் படும் இத்தாலிய மரப்பலகையில் வர்ணங் களை ஒன்றன்மேல் ஒன்றாகப் பூசி ஒவ்வொரு வர்ணத்திலும் சிலபேதங் களையும் திணிவையும் கையாண்டு வரைந்துள்ளார்.

பொதலெர் எனும் குறியீட்டுக் கவிஞர் இவ் ஓவியத்தை புகழ்ந்து கவிதை எழுதினார். பலவித அபிப்பிராயங்கள் இருந்தபோதும் படைப்புத்திறனில் புதிய ஓவிய வழியை இவ் ஓவியம் ஏற்படுத்தி யதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இன்னும் சிலர் பாரிஸினில் பாது காக்கப்பட்டு வரும் இந்த ஓவியத்திற்கு "லாகிய கொண்டா" என்று பிரெஞ்சு மக்கள் அழைக்கின்றனர். மோனாலிசாவின் புகழ் பெற்ற சோகப் புன்னகையே அந்த ஓவியத்திற்கு பெருமை சேர்த்தது. இன்று பிரெஞ்சு நாட்டின் சொத்தாக (150 கோடி ரூபா மதிப்பு) மிகுந்த பாதுகாப்பில் இத்தாலி யில் உள்ளது.

19ம் நூற்றாண்டு சிறப்பு மிக்க இவ் ஓவியம் 1911இல் திருட்டுப்போனது. இது இத்தாலிய மக்களையே துன்பத்தில் உறைய வைத்தது. பின் இரண்டு ஆண்டுகள் முடிந்ததும் ஓவியம் இருக்கும் இடத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை. பிறகு 1913ல் ஓவியத்தை எடுத்துச்சென்ற வின்சென்ஜோ பெரோஜிடா என்ற இத்தாலி நாட்டுத் திருடனே திருப்பி ஒப்படைத்து விட்டான். அன்றிலிருந்து இந்த ஓவியத்தைத் தக்க பாதுகாப்புடன் குளிர் சாதனம் பொருத்தப் பட்ட அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இவ் ஓவியம் அமெரிக்க மக்கள் பார்ப்பதற்கு ஒரு முறை அமெரிக்கா அனுப்பி வைக்கப்பட்டு உள்ளமை இதன் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது.

# நூலகத்தால் தகவல் உலகை அடைவோம்

செல்வி.த.துசாரா
தரம் 12 (2012)
கலைப்பிரிவு



"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்றார் ஔவையார். மனிதப் பிறவியானது எல்லாப் பிறவிகளிலும் பார்க்க அற்புதமான ஒரு பிறவியாகும். இதிலும் இளமைப் பருவம் தேடிக்கொள்ள வேண்டிய காலமாகவும் அமைகின்றது. இதற்குப் பள்ளிப் பருவம் மிகவும் இன்றியமையாததாக அமைகின்றது. "கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு" என்றார் வள்ளுவர். ஆகையால் கல்வியை வரையறுக்க முடியாது. ஒருவன் வாழும் வரை கற்றுக்கொள்ள முடியும். இதற்கு நூலகங்கள் அளப்பரிய சேவையினை ஆற்றிவருகின்றன.

நாடு வளம்பெற ஏடுகள் சிறக்க வேண்டும் என்பது அறிவுலக அறிஞர்கள் கொண்ட கோட்பாடாகும். ஏடு சிறக்க நூலகங்கள் வளர வேண்டும். நூலகங்கள் சிறக்க நூலகர்கள், நூலகத்தைப் பயன்படுத்த வேண்டும். இதற்குப் படிப்போர்க்கு ஏற்ற வகையில் நூலகங்கள் தகவல்களையும் தொகுத்தும், பகுத்தும் வைத்திருத்தல் இன்றியமையாத கடமையாகும். அப்போது தான் தகவல்உலகை வெற்றியுடன் களிப்பதற்கு ஊன்றுகோலாக அமையும் என்பதில் ஐயமில்லை. காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. இதனால்தான் "நேரம் பொன்னானது" என்று அறிஞர்கள் கூறியுள்ளார்கள். எனவே தான் மாறிவரும் உலக ஒழுங்குக்கேற்ப நாமும் மாறவேண்டிய கட்டுப்பாடு உள்ளது. இதற்கு நூலகங்களைச் சரிவரப் பயன்படுத்தும்போது நாளைய உலகை வெற்றி கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இன்றைய சமுதாய வளர்ச்சியின் பயனாக நூலகங்களைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே போகின்றது. செய்திகளைத் தேடிச்செல்வதிலும் அதனை ஆராய்வதிலும், ஊக்கமும், ஆக்கமும் பிறத்தல், மக்களாட்சி மரபு, எல்லோருக்கும் கல்வி, சமுதாயம் மற்றும் மறுமலர்ச்சி, அறிவியல் ஆராய்ச்சிகள் என்பன மக்களிடையே வாசிக்கும் பழக்கத்தை அதிகரித்தன. எனவே வாசகர்களின் பசிக்குத் தீனிபோட வேண்டிய கட்டுப்பாட்டில் நூலகங்கள் எழுந்துள்ளன.

கடந்த நூற்றாண்டை விட இருபதாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட காலப்பகுதியானது அறிவியல் துறைகளில் பல்கிப் பெருவளர்ச்சி கண்டுவரும் காலமாகக் காணப்படுகின்றது. அறிவியல் வளர்ச்சியை மேலும் மேலும் சிறப்புடையதாக ஆக்குவதற்கு வானொலி, தொலைக்காட்சி,

தொலைத்தொடர்பு சாதனங்கள், கணினி, இறுவெட்டுக்கள் என்பன மக்களோடு மக்களாயிருந்து புதியயுகம் படைத்து வருகின்றன. இதற்கேற்ப நூலக அமைப்புக் களும் மாறுதலடைந்து முழு உலகையும் தன்கையுள் கொண்டதாக அமைந்துள்ளன. இது நூலகங்களில் பெருகிவரும் நூல் வெளியீடுகள், சிந்தனைத்துளிகள், பத்திரி கைகள் அத்தோடு கணினி வலைய மைப்புடன் கூடியதாக இன்றைய நூலகங்கள் உருவெடுத்துள்ளன.

நவீன உலகை வெற்றியடையச் செய்வ தற்குப் பல்கலைக்கழகங்கள், நூலக சங்கங்கள் இணைந்து இலங்கை நூலக சங்கத்தின் வழிநடத்தலின் கீழ்க் கணினித் தொழிநுட்பம் பற்றிய பாடநெறியை அனைத்து அரச கல்விக் கூடங்களிலும் விரிவுபடுத்தியுள்ளன. இம்முறையானது அபிவிருத்தி அடைந்த நாடுகளில் வெற்றி கரமாகச் செயற்பட்டு வருகின்றன. ஆனால் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினை, தொழில்நுட்பப் பற்றாக்குறை, நூலகம் வளர்ச்சி அடையாமை போன்ற காரணங் களால் கணினி அறிவு மந்த நிலையிலே காணப்படுகின்றது. கணினியின் கட்டா யத்தை உணர்ந்து ஏனைய நாடுகள் புதிய தகவல் உலகை அலங்கரிக்க வேண்டிய கட்டாய தேவை எழுந்துள்ளது.

நூலகங்களில் கணினிகளைப் பயன் படுத்தும் போது வெளி உலகில் பிரகாசிப் பதற்கும், தகவல்தொழில்நுட்பத்தின் பணிகளை விரிவுபடுத்துவதற்கும், மனித ஆற்றல்களை நூலகங்கள் ஊடாக வளர்த்துக் கொள்வதற்கும் உதவியாக உள்ளது. இதன் மூலம் நூலகங்களில் இருந்தவாறு வெளிநாட்டு விடயங்கள், கல்வி, மருத்துவம், அரசியல், விண்வெளி, பொருளாதாரம் போன்ற துறைகள் பற்றி உடனுக்குடன் துல்லியமாகவும், விரைவா கவும், தெளிவாகவும் பெறுவதற்கு நூலகப் பாவனை உதவிபுரிகின்றது. இதற்கு உதார ணமாக இலண்டன் பல்கலைக்கழகங்களில் கல்விபயிலும் வாய்ப்பு அனைவருக்கும் கிட்டுவதில்லை. ஒரு சிலரே கல்வியைக் கற்கக்கூடியதாக உள்ளது. இதனை நிவர்த்தி செய்யும் முகமாக கணினி மூலம் கற்கக் கூடியதாக உள்ளது.

எனவே உலகில் ஏற்பட்டுவரும் துரித மாற்றத்திற்கேற்ப அறிவுத்துறையைத் தேடுகின்ற முறையும் விரிவடைந்து செல்ல வேண்டியது அவசியமாகும். இதற்குச் சிறப்பான கல்வியை உருவாக்குவதற்கும் பல்துறைசார் அறிவினை வளர்ப்பதற்கும் நூலகங்கள் பெரிதும் உதவுகின்றன. இதன் மூலம் நவீன தகவல் உலகை வெற்றிக் களிப்புடன் அடைவதற்கு நூலகங்கள் உதவுகின்றன.

**"செந்தமிழ் செழித்திட நூல்கள்**
**சேர்ப்பதும் நூலகமே! தமிழ்**
**சந்தம் விளங்கிடச் சரித்திர நூல்கள்**
**தருவதும் நூலகமே- அதில்**
**சிந்தையின் உணர்வுகள் அறிவாகச்**
**செழிப்பதும் நூலகமே பழஞ்**
**சந்ததியினர் சரித்திர நூல்கள்**
**நிறைந்ததும் நூலகமே"**

# E-Business

செல்வன்.சி.தனுசன்,
தரம் 13 (2011),
வர்த்தகப்பிரிவு.



நவீனமயமான தற்கால உலகில் தகவல்தொழில் நுட்பமானது சகலதுறைகளிலும் பெரும்மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளமையினை நாம் அனைவரும் அறிந்த ஒன்றே. விரைவாக வளர்ந்துவரும் தகவல்தொழில்நுட்பம் அனைத்துத் துறைகளின் வளர்ச்சியிலும் பெரும்பங்கினை வகிக்கின்றது எனக்கூறின் மிகையல்ல. உலகே சுருங்கி உள்ளங்கை அளவாகிவிட்டது. உலகின் எந்தமூலையில் நடக்கும் விடயத்தினையும் அறிந்து கொள்ளவும், தொடர்பாடவும், நொடிப் பொழுதாகி விட்டது. சகலதுறையிலும் தகவல்தொழிநுட்பம் தனது ஆதிக்கத்தினைச் செலுத்தி வருகின்றது என்ற வகையில் வணிகமும் உள்ளடங்கலாயிற்று.

வணிகத்தில் தகவல் தொழிநுட்பத்தின் பங்கு பெரும்பங்காகிவிட்டது. E-Business இற்கும் வழி செய்துள்ளது. E-Business என்பது யாது? இணையத்தளத்தினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற அனைத்துக் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளும் "E-Business" என அழைக்கப்படும்.

இலத்திரனியல் வணிகமானது பின்வரும் இரண்டு விடயங்களால் கட்டமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

1. இலத்திரனியல் வணிகப் பயன்பாடு.
2. இலத்திரனியல் வணிக அடிக்கட்டமைப்பு.

**இலத்திரனியல் வணிகத்தின் வகைகள்**

### 1. Business to Business

வணிகச் செயற்பாட்டில் ஈடுபடுகின்ற வணிகர்கள் தமக்கிடையில் இலத்திரனியல் வலைப்பின்னல் ஊடாக செயற்படுதலாகும்.

### 2. Business to Customer

வணிகருக்கும் வாடிக்கையாளருக்கும் கணினி வலைப்பின்னலின் உதவியுடன் மேற்கொள்கின்ற பரிமாற்று நடவடிக்கைகளைக் குறிக்கும்.

### 3.Customer to Customer

வாடிக்கையாளர்கள் தமக்கிடையில் கணினி வலைப்பின்னலின் உதவியுடன் மேற்கொள்கின்ற பரிமாற்று நடவடிக்கைகளைக் குறிக்கும்.

### 4. Government to Business

அரசிற்கும், வணிக நிறுவனங்களுக்கும் இடையில் கணினி வலைப்பின்னல் ஊடாக நடைபெறுகின்ற பரிமாற்றச் செயற்பாடுகள் அனைத்தையும் குறிக்கும்.

## 5. Government to customer

அரசாங்கம், அரசநிறுவனங்களால் வாடிக் கையாளரை நோக்கி வலைப்பின்னல் ஊடாக தகவல்கள், கட்டளைகள் பரிமாற்றப் படுவதாகும்.

இலத்திரனியல் வர்த்தகத்தினால் வணிக நிறுவனங்களிற்கு கிடைக்கும் வரப்பிரசாதங்கள்,

- ※ சர்வதேச ரீதியான சந்தைவாய்ப்பு.
- ※ கிரயங்கள் குறைவடைதல்.
- ※ விற்பனை அதிகரிக்கும் வாய்ப்பு.
- ※ இருப்புக்களைக் களஞ்சியப்படுத்த வேண்டிய அவசியமில்லை.
- ※ கொடுப்பனவை விரைவாக மேற் கொள்ளலாம்.
- ※ 24 மணிநேரமும் செயற்படுதல்.

இலத்திரனியல் வர்த்தகத்தினால் வாடிக் கையாளர்களிற்கு கிடைக்கும் வரப்பிர சாதங்கள்,

- ※ பலதரப்பட்ட தெரிவு.
- ※ குறைவான கிரயம்.
- ※ போட்டியில் தரமான சேவை.
- ※ 24 மணி நேரசேவை.
- ※ விரைவாகச் சேவையைப் பெறமுடிதல்.
- ※ அதிகளவான வசதிகள்.

இலத்திரனியல் வணிகம் தொடர்பான குறைபாடுகள்

- ※ கணினி வலையமைப்பு எல்லா இடங் களிலும் விஸ்தரிக்கப்படாமை.
- ※ மென்பாகங்கள் விரைவாக மாற்ற மடைதல்.
- ※ ஆரம்பித்தல் கிரயம் அதிகமாகக் காணப் படுதல்.
- ※ மொழி ரீதியான பிரச்சினைகள்.
- ※ நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியாத நிலை.

இலத்திரனியல் வணிகத்தில் சிலகுறை பாடுகள் இனங்காணப்பட்டாலும், நவீன காலத்தில் இவ் இலத்திரனியல் வணிக மானது உலகளாவியரீதியில் பல்கிப்பெருகி வளர்ந்துவரும் ஒன்றாக இருக்கின்றது என்றால் மிகையில்லை.

# நவீன சீர்திருத்தப் பணியில் இந்துபோட் இராசரத்தினம்

செல்வி.கோ.துஷாந்தினி,
பழைய மாணவி,
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.



ஈழத்தில் இந்து மத வரலாற்றிலே ஆரியச்சக்கரவர்த்திகள் காலம் பல்வகைத்துறையிலும் சிறப்புற்று விளங்கியது. ஆயினும் 1505ல் இவ்விடம்வந்த போர்த்துக்கேயர் சைவஆலயங்களை அழிக்கவும், 1658ல் வந்த ஒல்லாந்தர் மறைவிடங்களில் வைத்து கற்களையும், குளங்களையும் வழி பட்டோரைத் தண்டிக்கவும், 1769ல் வந்த ஆங்கிலேயர் ஆங்கிலப் பாடசாலைகளை அமைத்து தமது சமயத்தை நாகரிகமான முறையில் வளர்க்க முற்பட்டனர். இதனைப் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் கூறும்போது

**"போர்த்துக்கீசர் சுளையிருக்கத் தோலை விழுங்கினர்,**
**ஒல்லாந்தர் தோலிருக்க சுளையை விழுங்கினர்,**
**ஆங்கிலேயர் தோலையும், சுளையையும் விழுங்கினர்"**

என நயக்கக்கூறியது நினைவு கூறத் தக்கது. இவ்வாறு அந்நிய மதத்தவர் ஆதிக்கத்தினால் இந்துமதம் சீர்குலைந்து கொண்டிருக்கும் நிலையில் அதனைப் பாது காப்பதற்காகவும் சைவசமயக்கல்வியை வளர்ப்பதற்காகவும் எழுந்தவர்களே சீர்திருத்தவாதிகளாவர். இச்சீர்திருத்தவாதிகள் கல்வியையும் சமயத்தையும் வளர்க்கப் பல பாடசாலைகளை நிறுவினர். அப்பாடசாலைகளில் எமது "உரும்பிராய் இந்துக் கல்லூரி"யும் குறிப்பிடத்தக்க ஒன்றாகத் திகழ்கின்றது எனக்கூறுவதில் ஐயமில்லை.

இவ்வழித்தோன்றிய சீர்திருத்தவாதிகளில் "இந்துபோட் இராசரத்தினம்" அவர்கள் ஒரு மணிமுடியாகத் திகழ்ந்தார். இவர் கோப்பாய் சைவப்பெருங்குடியைச் சார்ந்த கதிரேசு சுப்பிரமணியத்துக்கும் மீனாட்சிக்கும் இளையமகனாக 1884.07.04 இல் பிறந்தார். இளம்வயதில் தந்தையை இழந்த அவர் வைமன் கதிரவேற்பிள்ளை யிடம் வளர்ந்து இளமைக் கல்வியை ஆசான் சின்னத்தம்பி அவர்களிடமும், தொடர்ந்து மேற்கல்வியை யாழ்.மத்திய கல்லூரியிலும் கற்றார். இவர் கல்வியோடு மட்டும் நின்றுவிடாது விளையாட்டிலும் திறமைபெற்று விளங்கிய இவர் இந்தியா சென்று "கல்கத்த சட்டம்" பயின்று "நியாயவாதி" என்ற பட்டம் பெற்றார். அத்துடன் இலங்கையில் "வீசல்டை ஜெஸ்ற்" என்ற சட்டநூலை எழுதிவெளியிட்டுள்ளார். ஒரு நியாயவாதியாக விளங்கிய இவர் கிராமம் தோறும் சைவப் பாடசாலைகளை அமைக்கும் நோக்கத்துடன் இராமநாதன் அவர்களால் 12.09.1923ல் ஆரம்பிக்கப்பட்ட வித்தியாவிருத்திச் சங்கத்தில் 1/4 பங்காகத்

தன்னை அர்ப்பணித்துப் பல சமய, சமூக, கல்விப்பணிகளை மேற்கொண்டார்.

இவரால் மேற்கொள்ளப்பட்ட கல்விப் பணிபற்றி நோக்கும் போது இவர் ஆரம்ப, இடைநிலைக்கல்விக்கே கூடுதலான கவனத் தைச் செலுத்தி வந்தார். குறிப்பாக, தமிழ்ப் பாடசாலைகள் இவர் கவனத்தை ஈர்த்தன. தமிழ்ப்பிராந்தியத்தில் மூலைமுடுக்கிலும் கிராமங்களிலும் பாடசாலைகளை நிறுவி னார். குறிப்பாக "நெடுந்தீவு தொடக்கம் வலிகாமம், யாழ்ப்பாணம், தென்மராட்சி, புசலாவை" வரை 1924 தொடக்கம் 1960 வரை 163 சைவப்பாடசாலைகளையும், 31 தொழிற்பயிற்சிப் பாடசாலைகளையும், ஒரு சைவ ஆசிரியகலாசாலை, இரண்டு சிறுவர் இல்லங்கள் ஆகியவற்றைத் ஸ்தாபித்தார். இவர்களால் ஆரம்பிக்கப்பட்ட 20 பாடசா லைகள் வரை அரசு அங்கீகரிக்கவில்லை. ஆயினும் இவரது சாதனை வரலாற்றுச் சிறப்புடையது. 1961ம் ஆண்டு அரசாங்கம் பாடசாலைகளைச் சுவீகரிக்கும் போது இந்து போட் இரத்தினம் அவர்களின் முகாமையில் 63 அதிபர்களும் 1500 ஆசியர்களும் 4000 மாணவர்களும் இருந்தனர். இதில் பெண் பிள்ளைகளே கூடுதலாகச் சேர்ந்தனர். இதனால் இவர் பெண்களுக்குரிய கல்வியை சுதந்திரத்துடன் வளர்த்தார் என்பதில் ஐயமில்லை.

இம்மதிப்புக்குக் காரணமான இவரை "இந்துபோட் இராசரத்தினம்" என அழைத்தனர். இவர் பாடசாலைகளை நிறுவியதுடன் நின்றுவிடாமல் அச்சைவப் பாடசாலைகளில் சைவப்பாரம்பரியம் கொண்ட ஆசிரியர்களை நியமனம் செய்ய ஒரு சைவ ஆசிரியர் கலாசாலையை 1925ம் ஆண்டு நிறுவினார். அத்துடன் இக் கலாசாலையில் பயிற்சிபெற்ற ஆசிரியர் களைத் தமது தரத்தை பிரவேசபண்டிதர், பாலபண்டிதர், பண்டிதர் ஆகியபயிற்சி களில் சித்தியடைவதற்கு ஏற்ற வகுப்புக் களை நடாத்துவதற்காக 1930ஆம் ஆண்டில் இக்கலாசாலை வளாகத்தில் ஒரு "காவியப் பாடசாலை" யையும் அமைத்தார். இது மட்டுமன்றிப் படித்து விட்டு வேலை யின்றி இருக்கும் பெண் பிள்ளைகளின் நலன்கருதி தையல்பயிற்சி வகுப்புக் களையும் ஆரம்பித்து நடாத்தினார். இதனால் பல நூற்றுக்கணக்கானவர்கள் தொழில் வாய்ப்புப் பெற்றனர். மற்றும் இவர் ஆதர வற்ற சிறுவர்களின் நலன் கருதி திருநெல் வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்துடன் இணைந்தாற்போல் 1930ல் ஆண், பெண் பிள்ளைக்ளுக்கென்று தனித்தனி சிறுவர் இல்லங்களை நிறுவி அவர்களுக்கு உணவு, உடை, கல்வி என்பனவற்றை இலவசமாக வழங்கி அவர்களைச் சமூகத்தில் நற்பிர ஜையாக வளர வித்திட்டபெருமை இவ ரையே சாரும். எனவே தொகுத்து நோக்கும் போது ஒரு பிரபலமான கல்விமானாகவும், சட்டத்தரணியாகவும், சமய, சமூக, கல்வி தொண்டாளராகவும் விளங்கிய இவர், சமய கல்விப் பாரம்பரியத்தைப் பேணியதுடன் அதனை மக்கள் மத்தியில் வளர்த்த பெரு மையும் இவரையே சாரும்.

**"பெரியார் இந்துபோட் இராசரத்தினம் அவர்கள் கட்டிக்காத்த பணிகளைத் தொடர் வது எமக்குக் கட்டாயமும், காலத்தின் தேவையும் ஆகும்."**

# மனித வாழ்வில் சாஸ்திரமும் பழமொழிகளும்

திரு.சி.சிவகுமார்,
B.A(Hons),M.A,SLTS-3.I,
ஆசிரியர்,
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.



தமிழர் வாழ்வியல் பண்பாட்டில் சாஸ்திரம் முக்கியபங்கு வகிக்கிறது. மனிதனின் பிறப்பு, இறப்பு, வேளாண்மை, வீடுகட்டுதல், மனை புகுதல், பூப்படைதல், திருமணம் போன்ற எந்த நிகழ்வுகளிலாயினும் சாஸ்திரம் பார்த்துச் செய்யும் பழக்கம் மக்களிடம் வழக்கமாகிவிட்டது. இது கூடுதலாக யாழ்ப்பாணத்தில் வாழும் சைவசமய மக்களிடமே அதிகமாக உள்ளது. உலகநாடுகளில் இன்று வேகமாக விவாகரத்து முறை பரவிவருகின்ற போதிலும் எமது மக்களிடையே இது குறைவடைந்திருப்பதற்குக் காரணம் யாதெனில், திருமணம் சாஸ்திர முறைப்படி அமைக்கப்பட்டது என்ற நம்பிக்கை ஆழமாக வேரூன்றி இருப்பதனாலாகும். இதனைப் பலரும் ஏற்றுக் கொள்கின்ற தன்மையையும் காணலாம். எடுத்துக்காட்டாக,

1. **"சாஸ்திரம் பாராத வீடும் சமுத்திரம் பார்த்த வீடும் தரித்திரம்."**
2. **"சாஸ்திரம் பார்த்து பெண்ணைக் கொள், கோத்திரம் பார்த்துப் பெண்ணைக் கொடு."**
3. **"சாஸ்திரம் பொய் என்றால் கிரகணத்தைப் பார்."**
4. **"மாலை சுற்றிப் பிறந்த பிள்ளை மாமனுக்கு ஆகாது."**
5. **"சாஸ்திரம் பொய்க்காது."**

சாஸ்திரம் பற்றிய பொதுவான பழமொழிகள் மேலே காட்டப்பட்டாலும் நட்சத்திரம், மாதம், நாள், இறப்பு, பிறப்பு, திருமணம், பிற சடங்குகளிலும் சாஸ்திரப் பலன்களே மேலோங்கி இருப்பதைக் காணலாம். நன்மை, தீமை விடயங்களைக் கூறுவதில் சோதிடம் முக்கியம்பெறுகின்றது. இதற்கு மக்களின் பண்பாடும், பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளுமே காரணமெனலாம். அவ்வாறான பழமொழிகளையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

## நட்சத்திரமும் பழமொழிகளும்

தமிழரின் வாழ்க்கைப் பண்பாடானது வானசாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டு நம்பிக்கையின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டதாகும். நவக்கிரகங்களுக்குள்ளும் ஏற்படும் மாற்றமானது நட்சத்திரம், இராசி வழியாக மக்களைச் சென்றடைகிறது. இது மனித வாழ்வியலோடு பின்னிப்பிணைந்திருப்பதோடு, மனித வாழ்வை உளவியல் ரீதியாகவும் பாதிக்கச் செய்துள்ளதாக நாம் அன்றாடம் காணக் கூடியதாக உள்ளது. இவ்வாறு நட்சத்திரம் சார்ந்த பழமொழிகள் கூறும் செய்திகளை நாம் ஆராயும் போது உளவியல் ரீதியான தாக்கத்தையும் உய்த்துணரலாம். எடுத்துக் காட்டாக,

1. "அட்டமத்துச் சனி கெட்டது செய்யும்."
2. "அஞ்சுச் சனி நஞ்சுச் சனி."
3. "ஏழரைச் சனி ஆளையே கொல்லும்"
4. "அட்டமத்துச்சனி வந்தால் பிட்டத்துத் துணியும் கிழிந்து போகும்."
5. "அகப்பட்டவனுக்கு அட்டமத்தில் சனி ஓடிப் போனவனுக்கு ஒன்பதாம் இடத்தில் ராஜா."
6. "பொங்குசனி போய் மங்குசனி வந்தது, மங்குசனி போய் சிரங்குச்சனி வந்தது."
7. "சாகிறவன் சனியனுக்கு ஏன் பயப்பட வேண்டும்?"

இங்கு நவகோள்களுள் "சனி" என்ற கோளானது மனித வாழ்வில் எற்படுத்தும் விளைவுகளை மேலுள்ள பழமொழிகள் தெளிவுபடுத்துகின்றன. இதேபோல ஏனைய கோள்களான சூரியன், சுக்கிரன் (வெள்ளி), புதன், வியாழன் (குரு), ராகு, கேது, செவ்வாய், சந்திரன் (திங்கள்) போன்ற கோள்களின் பலன்கள் கூறும் பழமொழிகளையும் காணலாம்.

அவையாவன,

1. "எட்டில் செவ்வாய் கட்டினால் நாசம்."
2. "சூரியனைக் கிரகணம் பிடித்தது போல என்னைச் சனி பிடித்தது."
3. "புதன் பிள்ளை புத்திசாலி."
4. "கள்ள வியாழன் கழுத்தை அறுக்கும்."
5. "பத்திலை வியாழன் பதியை விட்டெழுப்பும்."
6. "குரு (வியாழன்) பார்வையால் கோடி பாவம் விலகும்."
7. "வியாழன் கூடினால் விவாகம் கூடும்."
8. "கேதுவைப் போலக் கெடுத்தானும் இல்லை, ராகுவைப் போலக் கொடுத்தானும் இல்லை."
9. "சுக்கிரனைப் போல் கொடுத்தவனுமில்லை, கேதுவைப் போல கெடுத்தவனுமில்லை."
10. "குட்டிச் சுக்கிரன் குடியை அலைக்கும்."
11. "ராகுதிசையில் வாழ்ந்தவனுமில்லை, இராஜதிசையில் கெட்டவனுமில்லை"
12. "திங்களும் (சந்திரன்) சனியனும் தெற்கே நோக்க வேண்டும்."

இவ்வாறு ஒன்பது கோள்களும் மானிட வாழ்வியலில் செலுத்தும் தாக்கம் பற்றி அனுபவரீதியாக நம்முன்னோர் அறிந்தவற்றைக் காணலாம். இந்த வானசாஸ்திர அடிப்படையிலேயே தற்காலக் காலநிலை மாற்றங்களைக் கணிப்பிடும் ஆற்றல் வளர்ந்துள்ளன என்றால் அதை மறுப்பார் எவருமே இல்லை எனலாம்.

மேற்குறிப்பிட்டவாறு ஒன்பது கோள்களும் மனிதப்பண்பாட்டு வளர்ச்சியில் தாக்கம் செலுத்தியது போல, பன்னிரு இராசியின் கீழ் அடங்குகின்ற 27 நட்சத்திரங்களும் மனிதனின் வாழ்க்கையில் செலுத்துகின்ற ஆதிக்கத்தைப் பழமொழிகள் சுட்டிக்காட்டத் தவறவில்லை. இப்பழமொழிகள் ஒவ்வொரு நட்சத்திரத்தினதும் குணவியல்புகளை எடுத்துக் காட்டுவதோடு, அவை ஆண்மகனுக்கோ, பெண்மகளுக்கோ சிறப்பினை வழங்குகிறது என்பதையும் விளக்குகின்றன. எடுத்துக்காட்டாக,

1. "பரணி தரணி ஆளும்."
2. "பரணியில் பிறந்தவன் தரணி ஆள்வான்."
3. "பரணி எடுப்புப் பாழ் போகாது."
4. "கேட்டையில் பிறந்தால் கோட்டை கட்டி வாழ்வான்."
5. "கெட்ட குடிக்கு ஒரு கேட்டை."
6. "கேட்டை நட்சத்திரம் ஒட்டனுக்கு (மூத்தவனுக்கு) ஆகாது."
7. "கேட்டை, மூட்டை, செவ்வாய்க்கிழமை."
8. "திருகோணம் ஒரு கோணம் ஆளும்."

9. **"திருகோணம் பல கோணம் ஆளும்."**
10. **"அவிட்ட நட்சத்திரம் அள்ளிக் கொட்டும்."**

இங்கே கூறப்பட்ட பழமொழிகள் பொதுவாக ஆண்களுக்கும், பெண்களுக்கும் சிறந்தனவாகும். இருப்பினும் அதன் உயர்ச்சி ஆண்களுக்கே கூடுதலாகப் பொருந்துவனவாக உள்ளதை அன்றாட வாழ்வியலில் நேரடியாகக் காணமுடிகிறது.

மானிடப்பிறப்பு நட்சத்திரங்கள் சில பெண்பிள்ளைகளுக்குச் சிறப்பானதாகத் தனித்துக் கூறப்பட்டாலும், கூடுதலான நட்சத்திரங்கள் பெண்களுக்கு ஏற்புடையதாகக் கூறப்படவில்லை. பெண்களுக்குச் சிறப்பானதாகக் கூறப்படும் நட்சத்திரங்கள் சில வருமாறு:

1. **"மத்தாடினாலும் மகம் ஆடாது."**
2. **"அவிட்டத்தில் பெண் பிறந்தால் தவிட்டுப் பானையிலும் பொன் கொட்டும்."**
3. **"மகத்துப் பெண் சகத்துக்கு அதிசயம்."**
4. **"மகத்தில் மங்கை பூரத்தில் புருஷன்."**

பெண்கள்பற்றிக் குறைத்து மதிப்பிடும் பழமொழிகளையும், சமூகத்திலே ஏராளமாகக் காணமுடிகிறது. இவ்வாறு குறிப்பிட்ட சில நட்சத்திரங்களைப் பெண்களுடன் ஒப்பிட்டு தாழ்த்திப் பேசப்படுவதால் அவர்களின் மணவாழ்க்கை என்பது பல இடங்களில் சின்னாபின்னமாக்கப்பட்டுப் போயிருப்பதை, யாழ்ப்பாணச் சமூகத்தின் பண்பாட்டிலே காணமுடிகிறது. எடுத்துக் காட்டாக,

1. **"ஆண்மூலம் அரசாளும், பெண்மூலம் நிர்மூலம்."**
2. **"சித்திரை மூலம் சித்தனிக்குதவாது."**
3. **"ஆயிலியக்காரி அகலக் கட்டுவாள்."**
4. **"மகத்துப்பெண் முகத்திற்கு ஆகாது."**
5. **"அகதி பெறுவது பெண்பிள்ளை, அதுவும் வெள்ளிப்பூராடம்."**
6. **"பூராடம் ஊசலாடத் தெரியும்."**
7. **"பூராடம் ஊசலாடித் தீரும்."**
8. **"பூராடக்காரி ஊசாட ஊசாடப் பொருள் தொலையும்."**
9. **"பூராடத்திலே பிறந்தவளுக்கு நூல் ஆகாது."**
10. **"பூராடத்தின் கழுத்தில் நூல் ஆடாது."**

போன்றவற்றை எடுத்துக்காட்டலாம்.

பெண் மூலக்காரியை மணப்பவன் தனது தந்தையை இழக்கவேண்டிவரலாம் என்ற நம்பிக்கையும், ஆயிலிய நட்சத்திரத்துப் பெண்ணை மணம் முடித்தால் மணமகனின் தாயையும் விரைவில் இழக்க வேண்டிவரலாம் என்ற நம்பிக்கையும் எழுதப்படாத ஆவணமாக நாகரிக உலகில் வாழும் மக்களால் பேணப்பட்டுவருவதை நினைக்கும் போது சங்கடமாக இருப்பதோடு, பழமொழியின் மூலத்தில் எங்கோ எப்போதோ ஏற்பட்ட மாற்றமே காரணம் எனவும் உணர முடிகின்றது.

மேலும் **"மத்தாடினாலும் மகமாடாது"** என அதன் மானத்தை உயர்த்திப்பேசிய பழமொழி, இன்னொரு இடத்தில் **"மகத்துப் பெண் முகத்திற்கு ஆகாது"** என்று கூறியிருப்பது முரண்பாடாகவே உள்ளது. ஆனால் **"மகம் மன்னன் ஆவான்"** என ஆண் பிள்ளைக்கு உயர்த்திக்கூறியிருப்பதும் நோக்கத்தக்கதாகும். அத்துடன் **"அத்த நட்சத்திரம்"** கலகத்தின் சின்னமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளதோடு பெண்களைப் பாதிப்படையவும் வைத்துள்ளது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, **"பூராட நட்சத்திரம்"**

பற்றி ஆணுக்கும் பெண்ணுக்கும் பொது வான தீயபலன்களைக் கூறினாலும், பெண்களையே அதிக இழிவாக்கியுள் ளமையைக் காணலாம். அத்துடன் பூராடத்துப் பிள்ளையைப் பெற்றவர்களும் பாதிப்படைவர் என்பதை **"பூராடத்தின் அப்பன் ஊராடான்."** என்ற பழமொழி மூலமும், பூராடநட்சத்திர ஆணும் கெட்டுப் போவான் என்பதை **"பூராடத்தில் பிறந்தவன் ஊராடித்திரிவான்"** என்றும், **"பூராடக்கார னோடு போராட முடியாது"** என்றும் கூறப்படுவதிலிருந்தும் அறிந்து கொள்ள முடிகிறது.

இது போல **"திருவாதிரை"** நட்சத்திரம் பற்றிய பழமொழிகள் பற்றியும் நோக்கலாம்.

1. **"திருவாதிரையில் போனவர் திரும்பார்."**
2. **"மிளகுப் பொடியோடை திருவாதிரை."**
3. **"திருவாதிரையில் போனபொருள் திரும்பி வருவது கண்டிப்பு."**
4. **"திருவாதிரை ஒருவாய்க்களி, திருப்பிக் கேட்டால் செருப்பாலடி."**
5. **"திருவாதிரை மழை இல்லாவிடில் திருப்பி மழை காண்பது அரிது."**
6. **"திருவாதிரைக் களி தினமும் அகப்படுமா?"**
7. **"அவன் பேசுவதெல்லாம் தில்லுமல்லும் திருவாதிரை."**

இப்பழமொழியை மேலோட்டமாகப் பார்க்கும்போது திருவாதிரை நட்சத்திரம் பற்றிக் கூறுவதாக இருந்தாலும், அது **"திருவாரூர்"** கோயில் பற்றிக் குறிப்பிடுவது போலவும் சிலபழமொழிகள் உள்ளன. எடுத்துக்காட்டாக,

**"மிளகுப் பொடியோடை திருவாதிரை"** என்ற பழமொழிக்கு இணையான பழமொழியாக **"அரிசிப் பொரியோடு திருவாரூர்ப் பயணம்"** என்பது அடிக்கடி வழங்கப்படும் பழமொழி யாக இருப்பதாலும், களி, பொருள், மழை, போனவர் திரும்பார் போன்ற சொற்களும் சிந்திக்கத் தூண்டுவனவாக உள்ளன.

**"சுவாதி"** நட்சத்திரமானது சோம்பல், அமைதி, அடக்கமான போக்குகளைச் சித்தரிப்பதால் இந்த நட்சத்திரம் பற்றிப் பழமொழிகள் பின்வருமாறு கூறுகின்றன.

1. **"சுவாதிச் சுவானம்"**
2. **"சுவாதியில் வில் போட்டால் (வானவில் போட்டால்) சொன்னபடி மழை."** என்றவாறு உள்ளன.

இவற்றை விட, பின்வரும் பழமொழிகள் திதிகளுடன் தொடர்புபட்டனவாகும். அவையாவன,

1. **"ஏகாதசித் திருடியை ஏற்றடா ரதத்தின் மேல்"**
2. **"ஏகாதசி மரணம், துவாதசித் தகனம்."**

போன்றன விளங்குகின்றன.

இவ்வாறு மானிட வாழ்வியலில் நட்சத்தி ரங்கள் பற்றிய பழமொழிகள் மக்களின் பண்பாடு, கலாசாரம் என்பவற்றோடு இரண்ட றக் கலந்திருப்பதைக் காணலாம். அவை பிறப்பு, இறப்பு, சடங்குகள், மங்கல விழாக்கள் போன்ற சகல அம்சங்களுடனும் ஒருசேர அமைந்து மக்களை நெறிப்படுத்தி, வழிப்படுத்தி வருவதைக் காணலாம். **"பழமொழி பொய்யின்னா பழையதும் சுடும்."** என்பதற்கிணங்க பழமொழிகளின் வாயி லாகக் கூறப்பட்ட அனுபவங்களைப் புரிந்து கொள்வதோடு, கால மாற்றத்தில் ஏற்பட்ட மாற்றங்களை அறிந்து அதன்படி ஒழுகுதலே சிறப்பானதாகும்.

# Internal Audit and External Audit

Miss.S.Vinotha,
Old Student,
J/ Urumpirai Hindu College.



The Internal Audit & External Audit is defined as follows. Internal Auditing is an appraisal or monitoring activity established within an entity as a service to the entity. It functions by, amongst other things, examining, evaluating, and reporting to management and the director on the adequacy and effectiveness of components of the accounting and internal control system.

An External Audit is an exercise whose objective is to express an openion whether the financial statements give a true and fair view of the entity's affairs at the period then ended and have been property prepared in accordance with the applicable reporting framework. The following table shows the differences between internal and external audit.


| | Internal Audit | External Audit |
|---|---|---|
| 1. Reason | Internal Audit is an activity designed to add value and improve an organization's operations. | An exercise to enable auditors to express an opinion on the financial statements. |
| 2. Relationship with the company | Internal Auditors are appointed by the company. | External auditors are appointed by shareholders. |
| 3. Relation to | Internal Auditors work relate to the operation of the organization. | External Auditors work relate to the financial statements. |
| 4. Reporting to | Internal audit report to the board of directors. | The external auditors report to the shareholders |

# சாதனையாளர்


## கல்வி



**செல்வன்.இ.தர்சிகன்**
(உரும்பிராய் ஞான வைரவர் ஆலயத்தில் சிவராத்திரியை முன்னிட்டு நடாத்திய பண்ணிசைப் போட்டி-2011, முதலாம் இடம்)




**செல்வன்.பா.நிரோசன்**
(உரும்பிராய் ஞான வைரவர் ஆலயத்தில் சிவராத்திரியை முன்னிட்டு நடாத்திய பேச்சுப் போட்டி-2011, முதலாம் இடம்)



**செல்வி.கு.சுரேந்தினி**
(உரும்பிராய் ஞான வைரவர் ஆலயத்தில் சிவராத்திரியை முன்னிட்டு நடாத்திய பேச்சுப் போட்டி-2011, இரண்டாம் இடம்)



**செல்வி.த.துசாரா**
(உரும்பிராய் ஞான வைரவர் ஆலயத்தில் சிவராத்திரியை முன்னிட்டு நடாத்திய பேச்சுப் போட்டி-2011, இரண்டாம் இடம்)



**செல்வி.ஶ்ரீ.சாமிலி**
(உரும்பிராய் ஞான வைரவர் ஆலயத்தில் சிவராத்திரியை முன்னிட்டு நடாத்திய பண்ணிசைப் போட்டி-2011, மூன்றாம் இடம்)



**செல்வன்.பா.நிரோசன்**
(ஊரெழு சிவபூமி அறநெறிப் பாடசாலை நடாத்திய பேச்சுப் போட்டி-2011, முதலாம் இடம்)



**செல்வி.த.துசாரா**
(ஊரெழு சிவபூமி அறநெறிப் பாடசாலை நடாத்திய பேச்சுப் போட்டி-2011, இரண்டாம் இடம்)



**செல்வி.ஶ்ரீ.சாமிலி**
(ஊரெழு சிவபூமி அறநெறிப் பாடசாலை நடாத்திய பண்ணிசைப் போட்டி-2011, முதலாம் இடம்)

## சாதனையாளர்

### கல்வி




**செல்வி.சி.சத்திதா**
(கோப்பாய் கோட்டமட்ட
சைவநெறிப் பேச்சுப் போட்டி-2010,
மூன்றாம் இடம்)



**செல்வன்.க.அகீபன்**
(யாழ் வலய மட்ட
தோரணம் பின்னுதல் போட்டி-2010,
இரண்டாம் இடம்)



**செல்வன்.வ.றொபின்சன்**
(ஊரெழு சைவாலய முன்னேற்றக்கழகம்
நடாத்திய எழுத்துப் பரீட்சை-2010,
முதலாம் இடம், வெள்ளிப்பதக்கம்)



**செல்வி.சி.சத்திதா**
(புத்தூர் மணற்பகுதி புவனேஸ்வரி
அம்பாள் ஆலயம் நடாத்திய எழுத்துப்
பரீட்சை-2010, இரண்டாம் இடம்)



**செல்வன்.தே.ஜனார்த்தனன்**
(ஞானவைரவர் ஆலயத்தில்
சிவராத்திரியை முன்னிட்டு நடாத்தப்பட்ட
பேச்சுப்போட்டி-2010, முதலாம் இடம்)



**செல்வன்.வ.றொபின்சன்**
(வண்ணை சாந்தையர்மட கற்பக விநாயகர்
ஆலயத் தோரணம் பின்னுதல் போட்டி-2010,
முதலாம் இடம், வெள்ளிப்பதக்கம்)



**செல்வன்.இ.தர்சிகன்**
(கோப்பாய் கோட்டமட்ட
சைவநெறி பண்ணிசைப்
போட்டி-2010, முதலாம் இடம்)




**செல்வி.சி.சாமிலி**
(கல்விஅமைச்சும்,ஹற்றன்
நஷனல் வங்கியும் இணைந்து
நடாத்திய சிறுவர்பாடல் போட்டி-2010,
மாவட்ட மட்டம், முதலாம் இடம்)

# சாதனையாளர்

## கல்வி



**செல்வன்.பா.நிரோசன்**
(வலய மட்ட அழகியல்
உபகரணப் போட்டி–2010,
முதலாம் இடம்)



**செல்வன்.சி.பார்த்தீபன்**
(வலய மட்ட அழகியல்
உபகரணப் போட்டி–2010,
மூன்றாம் இடம்)

## விளையாட்டு

### மாகாண மட்டத்தில் இருந்து தேசிய மட்டத்திற்குத் தெரிவு– 2010



**செல்வி.ந.வதனா**
(குண்டு போடுதல்)

### வலய மட்டத்தில் இருந்து மாவட்ட மட்டத்திற்குத் தெரிவு – 2010




**செல்வி.ந.வதனா**
(குண்டு போடுதல்,
தட்டு எறிதல்)



**செல்வி.ஜே.டிலின்ருக்ஷி**
(தட்டு எறிதல்)



**செல்வி.தே.தர்சிகா**
(உயரம் பாய்தல்,
100 மீற்றர் ஓட்டம்)



**செல்வன்.த.காண்டீபன்**
(5000 மீற்றர் ஓட்டம்)

# சாதனையாளர்


## கல்வி




**செல்வி.ர.றேகலா**
(ஊரெழு சைவாலய
முன்னேற்றக்கழகம் நடாத்திய
பண்ணிசைப் போட்டி-2010,
மூன்றாம் இடம்)



**செல்வன்.அ.மதுசன்**
(கல்வி அமைச்சும், ஹற்றன் நஷனல்
வங்கியும் இணைந்து நடாத்திய
சித்திரப் போட்டி-2010,
மாவட்ட மட்டம், இரண்டாம் இடம்)



**செல்வி.உ.கார்த்திகா**
(கல்விஅமைச்சும்,ஹற்றன் நஷனல்
வங்கியும் இணைந்து நடாத்திய
சிறுவர்பாடல் போட்டி-2010,
மாவட்ட மட்டம், இரண்டாம் இடம்)



**செல்வி.ச.சபிதா**
(கோப்பாய் கோட்டமட்ட
மாலை கட்டுதல் போட்டி-2010,
இரண்டாம் இடம்)



**செல்வி.ஜெ.அஜித்தா**
(கோப்பாய் கோட்டமட்ட
சகலகலாவல்லி மாலை ஓதுதல்
போட்டி-2010, மூன்றாம் இடம்)



**செல்வி.சி.ரஞ்சனா**
(கோப்பாய் கோட்டமட்ட
மாலைகட்டுதல் போட்டி-2010,
இரண்டாம் இடம்)



**Miss.A.Ramya**
(Divisional Level, Creative Writing
Competition-2010, First Place &
Divisional Level, Dictation
Competition-2010, Third Place)



**செல்வன்.ந.விபூசனன்**
(கோப்பாய் கோட்டமட்ட
தோரணம் பின்னுதல் போட்டி-2010,
இரண்டாம் இடம்)

## BAND TEAM - 2011




## SOCCER TEAM - 2011 (UNDER 15)



## SOCCER TEAM - 2011 (UNDER 17)



## SOCCER TEAM - 2011 (UNDER 19)



## CRICKET TEAM - 2011 (UNDER 19)



## NETBALL TEAM - 2011 (UNDER 15)



## NETBALL TEAM - 2011 (UNDER 17)



## சாதனையாளர்

### விளையாட்டு

### கோட்ட மட்டத்தில் இருந்து வலய மட்டத்திற்குத் தெரிவு- 2010




**செல்வன்.ப.டிலக்சன்**
(100 மீற்றர் ஓட்டம்,
200 மீற்றர் ஓட்டம்)



**செல்வன்.தா.அலக்சன்**
(200 மீற்றர் ஓட்டம்,
400 மீற்றர் ஓட்டம்)




**செல்வன்.சி.தனுசன்**
(200 மீற்றர் ஓட்டம்)



**செல்வன்.த.காண்டீபன்**
(800 மீற்றர் ஓட்டம், 1500 மீற்றர்
ஓட்டம், 5000 மீற்றர் ஓட்டம்



**செல்வன்.சி.பார்த்தீபன்**
(குண்டு போடுதல்,
தட்டு எறிதல்)



**செல்வன்.ரி.இதயராஜ்**
(ஈட்டி எறிதல்)



**செல்வி.செ.பிருந்தா**
(உயரம் பாய்தல்)



**செல்வி.ஜே.டிலின்ருக்ஷி**
(தட்டு எறிதல்)


# சாதனையாளர்

## விளையாட்டு

### கோட்ட மட்டத்தில் இருந்து வலய மட்டத்திற்குத் தெரிவு- 2010




**செல்வி.ந.வதனா**
(குண்டு போடுதல்,
தட்டு எறிதல், ஈட்டி எறிதல்)



**செல்வி.தே.தர்சிகா**
(100 மீற்றர் ஓட்டம்,
200 மீற்றர் ஓட்டம், உயரம் பாய்தல்)



**செல்வி.அ.யூலியா**
(100 மீற்றர் ஓட்டம்)



**செல்வி.ம.சுகந்தினி**
(1500 மீற்றர் ஓட்டம்)

# PRIZE GIVING NAME LIST - 2011

## GRADE- 6

| NAME | SUBJECTS |
|---|---|
| S.Jelsankosly | Tamil, Maths, Science, Drama And Theatre, Geography |
| A.Janosan | Hinduism, Citizen Ship Education, Technical Studies |
| A.Ajantha | Christianity, History, English, Music |
| K.Akeepan | Health Science |
| K.Kajan | Art |
| M.Nivetha | Dance |

## GRADE- 7

| NAME | SUBJECTS |
|---|---|
| S.Saththitha | Tamil, Maths, Geography, English, History, Health Science, Hinduism |
| I.Siranjeevan | Science |
| S.Anushanth | Christianity |
| R.Rekala | Music |
| K.Laxika | Dance |
| J.Sayanthan | Drama And Theatre |
| T.Sansiya | Citizen Ship Education, Art, Activity |

## GRADE- 8

| NAME | SUBJECTS |
|---|---|
| J.Sarmina | Tamil, Hinduism, History, Health Science, Music, Activity, Science |
| D.Jeniteransiya | Christianity |
| J.Priyanka | Maths, English, Dance |
| T.Ginthuyan | Art, Geography |
| P.Tharusan | Drama And Theatre |

# GRADE- 9

| NAME | SUBJECTS |
|---|---|
| J.Nirusan | Tamil |
| M.Nilaxsan | Hinduism,Maths,Science,Art,Geography,Citizen Ship Education, Health Science |
| S.Printha | Christianity, English |
| J.Jensika | Music, History |
| J.Kamsika | Dance |
| S.Savitha | Activity |
| S.Rahitha | Drama And Theatre |

# GRADE - 10

| NAME | SUBJECTS |
|---|---|
| T.Anastika | Maths, English, History, Dance, I.C.T |
| T.Thanusiya | Hinduism |
| A.Liyana | Christianity, Tamil |
| S.Marymedona | Science, Agriculture |
| K.Sopika | Art |
| P.Dilaxshala | Home Economics |
| I.Lagittha | Geography |
| V.Jesitha | Health Science |
| P.Sivasanger | Music |
| K.Surenthini | Commerce |

# GRADE - 11

| NAME | SUBJECTS |
|---|---|
| M.Kajilan | I.C.T, Agriculture , Science |
| T.Kandeepan | Drama And Theatre |
| S.Delaxsan | Health Science |
| S.Anistika | Maths, Christianity , Tamil |
| N.Vathana | History, Geography |
| L.Kajusana | English, Commerce, Hinduism |
| T.Palatheean | Art |
| S.Sumana | Music, Citizen Ship Education |
| T.Nirojini | Dance, Home Economics |

# GRADE 12 ARTS (2012)

| NAME | SUBJECTS |
|---|---|
| K.Thushara | Tamil, Hindu Culture |
| R.Thusya | Christianity, Drama And Theatre |
| N.Nishalini | Geography, Music |
| S.Subasini, A.Kanista | English |
| J.Vosingtan | Art |
| M.Kayavani | Home Economics |
| S.Vijitharan | Agriculture |
| Y.Yalini | Dance |
| A.Kanista | I.C.T |

# GRADE 13 ARTS (2011)

| NAME | SUBJECTS |
|---|---|
| T.Janarththanan | Tamil, Music |
| V.Robinsan | Hindu Culture |
| J.Rohini | Christianity |
| S.Subaskaran | Agriculture Science |
| A.Ramiya | English |
| P.Panchaseelan | Art |
| M.Piriya | Dance |
| P.Niroyan | Drama And Theatre, Geography |

## GRADE 13 COMMERCE

| NAME | SUBJECTS |
|---|---|
| J.Lamsha | Commerce, Accounts, English |
| S.Thanusan | Economics |

## GRADE 13 SCIENCE

| NAME | SUBJECTS |
|---|---|
| K.Senpoul | Combined Maths, Chemistry, Physics, GIT |
| R.Kartheepan | Physics |

## BEST STUDENTS

| NAME |
|---|
| Master.K.Senpoul |
| Miss.S.Vani |

# நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள் - 2011

## சைவசமய அறிவுப்போட்டி

**தரம் 4-5**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.இ.கலைப்பரிதி | யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம். |
| இரண்டாம் இடம் | செல்வன்.சி.ரிஷிகீதன் | யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம். |
| மூன்றாம் இடம் | செல்வன்.த.சமரழகன் | யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம். |

**தரம் 6-7**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.செ.டிலக்ஷியா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வி.அ.கபினா | யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம். |
| மூன்றாம் இடம் | செல்வி.கி.காவேரி | யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம். |

**தரம் 8-9**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.சி.தர்சனா | யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம். |
| இரண்டாம் இடம் | செல்வி.பெ.சரண்யா | யா/உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம். |
| மூன்றாம் இடம் | செல்வி.சி.சத்திதா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

**தரம் 10-11**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.செ.கிதுர்சனா | யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம். |
| இரண்டாம் இடம் | செல்வி.த.கானுசா | யா/ஊரெழு கணேசா வித்தியாலயம். |
| மூன்றாம் இடம் | செல்வி.தி.அனஸ்ரிகா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

**தரம் - 12**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.த.துஷாரா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வன்.சி.விஜிதரன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வி.ஞா.நித்தியா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

**தரம் - 13**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வன்.சு.சுபாஸ்கரன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வன்.ம.மதன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வன்.வ.றொபின்சன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

## கோலம் போடுதல்

**தரம் 6-7**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.இ.தக்ஷனா | யா/உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம். |
| இரண்டாம் இடம் | செல்வி.கோ.கஜீனா | யா/உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம். |
| மூன்றாம் இடம் | செல்வி.ஜே.ரம்யா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

தரம் 8-9

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.கி.கிருசியா | யா/உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம். |
| இரண்டாம் இடம் | செல்வி.ச.யாழினி | யா/உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம். |
| மூன்றாம் இடம் | செல்வி.டெ.ஜெனிரென்சியா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

தரம் 10-11

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.யோ.பர்மிசா | யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம். |
| இரண்டாம் இடம் | செல்வன்.சி.ஜெனிஸ்ரன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வி.தி.கீர்த்தனா | யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம். |

தரம் 12-13

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.க.றெறின் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வி.சி.மேனுதா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

## தோரணம் பின்னுதல்

தரம் 6-7

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வன்.க.அகீபன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வன்.பா.ஜனார்த்தனன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வன்.ப.கனிஸ்ரன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி |

தரம் 8-9

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வன்.செ.அனுசாந் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வி.சி.மீரா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வன்.அ.மதுசன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

தரம் 10-11

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வன்.த.விபூசன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வன்.நி.நியூட்டன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வன்.மு.நிலக்சன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

தரம் 12-13

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வன்.செ.அலெக்ஸ் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வன்.வ.றொபின்சன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வி.ஸ்ரீ.சாமிலி | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

## மாலை கட்டுதல்

தரம் 6-7

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வன்.வி.ரஜிதா | யா/உரும்பிராய் சைவத்தமிழ்.வித் |

தரம் 8-9

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.சி.கஜலக்ஸ்சி | யா/உரும்பிராய் சந்திரோதயா.வித். |
| இரண்டாம் இடம் | செல்வி.க.கயாளினி | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி |
| மூன்றாம் இடம் | செல்வி.நா.பிரியங்கா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

**தரம் 10 - 11**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.சி.ரஞ்சனா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வி.செ.சபிதா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வி.ச.சியாமினி | யா/ஊரெழு கணேசா வித். |

**தரம் 12 -13**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வன்.தே.ஜனார்த்தனன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வி.க.விஜிதா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வி.சி.நிரோஜினி | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

## கிறிஸ்தவ சமய அறிவுப் போட்டி முடிவுகள்

**பிரிவு 1**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வன்.செ.ஜெல்சன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வன்.அ.அலெஸ்ரன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வன்.கு.நிதர்சன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

**பிரிவு 2**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.இ.யாழிசா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வி.யோ.ஜெனிரெரன்சியா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வன்.அ.டயானிற் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வி.கு.சரிகா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வன்.இ.சிரஞ்ஜீவன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

**பிரிவு 3**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.ஜே.ஜென்சிகா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வி.அ.லியாணா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வன்.க.ரியூஸ்ரன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

**பிரிவு 4**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.அ.வொலஸ்ரின்யூலியா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வன்.கு.சென்போல் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வி.ஸ்.நிசாமினி | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

## பொது அறிவுப் போட்டி முடிவுகள்

**பிரிவு I**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வன்.கு.தேனுகன் | யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, |
| இரண்டாம் இடம் | செல்வன்.ச.விதுசிகன் | யா/புத்தூர் இந்து ஆரம்ப பாடசாலை. |
| மூன்றாம் இடம் | செல்வி.வீ.ஆர்த்திகா | யா/கோப்பாய் சரவண பவானந்தா வித். |

பிரிவு II

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.து.சண்சியா | யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, |
| இரண்டாம் இடம் | செல்வி.தே.சுலக்சனா | யா/கோப்பாய் நாவலர் வித்தியாலயம். |
| மூன்றாம் இடம் | செல்வி.சி.சத்திதா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வன்.மு.தினுயன் | யா/புத்தகலட்டி ஸ்ரீவிஸ்ணு வித்தியாலயம். |

பிரிவு III

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.சி.திலக்சனா | யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம். |
| இரண்டாம் இடம் | செல்வன்.மு.நிலக்சன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வன்.ஸ்ரீ.தர்ஜன் | யா/கோப்பாய் சரவண பவானந்தா வித். |
| மூன்றாம் இடம் | செல்வி.வே.கிருஷ்ணவி | யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, |

பிரிவு IV

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.அ.ரம்யா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வி.தி.நிரோஜா | யா/அச்சுவேலி மத்திய கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வி.அ.வொலஸ்ரீன் யூலியா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வி.ரா.சுபேக்கா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

**பொது அறிவுப் போட்டியில் ஆறுதல் பரிசு பெறுவோர் விபரம்**

பிரிவு I

| | |
|---|---|
| செல்வி.ம.நீருஜி | யா/கோப்பாய் நாவலர் வித்தியாலயம். |
| செல்வி.ம.அமுதவிழி | யா/கோப்பாய் நாவலர் வித்தியாலயம். |
| செல்வன்.வ.ரிஷிசங்கர் | யா/ புத்தூர் ஆரம்பப்பாடசாலை. |
| செல்வி.யோ.லிண்டா | யா/உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை. |
| செல்வி.ப.சிந்தூரா | யா/அச்சுவேலி மத்திய கல்லூரி. |
| செல்வி.இ.கலைப்பரிதி | யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம். |

பிரிவு II

| | |
|---|---|
| செல்வி.க.திவ்யா | யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி. |
| செல்வி.த.கோபிகா | யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி. |
| செல்வி.தே.சுஜித்தா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| செல்வி.கி.துசாந்தி | யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, |

பிரிவு III

| | |
|---|---|
| செல்வி.அ.அனஸ்ரிகா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| செல்வி.க.லாவண்யா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| செல்வி.தி.தர்சனா | யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம். |

பிரிவு IV

| | |
|---|---|
| செல்வன்.கு.சென்போல் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| செல்வி.யு.லம்சா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| செல்வி.ச.சுரேகா | யா/அச்சுவேலி மத்திய கல்லூரி. |

## கட்டுரைப்போட்டி முடிவுகள்

**பிரிவு -1**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி றே.டெசியா | யா/உரும்பிராய் றோ.க.த. பாடசாலை. |
| இரண்டாம் இடம் | செல்வி யோ.லிண்டா | யா/உரும்பிராய் றோ.க.த. பாடசாலை. |
| மூன்றாம் இடம் | செல்வன் சி.தமிழன்பன் | யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை. |
| மூன்றாம் இடம் | செல்வி ஸ்ரீ.கௌசி | யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை. |

**பிரிவு -2**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி க.லக்சிகா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| முதலாம் இடம் | செல்வி ஜே.மாதுரிகா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வி சி.சத்திதா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வி த.ஜலக்கா | யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித். |

**பிரிவு -3**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வன் க.சுதர்சன் | யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித். |
| இரண்டாம் இடம் | செல்வி யோ.சயிந்தவி | யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித். |
| மூன்றாம் இடம் | செல்வி கு.சுரேந்தினி | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

**பிரிவு - 4**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி ஸ்ரீ.சாமிலி | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வி அ.ரம்யா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வி த.துசாரா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

## விஞ்ஞான அறிவுப் போட்டி முடிவுகள்

**தரம் 6-7**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வன்.அ.யனோஷன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வன்.செ.ஜெல்சன்கொஷ்லி | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வன்.சி.டினுாயன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

**தரம் 8-9**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.யோ.பிரியங்கா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வன்.ஜெ.லினோட் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வி.சி.சத்திதா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வி.யோ.சர்மினா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

**தரம் 10-11**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.தி.அனஸ்ரிகா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வி.ச.மேரிமொடோனா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வன்.ஜெ.ஜெயாட்சன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வன்.சி.கௌசிகன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

| | | |
|---|---|---|
| மூன்றாம் இடம் | செல்வி.கு.சுரேந்தினி | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வி.அ.லியானா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

## கணிதப் போட்டி முடிவுகள்

**தரம் 6**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.ஜே.மாதுரிகா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வி.தெ.மயூரா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வி.கெ.கனிஸ்ரா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

**தரம் 7**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.செ.டிலக்ஷிகா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வன்.செ.டினூஜன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வன்.அ.யனோஷன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

**தரம் 8**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.சி.சத்திதா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வி.த.சரிக்கா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வன்.அ.மதுசன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

**தரம் 9**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.பா.நிதர்சனா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| முதலாம் இடம் | செல்வி.யோ.பிரியங்கா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வன்.ஜெ.வினோட் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

**தரம் 10**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வன்.அ.அஜித் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வன்.ந.ஜெனகரன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வி.க.லாவண்யா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

**தரம் 11**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.தி.அனஸ்ரிகா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வி.கு.சுரேந்தினி | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வி.இ.லஜித்தா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வன்.ம.தினேசன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

## மனைப்பொருளியல் பொதுஅறிவுப் போட்டி முடிவுகள்

**தரம் 10**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.அ.பிரிந்தா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

**தரம் 11**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.கா.கோபிகா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

**தரம் 12**

| | | |
|---|---|---|
| இரண்டாம் இடம் | செல்வி.ச.பிரவீனா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வி.க.சயந்தினி | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

**தரம்-13**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.மு.கயவாணி | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வி.சு.சுபானி | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்லி.சி.நிரோஜினி | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

## பண்ணிசைப்போட்டி முடிவுகள்

**தரம் 6-7**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.யோ.றோகினி | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வி.உ.கம்சனா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வன்க.சஜீவன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

**தரம் 8-9**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.யோ.சர்மினா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வி.உ.கார்த்திகா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வி.சி.மீரா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

**தரம் 10-11**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வன்.ப.சிவசங்கர் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வன்.ஸ்ரீ.அஜித் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வன்.இ.கௌசிகன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

**தரம் 12**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வன்.இ.தர்சிகன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வி.த.துஷாரா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வி.க.ரெறின் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

**தரம் 13**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வி.ஸ்ரீ.ஷாமிலி | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வி.சி.ருஷாந்தி | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வன்.சி.மயூரன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வன்.சி.ஜனார்த்தனன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி |

## சித்திரப் போட்டி முடிவுகள்

**கீழ்ப்பிரிவு**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வன் தே.தேனுஜன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி |
| இரண்டாம் இடம் | செல்வன் கு.நிதர்சன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி |
| மூன்றாம் இடம் | செல்வி த.சண்சியா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி |

**மத்தியபிரிவு**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வன்.யெ.ஜெயாட்சன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி |
| இரண்டாம் இடம் | செல்வன் இ.றதீஸ்வரன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி |
| மூன்றாம் இடம் | செல்வன் ப.டெனின்சன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி |

**மேற்பிரிவு**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வன் ப.பஞ்சசீலன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி |
| இரண்டாம் இடம் | செல்வன் ப.பார்த்தீபன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி |
| மூன்றாம் இடம் | செல்வன்.யோவொசிங்டன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி |
| மூன்றாம் இடம் | செல்வன் வி.அனோஜன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி |

## தனிநடிப்புப் போட்டி முடிவுகள்

**தரம் 6-7**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வன்.ஜெ.ஜெல்சன்கொஸ்லி | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வி.பி.வனஜா | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வி.வி.றுசாந்தினி | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வன்.யோ.றொனிக்சன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

**தரம் 8-9**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வன்.வி.கவாஸ்கர் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வன்.அ.நிரூசன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வன்.க.யதுசன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

**தரம் 10-11**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வன்.சு.சுபோஜன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வன்.சி.பிரசாந் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வி.சு.துசி | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

**தரம் 12-13**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | செல்வன்.பா.நிரோசன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| முதலாம் இடம் | செல்வன்.ப.பகீரதன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| இரண்டாம் இடம் | செல்வன்.ப.பார்த்தீபன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |
| மூன்றாம் இடம் | செல்வன்.வ.றொபின்சன் | யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி. |

சிறந்த நடிகன் **செல்வன்.ப.பகீரதன்**

**தமிழ் வினாவிடைப் போட்டி (அனுசரணை - வாணி கல்வி நிலையம்)**

தரம் - 6 ஜே.மாதுரிகா
தரம் - 7 யோ.றோஜினி
தரம் - 8 வா.தர்மிகா
தரம் - 9 தெ.ஜிந்துசன்
தரம் - 10 சி.அஜித்
தரம் - 11 தி.துவிக்கா
தரம் - 12 சி.மயூரன்

# ENGLISH LANGUAGE COMPETITIONS
## COPY WRITING

| | | |
|---|---|---|
| GRADE 6 | | |
| 1st Place | Miss.J.Mathurika | J/Urumpirai Hindu College. |
| 2nd Place | Miss.T.Sujiththa | J/Urumpirai Hindu College. |
| 3rd Place | Mas. S .Malaravan | J/Urumpirai Hindu College. |
| GRADE 7 | | |
| 1st Place | Mas.S.Jelson Hosly | J/Urumpirai Hindu College. |
| 2nd Place | Miss.S.Subarna | J/Urumpirai Hindu College. |
| 3rd Place | Miss.Y.Rojini | J/Urumpirai Hindu College. |
| 3rd Place | Mas.Y.Mahinthan | J/Urumpirai Hindu College. |
| GRADE 8 | | |
| 1st Place | Mas.J.Sayanthan | J/Urumpirai Hindu College. |
| 2nd Place | Mas.K.Jathushan | J/Urumpirai Hindu College. |
| 3rd Place | Miss.T.Sansiya | J/Urumpirai Hindu College. |
| GRADE 9 | | |
| 1st Place | Miss.Y.Sarmina | J/Urumpirai Hindu College. |
| 2nd Place | Miss.K.Ajentha | J/Urumpirai Hindu College. |
| 3rd Place | Miss.D.JeniTeranshiya | J/Urumpirai Hindu College. |
| GRADE 10 | | |
| 1st Place | Miss.J.Kamsiya | J/Urumpirai Hindu College. |
| 2nd Place | Miss.T.Anusha | J/Urumpirai Hindu College. |
| 3rd Place | Miss.S.Thushi | J/Urumpirai Hindu College. |
| GRADE 11 | | |
| 1st Place | Miss.A.Liyana | J/Urumpirai Hindu College. |
| 2nd Place | Mas.S.Nishanthan | J/Urumpirai Hindu College. |
| 3rd Place | Mas.N.Jathurshan | J/Urumpirai Hindu College. |
| 3rd Place | Miss.S.Praveena | J/Urumpirai Hindu College. |
| GRADE 12 | | |
| 1st Place | Miss.A.Kanista | J/Urumpirai Hindu College. |

| | | |
|---|---|---|
| 2nd Place | Miss.S.Menutha | J/Urumpirai Hindu College. |
| 3rd Place | Miss.T.Nirojini | J/Urumpirai Hindu College. |
| GRADE 13 | | |
| 1st Place | Miss.J.Rohini | J/Urumpirai Hindu College. |
| 2nd Place | Miss.A.Volestin Julia | J/Urumpirai Hindu College. |
| 3rd Place | Miss.S.Nisamini | J/Urumpirai Hindu College. |
| 3rd Place | Mas.S.Subasharan | J/Urumpirai Hindu College. |

## RECITATION

| | | |
|---|---|---|
| GRADE 6 | | |
| 1st Place | Miss.G.Sara | J/Urumpirai Hindu College. |
| 2nd Place | Miss.T.Sujiththa | J/Urumpirai Hindu College. |
| 3rd Place | Miss.J.Krishmina | J/Urumpirai Hindu College. |
| GRADE 7 | | |
| 1st Place | Miss.V.Vanaja | J/Urumpirai Hindu College. |
| 2nd Place | Miss.V.Ushanthini | J/Urumpirai Hindu College. |
| 3rd Place | Miss.Y.Rojini | J/Urumpirai Hindu College. |
| GRADE 8 | | |
| 1st Place | Miss.S.Saththitha | J/Urumpirai Hindu College. |
| 2nd Place | Miss.T.Sansiya | J/Urumpirai Hindu College. |
| 3rd Place | Mas.K.Jathushan | J/Urumpirai Hindu College. |
| GRADE 9 | | |
| 1st Place | Miss.V.Mathusha | J/Urumpirai Hindu College. |
| 2nd Place | Miss.P.Nitharsana | J/Urumpirai Hindu College. |
| 3rd Place | Miss.J.Priyanka | J/Urumpirai Hindu College. |
| GRADE 10 | | |
| 1st Place | Miss.K.Lavanya | J/Urumpirai Hindu College. |
| 2nd Place | Mas.A.Ajith | J/Urumpirai Hindu College. |
| 3rd Place | Miss.A.Printha | J/Urumpirai Hindu College. |
| GRADE 11 | | |
| 1st Place | Miss.P.Diluxsala | J/Urumpirai Hindu College. |
| 1st Place | Miss.T.Anastiga | J/Urumpirai Hindu College. |
| 3rd Place | Miss.K.Surenthini | J/Urumpirai Hindu College. |

## DICTATION


| | | |
|---|---|---|
| GRADE 6 | | |
| 1st Place | Miss.G.Sara | J/Urumpirai Hindu College. |
| 2nd Place | Miss.J.Krishmina | J/Urumpirai Hindu College. |
| GRADE 7 | | |
| 1st Place | Miss.A.Dishani | J/Urumpirai Hindu College. |
| 1st Place | Mas.K.Akeban | J/Urumpirai Hindu College. |
| 3rd Place | Mas.A.Janoshan | J/Urumpirai Hindu College. |
| GRADE 8 | | |
| 1st Place | Miss.S.Meera | J/Urumpirai Hindu College |
| 2nd Place | Miss.G.Sarikka | J/Urumpirai Hindu College |
| GRADE 9 | | |
| 1st Place | Miss.J.Priyanka | J/Urumpirai Hindu College. |
| 2nd Place | Miss.R.Yarlisa | J/Urumpirai Hindu College. |
| 3rd Place | Miss.J.Lino | J/Urumpirai Hindu College. |
| GRADE 10 | | |
| 1st Place | Miss.K.Lavanya | J/Urumpirai Hindu College. |
| 1st Place | Mas.A.Ajith | J/Urumpirai Hindu College. |
| GRADE 11 | | |
| 1st Place | Miss.T.Anastiga | J/Urumpirai Hindu College. |
| 1st Place | Mas.R.Kowshikan | J/Urumpirai Hindu College. |
| 3rd Place | Miss.R.Kaviyarasi | J/Urumpirai Hindu College. |
| 3rd Place | Miss.K.Daso | J/Urumpirai Hindu College. |
| GRADE 12 | | |
| 1st Place | Miss.K.Vijitha | J/Urumpirai Hindu College. |
| 2nd Place | Miss.S.Sinthusha | J/Urumpirai Hindu College. |
| 3rd Place | Miss.T.Thusara | J/Urumpirai Hindu College. |
| GRADE 13 | | |
| 1st Place | Miss.A.Volestin Julia | J/Urumpirai Hindu College. |
| 2nd Place | Miss.J.Rohini | J/Urumpirai Hindu College. |
| 3rd Place | Miss.A.Rammya | J/Urumpirai Hindu College. |


## CREATIVE WRITING


| | | |
|---|---|---|
| GRADE 6 | | |
| 1st Place | Miss.J.Krishmina | J/Urumpirai Hindu College. |
| 2nd Place | Miss.G.Sara | J/Urumpirai Hindu College. |
| 3rd Place | Miss.S.Varani | J/Urumpirai Hindu College. |
| 3rd Place | Miss.M.Mayura | J/Urumpirai Hindu College. |
| GRADE 7 | | |
| 1st Place | Miss.V.Vanaja | J/Urumpirai Hindu College. |
| GRADE 8 | | |
| 1st Place | Miss.G.Sarikka | J/Urumpirai Hindu College. |
| 2nd Place | Miss.S.Saththitha | J/Urumpirai Hindu College. |
| GRADE 9 | | |
| 1st Place | Miss.P.Nitharsana | J/Urumpirai Hindu College. |
| 2nd Place | Miss.J.Priyanka | J/Urumpirai Hindu College. |
| GRADE 10 | | |
| 1st Place | Mas.A.Ajith | J/Urumpirai Hindu College. |
| 2nd Place | Miss.T.Jena | J/Urumpirai Hindu College. |
| GRADE 11 | | |
| 1st Place | Miss.V.Suviththa | J/Urumpirai Hindu College. |
| 2nd Place | Miss.J.Ajitha | J/Urumpirai Hindu College. |
| 3rd Place | Miss.S.Mary Medona | J/Urumpirai Hindu College. |
| GRADE 13 | | |
| 1st Place | Miss.A.Rammya | J/Urumpirai Hindu College. |
| 2nd Place | Miss.M.Priya | J/Urumpirai Hindu College. |
| 3rd Place | Miss.A.Volestin Julia | J/Urumpirai Hindu College. |

## SPEECH GRADE 13

| | | |
|---|---|---|
| 1st Place | Miss.A.Ramya | J/Urumpirai Hindu College. |


PEOPLE'S BANK
THE PULSE OF THE PEOPLE
1961 - 2011
50TH
ANNIVERSARY
WESTERN UNION
People's Bank
JanaJaya
Save for progress
VISA
People's Bank
Sisu Udana
People's Bank
JAYA NIVASA
"PARINATHA" PILGRIMAGE
PEOPLE'S REMITTANCE
"...a source of strength that will never let me down"
Isuru Udana
yes
FutureStars
PEOPLE'S BANK THE PULSE OF THE PEOPLE


SUNDHARSON
Distributor for
KELANI CABLES
ANTON PVC Pipes & Fittings
Importers & Distributors of Electrical Items And
Electric & Kerosine Water Pumps,
Floor & Wall tiles
Tel: 021 2229984,
0214591569
Jaffna Road,Manipay.



# BOC Infinity
## Retirement Plan

Planning for a successful retirement starts here - no matter where you are. Bank of Ceylon now offers you BOC infinity, a retirement plan to save little by little to make your life secure and comfortable

BOC infinity
Retirement Plan
SUSTAIN YOUR LIFESTYLE

Contact Your Near By

Branch Manager For Details.

# LION DISTRIBUTORS

Coca Cola

## Distributor for Cocacola Beverages Srilanka Ltd.



## Lion Distributors

K.K.S Road, Chunnakam.

Tel: 021 321 2251

# நன்றியுரை

"காலத்தினாற் செய்த நன்றி சிறிது எனினும்
ஞாலத்தின் கண் மாணப் பெரிது"

உரும்பிராய் இந்துக்கல்லூரி அன்னையின் நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெறுவதையிட்டு மனமகிழ்வடைகின்றேன். கல்லூரியின் தோற்றம் தொடக்கம் இன்றுவரை எத்தனையோ மனிதர்கள் காலத்தின் தேவைகளை அறிந்து பல பணிகளை ஆற்றியுள்ளனர். பயன்எதுவும் கருதாமல் மேற்கொள்ளப்பட்ட இந்த உதவிகள் ஒவ்வொன்றையும் இந்நூற்றாண்டுக் காலத்தில் நினைவுகொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இந்நூற்றாண்டு நிகழ்வில் அர்ப்பணிப்போடும், தன்னலமற்ற பணிகள் பல இயற்றிவந்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும், நன்றி கூறுவது எமது தலையாய கடமையாகும். நூற்றாண்டுவிழா சிறப்புற நடாத்துவதற்கும், நூற்றாண்டு மண்டபம் திறப்பதற்கும், நூற்றாண்டுமலர் வெளியிடுவதற்கும், இறையருள் கிடைத்தமைக்கு எல்லாம்வல்ல கற்பக விநாயகருக்கு முதற்கண் நன்றி கூறிக்கொள்கின்றேன். இந் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறுவதற்கு தலைவராக இருந்து செயற்பட்ட கல்லூரி முதல்வர் திரு.அ.ஈஸ்வரநாதன் அவர்களுக்கும், நூற்றாண்டுமலரைச் சிறந்த முறையில் ஆக்குவதற்கு அல்லும்பகலும் அயராது பாடுபட்ட இதழாசிரியர் செல்வி.சா.இரஞ்சினி அவர்களுக்கும், ஆசிச்செய்திகள், வாழ்த்துரைகள் என்பன வழங்கி நூற்றாண்டுமலர் சிறப்புற வெளிவர உதவிய பெரியோர்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும், ஆய்வுக்கட்டுரைகள், ஆக்கங்கள் ஆகியவற்றை உரிய காலத்தில் வழங்கிய பேரறிஞர்களுக்கும், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும், விழா சிறப்புற மனமுவந்து நிதிவழங்கிய அனைவருக்கும், பல்வேறு வழிகளிலும் ஒத்தாசை வழங்கிய பழையமாணவர்களுக்கும், நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் பங்குபாற்றிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

விழா சிறப்புற நடைபெறுவதற்கு அனுசரணை வழங்கியவர்களுக்கும், புகைப்படங்களை சிறந்தமுறையில் எடுத்து வழங்கிய படப்பிடிப்பாளருக்கும், வாகன உதவிகளை வழங்கிய உரிமையாளர்களுக்கும், ஒத்தாசை புரிந்த அன்புள்ளங்களுக்கும், இந் நூற்றாண்டு மலருக்கான விடயங்களை ஒழுங்கான முறையில் ரைப்செய்து பேருதவியாக இருந்த செல்வி.சி.பிரதா அவர்களுக்கும், சரவை பார்ப்பதற்கு உதவிய ஆசிரியர்களுக்கும், நூற்றாண்டு மலரை சிறந்தமுறையில் அச்சிட்டு உதவிய "அன்ரா பிறிண்ட்" நிறுவனத்தினருக்கும், எமது உளம்நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நூற்றாண்டு விழாக்குழு,
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.

திரு.ச.ஏகாம்பரநாதன் (J.P)
செயலாளர்.

நூற்றாண்டு விழா

நூற்றாண்டு விழா

நூற்றாண்டு விழா

நூற்றாண்டு விழா

Printed by: ANRA DIGITAL IMAGE TEL:0212228929